Tamil

Merciful glance of the godess
Mahalakshmi

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதிப்பித்து ஆய்வு செய்து எழுதியவர்

ஸ்ரீராம்கோபால் 'பெதில்'

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

Śrīmad Agrabhagavatam

॥ श्रीमद् अग्रभागवतम् ॥

பதிப்பித்து ஆய்வு செய்து எழுதியவர்

ஸ்ரீராம்கோபால் ‘பெதில்’

Resarch, Editing & Writen by-

Śrī Rāmagōpāl 'bēdil'

अग्रविश्व ट्रस्ट

agravishwa Trust®

அக்ரவிச்வ ட்ரஸ்ட்

(ஆனந்தமயமான சிறந்த இவ்வுலகத்தில் இந்த சிறிய அக்ரவிச்வ மரத்தின் நிழலில் அனைவரும் ஓய்வெடுத்து மகிழ்ச்சியடையவதே எங்களுடைய குறிக்கோள்)

ஜைமினியின் ஜயபாரதத்தில் பவிஷ்ய பர்வணியிலுள்ள அக்ரோபாக்யானம்

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதிப்பித்து ஆய்வு செய்து எழுதியவர்

ஸ்ரீராம்கோபால் 'பெதில்'

ஸ்ரீராம்கோபால் அகர்வால் ஒரு ஹிந்தி கவிஞர். இவரை 'ஸ்ரீபெதில்ஜி' என்றழைப்பர். இவரால் எழுதப்பட்ட கவிதைகள் பல தொகுதிகளாகும். இவரால் இயற்றப்பட்ட கவிதைகள், இதிஹாஸங்கள் போன்ற அனைத்தும் ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தும்.

உலக ஆன்மீக அரங்கில் இவர் நினைத்தமாத்திரத்தில் உடனடியாக தைவிக சக்தியை அறியும் திறமையுடையவர்.

கருணை உள்ளங்கொண்ட இவர் மஹாலக்ஷ்மி தேவியின் அருளாலும், தன்னுடைய தைவிக சக்தியாலும் அசாதாரண மஹிமையாலும் இந்நூலை எழுதியுள்ளார்.

இந்த புனிதமான ஸ்ரீஅக்ரஸேனரின் கதாபாத்ரம் மற்றும் அவருடைய பண்புகள் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மையையும் இன்பத்தையு ஏற்படுத்தும். இதற்காகவே இதனை மிகவும் எளிய முறையில் அனைவருக்கும் புரியும்படி விரிவாக ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளிலும் எழுதியுள்ளார்.

இவ்வுலகத்தின் பொதுநலம் கருதி, மனித வாழ்க்கை தத்துவத்தை விளக்கி, உலகத்தின் மகிழ்ச்சிக்காக இந்நூல் பிரசுரித்து வெளியிடப்படுகிறது.

"நாம் எழுதும் பேப்பரைவிட மிகவும் மெல்லியதாகவும், பூ இதழ்களைவிட மென்மையானதாகவும் இருந்த போஜ்பட்ரான் எனும் பூர்ஜபத்ரத்திலிருந்து மஹரிஷி ஜைமினி பல நூற்றாண்டுகளாக அழிந்துபோனதை எடுத்து இதை எழுதினார். இந்நூல் இவ்வுலகில் எதனுடனும் ஒப்பிடமுடியாததாயும், இயற்கையாகவும், தைவிகத்தன்மை வாய்ந்ததாகவும் ஆகும்."

"மஹரிஷிகளின் திவ்ய கிருபையாலும் தொலைநோக்குப் பார்வையாலும் அனைவருடைய நலனையும் கருதி இந்த ஸ்ரீஅக்ரசேனரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு 1991ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் தேதியன்று பெதில்ஜி என்று அழைக்கப்படும் மாண்புமிகு ஸ்ரீராம்கோபால் அவர்களிடம் கொடுக்கப்பட்டதாகும்."

"போஜ்பட்ரான் எனும் பூர்ஜபத்திரத்தில் இருந்த இந்த மூலக்ரந்தம் ஜலத்தில் (ஜலாபிஷேக) இருந்தபோதும் தெளிவாகத் தெரிந்தது. இதனால் இந்த கதையை உடனடியாகத் தெரிந்துகொள்ள முடிந்தது."

"ஸம்ஸ்க்ருத எழுத்து வடிவில் இருந்த இந்த ஸ்ரீமத் அக்ரபாகவதத்தை உலகிலுள்ளவர்களுக்கு அர்ப்பணிப்பதாலும், அவர்களுடன் பகிர்ந்து கொள்வதாலும் பூஜ்யஸ்ரீ பெதில்ஜி மகிழ்ச்சியடைந்து இது அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என நினைத்து தன்னையும், தனது உடம்பு, மனது, செல்வம் ஏன் தனது வாழ்க்கையையே அர்ப்பணித்து வெற்றியடைந்துள்ளார். உலக நன்மையைக் கருதியே தைவிக சிறப்பு வாய்ந்த இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது."

"உலக நன்மையைக் கருதியே அம்ருதமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தை ஸ்ரீராம்கோபால் பெதில்ஜி முழு முயற்சியுடன் பதிப்பித்து வெளியிட்டு அர்ப்பணித்துள்ளார். ஆன்மிக உணர்வுடையவர்களும், சிறந்த அறிஞர்களும், பிரமுகர்களும், காட்டின் கலைகளை விளைப்பவர்களும் மிகச் சிறப்பாக வரவேற்றுள்ளனர். இந்நூல் உலகசாதனையாக கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது."

"ஸ்ரீஅக்ரசேனரின் உண்மையான முழு வாழ்க்கையே ஸ்ரீமத் அக்ரபாகவதம் எனும் இந்நூல் ஆகும். இதை யாரும் அழிக்கமுடியாது."

"இந்த ஸ்ரீஅக்ரசேனரின் தைவிகக் கதையை முதலில் மஹரிஷி வியாசர் அவருடைய முதல் சீடரான மஹரிஷி ஜைமினிருக்கு கூறினார். பின்பு மஹரிஷி ஜைமினி பேரரசர் ஜனமேஜயருக்குக் கூறி அவரை அவருடைய வாழ்கையில் சிறந்தவராக்கி மன அமைதி, செல்வம் ஆகியவற்றை அடையும்படிச் செய்தார். இதனால் பேரரசர் ஜனமேஜயர் புகழ்பெற்றவராக மகிழ்ச்சியுடன் இருந்து தனது வாழ்நாள் முடிவில் மோக்ஷத்தை அடைந்தார்."

"இன்றைய அவசர உலக வாழ்க்கையில் ஸ்ரீஅக்ரசேனரின் கதை பேரின்பத்தையும், மன அமைதியையும் நிச்சயம் அளிக்கும்."

e book

Śrīmad Agrabhāgavatam

© - Shri Ramgopal "Bedil"
Resarch, Editer & Author

ஸ்ரீமத் அக்ரபாகவதம்
© ஸ்ரீராம்கோபால் 'பெதில்'
பதிப்பித்து ஆய்வு செய்து எழுதியவர்

தமிழில் மொழிபெயர்த்து தொகுத்தவர்
சங்கேத்தி டாக்டர் எஸ்.முத்து, சென்னை

TAMIL Transleter:
Dr. S. Muthu
Chennai

ISBN-978-93-87232-05-1

ISBN-978-93-87232-05-1

PUBLISHER :

अग्रविश्व ट्रस्ट
agravishwa Trust®

WARNING

All rights reserved by the author, No part of this publication may be duplicated and \or reproduced, stored in database or retrieval system, or transmitted in any form, in any language or by any means, print, electronic,mechanical, film, photocopying, recording or otherwise, without the prior written permission of copyright holder, else it shall amount to a voilationof our copyright in this publication.

அர்ப்பணிப்பு

ஸ்ரீமஹாலக்ஷ்மியின் கருணையினால்

நான் வெற்றியடைந்தேன்

ஸ்ரீமஹாலக்ஷ்மி அனைத்து இன்பத்தையும்

கொடுத்து இருக்கிறாள்.

ஓ! உலகத்தின் அன்னையே

ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவியே

நான் தங்களை

முழு பக்தியுடன்

மறுபடியும் மறுபடியும்

வணங்குகிறேன்.

தாஸன்

ஸ்ரீராம்கோபால் ‘பெதில்’

முன்னுரை

ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவியின் கருணையாலும் அருளாலும் மறைந்திருந்த ஸ்ரீஅக்ரோபாக்யானம் எனும் இந்நூல் மஹரிஷிகள் வியாசர் மற்றும் ஜைமினி ஜனமேஜயருக்கு கூறியபடி மதிப்பிற்குரிய ஸ்ரீபெதில்ஜி அவர்கள் 1991ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஒந் தேதி நமக்கு அர்ப்பணித்தார்.

இந்த ஸ்ரீஅக்ரபாகவத்த்தின் அசல் மூலக்ரந்தம் மெல்லிய பூர்ஜபத்ரத்தில் உள்ளது. இந்த பூர்ஜபத்ரத்தை தினமும் அபிஷேகம் செய்தாலும் அதிலுள்ள எழுத்துக்கள் படிக்கும்படியாகவே இருந்தது.

இந்த சிறந்த ஸ்ரீஅக்ரோபாக்யானம் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஸ்ரீபெதில்ஜி அவர்களே முதலில் ஸம்ஸ்க்ருத மொழியில் தேவநாகரி எழுத்து வடிவில் எழுதி ஆசீர்வதித்துள்ளார்.

கடந்த 20 வருடங்களாக அரும்பாடுபட்டு இந்நூலை சரியாக ஒவ்வொரு அத்தியாயமாக அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் பிரித்து எழுதி நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார். இதைப் படிக்கும்போதே இந்த தைவிக் கதையை நன்கு புரிந்துகொண்டு அம்ருதத்தைப் போன்று அனுபவிக்கமுடிகிறது. பூர்ஜபத்ர வடிவில் இருந்ததை புஸ்தகமாக இயற்றியுள்ளார். ஆகையால் உண்மையில் இதற்கு முன்பு யாராலும் இவ்வாறு செய்யமுடியவில்லை இனிமேலும் இவ்வாறு யாராலும் செய்ய இயலாது. இதைச் சிறப்பாக வெளியிடவேண்டும் என்பதே 'பெதில்ஜியின் உள் உணர்வும், ஆசையும் ஆகும். தற்சமயம் நம்முடைய ஸ்ரீமத் அக்ரபாகவதம் ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, ஆங்கிலம், பெங்காலி, குஜராத்தி, கன்னடா, கொங்கனி, மராத்தி, ஒரியா, பஞ்ஜாப், தமிழ், தெலுங்கு, உருது மற்றும் பிற மொழிகளிலும் வெளியிடப்பட உள்ளது. இந்நூலை "பிரெயில்" முறையின்படி பார்வையில் குறைவுள்ளவர்களும் தெரிந்துகொள்ள வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மிக உயர்ந்த முயற்சி நம்முடைய மனித வாழ்க்கையை இன்பமுள்ளதாக்கும்.

அக்ரவிச்வ டிரஸ்ட்

॥ ॐ ॥ पञ्जीयन क्र. ई २७७९ (ना)

संस्कृतभारती (विदर्भप्रान्तः)

कार्यालयः - प्रथम-अट्टः (एफ-१), 'प्रफुल्लतानवनम्', गुजराथीमार्गः, नागपुरम् - १५.
संपर्कः - ९४२२३९४८८०, ९४२२८०३९०३ • अणुसंकेतः - samskritabharatividarbha@gmail.com

ஸம்ஸ்க்ருத பாரதி

(ஆங்கிலத்தின் தொகுப்பு)

முன்னுரை

ஜைமினியால் எழுதப்பட்ட ஜயபாரதம் பவிஷ்ய பர்வாவில் காணப்படும் மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரின் வாழ்க்கை அவரின் தத்துவங்கள் ஆகியவற்றை எழுதி ஸமீபத்தில் வெளியிட்டுள்ளனர். இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் சரித்த்தை படிப்பதால் ஆனந்தமும் மன அமைதியும் கிடைக்கின்றது.

இந்நூல் 27 அத்தியாயங்களைக் கொண்டது. அவைகள் முறையே உதயம், ஞானம், புருஷார்த்தம், ஸந்தோஷம் என ஆரம்பிக்கப்பட்டு முடிவில் தீர்மானம், மகிழ்ச்சி மற்றும் தெய்வஜளி என முடிவடைகின்றது. இவைகள் 27 நக்ஷத்ரங்களைப் போன்று சிறப்பாகவும் அருமையான கதாபாத்திரங்களைம் பேசுகின்றது. தைவீகத் தன்மையுடன் இதைப் பின்பற்றினால் ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையில் உயர்ந்த இடத்தையும் மோக்ஷத்தையும் அடையலாம். இது ஸ்ரீஅக்ரஸேனர் வாழ்க்கை வரலாற்றின் சாராம்பசம் ஆகும்.

தற்சமயம் அனைவரும் வாழ்க்கையில் தவறான வழியைக் கடைபிடிக்கின்றனர். இதனால் அடிப்படை தர்மம், உண்மை ஆகியவற்றை இழந்து சுயநலத்துடன் தெரிந்தோ தெரியாமலோ தவறான வழியைப் பின்தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மக்கள் பலவீனமாகிக் கொண்டு இருக்கின்றனர்.

நம் மனித ஸமூஹம் உண்மையான வாழ்க்கை, நிரந்தர அமைதி போன்றதைத் தெரிந்துகொள்ள இது சரியான சமயம் ஆகும். ஆதலால் தைவீகத் தன்மையையும் அதனைக் கடைபிடிக்கும் முறையையும், அதன் மதிப்பையும் நாம் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஸ்ரீஅக்ரஸேனரின் இந்த வாழ்க்கை வரலாற்று புஸ்தகம் சரியானதாகும். எனவே எனது

பரிந்துரை என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் இந்த ஆன்மீக வழிபாட்டு ஆய்வுப் புஸ்தகமான ஸ்ரீஅக்ரபாகவதத்தை படித்து பயனடைவேண்டும்.

நம்முடன் இருப்பவர் யாரேனும் ஒருவர் உடல் நலமின்றி இருப்பின் மருத்துவர் அவரிடமுள்ள அந்த வியாதியை அகற்றுவதற்காகவும் புத்துணர்ச்சியைப் பெருவதற்காகவும் வைட்டமின் மாத்திரைகளைக் கொடுத்து அவரை சரிசெய்வதுபோல, வாழ்க்கையில் கஷ்டப்படுபவர்கள் இந்த ஸ்ரீஅக்ரஸேன பாகவதத்தைப் படிப்பதாலேயே புத்துணர்ச்சியை அடைந்து பயமின்றி சிறந்த ஞானத்தையும் பெற்று தர்ம வழியையும் பின்பற்றுவர்.

நாம் ஒவ்வொருவரும் தயாள குணமுடைய சிறந்த கதாபாத்திரமான ஸ்ரீஅக்ரஸேன மஹாராஜாவின் இந்த கதையைப் படிப்பதால் கிடைப்பதற்கரிய பொருட்களும் நம்முடைய எண்ணங்களும் நிறைவேறும்.

எனது இளைய ஸஹோதரர் ஸ்ரீராம்கோபால் பெதில் அவர்கள் வெகுநாட்களாக தன்னுடைய ஆராய்ச்சியின் மூலம் இந்த சிறந்த புஸ்தகத்தை பதிப்பித்து பிரசுரித்துள்ளதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. டாக்டர் ராமகிருஷ்ண பூஜாரி

தலைவர்

ஸம்ஸ்க்ருத பாரதி, விதர்பா, நாக்பூர்.



ஸம்ஸ்க்ருத பாரதி

(ஆங்கிலத்தின் தொகுப்பு)

முன்னுரை

ஸ்ரீராம்கோபால்ஜியை பெதில்ஜி என்றழைப்பர். இவர் தேவி மஹாலக்ஷ்மியின் அருளையும் கருணையையும் முழுவதுமாகப் பெற்றவர். இவருடைய நண்பர் ஆந்திரபிரதேசத்தில் பிரம்மகுண்ட் என்ற இடத்தில் துறவியாக உள்ளார். அவரிடம் ஜைமினியால் எழுதப்பட்ட ஜயபாரதத்தில் உள்ள இந்த ஸ்ரீஅக்ரஸேன பாகவதம் இருந்த பூர்ஜபத்ரங்களைக் கொடுத்தபோது அதை அவர் பிரித்துப் பார்த்தபோது அதில் எழுத்துக்கள் ஒன்றுமே தெரியவில்லை. அப்போது அவர் கேட்ட முதல் கேள்வி இதில் என்ன இருக்கிறது என்று. இதனால் பெதில்ஜி மனதளவில் குழப்பத்தையும் இடர்பாட்டையும் அடைந்தார்.

அச்சமயம் ஏமாற்றமடைந்த பெதில்ஜியின் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்து அருகிலிருந்த பூர்ஜபத்திரத்தின் மேல் விழுந்தது. கடவுளின் அருளால் எந்த இடத்தில் கண்ணீர் விழுந்ததோ அந்த இடத்திலிருந்த எழுத்துக்கள் தெரிய ஆரம்பித்தது. பின்பு ஒவ்வொரு பதங்கள், வரிகள், ச்லோகங்கள் என அனைத்தையும் பெதில்ஜியால் படிக்கமுடிந்தது. உடனே அவற்றை பேப்பரில் எழுத ஆரம்பித்தார். இவ்வாறு கடந்த 19 வருடங்களாக

இந்நூலில் பற்பல நீதிக்கதைகள், துறவிகளின் மஹிமை அவர்களின் மதிப்பு போன்றவை காணப்படுகின்றன. இவ்வுலகம் சிறந்தவர்களின் ஒழுக்க நெறிமுறைகளையும் அவர்களின் வரலாற்றையும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பினும் ஸ்ரீஅக்ரஸேனரின் சரிதமான இந்த ஆன்மீகப் புஸ்தகத்தை அனைவரும் படிப்பது சாலச்சிறந்ததாகும்.

மஹாலக்ஷ்மியின் அருளால் இந்த மூலக்ரந்தமான ஸ்ரீஅக்ரபாகவதம் அனைவருக்கும் கிடைகின்றது. இந்நூலை தினமும் பாராயணம் செய்வதால் மஹாலக்ஷ்மி அருளும் மனித வாழ்க்கையில் உயர்வும் அடைவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தெளர்மால் பிரபாகர் சர்மா

(சதாவதானி)

தலைவர்

கிழக்கு ஆந்திர பிரதேசம்

நேஷனல் எக்ஸிகியூடிவ் கமிட்டி மெம்பர்

ஸம்ஸ்க்ருத பாரதி

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பொருளடக்கம்

1.	உதயம்	25
2.	ஞானம்	38
3.	புருஷார்த்தம்	49
4.	ஸந்தோஷம்	65
5.	திட்டம் தீட்டுதல்	75
6.	துயரம்	87
7.	துறவிகளின் இருப்பிடம்	105
8.	தவம்	116
9.	வீரம்	137
10.	ஆதாரம் சேகரித்தல்	149
11.	திட்டம் (உபாயம்)	162
12.	காதல்	174
13.	வியப்பு	187
14.	வழிபாடு	199
15.	கடைவது	215
16.	வெறுப்பு	235
17.	அழிவின்மை	249

18. மகிழ்ச்சி 263

19. ஒப்பந்தமும் விருந்தளிப்பும் 275

20. முன்னேற்றம் 292

21. கடவுள் ஈடுபாடு 302

22. வழிநடத்துதல் 324

23. சமத்துவம் 335

24. விழிப்புணர்ச்சி 350

25. தீர்மானம் 357

26. ஆனந்தம் (மகிழ்ச்சி) 377

27. தெய்வ ஒளி 390

****

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

கிரந்த மஹிமை

ரிஷிகள் கூறினர் -

மஹாலக்ஷ்மீவர இவ க்ரந்தோ மான்யேதிஹாஸக:।
தம் கஶ்சித் புண்யயோகேன ப்ராப்னோதி புருஷோத்தம:।।
அக்ராக்யானம் பவேத்யத்ர தத்ரஶ்ரீ: ஸவஸு: ஸ்த்திரா।
க்ருத்வாபிஷேகமேதஸ்ய தத: பாபை: ப்ரமுச்யதே।।
க்ரந்த-தர்ஶன-யோகோऽயம் ஸர்வலக்ஷ்மீ பலப்ரத:।
துக்கானி சாஸ்ய நஶ்யந்தி சௌக்யம் ஸர்வத்ர விந்ததி।।
தர்ஶனேனாலமஸ்யாத்ர ஹ்யபிஷேகேன கிம்புன:।
விலயம் யாந்தி பாபானி ஹிமவத் பாஸ்கரோதயே।।



ப்ரஶஸ்யாங்கோபாங்கயுக்த-கல்பவ்ருக்ஷஸ்வரூபிணே।
மஹாஸித்தியுத ஸ்ரீமதக்ரோபாக்யான தே நம:।।

கருணையின் வடிவமான இதிஹாசம்

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

ரிஷிகள் கூறினர் - இந்த கதையில் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் துதியும் (ஸ்தோத்ரமும்) அருளும் அடங்கியிருப்பதால் இதை படிப்பதாலும் கேட்பதால் நன்மையை அடையலாம். இந்த சரிதம் மற்றவைகளைவிட சிறந்தது. இதை கேட்பதால் ஒருவன் தருமத்தைச் செய்பவனாக ஆகிவிடுவான்.

ரிஷிகள் கூறினர் - எந்த இடத்தில் இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் கதை அடங்கிய ஜய பாரதம் இருக்கிறதோ அந்த இடத்தில் மஹாலக்ஷ்மி நித்திய வசம் செய்கிறாள். மஹாலக்ஷ்மிக்கு அபிஷேகங்களைச் செய்து
இந்த ஸ்ரீஅக்ரபாகவதத்தைப் படித்தால் அவன் அனைத்துவிதமான பாபங்களிருந்து விடுபடுகிறான்.

ரிஷிகள் கூறினர் - இந்த ஸ்ரீஅக்ரஸேன பாகவத புஸ்தகத்தைப் பார்ப்பதாலேயே ஒருவனுடைய பாபம் சூரியனை கண்டு பனிக்கட்டி கரைவது போன்று அழிந்துவிடுகிறது. மேலும் மஹாலக்ஷ்மிக்கு அபிஷேகம் செய்து முறைபடி படித்தால் புண்யம் கிடைப்பதைப் பற்றி வார்த்தைகளால் கூறமுடியாது.

ரிஷி கணங்கள் கூறினர் - ஸ்ரீஅக்ரஸேனரின் உண்மை சரித்திரமான இந்த அக்ரஸேன ஜய பாரதம் அங்கம் மற்றும் உபாங்கத்துடன் கூடிய கல்பக விருக்ஷமாகும். இதை படித்தால் (பாராயணம் செய்தால்) எட்டுவிதமான ஸித்திகள் (மஹாஸித்தி) உண்டாகும். அப்படிப்பட்ட இந்த அக்ரோபாக்யானத்தை வணங்குகிறோம் என்று கூறி முடித்தனர்.

****

ஸ்ரீமதக்ரபாகவதத்தின் மஹிமை

ஸ்ரீமதக்ரபாகவதத்தின் மஹிமை

யதக்ஷரம் பதம் வாக்யம் ப்ரமாணம் ப்ரேரணம் பரம்.

ஹிதார்த்தம் அஹிதார்த்தாணாம் ஹரணம் ஸம்ஸ்க்ருதிரக்ஷணம்

ததக்ஷரம் பதம் வாக்யம் ப்ரமாணம் ப்ரேரணம் பரம்.

ஸம்ஸ்க்ருதம் பூஷணம் வாசாம் நமாமோ தேவபாஷணம்.

ஸ்ரீஅக்ரபாகவதத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களும், பதங்களும், வாக்கியங்களும், ப்ரமாணங்களுடையதாகவும், உலகத்திற்கு நன்மையை ஏற்படுத்தியும் தீங்கிலிருந்து காப்பாற்றியும் சிறந்த பண்பாட்டையும் ஏற்படுத்துகின்றது.

உலகத்தின் நன்மையையும், தீங்கிலிருந்து காப்பாற்றியும், சீரிய கலாசாரத்தையும் ஏற்படுத்துவதே நல்ல எழுத்தாகவும், நல்ல பதங்களாகவும் ப்ரமாணமாக ஒப்புக்கொள்கிறோம். இது தான் ஸம்ஸ்க்ருதத்தின் அழகான அணிகலனாகவும் தேவபாஷை (மொழி) யாகவும் கருதப்படுகிறது.

அக்ரஸேனஸ்ய சரிதம் அவாங்மானஸ-கோசரம்.

பாபாபஹும் குணாதானம் பாவனம் காங்கதோயவத்..

இந்த அக்ரஸேனரின் சரித்தை முழுவதுமாக நம்மால் கூறிவிடமுடியாது. எவ்வாறு கங்கை நதியின் ஜலம் மிகவும் புனிதமானதோ அவ்வாறு இதை பாராயணம் செய்வதால் நம்முடைய பாபங்கள் அகன்று, புண்யமடைந்து நற்குணங்களும் பெருகுகின்றன.

அக்ரஸேனஸ்ய சரிதம் ஸர்வமானவஸாதனம்.

படனீயம் பாடனீயம் ஸுப்ரகாஸ்யாத்மபோதனம்.

இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் சரிதம் அனைவருக்கும் பொதுவானதாகும். இதை பாராயணம் செய்தாலும், மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தாலும் சிறந்த ப்ரகாஸமான ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவர்.

அக்ரஸேனஸ்ய சரிதம் பூர்ஜபத்ரோபபாதிதம்.

ராமகோபால-ஸந்த்ருஷ்டம் குருணா ஸுப்ரஸாதிதம்.

இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் சரிதம் பூர்ஜபத்ரத்தைப் பார்த்து எழுதப்பட்டது ஆகும். இது ஸ்ரீராம்கோபால் அவர்களின் குருவின் மூலம் அவருடைய தைவீக சக்திக்கு புலனாகி நமக்கு இதை அருளினார்.

பேதிலோ ராமகோபால: க்ருபாலு: குருலாலித:

அக்ரோபாக்யான ஸந்த்ருஷ்டா ஸாக்ஷீ லோகஹிதாதர:.

இவ்வுலகத்தின் நன்மையை வேண்டி ஸ்ரீஅக்ரோபாக்யானத்தை தைவசக்தியால் பார்த்து இரக்க குணமுடைய பெதில்ஜி ஸ்ரீராம்கோபால் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

ச்ரத்தாலவ: ஸமாயாதா: அக்ரஸேனாநுயாயின:.

பவந்தஸ்ச பவத்யஸ்ச வந்த்யா மே பூரிதாயினா:.

ச்ரத்தையுடன் எப்போதும் இந்த ஸ்ரீஅக்ரஸேனரைப் பின்பற்றுபவர்களுக்கு என்னுடைய நமஸ்காரங்கள்.

****

த்யானமூலம் குரோர்மூர்த்தி: பூஜாமூலம் குரோ: பதம்.
மந்த்ரமூலம் குரோர்வாக்யம் மோக்ஷமூலம் குரோ: க்ருபா.

இது உண்மை . . .

உலகத்தின் அன்னை ஸ்ரீமஹாலக்ஷ்மி என்னுடைய கனவில் தோன்றி ஆசீர்வாதம் செய்து கட்டளையிட்டாள். மா பகவதியின் ஆணைப்படி ஆந்த்ரப்ரதேசத்திலுள்ள ப்ரம்மகுண்ட் என்ற இடத்திற்கு என்னுடைய நண்பருடன் 1991ம் ஆண்டு 9ந் தேதி ஆகஸ்ட் மாதம் சென்றேன். ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அருளால் அங்கிருந்த மஹரிஷி ஒருவர் எனக்கு ஜைமினி மஹரிஷியால் எழுதப்பட்ட இந்த ஸ்ரீஅச்ரோபாக்யான நூலைக் கொடுத்தார். இந்நூல் ஜயபாரதத்தின் ஒரு பகுதியான மிகவும் பழமை வாய்ந்த உயர்ந்த சரிதத்தைக் கொண்டதாகும்.

உண்மையாலுமே நான் வேதத்தைப் படிக்கவில்லை, தத்துவஞானம் எனக்குத் தெரியாது. ஸம்ஸ்க்ருதத்தை அறிந்தவரல்ல மற்ற எந்த மொழியுமே எனக்குத் தெரியாது. இவ்வாறு என்னுடைய நிலமை இருக்கும்போது எனக்கு இந்தப் புஸ்கத்தை (க்ரந்தத்தை) எழுதும்படி யார் கூறினார் என்றால், ப்ரம்மகுண்டத்தில் இருந்த சிறந்த மஹான் மற்றும் மஹரிஷி ஒருவர் என்னை கட்டளையிட்டதால் அவருடைய அருளால் தான் இந்த சிறப்புவாய்ந்த நூலை மிகவும் கஷ்டப்பட்டு சவாலுடன் எழுதி முடிக்கமுடிந்தது. அவருடைய அருள் இல்லை என்றால் என்னால் இந்த புஸ்தகத்தை எழுதி முடித்திருக்க முடியாது.

எவ்வாறு தேரோட்டி சஞ்ஜயன் இருந்த இடத்திலிருந்துக் கொண்டே குருக்ஷேத்ர யுத்தகலத்தில் நடப்பதையெல்லாம் தன்னுடைய திவ்ய திருஷ்டியால் பார்த்துக் கூறினானோ, அவ்வாறே

மா தேவி அன்னை மஹாலக்ஷ்மி மற்றும் திவ்ய மஹரிஷியின் அருளாலும் என்னால் இந்த ஸ்ரீஅக்ரஸேன பாகவதத்தை எழுதமுடிந்தது. ஏனெனில் ஒரு எழுத்துகூட தெரியாமலிருந்த பூர்ஜபத்ரங்கள் மஹாலக்ஷ்மியின் திவ்ய அருளாலும், கடைக்கண் பார்வையாலும் என்னால் அதிலிருந்த எழுத்துக்களை படித்து, ஸ்லோகங்களை எழுதி அதன் பொருளையும் புரிந்துகொண்டு எழுதி பிரசுரிக்க முடிந்தது. இந்த புஸ்தகத்தை எழுதுவதற்கு எத்தகுதியும் எனக்கில்லை. உலக அன்னை மஹாலக்ஷ்மியின் அருளால் யாராலும் காணமுடியாததான, மறைந்து அழிந்துபோன இக்கிரந்தத்தை விளக்கத்துடன் என்னால் வெளியிடமுடிந்தது என்றால் அது மிகையாகாது.

பூர்ஜபத்திரத்திலிருந்த ஸம்ஸ்க்ருதத்தை எழுதும்போது சில இடங்களில் பாடபேதங்களுடன் எழுதும்படியாக நேர்ந்தது. இதுவும் கடவுளின் செயல் தான் என்று கூறவேண்டும். இவ்வாறு பற்பல இடையூறுகளின் நடுவில் இதை எழுதி முடித்ததை எண்ணி பெருமையாகவும் சிறந்த நாட்டுப்பணியைச் செய்ததாகவும் நினைக்கிறேன். இவை அனைத்தும் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அருளால் தான் கிடைத்தது.

உலக அன்னை மஹாலக்ஷ்மியிடம் என்னுடைய பிரார்த்தனை என்னவென்றால் இவ்வுலகத்திலுள்ளவர்கள் துன்பங்களை அனுபவித்துக்கொண்டும், கோபத்திற்குட்பட்டும் மன நிம்மதி இல்லாமலும் இருக்கும் அனைவருக்கும் இந்த ஸ்ரீஅக்ரபாகவதத்தைப் படிப்பதன்மூலம் இன்பத்தையும், நன்மையையும், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் அடைந்து அழகான இன்ப வாழ்க்கையை அடைந்து உலகத்தைக் காக்கும் மஹாலக்ஷ்மியின் அருளையும் பெற்றுய்ய முழு மனதுடனும் அன்புடனும் வாழ்த்துகிறேன்.

ராம்கோபால் 'பெதில்'

நிர்மல் பவன்

மெயின் ரோடு

AMGAON, Dist.-Gondia (M.S)

441902 - India

ஸ்ரீமத்பாகவதம்

(ஆங்கிலத்தின் தொகுப்பு)

ஒவ்வொருவர் வாழ்க்கையின் குறிக்கோள் ஸத்-சித்-ஆனந்தத்தை அடைவதே ஆகும். இது மனிதனின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்ததாகும். இன்றைய காலகட்டத்தில் மனிதன் பேராசையால் நிரந்தரக் குறிக்கோளை மறந்து நிலையற்ற பொருட்களில் ஆசைப்படுகிறான். ஆதலால் மனிதன் தன்னிடமுள்ள மன அமைதியையும், புனிதத் தன்மையையும், உண்மையையும் மறந்துவிட்டான். இருப்பினும் காலசக்ரத்தின்படி பேராசையும், பொருளாதார வாழ்க்கையும் அழிந்து அதிலிருந்து விடுபட்டு உண்மையில் ஒரு நாள் அவன் ஒரு ஸத்குருவை அடைவான். அப்போது அந்த ஸத்குரு தான் அவனுக்கு கடவுள் ஆவார். அந்த குரு அவனுக்கு அநித்யத்தை போதித்து நித்யத்தை எடுத்துரைப்பார். அப்போது அந்த குருவேதான் பகவான் என்றழைக்கப்படுகிறார். பகவான் தன்னருகிலுள்ள பக்தனுக்கு நிலையற்ற அநித்ய வஸ்துவிலுள்ள ஆசையைப் போக்கி நிரந்தர நித்ய வஸ்துவில் மனதைச் செலுத்தும்படிச் செய்யும்போது அந்த உபதேசம் தான் பாகவதம் எனப்படுகிறது. இவ்வுலகிலுள்ள அநித்ய வஸ்துவையும் உயர்ந்த தத்துவத்தையும் எடுத்துரைப்பதே பரம்பொருளின் குணமாகும். நம்முடைய 'கர்மா'வின் மூலம் நாம் எவ்வாறு வாழவேண்டும், உலகில் எவ்வாறு இருக்கவேண்டும் என தீர்மானம் பண்ணவேண்டும். அதன்படி ஆனந்தானுபவத்தை அடையவேண்டும் என்று பகவான் நமக்கு எடுத்துரைகிறார்.

பரீக்ஷித் மஹாராஜா தானாகவே தவறை செய்து ச்ருங்கி மஹரிஷியின் சாபத்தை அடைந்தார். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் மாதா உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த சிசுவைக் காப்பாற்றினார். இவை இரண்டையும் பார்க்கும்போது பகவான் வாஸுதேவரை சரியானவர் என்று கூறமுடியாது. ஆனால் மக்கள் எப்போதும் ஆலோசனையைச் செய்து நல்லதையே தீர்மானிக்கின்றனர். இவ்வாறு தான் ஒரு ரிஷி பரீக்ஷித்துக்கு சாபம் கொடுக்க ஸ்ரீசுகபிரம்மதேவர் மூலம் நம்மனித குலத்திற்கு ஸ்ரீமத்பாகவதம் கிடைத்தது. இந்த பாகவதத்தின் மூலம் தான் பரமானந்தம், முக்தி (மோக்ஷம்) முடிவான வாழ்க்கை, மறுபிறப்பின்மை, சாபத்திலிருந்து வெளிவருவது போன்றவை நமக்குக் கிடைத்தது. எதையும் எதிர்பார்க்காத நம்முடைய முழு தியாகம் தான் நம்மை அனைத்து சாபத்திலிருந்து காப்பாற்றுகிறது.

ஸ்ரீமத்பாகவதம் மனிதனுடைய உலகவாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும். அது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் அருகில் அழைத்துச் சென்று ஸாயுஜ்ய முக்தியைப் பெற்றுத் தருகிறது. பாகவதத்தின் மூலம் நாம் இரண்டுவிதமான முக்தியை தெரிந்து கொள்கிறோம். மனிதன் தன்னுடைய முழு தர்மத்தையும் கடைபிடித்து அதன்படி முக்தியடைவது. இரண்டாவது ஆன்மீகத்தைக் கடைபிடித்து ஸ்ரீமத்பாகவத்தை பாராயணம் செய்து அதனடிப்படையில் முக்தியடைவது.

முதலில் கூறப்பட்ட தர்மங்களை முழுவதுமாக தவறின்றி கடைபிடிப்பது என்பது பகவானுடைய ஸ்ரீராமாவதாரம் மற்றும் தற்சமயம் நம் கையில் வைத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீஅக்ரஸேனருடைய வாழ்க்கையும் அவர்களின் நெறிமுறைகளும் ஆகும். இவ்விருவர்களுடைய வாழ்க்கைத் தத்துவங்கள் தான் முதல் விதமான முக்தியாகும். இதிலும் மாய சக்தியால் சிலருக்கு தவவலிமையும், சித்தியும், தெய்வ சக்தியும், தெய்வீக உள் உணர்வுகளும் எப்போதும் பரமானந்த நிலையை ஏற்படுத்துகிறது. இந்நிலையில் அந்த மனிதன் தைவ வழிபாடு, தவம் போன்றவற்றை மேற்கொள்வதில்லை. ஸ்ரீகிருஷ்ணர் அல்லது சிவனுடைய சிறப்பான

பேரானந்தத்துடன் இந்த புனிதமான புஸ்கத்தை பிரசுரித்து உங்களுக்காகவே உங்களுடைய கையில் அர்ப்பணிக்கிறேன்.

இந்த உன்னதச் செயல் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்யட்டும்.

முன்னால் சென்ற சம்பவம் - (மஹாபாரதம்)

(ஆங்கிலத்தின் தொகுப்பு)

மஹாபாரதப் போர் நிறைவடைந்தவுடன் தர்மபுத்திரர் பேரரசரானார். அதன் பிறகு அவர் தன்னுடைய வாழ்நாள் முடிவில் ஹிமாசலத்தின் வழியாக ஸ்வர்க்கத்தை அடைந்தார். அதன் பிறகு அபிமன்யுவின் புத்திரன் பேரரசர் பரீக்ஷித் மஹாராஜா ஹஸ்தினாபுரத்தை ஆட்சி செய்தார். முதல் வரலாற்று காலமான அந்த சமயத்தில் 536 சிறிய குடியரசு நாடுகள் இருந்தன. ஒவ்வொரு நாடும் தனக்கென்று தனிப்பட்ட அரசியலமைப்பைக் கொண்டிருந்தன. அச்சமயத்தில் பல பகுதிகளில் பெரிய தபோவனங்களில் (தவம் செய்யும் காடுகளில்) தனிப்பட்ட முறையில் ரிஷிகளும், மஹரிஷிகளும், முனிகளும் தங்களுடைய தர்மங்களைச் செய்து கொண்டு நாட்டின் நலனையும் கருதி யாகம், யக்ஞங்களையும் செய்து வந்தனர். பேரரசர்களும் பொறுமையுடனும், சமநிலையான மனதுடனும் தங்களது ஆட்சியைச் செய்து வந்தனர்.

துவாபரயுகம் முடிந்து கலியுகம் ஆரம்பமாகும் சமயம், பரீக்ஷித் மஹாராஜா நீதியுடனும், நேர்மையுடனும் ஆட்சியைச் செய்து வந்தார். ஆதலால் கலிபுருஷன் அவருடைய மனதில் இடம்பிடிக்க முடியவில்லை. ஆட்சியில் கலங்கம் ஏற்படுத்தமுடியவில்லை. பரீக்ஷித் மஹாராஜாவின் ஏதோ ஒரு சிறிய பாவச்செயல் மூலம் அவரை பிடித்துக்கொள்வதற்கு கலி காத்துக்கொண்டிருந்தான். முடிவில் கலிபுருஷன் பரீக்ஷித்தின் அரசவைக்கு வந்து மக்களுக்கு வரிவிதிப்பதன் மூலம் மஹாராஜாவை தண்டிப்பதற்கு தயார் ஆனான். கலிபுருஷன் அரசவைக்கு வந்து மஹாராஜா பரீக்ஷித்தின் பாதத்தைத் தொட்டவுடன் மஹாராஜாவின் எண்ணங்களும் மனதும் அமைதியின்றி ஆகிவிட்டது. உடனே கலி தான் மதுபானமருந்துமிடம், சூதாட்டகளம், விலைமாதர்கள் வசிக்குமிடம், வன்முறையைத் தூண்டுமிடம் ஆகிய இடங்களில் கொஞ்சம் நாட்கள் தங்கிக்கொள்வதற்கு அனுமதியை வேண்டினான். இவ்விடங்களனைத்துமே உண்மைக்குப் புறம்பான, பிரிவினையை ஏற்படுத்தும் மாயைத்தீவுகளான கலிபுருஷன் குடிகொள்ளும் இடங்களாகும். பொதுவாக கலிபுருஷன் மக்களுடைய மனதில் தீமைகளையே விளைவிக்கும் போக்குகளையுடையவனாவான்.

மஹாராஜா பரீக்ஷித் குரு வம்சத்தில் மிகவும் சிறந்த பேரரசர் ஆவார். அவர் தயாள குணமுடையவர். ஆன்மீகச் சிந்தனையாளர். தரும நெறிமுறைகளில் மிகுந்த அறிவாற்றல் பெற்றவர். அன்பு இதயம் கொண்டவர். காலத்தின் கட்டாயத்தால் கலிபுருஷன் கொஞ்சம் கொஞ்சமாக அரசனுடைய மகுடத்தில் (கிரீடத்தில்) இடம்பிடித்துக்கொண்டான். மஹாபாரத யுத்தத்தில் பாண்டவர்களால் வெல்லப்பட்ட ஜராஸந்தனைப் போல் பரீக்ஷித் அதர்மத்தில் உருவெடுக்க ஆரம்பித்தான். கலிபுருஷன் மௌனமாக அனைவரையும் ஏமாற்றுபவன். மஹாராஜா பரீக்ஷித் வேட்டையாடுவதற்கு அடர்ந்த காட்டில் வெகுதூலைவில் சென்றுவிட்டார். அச்சமயம் ஒரு பன்றியை வேட்டையாடி அதை பிடிப்பதற்கு அதனைப் பின்தொடர்ந்தார். அது கிடைக்காததால் இரக்கமற்றவனாக ஆனார்.

அங்கு ஒரு ஆச்ரமத்தைக் கண்டார். அந்த ஆச்ரமத்தில் தயாள குணமுடைய மஹரிஷி ஷமிக் ஆழ்ந்த தவத்தில் இருந்தார். அரசன் வெகுதூரம் பன்றியைத் தேடி வந்ததால் சோர்வடைந்து தாகத்துடனும் பசியுடனும் இருந்தார். தவம் செய்துகொண்டிருந்த மஹரிஷியிடன் தான் வேட்டையாடிய பன்றியைப் பற்றி விவரம் கேட்டார். ஆனால் அவர் பதில் ஏதும் கூறாததால் கோபமடைந்த பரீக்ஷித் அவரருகில் இறந்து கிடந்த பாம்பை எடுத்து அவருடைய கழுத்தில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

ஷமிக் மஹரிஷியின் புத்ரன் ச்ருங்கி இந்த சம்பவத்தை ஞான திருஷ்டியால் பார்த்து இறந்த பாம்பை உயிர்ப்பித்து இன்னும் ஏழு நாட்களில் தக்ஷகன் எனும் இப்பாம்பு கடித்து அரசன் இறக்குமாறு சபித்தார்.

மஹாராஜா பரீக்ஷித் வேட்டையாடுவதை முடித்துக் கொணடு இராஜ்யத்திற்குச் சென்று தன்னுடைய தலையிலிருந்த (கலிபுருஷன் வசிக்கும்) மகுடத்தை அதாவது கிரீடத்தை அவிழ்த்து கீழே வைத்தவுடன் காட்டில் தான் செய்த தவறை உணர்ந்தார். தாம் பெரிய தவறு செய்து பாவத்திற்குள்ளானதையும் எண்ணி வருந்தினார். உடனே அந்த பாவத்திலிருந்து விடுபட கங்கைக் கரைக்குச் சென்றார்.

அச்சமயம் சிவனுடைய கட்டளையின்படி சுகப்ரம்ஹ மஹரிஷியும் கங்கையின் கரைக்கு வந்தடைந்தார். உடனே மஹாராஜா பரீக்ஷித் அவரை வணங்கி தான் செய்த தீமைச் செயலையும், அதனால் தானடைந்த பாவத்தையும் அவரை ச்ருங்கி மஹரிஷி சபித்ததையும் வினவினார். மிகுந்த இரக்கம் கொண்ட

ஸ்ரீசுகப்ரம்ஹ மஹரிஷி வருத்தத்திலிருந்த பரீக்ஷித்திற்கு ஸ்ரீமத்பாகவதத்தைக் கூறினார்.

ஸ்ரீமத்பாகவதத்தைக் கேட்ட பரீக்ஷித் மஹாராஜா பயமின்றி மனச் சாந்தியுடன் தனது இறப்பைப் பற்றி கவலையின்றி மனித வாழ்க்கை என்பது பிறப்பு இறப்பு என்ற சுழற்சியையுடைது எனச் சமாதானம் ஆனார். ஏழாம் நாள் தக்ஷகன் என்ற பாம்பு கடித்து மஹாராஜா பரீக்ஷித் ஆத்மா பரமாத்மாவுடன் கலந்தது.

அதன் பிறகு அவருடைய பிள்ளை ஜனமேஜயன் பேரரசராக முடிசூட்டப்பட்டார். ஜனமேஜயன் மற்றும் வபுஷ்மா இருவருக்கும் சூர்யாபீடன், சந்த்ராபீடன் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர். ஜனமேஜயன் தன்னுடைய தகப்பன் பரீக்ஷித் பாம்பு கடித்து இறந்ததை நாட்டு மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

ஜனமேஜயன் தன்னுடைய பிதா பாம்பு கடித்து இறந்து போனதை நினைத்து பழிவாங்கும் நடவடிக்கையாக நாகசத்ர யாகத்தைச் செய்தான். இதில் அனைத்து பாம்புகளையும் யாககுண்டத்தில் போட்டு பாம்புகளை பலி கொடுக்கும் யாகமாகும். இந்த யாகத்தில் கோடிக்கணக்கான பாம்புகள் அழிக்கப்பட்டன. பாம்புகளின் தலைவனான தக்ஷகன் பயந்து ஓடி இந்திரனுக்கு குடையாகி தன்னை காப்பாற்றிக் கொண்டான். பாம்புகளின் தலைவன் வாஸுகி பாம்பின் வம்சமே அழிந்துவிடுமோ என பயந்து தனது ஸஹோதரியிடம் வேண்டி அவளுடைய புதல்வன் 'ஆஸ்திக்'கை அனுப்பி நாகவம்சத்தினருக்கும் மனித இனத்திற்கும் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி செய்தான்.

ஏனைய ரிஷிகள், முனிகளைவிட ஆஸ்திக் ரிஷி சிறியவர் ஆவார். இருப்பினும் அவர் அனைத்து ரிஷி, மஹரிஷிகளுடனும், நாடுகளுடனும், ஸர்ப்பயாகம் செய்துகொண்டிருக்கும் ஜனமேஜய மஹாராஜாவிடமும் பேசி பிரார்த்தனை செய்து ஸர்ப்பயாகத்தை முடித்துக் கொள்ள வேண்டிக்கொண்டார். இவ்வாறு செய்தால் மீதமுள்ள பாம்பின் வம்சங்கள் உயிர்பிழைக்கும் என்றார்.

அதன் பிறகு வியாச மஹரிஷி போன்றவர்கள் பேரரசர் ஜனமேஜயருக்கு உபதேசங்களைச் செய்து ஆயிரக்கணக்கான குதிரைகள் கொல்லப்பட்டு தான் மஹாபாரதப் போர் நடந்தது. ஆதனால் அச்வமேதயாகத்தைச் செய்யும்படி பரிந்துரை செய்தனர். மஹாராஜாவும் யாகத்தைச் செய்யத் துவங்கினார்.

இந்த யாகத்திற்கு பயன்படுத்தப்படும் குதிரையை முறைப்படி பூஜித்து அனைத்து நாடுகளுக்கும் அனுப்பவேண்டும். அச்சமயம் மஹாராணி வபுஷ்மா இறந்துபோன குதிரையின் மேல் உறங்கிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த இந்திரன் மஹாராணியுடன் தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டதாகக் கூறி அரசன் ஜனமேஜயரை குழப்பமடைய வைத்து ஏமாற்றினான்.

ஜனமேஜயரும் இறந்துபோன குதிரையினுள் சென்று தனது மனைவியை ஸம்போகம் செய்திருக்கிறான் என்ற எண்ணத்துடன் சந்தேகப்பட்டு மனைவியை நாட்டைவிட்டு காட்டுக்கு அனுப்பிவிட்டார். இந்திரனுக்கு சாபத்தையும் கொடுத்தார். இச்சம்பவத்தால் அரசன் யாகம் செய்யும் தகுதியை இழந்தார்.

பிறகு மஹாராணியும் காட்டில் வேதவ்யாஸ மஹரிஷியின் ஆச்ரமத்தில் அவருடைய ஆறுதலுடன் இருந்தாள். ஏற்கனவே ஜனமேஜயர் வேதவ்யாருக்கு மதிப்புக் கொடுக்காமல் இருந்ததால் மஹரிஷி ஜைமினியை அனுப்பி ஜனமேஜயருக்கு உபதேசங்களைச் செய்து கோபத்தை ஸமாதானப்படுத்தினார். மனந்தளர்ந்த அரசன் மோக்ஷமடைய விரும்பினான்.

ஸஞ்சிந்த்ய கோரமத்யந்தம் சாந்திம் ந ப்ராப்னுதே க்ஷணம்.

சிந்தாசோக பரீதாத்மா மன்யுனா ஜனமேஜய:.

குருவம்சத்தின் பேரரசர் ஜனமேஜயர் தன்னுடைய வாழ்நாளில் நடந்த மறக்கமுடியாததான நிகழ்ச்சிகளை நினைத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு நொடிப் பொழுதுகூட மன அமைதியைப் பெறவில்லை. அவர் மேன்மேலும் அதிக துக்கத்தையும் கவலையையும் அடைந்து தூங்காமலும் சாப்பிடாமலும் தன் உடலுக்கு வேண்டிய எதையுமே செய்யாமல் இருந்துகொண்டிருந்தார்.

தத் ஸாமர்ஷம் ஸோசமானம் க்ருத்தம் பரீக்ஷிதம் ந்ருபம்.

வ்யாஸஸிஷ்யோ வேதவித் ஸ வச: ப்ரோவாச ஜைமினி:.

இவ்வாறு அதிர்ச்சியடைந்து துயரத்திலிருக்கும் இரங்கத்தக்க ஜனமேஜயரைப் பார்த்து வேதவ்யாஸருக்கு மிகவும் சிறந்த சீடரான **ஜைமினி மஹரிஷி இந்த ஸ்ரீமத் அக்ரபாகவதக் கதையை அவருக்கு கூறலானார்.........**

ஸ்ரீ:
ஸ்ரீராஜெயம்

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

முதல் அத்யாயம்
உதயம்

जैमिनिरुवाच

नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् ।

देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत् ॥ १ ॥

மனிதர்களுள் உயர்ந்தவரான/உத்தமமான மனிதனாக இருக்கும் நாராயணனை வணங்கி ஸரஸ்வதி தேவியையும் நமஸ்கரித்து பிறகு ஜயம் என்கிற பாரதத்தை எழுத ஆரம்பிக்கிறேன். அதாவது ஸ்ரீமன் நாராயணனுடைய அருளால் மட்டுமே இந்த அக்ரபாகவதத்தை எழுதமுடியும். ஜயம் என்கிற பாரதத்தை எழுதிய மஹரிஷி வேதவ்யாஸரின் பாதங்களையும் வணங்கி அவரின் சிஷ்யர் ஜைமினியையும் வணங்கி அக்ரஸேனரின் வரலாற்றை கூறுகிறேன். அது இவ்வுலகத்தின் மாயையிருந்து வெற்றியடையச் செய்யும்.

शौनकस्तु महाभागः नैमिशे स कुलाधिपः ।

अपृच्छदुग्रश्रवसं सर्वशास्त्रविशारदः ॥२ ॥

. ஒரு ஸமயம் நைமிசாரண்யத்தில் முனிவர்கள் ஒன்று கூடி நைமிசாரண்யத்தில் ரிஷிகளின் தலைவரும், தவத்தில் சிறந்தவருமான சௌனகர் அனைத்து சாஸ்த்ரங்களையும் அறிந்தவரும் லோமஹர்ஷரின் பிள்ளையுமான உக்ரச்ரவஸ்ஸை கேட்டார்.

॥ शौनक उवाच ॥

भारतानां कीर्तितं मे सूताख्यानं महत् त्वया ।

इक्ष्वाकूणां च सर्वेषां पार्थिवानां तथैव च ॥ ३ ॥

மேலும் சௌனகர் கூறினார் - ஓ ஸுதானந்தா! (ஸூதரின் பிள்ளை) தாங்கள் இந்த பாரததேசத்தில் சந்திர வம்ஸத்தில் வந்த இராஜாக்களை பற்றியும் ஸூரிய வம்ஸத்தில் (இக்ஷ்வாகு) வந்த இராஜாக்களைப் பற்றியும் கூறுவீர்களாக.

अत्यद्भुतानि कर्माणि विचित्राश्च कथाश्शुभाः ।

कथितं भवता पुण्यं पुराणं श्लक्ष्णया गिरा ॥ ४ ॥

ஓ மஹரிஷியே - தாங்கள் எங்களுக்கு மிகவும் விசித்ரமான புரியாத பழமையான மறக்கமுடியாத பல புராண கதைகளை விளக்கமாக ஆசையுடன் கூறி எங்களுக்கு மகிழ்ச்சியையும் புண்யத்தையும் ஏற்படுத்தினீர்கள்.

अग्रस्य कर्मावदातं विस्तरेणैव मे वद ।

कृपया परया लोमहर्षणस्तेऽब्रवीद्यथा ॥ ५ ॥

இவ்வாறு ஸுதானந்தரை (ஸூதரின் பிள்ளை) பாராட்டிய பிறகு, திறமைவாய்ந்த சௌனகர் ஸ்ரீஅக்ரஸேனரின் வரலாற்றை பற்றியும் அவரின் செயல்களையும் விளக்கமாகக் கூறுமாறு பண்புடன்/வினயமாக உக்ரச்ரவஸ்ஸை கேட்டார்.

सौतिरुवाच

व्यासशिष्योऽवदद्यन्मे जैमिनिः सम्प्रविस्तरम् ।

तत् तेऽहं सम्प्रवक्ष्यामि ह्याग्रेयं कीर्तिवर्धनम् ॥ ६ ॥

ஸுதானந்தர் கூறினார் - ஓ சௌனகரே - வியாஸரின் சிஷ்யரான மஹரிஷி ஜைமினி எனக்கு கூறிய ஸ்ரீஅக்ரஸேனரின் கதையை அவர் கூறியபடி விளக்கமாகக் கூறுகிறேன். அக்கதை அக்ரஸேனரின் முழு வரலாற்றை பற்றி தெரிந்துகொள்ளவும். அது நமக்கு கீர்த்தியையும் ஏற்படுத்தும் என்றார்.

क्षुद्रास्ते सन्ति शतशः नृपाः स्वभरणोद्यताः ।
स्वार्थो यस्य परार्थः स पुमानेकोऽग्रसेनकः ॥ ७ ॥

இப்பூவுலகில் நூற்றுக்கணக்கான இராஜாக்கள் எப்பொழுதும் தன்னைப்பற்றியும், தான் இன்பமாக இருப்பதைப் பற்றியும், தான் பற்பல ஆபரணங்களை அணிந்து கொள்வது பற்றியுமே சிந்தித்து வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவரான இராஜா ஸ்ரீஅக்ரஸேனர். அஹ்ரர் மற்றவர்களைப் பற்றி சிந்தித்து வந்தார்.

शृणुष्वैकमना विद्वन् इतिहासं पुरातनम् ।
कथितानि महाबाहो नान्तः शक्यो हि कर्मणाम् ॥८ ॥

ஹே வித்வான்களே - இந்த பழமையான இதிஹாஸத்தை ஒரு மனதுடன் மிகவும் கவனமாகக் கேளுங்கள். சிறந்த மனிதர்களால் கூட (பெரிய கைகளையுடைய) இந்த (பழமைவாய்ந்த ஸ்ரீஅக்ரஸேனரின்) புரிந்துகொள்ளமுடியாத கதையை கூறி முடித்துவிட முடியாது.

सञ्चिन्त्य घोरमत्यन्तं शान्तिं न प्राप्नुते क्षणम्
चिन्ताशोकपरीतात्मा मन्युना जनमेजयः ॥ ९ ॥

ஸூதர் கூறினார் - ஒரு சமயம் - குருகுலத்தின் மணிமகுடமாகத் திகழ்ந்த ஜனமேஜயர் தன்னுடைய மனதில் ஆழ்ந்த சோகத்துடனும், பயத்துடனும், ஒரு நொடிப்பொழுதுகூட மன அமைதியின்றி தனது மனதில் சோகமான சிந்தனையுடனே எதுவும் சாப்பிடாமலும், தூங்காமலும் இருந்தார்.

तत् सामर्षं शोचमानं क्रुद्धं पारीक्षितं नृपम् ।
व्यासशिष्यो वेदवित् स वचः प्रोवाच जैमिनिः ॥ १० ॥

இவ்வாறு மன அமைதியின்றி கஷ்டத்துடன் கோபமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஜனமேஜயரை வேதவ்யாஸரின் பரம சிஷ்யரான வேதக்ஞ மஹரிஷி ஜைமினி பார்த்து பேசத் தொடங்கினார்.

जैमिनिरुवाच

अमर्षेण यातनेयं पन्नगानां त्वया कृता ।
न क्वापि वैरं क्रोधेन जनमेजय शाम्यति ॥ ११ ॥

ஜைமினி கூறினார் - ஹே! மஹாராஜா ஜனமேஜய, உன்னுடைய பலத்தால் உன் எதிரியான பாம்புகளை (பழிதீர்த்தாய்) அழித்தாய். இருப்பினும் ஹே ராஜா! தாங்கள் பழிதீர்த்தகாரியத்தை நினைத்து பார்த்தால் எப்பொழுதும் உங்கள் மனதிற்கு அமைதி ஏற்படாது.

यज्ञे विवरमासाद्य विघ्न इन्द्रेण यः कृतः ।
तेनामर्षादन्वशासीः शशाप्थ त्वं पुरन्दरम् ॥ १२ ॥

ஓ ஜனமேஜய - ஒரு முறை இந்திரன் தங்களுடைய யாகத்தைத் தடை செய்தான். அப்போது அவனுக்கு கோபத்துடன் சாபத்தைக் கொடுத்தீர்கள். அதன் பிறகு இந்திரன் தூய்மையற்றவனாக ஆனான்.

कथं वृद्धं यशो राजन् परित्यक्ता वपुष्टमा ।
ऋत्विजस्तत्यजुः कोपं कथं ते जातमन्यवः ॥ १३ ॥

ஓ தர்மக்ஞ ராஜா - தாங்கள் இவ்வாறு கோபமடைந்ததால் ராணி வபுஷ்டமா கைவிடப்பட்டாள். அதே போல் க்ரோதத்தால் யாகத்தின்போது ரித்விக்குகள் (ஹோமம் செய்யும் வேதவிற்பன்னர்கள்) அவமானம் செய்யப்பட்டனர். இவ்வாறு தங்களுக்கு கோபத்தின் புகழ் அதிகமாக வசப்பட்டுள்ளது. இது தங்களுக்கு மாறானது. இது எவ்வாறு ஏற்பட்டது?.

अथ ते गुरवः शप्ताः कस्य रोषेण वर्धिताः ।
अनाचारः कथं शक्रो नमुदारानतिक्रमेत् ॥ १४ ॥

ஓ தர்மக்ஞ ஜனமேஜய - தங்களுடைய கோபத்தால் எப்படிப்பட்ட தவறுகள் நடந்துவிட்டன?. தாங்கள் எப்படிப்பட்ட அதர்மமான செயல்களை செய்துள்ளீர்கள்?. தங்களுடைய கொள்ளு பேரனான இந்திரனுக்கே சாபம் கொடுத்துள்ளீர்கள். தங்களுடைய குரு ஜனங்களிடத்திலும் யாகம் செய்தவர்களிடத்திலும் சாபம் பெற்றுள்ளீர்கள். இவ்வாறு இருக்கையில் இந்திரன் ஏன் தன்னுடைய கொள்ளுபேத்திக்கு தொந்தரவு கொடுக்கமாட்டான்?.

कथं च गुरुमात्मानं वासवं वा वपुष्टमाम्।
दोषेणाशङ्क्य धर्मस्ते लङ्घितो दुरतिक्रमः ॥ १५ ॥

ஓ ஜனமேஜய - தாங்கள் தர்மத்தையும் நன்கு அறிந்தவர், எவ்வாறு தங்களுடைய கொள்ளு தாத்தாவிற்கு சாபத்தைக் கொடுத்துள்ளீர்கள்?. இது இந்திரனுக்கு மிகவும் தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. யாகம் செய்தவர்களிடத்தில் என்ன தவறு ஏற்பட்டது?. அவர்களை அவமானப்படுத்தியது மட்டுமின்றி அவர்களை அடித்துள்ளீர்கள்?. தர்மத்துடன் இருந்த மனைவி வபுஷ்டமாவை தாங்கள் வீட்டைவிட்டு வெளியேற்றியது வெட்கப்படவேண்டியது. ஏன் இவ்வாறு மன்னிக்கமுடியாத குற்றங்களைச் செய்தீர்கள்?.

दुस्तरं प्रतिकूलं हि प्रतिस्रोत इवाम्भसः ।
कर्म दैवं वाऽन्यकृतं धृतिकेण विहन्यते ॥ १६ ॥

ஓ வித்வான் ஜனமேஜய - வேகமாக ஓடுகின்ற நதியில் எதிர் நீச்சல் போடுவது மிகவும் கடினமானது. பொதுவாக இயற்கையையும் சட்டத்தையும் கட்டுப்படுத்த முடியாது. ஆதலால் கடவுளே தடுத்தாலும் சிறந்த மனிதர்கள் எப்போதும் பொறுமையை கைவிடுவதில்லை. மேலும் சிறந்த மனிதர்கள் அனைத்து துன்பங்களையும் சகித்துக்கொண்டு துணிவுடன் அதை எதிர்கொண்டு அதிருந்து வெளிவருவார்கள்.

जनमेजय तद् विद्धि क्रोधस्य परिवर्जनम्।
धर्मस्यायतनं श्रेष्ठं स्वर्गस्य च सुखस्य च ॥ १७ ॥

ஓ ஜனமேஜய - இவ்வாறு அனைத்தையும் நன்கு சிந்தித்துப் பார்த்து மனதையும், கோபத்தை அடக்கி அதனை வெற்றிகொள்ள வேண்டும். அது தான் ஒருவனுக்கு முடிவற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தும், மன அமைதியைத்தரும், அதுவே ஸ்வர்கத்திற்கு வழியையும் ஏற்படுத்தும்.

तस्मात् स त्वं कुरुश्रेष्ठ मा शुचो जनमेजय ।
त्वद्विधा हि महात्मानो न शोचन्ति परन्तप ॥ १८ ॥

ஆதலால் குரு இராஜ பரம்பரையில் வந்த ஜனமேஜய - தாங்கள் சோகம் அடையவேண்டாம். ஏனெனில் மஹாத்மாக்களின் வம்சத்தில் வந்த சிறந்த மனிதனான தாங்களைப் போன்றவர்கள் சோகம் அடையக்கூடாது.

शिष्टैराचरितो धर्मः पाल्यो नान्यः स्वरिच्छताम् ।
नौः सैव सागरस्येव वणिजः पारमिच्छतः ॥ १९ ॥

ஓ ஜனமேஜய மஹாராஜா - வணிகன் ஸமுத்ரத்தைக் தாண்டி பொருளை விற்பதற்கும் வாங்குவதற்கும் (வாணிஜ்யம் செய்வதற்கு) எவ்வாறு கப்பல் அவசியமாகிறதோ அவ்வாறே ஒரு மனிதன் ஸ்வர்கத்தை அடைவதற்கு பண்டிதர்களால் கூறப்பட்ட தர்மத்தை கடைபிடிக்க வேண்டும். இதை தவிற மற்ற வழி ஒன்றும் கிடையாது.

शृणुष्वैकमना राजन् इतिहासं सुपुण्यदम् ।
कथितान्यग्रसेनस्य नान्तं गच्छन्ति कर्मणाम् ॥ २० ॥

ஆதலால் மஹாத்மாவான ஓ ஜனமேஜய - உன்னுடைய வாழ் நாள் முழுவதும் புண்யத்தைத் தரக்கூடிய இதிஹாஸமான மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரின் கதையைச் சொல்லுகிறேன் மனதை ஒருமுகப்படுத்தி கேட்பாயாக. ஸ்ரீஅக்ரஸேனரின் கதை மிகவும் விஸ்தாரமானது. ஆதால் அதை சுருக்கிச் சொல்லுகிறேன்.

अत्यद्भुतानि कर्माणि विचित्राश्च कथास्तथा ।
अतिदिव्यं कृतं कर्म ह्यग्रसेनेन सद् हितम् ॥ २१ ॥

ஓ இராஜா! ஸ்ரீஅக்ரஸேனர் மனிதனுக்கு வேண்டிய நான்குவித புருஷார்த்தங்களை முழுமையாகப் பின்பற்றி தர்மங்களைச் செய்தவராவார். இவருடைய கதை மிகவும் சிறந்ததாகும். இதைச் சொல்வதாலும் கேட்பதாலும் அவர் நமக்கு ஹிதத்தையும் கல்யாணத்தையும் அளிக்கிறார்.

अत्र ते वर्णयिष्यामि यदि शुश्रूषसेऽनघ ।
त्वत्तो महत्तरो राजा स आसीत् जनमेजय ॥ २२ ॥

ஓ பாபமற்ற இராஜா! ஸ்ரீஅக்ரஸேனரின் விஷயத்தைக் கேட்பாயாக. இப்போது இங்கு அவரைப்பற்றி வர்ணிக்கப்படுகிறது. இந்த பூமியில் இருந்த இராஜாக்களில் முக்கியமானவராக ஸ்ரீஅக்ரஸேனர் இருந்தார்.

जनमेजय उवाच

कथयस्व महत् तस्य कर्म धर्मेप्सवेऽथ मे ।
अग्रसेनस्यावदातं विस्तारेणैव मे वद ॥ २३ ॥

ஜனமேஜயர் கூறினார் - ஓ மஹாமுனியே - மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரின் புண்யமான கதையையும், அவர் செய்த தர்மங்களையும், தர்மத்தால் அடையும் ப்ரத்யக்ஷமான பலன்களையும் அவச்யம் சொல்வீர்களாக. அவருடைய கதையை முழுமையாக நான் கேட்பதற்கு ஆசைப்பட்டவனாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதலால் அவரின் கதையை முழுமையாகக் கூறவும்.

जैमिनिरुवाच

इक्ष्वाकुकुलजानां हि शुद्धानां वंश आदितः ।
न शक्यते विस्तरेण वक्तुमेकेन वत्सरैः ॥ २४ ॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாப்ரபு ஜனமேஜய - தாங்களுக்கு தெரியாதது ஒன்றுமல்ல. முதன் முதல் இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய இராஜாவைப் பற்றி விஸ்தாரமாகக் கூறியபடியே அந்த வம்ஸத்தில் வந்தவர்களும் ஸாத்விகமாகவும் நல்ல மனதை உடையவர்களாகவும் தர்மிஷ்டர்களாகவும் இருந்தனர். இந்த ஒரு வம்சத்தைப் பற்றிக் கூறினாலே ஒரு வருடம் முழுவதும் கூறிக்கொண்டே போகலாம். (அதாவது இக்ஷ்வாகு வம்சத்தில் பற்பல புண்யபுருஷர்களையும், மஹான்களையும் அவர்களின் தர்மத்தையும் புராணத்தில் தனியாக வர்ணிக்கப்பட்டுள்ளது).

कीर्तिमन्तो हि मान्धाता दिलीपोऽथ भगीरथः ।
रघुः कुकुत्स्थः सगरो मरुत्तो नृप राघवः ॥ २५ ॥

ஸூர்யகுலத்தில் இக்ஷ்வாகு வம்ஸத்தில் வந்தவர்கள் மஹாராஜா மாந்தாதா, மஹாராஜா திலீபன், பகீரதன், குகுத்ஸ்தன், மஹாராஜா மருத்தன், மஹாராஜா ரகு, பகவான் ஸ்ரீராமன் போன்றவர்கள் நல்ல கீர்த்திமான்களாவர். இவர்களுடைய கதைகள் அனைத்தும் பற்பல பிறவிக்கு புண்யத்தையும் சிந்தனை செய்வதாயும் உள்ளது.

बभूवुस्त्वग्निवर्णस्य सुताः पञ्च सुरोपमाः ।
तेषां वंशस्त्रिधा भूतः सूर्याणां कुलवर्धनः ॥ २६ ॥

இப்படிப்பட்ட ஸூர்யகுலத்தில் மஹாராஜா அக்னிவர்ணனுக்கு தேவதைகளின் அம்சமாக ஐந்து புத்ரர்கள் உண்டானார்கள். அதில் மூன்று புத்ரர்கள் வம்ஸாபிவ்ருத்தியைச் செய்தனர். அவர்களால் ஸூர்யகுலத்தின் புகழ் நாடு எங்கும் பரவியது.

विश्वसाहः प्रसेनजिद् येनाऽजेयपुरं कृतम् ।
तस्य पुत्रो बृहत्सेनो राजा वीरः प्रतापवान् ॥ २७ ॥

இராஜா விச்வஸாஹரின் புத்ரனான ப்ரஸேனஜித் ஒருவர்கூட ஜெயிக்க முடியாததான 'அஜேய புரி' என்ற ஒரு நகரத்தை ஏற்படுத்தினான். அதில் அவனுடைய பிள்ளை ப்ருஹத்ஸேனனை இராஜாவாக மகுடம் சூட்டினான்.

वज्रनाभकुले जज्ञे मरोः पुत्रो बृहद्बलः ।
तथा वल्लभसेनश्च बृहत्सेनकुलोद्भवः ॥ २८ ॥

இதே போல் வஜ்ரநாபரின் குலத்தில் பிறந்த மஹாராஜா மருவின் புத்ரனாக ப்ருஹத்பலன் பிறந்தான். இதே வம்ஸத்தில் ப்ருஹத்ஸேனனும் வல்லபஸேனனும் பிறந்தனர்.

वल्लभः सूर्यकुलजः प्रतापपुरनायकः ।
तत्पुरं राजधान्यासीद् ग्रामाणामेकविंशतेः ॥ २९ ॥

ஸூர்யகுலத்தில் தோன்றிய மஹாராஜா வல்லபஸேனன் ப்ரதாபபுரம் என்ற தேசத்தின் இராஜாவாகவும், நாயகனாகவும் இருந்தான். ப்ரதாபபுரம் என்ற தேசம் 19 நகரங்களைக் கொண்டிருந்தது. இதை மஹாராஜா வல்லபஸேனன் ஆண்டு வந்தான்.

प्राकारालङ्कृता सम्यक् शातकौम्भविराजिता ।
सा पुरी त्रिदिशानद्या संवृताऽन्यदुरासदा ॥ ३० ॥

ப்ரதாபபுரம் என்ற இந்த தேசம் உயரமான, அழகான மாட மாளிகைகளையும் அலங்காரமான மதிற்சுவர்களையும், பற்பல அலங்காரமான வெற்றித் தூண்களையும் கொண்டது. இந்த தேசம் மூன்று நதிகளால் சூழப்பட்டு இருந்ததால் எதிரிகள் வருவது கஷ்டமாகவும் இந்த இராஜாவை வெற்றிக்கொள்ளவது கடினமாகவும் இருந்தது. இந்நகரம் உயர்ந்த கலைநுணுக்கங்களால் அலங்கரிக்கப்பட்டு ஸூரியனைப்போன்று காட்சி அளித்தது.

मेधावी वल्लभो राज्यं चकाराधिवसन् पुरीम् ।
तस्य भार्या तु वैदर्भी नाम्ना भगवती श्रुता ॥ ३१ ॥

மேதாவீ மஹாராஜா வல்லபஸேனன் ப்ரதாபபுரத்தை தர்மத்தில் கூறியபடி ராஜாவாக இருந்து காப்பாற்றி வந்தான். அவனுக்கு விதர்ப தேசத்தின் பெண்ணான பகவதீ என்பவள் மனைவியாக ஆனாள்.

भगवत्यां वल्लभेन प्राप्तो वंशकरः सुतः ।
मनुष्याग्रस्य यस्यासीत् कान्तिश्चन्द्रमसो यथा ॥ ३२ ॥

மஹாராஜா வல்லபஸேனரின் மனைவி ராணி பகவதீ மனிதர்களில் சிறந்தவனான சந்திரனுக்கு ஸமமான (ஒப்பான) ஒரு அழகான புத்ரனை பெற்றெடுத்தாள். (அக்குழந்தை இராஜாவைப் போன்று குணங்களும், சாஸ்த்ரங்களை அனுசரித்தும், அந்த வம்சத்தை பின்பற்றியும் இருந்தது).

मासेऽश्वयुज्याद्यपक्षे शुक्ले चाद्यदिने शुभे ।
आदित्यवासरे चैन्द्रे काले जातः स भाग्यवान् ॥ ३३ ॥

அந்த குழந்தை சித்திரை மாஸம் சுக்ல பக்ஷத்தில் ப்ரதமை திதியில் ஞாயிற்றுக் கிழமையில் சுபதினத்தில் சுபமுஹூர்த்தத்தில் பிறந்தது.

हस्तेऽर्केन्दू गुरुः पुष्ये तदाऽऽसन् भोगकारकाः ।
स्वात्यां बुधोऽनुराधायां कुजः शुक्रश्च रोहिणः ॥ ३४ ॥

குழந்தை பிறந்த தினத்தன்று ஹஸ்த நக்ஷத்ரமும், அதற்கேற்ற கன்யா லக்னமும், ஸுரியசந்த்ரன் தன்னுடைய ஸ்தான ஆதிபத்யத்திலும் குரு புஷ்ய நக்ஷத்ரமான போக ஸ்தானத்திலும், புதன் ஸ்வாதீ நக்ஷத்ரத்திலும், செவ்வாய் அனுராதா நக்ஷத்ரத்திலும் அதே போல் சுக்ரன் ரோஹிணீ நக்ஷத்ரத்திலும் இருந்தனர்.

स्वात्यां भानुसुतश्चासीत् शोभते स्म फणी मृगे ।
रविरात्मा च शीतांशुरिष्टे बन्धं व्यपोहयन् ॥ ३५ ॥

ஆனால் ஸ்ரீஅக்ரஸேனர் பிறந்த போது ஸுரியனே பிள்ளையகவும், சனி ஸ்வாதி நக்ஷத்ரத்திலும், ராஹு பாம்பைப் போன்றும் ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தையும் சூழ்ந்திருந்தன.

महाजनाश्च सर्वे वै जाता दर्शनलालसाः ।
एतैः परिवृतो राजा स मुनिः प्राप्तवान् स्वयम् ॥ ३६ ॥

பிறந்த குழந்தையான ஸ்ரீஅக்ரஸேனரை பார்ப்பதற்கும் கொஞ்சுவதற்கும் பற்பல மக்கள் குழந்தை பிறந்த இடத்திற்கு வந்தனர். அவர்களுடன் மஹாராஜா வல்லபஸேனனும் மஹாமுனியுடன் வந்தார்.

धन्यां स्तुवन्तो जननीं वन्दिनः सूतमागधाः ।
चक्रुर्नानाविधाश्चेष्टाः सर्वलोकाश्च हर्षिताः ॥३७ ॥

அங்கு வந்த மக்கள் புதிதாக பிறந்த குழந்தையையும், விதர்பதேச ராணி பாகவதியையும் பார்த்து மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடி கொண்டாடி மகிழ்ந்தனர். அங்கு ஒருவருக்கு ஒருவர் சேஷ்டைகளையும் செய்து சிரித்து மகிழ்ந்தனர்.

तं दृष्ट्वा ऋषयोऽभ्यूचुः यशस्त्वं प्राप्स्यसे महद् ।
श्रीमान् जैत्रो दानशीलः क्षमाशीलो नरेश्वरः ॥ ३८ ॥

குழந்தையைப் பார்த்த பிறகு ரிஷி கூறினார். இந்தக் குழந்தை கண்டிப்பாக எதிர்காலத்தில் பெரிய புகழை அடையப்போகிறது. இக்குழந்தை மஹாலக்ஷ்மியாள் புகழப்பட்டு அனைவரிடமும் தயையுடனும், இறக்க குணத்துடனும், சிறந்தவனாகவும் பலரும் அறிந்த இராஜாவாகவும் இருக்கும் என்றார்.

धर्मज्ञश्च कृतज्ञश्च दयावान् सत्यसङ्गरः ।
मान्यो मानयिता चेति स्माशीर्वादं प्रयुञ्जते ॥ ३९ ॥

மேலும் இக்குழந்தை தர்மத்தை கடைபிடித்தும், உதவி மனப்பாண்மையுடனும், தயையுடனும், ஸத்யத்தை முழுவதுமாக கடைபிடித்தும் மனிதர்களும் சிறந்த மனிதனாகவும் அனைவரும் போற்றி புகழும் வண்ணம் இருக்கும். இதே போன்று ரிஷிகளும் ஆசீர்வதித்தனர்.

गोधनानि च रत्नानि ददौ स ब्राह्मणान् मुनिः ।
उत्सवश्च महानासीत् सूतमागधवन्दिनाम् ॥ ४० ॥

இராஜா வல்லபஸேனன் தனக்கு பிள்ளை பிறந்ததை கொண்டாடும் பொருட்டு அங்கு வந்து ஆசீர்வாதம் செய்த ரிஷிகளுக்கும் முனிகளுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் பசுமாடு பணம் (தனம்) ரத்னங்கள் போன்றவற்றை தானமாகக் கொடுத்து மகிழ்ந்தான். குழந்தையை ரத்னங்களால் அலங்கரித்து அங்கு வந்தவர்களை வணங்கி ஆசிபெற்றான்.

अन्ये सर्वे जनाः प्राप्ताः लाभकौतुकवीक्षया ।
तेभ्यो रत्नानि वासांसि काञ्चनं प्रददौ बहु ॥ ४१ ॥

மஹாராஜா வல்லபஸேனர் நாட்டிலுள்ள மற்ற ஜனங்களுக்கும் குழந்தையை சந்தோஷமாகப் பார்ப்பதற்கு வந்தவர்களுக்கும் நிறைய ரத்னங்களையும், வஸ்த்ரங்களையும், தங்கத்தையும் கொடுத்தான்.

अनुक्रमाद् वल्लभोऽपि विनयाद्यैर्वचोऽमृतैः ।
सुहृत्सम्बधिनः सर्वांस्तोषयामास मानदः ॥ ४२ ॥

அதன் பிறகு இராஜா வல்லபஸேனன் அனைத்து நண்பர்களையும், மந்த்ரிகளையும் பார்த்து ஸந்தோஷமாகப் பேசி மகிழ்ந்தான்.

अतीत्यैकादशाहं तु नामकर्म तदाऽभवत् ।
अग्रसेनः इति प्रीतः पुरोधा नाम चाकरोत् ॥ ४३ ॥

குழந்தை பிறந்து 11 நாட்கள் முடிவடைந்ததும் பெயர் சூட்டும் விழாவைச் செய்தான். இராஜ குலத்தின் தலைமை புரோஹிதர் குழந்தைக்கு அக்ரஸேனன் என்ற பெயரை சூட்டி மகிழ்ந்தார். (குழந்தைக்கு பெயர் ஜாதகத்தின்படி எடுக்கப்பட்டு வைக்கப்பட்டது).

श्रुतेऽथ शस्त्रे शास्त्रे च परेषां जीवने तथा ।
चक्रे धातोरर्थयोगाद् अग्रनाम्नाऽऽत्मसम्भवम् ॥ ४४ ॥

குழந்தையின் பெயரில் அக்ர என்று கூறப்பட்டதற்கு காரணம் - இக்குழந்தை அனைத்திலும் சஸ்த்ரம், சாஸ்த்ரம், அறிவியல், ஜீவனம் போன்றவற்றில் முதல் இடத்தை அடையவேண்டும் என்பதற்காகவும் அனைவரைக்காட்டிலும் முதன்முதல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அதன் உட்பொருளைக் கொண்டு பெயர் வைக்கப்பட்டதாகும்.

प्राप्तो वृद्धिं यथा बालचन्द्रोऽसौ तु दिने दिने ।
तथा पितुः प्रयत्नात्स समग्रश्रीरजायत ॥ ४५ ॥

இவ்வாறு பாலசந்த்ரனான அக்ரஸேனன் நாள் ஒரு மேனி பொழுதொரு வண்ணமாக அனைத்து ஐஸ்வர்யங்களுக்கும் மஹாராஜாவான வல்லபஸேனன் மேற்பார்வையில் வளர ஆரம்பித்து பெரியவனானான்.

जैमिनिरुवाच

जन्मेदम् अग्रसेनस्य चेक्ष्वाकोः वंशवर्धनम् ।
यः श्रावयेद् पर्वकाले धन्यकीर्तिर्भवेन्नरः ॥ ५६ ॥

மஹரிஷி ஜைமினி, தர்மாத்மா மஹாராஜா ஜனமேஜயரை பார்த்து கூறினார் -
இவ்வாறு இக்ஷ்வாகு வம்ஸத்தில் கீர்த்தியுடன் பிறந்த ஸ்ரீஅக்ரஸேனரின் ஜன்ம வ்ருத்தாந்தமான (குழந்தை பிறப்புக் கதையை) விசேஷமாக யார் கேட்கிறார்களோ அவர்கள் பாக்யசா ளாகவும் உயர்ந்த புகழையும் அடைவார்கள் என்று கூறினார்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
महर्षिरचितम् श्रीमदग्रभागवते प्रथमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் முதல் அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இரண்டாவது அத்யாயம்

ஞானம்

जैमिनिरुवाच

वर्षेषु राजा यातेषु हुत्सवं समचीकरत् ।

ब्राह्मणान् स्नातकान् वेदविदुषः पर्यपूजयत् ॥ १ ॥

மஹரிஷி ஜைமினி கூறினார் - குழந்தைக்கு ஒரு வருடம் ஆனவுடன், இராஜா வல்லபஸேனன் குழந்தைக்கு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தான். மந்திரியல்லாதவர்களையும், வேதம் படித்த ப்ராஹ்மணர்களையும், நன்கு படித்தவர்களையும் (ஸ்னாதகர்களையும்), ப்ராஹ்மணர்களையும் அனைவரையும் அழைத்து பூஜித்தான்.

गणका अब्रुवन् हृष्टा हे वल्लभ तवार्भकः ।

अयं बहुश्रवा भक्तस्तत्त्वज्ञानविशारदः ॥ २ ॥

இந்த ஸமயத்தில், ஜ்யோதிஷ வல்லுனர்கள் மகிழ்ச்சியுடன் கூறினர் - ஓ வல்லபஸேன மஹாராஜா! புகழுடன் கூடிய தங்களுடைய குழந்தை பற்பல சாஸ்த்ரங்களை தெரிந்துகொள்வான், ஈச்வரனிடத்தில் பக்திகொண்டு நன்கு வேதாந்தவிஷயங்களை அறிவான் என்றனர்.

सत्यं शीलश्च तेजश्च सममस्य न केन चित् ।

इति विप्रवचः श्रुत्वा परं हर्षमवाप सः ॥ ३ ॥

குழந்தை ஸ்ரீஅக்ரஸேனனைப் போன்று எதிர்காலத்தில் ஸத்யவானாகவும், ஒழுக்கமுடையவனாகவும், நல்ல தேஜஸ்ஸுடனும் யாரும் இருக்கமுடியாது என்பதைக் கேட்ட மஹாராஜா வல்லபஸேனன் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தான். (கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு நாளாக குழந்தை ஸ்ரீஅக்ரஸேனன் வளர்ந்து இளமைப் பருவத்தை அடைந்தான்)

ताण्ड्यस्यर्षेराश्रमन्तु गतोऽग्रो बहुलाः समाः ।
अवसत् सुचिरं तत्र गुरुशुश्रूषणे रतः ॥ ४ ॥

ஸ்ரீஅக்ரஸேனன் இளமை பருவத்தில் வித்யைகளை கற்றுக்கொள்வதற்காக தாண்ட்ய மஹரிஷியின் ஆச்ரமத்திற்கு அதாவது குருகுலவாஸத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

अग्रसेनो राजपुत्रो ब्रह्मचारी श्रुतिप्रियः ।
इष्वस्त्रहेतोर्न्यवसत् तस्मिन् माल्यववासिनि ॥ ५ ॥

மஹரிஷி தாண்ட்யரின் ஆச்ரமத்தில் ஸ்ரீஅக்ரஸேனனுடன் மற்ற இராஜ குமாரர்களும், ரிஷி குமாரர்களும், ப்ரஹ்மசாரிகளும் வித்யைகளைக் கற்றுக்கொண்டனர்.

अधिजग्मुर्यथा वेदांस्तापसा मुनिबालकाः ।
अधीतवान् तथा वेदं स ताण्ड्यमुनिनोदितम् ॥ ६ ॥

தாண்ட்ய மஹரிஷியின் ஆச்ரமத்திலேயே முனிகுமாரர்கள் மற்றும் ரிஷிகுமாரர்கள் வேதங்களைப் பயின்றனர். அவர்களுடன் ஸ்ரீஅக்ரஸேனனும் சிறப்பாகவும் கவனத்துடனும் வேதங்களைப் பயின்றான்.

ते साक्षात्कृतधर्माणः प्रादद्युर्युरवः कलाः ।
बभुवाग्रोऽचिरेणैव वेदाङ्गेषु विशारदः ॥ ७ ॥

மஹரிஷி தாண்யரின் ஞான உபதேசத்தாலும், தன்னுடைய தபோ பலத்தாலும் மிகவும் குறுகிய காலத்திலேயே வேதங்களையும், வேதாங்கங்களையும் (சிக்ஷா, நிருக்தம், சந்தஸ்சாஸ்த்ரம், ஜ்யோதிஷம், வ்யாகரணம், கல்பம்) ஸ்ரீஅக்ரஸேனன் கற்றுக்கொண்டான்.

विनयेनान्वितो ह्यग्रः शुश्रुषुर्निरहंकृतिः ।
तथा ताण्ड्योऽपि विधिवत् विद्यास्ताः प्रददौ समाः ॥ ८ ॥

ஸ்ரீஅக்ரஸேனன் மிகவும் வினயத்துடன் எப்பொழுதும் குருவிற்கு ஸேவை செய்துவந்தான். அவனுக்கு அஹங்காரம் ஒருபொழுதும் வரவில்லை. மஹரிஷி தாண்ட்யரும் அனைத்து சாஸ்த்ரங்களையும் வித்யைகளையும் அனைவருக்கும் ஸமமாகவே கற்றுக்கொடுத்தார்.

अग्रसेनः परं यत्नमातिष्ठद् गुरुपूजने ।
शास्त्रे च परमं योगं, प्रियस्ताण्ड्यस्य चाभवत् ॥ ९ ॥

ஸ்ரீஅக்ரஸேனன் தன்னுடைய குருவுக்கு மனஸ்ஸாக்ஷியுடனும், உண்மையுடனும் உத்தமமான குரு ஸேவையை தன்னால் முடிந்தளவுச் செய்ததால் மஹரிஷி தாண்யரின் ப்ரியமான சிஷ்யனாக ஆனார்.

स च श्रुतिधरो वीरो यथावत् समुपेयिवान् ।
चतुष्पादं धनुर्वेदं शस्त्रग्रामं ससङ्ग्रहम् ॥ १० ॥

ஸ்ரீஅக்ரஸேனன் மிகவும் திறமைசாயானதால் குருவின் போதனையை ஒரு முறை கூறும்போதே அதை உடனடியாகத் தெரிந்துகொண்டான். மிகவும் குறுகிய காலத்திலேயே வில்வித்யை நான்கு பகுதியையும் (தீக்ஷா, ஸம்க்ரஹம், ஸித்தி மற்றும் ப்ரயோகமான தனுர்வேதத்தை) கற்றுக்கொண்டான். மற்ற ஆயுதங்களை ப்ரயோகம் செய்வதையும் எளிமையாகக் கற்றுக்கொண்டான்.

परिधावसिचर्यायां तोमरप्रासशक्तिषु ।
ऋषिः सङ्कीर्णयुद्धे च शिक्षयामास तं धिया ॥ ११ ॥

மேலும் குரு சிஷ்யர்களுக்கு யுத்தத்தில் பரதி, தோமரம் போன்ற பற்பல ஆயுதங்களை ப்ரயோகம் செய்வதையும் அதனுடைய சக்தியையும், ஒரு ஆயுதத்தைக் கொண்டும், பல ஆயுதங்களைக் கொண்டும், ஒருவருடனும், ஒரே ஸமயத்தில் பலருடனும் எவ்வாறு சண்டை போடுவது போன்றவற்றை அனைத்து சிஷ்யர்களுக்கும் கற்றுக்கொடுத்தார்.

भ्रान्तमुद्भ्रान्तमाविद्धमाप्लुतं लुप्तमुत्प्लुतम् ।
इत्यग्रसेनो निष्णातश्चासिचर्यासु सोऽग्रणीः ॥ १२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் ப்ராந்தம், உத்ப்ராந்தம், ஆவித்தம், ஆலுப்தம், விலுப்தம் மற்றும் லுப்தம் போன்ற வாள்
பயிற்சியில் தேர்ச்சி பெற்று, அப்பகுதியை எங்கு, எந்த ஸமயத்தில் உபயோகிக்க வேண்டும் என்பதையும் அதன் நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டார்.

परया श्रद्धयोपेतो योगेन परमेण च ।
विमोक्षादानसन्धाने लघुत्वं परमाप सः ॥ १३ ॥

அக்ரஸேனர் தன்னுடைய தொடர் பயிர்ச்சியாலும் குருவின் அருளாலும் வில் வித்யையில் திறமையுடன் அம்பை எதிரியை நோக்கி விடுவதிலும் அதைத் திரும்பப் பெறுவதிலும் தேர்ச்சி பெற்றார்.
அக்ரஸேனர் ஒரு இலக்கை நோக்கி அம்பை விடுவதில் சிறந்தவராகத் திகழ்ந்தார்.
(வில்வித்யையில் 32 விதமான கலை நுணுக்கங்கள் உள்ளன)

चिन्तयित्वाऽस्य मेधां तां प्रादादस्त्राणि सद्गुरुः ।
सप्रयोगरहस्यानि दातुमेषोऽर्हतीति च ॥ १४ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் சிறந்த அறிவாற்றலைப் பார்த்த மஹா தபஸ்வீ தாண்ட்ய மஹரிஷி ஸம்ஹாரவிதியுடன் கூடிய ஸம்பூர்ண அஸ்த்ரங்களையும், ரஹஸ்யமான அஸ்த்ரங்களை ப்ரயோகம் செய்வதையும் கற்றுக்கொடுத்தார்.

आचार्यस्योपदेशेषु सर्वेष्वग्रोऽग्रणीरभूत् ।
बभूव श्रेष्ठ एकोऽग्रः सुष्ठु सौष्ठवपूरितः ॥ १५ ॥

ஆசார்யன் அனைவருக்கும் ஒரே ஸமயத்தில் அனைத்து வித்யைகளையும் கற்றுக்கொடுத்தார். ஆனால் அவர்களில் ஸ்ரீஅக்ரஸேனர் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். எனவே ஸ்ரீ அக்ரஸேனனுக்கு சில சிறிய நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்தார்.

बुद्धियोगे बलोत्साहे सर्वशास्त्रेषु निष्ठितः ।
ज्ञाने गुर्वनुरागे च विशिष्टोऽग्रो बभूव ह ॥ १६ ॥

அறிவுத்திறனிலும், மனக்கட்டுப்பாட்டிலும், பலத்திலும், உத்ஸாகத்திலும் சிறந்த அக்ரஸேனர் சீக்கிரமாகவே அனைத்து சாஸ்த்ரங்களிலும் தேர்ச்சி பெற்றார். ஞானத்தை அளித்த தன் குருவிடத்தில் அதிகமாக மரியாதை வைத்திருந்தார். எனவே அவருடைய ஸ்தானம் முதடத்தை அடைந்தது.

पूर्णे चतुर्दशे वर्षे तु अग्रसेनस्य धीमतः ।
तदा सम्प्रेषयामास चोक्त्वा स्वस्ति तपोधनः ॥ १७ ॥

ஸ்ரீ அக்ரஸேனருக்கு 14 வயது முடிவடைந்ததும் ஆஸ்ரமத்தில் இருக்கும் ரிஷிகள், அங்கு படிக்கும் ஸஹமாணவர்கள் அனைவரும் அக்ரஸேனருக்கு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி ஸ்வஸ்திவாசங்களை கூறி மகிழ்ந்தனர்.

तदाश्रमे ऋषेः कन्यां तापसीवेषधारिणीम् ।
दृष्ट्वैकान्ते रतीन्द्राख्यः कामस्य वशमीयिवान् ॥ १८ ॥

அந்த ஆஸ்ரமத்தில் தாபஸ கன்னிகைகள் தவக்கோலம் பூண்டு ரிஷிகளுக்கு பணிவிடை செய்துவந்தனர். அந்த சமயத்தில் அங்கு ஒரு இராஜா (ரதீந்த்ரன்) ஒரு தாபஸ கன்னிகை ஆடை அணிந்திருப்பதையும் அவள் அழகையும் பார்த்து அவளிடம் ஆசைக்கொண்டான். அவன் அவளிடம் ஆசையையும் வளர்த்துக்கொண்டான்.

तामेवं श्लक्ष्णया वाचा लुब्धको मृदुपूर्वया ।
सान्त्वयामास कामार्तस्तदबुध्यत कामिनी ॥ १९ ॥

அந்த இராஜா அவளருகில் சென்று அழகாகவும் ருசியாகவும் பேசி அவளை தன்னுடைய காமத்தில் விழச்செய்தான். இதனால் அந்த தாபஸ கன்னிகை அவனிடம் சிக்கிக் கொண்டாள்.

शुभा तस्मादपाक्रम्य देशात् हृदयकम्पना ।
तीव्ररोषसमाविष्टा प्रजज्वालेव मन्युना ॥ २० ॥

அந்த தாபஸ கன்னிகையையும், ராஜாவையும் ஆஸ்ரமத்தின் ரிஷி கூபா பார்த்ததால் இருவருடைய மனதும் பயத்தை அடைந்தது. உடனே இருவரும் அந்த இடத்தை விட்டுப் பிரிந்தனர்.

स तु पापमतिः क्षुद्रः प्रधर्षयितुमातुरः ।
दुर्धर्षां तर्कयामास दीप्तामग्निशिखामिव ॥ २१ ॥

பாபாத்மாவான இராஜா அந்த கன்னிகையை பலாத்காரம் செய்து தன்னுடைய ஆசைக்கு வசப்படுத்தியபோது அந்த தாபஸ கன்னிகை தன்னுடைய தவத்தின் வலிமையால் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போல் ஆனாள். ஆதலால் இராஜா அவளை தொடமுடியவில்லை. அக் கன்னிகையும் அவன் தொடுவதை மறுத்தாள்.

शुभा उवाच

नैवं कार्यं त्वया राजन् न्यायवित्त्वं न बुध्यसे ।
किं कुले त्वं समुत्पन्नो न धर्मं त्वमवेक्षसे ॥ २२ ॥

சுபா கூறினாள் - ஹே ராஜன், தாங்கள் ஒரு ராஜா. இதுபோன்ற பாபம் விளைவிக்கின்ற செயல் ஈடுபடலாமா?. இது தாங்கள் செய்யும் செயலா?. தாங்களுக்கு பாபம் புண்யம், எது சரி எது தவறு என்று தெரியவில்லையா?. தாங்கள் எந்த குலத்தில் பிறந்துள்ளீர்கள்?. தாங்கள் இப்படிப்பட்ட தவறான காரியத்தைச் செய்யும் முன் இதையெல்லாம் நினைக்கவில்லையா?. தங்களுடைய குலத்தின் மரியாதை என்ன?. தாங்கள் ஏன் தர்மத்தைக் கடைபிடிக்கவில்லை?.

जैमिनिरुवाच

प्रोवाच सा मा स्पृशेति भीता च प्रचुकोश सा ।
हा हा रक्ष च रक्षेति मुहुश्चेतश्च धावति ॥ २३ ॥

ஜைமினி கூறினார் - 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்னைத் தொடாதே' என்று கத்தியபடி அந்த ரிஷி கன்னிகை இங்கும் அங்கும் பயந்துக்கொண்டு ஓடினாள்.

जग्राह तामुत्तरवस्त्रदेशे
रतीन्द्रनामा च तदा कुबुद्धिः ।
प्रगृह्यमाणां च विकृष्यमाणाम्
आरोप्य चासौ रथमारुरोह ॥ २४ ॥

அந்த சமயத்தில் இராஜா (ரதீந்த்ரன்) கெட்ட புத்தியுடன் காம ஆசைக்கொண்டு அந்த ரிஷி கன்னிகையின் மேல் ஆடையை பிடித்து இழுத்து அவனுடைய தேரில் அவளை அமர்த்திக்கொண்டான்.

आक्रन्दमानां संश्रुत्य जवेनाभिससार सः ।
आश्रमस्य च सर्वेऽपि कुमारास्तत्र चागताः ॥ २५ ॥

இவ்வாறு ரிஷி கன்னிகையின் அழு குரலையும், காப்பாற்றுங்கள் என்று கத்தியதையும் கேட்டவுடன் ஆச்ரமத்தில் ஸ்வஸ்தி வாசனம் சொல்கொண்டிருந்த ரிஷிகுமாரர்கள் சுபா இருந்த இடத்திற்கு ஓடி வந்தனர்.

स रतीन्द्रस्तु सम्प्रेक्ष्य कुमारानुद्यतांस्तदा ।
प्राधावच्च रथात् तूर्णम् जीवितेप्सुः सुदुःखितः ॥ २६ ॥

ஸ்ரீ அக்ரஸேனருடன் அங்கு வந்த ரிஷிகுமாரர்களை பார்த்த ராஜா ரதீந்த்ரன் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என நினைத்து பயந்து போய் அவனுடைய ரதத்தை அங்கேயே விட்டு விட்டு ஓட ஆரம்பித்தான்.

तम् अग्रसेनो धावन्तमवतीर्य रथाद् तदा ।
अभिद्रुत्य निजग्राह केशपाशे ह्यमर्षणः ॥ २७ ॥

ரதத்தை விட்டு விட்டு பயத்தினால் ஓடும் ரதீந்த்ரனைப் பார்த்த ஸ்ரீஅக்ரஸேனர் ஓடிப்போய் அவனுடைய முடியைப் பிடித்து நிறுத்தினார்.

शिरो गृहीत्वा राजानं ताडयामास चैव ह ।
पदा मूर्ध्नि कुमारास्ते प्रहारैः पर्यपीडयन् ॥ २८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் ரதீந்த்ரனைப் பிடித்து அடித்து உதைத்தார். அவருடன் இருந்த ரிஷி குமாரர்களும் அந்த ராஜாவின் தலையிலும் உடம்பிலும் அடித்து உதைத்தனர்.

अचिन्तयन् सरोषं ते नायं जीवितुमर्हति ।
कन्यायास्तदनर्हायाः परिक्लेष्टा नराधमः ॥ २९ ॥

கோபமடைந்த ரிஷி குமாரர்கள் இழிவான மனிதனான ரதீந்த்ரனை கொன்றுவிடலாம் என்றனர். ஏனெனில் ஆச்ரமத்திருந்த ரிஷி கன்னிகையை துன்புறுத்தி கஷ்டத்திற்கு ஆளாக்கியுள்ளான் என்றனர்.

मा वधिष्टेति सोऽग्रस्तं दयावान् प्रत्यभाषत ।
पङ्केन मलिनं चक्रे तदा तस्याननञ्च सः ॥ ३० ॥

அச்சமயத்தில் இறக்கம் கொண்ட ஸ்ரீ அக்ரஸேனர் ரதீந்த்ரனை கொல்லக்கூடாது என்றார். இருப்பினும் ரிஷி குமாரர்கள் ரதீந்த்ரனின் முகத்தில் சேற்றை பூசி அடித்து உதைத்தனர். அவன் மயக்கத்துடன் கீழே விழுந்தான். (இளமையிலேயே ஸ்ரீஅக்ரஸேனர் மனதைக் கட்டுப்படுத்தி அதர்மத்தைப் பார்த்து தர்மத்தின்படி தண்டனையை கொடுக்க வேண்டும் என்பதை அறிந்தவராவார்).

ततो विचेष्टमानन्तं बुध्द्वा सोऽग्रः प्रभाकरः ।
रथमारोपयामास विसञ्ज्ञं पांसुगुण्ठितम् ॥ ३१ ॥

அதன் பிறகு பாபாத்மா ரதீந்த்ரன் மூச்சைப் பிடித்துக் கொண்டு எழுந்தான். அவனை கயிற்றால் கட்டி அவனுடைய தேரில் ஏற்றினர். இருப்பினும் அவன் முகத்தில் சேற்றை பூசி அடித்தால் மறுபடியும் அவன் மூர்ச்சையானான்.

अभ्येत्याश्रममाराध्यमभ्यागच्छन्मुनीश्वरम् ।
ताण्ड्य उवाच
मुञ्चैनमधमाचारमदासो गच्छतु द्रुतम् ॥ ३२ ॥

தவறு செய்த ராஜா ரதீந்த்ரனையும் அவனுடைய தேரையும் மஹரிஷி தாண்ட்யமுனிவரிடம் கொண்டுவந்தனர். தாண்ட்யர் கூறினார் - ஓ குமாரர்களே அவனை அவிழ்த்துவிடுங்கள். பாபத்தைச் செய்தவன் இங்கிருந்து ஓடட்டும். அவனுக்கு இனி இழிவுகாலம் தான் என்றார்.

क्षुद्राधम धिगस्तु त्वां मैव कार्षीः पुनः क्वचित् ।
जैमिनिरुवाच
एवमुक्तो रतीन्द्रस्तु सव्रीडोऽवाङ्मुखो ययौ ॥ ३३ ॥

கீழ்த்தரமான (அதமனான) ஓ மனிதா! இங்கிருந்து சீக்கிரமாக ஓடிவிடு. எதிர்காலத்தில் இனிமேல் இதுமாதிரியான தவறைச் செய்யாதே. ஜைமினி கூறினார் - இவ்வாறு தண்டனையை அனுபவித்து வெட்கத்தை அடைந்த ரதீந்த்ரன் முகத்தைக் குனிந்தவாறு அங்கிருந்து வெளியேறினான்.

यतः सम्प्राप्तविद्यास्ते तान् दृष्ट्वा मुनिसत्तमः ।
ततोऽग्रसेनं स ऋषिः स्मयमानोऽभ्यभाषत ॥ २४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் வேத வேதாந்தங்களையும் அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்கு பயின்று முடித்தார். அவரைப் பார்த்து மஹரிஷி தாண்டியர் கூறினார் -

ऋषिरुवाच

कामक्रोधौ वशीकुर्याद् दम्भं लोभमनार्जवम् ।
पञ्चैतान्यपवित्राणि शिष्टाचारेषु सर्वदा ॥ २५ ॥

மஹரிஷி கூறினார் - ஹே! குழந்தை அக்ரஸேனா! காமம், க்ரோதம், தம்பம், லோபம் ஆகிய நான்கையும் அடக்கி தர்மத்தை முழுவதுமாகச் செய்து, ஸத் (நல்ல) புருஷர்கள் கடைபிடிக்கும் ஆசாரத்தை கடைபிடிக்க வேண்டும் என்றார்.

गुरुशुश्रूषणं सत्यमक्रोधो दानमेव च ।
एवं चतुष्टयं सेव्यं शिष्टाचारेषु नित्यदा ॥ २६ ॥

குழந்தாய்! - நல்ல குணமுடைய சிஷ்யன் - குருவுக்கு பணிவிடை செய்வதும், உண்மை பேசுவதும், கோபமில்லாமலும் (பொறுமையுடனும்), தானம் ஆகிய நான்கையும் விடாமல் கடைபிடிக்க வேண்டும்.

अधर्मो धर्मरूपेण लोके सर्वत्र विद्यते ।
धर्मात्मा प्राप्तसन्तुष्टिरिह प्रेत्य च नन्दति ॥ २७ ॥

ஓ என்னுடைய குழந்தாய்! - இவ்வுலகில் அதர்மம் தர்மத்தைப் போன்று அனைத்து இடங்களிலும் உள்ளது. ஆனால் எவன் ஒருவன் தர்மத்தின் மூலம் மற்றவர்களுக்கு ஸேவை செய்கிறானோ அவன் இவ்வுலகிலும் சந்தோஷமாக இருக்கிறான். மேல் உலகிலும் (பரலோகத்திலும்) ஆனந்தத்தை அடைகிறான்.

गतिमिष्टां तपो ज्ञानं मेधां त्वं परमां गतः ।
प्रीतौ स्वो वत्स सततं दमेनार्चा च पूजया ॥ ३८ ॥

ஓ குழந்தாய் - நீ நேர்மையுடன் தவம், ஞானம், நல்ல புத்தி ஆகியவற்றை பெற்றுவிட்டாய். ஹே குழந்தாய் - எங்களிடம் நீ வைத்துள்ள நிரந்தரமான ஸேவை, மதிப்பு, மரியாதை அனைத்தும் எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

मनसा कर्मणा वाचा शुश्रूषासु प्रपूजितौ ।
प्रीतौ स्वस्तव शौचेन धर्मस्त्वामभिरक्षतु ॥ ३९ ॥

ஹே குழந்தாய் - நீ சஸ்த்ரங்களையும் சாஸ்த்ரங்களையும் நன்கு தெரிந்து கொண்டாய். ஆதலால் நீ உன்னுடைய அப்பா அம்மாவிடம் சென்று தினமும் அவர்களுக்கு பூஜை செய்வாயாக. அவர்களுக்கு செய்யும் பூஜையை விட உயர்ந்தது வேறு எதுவும் கிடையாது.

मातापित्रोः सकाशं हि गत्वा कुरु सुपूजनम् ।
अतः परमयं धर्मस्तवास्त्यस्मान्न किञ्चन ॥ ४० ॥

जैमिनिरुवाच

आशीर्भिर्भरितोऽग्रस्तं कृताञ्जलिरुपस्थितः ।
प्रदक्षिणमथो कृत्वा मनीषी प्रस्थितस्ततः ॥ ४१ ॥

மஹரிஷி ஜைமினி கூறினார் - இவ்வாறு மஹரிஷி தாண்ட்யர் ஆசீர்வாதம் செய்து கூறியவுடன் ஸ்ரீஅக்ரஸேனன் அவர்களை (ரிஷிகளை) ப்ரதக்ஷிணம் செய்து இரு கைகளையும் சேர்த்து நமஸ்காரம் செய்து ஆஸ்ரமத்திருந்து புறப்பட்டு தனது அப்பாவின் அரண்மனையை அடைந்தான்.

सम्पूर्णशिक्षोऽग्रसेनः पितॄणामावसद् वशे ।
धृतिस्थैर्यसहिष्णुत्वादानृशंस्यात् तथार्जवात् ॥ ४२ ॥

भृत्यानामनुकम्पायास्तथैव स्थिरसौहृदात् ।
पितुरन्तदधे कीर्तिः शीलवृत्तसमाधिभिः ॥ ४३ ॥

[அனைத்து சாஸ்த்ரங்களையும் கற்று முடித்த ஸ்ரீஅக்ரஸேனர் தனது அப்பவுடனும் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டுமிருந்தார். அவருடைய உள்மனது, சிந்தனை எப்பொழுதும் தர்மத்திலேயே லயித்திருந்தது. கூர்மையான அறிவு, சகிப்புத்தன்மை, அனைவரிடமும் இறக்கம் காட்டுதல், குழந்தையைப் போன்று பழகுவது என அனைத்திலும் தனது அப்பா இராஜா

(அதாவது ராஜா வல்லபஸேனனின் நற்குணங்களைப்போன்று பல மடங்கு ஸ்ரீஅக்ரஸேனனின் நற்குணங்களை மக்கள் பேசினர்).

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते द्वितीयोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இரண்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

மூன்றாவது அத்யாயம்
புருஷார்த்தம்

जैमिनिरुवाच

पाण्डवस्यैकदा दूतः प्रतापपुरमेयिवान् ।
अब्रवीत् प्राञ्जलिर्वाक्यं महाप्राज्ञो नराधिपम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - தர்மஞனான ஜனமேஜய, அதன் பிறகு ஒரு நாள் பாண்டவர்களின் தூதன் ஒருவன் ப்ரதாபருத்ர ராஜாவின் அரண்மனைக்கு வந்து மஹாராஜா வல்லபஸேனனின் கைகளைப் பிடித்துக்கொண்டு இவ்வாறு கூறினான்.

दूत उवाच

कुरुसिंहः पाण्डवानां मत्स्यपाञ्चालसंयुतः ।
संप्रेषयामास स मां त्वां युद्धाय नियोजयन् ॥ २ ॥

தூதன் கூறினான் - ஹே இராஜா, பாண்டுவின் பிள்ளையான குரு தேசத்தின் இராஜா மத்ஸ்ய விராடன் பாஞ்சால தேசத்தின் இராஜா த்ருபதன் மூலம் செய்தியை அனுப்பியுள்ளார். தாங்கள் ஸேனையுடன் தனக்கு போரில் (யுத்தத்தில்) (துரியோதனனுடம் செய்யும் யுத்தத்திற்கு) உதவி செய்ய வரும்படி அழைத்துள்ளார்.

स भवान् कृतबुद्धीनां कुले शिष्टोऽसि जन्मना ।
विदितं चापि ते सर्वम् यथावृत्तः स कौरवः ॥ ३ ॥

மதிப்பிற்குரியவரே - இராஜ தந்திரத்தைப் பற்றித் தாங்களுக்கு தெரியாதது ஒன்றுமல்ல. தாங்களுடைய குலம் மிகவும் உயர்ந்தது. தாங்கள் துரியோதனனுடைய தந்திரத்தையும் தீய எண்ணங்களையும் நன்கு அறிவீர்கள்.

पाण्डवाश्च यथावृत्ताः कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
धृतराष्ट्रस्य कौटिल्याद् वञ्चिताः पाण्डवाः परैः ॥४॥

ஹே மகாத்மன் - குந்தி, பாண்டுவின் புத்ரனான யுதிஷ்டிரரையும் மற்றும் பாண்டவர்களையும் அவர்களுடைய நன்நடத்தையும் பற்றி அறிவீர்கள். அதே போல் த்ருதராஷ்ட்ரனுடைய மறைமுக பலத்தினால் கௌரவர்கள் தவறாக பாண்டவ்களை வழி நடத்துகின்றனர்.

समाहूय क्षत्रधर्मो धर्मज्ञो विजितः परैः ।
वनवासाद् निवृत्तस्तु प्राप्तः पैतामहं पदम् ॥ ५ ॥

தாங்களுக்கும் தெரியும், யுதிஷ்டிரர் எப்பொழுதும் தர்ம வழியிலும் மரியாதையுடனும் நடப்பவர். அவருடைய க்ஷத்ரிய தர்மத்தை முழுவதுவாகச் செய்பவர். அவரை ஏமாற்றி அவரிடமிருந்து இராஜ்யத்தைப் பிடிங்கினர். தற்சமயம் கௌரவர்கள் கூறியபடி பாண்டவர்கள் 12 வருடம் வனவாசத்தையும் முடித்துவிட்டனர். பாண்டவர்கள் தற்சமயம் சட்டப்படி அவர்களுடைய மூதாதயர்களின் இராஜ்யத்தை திரும்பவும் அடைவதற்கு முழு உரிமையுண்டு.

अनुनीता हि भीष्मेण विदुरेण कृपेण च ।
वसु प्रदातुं पाण्डूनां न व्यवस्यन्ति कौरवाः ॥ ६ ॥

இருப்பினும் தாத்தா பீஷ்மர், விதுரர் மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் போன்றவர்கள் எவ்வளவோ கூறியும் பாண்டவர்களின் பரம்பரைச் சொத்தான இராஜ்யத்தை திரும்பவும் கொடுப்பதற்கு துரியோதனன் சம்மதிக்கவில்லை.

धृतराष्ट्रस्य यः कामस्तं सर्वे नाशयामहे ।
अथ पाण्डुसुतो राज्यं लभतां हि युधिष्ठिरः ॥ ७ ॥

ஆதலால் அனைவரும் கௌரவர்களின் ஸேனைகளை யுத்தத்தில் ஜெயித்து யுதிஷ்டிரருக்கு (பாண்டவர்களுக்கு) முடிசூட்ட வேண்டும்.

वल्लभसेन उवाच

यथैव पाण्डवाः सर्वे पराक्रान्ता जिगीषवः ।
तथैव हि वयं तेषां त्यक्तात्मानो जये धृताः ॥ ८ ॥

வல்லபஸேனன் கூறினார் - ஹே தூதனே - பலத்தையும் திறமையையும் உடைய பாண்டவர்களுக்கு கண்டிப்பாக ஜெயம் உண்டாகும். நாங்கள் பாண்டு மஹாராஜாவின் நண்பர்கள். ஆதலால் எப்போதும் பாண்டவர்களின் வெற்றியையே விரும்புகிறோம். அவர்களுடைய வெற்றிக்காக நாங்கள் யுத்த பூமியில் எங்களுடைய உயிரையும் விடுவதற்கு தயாராக இருக்கிறோம்.

आददानस्य शस्त्रं हि क्षत्रधर्ममुपेयुषः ।
बीजवद् वपतो बाणान् स्थातारः समरे परे ॥ ९ ॥

க்ஷத்ரிய தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அனைத்து அரசர்களும் அஸ்த்ர சஸ்த்ரங்களை எடுத்துக்கொண்டு யுத்தகளத்தில் அவரவர்களின் திறமையைக் கொண்டு பாண்டவர்களுக்காக சண்டையிட்டு எதிரியை (கௌரவர்களை) பின்னோக்கி ஓடச்செய்வோம்.

जैमिनिरुवाच

प्रहृष्टवदनो भूत्वा दूत आश्वस्तसत्वरः ।
नमस्कृत्य महाराजं निर्ययौ स पुराद् बहिः ॥ १० ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு மஹாராஜா வல்லஸேனன் கூறியவுடன் நம்பிக்கையுடனும் சந்தோஷத்துடனும் அந்த தூதன் இராஜாவை வணங்கிவிட்டு ப்ரதாபபுரத்தை விட்டு உடனே புறப்பட்டான்.

तयोरेतत् शुभं वाक्यम् अग्रसेनो निशम्य तु ।
महता चैव हर्षेण प्रत्युवाच मनोगतम् ॥ ११ ॥

இவர்களுடைய ஸம்பாஷணத்தை (பேச்சுவார்த்தையை) பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீஅக்ரஸேனரின் மனது மிகவும் துடித்தது. மேலும் அவருக்கு இவ்வாறு எண்ணங்கள் தோன்றின.

अग्रसेन उवाच

युद्धमेकायनं शूरः स्वर्गद्वारोपमं भजेत् ।
हतक्लीवमना भूत्वा मुच्यते पापजीवनात् ॥ १२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஒரு நல்ல வீரன், தர்மத்தை கடைபிடிப்பவன், நியாயமானவன் தர்மத்தைக் காப்பதன் பொருட்டு யுத்தம் செய்து அதற்காக வீர மரணத்தையும் அடைந்து உத்தம கதியான ஸ்வர்க்கத்தையும் அடைவான். இவர்கள் தான் வீரர்கள் ஆவர். உயிருக்கு பயந்து இருப்பவர்கள் உயிர்வாழாமல் இருக்காலாம்.

यो वै कश्चिदिहोत्पन्नः क्षत्रियः क्षात्रकर्मवित् ।
न युध्येद् भयतोऽकीर्तेः किं भोगैर्जीवितेन किम् ? ॥

க்ஷத்ரியகுலத்தில் பிறந்தவர்கள் க்ஷத்ரிய தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும். மரணத்திற்கு பயந்து போர் செய்யாமல் இருக்கக் கூடாது. இவ்வாறு எவன் ஒருவன் தன்னுடைய தர்மத்தி ருந்து விலகுகிறானோ அவன் எவ்வாறு அவனுடைய நேர்மையான வழியைப் பின்பற்றி சந்தோஷத்தை அடையமுடியும்?. இதைத்தவிர வேறு எந்த சந்தோஷத்தையாவது அடையமுடிமா?.

शूरः सञ्चिन्तयेदेवं श्रेष्ठः कालोऽयमागतः ।
अस्मिंश्चेदागते काले कार्यमन्यद् न विद्यते ॥ १४ ॥

ஹே வீரர்களே - தாங்கள் அனைவருக்கும் தங்களுடைய வீரத்தைக் காண்பிக்கக்கூடிய சரியான நேரம் வந்துள்ளது. மேலும் தங்களுக்கு இதைத் தவிர மற்ற வேலை ஒன்றுமில்லை.

अवश्यं च मया कार्यं पूर्वेषां चरितं महत् ।
करिष्यामि तथा कर्म यथा नान्यत् करोम्यहम् ॥ १५ ॥

இந்த தர்ம யுத்தத்தில் நாம் அனைவரும் நம்முடைய ஸூர்ய வம்சத்தின் இராஜாக்களை பின்பற்றி கண்டிப்பாக நம்முடைய வீரத்தை மற்றவர்களைவிட அதிகமாகவே காண்பிப்போம்.

महाराज उवाच

धन्योऽसि वीर भद्रं ते रुचिरं तव भाषितम् ।

धार्मिकं षोडशाब्दं त्वां युद्धे योजये कथम् ? ॥ १६ ॥

மாஹாராஜா வல்லபஸேனர் கூறினார் - ஹே வீரரான அக்ரஸேன! உனக்கு (ஆசிகள்) மங்களம் உண்டாகட்டும். இந்த 16 வயதிலேயே எவ்வளவு அழகாக பேசினாய். இந்த வயதில் நீ தர்மத்தை மட்டுமே செய்யவேண்டும். ஆதலால் உன்னை எப்படி யுத்தத்திற்கு அனுப்புவேன்?. இது தர்மத்துக்கும் சட்டத்திற்கும் எதிரானது.

यावद् युद्धे विजित्याऽहं पुनरायामि सत्वरम् ।

त्वया तु युवराजेन राज्यं धार्यं प्रयत्नतः ॥ १७ ॥

குழந்தை அக்ரஸேன! - நான் யுத்தத்தில் வெற்றிவாகை சூடி வந்தவுடன் இந்த இராஜ்யத்தை நீ யுவராஜாவாக முடிசூடி காப்பாற்றுவாயாக/ஆள்வாயாக.

श्रुत्वा पितुस्तद् वचनम् अग्रसेनोऽब्रवीत् पुनः ।

ஹ. ஜைமினி மஹரிஷி கூறினார் - தன்னுடைய அப்பா இராஜா வல்லபஸேனர் கூறியவுடன் - ஸ்ரீஅக்ரஸேனர் இவ்வாறு கூறினார் - நம்முடைய ஸூர்யகுலம் வெற்றியைத்தான் அடையும் எனப் புகழ்பெற்றது.

अग्रसेन उवाच

महाऽयशो विकुर्वीत यशस्वी लोकविश्रुतः ॥ १८ ॥

अधुर्यवच षोडव्ये मन्ये मे मरणं हि तत् ।

भवान् तात द्वितीयं मां सहायं नय मा चिरम् ॥ १९ ॥

என்னைப் போன்ற இளைஞர்கள் க்ஷத்ரிய தர்மத்தையும் வீரத்தையும் நிரூபிக்கவில்லை என்றால் கழுதை பொதி சுமப்பதைப் போன்றதாகும். அது மரணத்தையும் ஏற்படுத்திவிடும். ஓ பிதா! - தாங்கள் என்னை யுத்த்திற்கு அனுமதிக்கவில்லை என்றால் என்னை தங்களுடைய உதவியாளனாக அழைத்துக் கொள்ளுங்கள். அது தர்மத்திற்கு புறம்பானதல்ல.

जैमिनिरुवाच

वल्लभस्तद् वचः श्रुत्वा समालिङ्ग्यात्मजं जगौ ।
ध्रुवस्ते विजयस्तात भविष्यति न संशयः ॥ २० ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு உற்சாகத்துடன் பேசிய மகன் ஸ்ரீஅக்ரஸேனனின் வார்த்தைகளைக் கேட்டு இராஜா வல்லபஸேனர் கூறினார். ஓ மகனே - போரில் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டது. அதலால் எதிரியிடம் ஒன்றும் அதிகமாக சண்டையிடுவதற்கு இல்லை.

अग्रसेनस्ततो लब्ध्वा पित्रनुज्ञां सुभाषितम् ।
नमस्कृत्य च तं प्रायात् द्रष्टुं नन्तुञ्च मातरम् ॥ २१ ॥

பின்பு ஸ்ரீஅக்ரஸேனர் இராஜா வல்லபஸேனரையும் ராஜ்ய ஸபையையும் வணங்கி ஆசியைப் பெற்றுக்கொண்டு சீக்கிரமாக தன்னுடைய அம்மாவிடம் சென்று அனுமதி கேட்டான்.

ततोऽग्रं तं परिष्वज्य वैदर्भी वाक्यमब्रवीत् ।

ஹ விதர்பதேசத்தின் மகளும் மஹாராணியுமான ராணி பகவதி மகனை ஆசீர்வதித்துக் கூறினாள் -

वैदर्भी उवाच

सत्यधर्माभिरक्षार्थं पुत्र गच्छ ममाज्ञया ॥ २२ ॥

सत्यार्थे धर्मकमार्थे त्वयाऽस्म्यग्र सपुत्रका ।
युद्धेऽत्र विजयं लब्ध्वा समायाह्यव सद्व्रतम् ॥ २३ ॥

அம்மா வைதர்பீ கூறினாள் - ஓ மகனே நீ வீரனானவன். ஸத்யத்தையும் தர்மத்தையும் காப்பாற்றுவதற்காக யுத்தத்திற்குச் செல்ல அனுமதிக்கிறேன்.
உன்னை முதல் மகனாக அடைந்ததே ஸத்யத்திற்காகவும் தர்மத்திற்காகவும் தான். யுத்தத்தில் வெற்றியை அடைந்து உன்னுடைய வ்ரதத்தை முடித்து சீக்கிரம் திரும்புவாயாக.

जैमिनिरुवाच

ततोऽग्रसेनो वीक्ष्याम्बां नमस्कृत्य पुनःपुनः ।
आरुरोह रथं दिव्यं प्रययौ सैन्यसंवृतः ॥ २४ ॥

ஜைமினி கூறினார் - தன்னுடைய அம்மாவை பலமுறை வணங்கி அனுமதியைப் பெற்ற பின்பு ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய படைகளுடன் தானும் தேரில் அமர்ந்து போருக்குக் கிளம்பினார்.

कुरुक्षेत्रे समासाद्य तां हिरण्यवतीं नदीम् ।
कारयामास शिबिरं नृपाणां यत्र केशवः ॥ २५ ॥

குருக்ஷேத்ரத்தில் ஹிரண்ய நதியன் கரையில் ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய யுத்த வீரர்களையும் ஸேனைகளையும் மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்தார். அந்த இடத்திற்கு ஸ்ரீஅக்ரஸேனரும் தன்னுடைய படைகளுடன் சென்று சேர்ந்துக்கொண்டார்.

निविष्टान् पाण्डवांस्तत्र नरेन्द्रैश्च समन्वितान् ।
ददर्शाग्रो यथादेशं वासुदेवेन पालितान् ॥ २६ ॥

மற்ற தேசத்து இராஜாக்களும் யுத்தத்தில் பாண்டவர்களுக்கு உதவி செய்வதற்காக தங்களுடைய படைகளுடன் அங்கு கூடியிருந்தனர். அனைவரும் பரமாத்மா ஸ்ரீகிருஷ்ணரால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தனர்.

ततस्ते धृतसंकल्पा युद्धाय तु समे नृपाः ।
आज्ञापिते संयुगे तु समहृष्यंश्च सैनिकाः ॥ २७ ॥

பிறகு யுத்தத்தில் பாண்டவர்களும் அவர்கள் தலைமையில் பங்குபெறும் அனைத்து இராஜாக்களும், வீரர்களும் உறுதிமொழியை ஏற்றனர். அனைவரும் சந்தோஷத்துடன் யுத்தத்திற்கு தயாராக இருந்தனர்.

धृष्टद्युम्नो भीमदुर्गां सागरस्तिमितां वशाम् ।
तदा निर्यापयामास चतुर्विधबलां चमूम् ॥२८ ॥

த்ருஷ்டத்யும்னன் தலைமையில் பாண்டவர்களின் ஸேனை ஸமுத்ரத்தின் அலைகளைப் போன்று அணிவகுத்திருந்தது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் தேர் என நான்கு அங்கங்களாக ஸேனைகள் பலத்துடன் அணிவகுத்திருந்தது.

यथाबलं यथोत्साहं रथिनः समुपादिशत् ।
विभज्य विधिवद् योधांस्तान् पृथक् संयुगे स हि ॥ २९ ॥

யுத்த தர்மத்தின்படி அணியில் போர் வீரர்கள் அவரவர்களின் பலத்திற்கேற்ப யுத்தத்தில் போர் புரிவதற்காக தனித்தனிக் குழுவாக பிரிக்கப்பட்டனர். தேரில் உள்ளவர்கள் தேரில் உள்ள எதிரியுடன் தான் சண்டையிடவேண்டும் என எச்சரிக்கப்பட்டது.

वज्रं व्यूह्य स्म तिष्ठन्ति पाण्डवाः अभिवाहिनीम् ।
सोऽजेयो मानुषे लोके पाण्डवैरभिरक्षितः ॥ ३० ॥

யுத்தகளத்தில் பாண்டவர்களின் ஸேனை வஜ்ர வ்யூஹம் என்று துரியோதனனின் ஸேனைகளின் நேருக்கு நேராக நிருத்தப்பட்டிருந்தது. இந்த வஜ்ரம் என்கிற அமைப்பு எதிரியை மிகவும் எளிதில் வெற்றி கொள்ளமுடியும்.

वादित्रशब्दस्तुमुलः शङ्खभेरीविमिश्रितः ।
शूराणां कुञ्जराणां च नदतां गर्जतामभूत् ॥ ३१ ॥

அந்த ஸமயத்தில் சங்க நாதம் முழங்க, பேரி (முரசு) கொட்ட பெரிய சப்தத்துடன் வீரர்களும், யானைப்படையும் ஒருவருடன் ஒருவர் பயங்கரமாக சண்டையிட்டனர்.

सेनयोरुभयोर्मध्ये विषण्णोऽभूत्तदाऽर्जुनः ।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ॥ ३२ ॥

அச்சமயத்தில் அர்ஜுனன் இரு ஸேனைகளுக்கு இடையில் நின்றுகொண்டு போர் புரிவதற்காக காத்துக் கொண்டிருந்தான். திடீரென்று மனதில் கவலை கொண்டு கலங்கிப் போய் தன்னுடைய அம்பையும் வில்லையும் எறிந்துவிட்டான். (தனது தேரில் உட்கார்ந்து விட்டான்).

भारतामृतसर्वस्वगीताया मथितामृतम् ।
सारमुद्धृत्य कृष्णेन ह्यर्जुनस्य मुखे हुतम् ॥ २३ ॥

அர்ஜுனன் தன்னுடைய உறவினர்களுடன் சண்டையிட மறுத்ததால், போர் வீரனான அர்ஜுனனை உற்சாகப்படுத்துவதை விட்டு விட்டு, பகவான் ஸ்ரீகிருஷ்ணன் இந்து பாரம்பர்யமான வேத வேதாந்தமான தருமமான கீதையை உபதேசம் செய்தார். பின்பு விழிப்புணர்ச்சியுடன் அர்ஜுனன் எழுந்து யுத்தத்திற்கு தயாரானான்.

(குறிப்பு - மனிதனுடைய உடல் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் முறையே முகம், வயிறு, கை மற்றும் கால் ஆகும். விழிப்புணர்ச்சியுடன் எப்பொழுதும் அனைத்து அறிவுக்கும் ப்ரஹ்ம த்யானத்திற்கும் முக்கியமாக இருப்பது முகமும், அனைத்தையும் கற்றிந்தபிறகு அதை செயல்படுத்த கையும், பலத்துடன் உயிர்வாழ்வதற்கும் உணவு உண்பதற்கு வயிறும், ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு காலும் என நான்கு உறுப்புகளையும் முக்கியமாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது).

पुनर्धनंजयं दृष्ट्वा ततो गाण्डीवधारिणम् ।
पुनरेव महानन्दमन्वभूवन् महारथाः ॥ २४ ॥

போர் வீரர்களைப் பார்த்த அர்ஜுனன் உற்சாகத்துடன் தன்னுடைய வில் அம்பை எடுத்து வேகமாக எதிரிகளுடன் போர் புரிந்தான்.

ततो युद्धं सुदुर्मर्षं व्याकुलं समपद्यत ।
शूराणां समरो जातः समासाद्येतरेतरम् ॥ २५ ॥

பிறகு யுத்தத்தில் பாண்டவர்களும், கௌரவர்களும் நேருக்கு நேராக கடுமையாகத் சண்டையிட்டனர்.

मुहूर्तमासीदुन्मुक्तं युद्धं मधुरदर्शनम् ।
निर्मर्यादं प्रवृत्तं तत् न प्रज्ञातं च किञ्चन ॥ २६ ॥

ஒரு முஹூர்த்தத்தில் யுத்தகளத்தில் யுத்தம் மிகவும் கடுமையாக ஆனது. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமலும் ஆரவாரத்துடனும் கூட்டமாகப் போர் புரிந்தனர்.

अनयन् परलोकाय शरैः सन्नतपर्वभिः ।
शस्त्रास्त्रैर्विविधैर्घोरैः परान् शूरा महारथाः ॥ ३७ ॥

யுத்தகளத்தில் போர் வீரர்கள் இங்குமங்கும் சண்டையிட்டு அவர்களுடைய பற்பல ஆயுதங்களால் ஒவ்வொருவரும் தனது எதிரியைக் கொன்று (வென்று) ஜெயித்தனர்.

रथास्तु रथिभिर्हीना हतसारथयस्तथा ।
विप्रद्रुताश्वाः समरे दिक्षु जग्मुः समन्ततः ॥ ३८ ॥

யுத்தகளத்தில் தேர் ஓட்டுபவனான சாரதியைக் கொன்றதால் பல தேர்கள் சாரதி (தேர்பாகன்) இல்லாமல் இங்குமங்கும் ஓட ஆரம்பித்தன. குதிரைகள் கட்டுக்கடங்காமல் ஒவ்வொரு திசையை நோக்கி சென்றன.

चर्मभिश्चामरैश्चित्रैः पताकाभिरदृश्यत ।
छत्रैः सितैर्हैमदण्डैर्विकीर्णैश्च समन्ततः ॥ ३९ ॥

அந்த தேரில் தங்கம் மற்றும் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட சாமரங்களும், கொடிகளும் காணப்படவில்லை. வீரர்களின் கவசம், கதை போன்ற ஆயுதங்கள் யுத்தகளத்தில் சிதறிக்கிடந்தன.

विशीर्णकेशा धावन्तो दृश्यन्ते स्म दिशो दश ।
नवमेघप्रतीकाशा जलदोपमनिस्वनाः ॥ ४० ॥

யுத்தகளத்தில் சாமரங்களும், வீரர்களும், வீரர்களின் கவசம் மற்றும் பல போர் ஆயுதங்களும் பத்து திசைகளிலும் சிதறிக் கிடந்தன. அழு குரலும் மேகங்களும் அந்த இடத்தை தவழ்ந்திருந்தது. யானைகளும் தாரை, ஊதுகொம்பின் சப்தத்தால் யுத்தகளத்தில் அங்குமிங்கும் ஓடி தனது காலால் அனைத்தையும் நசுக்கின.

तस्मिन् रौद्रे तथा युद्धे वर्तमाने महाभये ।
प्रावर्तत नदी घोरा शोणितान्त्रतरङ्गिणी ॥ ४१ ॥

இவ்வாறு அந்த யுத்தகளம் மிகவும் பயங்கரமாகவும் ஆறு போன்று ஓடும் இரத்தத்துடனும், மாம்ஸத்துடனும் காணப்பட்டது.

अस्थिसङ्घातसम्बाधा केशशैवलशाद्वला ।
रथह्रदा शरावर्ता हयमीना दुरासदा ॥ ४२ ॥

யுத்தகளத்தில் மரணமடைந்த வீரர்களின் எலும்புகள் கூட்டமாக ராக்கி கட்டும் கயிறுகளைப் போன்றும், அவர்களின் தலையிருக்கும் மயிர்கள் தரையிலுள்ள புற்களைப் போன்றும் காட்சியளித்தன. அடித்து நொருக்கப்பட்ட தேர்கள் நீர்ச்சுழியைப் போன்று சுற்றி வந்தன. அந்த நீரில் மீன்கள் அடித்துக்கொண்டு போவதுபோன்று குதிரைகள் ஓடிக்கொண்டிருந்தன.

शीर्षोपलसमाकीर्णा हस्तिग्राहसमाकुला ।
कवचोष्णीषफेनौघा धनुर्वेगासिकच्छपा ॥ ४३ ॥

உடைந்த கற்களைப் போன்று தலைமை தாங்கிய வீரர்கள் ஆங்காங்கே கிடந்தனர். பெரிய (கோள்) கிரகங்களைப் போன்று யானைகள் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தனர். வீரர்களின் கவசங்களும், தலைப்பாகைகளும், மகுடங்களும் நீர்நிலைகளில் ஏற்படும் குமிழ்கள் (முட்டைகள்) போன்றும். வேகமாக சீறிய அம்புகளும், வில்லும் மற்ற ஆயுதங்களும் ஆமையைப் போன்று செயலற்று கிடந்தன.

पताकाध्वजवृक्षाढ्या मर्त्यकूलापहारिणी ।
क्रव्यादहंससंकीर्णा यमराष्ट्रविवर्धनी ॥ ४४ ॥

ஓடும் இரத்த ஆற்றின் கரைகள் போன்று யுத்தகளத்தில் கிடக்கும் பிணங்களும், அவர்களுடைய கொடிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் அந்த நதியின் கரையிலுள்ள மரங்களைப் போன்றும், இரத்த ஆறு அந்த மரங்களின் கிளைகளை உடைத்துக்கொண்டு செல்வது போன்றும், கழுகுகளும் நாரைகளும் அந்நதியின் ஹம்ஸத்தைப் போன்றும் காட்சியளித்தது. ஆறு போன்று ஓடிய இரத்தப்பெருக்கு யமனுடைய பலத்தைக் காட்டியது. (அதாவது அங்கு வீழ்த்தப்பட்ட வீரர்கள் இறந்துவிட்டனர்).

नवाहानि तु संग्रामः सुमहाँल्लोमहर्षणः ।
लोकक्षयकरो रौद्रो भीष्मस्य सह पाण्डवैः ॥ ४५ ॥

இவ்வாறு கொடூரமான யுத்தம் வெற்றியுடன் ஒன்பது நாட்கள் நடந்தது. பத்தாவது நாள் பீஷ்ம பிதாமஹருக்கும் பாண்டவர்களுக்கும் இவ்வுலகம் அழிவைச் சந்திக்கும் என்பதற்கிணங்க கொடூரமான பயங்கர போர் நடைபெற்றது.

व्यथयन्निशितैर्बाणै गाङ्गेयोऽरीन् ममर्द सः ।
धृष्टद्युम्नः शिखण्डी च विराटो संकुलास्तदा ॥ ४६ ॥

கங்கையின் மைந்தன் பீஷ்மர் யுத்தகளத்தில் ஒரே சமயத்தில் ஆயிரம் அம்புகளை எய்தார். பாண்டவர்களின் ஸேனை பயந்துபோய் நின்றது. அச்சமயத்தில் த்ருஷ்டத்யும்னன் யுத்தகளத்திற்கு விராடனையும் சிகண்டியையும் அழைத்துக்கொண்டு சண்டைக்கு வந்தான்.

भीष्ममासाद्य समरे शरैर्जघ्नुर्महारथाः ।
वल्लभोऽपि ततो विद्धो भीष्मेणामित्रकर्शनः ॥ ४७ ॥

சிகண்டியைப் பார்த்த பீஷ்மர் தனது அஸ்த்ரங்களை கீழே போட்டுவிட்டார். உடனே பாண்டவஸேனையின் மஹாரதி யானையுடன் பீஷ்மரின் அருகில் சென்று சண்டையிட்டான். பீஷ்மரால் ஏவப்பட்ட அம்பினால் மஹாராஜா வல்லபஸேனன் அதிகமாகக் காயமுற்றான்.

सोऽतिविद्धो वल्लभस्तु शोणितौघपरिप्लुतः ।
वसन्ते पुष्पशबलो रक्ताशोक इवाबभौ ॥ ४८ ॥

கூர்மையான பீஷ்மரின் அம்புகள் வல்லபஸேனனின் உடல் பாய்ந்து அவனை இரத்தத்தினால் குளிக்கச் செய்தது. அப்போது வல்லபஸேனன் வஸந்த ருதுவின் பலாச மரத்தைப்போன்று காட்சியளித்தான். பலாச மரத்தின் சிகப்பு புஷ்பத்தைப் போன்று அவன் உடல் காயங்கள் இருந்தன. அதில் வழிந்து கொண்டிருந்த இரத்தம் நிற்கவே இல்லை. அது மேலும் வீரன் வல்லபஸேனனை உற்சாகமூட்டியது.

धृष्टद्युम्नस्तु समरे क्रोधेनाग्निरिवाज्वलत् ।
शिखण्डी तं च विव्याध भरतानां पितामहम् ॥ ४९ ॥

அப்போது கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போன்று கோபம்கொண்ட த்ருஷ்டத்யும்னன் சிகண்டியுடன் பாண்டவர்களின் கௌரவர்களின் பிதாமஹரான பீஷ்மரை சுற்றி வளைத்து சண்டையிட்டான்.

ततो वल्लभपुत्रेण पितुर्वधममृष्यता ।
सन्दधे निशितो बाणो गिरीणामपि दारणः ॥ ५० ॥

தனது பிதா கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேட்ட ஶ்ரீஅக்ரஸேனர் நடுக்கத்துடனும் கோபத்துடனும் எதிகளைப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்துடன் எதிரிகளின் மேல் அஸ்த்ரங்களைப் பொழிந்தார்.

अग्रसेनः स सङ्क्रुद्धः प्रेषयामास सायकान् ।
यमदण्डोपमान् घोरान् ज्वलिताशीविषोपमान् ॥ ५१ ॥

ஶ்ரீஅக்ரஸேனர் தீவிரமாக சண்டையிட்டுக்கொண்டு யுத்தத்தின் நடுவில் தீயதும் மிகவும் கொடூரமான விஷத்தைக் கக்கும் ஸர்ப அஸ்த்ரத்தை எதிரியை நோக்கிப் போட்டார்.

सारथीन् रथिनस्तूर्णं ह्यश्वांश्चैव ससादिनः ।
गजारोहांश्च सगजान् दारयामास बाहुभिः ॥ ५२ ॥

வல்லபஸேனரின் மகன் ஶ்ரீஅக்ரஸேனன் போட்ட ஸர்ப அஸ்த்ரம் ஓடிக்கொண்டிருக்கும் தேரையும், குதிரைகளையும் யானைகளையும் துண்டு துண்டாக வெட்டி எறிந்தது.

तस्य तत् कुर्वतः कर्म महत् सङ्ख्ये महीभृतः ।
पूजयाञ्चक्रिरे हृष्टाः प्रशशंसुश्च वाल्लभिम् ॥ ५३ ॥

அந்த ஸமயத்தில் குமாரன் ஸ்ரீஅக்ரஸேனின் வீரத்தையும் பராக்ரமத்தையும் பார்த்த அனைத்து மஹாராஜாக்களும் (வல்லபஸேனரின் மகனான) அக்ரஸேனரைப் பாராட்டினர்.

शराश्च निशिताः पीता निश्चरन्ति स्म संयुगे ।
वनात् फुल्लद्रुमाद् मन्दं भ्रमराणामिव व्रजाः ॥ ५४ ॥

யுத்த பூமியில் ஸ்ரீஅக்ரஸேனரால் வேகமாக ஏவப்பட்ட அம்புகள் புஷ்பத்திருந்து தேனை உரிஞ்சிய தேனீக்கள் வெளியில் வேகமாக வருவதைப் போன்று சீறிக்கொண்டு எதிரிகளை நோக்கி வந்தன.

मोहयित्वा कृपं द्रोणं द्रौणिं च स बृहद्बलम् ।
सैन्धवं च महेष्वासो व्यचरल्लघु सुष्ठु च ॥ ५५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் வில்வித்தையில் சிறப்பாக திறமை பெற்றதனால் யுத்தகளத்தில் மிகவும் வேகமாக அம்பைவிடும் சக்தியைப் பெற்றிருந்தார். ஆதலால் ஸ்ரீஅக்ரஸேனர் க்ருபாசார்யர், த்ரோணாசார்யர், அச்வத்தாமன் ப்ருஹத்பலன் சிந்து தேசத்தின் இராஜா ஜயத்ரதன் ஆகியோரை யுத்தத்தில் மிகவும் கவர்ந்தான்.

हतपुत्रा हतबला निहिता स्वर्गमावसन् ।
अहान्यष्टादशाऽथासीद्युद्धं तद् लोमहर्षणम् ॥ ५६ ॥

இவ்வாறு மஹாயுத்தம் 18 நாட்கள் நடந்தன. இருபக்கமும் (பாண்டவர்கள் மற்றும் கௌரவர்கள்) பற்பல துணிச்சலான (இராஜாவின்) வீரர்களின் பிள்ளைகளும், இராஜாக்களும், நண்பர்களும், வீரர்களும் வீரமரணத்தால் ஸ்வர்கத்தை அடைந்தனர். இதை நினைத்தாம் நமக்கு மயிர் கூச்செறியும்.

सुदुःखितं त्वग्रसेनं विलपन्तं महामनाः ।
दृष्ट्वैतं तत्र गोविन्दो दुःखितो वाक्यमब्रवीत् ॥ ५७ ॥

இவ்வாறு மஹாயுத்தம் முடிந்தவுடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அப்பாவை இழந்து சோகத்துடன் துக்கப்பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீஅக்ரஸேனனுக்கு ஆறுதல் கூறினார். என்னவென்றால் -

केशव उवाच

धर्मयुद्धे स च त्यक्त्वा देहं वीरगतिं गतः ।
सन्तापं त्यज दुर्धर्षं मा च शोके मनः कृथाः ॥ ५८ ॥

கேசவன் (ஸ்ரீகிருஷ்ணர்) கூறினார் - ஹே குழந்தை அக்ரஸேனா! - உன்னுடைய தகப்பனார் (பிதா) தர்ம யுத்தத்தில் உன் முன்பாக உயர்வான மஹாவீரனாக வீர ஸ்வர்கத்தை அடைந்தார். ஆதலால் உயர்ந்த வீரனான நீ மனதை கட்டுப்படுத்தி சோகத்திருந்தும் தாபத்திருந்தும் வெளிவரவேண்டும்.

संयोगा विप्रयोगान्ताः मरणान्तं च जीवितम् ।
न स शोच्यः पिता वत्स स्वर्गतः सुकृती स हि ॥ ५९ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா! - சேருவதின் முடிவு பிரிவதும், உயிர்வாழ்வதின் முடிவு மரணமும் ஆகும், உன்னுடைய (பிதா) அப்பா ஸத்புருஷர், வீரர். அவர் மஹாயுத்தத்தில் வீர மரணத்தால் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார். எனவே துயரப்படாதே.

जैमिनिरुवाच

एतच्छ्रुत्वा तु कृष्णस्य वचस्तद् वल्लभात्मजः ।
विहाय शोकं दीनात्मा ददौ श्राद्धमनुत्तमम् ॥ ६० ॥

ஜைமினி கூறினார் - பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் வார்த்தையால் ஆறுதல் அடைந்த ஸ்ரீஅக்ரஸேனன் மனதில் தைரியத்துடன் (துணிச்சலுடன்) தன்னுடைய அப்பாவின் ஈமைக் கடமைகளைச் செய்தான்.

इष्टं जिह्रीर्षतः शत्रोः पुरुषस्य बुभूषतः ।
इदमुद्धर्षणं भीमं तेजोवर्धनमुत्तमम् ॥ ६१ ॥

ஜைமினி கூறினார் - எந்த மனிதன் துணிச்சலையும், உயர்ந்த பதவியையும், எதிரியால் அபகரிக்கப்பட்டதையும் திரும்ப அடைய வேண்டும் என ஆசைப்படுகிறானோ அவன் இந்த கதையை கேட்பதால் அவை அனைத்தையும் திரும்பவும் அடைகிறான். தைரியமற்றவன் சற்று பயத்தையும் அடைவான்.

जयो नामेतिहासोऽयं श्रोतव्यो विजिगीषुणा ।
महीं विजयते क्षिप्रं तथारींश्च स बाधते ॥ ६२ ॥

இது ஜயம் என்கிற உயர்ந்த இதிஹாஸமாகும். துணிவுள்ளவன் வெற்றியை அடையும் இக்கதையை கேட்பதால் உற்சாகமடைகிறான். சண்டைக்குச் செல்லும்போதும் அல்லது போட்டிக்குப் போகும் போதும் இந்த கதையை அல்லது இந்த அத்தியாயத்தை கேட்பதால் அவன் எதிரியிடமிருந்து வெற்றியையே அடைகிறான்.

इदं पुंसवने चैव वीराणां जननाय वा ।
अभीक्ष्णं गर्भिणी श्रुत्वा ध्रुवं वीरं प्रसूयते ॥ ६३ ॥

இந்த அத்தியாயத்தைக் கேட்டால் ஆண் குழந்தை பிறக்கும். (நல்ல புருஷ பிரஜை உண்டாகும்). கர்ப்பமாக இருக்கும் பெண்கள் பயத்திருந்து வெளிவந்து நல்ல வீர மகனைப் பெற்றெடுப்பர்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
षड्विरचितम् श्रीमदग्रभागवते तृतीयोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் மூன்றாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமத் அக்ரபாகவதம்

நான்காவது அத்யாயம்

ஸந்தோஷம்

ஜைமினிருவாச

पारीक्षितायं विदितो यथावृत्तः कुरुक्षयः ।

हृदये शल्यभूतोऽसौ मानवानां युगे युगे ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஹே குழந்தாய் பரீக்ஷித், தங்களுக்கு நன்றாகவே தெரியும் குருவம்சத்தின் அழிவு எவ்வாறு நடந்தது என்று. ஒவ்வொரு யுகத்திலும் இந்த யுத்தத்தைப் பற்றியச் செய்தி அனைவருடைய மனதையும் புண்படுத்துகிறது.

सर्वे शस्त्रभृतां लोकान् गतास्तेऽरिमुखा हताः ।

वर्तमानैस्तु विहितं पुण्यं कर्तव्यमद्य हि ॥ २ ॥

ஹே அறிவாளியான ஜனமேஜய - மஹாபாரத யுத்தத்தில் பற்பல வீரர்கள் கொல்லப்பட்டனர். பாபமற்றவர்களும் தர்மம் செய்தவர்களும் சுவர்க்கத்தை அடைந்தனர். அவர்கள் தற்சமயம் இருந்திருந்தால் பல தர்மங்களையும் நன்மையையும் செயவர்.

युधिष्ठिरस्तदा प्राज्ञः सर्वधर्मभृतां वरः ।

राज्ञां तानि शरीराणि दाहयामास शास्त्रतः ॥ ३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜய - இந்த மஹா யுத்தம் முடிந்த பிறகு, அனைத்து தர்மத்தையும் அறிந்தவரும் அனைத்து இராஜாக்களையும் விட சிறந்தவரான யுதிஷ்டிரர் யுத்தத்தில் மாய்ந்து போனவர்களுக்கு சடங்குகளைச் செய்தார்.

निवृत्ते तु कलौ तस्मिन् महायुद्धे समागतम् ।
युधिष्ठिरं क्षत्रजातमुपगम्येदमब्रवीत् ॥ ४ ॥

அதன் பிறகு மஹாயுத்தத்தில் பங்கு பெற்று உயிருடனிருந்த அனைத்து அரசர்களும் ஒன்று கூடி யுதிஷ்டிரரிடம் சென்று கூறினர்.

समापयामास भवान् महासमरसत्क्रतुम् ।
ररक्ष भगवान् शौरिः शार्ङ्गचक्रगदाधरः ॥ ५ ॥

ஹே தர்மராஜா - மஹாவிஷ்ணுவின் அவதாரமான வில் அம்பு சக்ரம் கதையையுடைய ஸ்ரீகிருஷ்ணர் தான் இந்த யுத்தத்தில் அனைவரையும் காப்பாற்றினார்.
है ।

आपृच्छामो गमिष्यामस्तदनुज्ञातुमर्हसि ।
श्रुत्वा तु वचनं राज्ञां धर्मराजो युधिष्ठिरः ॥ ६ ॥

நாங்கள் அனைவரும் அவரவர்களின் நாட்டுக்குத் திருப்பவும் செல்ல அனுமதியைக் கொடுங்கள். நாங்கள் அங்குச் சென்று எங்களுடைய பணியைத் துவங்குகிறோம் என்றனர். இதைக் கேட்ட தர்மராஜர் கூறினார் -

युधिष्ठिर उवाच

भवद्भिर्दर्शिता प्रीतिर्दर्शितं सौहृदं परम् ।
पुरुषार्थस्साधितश्च राजानः केशवेन हि ॥ ७ ॥

யுதிஷ்டிரர் கூறினார் - பற்பல தேசத்திருந்து வந்திருக்கும் ஓ அரசர்களே மற்றும் அரசகுமாரர்களே, ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞைப்படி தர்மப்போரில் தாங்களுடைய திறைமைகளை வெளிப்படுத்தினீர்கள். எங்களின் மேல் இவ்வளவு நேர்மையான அன்பையும் நீதியையும் வைத்திருக்கிறீர்கள்.

राजानः सर्व एवैते प्रीत्यास्मान् समुपागताः ।
यथार्हं प्रस्थिताः पूज्याः इति भ्रातॄनुवाच सः ॥ ८ ॥

அதன் பிறகு யுதிஷ்டிரர் தனது சகோதரர்களிடம் கூறினார் - இந்த அரசர்கள் அனைவரும் நம்மிடையே உள்ள உரிமையாலும் அன்பினாலும் நம்முடன் போரில் பங்கு பெற்றனர். அவர்கள் அனைவரையும் தகுந்த மரியாதையுடன் வழியனுப்பி வைக்கவேண்டும் என்றார்.

कालोऽप्यतीतः सुमहान् गमनं रोचते हि मे ।
अनुव्रजत भद्रं वो विषयान्तं नृपोत्तमान् ॥ ९ ॥

யுதிஷ்டிரர் மறுபடியும் கூறினார் - தாங்கள் அனைவரும் வெகு நாட்களாக எங்களுக்காக போர் புரிந்து இங்கு இருந்து விட்டீர்கள். தற்சமயம் தாங்கள் அனைவரும் தங்களுடைய தாய் நாட்டிற்குச் செல்ல தகுந்த சமயம் வந்துவிட்டது. சகோதரர்களே நாம் அனைத்து அரசர்களுக்கும் நன்றியைச் சொல் வழியனுப்பி வைப்போமாக.

विसृज्य त्रिशतं पृथ्वीपतीनन्यान् महारथः ।
प्रशंसन् प्रागग्रसेनं प्रसन्नात्माऽब्रवीद् वचः ॥ १० ॥

மஹரிஷி ஜைமினி கூறினார் - இவ்வாறு முன்னூறு அரசர்களும் அரசகுமாரர்களும் நன்றியைச் சொல்ல பின்பு மஹாராஜா யுதிஷ்டிரர் அக்ரஸேனரை புகழ்ந்து கூறினார்.

धर्मराज उवाच
कुमारस्याग्रसेनस्य युद्धेऽपश्यं महद्बलम् ।
पितुर्वधेन सन्तप्तोऽप्यहंश्च शतशोऽप्यरीन् ॥ ११ ॥

தர்மராஜர் கூறினார் - நான் அக்ரஸேனனுடைய யுத்தத்தை போரில் பார்த்தேன். (அதாவது அவனுடைய பலம், வீரம், சூட்சுமம், தர்மம் ஆகியவற்றை). தனது தகப்பனைக் கொன்றனர் என்ற கோபம் அவனை ஆட்கொண்ட பொழுதும் ஆயுதமில்லாமல் தன்னை அடிபணிந்த வீரர்களை விட்டு விட்டு தன்னை எதிர்ப்போரிடம் மட்டுமே தர்ம யுத்தத்தைச் செய்தான். அக்ரஸேனன் உண்மையிலும் யுத்த பூமியிலும் கூட தரும வழியில் நடப்பவன்.

कृपाविष्टेन मनसा युद्धक्षेत्रगतोऽप्यसौ ।
अग्रसेनस्त्वयं धन्यो येनात्मविजयः कृतः ॥ १२ ॥

மஹாராஜா யுதிஷ்டிரர் கூறினார் - போரில் அக்ரஸேனன் போன்ற வீரர்கள் தங்களுடைய வீரத்தை மட்டுமே பலமாக்கியதில் எனக்கு அவர்களிடத்தில் கருணையுண்டு. அவர்கள் தான் எனது மனதை வென்றனர். அப்படிப்பட்ட ஹே குழந்தை அக்ரஸேனனே உனக்கும் ஆசிகள்.

जैमिनिरुवाच

ततोऽग्रसेनस्तान् सर्वान् नमस्कृत्य जनार्दनम् ।
प्रोवाच वचनं तत्र धर्मराजं महामतिम् ॥ १३ ॥

ஜைமினி கூறினார் - உடனே அக்ரஸேனன் அங்கிருந்த அரசர்களை வணங்கி பின்பு ஸ்ரீகிருஷ்ணரின் பாதங்களையும் நமஸ்கரித்து கூறினான் -

अग्रसेन उवाच

भवतां प्रीतिरच्यग्रा तेजसा वोऽभिरक्षितः ।
धर्मश्च नियतो नित्यः सत्यं च भवतां धनम् ॥ १४ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ மஹாத்மாக்களே! சிறந்த அரசர்களே! தாங்கள் அனைவரும் என்னிடமுள்ள அன்பினால் இவ்வாறு கூறுகிறீர்கள். நாங்கள் எங்களது தர்மத்தைத் தான் செய்தோம். ஆனால் தங்களிடத்தில் உண்மையும் நீதியும் எப்பொழுதும் இருக்கிறது. அது தான் எங்களை காப்பாற்றியது.

यथाऽस्माकं पिता पूज्यः तथा त्वं हि नराधिप ।
वृद्धो मान्यश्च सततं प्राप्यो दैवात् महामनाः ॥ १५ ॥

ஓ சிறந்த அரசர்களே - என்னுடைய அப்பாவைப்போன்று நான் தங்களிடத்தில் எப்பொழுதும் மரியாதையுடனும் அன்புடனும் இருப்பேன். தங்களுடைய போரில் நான் மரியாதைக்குரியவனானேன்.

जैमिनिरुवाच

तमुवाच स धर्मात्मा यथा भीमादयो मम ।
तथा त्वमस्यग्रसेन नात्र कार्या विचारणा ॥ १६ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு யுதிஷ்டிரர் அக்ரஸேனரிடம் கூறிய பின்பு - ஹே குழந்தாய், பீஷ்மன் நகுலன் ஆகியோரைப் போன்று நீயும் என்னுடைய மனதில் (ஒரு ஸஹோதரனாக) இருக்கிறார். இதை எப்போதும் மறந்துவிட வேண்டாம்.

अग्रसेनोऽच्युतं कृष्णमनन्तं प्रणतोऽब्रवीत् ।
प्रहृष्टवदनो भूत्वा धर्मपुत्रस्य शृण्वतः ॥ १७ ॥

இந்த வார்த்தைகளை யுதிஷ்டிரரிடமிருந்து கேட்டவுடன் அக்ரஸேனர் மிகவும் சந்தோஷமடைந்தார். பின்பு மிகவும் மரியாதைக்குரியவரும் முக்கியமானவரும் புகழ்மங்காதவருமான ஸ்ரீகிருஷ்ணரை வணங்கினார்.

अग्रसेन उवाच

धन्योऽस्मि सत्यमेवाऽहं प्राप्तः कृष्णमहाधनम् ।
अतस्तेऽहं हृषीकेश न मुञ्चामि पदाम्बुजम् ॥ १८ ॥

அக்ரஸேனர் கூறினார் - நான் ஆசீர்வதிக்கப்பட்டேன். நான் ஸ்ரீகிருஷ்ணருடன் இருந்ததை எண்ணி மகிழ்கிறேன். மேலும் கூறினார் - ஓ ஹ்ரீஷிகேசா நான் தங்களை விட்டுப் பிரியமாட்டேன்.

जैमिनिरुवाच

निर्ययावग्रसेनोऽथ हरिं प्रण्यपतत् तथा ।
नमस्कृतः समुत्थाप्य समालिङ्ग्य स तं स्थितः ॥ १९ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு அக்ரஸேனன் வணங்கி விட்டு எழுந்தான். உடனே ஸ்ரீகிருஷ்ணர் அக்ரஸேனரை தழுவிக் (ஆ ங்கனம்) கொண்டார்.

केशव उवाच

दिष्ट्या त्वम् अग्रसेनाद्य स्वराज्येऽसि प्रतिष्ठितः।
भूमिः कीर्तिर्यशो लक्ष्मीः शीलं त्वामनुयान्तु च ॥ २० ॥

ஸ்ரீகிருஷ்ணர் கூறினார் - ஓ பாக்கியசா அக்ரஸேனா - நீ ஒரு நாட்டை ஆளுகின்றாய். உன்னுடைய நாட்டில் (பூமியில்) கீர்த்தியும், புகழும் செல்வமும், ஒழுக்கமும் எப்பொழுதும் குறைவின்றி இருக்கும்.

जैमिनिरुवाच

तच्छ्रुत्वा वासुदेवस्य वचो हर्षपरायणः।
प्रणम्य शिरसा पादौ नमस्कृत्य पुनः पुनः ॥ २१ ॥

ஜைமினி கூறினார் - ஜனமேஜயா - இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் தலை வணங்கி அவரை மறுபடியும் மறுபடியும் நமஸ்கரித்தான்.

युधिष्ठिरमुवाचेदम् अग्रसेनः प्रतापवान्।
आपृच्छे त्वां गमिष्यामि प्रतापपुरमित्युत ॥ २२ ॥

பின்பு அக்ரஸேனன் யுதிஷ்டிரரிடம் கூறினான் - தங்களிடம் விடைபெற்றுக்கொண்டு என்னுடைய பிரதாபபுரத்துக்கு கிளம்புகிறேன் என்றான்.

अनुज्ञां प्राप्तवांस्तस्मात् प्रदक्षिणमथाकरोत्।
निष्क्रम्यान्तः पुरात् तूर्णं प्रतापपुरमागतः ॥ २३ ॥

யுதிஷ்டிரரிடம் அனுமதியைப் பெற்ற பின்பு அவரை பிரதக்ஷிணமாக வந்து அக்ரஸேனன் பிரதாபபுரத்தை அடைய முற்பட்டான். அதன் பிறகு ஹஸ்தினாபுரத்திருந்து பிரதாபபுரத்துக்கு வந்தான்.

अवाक्शिरा दीनमना न हृष्टः प्रविवेश ताम् ।
शून्यशृङ्गाटकां वेश्मरथ्यां खिन्नपुरीं नृपः ॥२४ ॥

ஜைமினி கூறினார் - தகப்பன் இல்லாத வருத்தத்துடனும் வில் அம்புடனும் பிரதாபபுரத்தை வந்தடைந்த அக்ரஸேனன் தன்னுடைய நாட்டில் அனைத்து இடங்களிலும் வீடுகளிலும் அரசன் வல்லபஸேனர் இறந்ததால் சோகத்தையே கண்டான்.

नेत्राभ्यामश्रुपूर्णाभ्यां दीनामुद्वीक्ष्य मातरम् ।
पपात चरणे तस्यास्तदा सम्भ्रान्तचेतनः ॥ २५ ॥

அழுது கொண்டு கண்ணில் தண்ணீருடன் இருக்கும் தனது அம்மாவைப் பார்த்த அக்ரஸேனர் அம்மாவின் கால் விழுந்து அழுது அப்பாவின் வீர மரணத்தை எண்ணி வருத்தமுற்றான், வேதனையையும் அடைந்தான்.

रुदन्तं रुदती दुःखात् समेत्यायां मनस्विनी ।
अग्रं तं प्रत्युवाचेदं भगवत्युरुदुःखिता ॥ २६ ॥

மிகவும் அழுது துயறமுற்ற போது அக்ரஸேனர் தனது அம்மாவை சமாதானப்படுத்தினார். வீரத்தையுடைய ஆர்ய பகவதி அக்ரஸேனரை தழுவி தனது மார்பில் அனைத்து அழுது துக்கத்தைக் கொட்டினாள். பின்பு தழுதழுத்தக் குரலுடன் அக்ரஸேனரிடம் கூறினாள் -

अलं शोकेन भद्रं ते राजपुत्र महायशः ।
प्राप्तकालं नरपतेः कुरु कर्म पितुर्हितम् ॥ २७ ॥

வெற்றியடைந்த வீரனான அரச குமாரனே (அக்ரஸேனா) - உனக்கு மங்களம் உண்டாகட்டும். உனது துயரத்தை கட்டுப்படுத்தி இராஜா வல்லபஸேனரின் ஆத்ம முக்திக்கு தருமத்தின்படி சடங்குகளைச் செய்வாயாக.

इत्युक्त्वा चाङ्कमानीय तमग्रं पितृवत्सलम् ।
परिष्वज्य महाबाहुं रुरोद भृशदुःखिता ॥ २८ ॥

இவ்வாறு தனது குழந்தையான வீரன் அக்ரஸேனரிடம் கூறிவிட்டு, மனதை கட்டுப்படுத்த முடியாமல் மறுபடியும் இராணி வைதர்ப்பி அழுதாள்.

कृत्वोदकं पितुस्तत्र रुरोदाग्रः पुरो जनाः ।
मन्त्री माहिष्मती चाश्रुपरीताक्षाः पुरोहिताः ॥२९ ॥

பிறகு அக்ரஸேனருடன் இராணி வைதர்ப்பியும், மந்திரிகளும் புரோஹிதர்களுடன் இராஜா வல்லபஸேனருக்கு புண்ணிய ஜலத்தை வார்த்தினர்.

अर्हतस्तस्य कृत्यानि पुरोहितमते स्थितः ।
चक्रेऽग्रो विधिवच्छुद्धो ब्राह्मणैः स नृपात्मजः ॥ ३० ॥

புரோஹிதர் கூறியபடி இராஜா வல்லபஸேனரின் ஆத்மா ஸ்வர்க்கத்தையடைய அனைத்துச் சடங்குகளும் அக்ரஸேனரால் பண்ணப்பட்டது. முடிவில் அக்ரஸேனரின் பூத உடல் புனிதப்படுத்தப்பட்டது

पुनरुन्मत्तनिश्चित्तो विललाप सुदुःखितः ।
स्मृत्वाऽस्य गुणकर्माणि तानि तानि पितुः सुतः ॥ ३१ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் பற்பல சமயங்களில் தனது தகப்பனாரால் சொல்லப்பட்ட சிறிய சிறிய விஷயங்களை பலமுறை நினைத்து வருந்தினார். வேதனையை அடைந்து புலம்பினார்.

ततो विषण्णौ सुश्रान्तौ माता पुत्रश्च तावुभौ ।
पुरोहितोऽप्रमुत्थाप्य पितुरस्य ह्युवाच ह ॥ २२ ॥

அந்த ஸமயத்தில் தன்னுடை சகோதரன் மிகவும் வருத்தத்துடனும், சோகத்துடனும் இருப்பதைப் பார்த்தார். இராஜபுரோஹிதர் அவரை எழுப்பி ஸமாதானப்படுத்தி கூறினார் -

पुरोहित उवाच

उत्तिष्ठोत्तिष्ठ किं शेषे राजन्नत्र महायशः ।
त्वद्विधा न हि शोचन्ति सन्तः सदसि सम्मताः ॥२३ ॥

இராஜபுரோஹிதர் கூறினார் - ஓ இராஜா, வெற்றியடைந்த அரசகுமாரர் அக்ரஸேனரே, புரிந்துகொள்ளுங்கள் எழுந்திருங்கள். எதற்காக பூமியில் விழுந்து அழுகிறீர்கள். தங்களைப் போன்ற வீரர்கள் ஒரு நாளும் அழக்கூடாது.

राज्यकर्माधिकारा हि शीलश्रुतितपोऽनुगाः ।
बुद्धिस्ते ज्ञानसम्पन्ना प्रभेवार्कस्य मण्डले ॥२४ ॥

ஓ ஞானத்தையுடைய ராஜபுத்திரர்களே - சூரியனைப் போன்று தாங்களும் நிறந்தரமான புத்திமான்களாகவே இருக்கிறீர்கள். தற்சமயம் தாங்கள் தர்ம முறைப்படி சடங்குகளைச் செய்ய வேண்டும். தாங்களால் இந்த பூமியும், மக்களும் அனைத்து நன்மைகளையும் அடைகின்றனர்.

त्रीणि द्वन्द्वानि भूतेषु प्रवृत्तान्यविशेषतः ।
तेषु चापरिहार्येषु नैवं भवितुमर्हसि ॥ २५ ॥

ஹே இராஜா - ஒரு மனிதனுக்கு பசி-தாகம், கஷ்டம், மரணம் ஆகிய மூன்றும் இன்றியமையாதது. இதை யாரும் தடுக்கமுடியாது. ஆதலால் தாங்கள் துக்கத்திருந்தும் வருத்தத்திருந்தும் விடுபடவேண்டும்.

शस्त्रपूतां हि स गतिं गतः परपुरंजयः ।
नूनं च स गतः स्वर्गं जहि शोकं महामते ॥३६ ॥

ஓ இராஜா - மஹாபாரத யுத்தத்தில் வெற்றியடைந்த வல்லபஸேனர் வீர மரணத்தை எய்தினார். அவர் சுவர்க்கத்தில் உயர்ந்த தனி இடத்தை அடைந்து விட்டார். ஆதலால் அவரைக் குறித்து அழுவது கூடாது. வருத்தப்படவும் கூடாது.

जैमिनिरुवाच

एवं पुरोहितेनोक्तो धर्मात्मा सोऽग्रसेनकः ।
त्यक्त्वा शोकं यथाकामं हृष्टरूपोऽभवत् तदा ॥ ३७ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு இராஜபுரோஹிதர் அவர்களை ஸமாதானப்படுத்தியவுடன் அரசகுமாரர் ஸ்ரீஅக்ரஸேனர் அழுவதையும் வருத்தப்படுவதையும் நிறுத்தி சடங்குகளைச் செய்ய ஆரம்பித்தார்.

प्रदीपेनैतदाख्यानं मोहावरणघातिना ।
लोकगर्भगृहं कृत्स्नं यथावत् सम्प्रकाशितम् ॥ ३८ ॥

ஓ ஜனமேஜயா - இந்த (அத்தியாயத்தைப்) பகுதியைப் படிப்பதால் ஒருவனுக்கு இவ்வுலகத்தில் இருக்கும் பற்றும் ஆசையும் இருளும் அகலும். மேலும் அவன் இவ்வுலகத்தைப் பற்றி சிந்திப்பன்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
परिशिष्टम् श्रीमदग्रभागवते चतुर्थोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் நான்காவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

ஐந்தாவது அத்யாயம்

திட்டம் தீட்டுதல்

जैमिनिरुवाच

व्यतीतायां निशीथिन्यामादित्यस्योदये ततः ।
समेत्य राजकर्तारः सभामीयुर्द्विजातयः ॥ १ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு கடுந்துயரமான இரவு கழிந்தது. காலை சூரியன் உதித்ததும் ப்ராஹ்மணர்களும் மந்திரிகளும் இராஜ சபையின் ஆலோசனை கூடத்திற்கு வந்தனர்.

ततो द्विजाः सहामात्यैः राजबन्धुं पुरोहितम् ।
उदैरयन्निमां वाचं कश्चिद् राजा विधीयताम् ॥ २ ॥

அங்கு பிராஹ்மணர்களும், அரச பரம்பரையில் வந்த உறுப்பினர்களும், பந்துக்களும், மந்திரிகளும், இராஜ புரோஹிதர்களும் ஒன்று கூடி இராஜா வல்லபஸேனரின் இடத்தில் தக்க அரசரை தேர்ந்தெடுக்க ஆலோசனை செய்தனர்.

पुरोहित उवाच

गतो नृपो वल्लभः स स्वर्गं यो नो गुरोर्गुरुः ।
स नः समीक्ष्यः तत्पुत्रं राजानमभिषेचय ॥ ३ ॥

இராஜ புரோஹிதர் கூறினார் - ஹே ராஜபுருஷர்களே, ச்ரேஷ்டரும், வீரரும், நம்மை காப்பாற்றியவருமான இராஜா வல்லபஸேனர் வீர ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார். ஆதலால் இந்த சமயத்தில் நாம் நன்கு சிந்தித்து தகுதியானவரும், திறமையானவரும், தன்னலமற்றவரும், அன்பையுடையவரும், நீதியை கடைபிடிப்பவருமான அவருடைய முதல் குமாரரான ஸ்ரீஅக்ரஸேனரை தேர்ந்தெடுத்து இராஜ பதவியில் (அபிஷேகம்) செய்யவேண்டும் என்றார்.

अग्रसेनः पुरस्यार्थं क्षिप्रं राज्येऽभिषिच्यताम् ।
एवं पुरोधाः सचिवान् कुन्दसेनमथाब्रवीत् ॥ ४ ॥

மந்திரிகளும், புரோஹிதரும் கூறியதைக் கேட்ட பின்பு வல்லபஸேனரின் தம்பி குந்தஸேனரும் கூறினார். இராஜாவாக பதவி ஏற்பதற்கு ஸ்ரீஅக்ரஸேனர் தான் தகுதியானவர் ஆவார். வெகு விரைவில் அவருக்கு மகுடத்தைச் சூட்டவேண்டும் என்றார்.

शास्त्रज्ञं नयसम्पन्नम् उदारबलविक्रमम् ।
अग्रसेनमिमं वीरं क्षिप्रं राज्येऽभिषेचय ॥ ५ ॥

யுவராஜா அக்ரஸேனர் நன்கு சாஸ்த்ரத்தையும் தருமத்தையும் சட்டத்தையும் அறிந்தவர், அன்புடனும், இரக்க குணத்தையும், வீரத்தையும் உடையவர். இப்படிப்பட்ட அக்ரஸேனருக்கு இராஜ்யாபிஷேகம் செய்யவேண்டும்.

ज्येष्ठस्य हि सुतो ज्येष्ठः श्रेष्ठोऽयं विक्रमेण च
अग्रसेनोऽप्यदीनात्मा राज्यभारस्य भाजनम् ॥ ६ ॥

அக்ரஸேனர் முதல் பிள்ளையாவார். வல்லபஸேனரைப் போன்று நல்ல பராக்ரமசா. தன்னலமற்றவர். இராஜவின் குணங்களைப் பொருந்தியவர். ஆதலால் ஸ்ரீஅக்ரஸேனர் தான் இராஜ பதவியை ஏற்கவேண்டும். அவர் மட்டுமே இதற்கு தகுயாவார்.

स एष सत्यकारुण्यः सर्ववेदी च धर्मवित् ।
तरुणो वृद्धशीलश्च साध्वेनमभिषेचय ॥ ७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் இளமையாக இருப்பதால் அவருடன் அனுபவம் பொருந்திய பெரியோர்களும், புத்திமான்களும் இருக்கட்டும். கொஞ்ச காலம் கழிந்து வயதுவந்தவுடன் இராஜ்யத்தை ஆளட்டும். அக்ரஸேனர் அன்புடனும், வேதத்தை அறிந்தவரும், தருமத்தை கடைபிடிப்பவருமாவார்.

जैमिनिरुवाच

राजधानीं च सम्प्राप्तं श्रुत्वा वल्लभसत्सुतम् ।
वज्रसेनो लक्षयित्वा पर्यतप्यत दुर्मनाः ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அனைத்து மக்களும், மந்திரிகளும் அக்ரஸேனரை முடிசூட்ட வேண்டும் என்றவுடன் குந்தஸேனனும் வஜ்ரஸேனனும் மனக்கசப்பை அடைந்தனர்.

न चाक्षमत तत्प्राप्तिं कुन्दसेनात्मजः स वै ।
ईर्ष्याक्रोधपरिक्षिप्त इदं तातमभाषत ॥ ९ ॥

மக்களும், மந்திரிகளும் அக்ரஸேனரை பற்றி புகழ்ந்ததை பார்த்த வஜ்ரஸேனன் தீய எண்ணத்துடனும் கோபத்துடனும் தனது மனதை அடக்கமுடியாமல் தன்னுடைய தகப்பனார் குந்தஸேனிடம் இவ்வாறு பேசினான் -

वज्रसेन उवाच

त्वामनादृत्य पौराः हि नृपमिच्छन्ति तं परम् ।
नीतिर्विधीयतां तात यथा राज्यमवाप्नुमः ॥ १० ॥

வஜ்ரஸேனன் குந்தஸேனிடம் கூறினான் - நாட்டு மக்கள் ஸ்ரீஅக்ரஸேனரை அரசராக முடிசூட்ட வேண்டும் எனக்கூறி உன்னை இகழ்ச்சி செய்கின்றனர். தாங்கள் ஏதேனும் தந்திரத்தைச் செய்தால் நாம் நாட்டைக் கைப்பற்றி அரசாட்சி ஆளலாம் என்றான்.

कर्तव्यं चेत् प्रियं तात न स जीवितुमर्हति ।
यो हि राज्यहरः शत्रुः याचमानो न मुञ्च तम् ॥ ११ ॥

நாம் நாட்டைக் கைப்பற்றியவுடன் தாங்கள் தான் அரசர். இளவரசன் அக்ரஸேனன் உயிருடன் இருக்கக் கூடாது (கொல்லப்படவேண்டும்). தாங்கள் உயிருடன் இருக்கும் வரை அக்ரஸேனன் இராஜாவாக இருப்பது நீதியல்ல. அரச பதவியை அடையும் அக்ரஸேனன் எதிரியாவான். அவன் மேல் இரக்கம் காட்டாமல் கொல்லவேண்டும். அவன் உயிருக்காக பிச்சை எடுக்க வேண்டும்.

जैमिनिरुवाच

एवं श्रुत्वा कुन्दसेनः शोकार्तः स द्विधाऽभवत् ।

मोहादैश्वर्यलोभाच्च पापबुद्धिरजायत ॥ १२ ॥

ஜைமினி கூறினார்- இவ்வாறு கூறும் மகனுடைய வார்த்தைகளைக் கேட்ட குந்தஸேனன் மிகவும் குழப்பமடைந்தான். அரச பதவியிலும் கம்பீரத்திலும் ஆசையுடைவனானான். உடனே அவனுடைய மனது பாபத்தைச் செய்யத் தூண்டியது

सुमहान्त्यपि शास्त्राणि धारयन्तो बहुश्रुताः ।

छेत्तारः संशयानां च क्लिश्यन्ते लोभमोहिताः ॥ १३ ॥

தருமத்தைக் கடைபிடிக்கும் மனிதனும், தத்துவத்தை அறிந்தவனும், கெட்டவர்களை தூரத்தில் வைப்பவனும் சில சமயங்களில் தங்களுடைய மனதை கட்டுப்படுத்தாமல் விட்டு விடுகின்றனர். அதில் வஜ்ரஸேனனும் குந்தஸேனனும் மாறுபட்டவர்கள் அல்ல. அவர்கள் தங்களுடைய அழிவுக்கு வழிவகுத்துக் கொண்டனர்.

लोभात्प्रभवति क्रोधः लोभात्कामः प्रजायते ।

लोभान्नश्यन्ति मनुजाः लोभः पापस्य कारणम् ॥ १४ ॥

ஒருவனுக்கு பேராசை தான் எதிரியை ஏற்படுத்துகிறது. பேராசையால் தான் அதிகம் விரும்புகிறான். பேராசையால் தான் மனித தன்மையிருந்து மாறுகிறான், பேராசை தான் பாபம் செய்வதற்கு காரணமும் ஆகும்.

कुन्दसेन उवाच

वज्रसेन ममाप्येतद्धृदि सम्परिवर्तते ।

स कथं शक्यतेऽस्माभिरपाकर्तुं बलादितः ॥ १५ ॥

(குந்தஸேனன் கூறினார்- வஜ்ரஸேனனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடன் வெகு நாட்களாக தான் இராஜாவாக ஆகவேண்டும் என்று தன்னுடைய மனதில் மறைத்து வைத்திருந்த எண்ணத்தை உண்மையாக்க நினைத்தான். ஓ குழந்தை வஜ்ரஸேனா - நானும் அவ்வாறு தான் என்னுடைய மனதில் நினைத்தேன். ஆனால் எவ்வாறு அக்ரஸேனனை இராஜ பதவியிருந்த (அரியாசனத்திருந்து) நீக்குவது.

प्राणवान् विक्रमी चैव शौर्येण महताऽन्वितः ।
पौराश्च सेवकाः राज्ये तत्सहाया विशेषतः ॥ १६ ॥

ஓ குழந்தாய் - அக்ரஸேனன் வீரன் மற்றும் பலசாயாவான். இதை சமீபத்தில் நடந்த போரிலும் நிரூபித்து விட்டான். மக்களும் அரச மாளிகை வேலைக்காரர்களும் அவனுக்கு சாதகமானவர்கள். இதில் உதவுவதற்கு யாரேனும் இருக்கிறார்க?.

वज्रसेन उवाच

नरस्य न नरो दासो, दासस्त्वर्थस्य जायते ।
विश्रब्धस्त्वं कुरु तथा यथा ते हस्तवर्तिनः ॥ १७ ॥

வஜ்ரஸேனன் கூறினான்- மனிதன் எப்பொழும் மனிதனுக்கு வேலையாட்கள் அல்ல. பணத்திற்கு அடிமையானவர்கள். தாங்கள் அதன்படி ஏற்பாடு செய்தால் இந்த இராஜ்யத்தை கவலையின்றி அடைந்துவிடலாம்.

उपायेन हि यच्छक्यं न तच्छक्यं पराक्रमैः ।
अग्रसेनः स च श्रेष्ठः निकृत्या संनिगृह्यताम् ॥ १८ ॥

வீரத்தால் சாதிக்கமுடியாததை தந்திரத்துடன் வஞ்சனை செய்து எளிமையாக அடைந்துவிடலாம். ஆதலால் பலமுடைய வீரனான அக்ரஸேனனை வஞ்சனையாலும் தந்திரத்தாலும் ஜெயித்துவிடலாம்.

अद्य तैः कुशलैर्योधैः सुगुप्तैरासकारिभिः ।
नैरुपायकुशलैर्मृत्युरस्य विधीयताम् ॥ १९ ॥

ஆதலால் முதல் அதன் படி சதி செய்பவனையும், அதை திறமையுடன் யாருக்கும் தெரியாமல் செய்து முடிபவனையும் அறிந்து அவன் மூலம் அக்ரஸேனனை யாருக்கும் தெரியாமல் கொன்றுவிடலாம்.

जैमिनिरुवाच

एवं स निश्चयं चक्रे नियोज्य त्रिविधायुधान् ।
पापं कृत्वा कुन्दसेन आत्मोदयसुसाधनः ॥२० ॥

ஜைமினி கூறினார் - உடனே அரசாட்சியில் ஆசையைக் கொண்ட குந்தஸேனன் அக்ரஸேனனைக் கொன்று பாபத்தை அடையும் நோக்கத்துடன் மூன்று விதமான ஒற்றர்களை நியமித்தான்.

परोऽपि हितवान्बन्धुर्बन्धुरप्यहितः परः ।
अहितो देहजो व्याधिर्हितमारण्यमौषधम् ॥ २१ ॥

ஜைமினி கூறினார் - ஒரு மனிதன் தான்- நினைத்ததை அடையமுடியவில்லை எனில் சில சமயங்களில் அவனுடன் பிறந்தவர்களும், சொந்தக்காரர்களும் கூட எதிரிகளாகி விடுகின்றனர். அவன் நினைத்ததை செய்து முடிப்பவன் தான் உடன் பிறப்பும் சொந்க்காரனுமாகிவிடுவான். இது உண்மையாகும்.

कुन्दसेनः परीतात्मा कुलकीर्तिप्रणाशनः ।
अतिक्रान्तश्च मर्यादां सुसम् अग्रमथाग्रहीत् ॥ २२ ॥

முடிவில் குந்தஸேனன் தனது வரம்பை மீறி இரக்கமற்று செயல்பட்டு தந்திரத்துடன் நேர்மையில்லாமல் ஸ்ரீஅக்ரஸேனரை கைது செய்தான்.

तस्यां प्रतापपुर्यां तं निगडैरग्रसेनकम् ।
कुन्दसेनो बबन्धाऽसौ बबन्ध च हितैषिणः ॥ २३ ॥

குந்தஸேனன் பிரதாபபுரத்தை தன் வசப்படுத்தியது மட்டுமின்றி ஸ்ரீஅக்ரஸேனனுக்கு பரிந்து பேசும் மக்களையும் துன்புறுத்தி அவமானப் படுத்தினான்.

नूनं देवाः प्रसन्नास्ते सकामो भव दुर्मते ।
अधर्मेण जितो धर्मः प्रवृत्तमधरोत्तरम् ॥ २४ ॥

ஜைமினி கூறினார் - அக்ரஸேனர் நினைத்தார் இந்த சமயத்தில் பிரச்சனை செய்வது பிரயோஜனமற்றது. தற்சமயம் வீரத்தைவிட சிறந்தது தைவம் தான்.

न हि योगं प्रपश्यामि येन मुच्येयमापदः ।
दैवं च परमं मन्ये पौरुषं चाप्यनर्थकम् ॥ २५ ॥

ஜைமினி கூறினார் - அக்ரஸேனர் நினைத்தார் கடவுளும் தவறு செய்பவனுக்கு உதவி செய்கிறது என்று. இல்லையெனில் எவ்வாறு கெட்ட எண்ணம் கொண்ட குந்தஸேனன் இராஜ்யத்தை அடைந்தார். தர்மம் அதர்மத்தினால் ஜெயிக்கப்பட்டது. தவறு செய்பவன் உயர்ந்த பதவியை அடைந்தான். தர்மத்தை பின் பற்றுபவன் பின் தள்ளப்படுகிறான்.

एवं सचिन्तोऽग्रसेनः क्रोधसन्दीप्तमानसः ।
पुनर्दीनमना भूतः शान्तार्चिरिव पावकः ॥ २६ ॥

இவ்வாறு கோபத்துடன் நினைத்து கொழுந்து விட்டு எரிகிற அக்னியைப் போல் ஆனார். ஆனால் மறுபடியும் அதே நெருப்பு சாந்தத்தை அடைவது போல் அக்ரஸேனரும் சாந்தியை அடைந்தார்.

अग्रसेन उवाच

गृहाण राज्यं निखिलं शाधि मां त्वं भवान् प्रभो ।
न मे कार्यं नृपत्वेन नाप्यहं राज्यकामुकः ॥ २७ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஹே பகவன் - இந்த முழு நாட்டையும் தாங்களே எடுத்துக்கொண்டு ஆளுங்கள். என்னைவிட பெரியவரான தாங்கள் என்னையும் அதில் ஒரு பிரஜையாக்கி ஆளுங்கள். எனக்கு அரசனாவதற்கும், இந்த இராஜ்யத்திலும் ஆசையில்லை.

भवानेवाभिषिञ्च स्वं राज्येऽस्मिन् सत्यमब्रुवम् ।
क्षमस्वेति वदन् कुन्दपुरोऽग्रः स निपपात ह ॥२८॥

மேலும் அக்ரஸேனர் கூறினார் - ஹே பகவன் - தாங்களே இராஜாவாக பதவி ஏற்றுக்கொள்ளுங்கள். உண்மையிலும் அதற்கு நான் தடை செய்ய மாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி குந்தஸேனரின் கால் விழுந்தார்.

जैमिनिरुवाच

तथा भाषितमाकर्ण्य कुन्दः क्रोधसमन्वितः ।
पदा तं ताडयित्वाऽथ मस्तकेऽभर्त्सयद् रुषा ॥ २९ ॥

.ஜைமினி கூறினார் - இவ்வாறு கூறும் அக்ரஸேனரின் வார்த்தைகளை கேட்ட குந்தஸேனர் தனது தொடையைத் தட்டி கோபத்துடன் தலை நிமிர்ந்து கூறினார் -

कुन्दसेन उवाच

जीवितुं चेच्छसे मूढ हेतुं मे गदतः शृणु ।
दासोऽस्मीति तथा वाच्यम् एवं ते जीविते विधिः ॥ ३० ॥

குந்தஸேனர் கூறினார் - ஓ மூடனே, நீ உயிருடன் இருக்க வேண்டுமானால் நான் சொல்வதைக் கேள். நீ எனக்கு அடிமையானவன் என்று நீயே ஒப்புக்கொள். இதைத் தவிர வேறு வழி இல்லை.

अग्रसेन उवाच

सर्वं ते क्षामितं कुन्द न त्वेकं क्षामये पुनः ।
अल्पबुद्धे तवाग्रे तु क्षत्रियत्वं प्रदर्शये ॥ ३१ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஹே குந்தஸேனரே. தங்களுடைய அன்பான வார்த்தைகளைக் கேட்டேன். தாங்கள் என்னுடைய தகப்பனாரைப் போன்றவர். தங்களுடைய ஆசையே எனது விருப்பம். ஆனால் நான் ஒன்று மட்டும் சொல்க்கொள்கிறேன். தாங்கள் மிகவும் கீழ்த்தரமானவர். நான் இப்பொழுது உண்மையிலும் க்ஷத்திரியனைப் போல் நடந்துகொள்கிறேன் பாருங்கள்.

पितृभावेन वै तुभ्यं मया राज्यं निवेदितम् ।
शरणं चागतोऽहं त्वां तन्मान्यं नाभवत् तव ॥ ३२ ॥

எனது தகப்பனாரைப்போன்று நினைத்து தங்களை வணங்கி கேட்டுக் கொண்டேன். ஆனால் தாங்கள் எதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை.

ध्रुवं मूर्खतरस्त्वं हि त्वया नो वञ्चितं कुलम् ।
इन्द्रस्यापि बलं काङ्क्षापिपासापूरणे न हि ॥ ३३ ॥

பொதுவாக தாங்கள் மிகவும் கீழ்தரமான மூர்க்க எண்ணத்தைக் கொண்டு எங்களை வஞ்சனை செய்தீர்கள். இது நம்முடைய சூரிய குலத்திற்கே (பரம்பரைக்கே) மிகவும் இழுக்கானது. கெட்ட எண்ணம் கொண்டவன் இந்திரனாகிலும் அவனுடைய ஆசை நிறைவேறாது.

जैमिनिरुवाच

उत्थाय भूमेः कुपितः रोषतः वल्लभात्मजः ।
पौरुषं क्लेशसंयुक्तं धारयन् बुद्धिसंयुतः ॥ ३४ ॥

ஜைமினி கூறினார் - வல்லபஸேனனின் பிள்ளை அக்ரஸேனன் பூமியிருந்து எழுந்து கோபத்துடன் தனது வீரத்தையும் புத்தி சாதுர்யத்தையும் காண்பிக்கலானான்.

तदा स भिन्नहृदयो प्रसह्याच्छिद्य बन्धनम् ।
अपीडयत् स्वशीर्षेण कुन्दसेनस्य वक्षसि ॥ ३५ ॥

அப்பொழுது மனதில் கஷ்டத்துடனும் வேதனையுடனும் இருந்த அக்ரஸேனர் தனது தலையால் குந்தஸேனரின் மார்பில் முட்டினார்.

वक्रवाक्येन तीक्ष्णेन छिद्यन्ते प्रीतिजा गुणाः ।
अग्रस्यैकप्रहारेण भूतले ते विचेतसः ॥ ३६ ॥

கொடிய தீய வார்த்தையாலும் எண்ணங்களாலும் பந்துக்களைப் போன்று நடித்த குந்தஸேனன் பூமியில் விழுந்து மயக்கமானார்.

अग्रस्य पौरुषं दृष्ट्वा क्षणं तत् लोमहर्षणम् ।
पितुः परिस्थितिं वीक्ष्य लज्जितस्तमथो ययौ ॥ ३७ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் வீரத்தைப் பார்த்த வஜ்ரஸேனன் மிகவும் பயந்து போனான். தன்னுடைய தகப்பனுக்கு ஏற்பட்டிருக்கும் அவமதிப்பையும் மயக்கமான நிலைமையையும் பார்த்து ஓடி வந்து அவரை தூக்கி காப்பாற்றுவதற்காக தூக்கிக்கொண்டு போனான்.

भृत्या गच्छन्तु सबलाः विकृष्यन्तु धरातले ।
कारागारे नयन्त्वग्रम् इति वज्रो रुषान्वितः ॥ ३८ ॥

அப்பொழுது வஜ்ரஸேனன் கோபத்துடன் எச்சரித்தான். பலத்துடன் கூடிய வீரர்களை அழைத்து வந்து உன்னுடைய தலைமுடியைப் பிடித்து சிறையில் அடைக்கிறேன் என்றான்.

तस्याऽकर्म विलक्ष्यैवं सर्वे पुरजनास्तदा ।
कम्पिताश्च भिया युक्ता बभुवुर्भयकातराः ॥ ३९ ॥

இவ்வாறு கெட்ட எண்ணங்களைக் கொண்டு கடும் வார்த்தைகளைக் கூறும் வஜ்ரஸேனனைப் பார்த்து அனைத்து மக்களும் பயந்து நடுங்கினர்.

प्राप्नुवन् करुणं स्वार्थनिष्ठः कालनिभो नृपः ।
राजाऽस्माकं निर्दयो हि न दृष्टस्त्वीदृशो जनः ॥ ४० ॥

மக்கள் ஒருவருடன் ஒருவர் பயந்து போய் பேசிக்கொண்டிருந்தனர். இவ்வாறு இருக்கும்போது காலம் தான் என்ன செய்யமுடியும்?. நம்முடைய இராஜா யார்?. இப்படிப்பட்ட கெட்ட நேரத்தை நாம் சந்திக்கக்கூடாது.

अस्माकं क उपायोऽत्र भावि यत् तद् भविष्यति ।
अवश्यम्भाविभावानां प्रतीकारो न विद्यते ॥ ४१ ॥

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். நாம் எவ்வாறு இந்த கஷ்டத்திருந்து வெளியில் வருவது?. இனிமேல் என்ன நடக்கும்?. நமக்குத் தெரியாது. கடவுள் என்ன நினைத்திருக்கிறார் என்று. கடவுளின் தீர்ப்பை மீறவும் முடியாது.

हा हा भूतं वीक्ष्य राज्यम् अग्रसेनस्य तां दशाम् ।
क्रन्दमानोऽभवल्लोकः कुररीगणसंनिभः ॥ ४२ ॥

பிரதாப நாட்டின் மக்கள் அனைவரும் அக்ரஸேனரின் நிலைமையைப் பார்த்து அழுதனர் வேதனையுற்றனர். க்ரௌஞ்ச பறவையைப் போன்று மக்கள் அனைவரும் ஒன்றுகூடி பார்த்துக் கொண்டிருந்தனர்.

महतां चाभवद् ग्लानिर्दुःखिताः पौरसज्जनाः ।
धिक् ते बलं धिग् विचारं धिक् कर्मेदं त्वया कृतम् ॥ ४३ ॥

நல்ல எண்ணத்தையுடைய மக்கள் புலம்பிக்கொண்டு வெட்கமடைந்தனர். குந்தஸேனன் மற்றும் அவனுடைய பிள்ளை வஜ்ரஸேனனின் தருமமற்ற, அநியாயமானச் செயல்களைக் கண்டு கண்டித்து வெட்கத்துடன் தலைகுனிந்தனர்.

न चैतौ द्रष्टुमिच्छामो विकृतौ पापदर्शिनौ ।
प्रजानामपि, राज्येऽस्मिन् कथं कः स्थातुमर्हति ॥ ४४ ॥

மக்கள் கூறினரார்கள் - கெட்ட எண்ணங்கொண்டு பாபத்தைச் செய்யும் குந்தஸேனனையும் வஜ்ரஸேனனையும் நாங்கள் பார்க்க விரும்பவில்லை. அவர்களுடைய நாட்டில் நாங்கள் பிரஜையாக இருக்கவும் விரும்பவில்லை.

जैमिनिरुवाच

कृता यत्नाः कौरव्येण पाण्डवानां विनाशने ।
त्वं सर्वमतिसंवृद्धः कुलेऽग्रोऽप्स्विव पङ्कजम् ॥ ४५ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இதற்கு முன்பு ஒரு ஸமயம் இவ்வாறு தான் பாண்டவர்களை கௌரவர்கள் அதர்ம வழியில் ஜெயித்து அவர்களை காட்டிற்கு அனுப்பினர். ஆனால் பாண்டவர்கள் தாமரையைப் போன்று தூய்மையானவர்கள். ஓ ராஜா - திறமையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. சங்கடம் வரும்போது ஒரு வீர மனிதன் விவேகத்துடன் செயல்படவேண்டும்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
षड्विरचितम् श्रीमदग्रभागवते पञ्चमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் ஐந்தாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

ஆறாவது அத்யாயம்

துயரம்

जैमिनिरुवाच

ततः काले दुरात्मा स दर्पाहङ्कारसंयुतः ।

आहूय वज्रसेनं तं स्वहितं वाक्यमब्रवीत् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - இப்படிப்பட்ட சமயத்தில் அஹங்காரத்துடனும், சுய நலத்துடனும், கொடிய எண்ணத்துடனும் இருந்த குந்தஸேனன் தனது மகன் வஜ்ரஸேனனை அழைத்துக் கூறினான்.

कुन्दसेन उवाच

अभिषेकस्य सम्भारान् क्षत्तरानय मा चिरम् ।

आहूयन्तां च विद्वांसः पुण्याहं वाच्यतां च तैः ॥ २ ॥

குந்தஸேனன் கூறினான் - ஹே மகனே, உடனே முடிசூட்டும் விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய். இதை விட்டுவிடக் கூடாது. நிறைய பணத்தைக் கொடுத்து வித்வான்களையும் புரோஹிதர்களையும் கூப்பிட்டு புண்யாஹவாசன மந்த்ரத்தைச் செய்யச்சொல்.

सेवामुख्यांश्च मगधांश्चारणांश्च विशेषतः ।

मुक्तावलीश्च मुकुटं हस्ताभरणमानय ॥ ३ ॥

உடனே மகத தேசத்தின் முக்கியப் பணியாட்களையும் ஒற்றர்களையும் விழாவிற்கு வரும்படி அழைக்கவும். இராஜ மகுடத்தையும் மாலைகளையும் முத்துக்களையும் அணிகலன்களையும் எடுத்து வா.

अभिषेकोदकक्लिन्नं सर्वाभरणभूषितम् ।
अभिषिक्तं च मामद्य त्वं सूनो कर्तुमर्हसि ॥ ४ ॥

என்னை நகைகளாலும் உயர்ந்த ஆடைகளைக்கொண்டும் அழகு செய். நான் மிகவும் சீக்கரமாகவே இந்த இராஜ்யத்தில் அரசனாக ஆவதற்கு ஆசைப்படுகிறேன். என்னுடைய உடம்பு பயத்தினால் நடுங்குகிறது, வியர்க்கிறது. உடனே நான் இராஜ்ய பட்டாபிஷேக ஜலத்தால் அபிஷேகம் செய்து கொள்ளவேண்டும்.

जैमिनिरुवाच

एवमुक्त्वा कुन्दसेनस्त्वरयामास तं तदा ।
उक्तं सर्वं वज्रसेनः कारयामास सत्वरः ॥ ५ ॥

ஜைமினி கூறினார் -இவ்வாறு குந்தஸேனன் வேகமாக தனது பிள்ளை வஜ்ரஸேனனை ஆணையிட்டான். அவனும் தன்னுடைய தகப்பனார் கூறியபடி அனைத்து ஏற்பாடுகளையும் செய்தான்.

उपविष्टः कुन्दसेनो राजा मत्तो महामदः ।
स तु पीत्वा वरं पानं मदिराकान्तलोचनः ॥ ६ ॥

குந்தஸேனன் இராஜ்ய பட்டாபிஷேகத்திற்காக இராஜ ஸிம்மாஸனத்தில் உட்காரும் போதே அவன் மது அருந்தியிருந்ததால் அவனுடைய கண்கள் சிவந்தும் கொடிய எண்ணத்தால் மன உளச்சலை உடையவனாகவும் காணப்பட்டான்.

ततो वादित्रनृत्याभ्यामुपातिष्ठन्त चाङ्गनाः ।
गीतिश्च स्तुतिसंयुक्तैः प्रीत्या तमुपजग्मिरे ॥ ७ ॥

அச்சமயத்தில் பற்பல வாத்தியங்களுடன் நாட்டியப் பெண்கள் அவன் முன் வந்து நடனம் ஆடினர். அவனை புகழ்ந்தும் பேசி மகிழ்வித்தனர்.

वेषं सङ्क्षिप्तमाधाय रक्तेनैकेन वाससा ।
चित्तप्रसादने युक्ताः पुंसां वामविलोचनाः ॥ ८ ॥

நட்டியப் பெண்கள் நடனமாடுகையில் தங்களது உடம்பில் இருந்த துணிகளை கழற்றியும் உள் அங்கங்கள் தெரியும் படியும் காமத்தை ஏற்படுத்துவதைப் போன்றும் நடனமாடினர்.

महाकटितटश्रोण्यः कम्पमानैः पयोधरैः ।
कटाक्षहावमाधुर्यैश्चेतोबुद्धिमनोहरैः ॥ ९ ॥

பெரிய பின்பாகத்தையும், முன் மார்பகங்களையுமுடைய பெண்கள் அவர்களுடைய உருப்புகள் ஆடும்படியாகவும் பார்ப்பவர்களுடைய மனதில் காமத்தை ஏற்படுத்துமளவும் தங்களது நடமாகிய ஸேவையைச் செய்தனர்.

मत्तास्तस्य सभायां ते मदनेन मदेन च ।
अन्ये पौरजनाश्चैवममन्यन्ताग्रभक्तितः ॥ १० ॥

இராஜ ஸிம்மாசனத்தில் இருந்த குந்தஸேனன் ரஜோ குணத்தாலும், பேராசையாலும், அதிகம் மது அருந்தியும், காம வெறியிலும் மூழ்கியிருந்தான். அதே சமயத்தில் நாட்டு மக்கள் அக்ரஸேனரை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர், குந்தஸேனனுக்கு சாபத்தையும் கொடுத்தனர்.

जैमिनिरुवाच

स चापश्यदमात्यं स्वमापन्नं पलितं कृशम् ।
भग्नोत्साहं क्रियात्मानमग्रसेनोऽन्यतः स्थितम् ॥ ११ ॥

ஜைமினி கூறினார் - அதே சமயத்தில் சோகத்துடன் ஸ்ரீஅக்ரஸேனர் சிறையிருந்துக் கொண்டு தவறான அரசனையும் மந்திரிகளையும் பார்த்து வேதனையுற்றார்.

अमात्य उवाच

अहो धिक् कुन्दसेनस्य बुद्धिर्जाताऽसमञ्जसा ।
स्वराज्यस्य विनाशाय कारितं येन दुष्कृतम् ॥ १२ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் மேல் மரியாதை கொண்டுள்ள மந்திரிகள் குந்தஸேனனை இகழ்ந்தனர். இதனால் குந்தஸேனன் தவறான வழியைப் பின்பற்றி நகரத்தை அழிப்பதற்கு முற்பட்டான்.

अतः कष्टतरं किं वा द्रष्टव्यं मे भविष्यति ।
यतः पश्याम्यद्य सूर्यान् तमसा कृतबन्धनान् ॥ १३ ॥

பிரதாப நாட்டிற்கு இதைவிட துயரம் என்ன தான் நடக்க வேண்டும்? சூரியனே முழுவதுமாக இருட்டாக ஆகிவிட்டான். (அந்த அளவிற்கு அதர்மம் ஓங்கியிருந்தது).

पितामहः सखा चासीदुपकारी प्रियश्च मे ।
तेनाहं सह सङ्गम्य सुचिरं वत्स पालितः ॥ १४ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - உன்னுடைய தாத்தா ப்ருஹத்ஸேனர் என்னுடைய நண்பர். முன்னொரு காலத்தில் எனக்கு அவர் உதவி செய்துள்ளார். நானும் அவரும் குருகுல வாசத்தில் ஒன்றாக வெகு நாட்கள் படித்தோம் என்று சிறையின் காவலராக இருந்த மந்திரி ஒருவர் அக்ரஸேனரிடம் கூறினார்.

बाल्यात् पिता वल्लभस्ते प्रियवादी प्रियङ्करः ।
कुन्देनैवं विनिकृतः कश्मलं मेऽभवन्महत् ॥ १५ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - தங்களுடைய தகப்பனார் அவருடைய சிறிய வயது முதல் நல்ல எண்ணங்களையும் சிந்தனையில் தர்மங்களையும் சாத்விகமாக பேசுவதையும் கொண்டவர். அதை நினைத்துப் பார்க்கையில் தற்சமயம் இருக்கும் குந்தஸேனன் கொடூரமான பவங்களைச் செய்கிறான்.

विपत्काले धैर्यमाप्य प्रतिकारो विचिन्त्यताम् ।
विपन्नमुद्धरामि त्वां क्षमे सत्येन ते शपे ॥ १६ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - முன்னொரு சமயம் கலவரத்தினாலும், எதிர்ப்பினாலும் ஒருவர் கூட மனக் கசப்பை அடைந்ததில்லை. சில கஷ்டத்தை அவர் தன்னுடைய வீரத்தினாலும் கூர்மையான புத்தியாலும் எதிர்கொண்டு அதை வெற்றி கொண்டார். நான் இப்பொழுது உறுதியாகக் கூறுகிறேன். உன்னை இந்த இடத்திருந்து வெளியில் கொண்டுவருவேன்.

जैमिनिरुवाच

तच्छ्रुत्वा सुप्रियं वाक्यं पितृस्नेहात् प्रजल्पितम् ।
अग्रसेनमनस्तप्तं कारुण्येनाभिपूरितम् ॥ १७ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு ஆறுதல் கூறும் தகப்பனாரைப் போன்ற பெரியவரான அந்த காவலராக இருக்கும் மந்திரியின் வார்த்தைகள் ஸ்ரீஅக்ரஸேனனுக்கு மிகவும் உற்சாகத்தை அளித்தது. கருணையுடன் அவருடைய வார்த்தைகளைக் கேட்ட பின்பு பதில் கூறினார்.

अग्रसेन उवाच

स्वाभाविकं तु यद् दैवं भाग्येनैवाभिजायते ।
तदकृत्रिमसौहार्दमापत्स्वपि न मुञ्चति ॥ १८ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ பிதா - இந்த சமயத்தில் தாங்கள் கடவுளைப் போன்று எனக்கு உதவி செய்ய வந்துள்ளீர்கள். எதிர்பார்க்காமல் திடீரென்று கிடைக்கும் அன்பு தான் உண்மையாலுமே சிறந்தது. இதை நான் என்னுடைய வாழ் நாளில் மறவேன்.

अमात्य उवाच

प्रकृतिः स्वामिनं त्यक्त्वा समृद्धाऽपि न जीवति ।
वत्साग्रसेन त्वं स्वामी रक्षणीयोऽसि सर्वथा ॥ १९ ॥

மந்திரி கூறினார் - ஓ குழந்தாய், மனைவி கணவனை விட்டுப் பிரியமாட்டாள். அதே போல் இயற்கை நல்ல சிறந்த அரசனை விட்டு பிரியாது. நாட்டு மக்கள் நல்ல அரசன் இல்லாமல் மகிழ்ச்சியை அடையமாட்டார்கள். இந்த நேரத்திருந்து தாங்கள் தான் இந்த பிரதாபபுரத்தின் அரசன். தாங்கள் தான் இந்த நகரத்தை காப்பாற்ற வேண்டும். (மந்திரிகள் தான் இராஜாவை காப்பாற்ற வேண்டும்).

कर्मणा येन केनाऽपि मृदुना दारुणेन वा ।
उद्धरेत् दीनमात्मानं समर्थो धर्ममाचरेत् ॥ २० ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - இராஜா கஷ்டத்தில் இருக்கும்போது நேர்மையான மந்திரிகள் அவரை எவ்வாறாவது காப்பாற்றி அந்த

துயரத்திருந்து மீண்டுவிட்டால் அவர் மறுபடியும் தருமங்களைப் பின்பற்றி நேர்மையுடன் நாட்டைக் காப்பாற்றுவார். இது தான் நீதி.

न संशयमनारुह्य नरो भद्राणि पश्यति ।
संशयं पुनरारुह्य यदि जीवति पश्यति ॥ २१ ॥

ஓ குழந்தை - ஒரு மனிதன் கஷ்டப்படாமல் வாழ்க்கையில் சந்தோஷத்தை அனுபவிக்கமுடியாது. ஒரு முறை தாக்கிய பின்பு அவன் உயிருடன் இருக்கிறான் என்றால், அவன் ஏதோ ஒரு திட்டத்தைக் கொண்டு முயற்சி செய்து எதிர்கலத்தில் நம்மை வெற்றியடைவான் என சிந்திக்கவேண்டும்.

परप्रज्ञां विजानाति यश्चात्मानं स रक्षति ।
प्रतिघातं तदा कुर्यादापदं निस्तरेद् यथा ॥ २२ ॥

ஓ அக்ரஸேனா - எவன் ஒருவன் பல முறை முயற்ச்சித்து தோல்வி அடையாமல் வெற்றியடைய வேண்டும் என நினைக்கிறானோ அவன் தான் வாழ்க்கையில் மகிழ்ச்சியை அடைவான். அவன் தான் தன்னை எதிரியிருந்து பாதுகாத்துக் கொள்வான்.

अत्र स्थितमविज्ञातमलक्षितमहाबिलम् ।
अहमेव विजानामि कथं तत् संवृताननम् ॥ २३ ॥

ஓ அக்ரஸேனா - இங்கு கண்ணுக்குத் தெரியாத மூடப்பட்டுள்ள ஒரு சுரங்கப்பாதை இருக்கிறது. அதை எப்படித் திறக்க வேண்டும் என்பது எனக்கு மட்டும் தான் தெரியும். ஆனால் அது மறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நான் உன்னுடைய தாத்தாவிற்கு மிகவும் மரியாதைக்குரியவன் ஆதலால் அதைக் கூறுகிறேன்.

कारादियुक् ततोऽन्यत्र प्रयातु समयो ह्ययम् ।
वञ्चनीयो नृशंसात्मा कालं मन्ये पलायने ॥ २४ ॥

எனவே உன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு இந்த வழி மட்டும் தான் உள்ளது. இந்த இடத்திருந்து ஓடிப் போய் உன்னை நீ காப்பாற்றிக் கொள்வாயாக.

अग्रसेन उवाच

यथा पितुस्तथा नस्त्वं निर्विशेषोऽस्म्यहं त्वयि ।
पलायनाद् वरं मृत्युः किं मुधा मलिनं यशः ॥ २५ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ பிதா - மரியாதைக்குறியவரே. தாங்கள் எனது அப்பாவிற்கு வேண்டியவர். அதே போல் எனக்கும் மரியாதைக்குறியவர். ஆனால் என்னை விடுவிப்பதற்கு ஒரு வழி கூறினீர்களே அது சரியானதல்ல. ஒரு வீரன் ஓடிப் போய் தன்னைக் காப்பாற்றிகொள்ளவது உகந்ததல்ல. ஓடிப்போய் உயிரை காப்பாற்றிக் கொள்வதை விட மரணமே சிறந்தது. ஓடிப் போவது என்பது என்னுடைய வெற்றிக்கு இழிவு (இருட்டறை) ஆகும்.

अमात्य उवाच

आपदस्तरणे प्राणान् धारयेद् येन केन वा ।
सर्वमावृत्य कर्तव्यं तं धर्ममनुकुर्वता ॥ २६ ॥

மந்திரி கூறினார் - ஓ குழந்தாய், விவேகமுடையவன் முதல் தன்னைக் காப்பாற்றிக்கொள்வான். முதல் நீ எவ்வாறு வெளியில் வரவேண்டும் என்பதை சிந்திக்கவும். இந்த துயரமான நிலைமையில், துன்பத்தில் அனைத்து வழிகளுமே நேர்மையானது தான். இது ஆபத்துக்காலங்களில் கடைபிடிக்கும் தருமமாகும். துன்பத்தில் விவேகமுடையவன் இந்த வழியைத்தான் கடைபிடிப்பான்.

अग्रसेन उवाच

विना मात्रा विना भ्रात्रा धिग् इदं मम जीवनम् ।
न जीवनं प्रीतिपदं यदप्यन्यार्जितं धनम् ॥ २७ ॥

ஓ பிதா - என் பின்னால் என்னுடைய அம்மாவும் ஸஹோதரன் ஸௌரஸேனனும் இருக்கையில் நான் இந்த சிறையிருந்து வெளியில் வருவது எனக்கு மன அமைதியை ஏற்படுத்தாது. என்னை நானே இகழ்ந்து கொள்ளும் செயலாகும். வீரத்துடன் இதிருந்து வெளியில் வருவதையை சந்தோஷமாக நினைக்கிறேன்.

अमात्य उवाच

पुरोहितेन कर्तव्यं कृतं मात्रादिमोक्षणम् ।
जनन्या सह शौर्येण निर्गतं राज्यमन्दिरात् ॥ २८ ॥

மந்திரி கூறினார் - ஓ ராஜன், தாங்கள் தங்களுடைய அம்மாவையும் தம்பி ஸௌரஸேனனை பற்றியும் கவலைப்பட வேண்டாம். இராஜ புரோகிதருக்கு கொடுத்த வேலையின்படி அவர்கள் இருவரையும் அவர் பாதுப்பாக வைத்துள்ளார்.

सुखेन ते पाल्यमानाः सन्ति ते विगतज्वराः ।
नित्यं संरक्षणं कार्यं राज्ञो विषयवासिभिः ॥ २९ ॥

ஓ ராஜன். ராஜபுரோஹிதரின் உதவியால் தங்களுடைய அம்மாவும் தம்பியும் இந்நாட்டை விட்டு வெளியில் சென்றுவிட்டனர். அவர்களை காப்பாற்ற வேண்டிய கடமை மக்களிடம் உள்ளது.

उत्तिष्ठ व्रज भद्रं ते कार्यं कुर्वविषादतः ।
धृतिं गृह्णीष्व मा शत्रून् शोचन् त्वं नन्दयिष्यसि ॥ ३० ॥

தற்சமயம் தங்களை காப்பாற்ற வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம். எதிரியின் சந்தோஷத்துக்கு காரணமாக துணிச்சலுடன் இங்கு இருக்கிறீர்கள். எழுந்திருங்கள். நான் எதைச் செய்யும்படி கூறினேனோ அதனைச் செய்வீர்களாக.

सुमन्त्रितं सुविक्रान्तं सुयुद्धं सुपलायितम् ।
आपत्तिकाले यद् योग्यं कुर्यान्न तु विचारयेत् ॥ ३१ ॥

ஓ ராஜன் - எதிரியின் வசம் அகப்பட்டுக் கொண்டு ஆபத்தாக இருக்கும் போது அச்சமயத்தில் எதை மறைமுகமாகச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். ஆலோசனையையும், சந்தேகமற்று சண்டையிடுவதும் அல்லது தெரியாமல் ஓடுவதும் தருமத்திற்கு விரோதமல்ல. ஆதலால் தாங்கள் தங்களைக் காப்பாற்றிகொள்ள வேண்டும்.

यथाऽऽत्थ त्वं महाराज तत् करिष्यामि ते वचः ।

இதற்குமேல் ஹே ராஜன் - தாங்கள் எதைக் கூறுகிறீர்களோ அதை நான் கடைபிடிக்கிறேன் என்று மந்திரி கூறினார்.

अग्रसेन उवाच

गुरोरनुमतिं प्राप्य सर्वान् कामानवाप्नुयाम् ॥ ३२ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஒரு மனிதன் தங்களைப் போன்ற பெரியோர்களின் ஆசீர்வாதத்தின்படி தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்கிறான். இந்தச் சமத்தில் தாங்கள் தான் எனக்கு ஆசான் (குரு). அது எனக்கு நன்மையாகில் தாங்கள் கூறியபடி நடக்கிறேன். தங்களை பின் தொடர்கிறேன்.

जैमिनिरुवाच

तदाऽमात्येन संछिन्नम् अग्रस्याखिलबन्धनम् ।
बिलेन तेन निर्गत्य जग्मतुस्तावलक्षितौ ॥ ३३ ॥

ஜைமினி கூறினார் - உடனே மந்திரி அக்ரஸேனரின் உடம்பில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விடுவித்தார். உடனே அக்ரஸேனர் யாரும் பார்ப்பதற்கு முன் அங்கிருந்த சுரங்கப்பாதையின் வழியே வெளியேறினார்.

पलायितो ह्यग्रसेनः इति कोलाहलोऽभवत् ।
श्रुत्वा भटाः सर्वतश्च तत्र सत्वरमागताः ॥ ३४ ॥

சிறிது நேரத்தில் அங்கிருந்த காவலர்கள் அக்ரஸேனன் சிறையிருந்து தப்பி ஓடிவிட்டான் என கூச்சட்டனர். உடனே அங்கிருந்த காவல் படையினர்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்தனர்.

यथोक्तं कृतवान् सर्वम् अमात्यस्त्वरितो भृशम् ।
स्वामी पुण्यवता येन देहत्यागेन रक्षितः ॥ ३५ ॥

மந்திரி ஏற்கனவே சத்யம் செய்து கூறியபடி காவலர்கள் அங்கு வருவதற்குள் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டார்.

जनमेजय उवाच

सत्यमेव गुणग्राही स्वामी भाग्येन लभ्यते ।
शुचिर्दक्षोऽनुरक्तश्च मन्ये भृत्योऽपि दुर्लभः ॥ २६ ॥

ஜனமேஜயர் கூறினார் - ஓ மஹரிஷி - இது போன்று நன்மையைச் செய்யக்கூடியவரும் மனதில் கபடமற்ற எண்ணங்களை இருக்கும் மந்த்ரிகளையும் வேலையாட்களையும் பார்ப்பது கடினம்.

विपत्तिषु च ये शूराः स्वाम्यर्थे त्यक्तजीविताः ।
भर्तृभक्ताः स्वर्गसुखं महासत्वा हि भुञ्जते ॥ २७ ॥

மந்திரியைப் போன்று வீரத்தைக் கொண்ட வேலையாட்கள் தனது இராஜாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தன் உயிரைக் கூட பார்க்காமல் அவருக்காக வீர ஸ்வர்க்கத்தை அடைந்து அங்கு வெகு நாட்கள் சந்தோஷமாக இருந்தான்.

जैमिनिरुवाच

विक्रोशन्तोऽद्रवन् दासाः सर्वे कुन्दस्य मन्दिरम् ।
कुन्दसेनस्य तत् सर्वमाचख्युश्चाग्रकर्म तत् ॥ २८ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனர் வெளியேறியதைக் கேட்ட அரண்மனை வேலையாட்கள் அனைவரும் அலறிக்கொண்டு ஓடிப்போய் அக்ரஸேனன் தப்பி ஓடிவிட்டான் என்று பொழுதுபோக்காக
விளையாடிக்கொண்டிருந்த குந்தஸேனரிடம் முறையிட்டனர். .

तेषां श्रुत्वा स चागर्जत् मदसंरक्तलोचनः ।
गर्जन्तं तं तथा सर्वेऽप्यन्वपद्यन्त तं तदा ॥ २९ ॥

இந்த செய்தியைக் கேட்டவுடன் கொடிய எண்ணத்தையுடைய குந்தஸேனனின் கண்கள் சிவந்து போய் ஆத்திரமடைந்தான். தனது வேலையாட்களை கத்தி அழைத்து அக்ரஸேனனை பின் தொடரும்படி ஆணையிட்டான்.

कुन्दसेन उवाच

प्रतापपुरतः शीघ्रं बलं समभिवर्त्तताम्।
वनञ्चेदं सर्वतश्च बलौघैः परिवार्यताम्॥ ४० ॥

अग्र एवं क्षिप्रमेष समन्ताद् वेष्टितो बलैः।
वज्रप्रपाताप्रतिमं प्राप्नोतु तुमुलं भयम्॥ ४१ ॥

குந்தஸேனர் கூறினார் - பிரதாபபுரத்தின் ஸேனைகளை அழைத்து அக்ரஸேனனை சுற்றிவளைத்துப் பிடித்து இழுத்து வரும்படி ஆணையிட்டான்.

கவலர்களும் நமது படைகளும் நமது நாட்டைச் சுற்றியுள்ள காட்டைச் சுற்றி வலைத்து விட்டால் அங்கிருந்த அக்ரஸேனன் தாண்டிச் செல்ல முடியாது.

जैमिनिरुवाच

कुन्दसेनवचः श्रुत्वा सैनिका राजशासनात्।
तद्वनं वेष्टयामासुः समुद्राः धरणीमिव ॥ ४२ ॥

ஜைமினி கூறினார் -குந்தஸேனனின் ஆணையைக் கேட்டு அந்நாட்டுப் காவலர்கள் தங்கள் படைகளுடன் நாட்டைச் சுற்றியுள்ள காடு முழுவதும் கடல்சூழ்ந்துள்ள தீவைப் போன்றுச் சுற்றி வலைத்தனர்.

कुन्दसेन उवाच

शुष्ककाष्ठैस्तृणैर्वेष्ट्यं सपदीदं वनोत्तमम्।
अग्निना दीपयिष्यामि ह्यग्रसेनोऽत्र दह्यताम्॥ ४३ ॥

குந்தஸேனர் கூறினார் - காய்ந்துப்போன மரத் துண்டுகளையும் காய்ந்த புற்களையும் ஒன்று திரட்டி காட்டை தீக்கு இறையாக்குங்கள். அதில் அக்ரஸேனன் மடியட்டும்.

जैमिनिरुवाच

ददुस्ते पावकं तत्र यथाऽऽदेशस्तथा कृतम्।
सोऽनलः पवनायस्तो दह्यमानो महोल्कवत्॥ ४४ ॥

.ஜைமினி கூறினார் - அக்ரஸேனனை கொல்வதற்காக காடுகளுக்குத் தீ வைத்தனர். அந்த தீ காற்றினால் பரவி அதாவது அதிகமாகி காடு முழுவதும் கொழுந்து விட்டு எரிந்தது.

धातुभिः पच्यमानैश्च ज्वलद्भिश्चैव पादपैः ।
उद्भ्रान्तश्वापदाऽरौत्सीत् तुद्यमाना वनेश्वरी ॥ ४५ ॥

காட்டில் தீ அதிகமாகவும் வேகமாகவும் பிடித்து எரிந்து கொண்டிருந்ததால் மரக்கிளைகளும் பச்சை மரங்களும் எரிய ஆரம்பித்தன. அங்கிருக்கும் விலங்குகளும் ஜந்துக்களும் அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தன. அச்சமத்தில் அந்த காட்டை பார்த்தால் காடே (வனமே) அக்ரஸேனர் இல்லாமல் அழுவது போல் இருந்தது.

स पर्वतगुहामेकां भयादस्मादलक्षितः ।
अग्रसेनोऽविशत् श्रान्तपावकेन व्यमुच्यत ॥ ४६ ॥

கவலையும் சோர்வும் அடைந்த அக்ரஸேனர் யாரும் பார்க்கமுடியாத ஒரு குகையினுள் சென்றார். தான் உள்ளே சென்றவுடன் முன் வாயிலை மூடிவிட்டார். ஆதலால் அவரை நெருப்புத் தாக்கவில்லை.

धूम्रभारैरनालक्ष्य पावकेनभितापितम् ।
विविक्तमभवत् सैन्यं परावृत्तमहारथम् ॥ ४७ ॥

காடு தீப்பற்றி எரிந்ததால் அதிருந்து கிளம்பிய புகை எதிரில் இருப்பதைப் பார்க்கமுடியாததாகியது. அங்கு ஏற்பட்ட நெருப்பின் சூட்டைத் தாங்கமுடியாமல் குதிரைகளும் மற்ற படைகளும் வெகு தூரத்திற்குச் சென்றன. தேர்களும் வீரர்களும் நாட்டுக்குத் திரும்பினர்.

द्रवत्सु सर्वसैन्येष्वनङ्गपालो महाद्युतिः ।
स्मृत्वा वल्लभसम्बन्धम् अग्रमेवान्ववर्तत ॥ ४८ ॥

இவ்வாறு அனைத்துப் படைகளும் தேர்களும் நாட்டை நோக்கித் திரும்பி கொண்டிருக்கையில் வல்லபஸேனரின் நண்பனும், அவருடன் படித்தவருமான ஒரு மந்திரி அனங்கபாலன் மட்டும் காட்டில் அக்ரஸேனனை பார்ப்பதற்கு அவன் அருகில் வந்தான்.

अनङ्गपाल उवाच

अहं पितृष्वसुर्भर्ता त्वं हि मे दयितः परम्।

दुर्बुद्धिः कुन्दसेनस्य त्यक्तो बन्धो मयाऽद्य हि ॥ ४९॥

அனங்கபாலன் கூறினான் - ஓ குழந்தாய் அக்ரஸேனா - நான் உன்னுடைய தந்தைவழியில் மாமன் ஆவேன். நீ என்னுடைய மருமான் ஆவாய். குந்தஸேனன் கெட்ட எண்ணங்களைக் கொண்டவன். ஆதலால் அவனை ஒதுக்கிவிட்டேன் (விட்டு விட்டேன்).

यावत् नैष पुरं याति दर्शयिष्यति किल्बिषम्।

तदिमां संत्यजाशु त्वं महीं हतनराकुलाम् ॥ ५०॥

கொடிய எண்ணம் கொண்ட காவலர்கள் தங்கள் படையுடன் நாட்டை அடைந்திருக்க மாட்டார்கள். அவர்கள் மறுபடியும் வந்து உன்னை தாக்க நேரிடும். ஆதலால் எவ்வளவு சீக்கிரம் இந்த பெரிய காட்டை விட்டு வெளியில் செல்ல முடியோ அவ்வளவு சீக்கிரம் சென்று விடு என்றார்.

जनमेजय उवाच

वनस्य दह्यमानस्य महर्षे किं नु कारणम्?।

किमर्थमग्रसेनं न दहत्यग्निः प्रचक्ष्व मे ॥ ५१॥

ஜனமேஜயர் ஆச்சரியத்துடன் தெரிந்துகொள்வதற்காகக் கேட்டார் - அவ்வாறு காடு கொழுந்து விட்டு தீப்பிடித்து எரிந்த போதும் ஸ்ரீஅக்ரஸேனரை மட்டும் ஏன் நெருப்புத் தொடவில்லை. தயவு செய்து விளக்குங்கள்.

जैमिनिरुवाच

दैवयोगेनैव वह्नेरभूद् वायोर्निवर्तनम्।

विभीषणगृहं त्यक्त्वा लङ्कायां समभूद्यथा ॥ ५२॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாராஜ ஜனமேஜயா - அக்ரஸேனருக்கு ஸாதகமாக்வே காற்றினால் தீயை அதிகமாக்கி தீ காட்டை அழித்தது. குறிப்பாக அக்ரஸேனரின் இடத்தைத் தவிற மற்ற இடத்தை அக்னி தாக்கியது. இவ்வாறு தான் இராமாயணத்தில் இலங்கையில் தீ பிடித்தபோது விபீஷணன் இருக்கும்
இடத்தைத் தவிற மற்ற இடங்கள் தீயால் அழிக்கப்பட்டன.

अग्रसेनो ययौ वीरः खड्गचर्मधरो युवा।
कालो नूनं हि सर्वेषामयं नो भविता किल ॥ ५३॥

அனைத்துப் படையினரும் சிந்திக்கலாயினர். கூடிய விரைவில் வீரன் அக்ரஸேனன் கத்தி, வால், கேடயத்துடன் சண்டைக்கு வந்துவிடுவான். கண்டிப்பாக நமக்கு அவன் யமனாக இருப்பான். நம்மை இந்த பூமியில் காப்பவர் யாருமில்லை என அனைவரும் புலம்பினர்.

इति जल्पन्ति वै सर्वे सैनिका भयविह्वलाः।
ध्वजाः कणकणायन्ते द्रुमा वातेरिता यथा ॥ ५४॥

அனைத்து படைகளும், வீரர்களும் புலம்பிக்கொண்டும், பயந்தும் மரங்கள் இலைகளை மூடிக்கொள்வது போல தன்னை அனைவரும் மறைத்துக் கொண்டனர்.

कोशेभ्यश्च पृथग् भूताः स्वयमेवासयो ययुः।
क्षणात् प्रशान्ते धूम्रेऽग्रावग्रं सन्ददृशुर्भटाः ॥ ५५॥

பயத்தால் வீரர்கள் தங்களது உறையிருந்து கத்திகளை காரணமின்றி தானாகவே வெளியில் எடுத்தனர். அவர்கள் எதிரில் இருந்த புகை மண்டலத்தில் இருந்து அக்ரஸேனர் வருவதையும் கண்டனர்.

ततश्च शतशः शूराः वज्रस्याग्रमवारयन्।
तिष्ठ तिष्ठेति चोक्त्वा तं विव्याध दशभिः शरैः ॥ ५६॥

நூற்றுக்கணக்கான வீரர்கள் அக்ரஸேனரை எதிர்த்து நின்றனர். வஜ்ரஸேனன் முன்பு பல வீரர்களை நிற்கவைத்தான். அவர்கள் அனைவரையும் ஒரே அம்பை பத்து அம்புகளாக மாற்றி வீழ்த்தினார்.

संसक्तमतितेजोभिस्तमेकं ददृशुर्जनाः ।
शतं च मनुजव्याघ्रा गजाः सिंहशिशुं यथा ॥ ५७ ॥

பற்பல வீரர்கள் வஜ்ரஸேனனை காப்பதற்காக அவன் முன்புறம் வந்து அக்ரஸேனனுடன் சண்டையிட்டனர். அவர்கள் அனைவரை காட்டிலும் பற்பல யானைகளை சிங்கங்கள் மிகவும் எளிதில் கொல்வது போல அக்ரஸேனன் ஒருவரே அனைவரையும் கொன்றார்.

नीतिलक्ष्यतया तस्य शौर्येण स पराक्रमे ।
बभूव सदृशः कश्चिदग्रस्याग्रे न लाघवे ॥ ५८ ॥

வீரத்தில் அக்ரஸேனரைப் போன்று ஒருவர் கூட இல்லை. ஒரு வீரர் கூட கத்திச் சண்டையில் அக்ரஸேனனைப் போல் சண்டையிடவில்லை. மற்ற யுத்தத்திலும் அக்ரஸேனனைப் போல் ஒருவர் கூட அந்தப் போரில் சண்டையிட முடியவில்லை.

स प्रगृह्य महाघोरं निस्त्रिंशवरमायसम् ।
पदातिस्तूर्णमागत्य रथस्थं कुन्दमत्यगात् ॥५९ ॥

அனங்கபாலன் வீரன் அக்ரஸேனனுக்கு ஒரு வமையான கத்தி ஒன்றை கொடுத்தான். அதை எடுத்துக்கொண்டு தேரில் இருந்த குந்தஸேனனை நோக்கிப் புறப்பட்டான்.

भ्रान्तावरणनिस्त्रिंशं कालोत्सृष्टमिवान्तकम् ।
दीप्यमानमिवादित्यं मत्तवारणविक्रमम् ॥ ६० ॥

மிகவும் கூர்மையான கத்தியை கையில் வைத்துக்கொண்டிருக்கும் அக்ரஸேனன் சூரியனுக்குச் சமமான தேஜஸும், ஆகாயத்தில் மிகவும் வேகமாக ஓடும் கங்கயைப் போன்றும், யமனைப் போன்றும் தோன்றினான்.

तत् सारथेः शिरः कायाज्जहार प्रहसन्निव ।
रथं च तिलशःकृत्वा तान् हत्वा पार्ष्णिसारथीन् ॥ ६१ ॥

அக்ரஸேனன் முதல் குந்தஸேனனின் தேரோட்டியின் கழுத்தை வெட்டினான். அடுத்த நொடியில் அந்தத் தேரை சுக்கு நூறாக உடைத்தான். அதன் பின் வரிசையில் இருந்த படை வீரர்களும் கொல்லப்பட்டனர்.

चिच्छेदैकेन घातेन हस्तं कुन्दस्य दुर्मतेः ।
दृष्टे तथाविधे तस्मिन् हाहाकारो महानभूत् ॥ ६२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் ஒரே வெட்டில் குந்தஸேனனின் கையை வெட்டினான். இதைப் பார்க்கும் போது குந்தஸேனன் தனது படைகளையும் வீரர்களையும் பார்த்து அழுவது போல் இருந்தது.

तस्मिन् हतेऽनङ्गपाले संघर्षे लोमहर्षणे ।
कुन्दसेनस्य सैन्यं तत् प्रायशो विमुखीकृतम् ॥ ६३ ॥

இந்த கடுமையான திடீரென்று நடந்தப் போரில் அக்ரஸேனருக்கு விருப்பமானவரும் வேண்டப்பட்டவருமான அனங்கபாலன் மாண்டு போனான். இருப்பினும் குந்தஸேனன் மற்ற படைகளை தன்வசம் தக்க வைத்துக் கொண்டான்.

अग्रः प्रतस्थे तु वनं वेगेनोत्तीर्य स क्वचित् ।
सिंहद्वीपिरुरुव्याघ्रमहिषर्क्षगणैर्युतम् ॥ ६४ ॥

ஜைமினி கூறினார் - பிறகு அக்ரஸேனன் அவர்களைத் தாண்டி மிகவும் வேகமாக எரிந்து கொண்டிருந்த காட்டையும், புகளையும், சிங்கங்களையும், எருதுகளையும் கடந்துச் சென்றான்.

म्लेच्छानां सेवितं स्थानं दरीश्चाद्भुतदर्शनाः ।
स ददर्श बहून् भीमान् पिशाचोरगदंष्ट्रिणः ॥ ६५ ॥

ஜைமினி கூறினார் - அப்போது துராத்மாக்கள், பேய்கள் போன்றவைகளையும், எளிதில் புரிந்துகொள்ள முடியாத குகைகளையும், பிசாசுகளையும், விஷப் பாம்புகளையும் கண்டார்.

गत्वा प्रकृष्टमध्वानमुत्तरन्तं नदीं तदा ।
कूर्मग्राहझषाकीर्णां विपुलद्वीपशोभिताम् ॥ ६६ ॥

வெகு விரைவில் அதிக தூரத்தைக் கடந்தார். பிரதாபபுரத்தின் எல்லையில் ஆமைகளுடனும், முதலைகளுடனும் பயங்கரமாக இருக்கும் பெரிய நதியைக் கடந்தார்.

विवेश बालुकारण्यं मार्गेण विषमेन च ।
जहर्ष विस्मितो दृष्ट्वा स्वर्णवर्णमहाशिलाम् ॥ ६७ ॥

மேடு பள்ளம் பொருந்திய இடங்களைக் கடந்து சமமான தரையை உடைய வாலுகாரண்யம் என்ற இடத்தை அடைந்தார். அங்கு தங்கத்தைப் போன்று பிரகாசித்துக் கொண்டு இருக்கும் மலையை வியப்புடன் பார்த்தார்.

स शोकार्तः कृशो वर्णः पांसुध्वस्तशिरोरुहः ।
तत्र श्रान्तिपरीताङ्गः शिलातलमथाश्रयत् ॥ ६८ ॥

அக்ரஸேனர் களைப்புடனும், மகிழ்ச்சியற்றும், மனச் சோர்வுடனும், உடம்பு வயுடனும், தலைமுடி புழுதியடைந்தும் இருந்தார். தளர்வடைந்த அக்ரஸேனர் அந்த மலையின் கீழ் அமர்ந்தார்.

स तद् राज्यापहरणं सुहृदाञ्च वियोजनम् ।
वने च तत्परिध्वंसं स्मृत्वा चिन्तामुपेयिवान् ॥ ६९ ॥

தன்னுடைய இராஜ்யத்தையும் உறவினர்களையும் விட்டு விட்டு காட்டில் வந்து இருப்பது நினைத்து அவருடைய மனது கவலையடைந்தது.

जनमेजय उवाच

अतीव मोहमायाति मनश्च परिभूयते ।
निशाम्य तस्य तद् दुःखमिमां चापदमीदृशीम् ॥ ७० ॥

ஜனமேஜயர் கூறினார் - ஓ மஹரிஷி - தாங்கள் கூறும்போதே என்னால் அக்ரஸேனரின் பரிவையும் உணர்வையும் புரிந்து கொள்ள முடிகிறது. நானும் தற்சமயம் அந்த நிலையில் தான் இருக்கிறேன்.

जैमिनिरुवाच

अत्राप्युदाहरन्तीमां गाथां पारीक्षिताऽऽशृणु ।
ईश्वरस्य वशे लोका न तिष्ठन्त्यात्मनो वशे ॥ ७१ ॥

ஜைமினி கூறினார் - மஹாத்மா ஜனமேஜய - பொதுவாக நாம் அனைவரும் கடவுளுக்கு அடிபணிந்தவர்கள் என கஷ்டமான அல்லது பெரும் துயரமான புராணக் கதைகளைக் கூறுவர். நாமும் அதை ஒருவாறு ஒப்புக்கொள்ளுவோம். ஆனால் இங்கு கூறுவது 'அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியும் துன்பமும் தனது அரசனின் அதிகாரத்தால் வந்தடைகிறது அதில் மனிதனால் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பது தான் உண்மை.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते षष्ठोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் ஆறாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

ஏழாவது அத்யாயம்

துறவிகளின் இருப்பிடம்

जैमिनिरुवाच

एवं स कण्टकैस्तीक्ष्णैः पदयोराप्तवान् व्यथाम् ।
सुस्राव रुधिरं पद्भ्यां वर्तने बालुकावने ॥ १ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு அந்த வாலுகாவனத்தில் அக்ரஸேனர் மனதில் கஷ்டத்தை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் அவருடை. கால்களில் இருந்த புண்களில் இருந்து இரத்தம் கொட்டியது.

व्यचेष्टत क्व गच्छामि किं करोमीति दुःखितः ।
किमर्थं जीवनं क्लेशाः इमे प्राणाः किमुत्तरम् ॥ २ ॥

மிகவும் வருத்தத்தை அடைந்த அக்ரஸேனர் சிந்தித்தார். தற்சமயம் நான் எங்கு போவேன். நான் உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை. ஏன் நான் உயிரை விடக்கூடாது?. உயிரை விட்டுவிடுவதைத் தவிற வேறு வழி ஒன்றுமில்லை என எண்ணினார்.

अस्वाधीने दुराधर्षे गार्ग्यस्यारण्य आश्रमे ।
समागतो यूपहेतोस्तं ददर्श महामुनिः ॥ ३ ॥

அந்த காடு மிகவும் அடர்ந்தும் படர்ந்தும் இருந்தது. அந்த இடத்தை ஆட்சி செய்வதற்கும் யாரும் இல்லை. அங்கு ஒரே ஒரு மஹரிஷி கர்க்யரின் ஆச்ரமம் மட்டுமே இருந்தது. மஹரிஷி கர்க்யரும் துயரத்துடன் வரும் அக்ரஸேனனை பார்ப்பதற்காகவே காத்துக்கொண்டிருநத்தார்.

पीडितं शोकसन्तप्तं नरं दृष्ट्वा स वै मुनिः ।
अन्तर्दुःखेन दीनात्मा किमेतदिति सोऽब्रवीत् ॥ ४ ॥

ततोऽग्रसेनस्तं नत्वा मुनिं स प्राब्रवीद् वचः ।

மன தளர்ச்சியுடனும், தலைகுனிந்தும் உட்கார்ந்திருக்கும் அக்ரஸேனனை மஹரிஷி கர்க்யர் பார்த்து ஓ இளைஞனே, நீ யார்? எதற்காக இங்கு வந்திருக்கிறாய்? என அன்புடன் கேட்டார். இக்குரலைக் கேட்டவுடன் அக்ரஸேனன் குழப்பமாகித் தடுமாறினான். உடனே அவருடை கால் விழுந்து வணங்கி கூறினான்.

अग्रसेन उवाच
प्रतापपुर्या युवराडहं दुर्भाग्यपीडितः ॥ ५ ॥

அக்ரஸேனன் கூறினார் - ஓ முனிவரே நான் பிரதாபபுரத்தின் இளவரசன். நான் அரசன் வல்லபஸேனனின் பிள்ளை அக்ரஸேனன். என்னுடை கெட்ட சூழ்நிலையால் இங்கு வந்து விட்டேன் என்றான்

आख्यास्यामि च कस्याहं हा पापं किं मया कृतम् ।
दुःखपूर्णस्य दीनस्य निश्चला मे विचारिता ॥ ६ ॥

அக்ரஸேனனுக்கு புரியாத புதிராகவே இருந்தது, நான் என்ன பாவம் செய்தேன், எந்த பாவத்திற்காக இங்கு வந்து இவ்வாறு துயரப்படுகிறேன். இதை எவ்வாறு சொல்லுவேன். (என தனக்குள்ளே கேட்டுக்கொண்டான்).

मानदोऽस्मान् पिता स्वर्गप्रतिच्छन्दमलालयत् ।
धर्मयुद्धे तद्विहीनाः ,अनित्या क्षात्रिणां गतिः ॥ ७ ॥

எந்த துயரத்தையும் எனக்குத் தெரியாமல் எனது தகப்பனார் என்னை அன்புடன் வளர்த்தார். ஆனால் அவர் மஹாபாரத யுத்தத்தில் வீர சுவர்க்கத்தை எய்தினார். இனிமேல் எனக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காது.

भोगैश्वर्यप्रसक्तो न बुध्द्यापहृतचेतसा ।
पितृव्येण परित्यक्तः बान्धवैश्च विशेषतः ॥ ८ ॥

மிகுந்த செல்வத்தாலும் பேராசையாலும் தான் எனது உறவினர் குந்தஸேனனின் மனது மாறியது. பொறாமையால் என்னை முழுவதும் வெறுத்தார்.

उच्चसंश्रवणे सक्तम् ऊचुर्लाक्षणिका द्विजाः ।
ममाधिराज्याऽभिषेकं ते सर्वेऽनृतवादिनः ॥ ९ ॥

ஓ முனிவரே - அனைத்து பண்டிதர்களும், வித்வான்களும் தான் எனக்கு ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்யவேண்டும் என்றனர். ஆனால் அது கடைசியில் பொய்யாகிவிட்டது.

के वा मय्यगुणाः सन्ति कुतो भाग्यक्षयो मम ।
स्वजनेन छद्मनाऽहं स्नेहेन प्रसभं हतः ॥ १० ॥

ஓ முனிவரே - நான் என்ன தவறு செய்தேன் என்று எனக்குத் தெரியாது?. ஏன் நான் கொடுப்பனையற்றவனானேன்?. ஏன் நான் மட்டும் என்னுடைய உறவினர்களை விட்டுப் பிரிந்துள்ளேன்?. யார் என்னைக் கொல்ல முயன்றனர்?.

बद्धवागसमर्थोऽहं कारागृहनिवेशितः ।
दैवयोगेनागतोऽहं जीवितार्थमशक्तवत् ॥ ११ ॥

நான் தூங்கிக் கொண்டிருக்கையில் என்னை கொல்வதற்காக சிறையில் அடைத்தனர். என்னுடைய உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடினேன். அதனால் தான் என்னுடை பிறந்த தேசத்தை விட்டு விட்டு இந்து வந்துள்ளேன்.

अनाथशब्दं प्राप्तोऽहं कृतान्तेन निराकृतः ।
हस्तशेषस्ते सकाशं मृत्युमुक्तः समागतः ॥ १२ ॥

இந்த நிகழ்ச்சியால் என்னுடைய வாழ்கையை அழித்துவிட்டது. நான் என்னுடைய நாட்டையும் வீட்டையும் விட்டு பிரிந்துவிட்டேன். இது ஆழ்ந்த துயரத்தையும் என்னை அனைதையாகவும் ஆக்கிவிட்டது. மரணத்திருந்தும் பற்பல தடங்களையும் உடைத்துவிட்டு எப்படியாவது எனது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக இங்கு ஓடி வந்துள்ளேன்.

अस्माभिस्ते परित्यक्ताः कथं तैः स्वजना मुने ।
कथं वा शोकसंतप्ताःक्व वा गच्छाम साम्प्रतम् ॥ १३ ॥

ஓ முனிவரே - என்னுடைய உறவினர்களே சதி திட்டத்துடன் என்னை வெறுத்தால் நான் எங்கு போவேன்? இவ்வாறு கூறி மனம் உடைந்துபோன நான் எங்கு இருப்பது? என தழுதழுத்தக் குரலுடன் கூறிவிட்டு, எனக்கு ஒன்றும் தெரியாது என்றான்.

न काङ्क्षेऽहं सुखं राज्यं किं भोगैर्जीवितेन वा ।
श्रेयो भोक्तुं भैक्ष्यमेव रक्षितो मुनितेजसा ॥ १४ ॥

தேஜஸ்வியான மஹாமுனியே - இப்பொழுது எனக்கு இராஜ்யத்திலும் நான் உயிர் வாழ்வதிலும் எந்த ஆசையும் கிடையாது. இருப்பினும் ஒன்று மட்டுந் நிச்சயம். நான் தற்சமயம் என் உயிருக்குப் பிச்சை எடுத்து தான் உயிர்வாழ்கிறேன்.

महाभारतनाशस्य हेतू राज्यस्य काङ्क्षिता ।
दुःसहानां यथा ध्वंसो जातोऽन्योन्यसुसंप्लवः ॥ १५ ॥

மஹாபாரத யுத்தத்தில் பல தேசத்து இராஜாக்கள் போர் புரிந்தனர். அதில் பேரழிவு ஏற்பட்டது. பல மாவீரர்கள் உயிரை இழந்தனர். ஆனால் நான் இறந்து போன அரசர்களின் இராஜ்யத்துக்கு ஆசைப்படவில்லை.

राज्यमेव परं मूलं युद्धस्य न निवारितम् ।
श्रेयो भोक्तुं हि भिक्षान्नं किमर्थं क्लिष्टजीवनम् ॥ १६ ॥

இருப்பினும் ஒரு சண்டை நடப்பதற்குக் காரணம் அந்த தேசத்தின் மாநிலமும் தலைகரமும் தான் காரணம். ஏன் நான் அந்த சண்டை ஏற்படுவதற்கு உண்டான அடிப்படைக் காரணங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆதலால் பிச்சைக்காரணைப் போன்று இனிமேல் இருக்க வேண்டியது தான் என்றான்.

जैमिनिरुवाच

एतां श्रुत्वा कथां तस्य समाश्वास्य च तं मुनिः ।
प्रत्युवाचाग्रसेनं वै सान्त्वपूर्वमिदं वचः ॥ १७ ॥

ஜைமினி கூறினார் - மனக்கசப்புடனும் ஏமாற்றத்துடனும் பேசிய அக்ரஸேனனின் வார்த்தைகளைக் கேட்டு மஹரிஷி கார்க்யர் இரக்கத்துடன் சமாதானம் செய்து உத்திரவாதமளித்தார்.

गार्ग्य उवाच

कालयुक्तमिदं वत्स ब्रूषेऽर्थे दुरतिक्रमे ।
एषा ह्यन्तर्हिता माया दुर्विज्ञेया सुरैरपि ॥ १८ ॥

கார்க்யர் கூறினார் - ஓ குழந்தை அக்ரஸேனா - இவ்வுலகம் காலத்தின் வசப்பட்டது. நீ கூறிய அனைத்தும் நடந்து முடிந்து விட்டது. அதற்கு பதில் சொல்வது கடினம். விஷ்ணுவான பரம்பொருளால் இவ்வுலகமும் இதில் நடக்கும் மாயையும் முடிவு செய்யப்பட்டது. இருப்பினும் கடவுளால் கூட சில சமயங்களில் இம்மாயையை அறிந்துகொள்வது கடினம்.

गते शोको न कर्तव्यः प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च नानुशोचन्ति वित्तमाः ॥ १९ ॥

ஓ குழந்தை - ஞானிகள் எப்பொழுதும் நடந்து முடிந்ததை நினைத்து சோகப்பட மாட்டார்கள் நினைக்கவும் மாட்டார்கள். பொதுவாக ஞானிகள் மரணமடைந்தவர்களையும் ஏன் உயிருடன் இருக்கும் மனிதனைக் கூட பெரிதாக எண்ணமாட்டார்கள்.

येषां नश्यत्ययं लोकश्चरतां भिक्षुचारिणाम् ।
स ते पुमर्थो न त्याज्यो येन दोषे प्रवर्तसे ॥ २० ॥

ஓ குழந்தை - முக்தி அடைந்த ஒரு மனிதன் (ஞானி) இவ்வுலகத்தையும் இதில் நடப்பதையும் உண்மை என நினைக்க மாட்டான். மேலும் அவன் தான் துறவரம் ஏற்பதற்கும் தகுதியானவன் ஆவான்.

अथवा दुर्बलः क्लीबः संन्यासमनुवर्तते ।
धर्ममूलं संछिनत्ति सेति वत्स मतिर्मम ॥ २१ ॥

இல்லையெனில் தருமத்தை முழுவதுமாக பின்பற்றியவனும், திறமை இல்லாதவனும், ஆண்மையற்றவனும் துறவரம் ஏற்பதற்கு தகுதியுடையவனாக எனக்குத் தோன்றுகிறது.

हीनवीर्य इवाशक्तो भीरुः हीनः स्वतेजसा ।
लघुसत्व इवासि त्वं यशो वीर्यं च नाशयेः ॥ २२ ॥

வீரமில்லாமலும், தைரியமில்லாமலும் பயத்துடனும் இருப்பவர்களே துறவிகளுக்கு ஏற்றவர்கள். அச்சமயத்தில் அவர்கள் தங்களுடைய புகழ் வீரம் ஆகிய இரண்டையும் விட்டுவிடுவர்.

तपस्यया मुनिव्रातो वृणोत्यमरतां पुमान् ।
क्षत्रियाणां विक्रमेणैवामरत्वं प्रवर्तितम् ॥ २३ ॥

தவத்தால் முனிகளும் துறவிகளும் அடையும் பலனை, க்ஷத்ரியர்கள் தங்களுடைய வீரத்தாலும் ஒழுக்கத்தாலும் அதை (சந்தோஷத்தை) அடைகின்றனர். இவை இரண்டுமே அழியாத செல்வமாகும்.

तदद्य विपुलं वीर दुःखं स्वजनकारणम् ।
कर्मणा व्यपनेष्यामि तस्मादुत्तिष्ठ वत्सक ॥ २४ ॥

தங்களுடைய இந்நிலைக்கு காரணம் உங்களுடைய உறவினர்களா?. அந்த எண்ணத்தையும் நினைவையும் விட்டுவிடுங்கள். கவலைப் படவேண்டாம். வீரத்துடன் எழுந்திரு.

वैषम्यमपि सम्प्राप्तान् प्राणांश्चारित्रसंस्कृतान् ।
आत्मानमात्मना प्राप्तो जितः स्वर्गो न संशयः ॥ २५ ॥

இப்படிப்பட்ட துயரமான நிலையிலும் தருமத்தையும் ஒழுக்கத்தையும் எவன் பின் பற்றுகிறானோ அவன் சோகமான நிலைக்கு தள்ளப்படாமல் தருமத்தால் காப்பாற்றப்படுகிறான். அவன் தான் அனைவரைக் காட்டிலும் சிறந்தவன். சந்தேகமின்றி முடிவில் அவன் சுவர்கத்தையும் அடைகிறான்.

भूतानामिह सर्वेषां दुखोपहतचेतसाम् ।
गतिमन्वेषमाणानां नाश्रमात् सदृशी गतिः ॥ २६ ॥

உலக வாழ்க்கையில் துயரத்தை அடைந்த மனிதர்களுக்கு துயவரத்தைத் தவிற மற்ற வழி எதுவும் கிடையாது.

आशा बलवती ह्यग्र ! काचिदाश्चर्यशृंङ्खला ।
यया बद्धाः प्रधावन्ति मुक्तास्तिष्ठन्ति पङ्गुवत् ॥ २७ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - இதில் ஆசை தான் மிகவும் பலமானது. இவ்வுலகத்தில் ஆசையை விட்டவர்கள் முக்தியை அடைகின்றனர். மற்றவர்கள் முடவனைப் போல் இவ்வுலகத்தில் மாயைக்குக் கட்டுப்பட்டு இங்கேயே சுழல்கின்றனர்.

प्राप्तवानस्याश्रमं मे पत्रपुष्पफलावृतम् ।
लभस्व वत्स राज्यञ्च यशः कीर्तिं मनोरथम् ॥ २८ ॥

ஓ குழந்தை - தற்பொழுது நீ இலைகளும், மரங்களும் நிறைந்த இந்த ஆச்ரமத்தை (தவம் செய்யும் இடத்தை) அடைந்துள்ளாய். கொஞ்சம் நாட்கள் இங்கு தங்கியிருக்கவும். நீ திரும்பவும் உன்னுடைய இராஜ்யத்தையும் புகழையும் அடைவாய்.

ऋषीणामाश्रमावासाद् लभन्ते क्षत्रिया बलम् ।
किञ्चिन्नयात्र कालं त्वं विद्यामभ्यस्य जेष्यसि ॥२९ ॥

ஓ குழந்தை - க்ஷத்ரியர்கள் ஆச்ரமத்தில் (முனிகள் தவம் செய்யுமிடத்தில்) தங்குவதால் அவர்கள் இழந்த பலத்தை/வீரத்தை மறுபடியும் அடைகின்றனர். இதற்கு பல உதாகரணங்களைச் சொல்லலாம். (ஸுரத்-ஸமாதி, ராம-ஸீதை, லவ-குச, பாண்டவர்கள்). ஆதலால் தாங்களும் அவர்களைப்போல் இந்த ஆச்ரமத்தில் தங்கி ஆத்ம வித்யையை நன்கு கற்றுக்கொள்ளவும்.

क्लैब्यं क्षुद्रं च दौर्बल्यं भयं त्यक्त्वाऽत्र साधय ।
तमुपायं करिष्यामि येन पूज्यो भविष्यसि ॥ ३० ॥

ஓ குழந்தை - தேவையற்ற பயத்தையும், மனச் சோர்வையும் விட்டு விட்டு அதிருந்து வெளியில் வரவும். நான் ஏதேனும் ஒரு வழியைச் செய்து தாங்கள் இழந்த மதிப்பை மறுபடியும் பெற்றுத் தருகிறேன்.

अग्रसेन उवाच

न हर्षात् सम्प्रपश्यामि वाक्यस्यास्योत्तरं मुने ।
यच्च मां भगवानाह प्राणानां दर्शनं प्रति ॥ ३१ ॥

அந்த சமயத்தில் ஸ்ரீஅக்ரஸேனன் கூறினார் - மஹரிஷி தாங்களால் சொல்லப்பட்ட வார்த்தைகள் அனைத்தையும் மதிக்கிறேன், அதன்படி நடக்கிறேன். இதற்கு நன்றி சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகளே இல்லை. ஓ மஹரிஷி என்னுடைய உடம்பில் மறுபடியும் பிராணனை (ஆத்மாவை) உற்பத்தி பண்ணிவிட்டீர்கள்.

जैमिनिरुवाच

मुनेस्तद् वचनं श्रुत्वा केकीव घननिस्वनम् ।
अग्रसेनः सप्रहर्षः प्रायात् पृष्ठे महामुनेः ॥ ३२ ॥

ஜைமினி கூறினார் - மஹரிஷி கர்க்யரின் அறிவுரைகளைக் கேட்டவுடன், மேகங்களுடன் கூடிய இடியின் சப்தத்தைக் கேட்ட மயில்கள் தோகை விரித்து ஆடுவதைப் போல் அக்ரஸேனர் மன நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் அவரை பின் தொடர்ந்தார்.

गार्ग्यस्याश्रममासाद्य महाभागोऽभ्यवन्दत ।
तमृषिश्चाप्यग्रसेनं पुत्रवत् प्रत्यपद्यत ॥ ३३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மஹரிஷி கர்க்யரின் ஆச்ரமத்தை அடைந்து அவரை வணங்கினார். மஹரிஷியும் அக்ரஸேனரை புத்ரனாக/மகனாக ஏற்றுக்கொண்டார்.

स चैनमाश्रमं दृष्ट्वा लक्ष्म्या परमया युतम् ।
मनः प्रह्लादजननं शीतमारुतसंयुतम् ॥ ३४ ॥

கர்க்யரின் அழகான ஆச்ரமத்தை பார்த்த அக்ரஸேனரின் மனது மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் நிம்மதியையும் அடைந்தது. காற்று அந்த ஆச்ரமத்தை நறுமண வாசனையுடன் உலாவி வந்தது.

विपुलं विटपैर्वृक्षैः सुखच्छायैः समावृतम् ।
विहगैर्नंदितं पुष्पैरलङ्कृतमतीव च ॥ ३५ ॥

அங்கு பெரிய மரங்கள் அடர்த்தியான நிழலைக் கொடுத்தது. ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய குளிர்ச்சியான அம்மரத்தின் கீழ் பற்பல பறவைகளும் கீசுகீசு என்று ஒயை எழுப்பிக்கொண்டிருந்தது.

मनोरमं महेष्वासो सम्प्रज्वलितपावकम् ।
तं तदाऽप्रतिमं ह्यग्र आश्रमं प्रत्यपूजयत् ॥ ३६ ॥

அமைதியான அந்த ஆச்ரமத்தின் ஒரு பக்கம் பல முனிகள் யாகங்களைச் செய்து கொண்டிருந்ததால் அதிருந்து வந்த புகை அனைவரையும் வரவேற்று புணிதமாக்கியது. அவர்களையும் அக்ரஸேனர் வணங்கினார்.

नदीं चाश्रमसंश्लिष्टां पुण्यतोयां ददर्श सः ।
देवलोकप्रतीकाशं सर्वतस्तन्मनोहरम् ॥ ३७ ॥

அக்ரஸேனர் ஆச்ரமத்தின் அருகில் ஓடும் நதியையும் பார்த்தார். எந்த திசையிருந்து ஆச்ரமத்தைப் பார்த்தாலும் ஆச்ரமம் சுவர்க்கத்தைப் போன்றே காட்சியளித்தது.

रमन्ते स्म मृगैः सार्धं चित्रकास्त्यक्तमत्सराः ।
सिंहाश्च व्याघ्रागोभिस्तु क्रीडन्ति स्मातिहर्षिताः ॥ ३८ ॥

அந்த ஆச்ரமத்தில் சிறுத்தை புகள் தங்களது பொறாமையை மறந்து அமைதியாக மானுடன் விளையடிக் கொண்டு இருந்தது. புயும் சிங்கமும் பசுக்களுடனும் எருமைகளுடனும் விளையாடிக் கொண்டிருந்தன.

जितेन्द्रियैर्महाभागैः स्वर्गमार्गदिदृक्षुभिः ।
तापसैरप्यध्युषितं ददर्शाश्रममण्डलम् ॥ ३९ ॥

அங்கு தவத்தை மேற்கொண்ட துறவிகள் பலர் தனது விருப்பங்களை மறந்து சுவர்கத்தை அடைவதற்காக தாங்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்து இருந்தனர். அவர்களில் சிலர் தவத்திலும் சிலர் வேதங்களைக் கூறிக்கொண்டும் இருந்தனர்.

तत्र शुश्राव स ऋचः प्रेर्यमाणाः पदक्रमैः ।
यज्ञविद्याङ्गविद्याश्च, यजुर्विद्भिश्च शोभिताः ॥ ४० ॥

ஆச்ரமத்தில் ரிஷிகள் குழுவாக அமர்ந்துக்கொண்டு யஜுர்வேதத்தைக் கூறும் ரிஷி யாகத்தைச் செய்து கொண்டும், அதர்வ வேதத்தை கூறும் ரிஷி ப்ரவரத்தைச் சொல்க் கொண்டும் அவரவர்களின் வேலையை சிறப்பாகச் செய்துகொண்டிருந்தனர்.

मधुरैः सामगीतैश्च ऋषिभिर्नियतव्रतैः ।
अथर्ववेदं प्रवराः पदक्रमयुतं जगुः ॥ ४१ ॥

ஸாமவேதத்தை கூறும் ரிஷி இனிமையான குரல் ஸாமகானத்தைப் பாடினார். அதே போல் அதர்வ வேத ரிஷிகள் ப்ரவரம் பதக்ரமங்களையும் சொல்க்கொண்டிருந்தனர்.

तापसैः समुपेतं तं स दृष्ट्वा तु समाश्वसत् ।
ऋषिभार्याः शुभाचारा ऋषिपुत्रांश्च शोभनान् ॥ ४२ ॥

ரிஷிகளின் மனைவிகளும் தங்களது சேவைகளைச் செய்தனர். ரிஷி குமாரர்கள் தங்களது வித்யைகளை இளவரசர்களுக்கு கற்பித்தனர். இதைப் பார்த்த அக்ரஸேனருக்கு அனைத்து பயங்களும் விலகின. தனது எதிர்காலத்தின் மேல் அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

हर्षेण महताऽऽविष्टो नमश्चक्रे पुनः पुनः ।
तत्प्रयुक्ताभिराशीर्भिरग्रसेनो व्यभासत ॥ ४३ ॥

மிகுந்த மகிழ்ச்சியுடன் ஸ்ரீஅக்ரஸேனர் ரிஷிகளின் மனைவிகளையும், ரிஷி குமாரர்களையும் மறுபடியும் மறுபடியும் நமஸ்கரித்தார். அனைவரும் அக்ரஸேனருக்கு மங்களம் உண்டாகட்டும் என ஆசீர்வதித்தனர்.

कल्पितां मुनिपुत्रैश्च पर्णशालामुपावसत् ।
प्रणमंश्चरणौ नित्यं शृण्वन् गार्ग्यस्य ताः कथाः ॥ ४४ ॥

அதன் பிறகு அக்ரஸேனர் அவருக்கு என்று புதிதாக அமைக்கப்பட்ட குடில் (பர்ணசாலையில்) வசிக்கலானார். ஸ்ரீஅக்ரஸேனர் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் கர்க்யரிடம் சென்று அவரை நமஸ்கரித்து பற்பல ஸத்தான/உண்மையான கதைகளைக் கேட்டு வந்தார்.

जैमिनिरुवाच

समावृतं समन्ताच्च ऋषिभिस्तैस्तपोधनैः ।
स आश्रयद् गार्ग्यगुप्तमाश्रमं शुभमङ्गलम् ॥ ४५ ॥

ஜைமினி கூறினார் - ஹே மஹாத்மா ஜனமேஜயா - கர்க்யருடைய ஆச்ரமத்தின் அனைத்துப் பகுதியும் சிறந்த முனிவர்களாலும், ரிஷிகளாலும் சூழப்பட்டு யாகங்களும், தவமும் செய்யப்பட்ட வண்ணம் இருந்தது. ஆதலால் அந்த ஆச்ரமம் புனிதமான புண்ணிய பூமியாத் திகழ்ந்தது.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते सप्तमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் ஏழாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

எட்டாவது அத்யாயம்

தவம்

जैमिनिरुवाच

तं पार्थिवोऽथ संक्लिश्यन् छिन्नमूल इव द्रुमः।
प्रपच्छ वाक्यं हेत्वर्थसंयुतार्थं शुचो हरन्॥ १॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் அக்ரஸேனர் மறுபடியும் பழைய துன்பங்களை நினைத்து மனம் உடைந்து போய் சோர்வுடன் வேர்களை வெட்டிய மரத்தைப் போன்று உட்கார்ந்து விட்டார். துயரத்துடன் மந்தமாக உட்கார்ந்திருந்த அக்ரஸேனனை கர்க்யர் பார்த்து அத்துயரத்திருந்து வெளியில் கொண்டுவர தவ வமையையும் அதன் சிறந்த சக்தியையும் பற்றி எடுத்துரைத்தார்.

गार्ग्य उवाच

त्यज राजन्निमं शोकं मिथ्यासन्तापकारणम्।
इयं सा त्यज्यतां चिन्ता पुरुषार्थविनाशिनी॥ २॥

கர்க்யர் கூறினார் - பொய்யான மாயையான சோகத்தை விட்டு விடவும். நன்கு வாழ்க்கையை புரிந்து கொண்டு நலனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் கவலைகளில் இருந்து வெளியில் வரவேண்டும். கவலை என்பது ஒரு மனிதனை அழித்து விடும்.

अनिर्वेदः श्रियो मूलमनिर्वेदः परं सुखम्।
अनिर्वेदो हि सततं सर्वार्थेषु प्रवर्तकः॥ ३॥

ஓ குழந்தை - சோகம் (வேதனை) இல்லாமல் இருப்பது தான் முக்கியமான செல்வமாகும். சோகமின்மையே உயர்ந்த இன்பமாகும். ஆதலால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு அனைத்து விஷயங்களிலும் மனதைச் செலுத்துவாயாக.

करोति तत्फलं जन्तोः कर्म यच्च कृतं पुरा ।
न विषादस्य कालोऽयमिति सत्त्वं समाश्रय ॥ ४ ॥

ஓ குழந்தை - எந்த ஒரு வேலை ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் செய்யப்படுகிறதோ அது தான் வெற்றியடையும். ஆதலால் உன்னுடைய மனதில் தைர்யத்தையும் வீரத்தையும் நன்கு வளர்த்துக் கொள்.

अग्रसेन उवाच

हीनश्रियो ममोद्धारे नोपायो दृश्यते मुने ।
परित्राणाय मे ब्रूहि रहस्साधनमद्भुतम् ॥ ५ ॥

கவலையைக் கொண்ட அக்ரஸேனர் சோகத்துடன் கூறினார் - ஓ மஹரிஷி இப்படிப்பட்ட ஆழ்ந்த துயரத்திருந்து எவ்வாறு வெளியில் வருவது. இதில் ஏதேனும் சூட்சுமம் இருக்கிறதா?. அதை எனக்கு விவரமாகக் கூறுங்கள்.

गार्ग्य उवाच

इदमाख्यातवान् वत्स ! ममाख्यानं महामुनिः ।
मार्कण्डेयः पुरा राजन् गङ्गाकूले कथान्तरे ॥ ६ ॥

கர்க்யர் கூறினார் - ஓ ராஜன் - முன்பு ஒரு முறை மஹாமுனி மார்க்கண்டேயர் கங்கை நதியின் கரையில் ஒரு கதையைக் கூறினார். அதை நான் கூறுகிறேன் கேட்கவும் என்றார்.

शृणु राजन् प्रवक्ष्यामि चेष्टितं सुरथस्य हि ।
अमात्यैर्बलिभिःदुष्टैर्दुर्बलस्य दुरात्मभिः ॥ ७ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - ஸுரதன் என்ற ஒரு அரசன் தர்மத்தையே முதன்மையாகக் கொண்டு அரசாண்டு வந்தான். அவனை ஒரு முறை கோலத்வம்ஸி என்ற ராஜா வெற்றி கொண்டதால் ஸுரதன் நாட்டை இழந்தான். அவன் மிகவும் பலமற்றவன். ஆதலால் மந்திரிகள் அனைவரும் இராஜாவின் பலத்தையும் குறைபாட்டையும் தெரிந்து கொண்டு அவனுடைய படைகளையும் பொக்கிஷங்களையும் கையகப்படுத்தினர். மன வேதனையை அடைந்த ஸுரதன் உன்னை போலவே அனைத்தையும் செய்தான்.

स तद्राज्यापहरणं सुहृत्त्यागं च सर्वशः ।
वने च तं परिध्वंसं प्रेक्ष्य चिन्तामुपेयिवान् ॥ ८ ॥

அந்த சமயத்தில் ஸுரதன் இராஜ்யத்தை இழந்ததால் மனம் உடைந்து போனான். அவனுடைய உறவினர்களும் அவனைக் கைவிட்டனர். ஆதலால் அவன் காட்டுக்கு ஓடி வந்து தன் உயிருக்கே ஆபத்தான நிலையில் வாழ்ந்தான். உண்மையாலுமே அந்த சமயத்தில் நாட்டின் கலவரத்தால் அனைவருமே துன்பப்பட்டிருந்தனர். அவன் யாரேனும் உறவினர்களால் மட்டுமே காப்பாற்றப்பட வேண்டிய சூழ்நிலையிருந்தான்.

स ततो मृगयाव्याजात् हृतस्वाम्यो नृपोत्तमः ।
सन्तप्तस्सन् जगामाथ मुनेर्मेधाविनो वनम् ॥ ९ ॥

அப்பொழுது ஸுரதன் ஒரு வேடுவனைப் போன்று மாறுவேடங்கொண்டு மானைப் பார்த்துக்கொண்டு காட்டை சுற்றுவது போல் திரிந்து கடைசியில் மேதா என்கிற ரிஷியின் ஆச்ரமத்தை அடைந்தான்.

समाधिर्नाम वैश्योऽपि सङ्गतस्तेन तत्र हि ।
सुरथस्तं नमस्कृत्य तान् मुनीनब्रवीद् वचः ॥ १० ॥

அச்சமயத்தில் ஸமாதி என்கிற வைச்யன் ஒருவன் தன்னுடைய மனைவி மற்றும் பிள்ளையால் வீட்டை விட்டு துறத்தப்பட்டு மேதா மஹரிஷியை பார்ப்பதற்கு அங்கு வந்தான். ஸுரதனும், ஸமாதி இருவரும் மஹரிஷி மேதா அவர்களின் காலடியில் அமர்ந்தனர்.

सुरथ उवाच

बहुदुःखपरिक्लेशं मानुष्यमिह दृश्यते ।
मानवा येन हृष्यन्ति तमुपायं मुने वद ॥११ ॥

ஸுரதன் கூறினான் - ஓ மஹாமுனி - இவ்வுலகில் மனிதர்கள் பல விதமான துன்பங்களையும் மனத் தளர்ச்சியையும் அடைகின்றனர். இவ்வாறு இருக்கையில் யார் தான் சுகத்தையும் ஆனந்தத்தையும் அடைகின்றனர் என்பதை கூறுங்கள்.

मार्कण्डेय उवाच

श्रुत्वा मुनेस्तस्य वाक्यं वरीवर्ति भ्रमो वृथा ।
इति यो वक्ति को वक्ता यस्मादेतत् तमाश्रये ॥ १२ ॥

ரிஷி மார்க்கண்டேயர் கூறினார் - மேதா ரிஷியின் உபதேசத்தால் இராஜாவுக்கும் வணிகனுக்கும் ஏற்பட்டிருந்த சந்தேகத்தில் தெளிவு ஏற்பட்டது. இவ்வுலகத்தைப் பற்றிய தெளிவும் தெரிந்தது. மேதா ரிஷியின் பாதுகாப்பில் இருவரும் தங்கினர்.

महामायाप्रभावेण तया संमोह्यते जगत् ।
ज्ञानिनामपि चेतांसि हरेश्चैषा दुरत्यया ॥ १३ ॥

மேதா முனி கூறினார் - இவ்வுலகம் மாயையாலும் ஆசையாலும் மட்டுமே உற்பத்தி பண்ணப்பட்டது. ஆதலால் அனைவரும் மாயைக்கு கட்டுப்பட்டிருக்கிறோம். இம்மாயை விஷ்ணுவால் உற்பத்தி பண்ணப்பட்டது. சில சமயங்களில் மஹா முனிகளும், ரிஷிகளும் கூட இதில் மயங்குகின்றனர்.

बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ।
तया विसृज्यते विश्वं जगदेतच्चराचरम् ॥ १४ ॥

ஓ ராஜன் - படித்தவர்களையும் மனதை கட்டுப்படுத்திய ரிஷிகளையும் கூட இந்த மாயை தன்வசப்படுத்திவிடும். உயிருள்ளவற்றையும் மற்றும் அசைவற்ற பொருளையும் மாயை தன்னிடம் வைத்துள்ளது.

सा विद्या हि परा भुक्तेर्मुक्तेर्हेतुः शिवेश्वरी ।
सैषा प्रसन्ना वरदा नृणां भवति मुक्तये ॥ १५ ॥

அதிருந்து வெளிவரவும், அதில் சிக்காமல் இருப்பதற்கும் ‘பரா‘ வித்யையை அறியவேண்டும். அவ்வாறு அறிந்து கொள்வதே மோட்சமாகும். மனிதர்கள் எப்பொழுது ‘பரா‘ வித்யையை தெரிந்துகொள்கின்றனரோ அப்பொழுது தான் முக்தியும் கிடைக்கிறது.

एतत्ते कथितं सर्वं देवीमाहात्म्यमुत्तमम् ।
एवंप्रभावा सा देवी ययेदं धार्यते जगत् ॥ १६ ॥

இதுவரை மஹா மாயையின் முக்கியத்துவத்தையும், செயலையும் பற்றி முழுவதுமாகக் கூறிவிட்டேன். இவ்வாறு தான் மாயை இவ்வுலகத்தைத் தாங்கியிருக்கிறாள் என்றார்.

विद्या तथैव क्रियते भगवद्विष्णुमायया ।
तया त्वमेष वैश्यश्च तथैवान्ये विवेकिनः ॥ १७ ॥

मोह्यन्ते मोहिताश्चैव मोहमेष्यन्ति चापरे ।
शरणं त्वं तामुपैहि भोगस्वर्गापवर्गदाम् ॥ १८ ॥

மாயை தான் அனைத்து கல்விக்கும் முதன்மையானவள். சிந்தனைக்கும் அறிவுக்கும் ஞானத்திற்கும் சிறந்தவள். விஷ்ணுவே மாயை என்கிற பொய்யான ஞானத்தையும் தோற்றத்தையும் ஏற்படுத்தி செயல்படுத்துகிறார். அவள் மஹாலக்ஷ்மியின் மூலம் செல்வத்தை அடைகிறாள். இதுமட்டுமின்றி வைச்யர்கள் தங்களுடைய பலத்தால் மாயைக்கு அடிமையாகின்றனர். இவ்வாறு இவ்வுலகத்தில் அனைத்தும் மாயையின் வசமாகிவுள்ளது. இந்த கர்ம பந்தத்திருந்த (கட்டுப்பாட்டிருந்து) வெளியில் வருவேண்டுமாகில் மஹாமாயையின் அருளைப் பெற வேண்டும்.

सुरथ उवाच

आराध्यं यन्मया देव्याः स्वरूपं येन वा मुने ।
विधिना ब्रूहि तत्सर्वं यथावत्प्रणतस्य मे ॥ १९ ॥

ஸுரதர் கூறினார் - ஓ மஹா முனிவரே - நாங்கள் தாங்களை தஞ்ஜமடைந்துவிட்டோம். மஹாமாயா தேவியின் ரூபம் என்ன?, அவளை எவ்வாறு வழிபடவேண்டும்? போன்றவற்றை கூறுங்கள் என்றார்.

ऋषिरुवाच

इदं रहस्यं परममनाख्येयं प्रचक्षते ।
भक्तोऽसीति न मे किंचित्तवावाच्यं नराधिप ॥ २० ॥

மேதா மஹரிஷி கூறினார் - இவ்விஷயம் மிகவும் இரகசியமானது, உயர்ந்தது. இதை அனைவருக்கும் சொல்லிட முடியாது. இருப்பினும் தாங்கள் எனது பக்தனாக/சிஷ்யனாக இருப்பதால் கூறுகிறேன் என்றார்.

ऋषिरुवाच

सर्वस्याद्या महालक्ष्मीस्त्रिगुणा परमेश्वरी ।
लक्ष्यालक्ष्यस्वरूपा सा व्याप्य कृत्स्नं व्यवस्थिता ॥ २१ ॥

ரிஷி கூறினார் - ஹே உத்தமமான மனிதர்களே. ஆதிமாயா எனப்படும் இவ்வுலகத்தின் முதன் முதற்கடவுளாக அனைத்து ஆன்மாவின் பலத்துடன் மஹாலக்ஷ்மி தோன்றினாள். அவள் உயிருள்ள (சேதன), உயிறற்ற (அசேதன), தெரிகின்ற, தெரியாத பொருள்களில் ரஜஸ், தமஸ், ஸத்வ ரூபத்துடன் உட் புகுந்தாள்.

त्रिगुणा सा महालक्ष्मीः रूपसौभाग्यशालिनी ।
चतुर्भुजा बहुभुजा सा पूज्या हि सनातनी ॥ २२ ॥

அவள் காந்தி (ஒளி), ரூபம் (உருவம்), ஸௌபாக்யம் (அழகு) ஆகிய மூன்று குணங்களுடன் பிரகாசித்தாள். நான்கு கைகளுடன் கூடிய மஹாலக்ஷ்மியை சாதாரண மனிதன் கூட பூசிக்கும்படி இருந்தாள்.

सहस्रभुजा सा वरदा गदार्यब्जैरलङ्कृता ।
पद्मा च कमला लक्ष्मीः श्रीश्च रुक्माम्बुजासना ॥ २३ ॥

ஆயிரம் கைகளுக்கு சமமாக மஹாலக்ஷ்மியின் நான்கு கைகள் இருந்தது. அவள் தாமரை புஷ்பத்தில் அமர்ந்து ஒரு கை தனது பாதத்தைக் காண்பித்தும் (வரத ஹஸ்தம்), மற்ற கைகளில் சக்ரம், கதை. சங்கு ஆகிய ஆயுதங்களை ஏந்தியும் இருந்தாள். ஆதலால் அவளை ஸ்ரீ, இந்திரா, கமலா, மஹாலக்ஷ்மீ, ஆகிய பெயர்களினால் பூஜித்தனர்.

पुपोष पालयामास तल्लक्ष्म्या सह केशवः।
स्तुता सा पूजिता भक्त्या वशीकुर्याज्जगत्त्रयम्॥ २४॥

இந்த மஹாலக்ஷ்மி ஸ்ரீவிஷ்ணுவுடன் இருந்து கொண்டு இந்த உலகத்தை காப்பாற்றுகிறாள். இப்படிப்பட்ட மஹாலக்ஷ்மியை பக்தியுடன் பூஜித்தால் இம்மூன்று உலகத்தையும் ஆட்கொண்டு வெற்றியடையலாம்.

निराकारा च साकारा सैव नानाभिधानभृत्।
नामान्तरैर्निरूप्यैषा नाम्ना नान्येन केनचित्॥ २५॥

ஓ ராஜன் - மஹாலக்ஷ்மியானவள் உருவத்துடனும் உருவமற்றவளாகவும் இருப்பாள். பற்பல உருவங்களையும் எடுக்கும் சக்தியையும் உடையவள். அவள் பற்பல பெயர்களையும் கொண்டவள் ஆவாள். மேலும் மஹாலக்ஷ்மியை மற்ற பெயர்களையும் உதாகரணங்களைக் கொண்டும் முழுவதுமாக வர்ணிக்க முடியாது.

मार्कण्डेय उवाच

इति तस्य वचः श्रुत्वा सुरथः स नराधिपः ।
जगाम सद्यस्तपसे स च वैश्यो महामुने॥ २६॥

மார்க்கண்டேயர் கூறினார் - ஓ மஹாமுனிவரே - இவ்வாறு மேதா மஹரிஷியின் மூலம் மஹாலக்ஷ்மியின் அருளையும் பெருமையையும் தெரிந்து கொண்டவுடன் இராஜா ஸுரதனும், வணிகன் ஸமாதியும் மஹாலக்ஷ்மியைக் குறித்து வமையான தவத்தை மேற்கொண்டனர்.

परितुष्टा जगद्धात्री समाराधयतोस्तयोः।
इति प्राप्तां नृपो वैश्यो यथाभिलाषितं वरम्॥ २७॥

மஹாலக்ஷ்மியைக் குறித்து இருவரும் தங்களது மனதை அடக்கி சிறப்பாக பூஜை செய்தனர். இவ்வுலகத்தை தாங்கியிருக்கும் மஹாலக்ஷ்மி மனம் மகிழ்ந்து அரசன் ஸுரதனுக்கு வேண்டிய வரத்தையும், வணிகனுக்கு வேண்டிய வரத்தையும் முழுவதுமாகக் கொடுத்தாள்.

गार्ग्य उवाच

अग्रसेन यथाऽऽख्यातम् ऋषिभिः प्रतिबोधितम् ।
महालक्ष्मीमुपास्स्व त्वं जप गुह्यं जयावहम् ॥ २८ ॥

மஹரிஷி கர்க்யர் கூறினார் - ஓ அக்ரஸேனா - மஹாலக்ஷ்மியை தீவிரமாக பூஜை செய்து இராஜாவும் வணிகனும் தங்களுக்கு வேண்டியதை அடைந்தனர். அப்படிப்பட்ட இரகசியத்தை உனக்கும் கூறிவிட்டேன் என்றார்.

सर्वमङ्गलमाङ्गल्यं पुण्यदं परमं शिवम् ।
इदं रहस्यं परमं दिव्यमूर्तेरभीष्टदम् ॥ २९ ॥

ஹே ராஜன் - இந்த இரகசியமான மஹாலக்ஷ்மியின் கதை அனைவருக்கும் வேண்டியதையும் அனைத்து மங்களங்களையும் மாங்கல்யத்தையும் புண்ணியத்தையும் செல்வத்தையும் கொடுக்கக்கூடியது.

चिन्ताशोकप्रशमनमायुर्वर्धनमुत्तमम् ।
महालक्ष्म्याऽऽराधनं तत् सर्वैश्वर्यप्रदायकम् ॥ ३० ॥

ஹே ராஜன் - மஹாலக்ஷ்மியின் பூஜை மனதில் உள்ள துயரம், ஆயுள் விருத்தி, அனைத்து செல்வம் (ஐச்வர்யம்) ஆகியவற்றை கொடுக்கக்கூடியது.

सर्वशक्त्यात्मिका चैव सृष्टिं व्याप्य व्यवस्थिता ।
प्राणशक्तिः परा ह्येषा सर्वेषां प्राणिनां भुवि ॥ ३१ ॥

மஹாலக்ஷ்மி தான் உலகிலுள்ள அனைத்து ஆத்மாவிற்கும் சிறந்த சக்தியைக் கொடுத்து இருக்கிறாள். இப்பூவுலகில் மஹாலக்ஷ்மி தான் ப்ராண சக்தியாக இருந்து உலகைக் காக்கிறாள்.

यो यो जगति पुम्भावः स विष्णुरिति निश्चयः।
या या नारीभावमाप्ता सा सा लक्ष्मीर्व्यवस्थिता ॥ ३२ ॥

இவ்வுலகில் உள்ள மனிதப் பிறவியில் (ஆண்) புருஷனாகில் அவன் விஷ்ணுவாகவும், (பெண்) ஸ்த்ரீயாகில் அவள் மஹாலக்ஷ்மியாகவும் கருதப்படுகின்றனர்.

तत्पार्श्वस्थां महालक्ष्मीं सम्पूज्य श्रीधरप्रियाम्।
कारणत्वे न तिष्ठन्ति जगत्यस्मिंश्चराचरे ॥ ३३ ॥

ஓ ராஜன் - இவ்வுலகத்தை உற்பத்தி பண்ணுகிறவளும், அழிக்கின்றவளும், உயிருள்ள, அசைவற்றவைகளை ஏற்படுவதற்கு காரணமாகி இருக்கிறவளும் மஹாவிஷ்ணுவிற்கு ஆசையானவளுமான மஹாலக்ஷ்மியை பூஜை செய்வாயாக. (அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மி உங்களை காக்கட்டும்).

उपासते यथा बालाः मातरं क्षुधयार्दिताः।
उपासते तथा श्रेयस्कामास्ते देहिनः श्रियम् ॥ ३४ ॥

எவ்வாறு பசியை உடைய குழந்தை தனது அம்மாவிடம் சென்று உணவைக் கேட்கிறதோ அவ்வாறு இவ்வுலகத்தில் இருப்பவர்கள் மஹாலக்ஷ்மியிடம் வேண்டி தனக்கு வேண்டிய அனைத்தையும் அடைகின்றனர். அதாவது ஆசையுடவர்களுக்கு வேண்டிய பலனையும் மற்றவர்களுக்கு மோக்ஷத்தையும் கொடுக்கிறாள்.

पराप्रकृतिरेवैका श्रीरन्याः करुणाश्रयाः।
न हि तद् विद्यते लोके तपसा यन्न लभ्यते ॥ ३५ ॥

இம்மஹாலக்ஷ்மி தான் இயற்கையான ரூபத்துடனும், உயர்ந்த பரம் பொருளாகவும், கருணை, செல்வம் ஆகியவற்றையும் பொழியக்கூடியவளாகவும் இருக்கிறாள். இதை தவம் செய்து கூட அடையமுடியாது. மேலும் இவ்வுலகத்தில் இதைத் தவிர மற்றவை எதுவும் இல்லை.

जैमिनिरुवाच

एतच्छ्रुत्वा वचस्तस्य मुनेरमिततेजसः ।

अग्रसेन उवाच

सर्वमेतत् करिष्यामि त्वयोक्तं परमं हितम् ॥ ३६ ॥

ஜைமினி கூறினார் - மஹரிஷி கர்க்யரின் இந்த முழு உபதேசத்தையும் கேட்ட பின்பு ஸ்ரீ அக்ரஸேனர் கூறினார். ஓ முனிவரான பிதா - தங்கள் எனக்கு எது நன்மையைத் தரும் என கூறுகின்றீர்களோ அவை அனைத்தும் நான் செய்கிறேன் என்றார்.

जैमिनिरुवाच

कृत्वा मृत्तिकयाऽथ श्रीविग्रहं सुमनोहरम् ।
आस्थाप्य बहुभिर्मन्त्रैर्विधिनात्राऽभ्यपूजयत् ॥३७ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் உடனே அந்த ஆச்ரமத்தில் மண்ணால் மிகவும் அழகான ஒரு மஹாலக்ஷ்மியின் சிலையை செய்தார். பற்பல வேத மந்த்ரங்களைக் கொண்டு நிர்மாணம் செய்து பூஜிக்கலானார்.

समारेभे तपोऽश्विन्या मासे याम्ये जयप्रदे ।
अग्रसेनो ध्यायति स्म महालक्ष्मीं तपस्यया ॥ ३८ ॥

மஹாலக்ஷ்மியின் சிலையை வடிவமைத்தவுடன் வெற்றியைத் தரக்கூடிய ஆச்வின மாஸத்தில் (தசரா) சுக்ல பக்ஷத்தில் தசமி திதியில் பிரதிஷ்டை செய்தார். அதன் பின்பு மஹாலக்ஷ்மியைக் குறித்து தியானம் செய்து தவத்தை மேற்கொண்டார்.

संहृत्य मनसाऽऽत्मानं हितकाम्यप्रवृत्तिकः ।
विमुक्तगतकल्माष एकाग्रे तपसि स्थितः ॥ ३९ ॥

உலகத்தின் நன்மைக்காக பழைய துயரங்கள் அனைத்தையும் மறந்து ஸ்ரீஅக்ரஸேனர் ஆத்மாவையும் மனதையும் ஒருமுகப்படுத்தி மந்த்ரங்களை கூறிக்கொண்டு தீவிரமாக தவத்தை மேற்கொண்டார்.

संयुज्य मनसाऽऽत्मानम् अग्र एकपदे स्थितः ।
कर्मणोग्रेण सन् योगी नियमान् सोऽनुपालयन् ॥ ४० ॥

ஸ்ரீஅக்ரஸேனர் ஒரு கால் நின்று கொண்டு மனதில் மஹாலக்ஷ்மியைக் குறித்து தவம் செய்தார். இந்த கடுமையான தவம் வெகுநாட்கள் அக்ரஸேனரால் பண்ணப்பட்டது.

अग्रसेन उवाच

प्रतोष्यामि महालक्ष्मीम् यथोक्तमृषिभिः पुरा ।
बहुरूपा विरूपा च भक्तानां परिरक्षिणी ॥ ४१ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - தன்னுடைய தவத்தின் போது மஹாலக்ஷ்மியைப் பற்றி இவ்வாறு சிந்தித்தார். பழங்காலத்தில் ரிஷிகள் கூறிய ஹே மஹாலக்ஷ்மியே உன்னை சந்தோஷப்படுத்துகிறேன். தாங்கள் பலவிதமான உருவங்களைக் கொண்டும் உருவமற்றவராகவும் இருந்துக் கொண்டு பக்தர்களை காப்பாற்றுகிறீர்கள்.

महालक्ष्मीस्तवः

उपासते यथा बालाः मातरं क्षुधयार्दिताः ।
श्रेयस्कामो जगन्मातः प्रार्थये त्वां तथा श्रियै ॥ ४२ ॥

மஹாலக்ஷ்மியன் துதி - எவ்வாறு பசியை உடைய குழந்தை தனது அம்மாவிடம் சென்று உணவைக் கேட்கிறதோ அவ்வாறு இவ்வுலகத்தில் பொன்னையும் பொருளையும் விரும்புவர்கள் மஹாலக்ஷ்மியை வேண்டித் துதிக்கின்றனர். இவ்வுலகத்திற்கு அம்மாவாக விளங்கும் மஹாலக்ஷ்மியே என்னுடைய உயர்வின் பொருட்டு உன்னை பிரார்த்தனைச் செய்கிறேன்.

यथा स्तनन्धयान् माता शिशून् पाति हि शैशवे ।
तथा त्वं सर्वदा मातः सर्वेषां सर्वरूपिणी ॥ ४३ ॥

எவ்வாறு பாசத்தையுடைய அம்மா தனது குழந்தையை காப்பதன் பொருட்டு பாலை குடிப்பதற்கு தனது மார்பில் அனைத்துக் கொள்கிறாளோ அவ்வாறு தாங்கள் இவ்வுலகத்தை பல உருவத்தில் அம்மாவாக இருந்து காப்பாற்றுகிறீர்கள்.

मातृहीनो विना स्तन्यं कश्चित् जीवति दैवतः ।
त्वया हीनो जनः कोऽपि न जीवत्येव निश्चितम् ॥ ४४ ॥

ஒரு குழந்தை தனது அம்மாவினிடம் பால் குடிக்காமல் உயிர் வாழாதோ அவ்வாறு இவ்வுலகில் தாங்களின் அருள் இல்லாமல் எவரும் உயிருடன் இருக்க முடியாது.

प्रसन्ना सुप्रसन्ना च देवी मय्यऽम्बिके भव ।
सर्वसिद्धिं च विषयं देहि मह्यं सनातनी ॥ ४५ ॥

இவ்வுலகத்தின் தாயே - தாங்கள் ஒளிமயமானவள், ஆனந்தமயமானவள். என்னுடைய பிரார்த்தனையை ஏற்று என்னுடைய அனைத்து விஷயங்களிலும் மங்களத்தை உண்டுபண்ணுவாயாக.

अहं यावत्त्वया हीनो नाप्तः सौभाग्यमीसितम् ।
प्रभावश्च प्रतापश्च तव सर्वाधिकारिता ॥ ४६ ॥

நான் தாங்கள் இல்லாமல் எந்த ஸௌபாக்கியத்தையும், வேண்டியவற்றையும் அடையமுடியாது. ஆதலால் தாங்கள் தான் எனக்கு வீரத்தைக் கொடுத்து என்னுடைய புகழை திரும்பவும் அடையும்படிச் செய்யவேண்டும்.

जयं पराक्रमं सर्वं परमैश्वर्यमेव च ।
सोऽभीष्टं फलमाप्नोति त्वत्तः सत्यं न संशयः ॥ ४७ ॥

இவ்வுலகத்தின் தாயே - தங்களுடைய அருளால் தான் என்னுடை துயரங்கள் நீங்கி வீரத்தையும் செல்வத்தையும் எனக்கு வேண்டியவற்றையும் அதன் பலனையும் அடையமுடியும். இது உண்மை. இதில் எந்த சந்தேககமும் இல்லை.

मयि तिष्ठ तथा नित्यं यथेन्द्रादिषु तिष्ठसि ।
अभयं कुरु मे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ४८ ॥

ஓ அம்மா மஹாலக்ஷ்மி - தாங்கள் எவ்வாறு இந்திரன் போன்ற தேவதைகளிடத்தில் இருக்கின்றீர்களோ அவ்வாறு என்னிடத்திலும் இருந்து எனக்கு அருளைப் பொழியவேண்டும். அப்படிப்பட்ட ஹே தேவி மஹாலக்ஷ்மியே உங்களை நமஸ்கரிக்கிறேன்.

ॐ नमस्तेऽस्तु महामाये श्रीपीठे सुरपूजिते ।
शङ्खचक्रगदाहस्ते महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ४९ ॥

ஹே மாதா - ஓம்கார ரூபியும், மஹாமாயியும், ஸ்ரீபீடத்தில் வசிப்பவளும், அனைத்து தேவர்களும் வணங்கும் கைகளில் சங்கு சக்ரங்களையும் கதையையும் வைத்திருக்கும் மஹாலக்ஷ்மியே உங்களை வணங்குகிறேன்

नमस्ते गरुडारूढे कोलासुरभयङ्करि ।
सर्वपापहरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५० ॥

கருட வாஹனத்தில் விஷ்ணுவுடன் இருப்பவளும், கோலாஸுரன் என்கிற அசுரனைக் கொன்றவளும், அனைத்து பாபங்களையும் போக்கடிப்பவளுமான மஹாலக்ஷ்மியே வணங்குகிறேன்.

सिद्धिबुद्धिप्रदे देवि भुक्तिमुक्तिप्रदायिनि ।
मन्त्रपूते सदा देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५१ ॥

ஹே தேவி - தங்களுடைய மந்த்ரங்களைக் கூறுவதால் தாங்கள் எட்டு வித ஸித்தியையும், கூர்மையான அறிவையும், மோட்சத்தையும் தர வல்லவள். அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

सर्वज्ञे सर्ववरदे सर्वदुष्टनिवारिणि ।
सर्वसिद्धिप्रदे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५२ ॥

ஓ மஹாலக்ஷ்மி- அனைத்து சாஸ்த்ரத்தை அறிந்து ஸர்வக்ஞனாயும், அனைத்து வரத்தையும் அளிப்பவளாயும், அனைத்து துயரத்தையும் போக்கடிப்பவளாயும், அனைத்து ஸித்திகளையும் கொடுப்பவளாயும் இருக்கிறாய். அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

आद्यन्तरहिते देवि आदिशक्ते महेश्वरि ।
योगज्ञे योगसम्भूते महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५३ ॥

ஓ மஹாலக்ஷ்மி - தாங்கள் ஆரம்பமும் முடிவும் இல்லாதவள். இவ்வுலகில் முதன் முதல் சக்தியைப் பெற்றவள். கடுமையான யோகத்தினால் (தவத்தால்) யோகக்ஞி என்று பெயர் பெற்றுள்ள மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

स्थूले सूक्ष्मे महारौद्रे महाशक्ते महोदरे ।
महापापहरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५४ ॥

அணுவைக் காட்டிலும் சூட்சுமமானவளும், உக்கிரமானவளும், மஹா சக்தியை உடையவளும், இவ்வுலகமே வயிராகவும் அனைத்து பாபங்களை போக்குகின்ற மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

पद्मासनस्थिते देवि परब्रह्म स्वरूपिणि ।
परमेशि जगन्मातः महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५५ ॥

தாமரையில் அமர்ந்திருப்பவளும் ப்ரம்மத்தின் ரூபத்தை உடையவளும் உயர்ந்த ஈச்வரியும் இவ்வுலகத்திற்கு அம்மாவாகவும் திகழும் மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

स्वर्णाम्बरधरे देवि नानालङ्कारभूषिते ।
जगत्स्थिते जगन्मातः महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ५६ ॥

தங்கமயமான புடவையை அணிந்தவளும், பற்பல அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டவளும் இவ்வுலகின் பரம்பொருளாகவும் அம்மாவாகவும் திகழும் மஹாலக்ஷ்மிக்கு எனது வணக்கங்கள்.

प्रसीद श्रेयसां दोग्घ्रि अम्ब मे नयनाग्रतः ।
कृपादृष्ट्यावलोकस्व जगन्मातः प्रसीद मे ॥ ५७ ॥

ஹே மஹாலக்ஷ்மியே கருணையுடன் என் முன்னால் தோன்றி எனக்கு உயர்வைத் தருவாயாக. தங்களுடைய பார்வை என் மேல் படவேண்டும். (அதன் மூலம் நான் அனைத்தையும் அடைய வேண்டும்).

भवतीं शरणं गत्वा कृतार्थाः ते पुरातनाः ।
इति सञ्चिन्त्य मनसा त्वामहं शरणं गतः ॥ ५८ ॥

பழங்காலம் முதல் பெரியோர்களும் துன்பப்பட்டவர்களும் தங்களை சரண் அடைந்து அனைத்தையும் பெற்றுள்ளனர். அவ்வாறு நானும் மனதில் நினைத்து தங்களை சரணடைந்துள்ளேன்.

यदि स्यां तव पुत्रोऽहं माता त्वं यदि मामिका ।
दयापयोधरस्तन्यसुधाभिरभिषिञ्च माम् ॥ ५९ ॥

ஓ மஹாலக்ஷ்மி - உண்மையிலும் நான் தங்களுடைய பிள்ளையாகில் அம்மாவாகிய தாங்கள் என்னிடம் கருணை கொண்டு அருள் என்கிற பாலை என் மேல் மழை போல் பொழியுங்கள்.

दीनानामहमेवाग्र्यो दयालूनां त्वमग्रणीः ।
दयनीयो मदन्योऽस्ति तव कोऽत्र जगत्त्रये ॥ ६० ॥

தங்களின் முன் நான் மிகவும் துயரத்தை அடைந்தவன். ஆனால் தாங்களோ அனைத்து கடவுளைக் காட்டிலும் கருணை உடையவள். என்னைவிட இவ்வுலகில் யாருக்காவது துயரமுண்டா? அதே போல் தங்களை விட அருளைப் பொழிபவள் உண்டா?

प्रत्यक्षं कुरु मे रूपं रक्ष मां शरणागतम् ।
समागच्छ महालक्ष्मि समागच्छ ममाग्रतः ॥ ६१ ॥

ஓ மஹாலக்ஷ்மியே தங்களை சரணடைந்த என் முன் - தாங்கள் உருவத்துடன் வந்து என்னைக் காப்பாற்றுங்கள். ஓ மஹாலக்ஷ்மியே என் முன் வாருங்கள், என் முன் வாருங்கள்.

जैमिनिरुवाच

हरिप्रियां हृदि ध्यात्वा तपस्तेपेऽग्र आत्मना ।
स्तुवंस्तां निरहङ्कारो मौनव्रतमथास्थितः ॥ ६२ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனர் விஷ்ணுவிற்கு அன்பான மஹாலக்ஷ்மியை மனதில் நினைத்து கடுமையாக தவத்தை விடாமல் செய்தார். நான் என்கிற அஹம் பாவத்தை மறந்து மௌன விரதத்துடன் தவத்தை மேற்கொண்டார்.

शताधिकसहस्रेऽथ दिने देव्यकरोत् कृपाम् ।
ततः प्रीताऽथ जननी तस्य संयमनाद्रमा ॥ ६३ ॥

இவ்வாறு பொறுமையும் 1100 நாட்களுக்கும் மேல் அக்ரஸேனர் கடும் தவம் செய்தார். அதன் பின் மகிழ்ச்சியடைந்து மஹாலக்ஷ்மி தோன்றினாள்.

साऽऽगता सहसा तत्र देवी पीताम्बरावृता ।
शङ्खचक्रगदाहस्ता पद्मासनमुपास्थिता ॥६४ ॥

சங்கு சக்ரம் கதை ஆகிய ஆயுதங்களுடன், தாமரைப் புஷ்பத்தில் அமர்ந்து மஞ்சள் வஸ்த்ரத்தை அணிந்து மஹாலக்ஷ்மி அக்ரஸேனரின் முன் தோன்றினாள்.

नभो वितिमिरं कुर्वत्यम्बुदान् पाटयन्त्यपि ।
नादैर्दिशः पूरयन्ती महामेघरवोपमैः ॥ ६५ ॥

அந்த சமயம் அமாவைசையானதால் ஆகாசமும் அனைத்து திசைகளும் இருள்சூழ இருந்தது. மஹாலக்ஷ்மி தோன்றியவுடன் அனைத்து இடங்களும் ஆகாசமும் மேகங்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒயை எழுப்பிக்கொண்டு ஒளியுடன் திகழ்ந்தன.

दिव्यज्योतिस्सुसङ्कीर्णा द्योतमानाऽर्ककान्तिवत् ।
स्वयैव प्रभया तत्र द्योतिता सा सुरेश्वरी ॥ ६६ ॥

தேவர்களுக்கு ஈச்வரியாயும் அழகாயும் ஒளியுடனும் சூரியனைப் போன்று பிரகாசமாயும் அனைத்து திசைகளிலும் பிகாசிப்பவளுமான மஹாலக்ஷ்மி வந்தவுடன் அவ்விடம் அன்று பௌர்ணமியைப் போன்று ஒளியுடன் இருந்தது.

तारारूपाणि दृश्यन्ते यानीह द्युतिमन्ति वै ।
तनोति च सहस्राणि दीपवद् विप्रकर्षणाद् ॥ ६७ ॥

ஆகாயத்தில் ஆயிரக்கணக்கான மிளிர்கின்ற நக்ஷத்ரங்களைப் போன்று மஹாலக்ஷ்மியின் ஒளி இருந்தது. அந்த அனைத்து நக்ஷத்ரங்களும் பூமியில் எதிரொத்தது போல் இருந்தது.

अग्रसेनस्सविनयोऽपश्यद् दीप्तिमतीं च ताम्।
साऽऽदौ तत्र प्रभास्वान्ती रूपवत्यास तेजसाम्॥ ६८॥

அக்ரஸேனர் காந்தியுடனும் கருணையுடனும் அழகான உருவத்துடனும் மிளிக்கிற மஹாலக்ஷ்மியைப் பார்த்தான். வினயத்துடன் மஹாலக்ஷ்மியை வணங்கினான்.

ततो ददर्शाग्रसेनः साक्षात् तां परमेश्वरीम्।
स वशी सिद्धिमानासीत् हर्षादश्रुपरिप्लुतः॥ ६९॥

அக்ரஸேனர் பரமேச்வரியான மஹாலக்ஷ்மியை பார்த்த பிறகு தன்னுடை தவம் ஸித்தியடைந்ததை நினைத்து ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி மறுபடியும் மறுபடியும் வணங்கினான்.

हर्षेणोत्फुल्लनयनो न चातृप्यत तन्मनाः ।
अथाग्रसेनस्तां देवीमभ्यवन्दत सादरः॥ ७०॥

முழுமையான சந்தோஷமில்லாமல் சிரித்துக் கொண்டு கண் இமைக்காமல் மஹாலக்ஷ்மியின் அழகான
ஒளியையும் அருளையும் பார்த்துக்கொண்டு மறுபடியும் மஹாலக்ஷ்மியின் பாதத்தை வணங்கினான்.

संस्तूयमाना गन्धर्वैः सुरैः सिद्धैश्च चारणैः ।
पुष्पगन्धवहैः पुण्यैर्वायुभिश्चानुवीजिता॥ ७१॥

அந்த சமயத்தில் தேவர்களும் கந்தர்வர்களும் ஸித்த புருஷர்களும், தேவலோகப் பாடகர்களும் மஹாலக்ஷ்மியின் புகழைப் பாடினர். நறுமணப் புஷ்பங்கள் ஆகாயத்திருந்து பூமியில் கொட்டியது. அனுபவிக்கும் காற்று/மாலைத் தென்றல் பூமியில் வீசியது.

महालक्ष्मीरुवाच

तपसा परितुष्टाऽस्मि साऽहम् अग्र त्वयाऽधुना।
तां भुङ्क्ष्व सुकृतैर्लब्धां तपसा द्योतितां श्रियम्॥७२॥

மகிழ்ச்சியான மஹாலக்ஷ்மி அக்ரஸேனரிடம் கூறினாள் - ஓ குழந்தை அக்ரஸேனா - உன்னுடைய கடுமையான தவத்தால் நான் மகிழ்ந்தேன். உன்னுடைய தவத்தின் வமையால் என்னை வெற்றியடைந்தாய். உன்னுடைய தவத்தால் நீ புணிதமடைந்தாய். இனிமேல் நீ தனி சக்தியுடன் உன்னுடைய தருமத்தை கடைபிடிப்பாய் என்று மஹாலக்ஷ்மி கூறினாள்.

यस्त्विष्टो वरदाया मे प्रत्यक्षं तस्य तेऽभवम्।
यत्प्रार्थ्यते त्वया सर्वं परितुष्टा ददामि तत्॥ ७३॥

ஓ அக்ரஸேனா - உன்னுடைய ஸ்தோத்ரங்களால் உரிமையுடன் என்னை புகழ்ந்தாய். ஆதலால் தான் நான் இங்கு உன் முன் தோன்றினேன். உனக்கு இஷ்டமான வரங்களையும், எது வேண்டுமோ அவை அனைத்தையும் கேள், கொடுக்கிறேன் என்று மஹாலக்ஷ்மி கூறினாள்.

अग्रसेन उवाच

अर्थिनां कल्पवृक्षोऽसि वरदा सर्वदा शुभा।
वरदा यदि मे देवी वरार्हो यदि वाप्यहम्॥ ७४॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ அம்மா மஹாலக்ஷ்மி - தங்களுடைய பக்தனுக்கு தாங்கள் ஒரு கல்ப விருக்ஷம் (கல்ப மரம் வேண்டிய அனைத்தையும் கொடுக்கக்கூடியது). தாங்கள் எனக்கு வேண்டிய நான்கு புருஷார்த்தங்களை (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்) எனக்கு கொடுக்க முடியுமாகில் (அதற்கு நான் தகுதி பெற்றவனாகில்) அதை எனக்குக் கொடுத்தருளுங்கள் என்றான்.

त्वय्येव भक्तिरचला भूयाद् भूतेषु मे दया।
दिने दिने क्षणं चित्तं त्वयि संस्थं भवत्विति॥ ७५॥

ஓ உலக மாதாவே - நான் தங்களிடத்தில் எப்பொழுதும் அனைத்து காலத்திலும், ஏன் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் பக்தியுடன் இருந்து தங்களிடத்தில் அருளைப் பெறவேண்டும் என அருளுங்கள் என்றான்.

जाग्रत्स्वप्नेषु सर्वत्र त्वय्येवास्तु मनो मम ।
लोकबाधाप्रशमनं त्वं त्रिलोक्या अधीश्वरी ॥ ७६ ॥

என்னுடைய மனதில் அனைத்து நேரங்களிலும், நான் விழித்துக் கொண்டிருந்தாலும், தூங்கிக் கொண்டிருந்தாலும் எப்பொழுதும் தங்களுடைய அருளுடனே இருக்க வேண்டும். இம்மூன்று உலகத்தையும் தன்வசம் வைத்துள்ள லோக மாதாவே என்னுடைய மற்றும் எங்களுடைய ஆசை அனைத்தையும் நிறைவு செய்வாயாக என்றார்.

महादेवि महालक्ष्मि त्वां यः स्तौत्यब्धिसम्भवे ।
स त्वया न परित्याज्यो द्वितीयोऽस्तु वरो मम ॥७७ ॥

தாங்கள் தான் இவ்வுலகில் உயர்ந்த தேவி. எவன் ஒருவன் தன்னம்பிக்கையுடன் தங்களை பூஜை செய்கிறானோ அல்லது எப்போதாவது பூஜை செய்தாலும் அவனுடைய ஆசைகளை அடையும்படியாகச் செய்வாயாக. அவனை விட்டுத் தாங்கள் பிரியாமல் இருந்து காத்தருள வேண்டும் என என்னுடைய இரண்டாவது வரனை விண்ணப்பிக்கிறேன் என்றார்.

जयेयं लोभमोहौ च क्रोधं चाऽहं सदाश्रये ।
चित्ते तपसि सत्ये च मनो मे सततं भवेत् ॥ ७८ ॥

ஹே லோக மாதாவே - எனக்கு வேண்டிய அனைத்தையும் கொடுக்கவேண்டும். என்னிடமுள்ள துயரம், பேராசை, கெட்ட எண்ணம், கோபம் போன்ற அனைத்தையும் நீக்கி என்னிடம் பரிவு கொள்வாயாக. மேலும் நான் எப்பொழுதும் தருமத்தில் ஈடுபட்டு, நீதியுடனும், அன்புடனும் இருக்க அருளுங்கள் என்றார்.

महालक्ष्मीरुवाच

वत्स तेऽर्थाच्च कामाच्च ह्यानृशंस्यं परं मतम् ।
संसिद्ध्यै ते यश्च वरो देयो मे सोऽभिवाञ्छितः ॥ ७९ ॥

மஹாலக்ஷ்மி கூறினாள் - ஓ குழந்தை அக்ரஸேனா - இவ்வுலகத்தின் நன்மைக்காக உன்னுடையச் செயல் தருமம் ஆகிய ஒவ்வொருச் செயலும் உயர்ந்தது. நீ கேட்ட அனைத்தையும் அடைந்திட அருள்கிறேன் என்றாள்.

जैमिनिरुवाच

इत्युक्त्वाऽन्तर्दधे लक्ष्मीः साक्षाल्लोकविभाविनी ।
अग्रसेनः प्रहृष्टस्तु गार्ग्याश्रमम् उपेयिवान् ॥ ८० ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - மஹாலக்ஷ்மி அக்ரஸேனனுக்கு அருளைக் கொடுத்து விட்டு மறுபடியும் வைகுந்தத்திற்கு சென்றுவிட்டாள். மஹாலக்ஷ்மியின் அருளைப் பெற்ற ஸ்ரீஅக்ரஸேனர் கர்க்யரின் ஆச்ரமத்தை அடைந்தார்.

इदं यः स्तवनं लक्ष्म्याः सर्वपापविमोचनम् ।
यः पठेद् भक्तिसंयुक्तस्तस्य नश्यति किल्बिषम् ॥ ८१ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இந்தப் பகுதி மஹாலக்ஷ்மியைப் பற்றி கூறுகிறது. இதைப் படிப்பதால் அனைத்து பாபங்களிருந்தும் விடுபடலாம். எவன் ஒருவன் பக்தியுடன் படிக்கிறானோ அவனுடைய பாபங்கள் அனைத்தும் போக்கடிக்கப்படுகிறது.

यस्य लक्ष्म्यां भक्तिरस्ति निश्चला भावना च सा ।
श्रियो न विच्युतिस्तस्य गृहे यावत्कुलाश्रयम् ॥ ८२ ॥

சஞ்சலமற்ற ஒரு மனதுடன் எவன் ஒருவன் இங்கு கூறிய லக்ஷ்மியின் ஸ்தோத்ரத்தை பக்தியுடன் படிக்கிறானோ அவனும் அவனுடைய குலமும் மஹாலக்ஷ்மியின் அருளால் அனைத்தையும் அடைகின்றது. அவனை விட்டு மஹாலக்ஷ்மி விலகுவதில்லை.

सर्वकामप्रदो ह्येष स्तवोऽग्रेण प्रकीर्तितः ।
यः पठेत् स समान् कामानवाप्नोति न संशयः ॥ ८३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - முதல் மஹாலக்ஷ்மியை வேண்டுவதால் நமக்கு வேண்டியவற்றை அடையலாம். இங்கு கூறியபடி மஹாலக்ஷ்மியை பூஜை செய்வதால் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி விடலாம். இதில் எவ்வித ஸந்தேகமுமில்லை.

सत्यं दिव्यं च परमम् ऋषीणां वचनं यथा।
यश्चैतत् सम्पठेत् श्रूयात् सर्वार्थान् स प्रविन्दति ॥ ८४ ॥

இது ரிஷிகளால் கூறப்பட்டு ஸ்ரீஅக்ரஸேனரால் பின்பற்றப்பட்டு பலனை அடைந்த உண்மையான உயர்ந்த மஹாலக்ஷ்மி துதியாகும். இதை படிப்பதாலும், படிப்பதை கேட்பதாலும் இவ்வுலகில் மஹாலக்ஷ்மியின் அருளால் அனைத்து செல்வத்தையும் அடைகின்றனர்.

आधिव्याधिभयं चैव पूजिता शमयिष्यति।
भविष्यति महालक्ष्मीर्वरदा कामरूपिणी ॥ ८५ ॥

ஓ ஜனமேஜயா - இங்கு கூறியபடி எவன் ஒருவன் மஹாலக்ஷ்மியை பூஜிக்கிறானோ அவன் வேண்டிய ஆசைகளை அடைவதுமட்டுமின்றி அவனுடைய துயரங்கள், மாயை அனைத்தும் விலகி பயமற்ற வீரனாக ஆகிறான்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते अष्टमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் எட்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

ஒன்பதாவது அத்யாயம்

வீரம்

ஜைமினிருவாச

दत्त्वा वरान् महालक्ष्मीरग्रसेने प्रसादिनी ।
यथा तथाऽद्भुतं कृत्स्नं व्याख्यातं हि मयाऽधुना ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - என்னால் எவ்வாறு மஹாலக்ஷ்மி ஸ்ரீஅக்ரஸேனரின் முன் தோன்றி அற்புதமான அருளைப் பொழிதாள் என்று சொல்லப்பட்டதோ அவ்வாறே உணக்கும் மஹாலக்ஷ்மி அருள் கிடைக்க வேண்டும்.

शृण्वग्रसेनस्य कर्म वरयुक्तं विवर्धये ।
यथाग्निः पवनोध्दूतः सुसूक्ष्मोऽपि महान् भवेत् ॥ २ ॥

நான் இப்போது மஹாலக்ஷ்மியிடம் இருந்து அருளையும் வரத்தையும் பெற்ற ஸ்ரீஅக்ரஸேனன் எவ்வாறு அதைப் பயன் படுத்திக்கொண்டான் என்பதைக் கூறுகிறேன். அது எவ்வாறு இருந்தது என்றால் ஒரு தீப்பொறி காற்றின் உதவியால் பெரிதாகி பரவிக்கொண்டே போகிறதோ அவ்வாறு கர்க்யரின் ஆச்ரமத்தில் அடைக்கலம் அடைந்த அக்ரஸேனன் மஹாவீரனாகவும் அரசனாகவும் ஆனான்.

सोऽभिगम्य मुनिं नत्वा वन्दनीयमुवाच ह ।
प्राप्तः श्रियो वरो ह्येष तव मेऽनुग्रहः परः ॥ ३ ॥

.மஹாலக்ஷ்மியிடம் அருளைப் பெற்ற பின்பு அக்ரஸேனன் மகிழ்ச்சியுடன் மஹரிஷி கர்க்யரிடம் சென்று வணக்கினான். ஓ மஹாமுனி அவர்களே தாங்கள் கூறியபடி நான் மஹாலக்ஷ்மியை பூஜை செய்து தியானித்து அருளைப் பெற்றேன் என்றான்.

गार्ग्य उवाच

एतत् कर्मफलं वत्स तपसश्च फलं ध्रुवम् ।
सर्वार्थसिद्धिं लभते कृते सुकृतकर्मणि ॥ ४ ॥

மஹரிஷி கர்க்யர் கூறினார் - ஹே குழந்தாய் - உன்னுடைய கடுமையான தவ வலிமையாலும் தருமத்தாலும் புண்ணியத்தாலும் தான் மஹாலக்ஷ்மியின் அருள் கிடைத்தது. உண்மையிலும் ஒரு மனிதன் தான் விரும்பியதை தன்னுடைய புண்ணியத்தால் தான் அடைகிறான்.

अपुत्राणां यथा लोका भवन्ति न सुखप्रदाः ।
नृपतीनाममन्त्राणां चिरं राज्यं न सुस्थिरम् ॥ ५ ॥

ஓ குழந்தாய் - பிள்ளை இல்லாதவர்கள் எவ்வுலகிலும் சுகத்துடன் இருந்ததாக சரித்திரம் இல்லை. அவ்வாறு சரியான மந்திரிகள் இல்லாமல் ஒரு அரசன் அரசை ஆளமுடியாது.

न यशः पुण्यहीनानां न सुखं परिवादिनाम् ।
विना पराक्रमं कोऽपि यशस्वी न भविष्यति ॥ ६ ॥

பாவத்தைச் செய்தவன் புகழை அடைந்ததில்லை. பொய்யை பேசுபவன் நன்மையை அடைவதில்லை. அதே போல் வீரமற்றவன் புகழை அடைவதில்லை.

प्राप्स्व वत्स परां कीर्तिम् इह लोके सुखं स्थिरम् ।
दिवं प्राप्ता नृपाः कृत्वा परं लोकहितक्रियाम् ॥ ७ ॥

ஓ குழந்தை அக்ரஸேனா - இவ்வுலகில் நீ தருமத்தின் படி நடந்து உயர்ந்த புகழை அடைந்து சுகத்துடன் இருக்கப்போகிறாய். அரசனாகி மக்களுக்கு நன்மையைச் செய்த அரசர்கள் வீர மரணத்தை அடைந்தாலும் அவர்களுடைய புகழ் இவ்வுலகில் பேசப்படுகிறது.

जैमिनिरुवाच

एतच्छ्रुत्वा वचस्तस्य गार्ग्यस्यामिततेजसः ।
उवाच दीनया वाचा त्वग्रसेनो ह्यनिर्वृतः ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - இராஜா ஜனமேஜயா - சிறந்த மஹரிஷி கர்க்யரின் உபதேசத்தைக் கேட்ட பின்பு மறுபடியும் கர்க்யமுனிவரை வணங்கி ஸ்ரீஅக்ரஸேனர் தான் வீடு பேறு (முக்தி) அடைவது குறித்து கேட்டார்.

अग्रसेन उवाच

न वित्तं विद्यते मेऽत्र राज्यं वित्तं विना न वै ।
साहाय्यं नैव पश्यामि सुहृदः समरे हताः ॥ ९ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ மஹாமுனிவரே என்னிடம் செல்வம் இல்லை, செல்வம் இல்லாமல் எவ்வாறு இராஜ்யத்தை அடையமுடியும். நான் யாரிடமிருந்து உதவியைப் பெறமுடியும். என்னுடைய நண்பர்களும் மஹாபாரதப் போரில் மாண்டுவிட்டனர்.

स्वजनप्रातिकूल्येन वर्तितव्यं किमर्थिना ।
किमत्रानन्तरं कार्यं तन्मे गदितुमर्हसि ॥ १० ॥

எனக்கு வேண்டிய உறவினர் குந்தஸேனரும் எதிரியாகிவிட்டார். எவ்வாரு நான் மறுபடியும் இராஜ்யத்தை அடையமுடியும்?. இவ்வாறு இருக்கும் சூழ்நிலையில் நான் இதன் பிறகு என்ன செய்யவேண்டும் என்பதை விளக்குங்கள்.

जैमिनिरुवाच

ततोऽब्रवीद् गार्ग्यमुनिरग्रसेनं हसन्निव ।

ஜைமினி கூறினார் - இவ்வாறு மனம் உடைந்து பேசும் ஸ்ரீஅக்ரஸேனனை பார்த்து கர்க்ய முனிவர் சிர்த்தார். மேலும் அக்ரஸேனரை தேற்றினார்.

गार्ग्य उवाच

यथा चिन्तामणिं दत्त्वा कुन्दनेन तथा कृतम्॥ ११ ॥

கார்க்யர் கூறினார் - உன்னுடை சிறிய தகப்பன் குந்தஸேனன் உனக்கு உயர்ந்த சிந்தாமணி என்கிற சிறந்த விலைமதிக்கமுடியாத (வைர) நவரத்ன கல்லை கொடுத்து விட்டு அவன் நவரத்தினமில்லாத கண்ணாடி கல்லை சிந்தாமணிக்கல் என நினைத்து வைத்துக்கொண்டுள்ளான் என்றார்.

यथा बीजं विना क्षेत्रमुप्तं भवति निष्फलम्।
तथा पुरुषकारेण विना दैवं न सिध्यति ॥ १२ ॥

ஓ குழந்தாய் - எவ்வாறு விதை இல்லாமல் பூமியில் மரம் வராது - வளராதோ அதே போல் மஹாலக்ஷ்மியின் அருள் இல்லாமல் (அரசை மட்டும் வைத்துக்கொண்டு) என்ன செய்யமுடியும்?. அதாவது மஹாலக்ஷ்மியே அருள் புரியவில்லை எனில் மற்ற தேவதைகள் எவ்வாறு அருள்புரிவர்.

कृती सर्वत्र लभते प्रतिष्ठां दैवसंयुताम्।
प्राप्तं न कर्मणा सर्वं न दैवादकृतात्मना ॥ १३ ॥

ஓ குழந்தை - ஒரு வீரன் தன்னுடைய முயற்சியால் தனது ஆசையின்படி வெற்றியை அடைந்தாலும் அது கடவுளின் அருளாள் தான் கிடைந்திருக்க முடியும். அதே போல் கடவுளின் அருள் இருந்தாலும் அவன் முயற்சியைச் செய்யவேண்டும். முயற்சியில்லை எனில் எதுவும் நடக்காது.

अर्थो वा मित्रवर्गो वा ह्यैश्वर्यं वा कुलान्वितम्।
श्रीरन्यद् दुर्लभं भोक्तुं तथैवाकृतकर्मभिः ॥ १४ ॥

ஒவனுடைய நற்செயலால் மட்டுமே அவனுக்கு செல்வம், நண்பர்கள், தருமச் செயலால் கிடைக்கும் புண்ணியம் (ஐச்வரியம்), தான் பிறந்த உயர்ந்த குலம் ஆகியன கிடைக்கின்றன. செய்யக்கூட செயல்களைச் செய்தால் இவை அனைத்தையும் அடையமுடியாது.

कृतेऽपि पुरुषार्थे तद् दैवमेवानुवर्तते ।
न दैवमकृते क्वापि कस्यचिद् दातुमर्हति ॥ १५ ॥

ஒருவன் தருமத்தைச் செய்வதால் கிடைப்பதையே கடவுளும் பின் தொடர்ந்து அருளைப் பொழிகிறது. அதே போல் ஒருவன் அதருமத்தைச் செய்தால் அவனுக்கு கிடைக்க வேண்டியவைக் கூட கிடைப்பதில்லை.

श्रुतवान् व्यासमुखतो मरुत्तस्य महाध्वरम् ।
प्राक्केवलं शतं यज्ञान् स कृत्वा लब्धवान् वरम् ॥ १६ ॥

ஓ குழந்தை - அக்ரஸேனா - முன்னொரு காலத்தில் இராஜா மருத் என்பவர் நூறு யாகங்களைச் செய்து வரத்தையும் பெற்றார். அவருடைய கதையை நான் வியாசர் கூறக் கேட்டேன். அதைக் கூறுகிறேன் கேட்கவும் என்றார்.

पुरा क्वाऽपि मरुत्तेन यागः एकः कृतोग्र वै ।
दत्त्वा सकाञ्चनां भूमिं द्विजास्तत्राभितोषिताः ॥ १७ ॥

ஒரு சமயம் இந்த காட்டில் இராஜா மருத் ஒரு யாகத்தைச் செய்தார். யாகம் முடிந்தவுடன் யாகம் செய்த பிராம்மணர்களுக்கு இந்த ஆச்ரமத்தின் அருகில் இருக்கும் தங்கமயமான மலையை தக்ஷிணையாக வெட்டி எடுத்துக் கொடுத்தார்.

सत्यसन्धास्थितो यज्ञः सर्वयज्ञे विशिष्यते ।
जातः सूर्यकुले तस्मिन् कुलदीपो भवानपि ॥ १८ ॥

அதாவது மருத் இராஜா நூறு யாகங்களைச் செய்தான். இதனால் பயந்துபோன இந்திரன் பிருஹஸ்பதியை யாகத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என ஆணையிட்டான். இருப்பினும் மருத் பிரஹஸ்பதியின் ஸஹோரனான ஸம்வர்தனை ரித்விக்காக வைத்துக்கொண்டு நூறு யாகங்களைச் செய்து முடித்தான். அப்படிப்பட்ட சூரிய வம்சத்தில் வந்தவன் நீ. அது உனக்குத் தெரியுமா?.

समर्पितं धरायां तत् पतितं काञ्चनं महत् ।
यन्नेतुमसमर्थास्ते विप्रा आसन् नृपार्पितम् ॥ १९ ॥

ஓ அக்ரஸேனா - மருத் இராஜாவால் யாகம் செய்த பிரம்மணர்களுக்கு நிறைய பொக்கிஷங்கள் (தங்கம்) அளிக்கப்பட்டன. பிராம்மணர்கள் தங்களால் இயன்றளவு எடுத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் தங்களால் எடுத்துக்கொண்டு போகமுடியால் விட்டுவிட்டுப் போனவையே நமது ஆச்ரமத்தின் அருகில் புதைக்கப்பட்டுள்ளது. (வேண்டுமாகில் உன்னுடைய புண்ணியக் குறிக்கோளுக்காக எடுத்துக்கொள்) என்றார்.

अग्रसेन उवाच

धन्यो मरुत्तो राजाऽसौ येन यागस्तथाविधः ।
कृतो बहुसुवर्णाढ्यो यत्र विप्राः सुतर्पिताः ॥ २० ॥

அக்ரஸேனர் கூறினார் - தருமத்தில் கூறியபடி யாகங்களைச் செய்த மருத் இராஜா என்னை ஆசீவதிக்கட்டும். நிறைய தங்கஙகளை உடைய அவர் ப்ராம்மணர்களுக்கு வாரி வழங்கியுள்ளார்.

त्यक्तं विप्रैः सुवर्णं यत् कथं तदहमानये ।
ब्राह्मणानां विशेषेण वित्तं दुःखतरं मम ॥ २१ ॥

பிராம்மணர்களால் விட்டு விட்டு போன தங்கத்தை எப்படி நான் எடுத்துக்கொள்ளமுடியும். க்ஷத்திரியர்களின் தருமம் பிராம்மணர்களுக்கு கொடுக்க வேண்டும். அவர்களிடம் இருந்து எடுத்துக்கொள்ளக்கூடாது. எதிர்கலத்தில் இது எனக்கு துயரத்தை அளிக்கும் என்றார்.

मत्तः परो न निन्द्योऽन्यो भविष्यति नराधिप ।
ब्रह्मस्वे यस्य नृपतेर्मतिर्भवति दारुणा ॥ २२ ॥

நான் அந்த தங்கத்தை பயன்படுத்தினால் இவ்வுலகமும் அதிலுள்ளவர்களும் என்னை இழிவாகப் பேசுவர். பிராம்மணர்களுடைய சொத்தால் எனது அறிவும் மந்தமாகிவிடும்.

ग्रहणान्मज्जयत्येनं शिलेवाम्भसि दुस्तरा ।
प्रहसिष्यन्ति मां विप्रा मम वित्ते तथाविधे ॥ २३ ॥

ஹே மஹரிஷி - ஒரு அரசனின் எண்ணம் பிராம்மணர்களுடைய செல்வத்தை அடையவேண்டி நினைந்தால் அது நன்மையைக் கொடுக்காது. தண்ணீர் விழுந்தவன் உயிரை விடுவது போல் ஆகிவிடும். ஆனால் அந்தச் செல்வத்தைக் கொண்டு நாட்டுக்கு ஏதேனும் செய்தால் அது தனிச் சிறப்பையும் மதிப்பையும் தரும்.

तस्मान्न कुत्सितं कर्म करिष्यामि ध्रुवं मुने ॥ २४ ॥

ஹே முனிவரரே - தாங்கள் தயைகூர்ந்து சொல்லுங்கள், நான் எவ்வாறு அப்படிப்பட்ட தருமமற்ற வேலையைச் செய்வது? என்றார்.

धिङ् मदीयमिदं राज्यं यत्र नाम्बा न चानुजः ।
एका त्रपा मे महती मुञ्चतो मेऽश्रु शोकजम् ॥ २५ ॥

மேலும் என்னுடைய தாய் இல்லாமலும் ஸஹோதரன் சௌர்யஸேனன் இல்லாமலும் நான் எவ்வாறு இராஜ்யத்தை அடைவது?. அவர்கள் ஏதோ ஓரிடத்தில் வேதனையுடன் அழுது கொண்டிருக்கையில் நான் அரசை அடைந்தால் அது எனக்கு மிகவும் இழிவாகும். நான் எவ்வாறு இந்த இழிவான வேலையைச் செய்வது.

सम्मार्जयितुमेकां हि न समर्थोऽस्मि तां त्रपाम् ।
द्वितीयैषा महाभाग विप्रद्रव्याद् भविष्यति ॥ २६ ॥

என்னுடைய தாயையும் ஸஹோதரனையும் நான் அடையாமல் இருப்பதையே ஒரு இழிவாக நினைக்கிறேன். அவ்வாறு இருக்கையில் மற்றொரு தவறான (குறைவானச்) செயலை எவ்வாறு செய்வது.

गार्ग्य उवाच

धन्योऽसि नृपशार्दूल सम्यगुक्तं त्वया वचः।
धरास्वं प्रति यां शङ्कां प्रकरोषि वृथा हि सा ॥ २७ ॥

கர்க்யர் கூறினார் - ஹே ராஜன் - ஆசிகள் உண்டாகட்டும். உன்னால் கூறப்பட்டவை அனைத்தும் உண்மையானவையே ஆகும். வெகு நாட்களுக்கு முன் பிராம்மணர்களால் விடப்பட்ட இந்த செல்வத்தை எடுத்துக்கொள். இதனால் எவ்வித குற்றமும் இல்லை. உன்னுடைய மனதில் உள்ள சந்தேகம் உண்மையல்ல என்றார்.

यदा त्यक्तं धनं तैर्हि स्वाम्यं तेषां तदा गतम्।
एष यत्नो मानवैरे न दोषस्ते भविष्यति ॥ २८ ॥

ஓ அக்ரஸேனா - எப்போது பிராம்மணர்கள் தங்களது தங்கத்தை எடுத்துப்போவதற்கு முடியாமல் இங்கு விட்டுச் சென்றனரோ அப்போதே அந்தச் செல்வம் அவர்களுடையது அல்ல என்று தீர்மானமாகிவிட்டது. ஆதால் அந்த தங்கத்தை பூமியிருந்து வெட்டி எடுத்துப் பயன் படுத்திக்கொள். அதனால் ஒரு பாவமும் வராது என்றார்.

रामेण भूः पुरा दत्ता कश्यपाय महात्मने।
कथं गृह्णन्ति च महीम् राजानः पापभीरवः ॥ २९ ॥

தருமத்திற்காகவும் தவத்திற்காகவும் மஹாத்மா கச்யபரால் அளிக்கப்பட்ட பூமியை ஏற்றுக்கொண்ட பரசுராமருக்கு எந்த இழிவும் ஏற்படவில்லையே. அதே போல் தான் தற்சமயம் உன்னுடைய நிலையும். நாம் எவ்வாறு பரசுராமர் செய்ததை தவறு பாவம் என்று கூறமுடியும்?. அதே போல் நீ செய்யப்போவதை பாவம் என்று எவ்வாறு கூறமுடியும்?.

दैत्यैर्जिता धरा चेयं दैत्येभ्यः क्षत्रियैर्जिता ।
गतं स्वाम्यं च विप्राणां तस्माद् दोषो न विद्यते ॥३० ॥

உண்மையாலும் ஒரு சமயம் இந்த பூமியை (பேய்) அசுரர்கள் வென்றனர். அதன் பிறகு அவர்களிடம் போரிட்டு க்ஷத்ரியர்கள் வென்றனர். ஆதலால் பிராம்மணர்களிடமிருந்தது அனைத்தும் க்ஷத்ரியர்களிடம் வந்துவிட்டது. ஆதலால் பிராம்மணர்கள் விட்டுப்போனதை எடுத்துக்கொள்வதால் எந்த இழிவும் கிடையாது, இழிவும் ஏற்படாது.

यदा धराधिपत्यं हि प्राप्तं येन नृपेण च ।
तदा तस्याखिलं वित्तं जायते नात्र संशयः ॥३१ ॥

ஓ ராஜன் - ஒரு தேசத்தை இராஜா வென்றால் (அரசனானால்) அந்த தேசத்தின் பூமியும், செல்வமும், பூமியின் அடியில் இருக்கும் செல்வமும் அனைத்தும் அவனையே உரித்தாகும்.

मन्त्रग्रामैः सुविहितैरौषधैश्च सुयोजितैः ।
यत्नेन चानुकूलेन दैवमप्यनुलोम्यते ॥ ३२ ॥

தன்னுடைய முயற்சியால் எவன் ஒருவன் மந்திரத்தினாலும் மருந்தினால் தனது சிந்தனையாலும் தருமத்தைச் செய்ய விரும்புகிறானோ அவனுக்கு கடவுளும் அருளைக் கொடுப்பார்.

तद् धनं त्वं समानीय कुरु राज्यस्य रक्षणम् ।
इति ब्रुवाणो गर्गस्तम् आशिषाऽग्रमयोजयत् ॥ ३३ ॥

ஆதலால் எவ்வித சந்தேகமும் இல்லாமல் பூமியின் அடியில் இருக்கும் செல்வத்தை எடுத்துக் கொண்டு அதன் மூலம் உன்னுடைய அரசை அடைவாயாக என்றார்.

ममाश्रमसमीपे हि मरुत्तस्यास्ति सा हि भूः ।
राजन् सा वालुकापूर्णा दिशामावृत्य पश्चिमाम् ॥ ३४ ॥

மஹரிஷி கர்க்யர் தங்கம் எந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறினார். அதாவது இந்த ஆச்ரமத்தின் மேற்கு பகுதியில் மணல் போட்டு மூடப்பட்டிருக்கும் இடம் தான் தங்கத்தை புதைத்து வைத்திருக்கும் இடமாகும் என்றார்.

आदौ प्राप्ता श्रीरियं ते ह्यभिषिक्तोऽनया भव ।
पुरस्थान्यन्यरम्याणि मृगयस्व यथाक्रमम् ॥ ३५ ॥

ஹே ராஜன் - முதன் முதல் உன்னை இந்த ஆச்ரமத்தின் இடத்தில் இராஜாவாக முடிசூட்டி விடுகிறேன். அதன் பின்பு ஆச்ரமத்தில் இருக்கும் இராஜ்யலக்ஷ்மியான தங்கத்தை எடுத்து அதன் மூலம் உங்களுடைய அரசை அமையுங்கள்.

जैमिनिरुवाच

अथाभ्यषिञ्चदग्रं तं वेदविद्भिर्द्विजैर्मुनिः ।
अभिषिक्तोऽभिरेजेऽथ श्रिया युक्तो महाबलः ॥ ३६ ॥

ஜைமினி கூறினார் - வேதம் படித்தவர்களான பண்டிதர்களாலும் வித்வான்களாலும் முனி ஜனங்களாலும் ஸ்ரீஅக்ரஸேனர் அந்த ஆச்ரமத்தில் அரசனாக (இராஜாவாக) முடி சூட்டப்பட்டார். முடி சூட்டியவுடன் அக்ரஸேனன் மஹாலக்ஷ்மியுடன் பெரிய பலத்தை அடைந்தவன் ஆனார்.

प्राप्यामितां धरां राजा तत्र सम्पूजितस्तदा ।
सभाज्यमानो विप्रैश्च जयशब्दोत्तरेण च ॥ ३७ ॥

அதன் பிறகு ஸ்ரீஅக்ரஸேனர் அந்த பூமிக்கு அரசனாக ஆனார். அங்கு அனைவராக்கும் மரியாதைக்கு உரியவரானார். அங்கு கூடியிருந்தவர்களும் பிராம்மணர்களும் வெற்றி (ஜய) குரலை எழுப்பி மகிழ்ந்தனர்.

तर्पयित्वा महादेवम् आज्येन विधिवत् तदा ।
मन्त्रसिद्धं चरुं कृत्वा पुरोधाः स ययौ किल ॥ ३८ ॥

தருமத்தில் கூறியபடி ஹோமங்களை நெய்யால் செய்து கடவுள் சிவனை சந்தோஷப்படுத்தினார். ஆதலால் அக்ரஸேனன் கடவுள்களின் அருளையும் அடைந்தார்.

सर्वं स्विष्टतमं कृत्वा विधिवद् वेदपारगः ।
किङ्कराणां ततः पश्चाच्चकार बलिमुत्तमम् ॥ ३९ ॥

சிறந்த வேத பண்டிதர்கள் வேதங்களை முழங்க ஸ்ரீஅக்ரஸேனன் அனைத்து யாகங்களையும் செய்து அனைத்து தேவதைகளின் அருளையும் பெற்றான். ரிஷிகளும் சிவ கணங்களின் வேத மந்திரங்களைக் கூறி அவர்களையும் மகிழ்ச்சி அடையச் செய்தனர்.

कृत्वा पूजां तु रुद्रस्य गणानां चैव सर्वशः ।
ययौ गर्गम् पुरस्कृत्य नृपो रत्ननिधिं प्रति ॥ ४० ॥

கணபதியையும், சிவனையும் முழுமையாக வழிபட்டு முடித்தவுடன் மஹரிஷி கர்க்யர் முன் செல்ல அவருடன் ஸ்ரீஅக்ரஸேனன் (வெகு நாட்களாக) தங்கம் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்தான்.

तां धरां खानयामास बालुकार्णवपूरिताम् ।
प्रत्यपद्यत रत्नानि विविधानि वसूनि च ॥ ४१ ॥

மணலால் மூடப்பட்டிருந்த அந்த பூமியை அவர்கள் தோண்டினர். அதிருந்து விலைமதிப்பற்ற பலகோடி ரத்தினங்களும், நகைகளும், தங்கமும் கிடைத்தன.

जैमिनिरुवाच

तस्मिन् बालुवनस्थाने सा पुर्याग्रेयनामिका ।
अग्रसेनेन संसृष्टा रम्या पुण्यपुरोत्तमा ॥ ४२ ॥

ஜைமினி கூறினார் - மரங்களும், மணலும் நிறைந்த அந்த இடத்தில் இராஜா அக்ரஸேனன் அழகான ஒரு நகரத்தை ஏற்படுத்தினார். அது சிறந்த புண்ணிய பூமியானது. அதைக் காட்டிலும் உயர்ந்த புண்ய பூமி இல்லை. அதற்கு **ஆக்ரேயம்** என்ற பெயரையும் சூட்டினார்.

गर्गः प्रादाद् वरं तस्मै राजपुत्राय धीमते ।
ददौ चास्याक्षयं वित्तं शत्रुभिश्चापराजयम् ॥४३ ॥

ஜைமினி கூறினார் - ஞானவானான ஜனமேஜயா - மஹரிஷி கர்க்யரின் ஆசியால் ஸ்ரீஅக்ரஸேனன் அழிவற்ற செல்வத்தை அடைந்து தனது எதிகளை வென்று யாராலும் வெல்லமுடியாத சிறந்த அரசனாகத் திகழ்ந்தான்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते नवमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பத்தாவது அத்யாயம்

ஆதாரம் சேகரித்தல்

ஜைமினிருவாச

जयस्य हेतुः सिद्धिर्हि कर्म दैवं च संश्रितम्।
संयुक्तो हि बलैः कश्चित् प्रमादान्नोपजायते ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஒருவனுக்கு மனதில் தைரியமும், வெற்றியும் வரவேண்டுமெனில் அவன் செய்கிற தருமச் செயலும், கடவுளின் அருளும் தான் முக்கியமாக இருக்க வேண்டும். அதாவது ஒருவனுக்கு பலம் இருந்தாலும், செல்வம், நல்ல அறிவு படைத்திருந்தாலும் அவன் மனது தரும வழியிலும் நல்ல எண்ணங்களையும் இல்லையெனில் அவன் வெற்றியை அடையமுடியாது.

मणिमुक्तास्वर्णरत्नैः पूरितान् घटकान् बहून्।
अग्रसेनः समादाय सहवित्तो ययौ मुनिम्॥ २ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் அந்த ஆச்ரமத்தின் அருகிருந்து பற்பல குடங்களில் நிறம்பிவழியுமளவிற்கு விலை உயர்ந்த ரத்தினங்களையும் தங்கத்தையும், மணிகளையும் எடுத்துக்கொண்டு மஹரிஷி கர்க்யரின் ஆச்ரமத்திற்கு வந்தார்.

सोऽभ्यगच्छत् मुनिर्गार्ग्यः सम्मुखे चाभिनन्दितः।
दीपदीपितपात्रेण ऋषेर्भार्याऽप्यपूजयत्॥ ३ ॥

மஹரிஷி கர்க்யர் ஆனந்தத்துடன் ஸ்ரீஅக்ரஸேனரை ஆசீர்வதித்தார். மஹரிஷி கர்க்யரின் மனைவி கார்க்கி ஸ்ரீஅக்ரஸேனரை தீபத்துடன் மங்கள ஆரத்தியையும் எடுத்தார். (அக்ரஸேனரின் தாய் இடத்தில் கார்க்கி ஆரத்தி எடுத்து ஆசீர்வதித்தாள்).

मातृरूपा ऋषेर्दाराः पितृरूपो महामुनिः ।
नमस्कृतौ पूतपादौ राज्ञा ययतुराश्रमम् ॥ ४ ॥

தாயின் இடத்தில் மஹரிஷியின் மனைவி கார்க்கியும், தகப்பனார் இடத்தில் மஹரிஷி கர்க்கரும் இருந்துக் கொண்டு அக்ரஸேனரை வரவேற்று ஆசீர்வதித்தனர். பின்பு அனைவரும் ஆச்ரமத்தை அடைந்தனர்.

महोत्सवं तदा चक्रुराश्रमे तत्र वासिनः ।
उच्चैर्जगुर्नाम हरेः पदैर्ललितवर्त्तनाः ॥ ५ ॥

ஆச்ரமத்தில் இருப்பவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கடவுள் ஹரியினுடைய பெயரை உரத்த குரல் சொல்க்கொண்டு பெரிய திருவிழாவைக் கொண்டாடினார்கள்.

सुवर्णरत्नवासोभिराश्रमस्थांश्च याचकान् ।
अग्रसेनो द्विजान् सर्वान् समलङ्कृतवान् मुदा ॥ ६ ॥

ஆச்ரமத்திருந்த பிராம்மணர்களுக்கும் யாசகர்களுக்கும் தங்கம் ரத்னம் துணி போன்ற விலை உயர்ந்த பொருட்களைக் கொடுத்து மகிழ்ச்சியடையச் செய்தான்.

पुरं तत्र स निर्मातुं विश्वकर्माणमादिशत् ।
यद् आग्रेयमिति ख्यातं दिव्यं रम्यं मनोहरम् ॥ ७ ॥

கடவுள் விச்வகர்மாவை அழைத்து ஒரு அரச மாளிகையுடன் நகரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆணையைப் பிறபித்தான். அந்த நகரம் தான் ஆக்ரேயம் என்ற பெயருடன் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கும் புண்ணிய பூமியாகும் என்றான்.

येन लिङ्गेन यो देशो युक्तः समुपलक्ष्यते ।
तेनैव नाम्ना तं देशं वाच्यमाहुर्मनीषिणः ॥ ८ ॥

எந்த ஒரு (தேசம்) நகரமும் யாரைக் கொண்டு ஏற்படுத்தப்படுகிறதோ அவருடைய பெயரையே அந்த நகரத்திற்கு வைக்கவேண்டும். இதனை பின்பற்றியே ஸ்ரீஅக்ரஸேனரால் ஏற்படுத்தப்பட்ட நகரத்திற்கு
ஆக்ரேயம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

ततः पुण्ये शिवे देशे शान्तिं कृत्वा विधानतः।
नगरं मापयामासुः अग्रो गार्ग्यः पुरोगमाः॥ ९॥

பிறகு மங்களமான அந்த நகர ஆரம்பத்திற்கு தருமத்தில் கூறியபடி மஹரிஷி கர்க்யரையும் அவரின் மனைவி காக்கியையும் வைத்துக்கொண்டு சாந்தி ஹோமங்களைச் செய்து ஆரம்பித்தார்.

पुरं लक्षणसम्पन्नां स्वायताष्टपदोपमाम्।
सिकतामृत्तिकाताम्रं कृतास्पदमिव श्रिया ॥ १०॥

நகரத்திற்கு உரிய லக்ஷணங்களுடன் எட்டு பதங்களுடன் (சதுரமான அளவுடன்) பொன் நிறத்தையுடைய மண்ணால் அந்நகரம் விச்வகர்மாவால் அமைக்கப்பட்ட இருந்ததால் அங்கு மஹாலக்ஷ்மியே குடிகொண்டுள்ளது போல் ஆகும் என்றார்.

योजनद्वादशास्तीर्णा चतुर्योजनमायता।
कपाटतोरणवती सुविभक्तमहापथा॥ ११॥

அந்த நகரம் 12 யோஜனைதூரம் நீளமும் (1 யோஜனை என்பது 10 மைல்), 4 யோஜனை தூரம் அகலமும் கொண்டதாக நீளமான சதுரத்தைப் போன்று பெரிய கதவுகளைக் கொண்ட மாளிகைகளும் நன்கு காற்று வருமளவிற்கு வழிப்பாதைகளும் விடப்பட்டு முன் ஆலோசனைப்படி அமைக்கப்பட்டது.

उद्यानवनसम्पन्ना सुसीमा सुप्रतिष्ठिता।
प्रांशुप्राकारवसना परिखाकूलमेखला॥ १२॥

இயற்கை அழகை மேம்படுத்துமளவிற்கு பற்பல பூங்காவும் உயர்ந்த மதிற்சுவர்களும் நாற்புறங்களில் வீதியும், அழகான பெண்களுக்கு பாதுகாப்பை அளிக்குமளவிற்கும் அந்த நகரம் ஏற்படுத்தப்பட்டது. அதை ஆக்ரேய புரீ என்றழைத்தனர்.

स्थापयामास भागेषु देवतायतनान्यपि।
निर्मितं ह्यग्रसेनेन प्राजापत्येन कर्मणा॥ १३॥

அந்நகரத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் பிரஜாபதியைக் கொண்டு அந்தந்த கடவுளின் இருப்பிடத்தில் அவரவர்களுக்கு உரிய கோயில்களையும் ஏற்படுத்தினார்.

रथ्यावीथीर्नृणां मार्गाश्चत्वराणि वनानि च ।
चित्रमष्टापदाकारं विमानगृहशोभितम् ॥ १४ ॥

அழகாகவும் முன் ஆலோசனையுடனும் ஏற்படுத்தப்பட்ட அந்த நகரத்தை எட்டு பாகுதியாகப் பிரித்து நடுவில் ஆழியுடன் ஏழு அடுக்குகளுடன் அரசமாளிகையும் ஆங்காங்கே பூங்காவும் பெரிய தேர் வீதியும் ஏற்படுத்தப்பட்டன.

पुरं मध्ये वर्धमानं श्रीपीठे रत्नसंस्कृते ।
आराध्यते ह्यहोरात्रं द्विजाः वेदविदां वराः ॥ १५ ॥

வேதம் படித்த பண்டிதர்களும் பிராம்மணர்களும் மாதா மஹாலக்ஷ்மியை இரவு பகல் என கணக்கிடாமல் பூஜை செய்வதற்கு ஆக்ரேய நகரத்தில் தெற்கு பகுதியின் நடுவில் குபேரனுடைய இடத்தில் பெரிய மஹாலக்ஷ்மியின் கோயில் (இருப்பிடம்) ஏற்படுத்தப்பட்டது.

विरोचमानं विविधैः देवायतनमन्दिरैः ।
वापीकूपतडागादि स प्रजार्थमकारयत् ॥ १६ ॥

அந்த நகரத்தில் பற்பல கோயில்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. அதன் அருகில் குளம், கிணறு, ஏரி போன்றவை பொதுமக்கள் உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்டதன.

कृतघोषाणि सत्राणि बहुन् योगेश्वराश्रमान् ।
प्रपाश्चकार विविधाः फलपत्रपयोऽधिकाः ॥ १७ ॥

பற்பல அன்னதான சத்திரங்களும், யோகிகள் தங்குவதற்கு உண்டான ஆச்ரமங்களும் அவர்களுக்கு வேண்டிய காய் கனிகள் கிடைக்குமளவிற்கு மரம் செடி கொடிகளும் ஏற்படுத்தப்பட்டன.

विविधैरपि निर्बद्धैः शस्त्रोपेतैः सुसंवृतैः ।
एषाऽग्रसेनस्य पुरी ह्याग्रेयी कर्मणा शुभा ॥ १८ ॥

இராஜா ஸ்ரீஅக்ரஸேனர் போர் வீரர்களுக்காக தற்பாதுகாப்புடன் பற்பல ஆயுதங்களுடன் கூடிய இடத்தையும் ஏற்படுத்தினார். உண்மையுலும் விச்வகர்மாவால் அந்த ஆக்ரேய நகரம் மிகவும் அழகாக ஏற்படுத்தப்பட்டிருந்தது.

देशाददेशात् ते लोका आग्रेयपुरमागताः ।
चातुर्वर्ण्यसमाकीर्णं नरनारीगणैर्युतम् ॥ १९ ॥

ஆக்ரேய நகரம் கட்டிக்கொண்டிருக்கும் போதே பற்பல தேசத்திருந்த மக்கள் தங்களுடைய குழந்தைகளுடனும் சொந்தக்காரர்களுடனும் அங்கு வந்து தங்குவதற்கு ஆரம்பித்தனர். நான்கு பிரிவினர்களும், ஆண் பெண் ஆகிய இரு பிரிவினர்களுடன் தங்களுடைய உறவினர்களுடன் அங்கு வந்து தங்கினர். இவ்வாறு அந்நகரம் மக்களால் பெரிதாகியது.

ब्राह्मणाः वेदनिपुणाः सर्वशास्त्रविशारदाः ।
धर्मज्ञाः कर्मनिपुणाः शुचयः समदर्शनाः ॥ २० ॥

அவ்வாறு வந்தவர்களில் பிராம்மணர்களும், வேதத்தைப் படித்த வித்வான்களும், சாஸ்த்திரங்களைப் படித்தவர்களும், தருமத்தில் சிறந்தவர்களும், தனது கர்மாவைச் சிறப்பாகச் செய்பவர்களும், ஒழுக்கமானவர்களும், வேதாந்தத்தை அறிந்த ஞானிகளும் அடங்குவர்.

भार्यापुत्रयुताः सर्वे शिष्यैर्बहुभिरन्विताः ।
वैश्याः धनसमृद्धाश्च साधकाः स्वर्णकारकाः ॥ २१ ॥

கணவன் மனைவி, பிள்ளைகளுடனும் சிலர் தங்களுடை சீடர்களுடனும், செல்வத்தையுடைய வைசியர்களும், பொற்கொல்லன் வகுப்பினரும் (தங்க ஆச்சாரி) போன்றவர்களும் அங்கு வந்தடைந்தனர்.

शिष्टाचारपरास्तत्र दानधर्मपरायणाः ।
युद्धे कुशलिनः शूराः क्षत्रकर्मरतास्तथा ॥ २२ ॥

தினமும் தங்களுடைய கடமையை செய்பவர்களும், தான தருமங்களைச் செய்யும் தருமவான்களும், யுத்தகாலத்தில் போர் புரியும் வீரர்களும் க்ஷத்திரியர்களும் தங்களுடை எதிர்கல நன்மையின் பொருட்டு ஆக்ரேய நகரத்தை வந்தடைந்தனர்.

उपयोगसमर्थाश्च सर्वद्रव्यैः समावृताः ।
प्रजाः संस्थापयामास सोऽग्रसेनः समा मुदा ॥ २३ ॥

அனைத்து மக்களும் தங்களுடைய சொத்துக்களுடனும் மாடு, யானை, குதிரைப் போன்ற பரிவாரங்களுடன் ஆக்ரேய நகத்திற்கு குடிபெயர்ந்தனர். அவர்கள் அனைவரையும் ஸ்ரீஅக்ரஸேனர் வரவேற்று மகிழ்ந்தார்.

ततस्तं विश्वकर्माणं पूजयित्वा विसृज्य च ।
गार्ग्यं तमब्रवीदेवम् अग्रसेनः कृतक्षणम् ॥ २४ ॥

அதன் பிறகு அக்ரஸேனர் தனது நகரத்தை ஏற்படுத்திக்கொடுத்த விச்வகர்மாவுக்கு தகுந்த மரியாதையைச் செய்து அனுப்பிவைத்தார். பின்பு மஹரிஷி கர்க்யரை வணங்கி ஸ்ரீஅக்ரஸேனர் மரியாதையுடன் பேச ஆரம்பித்தார்.

अग्रसेन उवाच

महर्षे त्वत्प्रसादेन राज्यं सम्पन्नमद्य मे ।
धनधान्यसुसम्पन्नं परं शून्यं मनोहरम् ॥ २५ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஹே மஹரிஷியே - தங்களுடைய அருளால் தான் நான் இப்படிப்பட்ட குடியரசு நகரத்தை மிகவும் எளிதாக ஏற்படுத்தினேன். ஒன்றுமே இல்லாமல் இருந்த இந்த இடத்தில் இப்பொழுது ஒரு நகரமே உருவாகியுள்ளது.

यदिष्टमनुमन्तव्यं कर्तव्यं कारयस्व मे ।
त्वत्कृतः सुखदो बोधो भविष्यति यशःप्रदः ॥ २६ ॥

ஹே மஹாமுனிவரே - நான் என்ன செய்ய வேண்டும்?. எதைச் செய்யவேண்டும்?. எதைப் பின்பற்ற வேண்டும்? என்பதை தயவு செய்து ஆணையிடுங்கள். அது எனக்கு எப்பொழுதும் நன்மையையே அளிக்கும்.

जैमिनिरुवाच

स चाग्राणामधिपतिः अग्रसेनो महामनाः ।
कृतमङ्गलसत्कारो गार्ग्यस्यानुमते स्थितः ॥ २७ ॥

ஜைமினி கூறினார் - ஆக்ரேய நகரத்தின் இராஜா ஸ்ரீஅக்ரஸேனர் மஹாமுனி கார்க்யரின் அனுமதியுடன் ஒவ்வொரு வேலையையும் செய்தார்.

सुतोरणद्वारपुरं प्रविवेश महाद्युतिः ।
तदा संस्तूयमानोऽग्रः सूतमागधबन्दिभिः ॥ २८ ॥

வீரத்தையுடை ஸ்ரீஅக்ரஸேனர் தோரணங்களுடன் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட வாயின் வழியாக ஆக்ரேய நகரத்தினுள் புகுந்தார். அச்சமயத்தில் அங்கு வானத்திருந்து பூமாரிப் பொழிந்தது. அனைவரும் ஸ்ரீஅக்ரஸேனரைப் புகழ்ந்து துதித்தனர்.

शङ्खदुन्दुभिनिर्घोषाः श्रूयन्ते स्म भृशं तदा ।
जयेति ब्राह्मणगिरः श्रूयन्ते स्म सहस्रशः ॥ २९ ॥

சங்கு ஒயும், தாரை பரை முரசு போன்ற மங்கள ஓசையும் முழங்கின. பிராமணர்களும் ஆயிரக்கணக்கான மக்களும் ஸ்ரீஅக்ரஸேனருக்கு வெற்றி உண்டாகட்டும் என உரத்த குரல் கோஷத்தை எழுப்பினர்.

औपवाह्यगतो राजा राजमार्गमतीत्य च ।
कृतमङ्गलसत्कारं विवेश भवनं स्वकम् ॥ ३० ॥

இராஜா அக்ரஸேனர் யானையின் மேல் அமர்ந்து இராஜ பவனியில் அரண்மனை வாயிலை அடைந்தார். அங்கு அவருக்கு புரோஹிதர்கள் வேத மந்திரத்தின்படி மங்கள விழாவைச் செய்ய அவர் அரண்மனையினுள் புகுந்தார்.

शिखरे राजभवने महोच्छ्रायध्वजोत्कटे ।
अलक्ष्यत ध्वजं पीतवर्णं भानुसुलक्षणम् ॥ ३१ ॥

அந்த இராஜ அரண்மனையின் சிகரத்தில் மஞ்சள் நிறம் உடைய துணியில் சூரியனின் சின்னம் பொதித்திருந்த கொடியை ஏற்றினார்.

ययौ स चामरव्यग्रपाणिभिः पार्श्ववर्तिभिः ।
राजा च्छत्रयुतो भेजे तत्र राज्यासनं सभाम् ॥ ३२ ॥

வேலையாட்களுடன், பணிப் பெண்கள் சாமரம் வீச ஸ்ரீஅக்ரஸேனர் இராஜ தர்பாருக்குச் சென்று குடையுடன் இருந்த இராஜ சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

सभायां प्रबभौ देवी दिव्या दिव्येन वर्चसा ।
मणिरत्नचिता चित्रस्फटिकस्तम्भशोभिता ॥ ३३ ॥

அந்த இராஜாவின் ஆலோசனை மாளிகையில் இருந்த அனைத்து தூண்களும் இரத்தினங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஜ்வத்துக் கொண்டிருந்தது.

राज्यासनेऽग्रसेनस्य सा लक्ष्मीः परमासने ।
गर्गश्च बहुशस्तस्याम् आसंश्चामात्यमन्त्रिणः ॥ ३४ ॥

அந்த அரண்மனையின் ஆலோசனைக் கூடத்தில் இராஜ சிம்மாஸனத்தின் மேல் பகுதில் மஹாலக்ஷ்மியின் சின்னமும் அதன் கீழே ஸ்ரீஅக்ரஸேனனுடைய ஆஸனமும் அவருடைய அருகில் மஹரிஷி கர்க்யருக்கு ஆஸனமும், அதன் எதிரில் முக்கியமான

तस्यैकस्योच्छ्रितं छत्रं वासन्तीवर्णशोभितम् ।
विभूषितं स्वर्णदण्डं कृत्स्नस्य जगतो हितम् ॥ ३५ ॥

இவ்வுலகத்திற்கு நன்மை செய்வதற்காகவே தங்கமயமான தண்டத்துடன் (செங்கோல்) ரோஸ் பூ கலரில் குடையுடன் இராஜ சிம்மாஸனத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் ஒளியுடன் திகழ்ந்தார்.

प्रसादाभिमुखे तस्मिँश्चपलाऽपि स्वभावतः ।
निकषे हेमरेखेव श्रीरासीदनपायिनी ॥ ३६ ॥

உண்மையாலும் மஹாலக்ஷ்மியானவள் தங்கமயமான மஞ்சள் கலரில் ஆசையுடைவள். ஆக்ரேய நகரம் முழுவதும் தங்கமயமான மஞ்சள் கலரில் மாளிகையும் அரண்மனைகளும் ஏற்படுத்தப் பட்டிருந்ததால் மஹாலக்ஷ்மியே ஸ்ரீஅக்ரஸேனருடன் குடியேறிவிட்டாள் போன்றிருந்தது.

वयोरूपविभूतीनामेकैकं मदकारणम् ।
तानि तस्मिन्समस्तानि न तस्योत्सिषिचे मनः ॥ ३७ ॥

ஒரு மனிதனுக்கு இளமை, அழகு, செல்வம் ஆகிய மூன்றும் கிடைத்து விட்டால் அவன் கொடியவனாகிவிடுவான். ஆனால் ஸ்ரீஅக்ரஸேனரிடத்தில் இளமை, அழகு, செல்வம் போன்றவைகள் சிறப்பாக இருப்பினும் அவர் மிகவும் அமைதியாகவே இருந்தார்.

ततस्तु राष्ट्रं नगरं नरनारीगणायुतम् ।
गोधनैश्च समाकीर्णं सस्यवृद्धं तदाऽभवत् ॥ ३८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஆக்ரேய நகரம் ஆண் பெண் ஆகியோரின் கூட்டத்தால் மேன்மேலும் ஜனத்தொகை பெருகின. அதைபோல் ஆடு மாடு போன்ற விலங்குகளும் விவசாயமும் விரிவடைந்தன.

प्रजाभिरष्टादशभिर्हृष्टाभिश्च समन्विताम् ।
अग्रसेनः श्रियं भक्तिं व्यवर्धयत तां पुरीम् ॥ ३९ ॥

ஆக்ரேய புரியில் 18 விதமான இனத்தவர்கள் மிகவும் சந்தோஷத்துடனும் மன நிம்மதியுடனும் ஒருவருடன் ஒருவர் விட்டுக்கொடுத்தும் வாழ்ந்தனர். தார்மிக வழியில் ஸ்ரீஅக்ரஸேனன் ஆட்சி செய்தான். அரசனுடைய மஹாலக்ஷ்மியின் வழிபாட்டால் அந்நாட்டின் பொருளாதாரம் செல்வம் ஆகியன மேன்மேலும் வளர்ச்சியடைந்தது.

गर्गस्य तु गुरोर्मन्त्रैः अग्रसेनस्य कर्मणा ।
किं न साध्यं यदुभये साधयेयुर्न संगताः ॥ ४० ॥

கர்க்யமுனியின் ஆலோசனைப்படி அக்ரஸேனன் ஆட்சியை நடத்தி வந்தான். ஆதலால் எவ்வளவு துயரம் வந்தாலும் அவை அனைத்தையும் எதிர்கொள்ளும் சக்தியையும் திறமையையும் பெற்றிருந்தான். அனைத்திலும் சாதனை செய்து வெற்றியடைந்தான்.

श्रद्धाऽदृश्यत पौराणां प्रतिजग्राह तां स वै ।
प्रश्रयेणाब्रवीद् राजा कच्चिद् आगमनं सुखम् ॥ ४१ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனனின் முடிசூட்டும் விழவிற்கு பிரதாபபுரத்திருந்தும் ஸ்ரீஅக்ரஸேனனுக்கு வேண்டியவர்களும் பலர் வந்திருந்தனர். அவர்கள் அனைவரையும் வரவேற்று அவர்களுக்கு வேண்டியவற்றை கொடுத்து மகிழ்ச்சியடையச் செய்தான்.

कच्चित् प्रजा कुशलिनी सह सौम्यानुजा प्रसूः ।
स चाभिवाद्याग्रसेनं रुरोदोद्विग्नमानसः ॥ ४२ ॥

அவர்களிடம் நலனை விசாரித்தான். பிரதாபபுரத்தின் சூழ்நிலையையும் அரசாட்சியையும் பற்றி விவரமாகக் கேட்டான். மேலும் புரோஹிதர் சௌம்ய ரிஷியையும், தனது தாய் வைதர்பி இராணியையும், தனது உடன் பிறந்த சௌர்யஸேனனைப் பற்றியும் விசாரித்தான். அவர்கள் அழுதுக்கொண்டே சோரவடைந்த மனதுடன் பிரதாபபுரத்தினைப் பற்றி கூறினர்.

ततः स कथयामास राज्ञे वृतान्तमादितः ।
सकूटकामुकः कुन्दो परितापेन दारुणः ॥ ४३ ॥

பிரதாபபுரத்தின் அரசன் குந்தஸேனனுடைய கொடுங்கோல் ஆட்சியால் மக்கள் மிகவும் துயரப்படுவதையும், சோகத்தையும் சொல் அழுதனர்.

यत्र राजा कामरतः सदा लोकपराङ्मुखः ।
तस्मिन् राष्ट्रे न वस्तव्यं हितैश्च दृढनिश्चयः ॥ ४४ ॥

ஆசையை அதிகமாகவும், தன்னுடைய நலனை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்த அரசன் குந்தஸேனனிடம் புரோஹிதர் சௌம்ய ரிஷி இனிமேல் நான் பிரதாபபுரத்தில் தங்கமாட்டேன் எனக் கூறி நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்றனர்.

तावदुक्त्वा वचः सौम्यो वैदर्भीशौर्यसंयुतः ।
परित्यज्य पुरं यातः कोऽपि नो वेत्ति तं नृपम् ॥ ४५ ॥

இவ்வாறு கூறிவிட்டு புரோஹிதர் சௌம்ய ரிஷி, இராணி வைதர்ப்பியுடனும், இளவரசன் சௌர்யஸேனனுடனும் மறைமுகமான (இரகசியமான) இடத்திற்குச் சென்றுவிட்டனர். அவர்கள் எங்கு சென்றனர் என்பது யாருக்கும் தெரியாது.

श्रुत्वा ध्यानपरो राजा निशश्वासाऽऽर्तवत् तदा ।
तत्क्षणे दुःखसन्तप्तः क्रोधामर्षयुतोऽब्रुवीत् ॥ ४६ ॥

இதைக் கேட்ட அக்ரஸேனர் பேசமுடியாமல் கவலையடைந்தார். அந்த நொடியிலேயே துயரத்தை அடைந்து கோபத்துடன் பார்த்தார்.

धिङ् मदीयमिदं राज्यं यत्र नाम्बा न चानुजः ।
ताभ्यां विरहितं तद्वद् देहं चक्षुर्विवर्जितम् ॥ ४७ ॥

நான் என்னுடைய தாய் இல்லாமலும், ஸஹோதரன் இல்லாமலும் எவ்வாறு மகிழ்ச்சியாக இந்த அரச பதவியை ஆளமுடியும். அவர்கள் இருவரும் இல்லாதது என்னுடைய உடம்பில் கண்கள் இல்லாததற்கு ஸமமாகும்.

कथं तयोस्त्वानयनं को हितं मे करिष्यति।
कं च पृच्छामि सुहृदं क उपायोऽत्र सम्भवः॥ ४८॥

மிகவும் கவலையடைந்து தன்னுடைய தாய் மற்றும் ஸஹோதரனைப் பற்றி எவ்வாறு தெரிந்து கொள்வது?, அவர்களுக்கு எவ்வாறு நன்மையைச் செய்வது?, எந்த நண்பனிடம் அவர்களைப் பற்றி கேட்பது? இதற்கு யார் உதவி புரிவார்கள்? என சிந்தனை செய்து பயந்தார்.

सन्दिदेश द्विजान् अग्रो वसु दत्त्वा च पुष्कलम्।
मृगयध्वं शौर्यमेनं वैदर्भीं चैव मातरम्॥ ४९॥

ஒரு பிராம்மணரை அழைத்து அவருக்கு நிறைய செல்வம் பூமி போன்றவற்றை கொடுத்து அனைத்து நாட்டையும் சுற்றி எப்படியாவது எனது தாயையும் சகோதரனையும் கண்டுபிடித்து வாருங்கள் என்றார்.

कर्मणि प्रतिसम्पन्ने दास्यामि विपुलं वसु।
इत्युक्तास्ते विचिन्वन्तो ययुः सर्वे द्विजाः द्विशः॥ ५०॥

யாரேனும் எனது தாயையும் சகோதரனையும் கண்டுபிடித்து அழைத்து வந்தால் அவர்களுக்கு நிறைய பூமி, செல்வம், பொருட்கள் போன்றவற்றை பரிசாக அளிக்கிறேன் என்றார். உடனே பலர் அவர்களைத் தேடும் வேலையில் ஈடுபட்டனர்.

अग्रसेनस्तु सर्वस्य लोकस्य हितमात्मनः।
चिकिर्षन् सुमहातेजा रेमे पुरुषसत्तमः॥ ५१॥

ஜைமினி கூறினார் - ஓ மனிதருள் உயர்ந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனன் அனைத்து உலகத்தின் நன்மையின் பொருட்டு தருமத்தின்படி சிறப்பாக அரசாட்சியைச் செய்தான்.

तत्र प्रजा रेमिरेऽथ सुप्रीत्या जनमेजय ! ।
अवसत् धरणीपालांस्तापयन्स स्वतेजसा ॥ ५२ ॥

ஓ மஹாஞானி ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரின் ஆட்சியில் மக்கள் மகிழ்ந்திருந்தனர். தருமத்தின் வழி நடப்பதால் அவரிடம் அன்புடன் இருந்தனர். ஆதலால் அக்ரஸேனர் மிகுந்த ஒளியுடன் பிரகாசித்தார். ஆக்ரேய புரியின் அருகில் அரசாளும் அரசர்களும் பயந்தனர், அக்ரஸேனரை எதிரியாகப் பார்த்தனர்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते दशमोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பத்தாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதினொன்றாவது அத்யாயம்

திட்டம் (உபாயம்)

जनमेजय उवाच

ऋषे ! किमेतत् कथितम् अग्रो नागाङ्गनापतिः? ।
कथमेतत् सङ्गतं हि तत् सर्वं वद सादरम् ॥ १ ॥

ஜனமேஜயர் கேட்டார் - ஹே மஹரிஷி, ஸ்ரீஅக்ரஸேனர் நாக கன்னிகைக்கு எவ்வாறு கணவனாக ஆனார்?. எவ்வாறு வைஷ்ணவருக்கும் சைவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. தயவு செய்து இதை எனக்கு விளக்குங்கள் என்றார்.

जैमिनिरुवाच

अग्रराजः सुधीः सम्यग् आग्रेयं पालयन्नभूत् ।
गर्गं पुरोहितं चक्रे तेनायं तीव्रशासनः ॥ २ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீ அக்ரஸேனர் தனது மனதைக் கட்டுப்படுத்தி தனது இராஜ்யத்தை நன்கு ஆண்டுவந்தார். அந்த சமயத்தில் இராஜ புரோஹிதராக மஹரிஷி கர்க்கரை ஏற்படுத்தினார். இதனால் ஸ்ரீஅக்ரஸேனரின் அரசும் அவருடைய அரசாட்சியும் மரியாதைக்குரியதானது.

न्यायवर्ती धनबलो धर्मबाहुर्मुनिर्नृपः ।
नृपः पुरोहितश्चैव नीतिशास्त्रविशारदौ ॥ ३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் நியாயத்தையும், தருமத்தையும் முழுவதுமாக பின்பற்றினார். ஆதலால் அவர் சக்தி வாய்ந்தவராகத் திகழ்ந்தார். ஆதலால் மஹரிஷி கர்க்கரும் இராஜா ஸ்ரீஅக்ரஸேனரும் நீதியிலும் தருமத்திலும் சிறந்தவர்களானார்கள்.

गार्ग्य उवाच
मणिपूरिति पू रम्या नागराजेन पालिता ।
धर्मार्थकाममोक्षणां पारगाः यत्र पन्नगाः ॥ ४ ॥

ஒரு நாள் மஹரிஷி கர்க்கர் ஸ்ரீஅக்ரஸேனரைக் கேட்டார் - ஹே ராஜன் - மணிப்பூர் என்கிற அழகான நகரத்தை அரசன் நாகராஜனான மஹீதரன் ஆண்டுவருகிறான். அங்கிருக்கும் நாககணங்கள் தர்மம், அர்த்தம், காம மோக்ஷத்தைக் கடைபிடித்து வாழ்வில் நற்கதியை அடைகின்றனர் என்றார்.

सुखान्विताः अग्रसेन वयं राज्ये समे यथा ।
उक्त्वा मुनिर्वचश्चैतद् उपविष्टो वरासने ॥ ५ ॥

அச்சமயத்தில் அனைத்து முனிகளும், மந்திரிகளும் அரசவையில் எழுந்து நாங்கள் அனைவரும் ஸ்ரீஅக்ரஸேனரின் இராஜ்யத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம் எனக் கூறி ஆஸனத்தில் அமர்ந்தனர்.

गार्हस्थ्यमपि कर्तव्यं नृणां गुप्तं हि सर्वदा ।
नागराजस्य तनयां वरय त्वं महीधर ॥ ६ ॥

மஹரிஷி கூறினார் - ஓ இராஜன் - இந்த இராஜ்யத்தை தருமத்தின் படியும் நீதியுடனும் ஸ்தாபனம் செய்து விட்டீர்கள். இங்கிருப்பவர்களும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். இருப்பினும் தங்களுக்கு மற்றொரு வேலை இருக்கிறது. திருமண வாழ்க்கை (கிருஹஸ்த) தருமத்தை கடைபிடிப்பதும் முக்கியமானதாகும். ஆதலால் மணிப்பூர் சென்று அங்கிருக்கும் இளவரசியை நாக கன்னிகையைத் திருமணம் செய்து வரவும் என்றார்.

जैमिनिरुवाच

न्यवेदयत् प्रियां तस्मै माधवीं नागकन्यकाम् ।
सत्यव्रता धर्मरता पुण्यसर्वस्वदायिनी ॥ ७ ॥

ஜைமினி கூறினார் - மஹரிஷி கர்க்யர் ஸ்ரீஅக்ரஸேனரிடம் உண்மையிலும் அன்பாகவும் தருமத்தையும் நீதியையும் பின்பற்றி புண்யத்தைக் கொண்டவள் நாக கன்னிகை மாதவி என்று கூறினார். அழகான அவள் உன்னுடைய எண்ணங்களை முழுவதுமாக நிறைவேற்றுவாள் என உறுதியும் அளித்தார்.

गार्ग्य उवाच

रम्यं मणिपुरं गच्छ नागराजेन पालिताम् ।

मनोरमा तापसी सा माधवी त्वामनुव्रता ॥ ८ ॥

கர்க்யர் கூறினார் - ஓ ராஜன் அக்ரஸேனா - மஹீதரனின் புதல்வி மாதவி உண்மையிலும் அழகானவள். அவளை நீ மனைவியாக அடையவேண்டும். அவள் உனக்குப் பொருத்தமானவள். ஆதலால் நீ மணிப்பூர் சென்று அவளை திருமணம் செய்து வரவும் என்றார்.

अग्रसेन उवाच

कथं समागमस्तस्याः तस्मिन् लोके भविष्यति ।

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ மஹரிஷியே - நான் எவ்வாறு நாகலோகம் சென்று அங்கிருப்பவர்களைப் பார்ப்பது?.

गार्ग्य उवाच

मा वत्स कार्षीस्त्वं चिन्तां कार्यरूपं वदामि ते ॥ ९ ॥

उद्दालकः सखा मेऽस्ति मुनिर्मन्त्रविदां वरः ।

सोऽग्र तेषां मनो युक्तम् अनुकूलं करिष्यति ॥ १० ॥

கர்க்யர் கூறினார் - ஓ குழந்தாய் அக்ரஸேனா - அதற்குரிய வழிகளை நான் சொல்கிறேன் கவலைப்படாதே என்றார்.

ஓ அக்ரஸேனா - என்னுடைய நண்பன் உத்தாலகர் சிறந்த முனிவராக நாகலோகத்தில் இருக்கிறார். அவர் மந்திர சாஸ்த்திரங்களில் மிகவும் சிறந்தவர். அவரை மணிப்பூர் என்கிற நாகலோகத்தில் அனைவரும் மதிப்பிற்குரியவராக வைத்துள்ளனர். அவரிடம் சென்று (நான் கூறியதாகச் சொல்) உதவியைக் கேள். அவர் உனக்கு நண்பனாகி அனைத்தையும் செய்வார் என்றார்.

नागराजपुरं गच्छ भार्यामिच्छ कुलैषिणीम् ।
प्रेषयामि सखायं मे पन्नगेशनिवेशनम् ॥ ११ ॥

ஓ ராஜன் - உடனடியாக நீ மணிப்பூர் சென்று அங்கு அரசனாக இருக்கும் பாம்பின் தலைவனான மஹீதரனிடம் உன்னுடைய விருப்பங்களைக் கூறி உன்னுடைய இல்லற வாழ்க்கையையும் உன் புகழையும் சூரிய வம்சத்தையும் மேன்மை படுத்தக்கூடிய மனைவியை அடைவாயாக என்றார்.

एषा ते श्रेयसी यात्रा भविष्यति कुलस्य च ।
पौराणामथ पुर्याश्च देशस्य च सुखावहा ॥ १२ ॥

நீ அடையப்படும் மனைவியானவள் உனக்கு புகழையும் உன்னுடைய குலத்தையும் மேன்மையடையச் செய்யப் போகிறாள். மேலும் அவளால் இந்த நாட்டிற்கும் நன்மை கிடைக்கப் போகிறது என்றார்.

जैमिनिरुवाच

ततः स मन्त्रसहितं वचनं प्राह मौनिराट् ।
आग्रेय पुत्रसात् कृत्वा पालये त्वां न चिन्तय ॥ १३ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா - இவ்வாறு கர்க்யர் ஸ்ரீஅக்ரஸேனரை சமாதானம் செய்தார். மேலும் ஸ்ரீஅக்ரஸேனர் திரும்பி வரும் வரை இந்த ஆக்ரேய நகரத்தை தான் எவ்விர குறையுமின்றி பார்த்துக் கொள்வதாகவும் உறுதியளித்தார். அதலால் உன்னுடைய நகரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம் எனவும் கூறினார்.

एतच्छ्रुत्वा वचस्तस्य गर्गस्य नरपुङ्गवः ।
नमस्कृत्य तदाऽग्रस्तु प्रतस्थे मणिपूर्वरम् ॥ १४ ॥

இவ்வாறு மஹரிஷி கார்க்யர் கூறுவதைக் கேட்டவுடன் ஸ்ரீ அக்ரேஸேனர் அவரை வணங்கி மணிப்பூர் நகரத்திற்குச் செல்லத் தயாரானார்.

ददर्श चातलं घोरं महासर्पविभूषितम् ।
सर्वं तत् काञ्चनमयं रम्यं विपुलकाननम् ॥ १५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் அங்கதேசம், வங்கதேசம், ஜ்யோதிஷ்புரம் ஆகிய நகரங்களைத் தாண்டி மிகவும் பயங்கரமான பாம்புகளுடன் கூடிய அதல லோகத்தை அடைந்தார். அந்த நகரம் பற்பல கொடிய பாம்புகளுடன் தங்கமயமாகவும் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் இருந்தது.

वितलं च प्रविष्टोऽसौ दिव्यं चम्पकशोभितम् ।
दिव्याभिर्नागकन्याभिर्वृतं तदतिशोभनम् ॥ १६ ॥

அதல லோகத்தைத் தாண்டி விதல லோகத்தை அடைந்தார். அங்கு பூத்திருந்த சம்பக பூ மிகவும் வாசனையுடன் அந்த லோகம் முழுவதும் வாசனையால் தன்னை பரவச்செய்திருந்தது. அங்கு நாக கன்னிகைகள் எவ்வித பயமுமின்றி மகிழ்ச்சியாக உலாவி வந்துகொண்டிருந்தனர்.

मार्गे बहुविधान् देशानतिचक्राम सत्वरः ।
अतिवेगवतीश्चैव सरितो विपुलाः पथि ॥ १७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் பற்பல நாடுகளையும், தேசங்களையும் மிகவும் வேகமாகக் கடந்தார். மேலும் பெரிய நதிகளையும் தாண்டி முன்னேறினார்.

सुतलं च शमीवृक्षैः काञ्चनैः फलितैः शुभैः ।
पर्वतान् विविधान् रम्याञ्छिखरैरतिशोभितान् ॥ १८ ॥

பிறகு ஸ்ரீஅக்ரஸேனர் ஸுதல லோகத்தை அடைந்தார். அங்கு சமீ (அரச/பலாச) மரங்கள் நிறைந்திருந்தன. மேலும் பழங்கள் நிறைந்த மரங்களையும், பற்பல உயர்ந்த சிகரங்களையுடைய மலைகளையும் பார்த்தார். அந்த இடம் மிகவும் அழகாக இருந்தது.

वनानि समतिक्रम्य धीमान् अग्रश्चचार हि ।
महातलं चाम्रवृक्षैः नानापक्षिविचित्रितैः ॥ १९ ॥

ஒவ்வொரு இடத்தையும் தயங்காமலும் நேரம் தாழ்த்தாமலும் கடந்தார். பற்பல அழகான பறவைகளுடன் கூடிய காட்டையும் கடந்தார். அதன் பின் பழங்களுடன் நிறைந்திருந்த மா மரங்களுடன் இருக்கும் மஹாதல லோகத்தின் அருகில் சென்றார்.

सुवृत्तैः सरला दीर्घा नारिकेलद्रुमाः फलैः ।
दृश्यन्ते बहुला यत्र वंशाः सत्पुरुषैरिव ॥ २० ॥

அங்கு பற்பல தென்னை மரங்கள் உயரமாகவும் தேங்காயுடனும் இருந்தன. அதை பார்க்கும் போது அங்கிருப்பவர்கள் தருமத்தைப் பின்பற்றுபவர்களாகவும் சிறந்தவர்களாகவும் தெரிந்தது. கண்ணிற்கு எட்டியவரை தேங்காயுடன் கூடிய தென்னை மரங்கள் அழகாகத் தெரிந்தது.

रक्षन्ति स्वफलैर्नित्यं नरवक्त्राणि सर्वदा ।
सर्व कार्याणि कुर्वन्ति तत्र वै क्रमुकद्रुमाः ॥ २१ ॥

அந்த தென்னை மரங்கள் நடுவே பாக்கு மரங்களும் இருந்தன. பாக்கு மரங்கள் மனிதனுடைய மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கும், மனிதனுடைய ருசிக்கும், கடவுள் வழிபாட்டுக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

अनन्तत्वं गता वृक्षाः खर्जूराणां सहस्रशः ।
फलैः सङ्कुचितैरेव सर्वताः पापहारिणः ॥ २२ ॥

கணக்கிடமுடியாததான பெரிய ஈச்ச மரங்களும் இருந்தன. இந்த ஈச்சமரங்கள் தங்களுடைய பழங்களால் மக்களுடைய சக்தியை வளர்க்கிறது. மேலும் அதை காயவைத்தும் உண்டு மகிழ்கின்றனர்.

विदीर्णैर्यत्र दाडिम्यः स्वफलैः शुकसंयुतैः ।
बीजपुरैः सरागैस्तैः कुर्वन्ति जनताहितम् ॥२३ ॥

அந்தக் காட்டில் பூக்களை பூத்துள்ள மரங்களும், மாதுள மரங்கள் பழத்துடனும் கிளிகள் சூழப்பட்டு இருந்தன. நிறைய கொட்டைகளுடன் கூடிய மாதுளம் பழம் மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகும்.

वृतं मरकतैरन्यैर्दिव्यैश्चन्दनकाननैः ।
रसातलं तथाभूतं वीक्ष्य विस्मयमागतः ॥ २४ ॥

இவ்வாறு அழகான புனிதமான சந்தன மரங்களையும், மற்ற மரங்களையும், பழங்களையும், பறவைகளையும் கொண்ட காடு (வனம்) மரகத மணியைப் போன்று சொத்தது. சந்தன வாசனை அந்த காடு முழுவதும் பறவியிருந்தது. அப்படிப்பட்ட ரஸாதல லோகத்தைப் பார்த்து ஸ்ரீஅக்ரஸேனர் வியந்து போனார்.

पाताले च ददर्शाथ रम्यां मणिपुरञ्च ताम् ।
रत्नालयं रौप्यशिलाबद्धं शीतजलं शिवम् ॥ २५ ॥

அதன் பின் ஸ்ரீஅக்ரஸேனர் பாதால லோகத்தின் வாயிலை அடைந்தார். அந்த மணிப்பூர் என்கிற பாதால லோகம் பெரிய பெரிய மாளிகைகளாலும் அவைகள் பற்பல உயர்ந்த நவரத்தினங்களாலும் பெரிய மதிற்சுவர்கள் வெள்ளியாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. அங்கிருக்கும் நீர் (ஜலம்) சுத்தமானதாகவும் சுவைமிகுந்ததாகவும் இருந்தது.

तत्र गत्वा लोहिताया नद्यास्तीरान्तमाश्रितम् ।
अधस्तात् तरुपुञ्जस्य ददर्शोद्दालकं मुनिम् ॥ २६ ॥

அந்த பாதால லோகத்தில் லோஹிதமெனும் (ப்ரஹ்மபுத்ரா) நதியின் கரையில் காட்டிற்கும் மரங்களுக்கும் தலைவனான ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருந்த மஹரிஷி உத்தாலகமுனியை ஸ்ரீஅக்ரஸேனர் பார்த்தார்.

गौरभाग्निशिखाकान्तं तेजसा भास्करोपमम् ।
दृष्ट्वा तु विनतस्तस्य पादमूले कृताञ्जलिः ॥ २७ ॥

ஜடைகளுடனும், சந்திரனைப் போன்ற காந்தியையும், சூரியனைப் போன்ற ஒளியையும் கொண்டு மஹரிஷி உத்தாலகர் அழகான உருவத்துடன் பார்ப்பதற்கு சொக்கின்ற நெருப்பைப் போன்று அமர்ந்திருந்தார். ஸ்ரீஅக்ரஸேனர் அவரைப் பார்த்து, அவருடைய பாதங்களில் வணங்கி இரு கைகளைக் கூப்பி நின்றார்.

अग्रसेन उवाच

मुनेस्तपस्विन् गार्ग्यस्य शिष्योऽहं त्वामुपागतः ।
मुनिपुङ्गव वन्देऽहं प्रीतोऽस्मि तव दर्शनात् ॥ २८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார்- ஓ மஹா தபஸ்வீ முனிவரே - மஹரிஷி கர்க்யரின் சிஷ்யனான அக்ரஸேனன் என்ற நான், அவருடைய அறிவுரையின்படி தங்களை பார்ப்பதற்கு இங்கு வந்துள்ளேன். தாங்களை வணங்குகிறேன். தங்களை பாத்ததால் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

कामाय समनुप्राप्तो मुनिश्रेष्ठ तवान्तिकम् ।
प्रभो वद त्वं सूपायं गार्हस्थ्यस्य सुसाधनम् ॥ २९ ॥

ஓ முனிவரே - நான் முக்கியமான காரணத்திற்காக தங்களை இங்கு தரிசிக்க கர்க்யமுனி குறிப்பிட்டுள்ளபடி வந்துள்ளேன். நான் எவ்வாறு திருமண வாழ்க்கையை (க்ருஹஸ்த ஆஸ்ரமத்தை) அடைவது/ஆரம்பிப்பது. இதைப் பற்றி எனக்கு கூறுங்கள் என்றான்.

कथं समागमः स्यान्मे व्रियात् नागसुता यथा ।
कथं कर्तव्य उद्योगो यथाऽऽज्ञा ते पुरोहित ॥ ३० ॥

ஓ முனிவரே - என்னுடைய இராஜ புரோஹிதர் கர்க்யரின் ஆணைப்படி நாகலோகத்தின் நாகராஜ மஹீதரரின் புதல்வி மாதவியை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். இது எவ்வாறு என்னால் முடியும்?. நாக கன்னிகை என்னை மணந்துகொள்ள விரும்புவார்களா?. இதை எவ்வாறு செயல்படுத்துவது?. மாதவியை அடைவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்பனவற்றை தயைகூர்ந்து கூறுங்கள் என்றான்.

उद्दालक उवाच

श्रुत्वा वचः प्रीतिकरं धर्मसंहितमब्रवीत्।
शुभ कार्यार्थसिद्ध्यर्थं सम्प्रतीह यतेय ते ॥ ३१ ॥

உத்தாலகர் கூறினார் - உன்னுடைய அழகான சிறந்த பேச்சையும் உனது ஆற்றலையும் கண்டு மகிழ்கிறேன். இந்த நல்ல வேலையைச் செய்வதற்காகவே பல யுகங்களாக இங்கு காத்துக்கொண்டிருக்கிறேன் என்று கூறினார்.

विदितो मे यथा वत्स स्वयं राज्यं त्वमेयिवान्।
वरं गुरुर्महालक्ष्मीः प्रसन्ना ते ददौ किल ॥ ३२ ॥

ஓ குழந்தாய் - நீ எவ்வாறு உன்னுடைய புதிய இராஜ்யத்தை ஏற்படுத்தினாய்?. நீ எவ்வாறு உன்னுடைய குருவிற்கு மரியாதையைச் செலுத்தியிருக்கிறாய் என்பதைப் பற்றி எனக்குத் தெரியும். உன்னுடைய குரு உன்னிடத்தில் வைத்துள்ள அன்பு பாசம் போன்றவற்றை பற்றி முழுமையாகத் தெரியாது ஆனால் மஹாலக்ஷ்மி உன்னிடம் எவ்வாறு முழுமையாக்க குடிகொண்டு இருக்கிறாள் என்பது மட்டும் எனக்குத் தெரியும் என்றார்.

तद् भविष्यत्यग्र मन्येऽहं कालयोगेन सा हि ते।
अध्याचर यथाकालं पार्थिवं वृत्तमुत्तमम्॥ ३३ ॥

ஓ அக்ரஸேனா - தாங்கள் இருவரும் எதிர்காலத்தில் ஒருவரை ஒருவர் கைபிடிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்குத் தகுந்த நேரம் வந்துவிட்டது. அதன் படி நீ நடப்பாயாக என்றார்.

जैमिनिरुवाच

अब्रवीद् अग्रसेनोऽथ किं कर्तव्यं मयाऽधुना।
को नु मन्त्रस्तु सुखदो भविष्यति यशःप्रदः॥ ३४ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனர் கேட்டார் - ஹே முனிச்ரேஷ்டரே - இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என தயவு செய்து கூறுங்கள். நான் எந்த மந்திரத்தை (வழியை) கடைபிடித்தால் நன்மையையும், புகழையும் அடையமுடியும்?.

उद्दालक उवाच

श्रूयतां नागलोकेऽत्र रम्यं मणिपुरं तथा ।
शेषं च वेत्सि बलिनं धरापर्वतधारिणम् ॥ ३५ ॥

உத்தாலகர் கூறினார் - ஓ குழந்தாய் - இவ்வுலகத்தை ஆதிசேஷன் தான் தாங்கியிருக்கிறான். அதே போல் அழகான மலைகளும் காடுகளும் நிறைந்த நாக லோகமான மணிப்பூரையும் நாகராஜன் சேஷன் தான் தனது வமையால் காப்பாற்றி வருகிறான்.

पुरेऽस्मिन् पन्नगपतिर्विख्यातो विषधारकः ।
पातालल्लोकनाम्ना यो राष्ट्रे चैव निवेशितः ॥ ३६ ॥

விஷதாரகன் என்ற சிறந்த நாகராஜன் தான் இந்த இடத்தை உண்டுபண்ணினான். அதன் பின்பு தான் இது பாதால லோகம் எனப் பெயர் பெற்றது.

नागानां वासुकिं चक्रे सर्पाणां तक्षकं प्रभुम् ।
ततः क्रमेण राज्यानि व्यादेष्टुमुपचक्रमे ॥ ३७ ॥

இந்த லோகத்தில் வாஸுகி என்ற பெரிய நாகராஜன் இராஜாவாகவும், அனைத்து பாம்புகளுக்கும் இராஜாவாக தக்ஷகன் என்கிற பாம்பும் இருக்கின்றனர். அதன் பின்பு இந்த லோகத்தில் பற்பல மாநிலங்களும் ஏற்படுத்தப் பட்டன.

यथा भुवि तथाऽधोऽपि सप्तद्वीपाऽधरा धरा ।
महीधरोऽभिषिक्तस्तु राज्ये नागाधिपः स हि ॥ ३८ ॥

அந்த பிரிவில் நாகலோகத்திற்கு இராஜாவாக மஹிந்தர் இருக்கிறார். இந்த அதல, விதல, ஸுதல, தலாதல, ரஸாதல, மஹாதல, பாதாலம் ஆகிய ஏழு த்வீபகர்ப்பத்திற்கும் இவரே தான் இராஜாவாக இருக்கிறார். இதே போல் பற்பல நாடுகளுக்கும் இவர் இராஜாவாக இருக்கிறார்.

अहङ्कारपरो नित्यं प्रजितात्मातिमत्सरी ।
बुध्या भवेद्वै यत् कार्यं तद् बलेन न जायते ॥ ३९ ॥

ஓ குழந்தாய் அக்ரஸேனா - இந்த நாகங்களை அழிக்கமுடியாது. ஏனெனில் அவைகள் தங்ளுடைய பலத்தாலும், அஹங்காரத்தாலும், கொடிய விஷங்களைக் கொண்டு பொறாமையாலும் வாழ்கின்றனர். அவைகளை நாம் பலத்தால் வெல்ல முடியாது. இருப்பினும் கூர்மையான புத்தியைக் கொண்டு அவைகளை ஜெயித்து விடலாம் என்றார்.

मणिपुर्यास्थितोद्याने सुखं वत्स वने चर ।
तद् गच्छ पन्नगस्यास्य सुतावासं पुरोत्तमम् ॥ ४० ॥

ஆதலால் குழந்தாய் அக்ரஸேனா - நீ மணிப்பூர் நகரத்தினுள் ஒரு பூங்காவில் தங்கிக்கொள். அந்த பூங்காவிற்கு நாகராஜனின் மகள் வருவாள். ஆதலால் இப்பொழுது நீ நாகநகரமான மணிப்பூரினுள் செல்லலாம் என்றார்.

जैमिनिरुवाच

एवं तेन तदा प्रोक्तः सोऽग्रसेनोऽविशद्वनम् ।
दोलाभिरूढाभिराभिः पन्नगीभिर्विराजितम् ॥ ४१ ॥

ஜைமினி கூறினார் - ஆர்வமுடைய ஓ ஜனமேஜயா - மஹரிஷி உத்தாலகரின் யோசனைகளைக் கேட்ட பின்பு ஸ்ரீஅக்ரஸேனர் மணிப்பூரினுள் புகுந்தார். அழகான மணிப்பூர் நகரம் நாககுமாரிகளால் ஆங்காங்கே விளையாடிக் கொண்டும், ஊஞ்சலாடிக்கொண்டுமிருந்ததால் அந்நகரம் மேலும் அழகை அதிகரித்துக் கொண்டது என்றார்.

सर्वैर्मनोरमैस्तत्र मण्डिताभिः कुचैर्घनैः ।
स्तूयमानं च रम्याभिः पन्नगीभिर्निरन्तरम् ॥ ४२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் லோஹித (ப்ரஹ்மபுத்ரா) நதியில் நன்கு குளித்துவிட்டு அந்த நகரத்திலுள்ள சிவன் ஹாடகேச்வரரை வணங்கினார். அக்ரஸேனரின் சிறப்பான வழிபாட்டால் சிவனும் மகிழ்ச்சியடைந்தார்.

सन्तुष्टोऽभून्नमस्कृत्य स स्नात्वा लोहिताजले ।
तत्पुरे परमं वीक्ष्य लिङ्गं तं हाटकेश्वरम् ॥ ४३ ॥

அழகான பெரிய மார்பகங்களையுடை நாக கன்னிகைகள் அந்த ஹாடகேச்வரரின் கோவிக்கு வந்து இனிமையான குரல்களுடன் தோத்திரங்களைக் கூறி சிவனை வழிபட்டனர்.

स ईशमभिगम्याथ प्रणिपत्याभिवाद्य च ।
प्रसन्नवदनो भूत्वा पादयोः पतितो मुदा ॥ ४४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் அந்த கோயினுள் சென்று ஆழ்ந்த தியானத்தில் சிவனை வழிபட்டு வணங்கினார். மகழ்ச்சியுடன் சிவனுடைய பாதாரவிந்தங்களைப் பணிந்தார்.

पुरस्ताद् वाजिनं बद्ध्वा पाथेयं बुभुजे शनैः ।
रसाले संनियम्याथ सोऽशेत प्रहरद्वयम् ॥ ४५ ॥

அதன் பிறகு அக்ரஸேனர் தான் வந்த குதிரையை பூங்காவின் ஒரு மரத்தில் கட்டிவிட்டு பசிக்காக உணவைச் சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் நேரம் மரத்தடியில் இளப்பாறினார்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते एकादशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினொன்றாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பன்னிரெண்டாவது அத்யாயம்

காதல்

जैमिनिरुवाच

महीधरस्य महिषी नागेन्द्रीति सुमध्यमा ।
प्रासूत माधवीं कन्यां सुन्दरीं धर्मतत्पराम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - நாகராஜன் மஹீதரனின் மனைவியின் பெயர் நாகேந்த்ரீ. இவள் இயற்கையாகவே மிகவும் அழகானவள் தருமத்தையும் ஆன்மீகத்தையும் பின்பற்றுபவள். இவள் தான் அழகான மாதவி எனும் பெண் பிள்ளையைப் பெற்றெடுத்தவள் ஆவாள்.

सर्वलक्षणसम्पन्ना सा लोके पुरसुन्दरी ।
वर्धमाना पितृगृहे रूपिणी बन्धुपूजिता ॥ २ ॥

இவ்வுலகில் மாதவி அனைத்து லட்சணங்களும் பொருந்தியவளாக மன்மதனால் படைக்கப்பட்டவள். தனது சிறிய வயது முதல் தனது தந்தையின் வீட்டில் அனைத்து சொந்தங்களுடன் வளர்ந்து பெரியவளானவள்.

अतीव रूपसम्पन्नां त्रैलोक्यस्यापि मोहिनीम् ।
महीधरस्तु तां वीक्ष्य कालेन कियता सुताम् ॥ ३ ॥

இவள் மிகவும் அழகாக இருப்பதால் தேவலோகத்திலும், பூ லோகத்திலும், நாகலோகத்திலும் மிகவும் புகழ் பெற்றவள். இராஜா நாகராஜன் மஹீதரன் தனது பெண் திருமண வயது அடைந்ததை நினைத்து கொஞ்சம் கவலைப்பட்டான்.

कस्मै प्रदेया कन्येयमिति चिन्तापरोऽभवत्।
स्वयंवरां तां प्रपच्छ भर्ता कस्ते नु रोचते ॥ ४ ॥

மஹீதரன் தனது பெண்ணின் அழகைப் பற்றியும் அவளுடைய அழகிற்கு நிகராக யாரை தேடுவது என்பதைப் பற்றியும் கவலையுற்றான். அவளுடைய விருப்பத்தைக் கேட்பதற்கு முன்பாகவே மஹீதரன் ஒரு ஸ்வயம் வரத்தை ஏற்பாடு செய்ய நினைத்தான். அதன் பின்பு மாதவியிடம் உனக்கு எந்த மாதிரி கணவன் வேண்டும் எனக் கேட்டான். (ஸ்வயம் வரம் என்பது ஒரு பெண் தானே தன்னுடைய கணவனைத் தேர்ந்தெடுத்தல்).

महीधर उवाच

पन्नगाः पन्नगसुताः सन्ति पुत्रि सहस्रशः।
पट्टस्थान् पश्य वीरास्तांस्ततो ब्रूहि स्ववल्लभम् ॥ ५ ॥

மஹீதரன் கூறினான் - ஓ மாதவி - இந்த நாகலோகத்தில் ஆயிரக்கணக்கான நாக புத்திரர்களும், பன்னக புத்திரர்களும் உள்ளனர். அவர்கள் அனைவரையும் ஸ்வயம் வரத்திற்கு அழைப்போம். அவர்களில் நீ யாரை (எந்த வீரனை) கணவனாக்கிக் கொள்ள விரும்புகிறாய் என்பதைக் கூறவும் என்றார்.

जैमिनिरुवाच

तं प्रत्युवाच पितरं माधव्यथ विलज्जिता।

ஜைமினி கூறினார் - தனது தந்தை கூறியதைக் கேட்ட பின்பு மாதவி வெட்கத்துடன் கூறினாள்.

माधवी उवाच

न पन्नगं कामयेऽहं गरलावेष्टितं जनम् ॥ ६ ॥

மாதவி கூறினாள் - ஓ தந்தையே - நாகலோகத்தில் இருப்பவர்களை நான் கணவனாக்கிக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் அனைவரும் தன்னிடத்தில் விஷத்தைக் கொண்டுள்ளவர்கள். மேலும் அவர்களுடைய விஷத்தால் அவர்களது உடல், மனது மாறுபாட்டை அடைந்திருக்கும்.

महीधर उवाच

देवराजं महाबाहुं वरं वरय शोभने ।
आगमिष्यति लोकेऽत्र कामिनीकामुकः स्वयम् ॥ ७ ॥

மஹீதரர் கூறினார் - ஓ மாதவி நாகர்களை நீ விரும்பாவிட்டால் இந்திரனை திருமணம் செய்துகொள் என்றார். ஏனெனில் இந்திரனும் தேவர்களும் அழகான மனைவியை அடைவதற்காக உலகம் முழுவதும் சுற்றிக்கொண்டிருக்கிறான். இந்த நாகலோகத்திற்கும் வருவார்கள் என்றார்..

जैमिनिरुवाच

पितृवाक्यं समाकर्ण्य माधवी च तमब्रवीत् ।

ஜைமினி கூறினார் - தனது தந்தையின் பேச்சைக் கேட்ட பின்பு மாதவி கூறினாள் -

माधवी उवाच

इन्द्रं न कामये तात सर्वदोषस्य कारणम् ॥ ८ ॥

மாதவி கூறினாள் - ஓ தந்தையே நான் இந்திரனையும் விரும்பவில்லை. ஏனெனில் அனைத்து தவறுகளுக்கும், புகழை அடைய விரும்புவர்களுக்கு இடயூறுகளை செய்வதும் இந்திரன் தானே என்றாள்.

परोदयं न सहते तपोदानादिसाधितम् ।
देवराजो गौतमस्य प्रियां कामयते स्म सः ॥ ९ ॥

சிறந்த தானத்தையும் தருமத்தையும் யாகத்தையும் செய்பவர்களை இந்திரன் ஒரு நாளும் பொருத்துக்கொள்ள மாட்டான். நான் கேள்விப்பட்டிருக்கிறேன் தேவராஜன் இந்திரன் ஒரு முறை கௌதம ரிஷியின் மனைவி அஹலைகையை தவறாக தீண்டியுள்ளான்.

पदं यस्मान्महत् प्राप्तं कृतघ्नः किल वासवः ।
मानुषं तु वरं तात मम योग्यं विचिन्तय ॥ १० ॥

இவ்வாறு நற்குணமற்றவர்களை எவ்வாறு ஒரு அழகான பெண் அடைய விரும்புவாள்?. ஆதலால் ஹே தந்தையே மானிடப் பிறவியில் எனக்குத் தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி சிந்திப்பீர்களாக என்றாள்.

जैमिनिरुवाच

एवंविधं वचः श्रुत्वा विस्मितोऽभून्महाबलः ।

ஜைமினி கூறினார் - இவ்வாறு கூறியதைக் கேட்டவுடன் மிகவும் பலசாயான மஹீதரன் வியந்துபோனான்.

महीधर उवाच

मानुषं न वरं मन्ये, वैष्णवं दोषभाजनम् ॥ ११ ॥

மஹீதரன் கூறினான் - ஓ மகளே மாதவி- மானிடப்பிறவியிலும் வைஷ்ணவனை திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக எவ்வாறு கூறுகிறாய்? என்றார்.

जैमिनिरुवाच

माधवी तत् समाकर्ण्य वचस्तस्य रुषाऽन्विता ।

कदाचिन्नागकन्या सा रतिं हसति या श्रिया ॥ १२ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு கூறியவுடன் மாதவி ஏதும் கூறாமல் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டாள். மாதவியின் முகம் மலர்ந்தும், அழகாகவும், தன் நம்பிக்கையுடனும் காமனால் (மன்மதனால்) பீடிக்கப்பட்ட ரதியைப் போன்றும் கணப்பட்டாள்.

महीधरसुता माता जग्मतुः परिवारिते ।

तदा वसन्ते पुष्पाढ्यं पुरोपवनमुत्तमम् ॥ १३ ॥

வஸந்த ருது ஆரம்பமான அந்த நேரத்தில் மாதவி பூவை சேகரிப்பதன் பொருட்டு தனது நூற்றுக்கணக்கான தோழிகளுடன் மணிப்பூரில் உள்ள அனைத்துப் புஷ்பங்களும் பூத்துக்குலுங்கும் பூங்காவை அடைந்தாள்.

पुष्पावचयमिच्छन्त्यः ययुः सर्वाश्च कन्यकाः ।

सार्धपञ्चदशाब्दास्ता यौवनोद्भेदचञ्चलाः १४ ॥

பதினைந்து வயதடைந்த மாதவியின் தோழிகள் (கன்னிகைகள்) ஒருவரையொருவர் போட்டி போட்டுக் கொண்டு புஷ்பங்களை சேகரிப்பதற்கு ஆரம்பித்தனர்.

कौसुम्भाम्बरधारिण्यः स्फुरत्कञ्चुकपल्लवाः ।
नानाबिल्वफलाभाभ्यां स्तनाभ्यां समलङ्कृताः ॥ १५ ॥

அவர்கள் ஒவ்வொரு கிளைகளையும் வளைத்து புஷ்பங்களை பறிக்கும்போது அவர்களுடைய ரோஸ் கலரிருந்த உடம்பின் மேல் துணி சிறிய காற்றினால் நழுவியதால் பில்வ பழங்களைப் போன்று இருந்த மார்பகங்கள் அவர்களை மிகவும் அழகுபடுத்தின.

रम्यमौक्तिकहारैश्च मण्डितास्ताः शनैर्ययुः ।
नृत्यन्त्यो नूपूररवैस्तालिकाशब्दकैः पथि ॥ १६ ॥

அந்த இளமையானப் பெண்கள் மெல்லமாக நடக்கும்போது அவர்களின் கால் இருந்த கொலுசுகளின் ஒயும், அவர்கள் மார்பில் அணிந்திருந்த ஹாரங்களின் ஒயும் அவர்கள் நடனம் ஆடுவதற்கு ஒத்தபடி ஓசையை எழுப்பின.

गायन्त्यः स्म हसन्त्यः स्म प्रापुः क्रीडावनं महत् ।
परस्परं हसन्त्यस्ताः प्राकुर्वन् पुष्पसञ्चयम् ॥ १७ ॥

அவர்கள் பூங்காவில் புஷ்பங்களை பறிக்கும் போது ஒருவருடன் ஒருவர் பாடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தது அவ்விடம் விளையாட்டுத் திடல் போல் அனது. ஒருவருடன் ஒருவர் பாடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் பூக்களை பறித்தனர்.

अथ पुष्पाण्युपादाय शिरस्याधाय निद्रिताम् ।
पुष्पावचित्त्या स्विन्नाङ्गीं प्राहुर्नागेन्द्रजां हि ताः ॥ १८ ॥

மாதவி பூக்களை பறித்துக் கொண்டிருக்கையில் மிகவும் சோர்வுற்று மயக்கத்துடன் ஒரு மரத்தின் அடியில் விழுந்துவிட்டாள். உடனே அவளாள் பறிக்கப்பட் பூக்கள் கீழே விழுந்து அவளை சூழ்ந்துக் கொண்டது. இதைப் பார்த்து தோழிகள் கூறினர்.

सख्य ऊचुः
भक्त्या प्रादुरभूतां ते स्वप्नं दत्वा रतिस्मरौ ।
कञ्चित् प्रार्थय पूजार्थमनयोर्लिङ्गयोः सखि ॥ १९ ॥

தோழிகள் கூறினார்கள் - மாதவியின் நெருக்கமான தோழி நகைச்சுவையுடன் கூறினாள் - ஓ மாதவி உன்னுடைய பிரார்த்தனையால் நீ அடையவேண்டி நினைத்த மதனையும் ரதியையும் அடைந்தது போல் உன்னுடைய மார்பகங்கள் உள்ளது. மீண்டும் நீ அவர்கள் ஒன்றாக சேருவதற்கு பிரார்த்தனை செய்வாயாக என்றாள். (அதாவது நீ யாருடன் சேர விரும்புகிறாயோ அவனுடன் சேரப்போகிறாய் என்பதை சூசகமாகக் கூறினாள்)

दृष्ट्वाऽऽगताः समालोक्य रूपयौवनसंयुताः ।
कन्यां तां गुणसम्पन्नामिदमिन्द्रो वचोऽब्रवीत् ॥ २० ॥

திடீரென்று அந்த சமயத்தில் அங்கு வந்த இந்திரன் அழகான இளமையான பெண்களைப் பார்த்தான். மேலும் நற்குணம் பொருந்திய இளமையான கன்னிகையைப் பார்த்து கூறினான் -

शक्रः उवाच
अहं वः कामये सर्वा भार्या मम भविष्यथ ।
त्यज्यतां पान्नगो भावो दीर्घमायुरवाप्स्यथ ॥ २१ ॥

சக்ரன் (இந்திரன்) கூறினான் - ஓ அழகான இளமையான பெண்களே - உங்கள் அனைவரையும் நான் மணந்து கொள்கிறேன். (எனக்கு மனைவியாக ஆகிவிடுங்கள்). என்னுடைய சக்தியால் தாங்கள் அனைவரும் இந்த பாம்பு உருவத்தை தவிர்த்து தேவலோக கன்னிகைகளாகி அழிவற்றவர்களாகி விடுவீர்கள் என்றான்.

चलं हि यौवनं नित्यं नरे नागे विशेषतः ।
अक्षयं यौवनं प्राप्ता अमर्यश्च भविष्यथ ॥ २२ ॥

ஓ இளமையான அழகான பெண்களே நாக கன்னிகைகளான உங்களுக்கு இந்த இளைமைப் பருவம் நிறந்தரமல்ல. இந்த இளமைப் பருவம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வயோதிகர்களாகி விடுவீர்கள். ஆதலால் நீங்கள் அனைவரும் என்னை திருமணம் செய்துகொண்டு அழிவற்றவர்களாகி இளமையுடன் மகிழ்திடுங்கள் என்றான்.

जैमिनिरुवाच
तस्य तद् वचनं श्रुत्वा शक्रं तं सुरसत्तमम् ।
अपहास्य ततो वाक्यं नागकन्येदमब्रवीत् ॥ २३ ॥

ஜைமினி கூறினார் - தேவர்களுக்கு தலைவனான இந்திரனுடைய பேச்சைக் கேட்டு அனைத்து நாககன்னிகைகளும் சிரித்தனர். பின்பு மாதவி இந்திரனிடம் கூறினாள் -

माधवी उवाच

मा भूत् स कालो दुर्मेधः भर्ताऽन्यो नो भविष्यति ।

மாதவி கூறினாள் - நாங்கள் உன்னைப் போன்ற தேவர்களை மணந்து கொள்வதைவிட இறந்து விடுவதை மேலாகக் கருதுகிறோம் என்றாள்.

जैमिनिरुवाच

तस्यास्तु वचनं श्रुत्वा शक्रः कोपमुपेयिवान् ॥ २४ ॥

ஜைமினி கூறினார் - மாதவியின் இந்த திமிரானப் பேச்சைக் கேட்ட இந்திரன் அங்கிருந்து கோபத்துடன் சென்றுவிட்டான்.

सख्य ऊचुः

अलं पुष्पवनेनाद्य सन्तप्ता इन्द्रतो वयम् ।
यामः शीतजलं यत्र तत् सरः कमलाकरम् ॥ २५ ॥

ஒரு தோழி கூறினாள் - ஓ தோழிகளே நாம் இந்திரனுடைய வார்த்தைகளைக் கேட்டு கோபமடைந்துள்ளோம். ஆதலால் இங்கு பூ பறித்தது போதுமானது. நாம் அருகிலுள்ள தாமரைக் குளத்திற்குச் சென்று நீரில் விளையாடி தாமரைப் பூவையும் பறிக்கலாம் வாருங்கள் என்றாள்.

जैमिनिरुवाच

एवं तास्तत्सरः प्रापुः पद्मिनीखण्डमण्डितम् ।
हंसा भीताः पलायन्त नुपूरश्रवणाद् वनात् ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு அனைவரும் குளத்திலுள்ள தாமரைப் பூக்களை பறிப்பதற்காக சென்றனர். அங்கு தாமரை மொக்கும், மலர்ந்த பூவும் நறு மணத்தை ஏற்படுத்தியிருந்தது. நாக கன்னிகைகளின் கால் உள்ள கொலுசுகளின் ஓயால் தாமரைக் குளத்தி ருந்த அன்னப் பறவைகள் பயந்து குளத்தின் மறுபக்கத்திற்கு சென்றன.

अस्माकं मानसोल्लासि सरः कलुषितं भवेत्।
पुष्पवत्यो विशेषेण कन्या आयान्ति कामुकाः ॥ २७ ॥

இந்த அழகான நாககன்னிகைகள் தாமரைப் பூவைப் பறித்து குளத்தில் விளையாடப் போகின்றனர் என அன்னப் பறவைகள் நினைத்தன. அவ்வாறு அவர்கள் இதில் விளையாடினால் குளமும் கலங்கி சேற்றுடன் ஆகப்போகிறது என்றும் சிந்தித்தன.

सरस्तीरे दुकूलानि नेतुं न क्षमतेऽनिलः।
तासां गुणमयैः पाशैर्बद्धो निश्चलतां ययौ ॥ २८ ॥

நாககன்னிகைகள் தங்களுடைய ஆடைகளை கழற்ற ஆரம்பித்தவுடன் அனைத்து அன்னப் பறவைகளும் 'மர்மர்-மர்மர்' என்ற ஒயை எழுப்பினர். பின்னர் வேறு வழியின்றி மௌனமாக ஆயின.

सूक्ष्माण्यपि दुकूलानि नेतुं न क्षमतेऽनिलः।
तासां गुणमयैः पाशैर्बद्धो निश्चलतां ययौ ॥ २९ ॥

காற்று கூட அந்த நாக கன்னிகைகளின் ஆடைகளை விட்டு அசையவில்லை. ஜைமினி கூறினார் - காற்று கூட அந்த அழகான நாக கன்னிகைகளை பார்த்து ரசித்தது. ஆதலால் காற்று மற்ற இடங்களுக்குச் செல்லாமல் நாககன்னிகைகளின் ஆடைகளைச் சுற்றி அங்கேயே நின்றது.

ताश्चम्पकाङ्ग्यो विविशुस्तत्सरः शिवलीलया।
परस्परं हाससूक्तीश्चक्रुस्ता अभितः सरः ॥ ३० ॥

நாக கன்னிகைகள் அந்த தாமரைக் குளத்தினுள் இறங்கி மகிழ்ச்சியாக விளையாடிக்கொண்டு குளித்தனர். அவர்கள் இக்கரைக்கு அக்கரைச் சென்றும் அக்கரையிருந்து இக்கரை வந்தும் சம்பக மலர்களைப் போன்று அழகாக ஒருவருடன் ஒருவர் விளையாடி மகிழ்ந்தனர்.

अनन्तश्रीधरं तासां मुखचन्द्रैरलङ्कृतम् ।
तत्सरः शुशुभेऽतीव रत्नाकरनिभं स्फुटम् ॥ ३१ ॥

நாக கன்னிகைகள் அந்த தாமரைக் குளத்தில் விளையாடிக் கொண்டிருந்தது ஆகாயத்திருந்து சந்திரனே மகிழ்ச்சியாக இங்கு வந்து விளையாடிக்கொண்டிருப்பது போல் இருந்தது. குளத்திருந்த தண்ணிரும் நாக கன்னிகைகளின் விளையாட்டால் மகிழ்ந்தது. ஏனெனில் அவர்கள் அணிந்திருந்த நகைகள் தண்ணீரினுள் தெரியும் போது கடல் ரத்னஙகள் இருப்பது போல் அக்குளம் காட்சியளித்து.

ततो हि जलपानार्थं गावो वत्ससमाकुलाः ।
परिवव्रुः सरस्तत्र सवृषाश्च समन्ततः ॥ ३२ ॥

அச்சமயத்தில் அந்த காட்டில் புற்களை மேய்ந்து கொண்டிருந்த கன்றுடன் கூடிய பசுக்கள் தாகத்திற்கு தண்ணீர் குடிப்பதற்காக அக்குளத்திற்கு வந்தன.

ततस्स कोऽपि व्याघ्रश्च घोरनादो बभूव ह ।
तेनाकम्पन्त वत्साश्च गावः श्रान्तास्तथाऽऽतुराः ॥ ३३ ॥

அதே சமயத்தில் மோசமான புயும் உறுமிக்கொண்டு அந்த குளத்திற்கு வந்தது. புயைப் பார்த்த கன்றும், பசு மாடும் பயந்து நடுங்கின. அவைகள் பயத்தின் உச்சக் கட்டத்தை அடைந்து வேறொன்றும் செய்யமுடியாமல் திகைத்து மௌனமாகின.

स दृष्ट्वा चिन्तयित्वाऽग्रः सद्यः सत्यपराक्रमः ।
श्रेष्ठो धनुष्मतां वीरो दयाभावसमीरितः ॥ ३४ ॥

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீஅக்ரஸேனர் கன்று குட்டிகளையும், பசு மாடுகளையும் காப்பாற்ற நினைத்தார். இறக்க மனதுடன் அவைகளை காப்பாற்றுவதற்கு தீர்மானம் கொண்டார்.

रक्ष विधिना गाश्च बाणैर्व्याघ्रमताडयत्।

शरसंनिचयस्थोऽयं तं गावः पर्यवारयन्॥ ३५॥

பசுக்களை காப்பாற்றுவதன் பொருட்டு தன்னுடைய அம்புகளால் புயைச் சுற்றி வளைத்தான். இச் செயலால் பசுக்கள் பயமின்றி அங்கிருந்து காப்பாற்றப் பட்டன.

குறிப்பு - ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து விலங்குகளிடத்திலும் அன்பைச் செலுத்தினார் என்பதற்கு இந்த ஒரு சம்பவம் மட்டு போதுமானது. புயைக் கொல்வதை விட்டு அதை தனது அம்புகளால் சுற்றி கட்டுப்படுத்தி அக்ரஸேனன் தனது இறக்கமான, மென்மையான குணத்தை வெளிப்படுத்தினான். இச்செயல் அக்ரஸேனனின் மனிதாபிமானச் செயல் மற்றும் தெய்வத்திற்கு நிகரான எண்ணத்தையும் வெளிப்படுத்தின.

परित्रातं गोधनं तद् अतिदिव्यं कृतं प्रियम्।

समग्रं वैष्णवं तेजो विनिगूहति तत्र वै॥ ३६॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரின் இறக்க குணத்தாலும் துனிவாலும் பசு விலங்குகள் காக்கப்பட்டன. பொதுவாக வைணவர்கள் தான் பசுக்களின் மேல் அன்பு கொண்ள்வர். இந்த நிகழ்ச்சியை நாககன்னிகை மனதில் குறித்து வைத்துக் கொண்டாள்.

तां विहाय जलकेलिमुत्तमां

सा महीधरसुता तटस्थिता ।

अन्ववैक्षत हरिं यथा रमा

साऽग्रसेनमथ तत्सरस्तटे॥ ३७॥

எவ்வாறு மஹாலக்ஷ்மி ரமா ஸ்ரீவிஷ்ணுவை தனது ஓரக் கண்ணால் பார்த்து தனது விருப்பத்தை தெரிவித்தாளோ அவ்வாறு அந்த குளத்தை விட்டு கரைக்கு வந்த நாக கன்னிகை அக்ரஸேனரைப் பார்த்தாள்.

अग्रसेनं गुणनिधिं पश्यन्ती निश्चलं स्थिता ।
पतिवत् माधवी तं हि दत्तदृष्टिरवैक्षत ॥ ३८ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் குணத்தையும் செயலையும் நாகராஜனின் புதல்வி மாதவி கண் இமைக்காமல் தனது கணவனாக நினைத்துப் பார்த்து இரசித்தாள். தன்னுடைய மனதிற்கு நன்றி சொல் தன்னை தேர்த்திக் கொண்டாள்.

किं न याम्यथवा यामि सुन्दरं पुरुषं विना ।
अमुं विवेकं मदनस्तदीयं व्यालुनाच्छरैः ॥ ३९ ॥

மாதவி நினைத்தால் - அழகான அந்த இளமையான மனிதனும் அவனுடைய செயலால் அவரின் உள் மனதும் என்னால் தெரிந்துகொள்ளப்பட்டது. நான் அவர் அருகில் செல்லலாமா?. செல்லக்கூடாதா?. மாதவி சாதகமாகவும், எதிர்மறையாகவும் நினைத்துப் பார்த்தால். (ஆனால் மன்மதன் தனது வேலையை ஏற்கனவே செய்துவிட்டான்).

ततो ददर्श रुचिरं मनोहरमतीव सः ।
पूजयामास नेत्रं स्वम् अग्रोप्यत्यन्तहर्षितः ॥ ४० ॥

அதே நேரத்தில் ஸ்ரீஅக்ரஸேனரும் நாக கன்னிகையின் பார்வையை நோக்கினார். அவள் தன்னை ஆசையுடன் பார்ப்பதையும் அறிந்தார். அவர் மிகவும் மகிழ்ந்து சந்தோஷமடைந்தார். ஸ்ரீஅக்ரஸேனரும் அழகான நாக கன்னிகையை சந்தோஷமாகப் பார்த்து வியப்படைந்தார். அவரும் தன்னுடைய ஓரக் கண்களால் பார்த்து அவள் மேல் ஆசை கொண்டார்.

अदृष्टपूर्वो देशोऽयं निशि स्वप्ने व्यलोकयम् ।
न दृष्टा हीदृशी स्वप्ने कान्ता सा कामरूपिणी ॥ ४१ ॥

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆசையுற்றனர். இருவரும் தங்களைப் பற்றி தெரிந்து கொள்ளாமலே காதல் கொண்டனர். அச்சமயத்தில் அக்ரஸேனர் நினைத்தார். இந்த அழகான நகரத்தில் அனைத்து இலட்சனங்களும் பொருந்திய அழகான பெண். இது வரை நான் இவ்வளவு அழகான பெண்ணை பார்த்ததே இல்லை என வியப்படைந்தார்.

पुनः पुनरपश्यत्ताम् अग्रसेनः स्ववल्लभाम् ।
निर्निमेषं नृहर्यक्षं नागकन्याऽप्यवीक्षत ॥ ४२ ॥

மாதவி மறுபடி மறுபடியும் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்து காதல் கொண்டாள். ஆனால் முதன் முதல் பார்த்த பொழுதே தன்னுடைய மனதில் அவனை கணவனாகத் தீர்மானித்து விட்டாள். மற்ற நாக கன்னிகைகளும் ஸ்ரீஅக்ரஸேனரை வியப்புடன் பார்த்து மகிழ்ச்சியுற்றனர்.

पतिं तं स्वं प्रार्थयन्तं दृष्ट्वा सा प्रियदर्शनात् ।
निश्चलोऽभूत् स सा चापि पश्यन्ती प्राणवल्लभम् ॥ ४३ ॥

அன்புடனும் மகிழ்ச்சியுடனும் மாதவி வைத்தக் கண் வாங்காமல் தனக்கு கணவனாகப் போகும் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவளுடைய மனதில் அனைத்து தேவதைகளையும் வேண்டி அக்ரஸேனரை அடைய வரம் கேட்டாள்.

ध्यायन्ती मनसा देवीं पार्वतीं शङ्करप्रियाम् ।
भर्तारं देहि मे देवि दाक्षायणि नमोऽस्तु ते ॥ ४४ ॥

உடனே தனது மனதில் பார்வதி தேவியையும், மஹாபிரபு சங்கரரையும் வணங்கினாள். ஓ தாக்ஷாயணி நான் உன்னை வணங்குகிறேன், இங்கிருக்கும் அழகான மனிதரை எனக்கு கணவனாக்கிவிடு என்றாள்.

इति सञ्चिन्तयन्तीं तां वयस्या काचिदब्रवीत् ।
मनोरथस्ते किं जातः किं चिन्तयसि कामिनि ॥ ४५ ॥

மாதவி பார்வதியை நினைத்துக் கொண்டிருக்கையில் ஒரு தோழி கேட்டாள் - ஓ காதலை உடைய பெண்ணே, என்ன நினைத்துக் கொண்டு இப்படிப்பட்ட எண்ணங்களை மனதில் கொண்டு உன்னுடைய ஆசையை வளர்த்துக் கொண்டு இருக்கிறாய்? என்றாள்.

इत्थं सखीनां वचनेन पन्नगी
प्रहर्षिताऽधोवदना लिलेख ।
भूमिं यदाऽङ्गुष्ठनखेन भर्तुः
गुणानिवाग्र्यान् अथ माधवीति ॥ ४६ ॥

இவ்வாறு தோழிகளின் வார்த்தையால் மாதவி மறுபடியும் சுய நினைவாகி வெட்கத்தால் தலையைக் குனிந்து பூமியை தனது கால் கட்டை விரல் கொண்டு எழுத ஆரம்பித்தாள். (அதாவது வெட்கத்தால் தனது காதலை காதலனிடம் சொல்லமுடியாமல் கால் கட்டை விரலால் எழுதி தனது காதலைத் தெரிவித்தாள்).

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते द्वादशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பன்னிரெண்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதிமூன்றாவது அத்யாயம்

வியப்பு

जैमिनिरुवाच

यथा दृष्टमशेषेण चारैरावेदितं तथा।
नागसैन्यपतिं सोऽपि व्यादिदेश महीधरः ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரிடத்தில் மாதவி காதல் கொண்டதைப் பார்த்த ஒற்றர்கள் உடனே நாகலோதகதின் அரசனான மஹீதரனிடம் அதைப்பற்றிக் கூறினர். அரசன் மஹீதரனும் தன்னுடை ஸேனாபதியான சித்ராங்கனுக்கு அணையிட்டான் -

महीधर उवाच

अहो बलमहो वीर्यं प्रविष्टो दुर्मतिस्तलम्।
यान्तु चान्ये च योद्धारः चित्राङ्ग त्वं विजेष्यसे ॥ २ ॥

மஹீதரன் கூறினான் - ஸேனாபதி சித்ராங்கனா - மிகவும் பாதுகாப்பான நம்முடைய நாட்டின் எல்லைக்குள் எவ்வாறு அந்த இளமையான வீரன் நுழைந்தான். யார் அவன்?. நம்முடைய அனுமதியின்றி எவ்வாறு நம் நாட்டுக்குள் வரமுடியும்?. மற்ற வீரர்களையும் அழைத்துக் கொண்டு போய் அவனிடம் சண்டையிட்டு வெற்றியடைந்து வா என்றான்.

जैमिनिरुवाच

तस्य नागस्य निनदं श्रुत्वाऽगच्छत् स सैन्यपः।
सहसैवोत्थितः सोऽग्रः अहो किमिति हि ब्रुवन्॥ ३॥

ஜைமினி கூறினார் - நாக அரசனின் ஆணைப்படி ஸேனாபதி வீரர்களுடன் பூங்காவிற்குச் சென்றான். அங்கு வந்த நாக ஸேனைகளையும்/படைகளையும் பார்த்த அக்ரஸேனர் ஆச்சரியப்பட்டு மரத்தடியிருந்து எழுந்து நின்று அவர்களிடம் இங்கு என்ன நட்க்கிறது என்று கேட்டான்.

अथ सोऽपश्यदव्यग्रः सर्पान् प्रहरणोद्यतान्।

वमतो धमतश्चैव विषपूरप्रवर्षिणः॥ ४॥

அங்கு வந்த படை வீரர்களை அக்ரஸேனர் பார்த்தார். அவர்கள் மிகவும் கோபத்துடன் பேசினார்கள். மேலும் அவர்கள் அவர்களுடைய விஷத்தை அக்ரஸேனன் மேல் கொட்டுவதற்கு/கக்குவதற்கு ஆயத்தமாக இருந்தனர்.

तदा मणिधराः क्रुद्धा ये द्विशीर्षास्त्रिशीर्षकाः।

चतुष्पञ्चफणाश्चान्ये सैन्येन चतुरङ्गिणः॥ ५॥

அந்தப் பாம்புகள் மிகவும் கொடியனவாகவும் அவைகளின் தலையில் மணிகளும், சில பாம்புகள் இரண்டு தலைகளுடனும், சிலர் மூன்று, நான்கு, ஐந்து தலைகளுடனும் அக்ரஸேனரின் நாற்புரமும் சுற்றி வளைத்து நின்றன.

निर्ययुस्ते महावीरा दिव्यरूपवपुर्धराः।

धन्विनो दिव्यकवचा मत्तमातङ्गसंस्थिताः॥ ६॥

ஜைமினி கூறினார் - ஒவ்வொரு நாகமும் மஹா வீரனாகவும், வ மையான உடம்பையும் கொண்டிருந்தது. சில நாகங்கள் கவசங்களை அணிந்து கொண்டு அம்பு வில்லுடன் யானையின் மேல் ஏறி நின்றுக்கொண்டிருந்தன.

हारकुण्डलकेयूरकिरीटघनमौक्तिकैः।

मस्तका भास्वरा येषां मणिरत्नैर्विभूषिताः॥ ७॥

பல நாகங்கள் தங்கத்தில் அணிகலன்களையும், மகுடத்தையும், முத்து பவழங்களால் தோடு/குண்டலங்களையும், தலையில் உயர்ந்த மணியையும் அணிந்திருந்தன. இவ்வாறு அவைகள் பற்பல விலையுயர்ந்த மணிகளால் தன்னை அழகு படுத்திக்கொண்டிருந்தனர்.

सुविचित्राः सुवर्णस्य नानालङ्कारमण्डिताः ।
हयै रथैर्ययुश्चान्ये पादाताश्च सहस्रशः ॥ ८ ॥

தங்க அணிகளன்களுடன் அனைத்து பாம்புகளையும் (நாகங்களையும்) பார்க்கும்போது மிகவும் அழகாக இருந்தன. சில நாகங்கள் குதிரையையும், சிலர் யானையையும் ஏறிச் செலுத்திக்கொண்டிருந்தன. அங்கு நூற்றுக்கணக்கான வீரர்களும் நின்று கொண்டிருந்தனர்.

ततो व्याप्य स्थिता अग्रेऽग्रसेनमपतन्नभि ।
तेषां मुखेभ्यो निष्पेतुर्घोरास्ता विषवृष्टयः ॥ ९ ॥

இவ்வாறு அனைத்து பாம்புகளும் அக்ரஸேனரின் முன்பு தங்களுடைய முகத்திருந்து கொடிய விஷத்தை காற்றின் மூலம் ஊதி அவரைத் தாக்குவதற்கு முனைப்புடன் நின்றுகொண்டிருந்தன.

विस्फुलिङ्गसहस्रैस्तु दह्यमानं तु तद्बलम् ।
निजं वीक्ष्य ह्यग्रसेनो ररक्षाथ स्वपौरुषम् ॥ १० ॥

இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான கொடிய விஷமுடைய பாம்புகளைப் பார்த்த ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய வீரத்தாலும் மனதிலுள்ள தன் நம்பிக்கையாலும் ஒவ்வொரு பாம்பும் என்ன செய்கின்றது என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

नदन् मेघेष्विवार्कोऽग्रस्तेषां मध्ये व्यतिष्ठत ।
सूर्यो दिवि चरन् मध्ये मेघानामिव सर्वशः ॥ ११ ॥

அப்படிப்பட்ட பாம்புக் கூட்டங்கள் நடுவே வீரத்துடனும் தன் நம்பிக்கையுடனும் சென்ற ஸ்ரீஅக்ரஸேனர் மேகக் கூட்டங்களின் நடுவில் எவ்வாறு சூரியன் ஒளியால் திறமையுடன் பிரகாசமாக விளங்குவானோ அவ்வாறு பாம்புக் கூட்டங்கள் நடுவில் அவர் திகழ்ந்தார்.

पन्नगश्रेष्ठभूयिष्ठं व्यादिष्टं तस्य निग्रहे ।
अनीकं सुमहारौद्रं नानाप्रहरणोद्यतम् ॥ १२ ॥

அந்த நேரத்தில் நாகலோகத்தின் ஸேனாபதி சித்ராங்கனன் தனது படைகளை பற்பல ஆயுதங்களைக் கொண்டு அந்த (ஸ்ரீ அக்ரஸேனனை) வீரனை சிறைபிடியுங்கள் என்று அணையிட்டான்.

अग्रसेनो रणे वीरः स च तानभ्यवर्तत ।
तदाश्चर्यं समभवद् यदेकस्स समागतः ॥ १३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் வீரமாக அனைவரையும் பார்த்தார். ஓ ராஜன் - ஜனமேஜயா - இது மிகவும் வியப்பானது. இவ்வாறு நூற்றுக்கணக்கான வீரர்கள் இருக்கும் நேரத்தில் எவ்வாறு அவர்களை எதிர்த்து ஒருவர் மட்டும் சண்டையிட முடியும்.

अयुध्यत महावीर्यः पन्नगैः सह संयुगे ।
तेषामेव च जग्राह परिघांस्तोमरानपि ॥ १४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் வீரத்துடனும் கோபத்துடனும் பயங்கரமாகவும் தன்னிடம் வந்த பாம்புகளுடன் சண்டையிட்டார். இதனிடையில் தீடீரென ஒரு பாம்பு அக்ரஸேனரிடமிருந்த தோமரத்தையும் பரிகையையும் (தோனி, அம்பரத்தை) வெடுக்கென்று பிடுங்கி அவரை ஆயுதமில்லாமல் ஆக்கியது.

सोऽसिना विचरन् मार्गानेकः शत्रुनिबर्हणः ।
इति प्रकारान् द्वात्रिंशद् विचरन्नाभ्यदृश्यत ॥ १५ ॥

தனது எதிகளை அழிப்பதற்காக ஸ்ரீஅக்ரஸேனர் கத்தியைக்கொண்டு பல தந்திரங்களைச் செய்தார். அவர் தனியாக இருந்து சண்டையிட்ட பொழுதும் அவரை யாராலும் வெற்றி கொள்ள முடியவில்லை.

एकं सहस्रशश्चात्र ददृशू रणमूर्धनि ।
क्रीडन्ति बहुधा युद्धे व्यादितास्यमिवान्तकम् ॥ १६ ॥

கத்தியைக் கொண்டு ஸ்ரீஅக்ரஸேனர் பற்பல தந்திரங்களால் போர் புரியும் போது அவர் எதிகளுக்கு நூற்றுக்கணக்கான

அக்ரஸேனராகத் திகழ்ந்தார். ஒரு இடத்தில் சண்டை போட்டுக் கொண்டிருந்தவர் தீடீரென தாவி வெகு விரைவில் மற்றொரு இடத்தை அடைந்து அங்கு போர் புரிந்தார். இதனால் நாக வீரர்கள் பலர் இறந்தனர்.

सम्प्रहृष्टस्ततो युद्धे तेजसा चाप्यपूर्यत ।
असिचर्मधरो वीरः स्वस्थः संग्रामलालसः ॥ १७ ॥

போர் களத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் வெறியுடனும் கோபத்துடனும் திறமையாகவும் உற்சாகத்துடனும் வாள் கொண்டு எந்த கவலையுமின்றி போர் புரிந்தார். இதைப் பார்த்த நாக வீரர்கள் அனைவரும் வியப்படைந்தனர்.

तनुत्रेण विहीनश्च खड्गपाणिर्युवाग्रणीः ।
अजेय इति तं मत्वा युद्धायाभिमुखः स्थितः ॥ १८ ॥

எவ்வித பாதுகாப்புமின்றி தன்னிடம் கத்தியை (வாள்) மட்டும் வைத்துக்கொண்டு வெற்றியடைந்து விடலாம் என போர் புரியும் அக்ரஸேனருக்கு முன்பு மணிப்பூரினுள் நுழையும் போது ரிஷியினுடைய ஆலோசனையுடன் நாக வீரர்களிடம் போர் செய்து வெற்றியடைய முடியாது என்பதும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனால் அவர்களிடம் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமே போர் புரிந்தான். இருப்பினும் அவர்களை அன்பால் மட்டுமே வெற்றியடையமுடியும்.

सोऽभिभूय रणे सर्पानग्रसेनः समास्थितः ।
सिंहः प्रमुखतो दृष्ट्वा गजमेकं यथा वने ॥ १९ ॥

போர் களத்தில் அக்ரஸேனர் உண்மையாலுமே யானையின் எதிரில் சிங்கமாகத் திகழ்ந்தார். அவருடைய திறமையான, தந்திரமானச் சண்டையால் நாக வீரர்களை கோபமடையச் செய்தார்.

ससर्ज पान्नगीं मायां विषज्वालासमाकुलाम् ।
तया दहाम्यग्रसेनं ह्येष मायामयो नरः ॥ २० ॥

சந்தேகத்திற்குரிய இந்த வீரனை நாக ஸேனாபதி சித்ராங்கனன் கொடிய விஷத்தை நெருப்பாகக் கக்கி கொல்ல தீர்மானித்தான். இந்த எண்ணத்தைக் கொண்டு நாக வீரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அக்ரஸேனரை நெருங்கின.

ततः पन्नगबाणौघैर्मर्मभेदिभिराशुगैः ।
रुधिरौघप्लुतैर्गात्रैर्बाणवर्षैः समाहतः ॥ २१ ॥

உடனே போரின் படைத் தலைவனான சித்ராங்கனன் மிகவும் வேகமாக வந்து பற்பல அம்புகளை எய்து அக்ரஸேனனைத் தாக்கினான். நூற்றுக் கணக்கான அம்புகளால் ஸ்ரீஅக்ரஸேனனின் உடம்பில் குத்தப்பட்டு அதிருந்து இரத்தம் கொட்டின.

सोऽतिविद्धो ह्यग्रसेनः सुसंक्रुद्धो व्यकम्पत ।
ततोऽवप्लुत्य सहसा रथपार्श्वे व्यवस्थितः ॥ २२ ॥

தன்னுடைய உடம்பு அம்புகளால் துளைக்கப்பட்ட போதிலும் தன்னிடம் வீரத்தை கொண்டுள்ள அக்ரஸேனர் சித்ராங்கனனை சுற்றி வளைத்து பின்புறத்திருந்து அவனுடைய தேரில் குதித்தான்.

पन्नगैः सुमहाकायैर्वेष्टितो लोमहर्षणैः ।
येषां निश्श्वासवातेन प्रदीप्त इव संयुगे ॥ २३ ॥

அந்த பெரிய தேர் சித்ராங்கனனுடைய பெரிய உருவத்திற்கு அழகாக இருந்தது. கோபமடைந்த சித்ராங்கனன் பெருமூச்சுடன் விஷம் கலந்த காற்ற தனது வாயிருந் உமிழ்ந்தான். ஆதலால் அந்த தேரின் அருகில் இயற்கை காற்றுடன் அந்த விஷம் கலக்கப்பட்டது.

व्यथितोऽथ स चित्राङ्गः सैन्यं वचनमब्रवीत् ।
मायामाश्रित्य युध्यस्व प्रमादे किमुपेक्षसे ॥ २४ ॥

உடனே கோபமடைந்த சித்ராங்கனன் போர் வீரர்களுக்கு உங்களின் மாய சக்திகளைக் கொண்டு எதிரியிடம் சண்டையிடுங்கள் என ஆணையிட்டான். இது போன்று மாயைகளைக் கொண்டு ஒரு மனித வீரனுடன் சண்டையிடுவது தகுந்த முறையாகாது. இருப்பினும் அந்த இளைஞனுடைய வீரத்தை முறியடிக்க வேண்டும் என்றான்.

मुमोच बाणान् सञ्छन्नो मायाधारी फणीश्वरः ।
पौरुषेण समायुक्तः समैक्षत दिशो दश ॥ २५ ॥

உடனே சித்ராங்கனன் மாயமாக மறைந்து இருந்து கொண்டு அக்ரஸேனனிடம் சண்டையிட்டான். அக்ரஸேனனின் அம்புகளை எதிர்த்தான். இருப்பினும் அக்ரஸேனன் தனது திறமையால் சித்ராங்கனனை நோக்கி ஒரே நேரத்தில் பத்து திசைகளுக்கும் அம்புகளை எய்ந்தான.

ततः कथञ्चित् चित्राङ्गः पान्नग्या मायया तया ।
सर्पबाणैरग्रसेनं बबन्ध शरबन्धने ॥ २६ ॥

முடிவில் சித்ராங்கனன் மாயமாக மறைந்திருந்து தன்னுடைய நாகபாச அஸ்த்ரத்தால் ஸ்ரீஅக்ரஸேனனை சுற்றி வலைத்துப் பிடித்தான்.

स तु वेष्टितसर्वाङ्गो निष्प्रयत्नः कृतस्तदा ।
न विव्यथे स भूतात्मा सर्वतः परिवेष्टितः ॥ २७ ॥

சித்ராங்கனன் நாகபந்த அம்பை எய்ததால் ஸ்ரீஅக்ரஸேனரின் உடல் முழுவதும் பாம்பு சுற்றிக்கொண்டது. அக்ரஸேனரால் எதுவும் செய்ய இயலவில்லை. இருப்பினும் தன்னுடைய வீரத்தை இழக்கவில்லை.

वध्यतामिति चित्राङ्गः प्रोवाचामर्षितो वचः ।
इत्येवमुक्तं वचने महामात्रस्तदाऽब्रवीत् ॥ २८ ॥

உடனே நாக ஸேனாபதி மற்ற வீரர்களைப் பார்த்து ஸ்ரீஅக்ரஸேனரை கொல்லுங்கள் என்று கூறினான். அங்கு திடீரென வந்த அரசன் நாகராஜன் கூறினான் –

विज्ञाय च वधं वाऽस्य पूजां वा त्वं करिष्यसि ।
अयं हि पुरुषोत्कृष्टः सर्वथा मानमर्हति ॥ २९ ॥

முதல் நாம் இந்த இளமையான வீரனைப் பற்றி தெரிந்து கொள்வோம். அதன் பிறகு இவனைக் கொல்ல வேண்டுமா? அதற்கு இவன் தகுதி படைத்தவனா? அல்லது இவனை கௌவிக்கவேண்டுமா? என்பதைப் பற்றி யோசிப்போம். திறமை வாய்ந்த வீரனை எப்போதும் நாம் கௌரவிக்கவேண்டும் என்றான்.

सर्वतो वेष्टिततनुर्न व्यथामेति भोगिभिः ।
कुलशौण्डीर्यवीर्यैश्च सत्त्वेन च समन्वितः ॥ ३० ॥

ஸ்ரீஅக்ரஸேனன் பாம்புகளால் சூழப்பட்டு, கட்டப்பட்டிருந்த போதிலும் அவனுடைய துணிச்சல் ஒரு நொடிப் பொழுதும் குறையவில்லை. சிங்கத்தைப் போன்று காட்சியளித்தான். இது அக்ரஸேனனின் வீரமான பரம்பரையை மேல் உயர்த்தியது.

सर्वसङ्ग्राममार्गज्ञो न चिन्तयति किञ्चन ।
रक्ष्यतामिति चोक्ते तु तथेत्याह स सैन्यपः ॥ ३१ ॥

இப்படிப்பட்ட பல தடைகளின் நடுவிலும், எதிரி நியாயமற்ற மாயையைக் கொண்டு போர் புரிந்தமையிலும் அக்ரஸேனன் தனது மனதில் பயம் கொள்ளவில்லை. தனது முழு வீரத்தையும் போரில் காட்டி தன்னை காப்பாற்றிக் கொண்டுள்ளான். ஆதலால் இவன் நம்மால் காப்பாற்றப்பட வேண்டும் என அரசன் கூறினான். ஆனால் அரசன் நாகராஜனால் போரின் உண்மை புரிந்துகொள்ளப் பட்டிருந்தது. அரசன் பொதுவாகக் கூறினான் –

संरक्षिणस्ततो दत्त्वा ह्यग्रसेनस्य धीमतः ।
नागराजस्य भवनं चित्राङ्गः फणिपो ययौ ॥ ३२ ॥

சித்ராங்கனன் அக்ரஸேனனை பாதுகாப்பாக நாகபானத்தால் கட்டியிருப்பால் பாதுகாவலர்களிடம் கூறி அக்ரஸேனனை (அரசன் நாகாரஜான் மஹீதரனின் ராஜபவனத்திற்கு) அழைத்துவரும்படிக் கூறினான்.

जाग्रतो ह्यग्रसेनस्य सा निशा व्यत्यवर्तत ।
ततः प्रभाते विमले पक्षिव्याहारसङ्कुले ॥ ३३ ॥

அன்று இரவு ஸ்ரீஅக்ரஸேனன் தூக்கமின்றி தவித்தான். தன்னை அறியாமல் இருந்தபோது சூரியன் உதித்து பறவைகளின் ஒ யால் மறுநாள் மலர்ந்தது என்பதை அறிந்தான்.

नैशाकरे रश्मिजाले क्षणदाक्षयसंहृते ।
नभस्यारुणसंस्तीर्णे पर्यस्ते ज्योतिषां गणे ॥ ३४ ॥

இரவு முடிவடையும் வேளை சந்திரன் தன்னுடைய கிரணங்களை சுருக்கிக் கொண்டிருந்தான் வானத்தில் சிவப்பான வண்ணம் தெரிந்தது உதய சூரியன் உதித்தான் நக்ஷத்திரங்கள் மறைந்தன.

यदा नागैश्चेष्टितं तैरग्रः सूर्यमुदैक्षत ।
तदा निश्चलया दृष्ट्या मनसा प्रार्थयद्धरिम् ॥ ३५ ॥

நாகபந்தத்தால் கட்டப்பட்டிருந்த அக்ரஸேனனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. உதயமாகும் சூரியனைப் பார்த்து என்னை இந்த துயரத்திருந்து நீக்க வேண்டும் என வழிபட்டான், துதித்தான்.

अग्रसेन उवाच

नमः सवित्रे सूर्याय पूष्णे ज्योतिष्मते नमः ।
नमः सप्ततुरङ्गाय नित्यं व्योमचराय ते ॥ ३६ ॥

அக்ரஸேனர் சூரியனை வணங்கிக் கூறினார் - இவ்வுலகத்தை ஏற்படுத்துவதும், காப்பதும், ஒளியைக் கொடுப்பதும், உன்னுடைய தேரில் ஏழு குதிரைகளைப் பூட்டி தினமும் வானத்தில் சுற்றி வருபவரான கடவுளான சூரியனே உன்னை மறுபடியும் மறுபடியும் வணங்குகிறேன் என்றான்.

मेषादीनामधीशाय मासि मासि नमो नमः ।
अयनद्वयकर्त्रे च प्रकाशाय नमोऽस्तु ते ॥ ३७ ॥

ஓ சூரியக் கடவுளே - நீ அனைத்து கிரகங்களுக்கும் தலைவனானவன். அனைவருக்கும் தலைவனாக இருந்து சுற்றி வருபவன். நீ தக்ஷிணாயனம் உத்தராயனம் என்ற (வலது புறம், இடது புறம் என இரு வழியில் நகர்ந்து) பாதையை மேற்கொண்டு இவ்வுலகத்திற்கு ஒளியைக் கொடுக்கிறாய். இவ்வாறு சிறப்பையுடைய உன்னை மறுபடியும் மறுபடியும் வணங்குகிறேன்.

मूकान्धबधिराणां च वाङ्नेत्रश्रोत्रदाय च ।
मूर्धार्तिशूलकुष्ठानां नाशकाय नमोऽस्तु ते ॥ ३८ ॥

ஓ சூரியனே நீ ஊமையைக் கூட பேசவைக்கவும், குருடனைக் கூட பார்க்கவைக்கவும், காது கேளாதவனைக் கூட கேட்கவைக்கச் செய்யும் திறமைபடைத்தவன். மேலும் உடம்பிலுள்ள குஷ்ட ரோகங்களையும் கூட போக்கடித்து விடுவாய். ஆனால் நான் மட்டும் உன்னுடைய அருளை பெற முடியாதவனாய் இருக்கிறேன்.

नमः सुवर्णवर्णाय सहस्रकिरणाय च ।
जगतामेकनेत्राय भवते भास्कराय च ॥ ३९ ॥

தங்கமயமான ஆயிர கிரணங்களையும் ஒளியையும் இவ்வுலகத்திற்கு கொடுத்து எங்களுக்கு ஒரு கண்ணாகத் திகழும் முழு சூரியனே உங்களை நான் வணங்குகிறேன்.

दिवाकराय पिङ्गाय पयःस्रष्ट्रे घनाय च ।
नमः पर्यायरूपाय जन्मत्राणक्षयाय ते ॥ ४० ॥

தாங்கள் தான் பகல் கடவுள், மஞ்சள் நிறமுடையவர், தண்ணீரை சேகரித்து மேகமாக மாற்றுபவர்,

நான்கு யுகத்திலும் அனைவராலும் பற்பல பெயரால் வணங்கி அவர்களை காப்பாற்றி அழிக்கும் திறமையைப் படைத்தவர்.

ऋग्वेदरूपिणे तुभ्यं नमो ब्राह्मणरूपिणे ।
यजुःसामाथर्वकर्त्रे पुराणागमकारिणे ॥ ४१ ॥

ஹே பகவன்- தாங்களே ருக் வேதமாகவும், ப்ரம்ம ரூபமாகவும், யஜுர் வேதமாகவும், ஸாம வேதமாகவும் அதர்வ வேதமாகவும் புராணம் ஆகமங்களாகவும் இருக்கிறீர்கள். தாங்கள் தான் அனைத்தையும் ஏற்படுத்தினீர்கள்.

गाथेतिहासकर्त्रे ते नमो ब्रह्मस्वरूपिणे ।
नमो विश्वस्वरूपाय रुद्ररूपाय ते नमः ॥ ४२ ॥

கதைகளையும், இதிஹாஸங்களையும் ஏற்படுத்தினீர்கள். ப்ரம்மத்தின் ரூபமாகவும், தாங்களே இவ்வுலகத்தின் ரூபமாகவும், விஷ்ணுவாகவும், அழிவை ஏற்படுத்தும் ருத்ரனாகவும் இருக்கிறீர்கள்.

विश्वस्य वाञ्छितकराय मनोरमाय
विश्वेश्वराय पुरुषाय सदाऽमलाय ।
अद्याहवे जयकराय विमुक्तिदाय
हंसाय चण्डघृणये मणिकुण्डलाय ॥ ४३ ॥

ஹே பகவன் - இவ்வுலகத்தில் உன்னை மனதால் வேண்டப்படுபவர்களுக்கு வேண்டியவற்றை கொடுத்தும், உயிருக்கு போராடுபவனை காப்பாற்றியும் இவ்வுலகத்தில் உயர்ந்த புருஷனாகி அழுக்கற்றவனாகத் திகழ்கிறாய். தாங்கள் உயர்ந்த நவரத்தின மணிகளாலும் நகைகளாலும் காதில் குண்டலங்களையும் அணிந்து ஒளியுடன் இருக்கிறீர்கள். தாங்கள் தான் என்னை இந்த நாகபந்தத்தி ருந்து காப்பாற்றி வெற்றியடையச் செய்யவேண்டும்.

स्तूयसे प्रपितः सूर्यः त्वं वरं सम्प्रयच्छ मे ।
बन्धनात् संविमुच्येय सत्यमेतद् भवेदिति ॥ ४४ ॥

ஓ என்னுடைய பெரிய தாத்தாவே (பிரபிதாமஹர்) - (ஶ்ரீஅக்ரஸேனர் சூரிய வம்சத்தில் பிறந்தவர்) - என்னுடைய பிரார்த்தனையை ஏற்று எனக்கு உடனடியாக அருளைப் பொழியுங்கள். என்மீது அன்பு கொண்டு என்னை இந்த நாகபந்தத்திருந்து வெளியில் கொண்டுவாருங்கள் என்றார்.

जैमिनिरुवाच

अदात्स्तोत्रेण सन्तुष्टो देवोऽर्कः श्रेय उत्तमम् ।
रविप्रसादं स प्राप्य नागपाशाद् व्यमुच्यत ॥ ४५ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா - இந்த ஸ்தேத்ரத்தால் மகிழ்ச்சியடைந்த சூரிய பகவான், ஶ்ரீஅக்ரஸேனருக்கு அருளைப் பொழிந்து, அவரை நாகபாசத்திருந்து வெளியில் கொண்டு வந்தார்.

सूर्यस्तवमिदं पुण्यं यः पठेत् सुसमाहितः ।
बन्धनस्थो विमुच्येत सत्यं व्यासवचो यथा ॥ ४६ ॥

ஓ ஜனமேஜயா - நல்ல மனதுடனும் நம்பிக்கையுடனும் யார் இந்த சூரியனுடைய தோத்திரத்தை படிக்கிறார்களோ அவர்களுடைய துயரம் அனைத்தும் சூரிய பகவானின் அருளாள் போக்கடிக்கப்படுகிறது.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते त्रयोदशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஶ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதிமூன்றாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமத் அக்ரபாகவதம்

பதினான்காவது அத்யாயம்

வழிபாடு

जैमिनिरुवाच

जलक्रीडाविहारश्च मातुरग्रे निवेदितः ।
नागराजकुमारी च तदा मूका व्यलक्ष्यत ॥ १ ॥

ஜைமினி கூறினார் - மாதவியின் தோழிகள் ராணியிடம் தாங்கள் பூக்களை பறித்து விட்டு அங்கிருந்த தாமரைக் குளத்தின் தண்ணீரில் விளையாடிவிட்டு (ஜலக்ரீடை) வந்ததைக் கூறினர். அதன் பிறகு அரச குமாரி மாதவி ஏதோ காரணத்தால் பேசாமலேயே இருக்கிறாள் எனக் கூறினர். (அதாவது அக்ரஸேனரைப் பார்த்த பிறகு அவள் அவனையே நினைத்துக் கொண்டுள்ளதாகக் கூறினர்).

नागेन्द्री उवाच

का व्यथा किमिदं कष्टं माता पृच्छति ते मुहुः ।
कस्मादिदं समुत्पन्नं दुःखसाध्यं मनोरमे ॥ २ ॥

நாகேந்திர கூறினாள் - மாதவியின் அருகில் சென்று ஓ குழந்தாய் - எதை நினைத்துக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறாய்?. என்ன நடந்தது?. ஏன் இவ்வாறு பேசாமல் இருக்கிறாய்?. எப்படி உனக்கு இந்த நிலை ஏற்பட்டது?. ஏதாவது கஷ்டமா?.

महावीरस्तव पिता देवानामपि दुर्जयः ।
किं व्यथा त्वन्मुखे स्वेदो नासाग्रे च विराजते ॥ ३ ॥

ஓ நாககுலத்தில் பிறந்த அழகான பெண்ணே - உன்னுடைய தந்தை சிறந்த வீரர். அனைத்து தேவதைகளையும் கூட வெற்றிகொண்டு விடுவார். ஏன் பயப்படுகிறாய்?. ஏன் உன் முகம் இவ்வாறு வெண்மை அடைந்துள்ளது?, ஏன் உன்னுடைய மூக்கும் உதடும் வேர்க்கிறது?.

सम्पूर्णचन्द्रप्रतिमं मुखं चन्द्रो यथा घने ।
श्वासान् मुञ्चसि वत्से त्वं न रतिं यासि च क्वचित् ॥ ४ ॥

அன்பான மகளே - உன்னுடைய அழகான சந்திரனைப் போன்ற முகம் மேகக்கூட்டங்களிடையே எவ்வாறு சந்திரன் ஒளியுடன் திகழ்வானோ அவ்வாறு மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால் நீ விடும் பெருமூச்சு (உன்னுடைய மூக்கிருந்து வரும் சூடான காற்று) உன்னை மன்மதன் ரதி ஆட்கொண்டிருப்பானோ எனத் தோன்றுகிறது.

जैमिनिरुवाच

सर्वम् उक्त्वा च कामेन मोहिता परिपीडिता ।
स्मरन्ती पतिभावं सा नागपुत्री रुरोद हि ॥ ५ ॥

ஜைமினி கூறினார் - ஆசையினால் பீடிக்கப்பட்ட நாகபுத்ரியானவள் தன்னுடைய அம்மாவிடம் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்ததையும், அவனிடம் கொண்டுள்ள மோஹத்தையும் சொல்லமுடியாமல் அழுதுகொண்டே அனைத்தையும் கூறினாள்.

जैमिनिरुवाच

लज्जावती महाभागा मातरं भृशमाऽऽरुदत् ।

. ஜைமினி கூறினார் - மாதவி தன்னுடைய அம்மாவிடம் தன்னுடைய (கல்யாணத்தை) மேன்மையைப் பற்றி அழுதுகொண்டே கூறினாள்.

माधवी उवाच

लज्जाकरं हि नारीणां यौवनं क्लेशकारणम् ॥ ६ ॥

மைதவி கூறினாள் - பொதுவாக பெண்களுக்குரிய வயதில் ஆசை ஏற்படும் போது வெட்கம் தானாகவே வந்துவிடுமல்லவா? என்றாள்.

सरस्तीरे यथा कोऽपि पुरुषोऽवगतो हि मे ।
मनुष्याणां च सर्वेषां यो विशिष्टतमो नरः ॥ ७ ॥

ஓ அம்மா – நான் குளத்தின் கரையில் ஒரு அழகான வீரனைப் பார்த்தேன். அவன் பார்ப்பதற்கு தேவர்கள், நாகர்கள், மனிதர்கள், கின்னரர்கள், யக்ஷர்கள், ரிஷிகளைவிட சிறந்தவனாகத் தெரிந்தான். அவன் என்னுடைய மனதை ஈர்த்துவிட்டான்.

नागेन्द्री उवाच

न हि यस्य कुलं पुत्रि न कीर्तिर्नापि पौरुषम् ।
कश्चिज्जानाति तत्त्वेन किमिदं त्वं विमुह्यसे ॥ ८ ॥

நாகேந்த்ரீ கூறினாள் – பெண்ணே – நீ அவனுடைய குலத்தை பற்றியும் எங்கு வசிக்கிறான் என்பதைப் பற்றியும் அறிவாயா? அவனைப் பற்றி எதையுமே தெரிந்து கொள்ளாமல் எவ்வாறு நீ அவனை கணவனாக அடையமுடியும்?.

माधवी उवाच

शिष्टारूपसम्पन्नो मनोज्ञः प्रियदर्शनः ।
देवतानामृषीणां वा नेदृशो फणिनामुत ॥ ९ ॥

மாதவி கூறினாள் – ஓ அம்மா – அவர் மிகவும் நல்லவர், அழகானவர், நல்ல மனதையுடையவர், அன்பானவர். இவரைப் போன்று தேவர்களையும் ரிஷிகளையும் ஏன் நாகர்களையும் கூட இதுவரை நான் கண்டதில்லை.

न ह्यसौ प्राकृतः कश्चिद् यः प्रविष्टोऽत्र युध्यति ।
लोकेऽन्यलोके विख्यात एकः शत्रुनिर्वहणः ॥ १० ॥

ஓ அம்மா – அவரை சாதாரண மனிதனாக நினைக்காதே. அவர் யாருடைய அனுமதியுமின்றி நாக லோகத்தினுள் நுழைந்து தன்னுடை வீரத்தை நிருபித்திருக்கிறார். அவருடைய வீரத்தை பார்க்கும்போது அவருக்கு இந்த லோகத்திலும் மேல் லோகத்திலும் கூட யாருமே எதிரிகள் இருக்கமாட்டார்கள் போல் தெரிகிறது. அந்தளவிற்கு அவர் திறமையானவர் மற்றும் வீரமானவர் ஆவார்.

स पन्नगैः शतगुणं विशिष्टश्चारिसूदनः ।
सम्प्रविष्टो मणिपुरं मूर्ध्ना चित्राङ्गमाक्रमत् ॥ ११ ॥

ஓ அம்மா - நாக கணங்கள் நூறு மடங்கு வீரத்தையும் திறமையையும் கொண்டிருப்பின் அவர் அதைவிட வீரத்தையும் திறமையையும் கொண்டவர். இந்த மணிப்பூரினுள் நுழைந்து நம்முடைய நாகலோகத்தின் ஸேனாபதி சித்ராங்கனுடன் போர் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்.

कान्तः पद्मपलाशाक्षो मत्तमातङ्गविक्रमः ।
त्यक्ष्याम्यहं ततः प्राणानचिरात् स पतिर्न चेत् ॥ १२ ॥

ஓ மஹாராணியே - அவர் மிகவும் அழகானவர். தாமரைப் போன்ற கண்களையுடையவர். யானையைப் போன்று பலத்தையும் வீரத்தையும் கொண்டவர். அவரை நான் கணவனாக அடையவில்லை எனில் என்னுடைய உயிரை விட்டு விடுவேன்.

नान्यं देवं नासुरं वा गन्धर्वं वा मनोरमम् ।
वरयामि, वरो लोके विना तं मे न रोचते ॥ १३ ॥

ஓ அம்மா - அவரைத் தவிற தேவர்களும் அஸுரர்களும், கந்தர்வர்களும் கூட என் மனதிற்கு அழகானவர்களாகத் தெரியவில்லை. அவரையே நான் விரும்புகிறேன். அவர் இல்லாமல் என்னால் உயிர் வாழமுடியாது.

जैमिनिरुवाच

अग्रसेनस्य रूपेण शरैर्मन्मथचोदितैः ।
अतिविध्दा च मनसा मन्मथेन प्रदीपिता ॥ १४ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனருடைய ரூபமும் அழகும் வீரமும் திறமையும் இளவரசி மாதவியின் மனதில் ஆசை மன்மதனால் தூண்டப்பட்டது. அவளுடைய மனது மன்மத பாணங்களால் பீடிக்கப்பட்டிருந்தது. அவளுடைய முழு மனதும் அவன்பால் காதல் கொண்டிருந்தது.

चित्तसङ्कल्पभावेन सुचित्ताऽनन्यमानसा ।
मनोरथेन सम्प्राप्तं रमतेऽन्यत्र न स्म सा ॥ १५ ॥

அவள் முழுமனதுடன் ஸ்ரீஅக்ரஸேனரை மனதில் ஏற்றுக்கொண்டாள். பகலும் இரவிலும் அவர் தன் அருகில் இருப்பதாகவும், பேசுவதாகவும் தானே நினைத்துக்கொண்டு மகிழ்ச்சியுற்றாள். மற்ற விஷயங்களில் அவள் கவனம் செலுத்தவில்லை.

इति सञ्चिन्तयन्तीं तां माधवीमब्रवीत् सखी ।

ஜைமினி கூறினார்- ஓ ஜனமேஜயா - இவ்வாறு முழுமையாக காதல்வசப் பட்டிருக்கும் மாதவியை அவளுடைய தோழிகள் பார்த்தார்கள் -

सखी उवाच

मनोरथस्ते को जातः किं चिन्तयसि पन्नगि ॥ १६ ॥

தோழிகள் கூறினர் - ஓ நாகலோக இளவரசியே - தாங்கள் மனதில் யாரை நினைத்துக் கொண்டு இவ்வாறு வேதனையடைந்துள்ளீர்கள்?. என்றனர்.

कन्दर्पः स च रूपेण मूर्तिमान् भवति स्वयम् ।
मनोहरश्च कान्तश्च प्रियश्च तव नान्यथा ॥ १७ ॥

श्रुतः पूर्वं न चास्माभिर्दृष्टपूर्वश्च नस्तथा ।
यदीदृं तस्य भार्यात्वं भजेथा वरवर्णिनि ॥ १८ ॥

தோழிகள் கூறினர் - ஓ இளவரசியே - தாங்கள் மன்மதனால் பீடிக்கப்பட்டு மிகவும் அழகாக இருக்கிறீர்கள். உன்னுடைய மனதில் அழகான புருஷனைத் தவிர மற்ற யாரையும் நினைக்கவில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட உன்னுடைய உடம்பின் (ரதி) அழகு இதற்கு முன் எங்களால் பார்க்கப்படவில்லை. நீ யாரை கணவனாக அடைய விரும்புகிறாய் என்பதைக் கூறவும் என்றனர்.

जैमिनिरुवाच

एवमुक्ता स्मितं कृत्वा सम्मानं बहुमान्य च ।
माधवी प्रत्युवाचैनां सम्प्रीता सख्यनिन्दिता ॥ १९ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு கூறப்படும் தோழிகளைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் ஸ்ரீஅக்ரஸேனரைக் குறித்து பேச ஆரம்பித்தாள். அச்சமயத்தில் மேலும் அவள் அழகாகவே தோன்றினாள்.

माधवी उवाच

यस्त्वस्य कथितः सत्यो गुणोद्देशस्त्वया मम ।
तं श्रुत्वाऽयं पुनश्चाग्रं कथं न वृणुयाम्यहम् ॥ २० ॥

மாதவி கூறினாள் - ஓ தோழிகாளே - அவர் பற்பல குணங்களைப் பொருந்தியவர். நான் அவரைப் பற்றி கொஞ்சம் கூறுகிறேன் அதனாலேயே நீங்கள் அனைவரும் அவர் மேல் அன்பு கொள்வீர்கள். தாங்களால் கூறப்படும் மதிப்பான வார்த்தையால் நான் துயரமடைவேன். அவரை நான் எவ்வாறு அடைவது?.

जैमिनिरुवाच

तदाऽऽगता तु नागेन्द्री पन्नगेश्वरमब्रवीत् ।

ஜைமினி கூறினார் - தன்னுடைய பெண்ணின் உணர்ச்சியைத் தெரிந்து கொண்ட நாகேந்த்ரீ தனது கணவனைப் பார்த்துக் கூறினாள்.

नागेन्द्री उवाच

समीक्ष्य कार्यं ते नाग पुत्री संप्राप्तयौवना ॥ २१ ॥

நாகேந்த்ரீ கூறினாள் - சிறந்த அரசரே - நம்முடைய பெண் இளமைப் பருவமடைந்து விட்டாள். மன்மதன் மற்றும் ரதியால் ஆட்கொள்ளப்பட்டுவிட்டாள். ஆதலால் அதைப் பற்றி சிந்தித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாள்.

माधवी तु तथा दृष्ट्वा वने कश्चिन्नरेश्वरम् ।
ततः प्रभृति न स्वस्था तस्मिन् सक्ता बभूव सा ॥ २२ ॥

ஓ அரசரே - நம்முடைய பெண் மாதவி வனத்தில் ஒரு அழகான வீரனைப் பார்த்திருக்கிறாள். அதன் பிறகு அவள் தன்னுடைய நிலையில் இல்லை. எப்பொழுதும் அவ்வீரனையே நினைத்துக்கொண்டு இருக்கிறாள் என்றாள்.

महीधर उवाच

विस्मयोऽत्र न कर्तव्यः कन्या वक्तीदृशं वचः ।
अत्यारूढः कुमारीणां कालज्ञो हि मनोभवः ॥ २३ ॥

அரசன் நாகராஜனான மஹீதரன் கூறினான்- சிறிய பெண்ணான மாதவி இவ்வாறு பேசுவதை நினைத்து வியப்படைந்தாள். இளமைப் பருவத்தில் காதல் கொள்வது என்பதில் சந்தேகமேதும் இல்லை. ஆனால் அது மனக் கட்டுப்பாட்டை உளைத்துவிடும் என்றான்.

धर्मात्मानं महात्मानं दैत्यदानवमर्दनम् ।
नागमित्रं महेन्द्रेज्यं का तं न वरयेत् पतिम् ॥ २४ ॥

ஓ நாகேந்த்ரி - தருமதநால், தேவர்களையும், அசுரர்களையும் இந்திரன் தன்னுடைய வலிமையால் பலமுறை வெற்றியடைந்து இந்த்ர லோகத்தில் வெகு நாட்களாக அரசனாக இருக்கிறான். அவன் நாகர்களுக்கு மிகவும் வேண்டியப்பட்டவன். ஏன் எந்த கன்னியா பெண்ணும் அவனை மணந்துகொள்ள வில்லையா?.

एतदर्थं तु सन्देशः शक्रेण प्रेषितः स्वयम् ।
कथं ह्यहं प्रतिश्रुत्य देवं किं नु विधीयताम् ॥ २५ ॥

ஓ நாகேந்த்ரி - எனக்கு இந்திரனிடமிருந்து தேவர்கள் மூலம் செய்தி வந்துள்ளது. உண்மையிலும் நமக்கு இது நல்ல வாய்ப்பு. இந்திரன் நமது பெண்ணை மணந்துகொள்ள விரும்புகிறான். நான் தேவராஜன் இந்திரனின் விருப்பத்தை தேவர்கள் மூலம் கேட்ட பின்பு நான் என்ன செய்யமுடியும்?.

तिष्ठत्सु देवदेवेषु कथं मानुषमिच्छति ।
विरुद्धं ह्याचरन् मर्त्यो देवानां मृत्युमृच्छति ॥ २६ ॥

ஓ நாகேந்த்ரி - தேவர்களுக்கு தலைவனான இந்திரன் நமது பெண்ணை மணந்துகொள்ள விரும்பும் போது நாம் எவ்வாறு மனிதப் பிறவியில் பிறந்த வீரனுக்கு திருமணம் செய்து கொடுப்பது. இது மிகவும் எதிர்ப்பானது. மனிதனை ஒரு நிமிடத்தில் இந்திரன் கொன்றுவிடுவான்.

कृतघ्नाः वैष्णवाः सर्वे नेष्यन्ति हि सुधामपि ।
सततं वैनतेयेन विग्रहः को नु सम्भवः ॥ २७ ॥

ஓ நேகேந்த்ரி - வைணவர்கள் அனைவரும் சிறந்தவர்களே. அவர்கள் நம்முடன் சொந்தம் வைத்துக்கொள்வர். ஆனால் நாம் அம்ருதத்தை அடைய விரும்பமாட்டார்கள். (ஆனால் இந்திரனை அடைந்தால் நமக்கு அம்ருதம் கிடைக்கும். ஆதலால் நாம் மறுபிறவியையும், வயோதிகத்தையும் அடையமாட்டோம்). நாம் எப்பொழுதும் வைனதேயனான கருடனால் பயந்தே இருக்க வேண்டுமா?.

नागराजेनैवमुक्ता पन्नगेन्द्री वचोऽब्रवीत् ।

நாகேந்த்ரன் இவ்வாறு கூறிய பின் நாகேந்த்ரி வேறுவிதமாக பதிலைக் கூறினாள்.

नागेन्द्री उवाच

को दण्डभयतो देव नागग्रामे समागतः ॥ २८ ॥

நாகேந்த்ரி கூறினாள் - தேவர்கள் அனைவரும் யாருக்காக பயந்து எதற்காக இங்கு (நாகலோகத்திற்கு) வந்திருக்கிறார்களோ? என்றாள்.

एष धर्मो नागलोके कन्या तु स्यात् स्वयंवरा ।
मानुषं कृतसङ्कल्पा वृणीते पन्नगात्मजा ॥ २९ ॥

நாகராஜன் கூறினான் - இந்த நாகலோகத்தின் தருமம் என்னவென்றாள், நம்முடைய கன்னிகைக்கு ஸ்வயம் வரம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு தேவர்களையும் நாகர்களையும் பன்னகர்களையும் வரவேற்று அதில் நம்முடைய பெண் வரனை தேர்ந்தெடுக்க வேண்டும். வேண்டுமாகில் அதில் நம்முடைய பெண் மாதவி அந்த மானிட புருஷனை தேரந்தெடுக்கட்டும் என்றான்.

विवाहं कुरु विश्रब्धं न दोष इति मे मतिः ।

ஓ நாகராஜனே - தாங்கள் தயக்கமின்றி சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். மாதவி வேண்டுமாகில் அந்த புருஷனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும் என்றாள்.

जैमिनिरुवाच

एवं विधिवचः श्रुत्वा प्रत्युवाच फणीश्वरः ॥ २० ॥

मया प्रोक्तमिदं ब्रूहि कन्यामन्यन्न विद्यते ।
ततो जगाम भग्नाशा सा पुनः स्वनिवेशनम् ॥ २१ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு நாகேந்த்ரி கூறியதைக் கேட்டவுடன் நாகராஜன் கூறினான்.

ஓ நாகேந்த்ரி- நான் சொல்வதில் கவனமாக இருக்கவும். அதன்படித் தான் நடக்கப்போகிறது. இதைக் கேட்ட நாகேந்த்ரி மனதில் துயரத்துடன் தன்னுடை மாளிகையை அடைந்தாள்.

नागेन्द्रस्य वचः श्रुत्वा माधवी शोकजाश्रुभिः ।
समाप्लुताभ्यां नेत्राभ्यां मातरं तां वचोऽब्रवीत् ॥ २२ ॥

நாகேந்திரனின் கடுமையான வார்த்தைகளைக் கேட்டு நாகேந்த்ரியும் மாதவியும் மிகவும் துயரத்தை அடைந்தனர். அவள் இரு கண்களிலும் நீர் நிரம்பிய முகத்துடன் (அழுதுக்கொண்டே) தனது தாயிடம் கூறினாள்.

माधव्युवाच

को नु मे जीवितेनार्थस्तमृते शोककारिणा ।
नाहं पतित्वे वाञ्छामि तमृते पुरुषर्षभम् ॥ २३ ॥

மாதவி கூறினாள் - ஓ அம்மா - நான் அந்த மஹாபுருஷனான வீரனை கணவனாக அடையவில்லை எனில் நான் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்?. நான் என் உயிரைப் போக்கிக் கொள்கிறேன். இதைத் தவிர மற்ற வழி ஒன்றும் தெரியவில்லை என்றாள்.

जैमिनिरुवाच

अदृष्टपूर्वदुःखार्ताः सतर्का नागकन्यकाः ।

वयमाश्वासयामोऽद्य कर्तुं किमपि साम्प्रतम् ॥ ३४ ॥

ஜைமினி கூறினார் - மாதவியிடம் அவள் தோழிகள் இதுவரை பார்க்காததான துயரத்தையும் வேதனை அடைந்துள்ளதையும் பார்த்தார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள் தனது இளவரசி மாதவிக்காக எதை வேண்டுமானாலும் செய்வதாகக் கூறி அவளைத் தேற்றினார்கள்.

नागकन्यकाः ऊचुः

कथं नु खलु दुःखस्य पारं यास्यति वै शुभा ।

कथं भर्त्रा सङ्गमोऽस्याः रोहिणीचन्द्रयोर्यथा ॥ ३५ ॥

நாக கன்னிகைகள் ஒருவருக்கொருவர் கூறினர் - ஓ தோழிகளே - எவ்வாறு ரோஹிணியானவள் தனது கணவன் சந்திரனுடன் சேருவதால் மகிழ்ச்சியை அடைகிறாளோ அவ்வாறு நாம் நம்முடைய இளவசி மாதவியை அவளுடைய கணவனுடன் ஒன்று சேர வைத்து மகிழவைப்போம். இல்லை என்றால் இளவரசி எவ்வாறு இந்த துயரத்திருந்து வெளியில் வருவாள்?.

तुल्यशीलवयोयुक्तां तुल्याभिजनसंवृताम् ।

किमुपायास्तोषयामः पतिदर्शनलालसाम् ॥ ३६ ॥

ஓ தோழிகளே - நாககுமாரியும் ஸ்ரீஅக்ரஸேனரும் ஒருவருக்கொருவர் இளமையாகவும், ஒழுக்கத்துடனும், அழகாகவும், பக்தியுடனும், பெரியோர்களிடத்திலும், உறவினர்களிடத்திலும் அன்பாக இருக்கின்றனர். ஆதலால் நாம் இவர்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுத்து உதவ வேண்டும் என்றனர்.

जैमिनिरुवाच

ततस्तास्तां परिष्वज्य प्रियाख्यानैरतोषयन् ।

मा माधवि भयं शीघ्रं भर्त्रा सह हि रंस्यसे ॥ ३७ ॥

सङ्क्रीडते यथा शम्भुः पार्वत्या सह सर्वदा ।

एवमुक्ते तदा सख्या वाक्ये चिन्ताऽऽविलेक्षणा ॥ ३८ ॥

ஜைமினி கூறினார் - தனது தோழிகளின் வார்த்தைகளைக் கேட்ட மாதவியின் மனது ஆசையினாலும் அன்பினாலும் மகிழ்ச்சியடைந்தது. மேலும் அவள் மனது கூறியது - ஓ மாதவி பயப்படாதே வெகுவிரைவில் உனது கணவனுடன் சேர்ந்து மகிழ்ச்சியடையப் போகிறாய் என்றது. இவ்வாறு மாதவியைத் தேற்றி அன்புடன் கூறினர் - ஓ தோழி மாதவி - சிவபிரான் எவ்வாறு பார்வதியை அடைந்தாரோ அவ்வாறு நிச்சயம் நீ உன்னுடைய ஆசையை (காதலனை) அடைந்து மகிழ்வாய் என்றனர்.

माधवी तु तदा भावं चक्रे रंस्ये कथं कदा ।

तदा चित्रा माधवीं तां सम्प्रहस्येदमब्रवीत् ॥ ३९ ॥

தோழிகளால் மகிழ்ச்சியடைந்த மாதவி ஸ்ரீஅக்ரஸேனரை நினைத்து தனது காதலை பெருக்கிக் கொண்டு அவரை அடையும் வழிகளையும் சிந்திக்கலானாள். அச் சமயத்தில் மாதவியின் தோழி சித்ரா என்பவள் ஒரு வழியைக் (உபாயத்தை) கூறினாள்.

नागकन्यकाः ऊचुः

अद्य देव्याः प्रसादस्ते ह्यनुकूलो भविष्यति ।

मनोरथं पूरयिष्यत्येषा ते नात्र संशयः ॥ ४० ॥

நாககன்னிகை கூறினாள் - ஓ மாதவி - இந்த காதலை சேர்த்து வைப்பதற்கு தகுந்த கடவுள் தேவி பார்வதி தான். ஆதலால் தேவி பார்வதி கண்டிப்பாக உன்னுடைய ஆசையை நிறைவேற்றி விடுவாள். இதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றாள்.

ஜைமினிருவாச

सखीभ्याम् एवमुक्ता सा पर्यवस्थितचेतना ।
आराधनायोपगता सख्या सह तु माधवी ॥ ४१ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு தனது தோழி கூறியவுடன், அதை உணர்ந்து கொண்டு மாதவி உடனடியாக ஆற்றின் கரையிருந்த தேவி பார்வதியின் கோவிலுக்கு தனது தோழிகளுடன் சென்று வரத்தை பின்பற்றி வழிபட ஆரம்பித்தாள்.

ततः पल्लविता आसन् द्रुमास्तस्मिन् मधौ सति ।
तस्मिन् पल्लवितेऽत्यन्तं कोकिला मधुरं जगुः ॥ ४२ ॥

அந்த வஸந்த ருதுவில் ஆற்றின் கரையிருந்த மரங்கள் துளிர்விட்டு கொழுந்துகளுடன் இருந்ததால் அந்த மரத்தில் குயில்களும் கிளிகளும் அமர்ந்து கொண்டு தங்களுடைய அழகான குரலால் ஓயை (ஓசையை) ஏற்படுத்தின.

मालतीयूथिकाजात्यः पुष्पस्तनभरानताः ।
केतक्यः पुष्पवर्षेण समर्चन्ति स्म ताः पतिम् ॥ ४३ ॥

அந்த ஆற்றின் கரையில் மாலதி, யூதி மரங்களில் ஜாதி, கேதகி, மல்லைப் போன்ற வாசனையுடைய கொடிகள் படர்ந்து பூக்களால் தாழ்வடைந்து வாசனையை ஏற்படுத்தின. அவைகள் அழகான பெண்ணின் மாப்பகங்களைப் போன்று காட்சியளித்தது. மாதவி தனது கணவனை அடைவதற்காக கேதகி பூவால் அர்ச்சித்து வழிபட்டாள்.

माधवी स्वसखीनां तद् वाक्यं प्रीत्याऽभ्यपूजयत् ।
सा देवीं प्राञ्जलिर्भूत्वा नमस्कृत्वाऽब्रवीद्वचः ॥ ४४ ॥

தனது தோழிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு மாதவி அன்புடனும் நம்பிக்கையுடனும் பார்வதியைக் குறித்து அர்ச்சித்தாள்/பூஜை செய்தாள். அவள் தேவியைக் குறித்து இரு கைகளையும் கூப்பி நமஸ்கரித்துக் கூறினாள் -

माधवी उवाच

यद्यहं समनुग्राह्या गौरि स्यात् प्रियसङ्गमः ।
एषोऽञ्जलिर्मया बद्धः सत्यं मे कामनां कुरु ॥ ४५ ॥

மாதவி கூறினாள் - ஓ அம்மா கௌரியே (பார்வதியே) - நான் தங்களுடைய அருளால் எனக்கு விருப்பமானவரை அடைய வேண்டும். அதற்காகத் தான் தங்கள் முன்பு இரு கைகளையும் கூப்பி வணங்கி நிற்கிறேன். என்னுடைய வழிபாட்டில் மகிழ்ந்து எனக்கு

यथा गौरि स मे भर्ता विहितो हि नराधिपः ।
तेन दाक्षायणि प्रीता भर्तारं देहि मेऽचिरम् ॥ ४६ ॥

ஓ கௌரியே தாங்கள் எனக்கு எவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனரை கணவனாகச் செய்து விடுவீர்களோ அவ்வாறு தாக்ஷாயணியும் என்னுடைய பூஜையால் மகிழ்ந்து ஸ்ரீஅக்ரஸேனரை கணவனாக ஆக்கி விடுவாள்.

यदिदं व्रतमारब्धं तस्मा आराधनं मया ।
तेन व्रतेन कुर्यान्मां देवी पूर्णमनोरथाम् ॥ ४७ ॥

ஆதலால் நான் என் கணவனை அடைவதற்காக என்னுடை விரதத்தை ஆரம்பிக்கிறேன். ஹே தேவி - இந்த விரதத்தால் மகிழ்ச்சியடைந்து எனது மனதில் உள்ளதை நிறைவேற்றுவாயாக.

जननीं सिद्धसेनस्य सिद्धचारणसेविताम् ।
चरीं कुमारप्रभवां पार्वतीं पर्वतात्मजाम् ॥ ४८ ॥

ஸித்த ஸேனைகளும், ஸித்த சாரர்களும் வணங்குகின்ற பார்வதியே, கார்த்திகேயன், கணேசன் ஆகியோரின் தாயே, ஹிமவானின் புதல்வியே என்னுடைய ஆசையை நிறைவேற்றுவாயாக.

नमोऽस्तुते जगन्नाथे प्रिये दान्ते महाव्रते ।
भक्तिप्रिये जगन्मातः शैलपुत्रि वसुन्धरे ॥ ४९ ॥

இவ்வுலகத்தைக் காப்பவளும், பக்திக்கு பிரியமானவளும், ஹிமவானின் புதல்வியும், பூமாதேவியும், இவ்வுலகத்தின் தாயுமான பார்வதியே நான் உங்களை மறுபடியும் மறுபடியும் வணங்குகிறேன்.

रुद्रप्रिये महाभागे भक्तानामार्तिनाशिनि ।
नमोऽस्तु ते सर्वहिते गौर्यै देव्यै नमोस्तु ते ॥ ५० ॥

சிவபிரானுக்கு அன்பானவளே, பக்தர்களின் கவலைகளை அழிப்பவளே, அனைவருக்கும் நன்மையை அளிப்பவளே தேவி ஹே கௌரியே உங்களை வணங்குகிறேன்.

नमामि शिरसा देवीं पार्वतीं शङ्करप्रियाम् ।
मनोरथं हि भर्तारं गौरि देहि नमोऽस्तु ते ॥ ५१ ॥

சங்கரனுக்கு அன்பான பார்வதி தேவியை என்னுடைய தலையால் வணங்குகிறேன். என் மனதிற்கு பிடித்த கணவனை அடைய கௌரி தேவியான உன்னை வணங்குகிறேன்.

जैमिनिरुवाच

माधव्यास्तत् सकरुणं निशम्य पतिदेवता ।
निश्चलं प्रेम तत् तथ्यमनुरागं च देव्यदात् ॥ ५२ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு மாதவியின் கடுமையான தோத்திரத்தாலும் ஸ்ரீஅக்ரஸேனரிடம் வைத்துள்ள அன்பாலும் பார்வதி தேவி அருளைப் பொழிந்தாள். மாதவியின் உண்மையான புனிதமான காதலால் பார்வதி தேவியின் அருள் பெற்று வெற்றியடைந்தாள்.

विज्ञाय तमभिप्रायं माधव्याः सा शिवप्रिया ।
प्राह देवी ततो वाक्यं हर्षयन्ती शनैश्च ताम् ॥ ५३ ॥

சிவனுக்கு வேண்டியவளான தேவி பார்வதி மாதவியின் ஆசைப்படி அவள் முன்பு வந்து நின்று அன்பான வார்த்தைகளால் மலர்ந்த முகத்துடன் கொஞ்சம் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் பேசினாள்.

उमा उवाच

माधवि त्वं प्राप्स्यसीह यथाभिलषितं वरम् ।
यथा मनोरथं चक्रे पार्वती सन्निधौ शिवम् ॥ ५४ ॥

பார்வதி தேவி கூறினாள் - ஹே மாதவி - நீ எதை விருப்புகிறாயோ அதை வெகு விரைவில் அடைவாயாக என்று ஆசீர்வதித்தாள். இருப்பினும் மதாவி தான் விரும்புவதை பார்வதியிடம் தெளிவாகக் கூறுவதற்கு ஆரம்பித்தாள்.

माधवीसंकल्पः

त्वत्प्रियार्थं करिष्यामि गौरि वासन्तिकं व्रतम् ।
शुक्लपक्षे तृतीयायां कृत्वा भक्त्या सुपूजनम् ॥ ५५ ॥

மாதவியின் குறிக்கோள் - ஓ தேவி அம்மா - நான் தங்களைக் குறித்து ஒவ்வொரு முறையும் இந்த வஸந்த ருதுவில் சுக்லபக்ஷ த்ருதீயை தினத்தில் முறைப்படி பொருட்களைக் கொண்டு பூசிப்பேன். தாங்கள் அதை அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

पुष्पमण्डपिकां कृत्वा मूर्तिं चित्रमयीं शुभाम् ।
तोषयिष्यामि तुष्टा स्याः शङ्करप्राणवल्लभे ! ॥ ५६ ॥

சங்கரருக்கு (சிவனின்) உயிரே - நான் புஷ்பத்தால் மண்டபத்தைச் செய்து, தங்களுடைய உருவத்தை அழகாக வடிவமைத்து தங்களை மகிழ்ச்சியடையச் செய்கிறேன்.

जैमिनिरुवाच

ततः सखीभिर्हृष्यन्ती हर्षेणोत्फुल्लमानसा ।
नालिकासन्निपातैश्च ह्यन्योन्यं जघ्नुरूर्जिताः ॥ ५७ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு தோழிகளுடன் இருந்த மாதவி பார்வதியின் அருளால் மனதில் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தாள். பின்பு சந்தோஷத்துடன் மாதவி தோழிகளுடன் விளையாட ஆரம்பித்தாள். அனைவரும் மகிழ்ந்தனர்.

गौरीस्तवं व्रतं चेदं कुरुते या हि कामिनी ।
यथाभिलाषं वरदा करोति जनमेजय ॥ ५८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இவ்வாறு எந்த கன்னிகைகள் தனக்கு வேண்டிய கணவனை அல்லது ஆசையை அடைவதற்கு இந்த விரதத்தைக் கடைபிடிக்கின்றனரோ அவர்கள் சிவனுக்கு வேண்டிய தேவி பார்வதியின் அருளால் அவற்றை அடைந்து மகிழ்வர்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते चतुर्दशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினான்காவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமத் அக்ரபாகவதம்

பதினைந்தாவது அத்யாயம்

கடைவது

(மந்திர ஆலோசனை)

जैमिनिरुवाच

अग्रस्य मोक्षं श्रुत्वा वै पन्नगो नागपाशतः ।
मनोगतं च नागेन्द्रया इन्द्रस्य कोपकारणम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - நாக பாசத்திருந்த ஶ்ரீஅக்ரஸேனர் விடுபட்டார் என்பதை அறிந்த நாகேந்திரன் மிகவும் கவலையடைந்தான். ஏனெனில் நாகேந்த்ரி மற்றும் மாதவியின் எண்ணங்களை இந்திரன் தெரிந்து கொண்டால் அவன் அதிகமாக கோபத்தை அடைந்துவிடுவான்.

महीपश्चिन्तयामास सङ्कटोऽयम् उपस्थितः ।
ततः स मन्त्रयामास भ्रातृभिः सह पन्नगैः ॥ २ ॥

இந்த ஆபத்தை/துயரத்தை எவ்வாறு நீக்குவது என்பதற்காக நாகேந்திரன் தன்னுடைய மந்த்ரிகளுடனும் ஸஹோதரர்களுடனும் ஆலோசனையை நடத்தினான்.

महीधर उवाच

सङ्कटो हि यथा दृष्टो विदितं वस्तथानघाः ।
तन्मोक्षार्थं मन्त्रयित्वा प्रतिघातो विधीयताम् ॥ ३ ॥

மஹீந்திரன் கூறினான் - ஓ நாக கணங்களே - நாம் எப்படி பல துயரத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவீர்கள். நாம் எவ்வாறு இந்த துயரத்திருந்த வெளியில் வருவது என்பதைப் பற்றி சிந்தித்து எனக்கு உங்களுடைய ஆலோசனையைக் கூறுங்கள் என்றான்.

तस्मात् सम्मन्त्रयामोऽद्य पन्नगानामनामयम् ।
यथा भवेद्धि सर्वेषां मा नः कालोऽत्यगादयम् ॥ ४ ॥

இப்படிப்பட்ட ஆழ்ந்த துயரத்திருந்து வெளிவருவதைப் பற்றி அனைத்து நாககணங்களும் மந்திரிகளும் யோசித்தனர். எவ்வழி நமக்கு நன்மையைத் தரும். எதை நாம் பின்பற்றினால் நம்முடைய குலம் அழியாமல் இருக்கும் என்பதைப் பற்றி காலம் தாழ்த்தாமல் சிந்தித்தனர்.

मणिनाग उवाच

नागसुतोद्वाह एव भुजङ्गभयकारणम् ।
यथा विवाहो न भवेद् तथा कार्यं भुजङ्गम ॥ ५ ॥

மணிநாகன் கூறினான் - ஓ நாகேந்திரா - தங்களுடை பெண்ணின் திருமணம் தான் இந்த துயரத்திற்கு காரணம். தங்களுடைய பெண் ஸ்ரீ அக்ரஸேனரை மணந்து கொள்ளவில்லையெனில் அவள் உயிரை விட்டுவிடுவாள். மஹாராணியும் அதனால் வெறுப்பை அடைவாள். இந்நிலை நம்முடைய வம்சத்திற்கும் நம் குலத்திற்கும் கேடு விளைவிக்கும். இளவரசியை ஸ்ரீஅக்ரஸேனருக்கு திருமணம் செய்து வைத்தால் தேவேந்த்ரனை நாம் எதிரியாக்கிக் கொள்ள வேண்டும். தேவர்களிடைய இருக்கும் நம்முடைய நல்லுறவு அழிந்துவிடும். ஆதலால் நன்கு ஆலோசை செய்ததில் தங்களுடை பெண் மாதவியின் திருமணத்தை காலம் தாழ்த்தி செய்வதே சிறந்தது என்றான்.

अनन्तनाग उवाच

हेतुभिः कारणैश्चैव दर्शयन्त्यगुणान् बहून् ।
यथा विवाहो न भवेत्प्रेत्य चेह च दारुणम् ॥ ६ ॥

அனந்த நாகன் கூறினான் - முதல் நாம் மாதவியை ஒப்புக்கொள்ள வைப்போம். நாக குலம் என்பது மனித குலத்தைக் காட்டிலும் வேறுபட்டது. அவர்கள் வைணவர்களானாலும் சைவர்களானாலும் நம்முடைய குலத்திற்கு ஒத்துவராது. ஆதலால் இந்தத் திருமணம் நடைபெற்று வெற்றியடையாது என்பதைக் கூறுவோம் என்றான்.

कल्माष उवाच

तं गत्वा दशतात्कश्चिद् भुजङ्गः स मरिष्यति ।
तस्मिन् मृते हि पुरुषे विवाहो न भविष्यति ॥ ७ ॥

கல்மஷன் கூறினான் - ஓ நாகராஜா - நம்முடைய நண்பர்களில் கொடிய விஷமுள்ளவனை அனுப்பி ஸ்ரீஅக்ரஸேனரை தீண்டி அவனைக் கொன்றுவிடுங்கள். அதன் பிறகு இறந்த மனிதனை இளவரசி எவ்வாறு திருமணம் செய்துகொள்வாள்.

जैमिनिरुवाच

अपरे त्वब्रुवन्नागाः धर्मात्मनो दयालवः ।
अधर्मोत्तरता नाम कृत्स्नं व्यापादयेज्जगत् ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு பேசிக் கொண்டிருப்பதை மற்ற நாகங்கள் கேட்டுவிட்டு கூறினர். மனித குலத்தில் பிறந்துள்ளவனை எச்சரியுங்கள். இதை விட்டு விட்டு மற்றதை நாம் செய்தால் அது நம்க்கு நன்மையைத் தராது. நாம் அனைவரும் அக்ரஸேன் இருக்குமிடத்திற்குச் சென்று பல துன்பங்களையும் கலவரங்களையும் ஏற்படுத்துவோம் என்றனர்.

मायायोगाद् वञ्चनीयः एकोपायः स एव हि ।
इत्युक्त्वा समुदैक्षन्त महीध्रं पन्नगोत्तमम् ॥ ९ ॥

ஹே மஹாராஜா மஹீதரரே - தாங்கள் கூறிய அனைத்தையும் ஏற்று முடிவாக ஒன்றைக் கூறுகிறேன் மாயாவியை அனுப்பி பற்பல தந்திரங்களால் ஸ்ரீஅக்ரஸேனரை ஏமாற்றிவிடலாம் என்றான்.

कर्कोटक उवाच

भयस्य कारणं दैवम् इदं पन्नगसत्तमाः ।
दैवमेवाश्रयोऽस्माकं नान्यदत्रपरायणम् ॥ १० ॥

கார்கோடகன் கூறினான் - துயரத்தையும் கலவரத்தையும் நாம் சந்தித்துக் கொண்டுள்ளோம். ஆனால் இதற்கு காரணம் தேவர்கள் இல்லை. நம்முடைய துயரத்தைப் பற்றி தேவர்கள் தான் சிந்திக்க வேண்டும். நாம் தேவர்களிடத்தில் பயத்தை அடையவில்லை எனில் உடனடியாக நாம் மாதவியின் சுயம்வரத்திற்கு ஏற்படுகளைச் செய்வோம். இது தான் நமது வழக்கம் என்றான்.

महीधर उवाच

ज्ञातिवर्गस्य सौहार्दादात्मानः पन्नगोत्तमाः ।
न च जानाति मे बुद्धिः किञ्चित् कर्तुं वचो हि वः ॥ ११ ॥

மஹீதரன் கூறினான் - ஓ பன்னக ராஜனே, ஸஹோதரர்களே, இந்த நாக குலத்தின் மேல் அன்புள்ளவர்களே - இதுவரை தங்களிடம் ஆலோசனை செய்த எதுவும் சரிவராது, நன்மையைத் தராது என நான் நினைக்கிறேன்.

नागाचार्य उवाच

कथं दुर्बलतां प्राप्ता निर्विषाः फणिनो यथा ।
क्व ते पुरुषमानित्वं क्व ते वाचस्तथाविधाः ॥ १२ ॥

நாகாசாரியர் கூறினார் - இருகைகளையும் கூப்பி - ஓ நாகங்களே - ஏன் நீரில் இருக்கும் பாம்பைப் போன்று பேசிக்கொண்டுள்ளீர்கள். தாங்கள் அனைவரும் விஷத் தன்மையை இழந்து விட்டீர்களா?. உங்களுடைய பெருமதிப்பு எங்கு போயிற்று?. நீங்கள் ஆண்மையற்றவர்களா?. தங்களைப் பற்றிய பெருமையான புகழ் எங்கு போயிற்று?.

किं कृतं तेन राज्ञा हि तवाऽनिष्टं फणीश्वर ।
किं दण्डभयमायातं नानुरूपं नृपात्मजात् ॥ १३ ॥

ஓ நாகராஜன் மஹீதரா - உன்னிடத்தில் அக்ரஸேனன் என்ன தவறை செய்தான்?. ஏன் தேவர்களிடத்தில் நீ பயத்தை அடையவேண்டும்?. அவர்கள் எவ்வாறு உனக்கு தண்டனை கொடுக்க முடியும்?. அவர்களுக்கு நீ ஏதேனும் தீங்கை விளைவித்தாயா?. ஆதலால் நீ தேவர்களுக்கு நன்மையைத் தான் செய்திருக்கிறாய். ஏன் அவர்களைக் கண்டு பயப்படவேண்டும்?.

जैमिनिरुवाच

परं भुजङ्गभवनं संवीक्ष्य स मनोरमम् ।
अग्रसेनो विवेशाथ महीधरकमन्दिरम् ॥ १४ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இவ்வாறு ஆலோசனை மண்டபத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது - நாகபாசத்திருந்து

விடுபட்ட ஸ்ரீஅக்ரஸேனர் ஆலோசனை மண்டபத்திற்கு தன்னுடைய விருப்பத்தைத் (ஆசையை) தெரிவிக்க வந்தார். அவர் விசாலமான அழகான அந்த ஆலோசனைக் கூடத்தை அடைந்தார்.

विमलैः पद्मगन्धैश्च महापातकनाशनैः ।
दिव्यैर्वृक्षैर्लताभिश्च शोभितं चामृतेन च ॥ १५ ॥

நாகராஜனின் அரசவை - பாபத்தை அழிக்கக் கூடியதும் நறுமணத்தை ஏற்படுத்தக் கூடியதுமான தாமரைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த இடம் பற்பல அழகான மரங்களாலும், பூக்களாலும், கொடிகளாலும் சூழப்பட்டிருந்தது. பொதுவாக அந்த இடம் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது.

नवकुण्डैः सुधापूर्णैर्महानागैः सुरक्षितम् ।
नानाभावैर्विचित्रं हि सर्वतश्चारु शोभनम् ॥ १६ ॥

அங்கு புதிதான் பானைகளில் அம்ருதம் நிரப்பப்பட்டிருந்தது. அதைச் சுற்றி பெரிய பாம்புகள் காவல் காத்துக் கொண்டிருந்தன. அங்கு பற்பல படங்கள் (சித்ரங்கள்) வரையப்பட்டிருந்தன. அவை அனைத்தும் மிகவும் அழகாக இருந்தது.

नानारत्नमयं दिव्यं नानासद्मविराजितम् ।
मण्डितं तन्महीशेन फणाद्वादशकार्चिषा ॥ १७ ॥

அந்த அரசமாளிகை பற்பல ரத்தினங்களாலும், தங்கத்தினால் மதிற்சுவர்களும், மாட மாளிகைகளும், அடுக்ககங்களும் அவைகளின் நடுவில் பன்னிரண்டு தலையுடைய நாகத்தின் கீழ் நாகராஜன் மஹீதரன் அமர்ந்திருந்தான்.

उपविष्टं ददर्शैनं प्रभया परया युतम् ।
सजीवा इव लक्ष्यन्ते नागराजाः सदस्स्थिताः ॥ १८ ॥

அரச ஸிம்மாஸனத்தில் நாகராஜன் பற்பல சிறந்த ஒளியைக் கொண்டு மினிர்கின்ற தீபங்களாலும், தேஜஸ் என்கிற பிரபையுடனும் கொடிய விஷமுடைய பாம்புகள் சூழ வீற்றிருந்தான்.

सभा तस्य विचित्रैव रत्नचित्रा हिरण्मयी ।
अयुतस्तम्भसंयुक्ता नानाभावप्रदर्शिका ॥ १९ ॥

அந்த அவையில் ஓவியங்கள் நவரத்தினங்களாலும் தங்கத்தினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த தூண்கள் அனைத்தும் ஓவியங்களால் ஆசையையும், வீரத்தையும் ஏற்படுத்துமளவிற்கு செய்யப்பட்டிருந்தது.

कर्पूरदीपैः शतशो भासिता वीथिकान्विता ।
दीपाश्चन्दनतैलेन केचित् सिक्ताः प्रभान्विताः ॥ २० ॥

நாகராஜனின் மாளிகையும் அங்கிருக்கும் ஒவ்வொரு தெருவும் நூற்றுக்கணக்கான கற்பூர தீபத்தினாலும், நூற்றுக்கணக்கான சந்தன எண்ணெயால் எரியும் தீபத்தினாலும் பிரகாசித்தன. ஆதலால் அந்த இடம் நறுமணத்தால் சூழப்பட்டிருந்தது.

नानाव्यालसमाकीर्णैः शिखरैरिव मन्दिरम् ।
अग्रसेनो विस्मितोऽथ नागाऽधिपमथैक्षत ॥ २१ ॥

மந்தார மலையின் சிகரத்தைப் போன்று பற்பல நாகங்கள் நடுவில் மிகுந்த ஒளியுடன் அமர்ந்திருந்த நாகராஜன் மஹீதரனைப் பார்த்து ஸ்ரீஅக்ரஸேனன் வியந்து போனான்.

भ्राजमानं ततो दृष्ट्वाऽग्रसेनो भुजगेश्वरम् ।
मनसा चिन्तयामास तेजसा तस्य मोहितः ॥ २२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் இவ்வாறு தேஜஸ்ஸுடன் இருக்கும் புஜங்கராஜன் மஹீரதரனை பார்த்து தன்னுடைய மனதில் நினைத்தான்.

अहो रूपमहो धैर्यमहो सत्त्वमहो द्युतिः ।
अहो पन्नगराजस्य सर्वलक्षणयुक्तता ॥ २३ ॥

ஓ! என்ன ஒரு அழகு, வீரம், நல்ல குணம், பிரகாசம் (ஒளி) ஆகிய அனைத்து லக்ஷணங்களுடன் பன்னகராஜன் மஹீரதன் ஒளிர்கிறான்.

जैमिनिरुवाच

शङ्कात्मा चिन्तयामास नागेन्द्रस्तेजसावृतम् ।
षडाननः किमेषोऽयं भवेत् साक्षादिहागतः ॥ २४ ॥

ஜைமினி கூறினார் - அரசன் நாகராஜனின் ஒளியைப் (காந்தியை) பார்த்த அக்ரஸேனர் அவரின்பால் ஈர்க்கப்பட்டான். ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்தவுடன் நாகராஜனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஸ்ரீஅக்ரஸேனரை சிவனின் குமாரன் கார்த்திகேயனைப் போல் நினைத்துப் பார்த்தான். ஸ்ரீஅக்ரஸேனன் அனைத்து லக்ஷணங்களும் பொருந்தியவனாக இருப்பதாக நினைத்தான்.

अग्रसेनः पुरः स्थित्वा प्रत्युवाच फणीश्वरम् ।
काम्यया शरणं प्राप्तो भवन्तं पन्नगेश्वरम् ॥ २५ ॥

ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் நாகராஜன் மஹீதரனின் முன்பு நின்று கொண்டு கூறினார் - ஓ நாகராஜரே - நான் ஒரு முக்கியமான வேலைக்காக உங்களை கீழ்படிந்துள்ளேன் என்றான்.

अग्रसेनस्तदाऽऽसीनः परमे पन्नागासने ।
द्विजिह्वपतिरव्यग्रो महीध्रोप्यभ्यभाषत ॥ २६ ॥

பின்பு நாகராஜனால் ஸ்ரீஅக்ரஸேனருக்கு ஒரு அமரும் இருக்கை அளிக்கப் பட்டது. அதில் அக்ரஸேனர் அமர்ந்த பிறகு நாகராஜன் மிகவும் அமைதியாக பேசினான்.

महीधर उवाच

कुतस्त्वं कोऽसि कस्यासि किमिहास्ति प्रयोजनम् ।
नैवंविधः परिज्ञातो दृष्टपूर्वोऽत्र वै नरः ॥ २७ ॥

நாகராஜன் மஹீதரன் கேட்டான் - நீ யார்?. எங்கிருந்து நீ வருகிறாய்?. எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?. இதற்கு முன்பு உன்னைப் போன்ற மனிதன் எங்களுடைய நாகலோகத்திற்கு வந்ததே கிடையாது?.

अग्रसेन उवाच

अहं सूर्यकुलोद्भूतो वल्लभस्य सुतस्तथा ।
महालक्ष्मीप्रसादाय गार्ग्येनाथानुदीक्षितः ॥ २८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ நாகராஜனே - நான் சூரிய குலத்தில் உதித்த இராஜா வல்லபஸேனனுடைய மைந்தன் (அக்ரஸேனன்) ஆவேன். மஹரிஷி ஸ்ரீகர்க்யருடைய வழிகாட்டுதலால் மஹாலக்ஷ்மியை துதித்து அருளைப் பெற்று ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தியிருக்கிறேன்.

वृणुयाद् नागकन्या मां, कामयानोऽहमागतः ।
गच्छेयं तामनुप्राप्य वर एष वृतो मया ॥ २९ ॥

ஓ நாகராஜா - தங்களுடைய பெண் மாதவியை திருமணம் செய்து கொள்வதற்காகவே ஆசையுடன் இங்கு வந்துள்ளேன். திருமணம் செய்து கொண்டவுடன் நான் என்னுடைய இராஜ்யத்திற்கு திரும்பிவிடுவேன்.

जैमिनिरुवाच

एतच्छ्रुत्वा तु वचनं तमुवाच फणीश्वरः ।
पुंसेदं दुर्लभं ते कथं नागसुताऽध्यते ॥ ३० ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் வார்த்தைகளைக் கேட்ட நாகராஜன் கூறினான் - ஒரு மனித குலத்தில் பிறந்த நீ எவ்வாறு நாகலோகத்தின் இளவரசியை மணந்து கொள்ள முடியும்?. இது மிகவும் கடினம் என்றான்.

शिवस्यायं द्वेष इति चिन्तयन् पन्नगेश्वरः ।
विष्णुद्वेषादिदानींचैवान्तरं प्रेप्सुरब्रवीत् ॥ ३१ ॥

ஜைமினி கூறினார் - ஓ ராஜன் ஜனமேஜயா - நாகராஜன் எப்பொழுதும் வைணவர்களை விரும்பமாட்டான். சைவர்களும் வைணவர்களும் பாம்பின் எதிரிகள் தான். சிவன் பாம்பை அணிகலனாக அணிந்திருந்தாலும் விஷ்ணு கருடனை வாகனமாகக் கொண்டிருப்பினும் இருவரும் நமக்கு எதிரிகளே என்றான்.

महीधर उवाच

जानामि शीलं लोकेषु ज्ञात्याचरणमप्यहम् ।
हृष्यन्ति व्यसनेष्वेते ज्ञातीनां ज्ஞातयः सदा ॥ ३२ ॥

மஹீதரன் கூறினான் - உங்களைப் பற்றியும் உங்கள் குலத்தைப் பற்றியும் எனக்கு அனைத்தும் தெரியும். இதனால் நானும் உன்னுடைய குடும்பமும் மகிழ்சியை அடைவோம். ஆனால் உன் இனத்திலுள்ள மற்றவர்கள் ஆடபத்தை அடைவர் என்றான்.

यथा पुष्करपत्रेषु पतितास्तोयबिन्दवः ।
तथा न श्लेषमिच्छन्ति ज्ञातयः स्वेषु सौहृदम् ॥ ३३ ॥

எவ்வாறு தாமரை இலையில் விழுந்த தண்ணீர் வெகு நேரம் இருக்காதோ அவ்வாறு நீங்கள் வெகு நாட்கள் எங்களுடன் நண்பர்களாக இருக்கமாட்டீர்கள்.

श्रूयन्ते ज्ञातयोऽप्येवं परं परिभवन्ति च ।
कृत्स्नाद् भयाज्ज्ञातिभयं कुकष्टं विहितं च नः ॥ ३४ ॥

நான் கேள்விப் பட்டிருக்கிறேன். மனித குலத்தில் ஒரு குடும்பத்திலேயே ஒருவரையொருவர் வெறுத்துக் கொண்டும், அவமதிப்பைச் செய்தும் நடந்துகொள்வர். அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுடைய குறையையே பார்ப்பர். உங்களுடைய நாட்டில் பயத்துடன் தான் ஒரு குலத்திருந்த மற்ற குலத்திற்கு (பெண்ணை கொடுப்பார்கள்) வருவார்கள்.

नागकन्यां प्रार्थयानस्त्वं नाप्यामकृतात्मभिः ।
विनशिष्यसि दुर्बुद्धे तदुपारम मा चिरम् ॥ ३५ ॥

வைணவர்கள் சுத்தமற்றவர்கள், நேர்மையானவர்கள் அல்ல. ஆதலால் நாக கன்னிகையை தாங்கள் ஒருகாலும் மணந்து கொள்ளமுடியாது. நாக கன்னிகையை மணந்து கொள்ளும் கெட்ட முயற்சியை விட்டு விடுங்கள். இங்கிருந்து எவ்வளவு சீக்கிரம் வெளியேற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வெளியேறவும் என்றான்.

न पद्माङ्का न चक्राङ्का न वज्राङ्का हि वैष्णवाः ।
लिङ्गाङ्कका भगाङ्काश्च तस्माच्छैवाः समे जनाः ॥ ३६ ॥

ब्रूहि श्रेष्ठः कोऽत्र कस्मात् शैववैष्णवयोः परः ।
कथं प्राप्या नागकन्या ? ज्ञातिना पुङ्गव व्रज ॥ ३७ ॥

மஹீதரன் கூறினான் - தாமரைப் பூ இல்லாமலும், சக்ரம் இல்லாமலும், வஜ்ர ஆயுதமில்லாமலும் இருக்கும் உங்களை எவ்வாறு வைணவன் என்பேன்?. உடல் ங்கமில்லாமலும், குறிப்பிட்ட இடத்தில் ங்க அடையாளங்கள் இல்லாத உங்களை எவ்வாறு சிவனை பூசிப்பவன் என்பேன்?. சரி - வைணவர்கள் சைவர்கள் இவர்களில் யார் உயர்ந்தவர்கள்?. இவர்கள் எவ்வாறு நாக கன்னிகையை மணந்து கொள்ள முடியும்?. ஆதலால் தங்களுடைய உறவினர்கள் வசிக்கும் இடத்திற்கு திரும்பிச் செல்லவும் என்றான்.

अग्रसेन उवाच

भवान् मान्यः पितृसमो न च धर्मपथे स्थितः ।
स त्वं भ्रान्तोऽसि मे ब्रूहि यदिच्छसि करोमि ते ॥ ३८ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ நாகராஜரே - தாங்கள் எனக்கு தந்தை போன்றவர். எதுவாயினும் தாங்கள் தான் கூறவேண்டும். தாங்கள் ஏதோ மனதில் குழப்பத்தையடைந்து இதுவரை மாறுபட்டு கூறியிருக்கிறீர்கள். தாங்கள் எதை செய்யவேண்டும் எனக் கூறுகிறீர்களோ அதை நான் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்றான்.

मतिमान् शास्त्रवित् प्राज्ञः विज्ञानी चासि पन्नग ।
त्यजेमां प्राकृतां बुद्धिं कृत्वाऽऽत्मार्थप्रदूषणीम् ॥ ३९ ॥

ஓ நாகராஜரே - தாங்கள் அறிவாளி. நன்கு சாஸ்த்ரத்தை அறிந்த ஞானி. இப்படிப் பட்ட இயற்கையான உங்களை சரியான வழியில் அழைத்துச் செல்லாமல் யாரோ தவறாகச் செயல்படுத்துகிறார்கள். இந்த பகைமை (தீய) எண்ணங்களை விட்டுவிடவும் என்றான்.

कथं श्रेष्ठः स यो मानी नरो वाऽन्योऽन्यनिन्दकः ।
आन्वीक्षिकीं तर्कविद्यामनुरक्तो निरर्थकाम् ॥ ४० ॥

நரனாக (மனிதனாக) அல்லது நாகனாக (பாம்பாக) இருந்தாலும் தானாகவே பொய்யாக தன்னலத்தைப் பற்றியும், இவ்வுலகத்தைப் பற்றி தவறாகவும் புரிந்துகொள்பவர் தவறானவர்களே. தான் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவன் என்றால் அதை நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் அவர்களை நாம் எவ்வாறு சிறந்தவர்கள் எனக் கூறமுடியும்.

देवेषु नागमर्त्येषु सर्वभूतेषु सर्वदा ।
सर्वे पूज्याश्च मान्याश्च श्रुतवन्तोऽनसूयकाः ॥ ४१

ஓ சிறந்தவரே - தேவர்களாயினும், நாக குலமாகிலும், மனித குலமாகிலும் அனைத்திலும் நல்லவர்களும் உள்ளனர் - கெட்டவர்களும் உள்ளனர். அதே போல் அதில் குற்றமற்ற பெருமைக்குரிய பொறாமையற்ற மனிதர்களும் இருக்கின்றனர்.

अक्रोधः सत्यवचनो न हिंस्रो दान्त आर्जवी ।
अद्रोहोऽनभिमानश्च तितिक्षुः शान्त उत्तमः ॥ ४२ ॥

यस्मिन्नेतानि दृश्यन्ते न चाकार्याणि नागप ।
स्वभावतो निविष्टानि तत्पात्रं मानमर्हति ॥ ४३ ॥

ஓ நாகேந்த்ரரே - பொதுவாக ஒருவன் கோபமற்றும், உண்மை பேசியும், அடுத்தவர்களை துன்பப் படுத்தாமலும், மனதைக் கட்டுப்படுத்தியும், த்ரோஹம் செய்யாமலும், அஹங்காரம் இல்லாமலும், வெட்கத்துடனும், ஒழுக்கத்துடனும் அமைதியுடனும் இருப்பவன் (உத்தமனாவான்) சிறந்தவனாவான். மேலும் இவ்வுலகத்தில் தருமத்தை முழுவதும் கடைபிடிப்பவன் போற்றுதலுக்குரியவனாவான். அப்படிப் பட்டவனை மதிக்கவேண்டும் என்றான்.

भक्तिज्ञाने न भिन्ने ते न भिन्नौ शिवकेशवौ ।
तस्माद् भेदो न कर्तव्यस्तदकर्तुः सदा सुखम् ॥ ४४ ॥

ஓ நாகேந்திரரே - சிறந்த பக்தியில் வைணவர் சைவர் என்ற வேறுபாடு எதுவும் கிடையாது. ஆனால் மதமில்லாமல் வழிபாடு செய்ய முடியாது. ஆதலால் நாம் (பேதங்களை) வேறுபாட்டை ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு இருந்தால் தான் நாம் நல்லதை அடையமுடியும்.

कः शिवः को हरिः को वा रुद्रः को वा विधिश्च कः ।
एतेषु निर्गुणः को वा ह्येतं नश्छिन्धि संशयम् ॥ ४५ ॥

யார் சிவன்? யார் விஷ்ணு? யாரை நாம் ருத்ரன் என்றழைக்கிறோம்? யார் ப்ரஹ்மா? இவ்வாறு அழைப்பதில் நமக்கு குழப்பம் ஏற்படுகிறது. ஆதலால் ஓ நாகராஜரே - இந்த குழப்பத்திருந்த வெளியில் வாருங்கள். ஒரே கடவுள் பல விதமான பெயர்களில்

यच्चादौ हि समुत्पन्नं निर्गुणात्परमात्मनः ।
तदेव शिवसञ्ज्ञातं वेदवेदान्तिनो विदुः ॥ ४६ ॥

ஓ நாகேந்த்ரா - இந்த உலகத்தில் முதன் முதல் எவ்வித குணமும் இன்றி நிர்குணத்துடன் அதாவது இயற்கைக்கு கட்டுப்படாத உருவமற்ற பரமாத்மாவான ஒருவர் உண்டானார். அவர் வேத வேதாந்தங்களை அறிந்தவராக சிவன் என்ற பெயரில் அறியப்பட்டார்.

तस्मात्प्रकृतिरुत्पन्ना पुरुषेण समन्विता ।
ताभ्यां तपः कृतं तत्र जलस्थाभ्यां पुरा सुधीः ॥ ४७ ॥

அந்த பரமாத்மாவிருந்து இயற்கையும் (ப்ரக்ருதியும்), புருஷனும் உற்பத்தி பண்ணப்பட்டது. அதன் பிறகு தவத்தின் வ லிமையால் தண்ணீர் உற்பத்தியானது.

सम्भाव्य मायया युक्तस्तत्र सुप्तो हरिः स वै ।
नारायणेति विख्यातः शक्तिर्नारायणी मता ॥ ४८ ॥

அந்த இயற்கை (ப்ரக்ருதி) மற்றும் புருஷனுடைய தவத்தினால் தண்ணீரில் இருந்து ஸ்ரீவிஷ்ணு உற்பத்தியானார். அவரே மாயை என்கிற சக்தியுடன் மற்றொரு உருவத்தை எடுத்தார். அந்த புருஷனான உருவம் நாராயணன் என்றும் சக்தியுடன் கூடிய பெண் உருவம் நாராயணி என்றும் அழைக்கப்பட்டது.

उभयोर्वामशयने यद्रूपं दर्शितं तदा ।
महादेवेति विख्यातं निर्गुणं सा शिवा मता ॥ ४९ ॥

அந்த நிர்குணத்தையுடைய (சிவன்) புருஷன் இடது பக்கத்தில் தனது சக்தியுடன் படுத்துக் கொண்டபோது தத்வங்களுடன் கூடிய மஹாதேவனாக ஆனார். இந்த உருவம் ப்ரஹ்மா விஷ்ணுவின் சக்தியுடன் உற்பத்தியானதால் இவரை மஹாதேவன் சிவன் என்றழைத்தனர்.

शिवे त्रिगुणराहित्यं हरौ तु गुणधामता ।
वस्तुतो न हि भेदोऽस्ति स्वर्णे सा भूषणे भिदा ॥ ५० ॥

ஆதலால் சிவனிடத்தில் மூன்று குணங்கள் (மாயையுடன்) கூடி இருப்பதாகவும், விஷ்ணுவானவர் அனைத்து குணங்களின் இருப்பிடமாகவும் இருக்கின்றனர். அதாவது எவ்வாறு உலோகம் (மற்றும்) தங்கமாக மாறி, அணிகலன்களாக ஆகிறதோ அவ்வாறு உண்மையிலும் சிவன் விஷ்ணு ஆகியோரிடம் எவ்விதபேதமும் இல்லை.

समरूपसुकर्माणौ समं भक्तगतिप्रदौ ।
समानावखिलैः सेव्यौ नानालीलाविहारिणौ ॥ ५१ ॥

இவ்வுலகில் சிவன் விஷ்ணு இருவரும் தங்களுடைய பற்பல விளையாட்டால் அனைவரையும் மகிழ்விக்கின்றனர். இருவரும் ஒரே மாதிரியான உருவத்தையும், வேலையையும், நன்மையையும் செய்கின்றனர். ஆதலால் இருவரும் ஒரே கடவுள் தான்.

यथैक एव सूर्योऽयं ज्योतिर्नानाच्यते जनैः ।
जलादि च विशेषेण दृश्यते तत्तथैव तौ ॥ ५२ ॥

எவ்வாறு ஒரே சூரியன் பலவிதமாக தண்ணீரை நமக்கு கொடுத்து உதவியைச் செய்கிறானோ அவ்வாறு பரமாத்மா, பரமபிதா, உயர்ந்த கடவுள் என்ற பற்பல பெயரில் (சிவன் விஷ்ணு இருவரும்) நமக்கு நன்மையைச் செய்கின்றனர். இருவரும் ஒருவரே ஆவர்.

(சிந்தனைக்கு :- ஊர்த்வரேதா என்ற சொல்ன் பொருளைப் பார்ப்போம். அதாவது ஒரு ரிஷியும், ஒரு சாதாரண மனிதனும் கடன் கரையில் அமர்ந்து அதன் அலைகளைப் பார்க்கின்றனர். சாதாரண மனிதன் ஒவ்வொரு அலையிலும் சூரியனைக் காண்கிறான். ஆனால் அந்த ரிஷி அலைகளில் சூரியனின் பல வடிவங்களை கடவுளாகப் பார்க்கிறார். பொதுவாக இதன் பொருள் - எவன் ஒருவன் (மேல் நோக்கி) உயர்வான பரம்பொருளைச் சிந்திக்கிறானோ அவரைக் குறிக்கும். இங்கு இருவரும் கடவுளைக் குறித்து தான் கூறுகின்றனர். அமைதியற்ற மனதைக் கொண்டிருக்கும் சாதாரண மனிதன் கடன் அலையில் சூரியனையும், அதே காட்சியை ரிஷி கடவுளாகவும் பார்க்கிறார். இவ்வாறு தான் சிவன் விஷ்ணு இருவரும் ஒரே கடவுள் ஆவார்)

इति नो विविधं वाक्यमृर्षीणां च समागतम् ।
इत्येवञ्च समाख्यातं यत्पृष्टं पन्नगानघ ॥ ५३ ॥

ஓ நாகராஜனே - இவ்வாறு ஆச்ரமத்தில் நாங்கள் இருந்த போது மஹரிஷிகள் சிவன் விஷ்ணு ஆகியோரைப் பற்றியும் அவர்களின் பற்பல வடிவங்களையும் எங்களுக்கு கூறினர். இது தான் தங்களுடைய கேள்விக்கு பதில் என்றான்.

हरस्याभूषणं शेषं धरापर्वतधारिणम् ।
नारायणः स्वासनं तं कुरुते श्रीकरं सुखम् ॥ ५४ ॥

சிவன் காடு மலைகளைத் தாங்கிக் கொண்டு பாம்பை அணிகலனாகக் கொண்டுள்ளார். அதே போல் நாராயணன் (விஷ்ணு) க்ஷீராப்தி என்கிற பாற்கடல் பாம்பின் படுக்கையில் மஹாலக்ஷ்மி சேவை செய்ய மகிழ்ச்சியுடன் படுத்துக் கொண்டு இருக்கிறார்.

महीधर उवाच

विस्मयो मे महान् श्रुत्वा राजन् ते परमाद्भुतम् ।
एतद् रहस्यं विज्ञातं याथातथ्येन हि त्वया ॥ ५५ ॥

மஹீதரன் கூறினான் - ஓ ராஜன் - கடவுள் சிவன் விஷ்ணு ஆகியோரின் ரஹஸ்யங்களைப் பற்றிய தங்களுடைய சொற்பொழிவைக் கேட்டு வியப்படைகிறேன். கடவுள் ஈச்வரன் ஒருவரே, பெயர்களால் மாறுபடுகின்றனர். உண்மையிலும் எங்களுடைய ஞானக் கண்ணை திறந்துள்ளீர்கள்.

जैमिनिरुवाच

युवा मतिमतां श्रेष्ठो ज्ञानविज्ञानकोविदः ।
सर्वानेव निजग्राह चकार च निरुत्तरान् ॥ ५६ ॥

ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் மஹீதரனின் அரசவையில் இளமையாக இருந்தாலும் அறிவுத்திறமையிலும் ஞானத்திலும் அவர் மற்றவர்களைக் காட்டிலும் முதன்மையாகத் திகழ்ந்தார். இப்படிப்பட்ட கடுமையான வாக்குவாதத்தால் அந்த அரசவை மிகவும் அமைதியாக இருந்தது.

अग्रसेन उवाच

नरनागविरोधेन भविता कुलसङ्करः ।
पौत्रस्ते भविता नागस्तेजोवीर्यसमन्वितः ॥ ५७ ॥

அக்ரஸேனர் கூறினார் - மனிதனுக்கும் பாம்பிற்கும் (நாகத்திற்கும்) பகைமை இருப்பதால் இருவருடைய குலமும் அழிந்து விட்டது. மஹரிஷி கர்க்யர், மஹரிஷி உத்தாலகரின் ஆலோசனைப்படி நான் தங்களுடைய கன்னிகை மாதவியை மணந்து, பிறகு அதனால் தங்களுடைய பேரன் நாககுலத்தில் பெரிய வீரனாகவும், தேஜஸ்ஸுடனும் திகழப்போகிறான் என்றான்.

नारी कुलं वर्धयति नारी पुष्टिर्हि परा ।
नारी लक्ष्मीः रतिः साक्षात् प्रतिष्ठा सन्ततिस्तथा ॥ ५८ ॥

ஓ நாகராஜனே - பெண்களின் மூலம் தான் ஒவ்வொரு குலமும் விரிவடைந்து சக்தியுடன் இருக்க வேண்டும். பெண் தான் ஒரு குடும்பத்தின் செல்வம், மஹாலக்ஷ்மி. அவள் தான் ஒரு குடும்பத்திற்கு வேண்டியவற்றை கொடுத்து, மகன், பேரன்களைக் கொடுத்து நிறைவடையச் செய்வாள்.

महाकुलानां चरितं तनोति निकषोपमम् ।
दातारं हव्यकव्यानां प्रसूते पुत्रकञ्च या ॥ ५९ ॥

ஆதலால் பெண் தான் ஒரு குடும்பத்தில் க்ருஹ லக்ஷ்மியாக மதிக்கப்படவேண்டும். அவள் தான் புத்திரர்களை யாகங்களைச் செய்வதற்கும், முன்னோர்களுக்கு தங்கள் கடமைகளைச் செய்தவற்கும் கொடுப்பாள். பெண்களுடைய நன்நடத்தையும் ஆன்மீக வழிபாடும் பண்பாடும் தான் குலத்தை உயர்த்தும் என்றார்.

ततस्ते वंशकार्यार्थमहं त्वां समुपागतः ।
एवं मनो दृढं कृत्वा त्वयि सर्वं निवेदितम् ॥ ६० ॥

நான் தங்களுடைய பெண் மாதவியைத் திருமணம் செய்துகொள்ளும் தீர்மானத்துடன் தான் இங்கு வந்துள்ளேன். என்னுடைய மனதை பலப்படுத்தி அனைத்தையும் தங்களிடம் கூறிவிட்டேன்.

जैमिनिरुवाच

तामुवाच तु नागेन्द्रः कथं त्वां प्रीणयाम्यहम् ।
कथं ह्यहं प्रतिश्रुत्य महेन्द्राय विशेषतः ॥ ६१ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் பேச்சாற்றலைக் கண்டு சமாதானம் அடைந்த நாகேந்திரன் கூறினான் - ஓ ராஜன் - நான் எவ்வாறு என்னுடைய பெண் மாதவியை திருமணம் செய்து கொள்ள அனுமதிப்பது?. நான் ஏற்கனவே மஹேந்திரனுக்கு எனது பெண்ணைக் கொடுப்பதாக வாக்களித்து விட்டேன்.

तेन वैरं त्वया सार्धं कर्तव्यं नात्र संशयः ।
न तस्य पादरजसा तुल्योऽहं प्रीणयामि वा ॥ ६२ ॥

நான் தங்களுக்கு அனுமதியளித்தால், தேவேந்திரன் உங்களுக்கு எதிரி ஆகிவிடுவான். இப்பொழுதான் தாங்கள் தேவர்களின் வீரத்தைப் பற்றி உவமையுடன் கூறினீர்கள். இவ்வாறு இருக்கையில் நான் எப்படி எனது பெண்ணை தங்களுக்கு திருமணம் கொடுப்பது.

एवं चिन्तयमानस्य श्रुत्वा वाचमहीशितुः ।
अग्रसेनोऽब्रवीद् वाक्यमर्थशास्त्रविशारदः ॥ ६३ ॥

இவ்வாறு பயத்துடன் கூறிய மஹீந்திரன் நாகராஜரை சாஸ்த்ரங்களில் புலமை பெற்றுள்ள ஸ்ரீஅக்ரஸேனர் பார்த்து அர்த்தங்கள் பொருந்திய வசனங்களுடன் கூறினார்.

अग्रसेन उवाच
नाकृतज्ञा न च क्लीबा नावलिप्ता न बालिशाः ।
न देवाः क्षुद्रकर्माणः मा मैवं नागराड्वर ॥ ६४ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ என்னுடைய பெரிய தகப்பனாரே - தாங்கள் அவ்வாறு இறக்கமில்லாமல், கவலையுடன் மறைக்கப்பட்டு குழந்தை போன்று சொல்லக் கூடாது. தேவர்கள் என்ன இறக்கமற்றவர்களா? செய்யக்கூடாத வேலையைச் செய்பவர்களா?. அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல.

तत्परस्तन्मनाश्चास्मि तद्भक्तस्तत्प्रिये रतः ।
कथं पापं करिष्यन्ति विज्ञायैवंविधं हि माम् ॥ ६५ ॥

நான் எப்பொழும் தருமத்துடன் அனைத்து தேவதைகளையும் மகிழ்ச்சியடையச் செய்வேன். நான் அனைவருக்கும் வேண்டியவன். நான் அவர்கள் இடத்தில் நம்பிக்கையும் பக்தியையும் வைத்துள்ளேன். தாங்கள் கூறியபடி நான் எவ்வாறு அப்படிப்பட்ட பாபத்தைச் செய்வேன்?.

जैमिनिरुवाच

इत्येवमुक्ते वचनेऽग्रेण वै नागमण्डले ।

उदतिष्ठन्महान् नादः प्रशंसन् अग्रसेनकम् ॥ ६६ ॥

ஜைமினி கூறினார் - நாகராஜனின் அரசவையில் இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் தன் நம்பிக்கையுடன் பேசியதைப் பார்த்த அவையினர் அனைவரும் எழுந்து நின்று கொண்டு கையைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியையும் ஒப்புதலையும் தெரிவித்தனர்.

उद्दालक उवाच

अग्रसेनो महाबाहुर्योद्धा तादृङ् न विद्यते ।

अमी नागसुतास्तस्य कलां नार्हन्ति षोडशीम् ॥ ६७ ॥

உத்தாலகர் கூறினான் - இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் - மஹரிஷி உத்தாலகர் அங்கு வந்து கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனன் நன்கு சாஸ்திரங்களையும் தத்துவங்களையும் அறிந்தவன், ஞானி, சிறந்த வீரன். இதில் உங்களுக்கு ஏற்கனவே அனுபவமிருக்கிறது. ஆதலால் ஓ நாகராஜனே - இந்த நாக பூமியில் 16 கலைகளையும் முழுவதும் அறிந்தவர் எவரும் இல்லை.

वैष्णवानां प्रभावोऽयं न केन विदितः पुरा ।

देवतानां सकाशं च ये गच्छन्ति निमन्त्रिताः ॥ ६८ ॥

இவ்வுலகத்தில் வைணவர்களின் பெருமையை இதற்கு முன்பு யார் இவ்வாறு அறிந்திருக்கிறார்கள்?. இவர்களை நாம் உதவி கேட்டால் அவர்கள் கண்டிப்பாக நமக்காக தேவர்களிடமும் அசுரர்களிடம் போட்டியிடுவர்.

देवतार्थं नृणां यत्नः सदा दानवसङ्क्षये ।

तेषां प्रियार्थं संग्रामे युज्यन्ते नरपुङ्गवाः ॥ ६९ ॥

முயற்சி கொண்டு மனிதர்கள் தேவர்களுடன் அசுரர்களை அழிப்பர். மனிதர்கள் தேவர்களின் அன்பிற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் நன்மையைச் செய்பவர்கள்.

सदृशो धर्मसम्बन्धः सदृशो गुणसम्पदा ।
सम्बन्धेनानुबध्येतां भवन्तौ पुण्यकर्मणा ॥ ७० ॥

ஓ நாகராஜா - ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவி இருவரும் மிகவும் பொருத்தமானவர்கள். தருமம் செய்வதிலும், குணத்திலும் அழகிலும் இருவரும் சமமானவர்கள். அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டு புண்ணியச் செயல்களைச் செய்பவர்களாக ஆகட்டும் என்றார்.

प्रासः सुरामयः स्वामिन् मनो मार्गाच्युतं तव ।
भविष्यति श्रेयसीह सर्वलोकहितावहे ॥ ७१ ॥

ஓ நாகராஜா - உன்னுடைய மனது கலங்கியுள்ளது. ஸ்ரீஅக்ரஸேனனும் மாதவியும் திருமணமாகி இருவரும் தேவர்களுக்கு மிகவும் வேண்டியவர்களாக ஆகப் போகின்றனர். மனித குலம், பாம்பின் குலம் என பிரித்துப் பார்க்காமல் இந்த திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கவும். இதனால் தேவர்கள் மனத் துயரம் அடையமாட்டார்கள்.

जैमिनिरुवाच

सोऽहर्षयत् तु सर्वेषां मधुरोऽश्रुयुतस्वनः ।
नागेन्द्री नागकन्या च सभाभवनमागते ॥ ७२ ॥

ஜைமினி கூறினார் - அந்த சமயத்தில் அனைவரும் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் ஆனந்த கண்ணீரை பெருக்கிக்கொண்டிருக்கும் போது இராணி நாகேந்த்ரியும், நாக கன்னிகை மாதவியும் அரசவையின் மண்டபத்தை அடைந்தனர்.

माधवी प्रसमीक्ष्यैनमग्रं लज्जितमानसा ।
आश्वासयद् वरारोहां स हृष्टेनान्तरात्मना ॥ ७३ ॥

நாகராஜனின் மகள் மாதவி ஓரக் கண்ணால் வெட்கத்துடன் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்தாள். அக்ரஸேனனும் தன்னுடைய மனதை சமாதானப்படுத்தி மகிழ்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

तौ परस्परसम्प्रीतावववन्देतां कृताञ्जली ।

प्रशंसताम् अग्रसेनं शब्दोऽभूद् विस्मयावहः ॥ ७४ ॥

ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ந்து அனைவரையும் வணங்கினர். அவையில் அனைவரும் வியக்கும்படி ஸ்ரீஅக்ரஸேனரைப் பற்றி புகழ் மாலையைச் சூட்டினர்.

जैमिनिरुवाच

नो शक्यमग्रसेनेन जनमेजय यत् कृतम् ।

यत्र धीर्ह्रीः स्थिता तत्र श्रीश्च लभ्याऽनपायिनी ॥ ७५ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - யாரும் செய்ய முடியாதச் செயலை ஸ்ரீஅக்ரஸேனர் செய்து முடித்தார். ஏனெனில் ஸ்ரீஅக்ரஸேனரைப் போன்று எந்த இடத்தில் ஞானமும் பராக்ரமும் இருக்கிறதோ அங்கு தான் அழிவற்ற மஹாலக்ஷ்மியான செல்வம் அவனை விட்டுப் பிரியாமல் இருக்கும்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य

यद्विरचितम् श्रीमदग्रभागवते पञ्चदशोऽध्यायः ॥

॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினைந்தாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதினாறாவது அத்யாயம்

வெறுப்பு

जैमिनिरुवाच

अथैवं पूजितो ह्येष वसत्यतिथिमन्दिरे ।
नावं लब्ध्वैव पौरैषी सोऽह्यप्यग्रसेनकः ॥ १ ॥

ஜைமினி கூறினார் - இப்படி வாழ்த்துக்களைப் பெற்ற பின்பு மாதவிக்கும் ஸ்ரீ அக்ரஸேனருக்கும் திருமணம் நடைபெற்றது. ஸ்ரீஅக்ரஸேனரும் நாக குலத்தை வழிபட்டார். பின்பு ஸ்ரீஅக்ரஸேனர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார்.

ददर्श वै रवेः रूपं सन्ध्याभ्रारक्तकं तदा ।
नवोदिते गुणास्तत्र चन्द्रपादसुशोभिताः ॥२ ॥

அந்த நேரம் மாலைப்பொழுதானதால் சூரியன் மிகவும் அழகான சிவப்புக் கலரை அடைந்தான். சந்திரன் வானத்தில் தெரிவதற்காக தன்னுடைய கிரணங்களை வெளியில் தெரிவித்துக் கொண்டிருந்தான். இந்த இயற்கையை மகிழ்ச்சியுடன் அனுபவித்துக் கொண்டிருந்தான்,

विचित्रमणिमुक्ताभिर्भवनैःस्वर्णतोरणैः ।
स्वयं प्रभाभिर्मणिभिर्वज्रैर्भूमिश्च भूषिता ॥३ ॥

அந்த விருந்தினர் மாளிகை உயர்ந்த நவரத்தினங்களால் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஸ்ரீஅக்ரஸேனர் வீரத்துடன் ஒளியுடனும் அழகாக இருப்பதால் அந்த விருந்தினர் மாளிகை மேலும் அழகை அதிகரித்துக் கொண்டது.

मधुपुष्परजःपृक्तं गन्धमादायपुष्कलम् ।
सुखोऽनिलोऽवासयच्च मनस्तुष्टिविवर्धनम् ॥४॥

அங்கு பற்பல புஷ்பங்கள் பூத்துக் குலுங்கியதால் அதிருந்து தேனை உறிஞ்சுவதற்காக வண்டுகளும் தேனீக்களும் ரீங்காரத்துடன் அந்த இடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. இந்த இயற்கை ஸ்ரீஅக்ரஸேனரின் மனதிற்கு மிகவும் இன்பத்தை அளித்தது.

एतस्मिन्नन्तरे चन्द्रप्रगाढे रजनीमुखे ।
भुजङ्गिनी समायाता पृथुश्रोणी मनोरमा ॥ ५ ॥

சந்திரன் இரவை முழுமையாக்கும் நேரத்தில் வானத்திருந்த நக்ஷத்திரங்களின் ஒளியால் அந்த மாளிகை புன்னகை பூத்தது. அச்சமயத்தில் இளமையுடனும் வளமையான இடுப்பையும் மனதில் முழுமையான மகிழ்ச்சியையும் கொண்ட பன்னகி (நாக சுந்தரி) ஸ்ரீஅக்ரஸேனரின் மாளிகையை அடைந்தாள்.

मृदुकुञ्चितदीर्घेण कुमुदोत्करधारिणा ।
केशहस्तेन राजन्ती साऽऽजगाम तु कामिनी ॥ ६ ॥

அவள் மென்மையான அழகான நீண்ட கூந்தலுடனும், கையில் வெண் ஆம்பல் மற்றும் செந்தாமரை மலர்களையும் வைத்துக்கொண்டு தனது கையால் கூந்தலை நீவிக்கொண்டு ஆசையுடன் அங்கு வந்தாள்

चक्षुर्मनोहरं पीनं मेखलादामभूषितम् ।
समुद्वहन्ती जघनं रतिप्राभृतमुत्तमम् ॥ ७ ॥

அவளுடைய மீன் கண்கள் மனதை கவரும்படியும், மார்பகங்கள் பெருத்தும் அதில் அணிவிக்கப்பட்டிருந்த தங்கமயமான மாலைகள் வளைந்து வந்தும் இடுப்பில் ஒட்டியாணத்துடனும் அவளிடமுள்ள ரதி ஆண்களை வசீகரம் செய்யும்படியும் இருந்தது.

विक्षेपालापमाधुर्यैः कान्त्या सौम्यतयाऽपि च ।
शशिनं वक्त्रचन्द्रेण साऽऽह्वयन्तीव सम्बभौ ॥ ८ ॥

புருஷனுடன் ஸம்மோஹம் கொள்ளப்போகிறோம் என்கிற பயம் கலந்த அழகுடன் அந்த நாகலோக சுந்தரி மிகவும் அழகாகவே இருந்தாள். அச்சமயத்தில் அவளுடைய அழகான முகம் சந்திரனைப் பழிப்பது போன்றாயிற்று.

नीलं सतोयमेघाभं वस्त्रं समवकुण्ठितम् ।
बभावन्यतमेव श्रीः कान्तिश्रीद्युतिकीर्तिभिः ॥ ९ ॥

அவள் நீல நிறத்தில் ஆடைய அணிந்து கொண்டு முகத்தை மறைத்துக் கொண்டிருந்ததால் நீர் நிரம்பியுள்ள மேகத்தைப் போல் காட்சியளித்தாள். மேலும் வருணிக்கமுடியாததான அழகான ஒளியுடனும் புகழுடனும் ஐசுவர்யத்தைப் போன்று காட்சியளித்தாள்.

गच्छन्त्या हाररुचिरौ स्तनौ तस्या ववल्गतुः ।
स्तनोद्वहनसंक्षोभान्नम्यमाना पदे पदे ॥ १० ॥

அவளின் மார்பகங்களும் பெரியதாக இருந்ததால், நடக்கும்போது அதன் மேல் அலங்கரிக்கப் பட்டிருந்து மாலைகள் (ஹாரங்கள்) குலுங்கின. மேலும் மார்பகங்களின் பளுவால் அவள் குனிந்தே நடந்துவரும்படியாக இருந்தாள்.

ऊरू करिकराकारौ करौ पल्लवकोमलौ ।
त्रिवलीदामचित्रेण मध्येनातीव शोभना ॥ ११ ॥

உடலுள்ள அவளுடைய அழகான இரு கைகளும் மரங்களின் இரு புறமும் இருக்கும் இலைகளைப் போன்றும், அவள் நடக்கும் போது மேலும் கீழும் அசையும் அவளுடை உருண்டையான துடைகள் யானையின் துதிக்கைப் போன்றும் (பெண்ணாகவும், அழகான இளந்தளிர்களையுடைய மரமாகவும், துதிக்கையுடைய யானையைப் போலவும்) மூன்று விதமாக அவள் அழகாக பார்க்கப்பட்டாள் (இருந்தாள்).

अधोभूधरविस्तीर्णनितम्बानतपीवरम् ।
मन्मथायतनं तस्याः रशनादामभूषितम् ॥ १२ ॥

தொப்புளின் கீழ் பாகம் சிறிது பருமனாகவும் பெருத்தும் அழகாக சிறிய மலையைப் போன்று இருந்தது. இது மன்மதனை ரதி ஆசையுடன் அடைவது போன்று இருந்தது.

विलासैर्विविधैः सा तु प्रेक्षणीयतराभवत् ।
ऋषीणामपि दिव्यानां मनोव्याघातकारणम् ॥ १३ ॥

இவ்வாறு நாக லோக சுந்தரியின் உடல் மிகுந்த அழகுடனும் மோஹத்துடனும் தேவர்களையும் ரிஷிகளையும் கூட தன் வசம் இழுக்கும்படி இருந்தது.

सुसूक्ष्मेणोत्तरीयेण वृष्टिदा मदनस्य च ।
तनुवस्त्रावृताऽऽयाता पन्नगी सा विलासिनी ॥ १४ ॥

இவ்வாறு அழகான இளமையான உடலையுடைய பன்னகி மெல்ய மேல் ஆடையை அணிந்துக் கொண்டு மன்மத ஆசையுடன் ஸ்ரீஅக்ரஸேனரின் மாளிகைக்கு வந்தாள்.

सा शङ्कितमनाः प्रत्युदगच्छत् तं तदा निशि ।
दृष्ट्वैव पन्नगीम् अग्रसेनो लज्जालुलोचनः ॥ १५ ॥

இவ்வாறு இரவில் தன்னை நோக்கி வரும் பன்னகியைப் பார்த்த அக்ரஸேனன் சந்தேகப்பட்டார். பன்னகியும் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்து மகிழ்வும் வெட்கத்தையடைந்தாள்.

तमेकं रहिते दृष्ट्वा पन्नगी चारुहासिनी ।
प्रत्युद्गताञ्जलिं कृत्वा राजानं वाक्यमब्रवीत् ॥ १६ ॥

அழகான புன்னகை சிரிப்புடன் கூடிய பன்னகிக்கு ஸ்ரீஅக்ரஸேனர் தனியாக மாளிகையில் இருக்கிறார் என்பது தெரியும். அவரின் அருகில் சென்று இரு கைகளையும் கூப்பிக் கொண்டு கூறினாள் -

पन्नगी उवाच

कामेन मोहिता चाहं त्वां भजन्ती भजस्व माम् ।
त्वामुद्दिश्य तु मे सर्वं विभूषणमिदं कृतम् ॥ १७ ॥

பன்னகீ (நாக கன்னிகைத் தோழி) கூறினாள் - ஓ ராஜன் - நான் தங்களுடைய அழகில் மயங்கி விட்டேன். ஆதலால் தங்களுக்கு பணிவிடை செய்ய இங்கு வந்துள்ளேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் தாங்களை மட்டுமே விரும்புகிறேன்.

मयाऽऽननरसस्यास्य पद्मोत्पलसुगन्धिनः ।
माधुर्यममृतस्येव त्वां तृप्तिं प्रापयिष्यति ॥ १८ ॥

ஓ ராஜன் - என்னுடை உதடுகள் முழுவதும் உயர்ந்த தாமரையின் வாசனைக் கொண்டது. என்னுடைய உதடு என்கிற தாமரையிருந்து அம்ருதத்தைக் குடித்து மகிழுங்கள் என்றாள்.

सुवर्णचक्रप्रतिमं स्वर्णभूषार्चितं पृथु ।
अध्यारोह त्वमद्यैतद् जघनं स्वर्गरूपि मे ॥ १९ ॥

ஓ ராஜன்- என்னுடைய தங்கமயமான உடல் ஏறி விளையாடுங்கள். என்னுடன் தாங்கள் உடல் உறவு கொள்வதால் நிச்சயம் மகிழ்ச்சியை அடைவீர்கள்.

सर्वान् कामानुपाश्नीमो ये नागानां न वा नृणाम् ।
प्रार्थिनीम् उपगूहैनां मां कामार्तां भृशं त्वयि ॥ २० ॥

எவ்வாறு தாங்கள் மனிதர்களிடத்தில் உடல் உறவு கொண்டால் மகிழ்ச்சி ஏற்படுமோ அவ்வாறு மகிழ்ச்சியை நான் ஏற்படுத்துவேன். அதன் பிறகு இந்த நாகலோகத்தை விட்டு போகமாட்டீர்கள். இதன் பிறகு என்னால் என்னை கட்டுப்படுத்த முடியவில்லை. என்னை எடுத்துக்கொள்ளுங்கள் என்றாள்.

जैमिनिरुवाच

तथा ब्रुवन्तीं तां श्रुत्वा भृशं लज्जानतोऽग्रणीः ।
उवाच कर्णौ हस्ताभ्यां पिधाय भुजगालये ॥ २१ ॥

ஜைமினி கூறினார் - சிறப்பான விருந்தினர் மாளிகையில் அழகான நாகலோக சுந்தரி கூறும் காமமான வார்த்தைகளை கேட்டும் அவளுடைய உருவத்தைப் பார்த்தும் ஸ்ரீஅக்ரஸேனர் தனது இரு கைகளாலும் கண்களை மூடிக்கொண்டார்.

अग्रसेन उवाच

दुःश्रुतं मेऽस्तु सुभगे यन्मां वदसि भामिनि ।
त्वं स्वसुर्मे समा मन्ये निश्चयेन वरानने ॥ २२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - காம ஆசையுடன் கூடிய அந்த இளமையான பெண்ணிடம் கூறினார் - ஓ பெண்ணே - நீ கூறிய வெட்கமான சொற்கள் அனைத்தையும் என்னால் காது கொடுத்து கேட்டக் கூட முடியவில்லை. என்னை மன்னிக்கவும். நான் உன்னை எனது சகோதரியாகப் பார்க்கிறேன் என்றார்.

पन्नग्युवाच

त्वं प्रसीद न मामार्तां विसर्जयितुमर्हसि ।
हृच्छयेन च संतप्तां भक्तां च भज मानद ॥ २३ ॥

பன்னகி கூறினாள் - ஓ சிறந்தவரே - என்னுடைய தோழியின் கணவன் என்னுடைய கணவன். எனக்கும் அவளுக்கும் வேறுபாடு எதுவுமில்லை. மற்ற பெண்களுக்கு ஏற்படுவதைப் போலத் தான் எனக்கும் உனக்கும் ஏற்பட்டுள்ள காதல். நீ ஏன் பல மனைவிகளை மணக்கக் கூடாது. எனது தோழி மாதவி உன்னை கணவனாக தேர்ந்தெடுத்தாள். ஆதலால் நானும் உங்களை கணவனாகத் தேர்ந்தெடுத்துள்ளேன் என்றாள்.

समावेतौ मतौ राजन् पतिः सख्याश्च यः पतिः ।
समं विवाहमित्याहुः सख्या मेऽसि वृतः पतिः ॥ २४ ॥

ஓ ராஜன் - என்னுடைய கணவன், அவளுடைய நண்பன் ஆகிய இரண்டுமே கணவனாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனது தோழி மற்றும் தோழியின் தோழியும் உங்களுடைய மனைவிகள் ஆவர். எனது தோழி உங்களை கணவனாக ஒப்புக் கொண்டாள். அதே போல் நாங்களும் தானாகவே உங்களுடைய மனைவியாகி விடுவோம். இது இங்குள்ள நடைமுறை ஆகும்.

सा त्वां प्रसाद्याहमृतुं फलयामि नराधिप ।
प्रहृष्टा भव हे राजन् समागच्छ मया सह ॥ २५ ॥

ஓ ராஜன் - தங்களை மகிழ்ச்சியுடன் அடைய விரும்பும் என்னை ஒப்புக்கொண்டு என்னுடன் மகிழ்வதற்கு வர வேண்டுகிறேன் என்றாள்.

जैमिनिरुवाच

स्त्रीणां न कामतोऽन्योऽस्ति पुरुषार्थो नराधिप ।
नातः पुरुषसंसर्गान्नारीणां हि प्रियं परम् ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - எப்பொழுது ஒரு பெண்ணும் புருஷனும் ஒருவரை ஒருவர் நெருங்கும் போது உடல் உறவு கொண்டு மகிழ்வதைத் தவிர மற்றவை என்ன நடக்கும். பெண்களை உடல் உறவால் மகிழ்விப்பது போல் அதற்கு ஈடு வேறு எதுவும் ஆகாது.

आत्मच्छन्देन वर्तन्ते नार्यो मन्मथचोदिताः ।
लीलायन्त्यः कुलं घ्नन्ति कूलानीव सरिद्वराः ॥ २७ ॥

ஒரு பெண் மன்மதனால் பீடிக்கப்பட்டால் அவள் தன்னுடைய மனதில் நினைத்தப்படி ஆசையை அடைந்துவிடுவாள். எவ்வாறு நதி (ஆறு) வேகமாக ஓடும் போது கரையை உடைத்துக் கொண்டுச் செல்லுமோ அவ்வாறு அந்த சமயத்தில் அவள் தனது குலத்தையும், மரியாதையையும், இடத்தையும் பார்க்கமாட்டாள்.

निर्विकारोऽग्र एकाग्रः पन्नगीं प्रत्यभाषत ।

ஜைமினி கூறினார் - இவ்வாறு காமத்தை அடைந்த அந்த நாக சுந்தரி வெட்கமில்லாமல் நடந்து கொண்டாள். ஸ்ரீஅக்ரஸேனர் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூறினார் -

अग्रसेन उवाच

आस्यतां रुचितश्छन्दः किं च कार्यं मया वद ॥ २८ ॥

அக்ரேஸனர் கூறினார் - காமத்தால் வெட்கமில்லாமல் இருக்கிறாய். பேசாமல் உட்காரவும். இதைத் தவிர வேறு எதையும் நீ எதிர்பார்க்காதே. என்னால் எதையும் செய்ய முடியும். ஆனால் உடல் உறவை எதிர்பார்க்காதே. அதை என்னிடமிருந்து உன்னால் அடையமுடியாது.

जैमिनिरुवाच

एवमुक्ताऽग्रसेनेन पन्नगी क्रोधमूर्छिता ।
वेपमानभ्रुकुटिकाऽथाग्रसेनम् उवाच ह ॥ २९ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு கடுமையான வார்த்தைகளால் அந்த பன்னகியை (நாக சுந்தரியை) எச்சரித்தவுடன் அவள் மிகவும் கோபத்தை அடைந்தாள். அவள் உடம்பு நடுங்கியது. கண் இமைகளை விழித்து முழியை வெளியில் கொண்டுவந்து ஆவேசத்துடன் கடுஞ்சொற்களால் கத்தினாள்.

पन्नगी उवाच

यस्मान्मां नाभिनन्देस्त्वं कामबाणवशं गताम् ।
दानं धर्मच्छलं कृत्वा षण्ढवत्तु त्वया कृतम् ॥ ३० ॥

பன்னகி கூறினாள் - ஓ ராஜன்- என்னையும் எனது ஆசையையும் வெறுத்து அவமானப் படுத்திவிட்டாய். தாங்கள் ஒரு பெரிய மனிதனா?. முறைப்படி ஒரு ஆசையுடைய பெண்ணை அவளிடம் ஆசை கொண்டு மகிழவைக்க வேண்டும். அதற்கு மாறாக என்னை வெறுத்துவிட்டீர்கள். தாங்கள் ஒரு சிறந்தவர் இல்லை.

न वक्ष्यामि वृथा वाचं त्वयाऽद्य न रता यदि ।
विषास्त्रैः पातयिष्यामि विजेष्यामि रतेन वा ॥ ३१ ॥

ஓ அக்ரா - நான் ஒன்றும் பொய் சொல்லவில்லை. இப்பொழுது கூட உன்னை ஏமாற்றி வெற்றிபெற முடியும். நான் உன்னால் உடல் உறவில் மகிழ்ச்சியடையவில்லை எனில் என்னுடை கொடிய விஷத்தை உன்மேல் பாய்ச்சி காதலுடன் அல்லது கட்டாயத்துடன் என்னால் இன்பம் அடைய முடியும். எது என்னால் செய்யமுடியுமோ அதை நான் செய்கிறேன் என அவளது தீர்வைக் கூறினாள்.

मत्सङ्गतः सुखावाप्तिर्यन्न प्राप्ता त्वया पुरा ।
गरलैः पीड्यमानोऽथ मृतो व्यर्थं गमिष्यसि ॥ ३२ ॥

ஓ ராஜன் - இந்த துயரமான சூழ்நிலையில் நீ என்னை ஏற்கவேண்டும். இதற்கு முன் நீ அடையாத இன்பத்தை என்னுடன் உறவு கொள்வதனால் நான் தருகிறேன். நீ ஒப்புக் கொள்ள வில்லை என்றால் என்னுடைய விஷத்தால் உன்னைத் தீண்டுவேன் என்றாள்.

जैमिनिरुवाच

अग्रसेनस्तदा वीक्ष्य ब्रुवन्तीं कामपीडिताम् ।
चिन्तयामास तां शूर्पणखां लक्ष्मणवद् हृदि ॥ ३३ ॥

ஜைமினி கூறினார் - தர்மாத்மா ஜனமேஜயா - பன்னகி காம ஆசையை ஸ்ரீஅக்ரஸேனருக்கு ஏற்படுத்த நினைத்தது இராமாயணத்தில் சூர்பணகை லக்ஷ்மணனை தீண்டியது போல் இருந்தது.

अग्रसेन उवाच

हरन्ति दोषजातानि नरं जातं यथेच्छकम् ।
प्रभुर्वरा धृतिः शक्तिः भद्रे स्वभवनं व्रज ॥ ३४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மெல்ய குரல் கூறினார் - ஹே மங்களத்தைக் கொடுப்பவளே - சுய நலத்தை உடையவர்கள் எப்பொழுதும் பாபத்தையே ஏற்றுக் கொள்வர். ஆதலால் உனக்கு மனதில் சக்தி இருப்பின் என்னை தீண்டாமல் உன்னுடைய வீட்டிற்குப் போவாயாக.

मन्मथाऽऽसादिता नारी त्वं प्रणष्टसुचेतना ।
प्राप्यात्मबलमेवैकं भद्रे स्वभवनं व्रज ॥ ३५ ॥

ஓ பன்னகி - உன்னுடைய மனதில் மன்மதன் காதல் பாணைத்தை போட்டுள்ளதால் நீ அதில் வசப்பட்டு உன்னுடைய மனதை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறாய். உன்னுடைய மனதைக் கட்டுப்படுத்தி நல்ல எண்ணங்களுடன் உன்னுடைய வீட்டிற்குப் போவாயாக என்றார்.

पन्नगी उवाच

जिज्ञासेयं प्रयुक्ता मे दृष्टं स्त्रीचापलं न ते ।
अभ्युत्थानेन ते लोकाः जिताः सत्यपराक्रम ॥ ३६ ॥

பன்னகி கூறினாள் - உயர்ந்த மனிதரே - இது வரை நான் தங்களிடம் காம ஆசை உடைய பெண்ணாக நடித்தேன். அனைத்து விதமான முயற்சியிலும் தாங்கள் தருமம், சத்யம் ஆகியவற்றை கடைபிடிக்கும் ஒரு சிறந்த மனிதனாக (ஆத்மாவாக) இருக்கிறீர்கள் என்றாள்.

जैमिनिरुवाच

प्रत्यागता चैवमुक्त्वा कामिनी गृहमात्मनः ।
रेमे स नागभवने तथाग्र्यः परवीरहा ॥ ३७ ॥

ஜைமினி கூறினார் - ஓ தர்மாத்மா ஜனமேஜயா - எப்போது அக்ரஸேனர் பன்னகியிடம் திறமையாகப் பேசி தனது சத்யத்தை நிலை நாட்டினாரோ உடனே பன்னகி தனது வீட்டிற்குத் திரும்பிவிட்டாள். ஸ்ரீஅக்ரஸேனர் மன அமைதியுடன் விருந்தினர் மாளிகையில் தங்கினார்.

33வது சுலோககத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் இராமாயணத்தை உதாரணமாகக் கூறுகையில் அவர் எவ்வாறு தனது வீரத்தையும், தருமத்தையும் கடைபித்துள்ளார் எனத் தெரிகிறது. அவர் தன்னுடைய போதுமான சிறந்த திறமையை தகுந்த நேரத்தில் பயன்படுத்தி காம ஆசையுடன் வந்த பன்னகியை தருமநெறியைக் கூறி சமாதானப் படுத்தி அவளை சிறப்பித்துள்ளார்।

नैशाकरे रश्मिजाले क्षणदाक्षयसंहृते ।
नभस्यरुणसन्तीर्णे पर्यस्ते ज्योतिषां गणे ॥ ३८ ॥

ஜைமினி கூறினார் - சந்திரன் தனது கிரணங்களைக் சுருக்கிக் கொண்டு மறைய ஆரம்பித்தான். இரவும் முடிந்தது. ஆகாயத்தில் சூரியனின் கிரணங்கள் வெளியில் தெரிய ஆரம்பித்து காலை வருவதைத் தெரிவித்தது.

सर्पदंशस्याथ भृत्याः जग्मुस्तत्र सहस्रशः ।
वमन्तश्च धमन्तश्च विषपूरप्रवर्षिणः ॥ ३९ ॥

அதன் பிறகு ஸர்பதம்சன் என்கிற நல்ல பாம்பு ஆயிரம் நல்ல பாம்புகளுடன் அங்கு வந்தான். அந்த ஆயிரம் பாம்புகளும் தங்களுடைய வாயில் இருந்து விஷத்தை அங்கு கக்க ஆரம்பித்தனர்.

सर्पदंश उवाच

नृणां शरीरान्तकरो नागलोकस्य सैन्यपः ।

प्राप्तुमिच्छन्माधवीं तां तत्पतित्वं वृणोम्यहम् ॥४०
त्वं वै समागतानस्मान् माधव्यै विनिवेदय ।

ஸர்பதம்சன் கூறினான் - ஓ அக்ரஸேனா - நான் இங்குள்ள பம்புகளின் தலைவன் ஸர்பதம்சன் ஆவேன். என்னுடைய விஷத்தால் நான் யாரை வேண்டுமானாலும் ஒரு நொடியில் கொன்றுவிடுவேன். வெகு நாட்களாகவே நான் நாகராஜனின் புதல்வி மாதவியை விரும்புகிறேன். ஏற்கனவே அவள் இதற்கு என்னிடம் இசைந்திருக்கிறாள். நீ அவளிடம் போய் நான் சொல்வதைக் கூறுவாயாக என்றான்.

अग्रसेन उवाच

कथं त्वं जातसङ्कल्पं प्रेषयेः परमीदृशम् ॥ ४१ ॥

அக்ரஸேனன் கூறினான் - கொடிய விஷத்தை உடையவனே - ஒருவன் ஒரு முறை ஒரு பெண்ணை ஏற்றுக் கொண்டுவிட்டால் அவன் எவ்வாறு மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பான்.

जैमिनिरुवाच

ततः प्ररुद्धो बहुभिः समन्तात् तैर्महाविषैः ।
शुशुभे यमुनावारि गतो नन्दात्मजो यथा ॥ ४२ ॥

ஜைமினி கூறினார் - எவ்வாறு யமுனையில் ஸ்ரீகிருஷ்ணரை காங்கள் சுற்றி வளைத்துக் கொண்டானோ அவ்வாறு அனைத்து நல்ல பாம்புகளும் ஸ்ரீஅக்ரஸேனரைச் சுறிறி வளைத்து நின்றன.

अथ भस्मनिभं वीक्ष्य जातं सर्वत्र फुत्कृतैः ।
फणावायुजवैरग्रसेनोऽदग्धो व्यचिन्तयत् ॥ ४३ ॥

ஏற்கனவே அனைத்து நல்லப் பாம்புகளும் விஷத்தைக் கக்கியதில் ஸ்ரீஅக்ரஸேனரின் உடம்பு சூட்டால் எரிய ஆரம்பித்து இருப்பினும் ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் பணிவாகக் கூறினார் -

विषजं कश्मलं देहेऽविशद् घोरम् अथाग्रणीः ।
स घूर्णमानहृदयः सेवकानिदमब्रवीत् ॥ ४४ ॥

அனைத்துப் பாம்புகளும் விஷத்தைக் கக்கியதில் ஸ்ரீஅக்ரஸேனருக்கு மயக்கமும் தலைசுற்றும் ஏற்பட்டது. அதை சமாளித்து மிகுந்த தைரியத்துடன் விருந்தினர் மாளிகையின் வேலைக்காரனைப் பார்த்துக் கூறினார்.

दहन्त्यङ्गानि मे नागा न दिशः प्रतिभान्ति च ।
सीदामीव च सम्मोहात् घूर्णतीव च मे मनः ॥ ४५ ॥

दृष्टिर्भ्राम्यति मेऽतीव हृदयं दीर्यतीव च ।
ब्रूताशुदेवं नागेन्द्रं पतिष्याम्यवशोऽस्म्यहम् ॥ ४६ ॥

காப்பாற்ற வேண்டிய பாம்புகளே - எனது உடம்பு எரிகிறது. என்னால் உங்களைப் பார்க்கக் கூட முடியவில்லை, திசைகள் தெரியவில்லை, தலைச் சுற்றுகிறது. எனது கண் எரிகிறது. என் மனம் துயரத்தை அடைந்துள்ளது. நான் என்னை இழந்து கொண்டுள்ளேன். வேலைக்காரனே நீ உடனடியாக நாகராஜனிடன் சென்று இங்கு கொடுமைகள் நடக்கின்றன என்பதைக் கூறுவாயாக என்றான்.

ततः पिपीलिकास्त्रं तद् अग्रसेनेन तु स्मृतम् ।
ताभिर्विलिप्तगात्रास्ते ततस्तं विजहुस्तदा ॥ ४७ ॥

உடனே ஸ்ரீஅக்ரஸேனருக்கு மஹரிஷி உத்தாலகரால் கொடுக்கப்பட்ட பிபீகா என்கிற அஸ்த்ரம் ஞாபகத்திற்கு வந்தது. அக்ரஸேனர் உடனே அதைப் பிரயோகம் செய்தார். பிபீகா என்றால் எறும்பு எனப் பொருள். ஸ்ரீஅக்ரஸேனரின் அஸ்த்ரத்திருந்து கோடிக்கணக்கான எறும்புகள் வெளியில் வந்ததைப் பார்த்த நல்ல பாம்புகள் ஓட ஆரம்பித்தன.

सर्पदंशस्य सर्वाङ्गं जातं पलविवर्जितम् ।
भित्वाऽस्थीनि पुनर्मज्जा पन्नगस्य पिपीलिकाः ॥ ४८ ॥

பிபீகா அஸ்த்ரத்தில் மாட்டிக்கொண்ட புஜங்கபதி ஸர்பதம்சனின் உடலை அனைத்து எறும்புகளும் ஒன்றுகூடி கடித்து சாப்பிட ஆரம்பித்தன. அவைகள் சதையை சாப்பிட்டு முடித்து அவனின் எலும்புகளையும் சாப்பிட ஆரம்பித்தன.

अस्थीनि चिञ्चाफलवत् कोटरं प्रत्यकुर्वत ॥ ४९ ॥

எவ்வாறு புளியம் பழத்தினை எடுத்தவுடன் அதன் ஓடு மட்டும் தனித்திருக்குமோ அவ்வாறு ஸர்பதம்சனின் உடம்பு எறும்புகளால் பண்ணப்பட்டது.

नागेन्द्रो मुनिना तत्र सम्प्राप्तस्तावदब्रवीत् ।
भव स्वस्थमना राजन् न हि ते विद्यते भयम् ॥ ५० ॥

அச் சமயத்தில் உத்தாலகருடன் அரசன் நாகராஜன் அங்கு வந்தான். உத்தாலகர் கூறினார் - ஹே ராஜன் - பயமில்லாமல் தைரியத்துடன் இருக்கவும் என ஆசீர்வதித்தார்.

नागेन्द्रस्तान् प्रभिन्नाङ्गान् प्रत्युवाच हसन्निव ।
पलायनं कथं वोऽस्मान्मानुषाद् युद्धकोविदाः ॥ ५१ ॥

உடல் கூடு முழுவதும் எறும்புகள் சூழ இருந்த புஜங்கபதியைப் பார்த்த அரசன் நாகராஜன் சிரித்துக்கொண்டே கூறினான் - ஓ புஜங்கபதி நீ போரில் முதன்மையான வீரன். நீ எவ்வாறு இந்த போரில் ஸ்ரீஅக்ரஸேனரை சாதாரண மனிதனாக நினைத்துவிட்டாய்?.

जैमिनिरुवाच

अग्रसेनमपानीय तं च घोरं महाज्वरम्।
व्यनाशयद् विषोत्पन्नमुद्दालकमुनिः क्षणात्॥ ५२॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அதன் பிறகு உடனே ஒரு நொடியில் மஹரிஷி உத்தாலகர் மந்திர சக்தியால் ஸ்ரீஅக்ரஸேனரை அந்த விஷ எரிச்சல் இருந்து விடுவித்தார்.

उद्दालक उवाच

दिष्ट्या बुद्धिस्त्वया धर्मे निविष्टा हि नरोत्तम।
भूयो भूयश्च ते बुद्धिर्धर्मे भवतु सुस्थिरा॥ ५३॥

உத்தாலகர் கூறினார் - சிறந்த வீரனே - ஸ்ரீஅக்ரேஸனா - தரும நோக்கத்துடன் இருக்கும் உன்ன யாரும் அதை விட்டு பிரித்துவிட முடியாது. நான் பலமுறை உன்னை ஆசீர்வதிக்கிறேன் நீ இந்த தரும நோக்கத்துடன் எப்பொழுதும் சிரஞ்ஜீவியாக இருக்கவேண்டும் என்றார்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
षड्विंशतितम् श्रीमदग्रभागवते षोडशोऽध्यायः॥
॥ शुभं भवतु कल्याणम्॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினாறாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதினேழாவது அத்யாயம்

அழிவின்மை (அம்ருதம்)

जैमिनिरुवाच

ततो व्यपेते तमसि सूर्ये विमलरश्मिके ।
शुभे मुहूर्ते सम्प्राप्ते मूर्द्ध्न्यर्चिषि दिवाकरे ॥ १ ॥

ஜைமினி கூறினார் - இரவு கழிந்தவுடன் கிழக்கில் சூரியன் தனது கிரணங்களை ஒளிரச்செய்தான். அழகான காலைப் பொழுது உதயமாகியது. சூரியனும் பிரகாசிக்கத் தொடங்கினான்.

महीधरो मङ्गल्या पुण्यवाचा प्रियातिथिम् ।
शुभैः परमसत्कारैः पूजनार्हमपूजयत् ॥ २ ॥

நாகராஜன் மஹீதரன் பெண் (மணமகள்) சார்பாக ஸ்ரீஅக்ரஸேனரை வரவேற்று மகிழ்ந்தான். அனைவரும் மிகுந்த மரியாதைச் செய்தனர்.

अग्रसेनाय दातुं तां प्रीतोदुहितरं स्वकाम् ।
राजानमृषिभिः सार्धं मन्त्रिभिः स्वयमानयत् ॥ ३ ॥

अग्रसेनं समीप्याथ जनैः सह पुरोहितैः ।
विधिप्रयुक्तसत्कारैः प्राञ्जलिः पन्नगेश्वरः ॥ ४ ॥

அரசனான ஸ்ரீஅக்ரஸேனருக்கு தனது பெண்ணை திருமணம் செய்து கொடுப்பதன் பொருட்டு இராஜா மஹீதரனின் மகிழ்ச்சியை

அடைந்தான். உண்மையிலும் தனது பெண் பாக்கியசாயாக கருதினான். ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவியின் திருமணத்திற்கு அரசர்களும், ரிஷிகளும், மந்திரிகளும் வந்தடைந்தனர். ஸ்ரீஅக்ரஸேனரின் இராஜ்யத்திருந்தும் புரோஹிதர்களும் ரிஷிகளும் முனிகளும் திருமணத்திற்கு வந்திருந்தனர். அனைவரையும் அரசன் பன்னகேச்வரன் நாகராஜன் வரவேற்றான்.

उवाच वचनं श्रेष्ठं भुजङ्गश्रेष्ठमुन्मुदा ।
भवतो दर्शनैर्नैवप्यस्तं लोके परं तमः ॥ ५ ॥

அரசனான நாகராஜன்-மஹீதரன் அங்கு வந்திருந்த மஹாமுனி கர்க்யரை பார்த்துக் கூறினான் - ஓ மஹாமுனி அவர்களே தங்களுடைய வருகையால் எங்களுடைய குலம் உயர்வையும், இந்த நாகலோகம் புண்ணியத்தையும் அடைந்தது என்றான்.

महीधर उवाच

दिष्ट्या प्राप्तो महातेजा अग्रसेनो नृपङ्गवः ।
सह सर्वैर्द्विजश्रेष्ठै दैवैरिव शतक्रतुः ॥ ६ ॥

மஹீதரன் கூறினான் - மஹாமுனி கர்க்யரே - தங்களுடைய அருளால் தான் எங்களுக்கு நீதியையும் தருமத்தையும் கடைபிடிக்கும் ஸ்ரீஅக்ரஸேனர் கிடைத்தார். தங்களுடைய அருளால் அவர் மஹாலக்ஷ்மியைப் போன்று ஒளிர்கிறார். தாங்களால் தான் பிராம்மணர்களும், போட்டியிடும் வீரர்களும், பண்டிதர்களும், ரிஷிகளும் இங்கு வந்திருக்கின்றனர். இப்பொழுது ஸ்ரீஅக்ரஸேனர் தேவலோகத்தில் அனைத்து தேவர்களின் நடுவில் இந்திரன் இருப்பதைப் போன்று காட்சியளிக்கிறார் என்றான்.

दिष्ट्या मे निर्जिता विघ्ना संवर्तयितुमर्हसि ।
मध्याह्नेऽत्र नृपश्रेष्ठ विवाहमृषिसत्तमैः ॥ ७ ॥

தங்களுடைய அருளால் எங்களுடைய தடைகள் அழிந்தன. தங்களுடைய ஒப்புதன்படி நடு பகல் என்கிற மத்தியான நேரத்தில் அனைத்து ரிஷிகள் முனிகள் புரோஹிதர்களுடன் இந்த திருமணம் நடக்க இருக்கிறது என்றான்.

जैमिनिरुवाच

नागेन्द्रस्य वचः श्रुत्वा प्रत्युवाचर्षिपुङ्गवः ।
यथा वक्ष्यसि धर्मज्ञ तत् करिष्यामहे वयम् ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - நாகராஜனின் அழைப்பை ஏற்று மஹரிஷி கார்க்யர் கூறினார் - ஓ ராஜன் - தாங்கள் தருமத்தை நன்கு அறிந்தவன். தாங்கள் விரும்பியபடி நாங்கள் செய்கிறோம் (நடந்துகொள்கிறோம்) என்றார்.

ततो रथं समानीतं वृहन्तं चारुदर्शनम् ।
मणिहेमविचित्राङ्गं सुध्वजच्छत्रकेतनम् ॥ ९ ॥

நடுப் பகல் திருமண மண்டபத்திற்கு செல்வதற்காக விரதங்களை முடித்த ஸ்ரீஅக்ரஸேனரை குதிரையுடன் கூடிய தேரில் அழைச்செல்ல ஏற்பாடுகளைச் செய்தனர். திருமணத் தேர் தங்கத்தாலும் நவரத்தினங்களாலும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அந்தத் தேரின் உச்சியில் வெற்றி கொடியும் பறந்துகொண்டிருந்தது.

आरुरोहाग्रसेनोऽथ माङ्गल्यैर्ऋषिभिर्युतः ।
माङ्गल्यार्थप्रदैः शब्दैरन्वयुज्यत सादरः ॥ १० ॥

ரிஷிகளுடனும் மங்கள இன்னிசையுடனும் ஸ்ரீஅக்ரஸேனர் தேரில் திருமண மாளிகைக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் திருமண மாளிகையை அடையும் வரை ஒரு வரிசையில் ரிஷிகளும் மற்ற வரிசைகளில் இன்னிசை வாத்தியங்களும் முழங்கிக் கொண்டிருந்தன.

ततः शङ्खाश्च भेर्यश्च गोमुखा नादितास्तदा ।
ववर्ष पथि पर्जन्यः पुष्पवर्षं च भूरिशः ॥ ११ ॥

மங்கள இசையில் சங்கும், சிறிய முரசும், பெரிய முரசும், கொம்பு ஊதுவது (கோமுகம்) என பற்பல வாத்தியங்கள் இடம்பெற்றிருந்தன. வீதி உலாவின் போது நாகலோகத்தில் வசித்துவந்தவர்கள் புஷ்பங்களைக் கொண்டு மழையைப் போன்று ரிஷிகள் முனிகணங்கள் புரோஹிதர்கள் மேல் தூவினர்.

पताकाध्वजमालाढ्याः पूर्णकुम्भाः समन्ततः ।
राजमार्गे सवस्त्रा भूश्चन्दनोदकसेचिता ॥ १२ ॥

கொடிகளும், மாலைகளும், பூர்ண கும்பங்களும், இரத்தின கம்பளங்களும் விரிக்கப்பட்டு திருமண மாளிகைக்குச் செல்லும் வழி அலங்கரிக்கப் பட்டிருந்தது. அங்கு செல்லும் வழிகளில் சந்தன தண்ணீர் தெளிக்கப்பட்டு வாசனையுடன் இருந்தது.

नरनागमहिष्यश्च गायद्भिः स्तुतिमङ्गलैः ।
स्वस्थानेषु प्रतीक्षन्ते स्माग्रसेनाय योषितः ॥ १३ ॥

திருமண மாளிகைக்குச் செல்லும் வழியில் நாக கன்னிகைகள் அனைவரையும் வரவேற்று மங்களகரமான பாட்டுகளைப் பாடி மகிழ்வித்தனர். ஒவ்வொரு வீட்டின் வாயில் நாக கன்னிகைகள் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்ப்பதற்காக அவர் அருகில் வரும் வரை காத்துக்கொண்டிருந்தனர்.

दृष्ट्वाऽऽग्रसेनं तं रम्ये दिव्यरत्नविभूषितम् ।
अङ्गेष्वाभरणं धृत्वा तपन्तमिव भास्करम् ॥ १४ ॥

இளமையுடனும் வீரத்துடனும் இருந்த ஸ்ரீஅக்ரஸேனரை பற்பல அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டதும் அவர் அந்த கன்னிகைகளுக்கு சூரியனைப் போன்று திகழ்ந்தார்.

सचामरं सव्यजनं सच्छत्रं सरथिध्वजम् ।
श्रिया विभूतं मर्त्येषु दुर्निरीक्ष्यतरं परम् ॥ १५ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் இரு பக்கங்களிலும் சாமரங்களும், விசிறியும், குடையும் சூழ இருந்தது தேவர்கள் வருவதைப் போன்று இருந்தது. செல்வத்துடன் கூடிய மலர்ந்த முகத்துடன் இருக்கும் ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்க்கும்போது அவர் சிறப்பாக இருந்தார்.

पन्नगाः भुजगाः नागाः नागलोकनिवासिनः ।
आर्चयामासुरर्चार्हं लोकातिथिमुपस्थितम् ॥ १६ ॥

நாகங்களும், புஜங்கங்களும், பன்னகங்களும், நாகலோகத்தில் வசிக்கும் மக்களும் வீதியில் அவர்களுடைய அருகில் அக்ரஸேனர் வரும் வரை காத்திருந்து அவரை மரியாதையுடன் பூசித்து மகிழ்ந்தனர்.

तथा दूतैः समाज्ञाय ह्यग्रणीं मण्डपागतम् ।
नागराजोऽब्रवीद् वाक्यं हृष्टरोमाऽग्रसेनकम् ॥ १७ ॥

நாகராஜனின் காவலர்கள் ஸ்ரீஅக்ரஸேனர் திருமண மண்டபத்தை அடையப் போகிறார் என்ற செய்தியை இராஜா மஹீதரன் கேட்டவுடன் நாட்டு மக்களிடம் கூறினான் -

महीधर उवाच

स मान्यतां नरश्रेष्ठः पूजार्थं संविधत्स्व च ।
स नो मान्यश्च पूज्यश्च ह्यग्रसेनोऽत्र सर्वथा ॥ १८ ॥

மஹீதரன் கூறினான் - சிறந்த மனிதரும், உயர்ந்தவருமான ஸ்ரீஅக்ரஸேனர் வருகிறார் என பறைசாற்றினான். நாம் அனைவரும் அவருக்கு உயர்ந்த மற்றும் சிறந்த வரவேற்பை அளிக்க வேண்டும் என்று கூறினான்.

समृद्धिभृद्बन्धुजनाधिरूढैर्वृन्दैर्गजानां बहुभिः सहस्रैः ।
प्रत्युज्जगामागमनप्रतीतः प्रसन्नचित्तस्स तु पन्नगेशः ॥ १९ ॥

அனைத்து உறவினர்களுடனும் மக்களுடனும் வரும் ஸ்ரீஅக்ரஸேனரை, நாகராஜன் மஹீந்தர் யானையின் மீது ஏறி அமரச்செய்து அதில் வரும் அக்ரஸேனரைக் கண்டு மகிழ்ந்தான்.

वर्गावुभौ नागनराधिपानां द्वारेऽपिधाने शुभयप्रदेशात्।
समीयतुर्द्वावपि भिन्नवेषौ भिन्नैकसेतु पयसामिवोघौ॥ २०॥

நாக குலம் மனித குலம் இரண்டும் இணைந்து மகிழ்ச்சியுடன் திருமண மாளிகையின் வாயிலை அடைந்தனர். ஒரு புறம் நாகங்களும் ஒரு புறம் மனிதர்களும் வரும் காட்சி ஒரு ஆறு இரண்டாக பிரிந்து கடலை (சமுத்திரத்தை) அடைவது போல் இருந்தது.

जैमिनिरुवाच

वैवाहिके कौतुकसंविधाने वर्गावुभौ नागनराधिपानाम्।
एकीकृतौ सानुमतोऽनुरागादस्तान्तरावेककुलोपमेयम्॥ २१॥

ஜைமினி கூறினார் - நாகங்களும் மனிதர்களும் திருமணம் என்கிற கடல் ஒன்றாகக் கலந்தனர். இரு பிரிவினரிடமும் இருந்த பொறாமை நீங்கி ஒன்றாயினர்.

ततोऽग्रसेनं दृष्ट्वा ताः सम्भ्रान्ताः पन्नगाङ्गनाः।
आसनेभ्यः समुत्पेतुस्तेजसा तस्य धर्षिताः॥ २२॥

செல்வத்திலும் பதவியிலும் உயர்ந்த நாக பெண்கள் ஸ்ரீஅக்ரஸேனரின் அழகையும், ஒளியையும், வளமையையும் பார்த்து வியந்தனர். உட்கார்ந்திருந்தவர்கள் மறுபடியும் மறுபடியும் எழுந்து பார்த்தனர்.

प्रशशंसुश्च सुप्रीता अग्रं ता विस्मयान्विताः।
तेजसा धर्षितास्तस्य लज्जावत्यो भुजाङ्गनाः॥ २३॥

எதையும் எதிர்பாராமல் அனைவரும் ஸ்ரீஅக்ரஸேனரைப் புகழ்ந்தனர். நாக கன்னிகைகளும் ஸ்ரீஅக்ரஸேனரின் அழகைப் பார்த்து வெட்கமுற்றனர்.

माधवीं परिवार्यैता नागकन्यामलङ्कृताम् ।
रूपवत्यः सुतास्तस्य पुरस्कृत्योपतस्थिरे ॥ २४ ॥

நாக கன்னிகையான இளவரசி மாதவி அவளுடைய அழகு செய்துகொள்ளும் அறையில் இருந்தாள். அவளை உயர்ந்த பணக்கார நாகப் பெண்கள் பற்பல ஆபரணங்களைக் கொண்டு அழகுபடுத்திக் கொண்டிருந்தனர்.

कनकस्तम्भरुचिरं तोरणेन विराजितम् ।
माधवी मण्डपं भद्रं प्रविवेश शुभानना ॥ २५ ॥

திருமண மண்டபம் அழகான தோரணங்களுடனும் அதில் இருந்த தூண்கள் அனைத்தும் தங்கத்தாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மங்களகரமான அழகான மாதவி அந்த திருமணப் பந்தலுள் நுழைந்தாள்.

स्कन्धदेशेऽसृजत्कन्या स्रजमग्रस्य शोभनाम् ।
वरयामास चैवैतं पतित्वे सा स्वयंवरा ॥ २६ ॥

நாகலோகத்தின் இளவரசி மாதவி திருமணப் பந்தல் ஸ்ரீஅக்ரஸேனருக்குத் தனது இரு கைகளாலும் மாலையை அணிவித்து (ஸ்வயம் வரத்துடன்) தனது கணவனைத் தேர்ந்தெடுத்தாள்.

पुष्पवृष्टिर्महत्यासीदन्तरिक्षात् सुभास्वरा ।
दिव्यदुन्दुभिनिर्घोषैर्गीतवादित्रनिःस्वनैः ॥ २७ ॥

அச் சமயத்தில் தேவ லோகத்திருந்த தேவர்கள் பூமாரிப் பொழிந்து ஆசீர்வதித்தனர். அதே நேரத்தில் முரசு, பறை போன்றவைகளும், மங்கள வாத்தியங்களும் காதுக்கு இனிமையான பாட்டுடன் முழங்கின.

महीधर उवाच

माधवीयं मम सुता सहधर्मचरी तव ।
प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृह्णीष्व पाणिना ॥ २८ ॥

மஹீதரன் கூறினான் - ஓ ராஜேந்த்ரனே - என்னுடைய புதல்வி தங்களுடன் சேர்ந்து மனைவியாகி தருமங்களைச் செய்பவள்

ஆனான். ஆதலால் தங்களுடைய கையாள் அவளுடைய கையைப் பிடித்து மங்களத்தை அடைவீர்களாக.

इमाश्चाऽपि वराः कन्याः सानुरागाः सभक्तिकाः ।
गृहाण पाणिमेतासामपि मन्त्रपुरस्कृतः ॥ २९ ॥

ஜைமினி கூறினான் - ஜனமேஜயா - பிறகு மந்திரத்தை கூறி மாதவியை ஸ்ரீஅக்ரஸேனருக்கு கன்னிகா தானம் செய்து கொடுத்தான். தனது புதல்வியை ஏற்றுகொள்ளும்படிக் கூறினான்.

जैमिनिरुवाच

प्रतीच्छेमाः स्वधर्मेण प्राजापत्येन कर्मणा ।
एता अदात् कन्यकास्ते प्रीतोऽयं पन्नगेश्वरः ॥ ३० ॥

ஜைமினி கூறினார் - அனைத்து நாக கன்னிகைகளும் தங்களது கையையும் மாதவியின் கை மேல் வைத்தனர். நாகேந்த்ரனும் வைணவர்களின் முறைபடி இந்த அனைத்து நாக கன்னிகைகளையும் மனைவியாக ஏற்றுக் கொள்ளவும் என்றான்.

श्रुत्वा तु नागराजस्य मतमग्रोऽतिलज्जितः ।
सम्भ्रान्तो व्यथितो भूत्वा नागेन्द्रमिदमब्रवीत् ॥ ३१ ॥

இதைக் கேட்ட ஸ்ரீஅக்ரஸேனன் வெட்கத்தை அடைந்தார். மனக் கலக்கத்துடன் நாகராஜனிடம் கூறினார் -

अग्रसेन उवाच

कथं नु वा मनस्विन्याः माधव्याः पाणिपङ्कजम् ।
गृहीत्वा नागदुहितुर्लोकेऽधर्मं चराम्यहम् ॥ ३२ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - மந்திரத்தை கடைபிடித்து தங்களுடைய அழகான பெண் மாதவியைக் கையைப் பிடித்துள்ளேன். (தங்களுடைய பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளேன்). இதன் பிறகு மற்ற நாக கன்னிகைகளை திருமணம் செய்து கொண்டால் அது தருமச் செயல் ஆகாது என்றார்.

अनियोज्ये नियोगे मां न नियुङ्क्ष्व महामते ।
भगिन्यो धर्मतो या मे तत्स्पर्शं त्वं कथं वदेः ॥ ३३ ॥

நன்கு தருமங்களையும் நீதியையும் படித்த நாகேந்திரரே - செய்யக் கூடாத காரியத்தைச் செய்யச் சொல்லுகிறீர்கள். சாஸ்திரமுறைபடி என்னுடைய மனைவியின் சகோதரி எனது சகோதரியாகவே இருப்பாள். அவர்களை நான் எவ்வாறு தொடுவது?.

आर्षं धर्मं ब्रुवाणोऽहं नागाधिप यथा भवान् ।
अधर्मात् पाहि नागेश मां धर्मं प्रतिपादय ॥ ३४ ॥

பாபமற்ற நாகேந்திரரே - தாங்களை போன்று நானும் தருமத்தைத் தெரிந்தவனாவேன். பாபச் செயலை நான் செய்வதிருந்து என்னைத் தடுக்க வேண்டும். நான் தருமத்தைக் கடைபிடிக்கிறேன் என்றான்.

महीधर उवाच

स्त्रियः पवित्रा अतुला नरेन्द्र ननु धर्मतः ।
अस्मिन् विवाहे मा म्लासीरहं पापं नुदामि ते ॥ ३५ ॥

மஹீதரன் கூறினான் - ஓ சிறந்த மனிதரே - பொதுவாகப் பெண்கள் சிறப்பானவர்கள் மற்றும் புனிதமானவர்கள். தருமத்தின் படி தாங்கள் மற்ற சகோதரிகளையும் மணந்து கொள்ளலாம். இதற்காக தாங்கள் வெட்கப்படவேண்டாம். வேணுமாகில் தாங்கள் யோகத்தையும் தவத்தையும் மேற்கொண்டு தங்களை புனிதப் படுத்திக்கொள்ளலாம்.

नृपस्य बह्व्यो विहिता महिष्यो लोकसम्मताः ।
श्रूयन्ते बहवः पुंसः एकस्याः पतयोऽपि च ॥ ३६ ॥

ஓ ராஜன் - மனித லோகத்தில் இராஜாக்களுக்கு பல மனைவிகள் இருக்கின்றனர். அதே போல் பல மனிதர்கள் ஒரு பெண்ணை வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் மஹாராணியாக பட்டமஹிஷியாக ஒருத்தி தான் இருக்க முடியும்.

एवं प्रत्याहृतं पूर्वम् आनुपूर्व्येण ता भज ।
मा च शङ्का तु तेऽत्र स्यात् कथञ्चिदपि मानुष ॥ ३७ ॥

ஓ நரேந்திரரே - நான் தங்களுக்கு அனுமதியளிக்கிறேன். தாங்களே வேணுமாகில் இந்த கன்னிகைகளை ஒவ்வொருவராக மணந்து கொள்ளுங்கள். தாங்கள் பாவத்தைப் பற்றியும் தருமத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம். தங்களை மக்கள் என்ன நினைப்பர்?.

अग्रसेन उवाच

अधर्मोऽयं मतो मेऽद्य विरुद्धो लोकगर्हितः ।
ततोऽहं न करोम्येव व्यवसायं क्रियां प्रति ॥ ३८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ நாகராஜரே - என்னை தாங்கள் எதைச் செய்யும்படிக் கூறுகிறீர்கள்?. இதுவரை நான் அதருமங்களையும் நியாயமற்றதையும் செய்யவில்லை. மக்கள் ஏற்றுக் கொண்டாலும் இந்த அதருமத்தைச் செய்யக் கூடாது. நான் அதைச் செய்யவும் மாட்டேன்.

आत्मनो यः श्रुतो धर्मः स धर्मो रक्षति प्रजाः ।
शरीरं लोकयात्रां च धनं स्वर्गमृषीन् पितृन् ॥ ३९ ॥

ஓ நாகராஜரே - வேதம் கூறுகிறது திருமணமானவுடன் மனைவி என்பவள் கணவனுடைய பாதி உடம்பை அடைந்து தருமத்தையும், அடுத்த தலைமுறையையும், நமது உடம்பையும், பொது வாழ்க்கையையும், செல்வத்தையும், சுவர்க்கத்தையும், ரிஷிகளையும் மற்றும் முன்னோர்களையும் காப்பாற்றுகிறாள்.

कृतदारोऽस्मि नागेन्द्र भार्येयं दयिता मम ।
पुरुषाणां च नारीणां सुदुःखा ससपत्नता ॥ ४० ॥

நான் மாதவியை திருமணம் செய்து கொண்டு விட்டேன். என்னுடன் எனது மனைவி இருக்கிறாள். இன்னொரு பெண்ணையும் நான் மனைவியாக அடைவதை என்து மாதவி ஒப்புக்கொள்ள மாட்டாள். இந்த துயரம் மனைவிகளுக்கு மட்டுமல்ல கணவன் மனைவிக்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

वरं कूपशताद् वापी वरं वापीशतात् क्रतुः ।
वरं क्रतुशताद् भार्या पत्न्येका स्त्रीशताद् वरम् ॥ ४१ ॥

ஒருவன் நூறு கிணறுகளை வெட்டுவதைவிட ஒரு கிணறை படிகளுடன் பயன்படுத்தும்படி வெட்டுவது சிறந்தது. இதுபோல் சிறந்த நூறு கிணறுகளை ஏற்படுத்துவதை விட ஒரு யாகத்தைச் செய்வது சிறந்தது. இதைப்போல் நூறு யாகத்தைச் செய்வதை விட மனைவியை அடைவது சிறந்தது. இதுபோல் நூறு மனைவியை மணந்து கொள்வதை விட ஒரு கற்புக்கரசியான மனைவியை திருமணம் செய்துகொள்வது சாலச் சிறந்தது என்றான்.

न चान्यासां पतिरहं सत्यमेतद् वचो मम ॥ ४२ ॥

இளவரசி மாதவியைத் தவிர மற்ற பெண்களை உண்மையாலும் மணந்து கொள்ள மாட்டேன். இது உண்மை (சத்தியம்) என்றான்.

जैमिनिरुवाच

इत्युक्त्वाऽथ स जग्राह माधव्यास्स करं वरम् ॥ ४३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - இவ்வாறு சொல் விட்டு ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியின் கைகளைப் பற்றினார்.

विलज्जमानाऽऽयतलोचनौ तौ ।
बद्धाञ्जली कुङ्कुमचर्चिताङ्गौ ।
तौ दम्पती तर्पितमाज्यपूरैः ।
हुताशनं सप्तपदान्ययास्ताम् ॥ ४४ ॥

வெட்கத்துடன் மாதவி ஸ்ரீஅக்ரஸேனரைப் ஓரக் கண்ணால் பார்க்க, ஸ்ரீஅக்ரஸேனர் குங்குமத்துடன் ஒளிரும் மாதவியின் கையைப் பற்றி இருவரும் அக்னியின் அருகில் வந்து முறைப்படி நெய்யால் ஹோமத்தைச் செய்து ஏழு அடியை (ஸப்தபதி மந்திரத்தைக் கூறி) எடுத்து வைத்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு புது வாழ்கையை ஏற்றனர்.

विवाहो नागकन्यायास्त्वग्रसेनेन तत्र वै ।
सम्पन्नो नरनागानां बभूव परमोत्सवः ॥ ४५ ॥

ஓ ஜனமேஜயா - நாக கன்னிகைக்கும் ஸ்ரீஅக்ரஸேனருக்கும் திருமணம் நடந்து முடிந்தது என்று அரசன் நாகராஜன் கூறியதும் அனைத்து சிவ கணங்களும், வைணவர்களகும் மகிழ்ச்சியை அடைந்தனர்.

ततो महीधरो हृष्टः प्रददौ कन्यकाधनम् ।
हिरण्मयस्य स्वर्णस्य मुक्ताया विद्रुमस्य च ॥ ४६ ॥

அரசன் நாகராஜன் தன் பெண்ணிற்காக சேர்த்து வைத்திருந்த அளவில் அடங்கா தங்கம், வெள்ளி, நவ ரத்தினங்கள், முத்து, வைரம், வைடூரியம் என பொக்கிஷங்களை ஸ்ரீஅக்ரஸேனனுக்குக் கொடுத்தான்.

तदाऽग्रसेनो धर्मात्मा विवाहे निवृते शुभे ।
ब्राह्मणेभ्यो ददौ वित्तं यदुपाहरदच्युतम् ॥ ४७ ॥

தரும முறைப்படி ஸ்ரீஅக்ரஸேனரின் திருமணம் நடந்து முடிந்ததும் அங்கு வந்திருந்த ப்ராம்மணர்ளுக்கு செல்வங்களை தானமாகக் கொடுத்து மகிழ்ந்தான்.

दत्त्वा महीधरो दध्यौ किमस्मै दीयते मया ।
अग्रसेनाय तल्लोकमर्पयामीति मे मतिः ॥ ४८ ॥

அரசன் மஹீதரன் ஸ்ரீஅக்ரஸேனருக்கு அளவிலடங்கா பொன்னும் பொருளும் கொடுத்தும் திருப்தி அடையவில்லை. ஆதலால் அரசன் நாகராஜன் தன்னுடைய லோகங்களான அதல, விதல, சுதல, தலாதல, ரஸாதல, மஹாதல, பாதலம் ஆகிய ஏழு லோகங்களில் ஒரு லோகத்தைக் கொடுத்து திருப்தியடைந்தான்.

पश्यतां सर्वनागानां नागराजोऽब्रवीद्वचः ।

அனைத்து நாக கூட்டங்களின் நடுவில் நாகராஜன் பறைசாற்றினான்.

महीधर उवाच

अग्रस्य नाम्ना भावेन् इमं लोकं तलोत्तमम् ॥ ४९ ॥

நாகராஜன் மஹீதரன் கூறினான் - இந்த சிறந்த தலாதல லோகம் ஸ்ரீஅக்ரஸேனருடையதாகும். ஆதலால் இன்று முதல் இது அக்ரதலம் எனப்படும் என்றார்.

सुसंस्कृतेभ्यः सर्वेभ्यः रमणीयो भविष्यति ।
इदमग्रतलं नाम्ना त्रिषु लोकेषु विश्रुतम् ॥ ५० ॥

ஸ்ரீஅக்ரஸேனரிடம் சைவகுலம் வைணவகுலம் இரண்டும் சேர்ந்துள்ளதால் இந்த தலாதல லோகத்தின் நடுபகுதிக்கு அக்ரதலம் என்று பெயர் வழங்கப்படும் என்றார். இது பூ லோகம், தேவ லோகம், நாக லோகம் ஆகிய மூன்றுக்கும் மேல் முதல் இருக்கும் என்றார்.

सर्वरत्नाकरवती सर्वकामफलद्रुमा ।
सर्वाश्रमाधिवासा साऽग्रतलाख्या गुणैर्युता ॥ ५१ ॥

புதிதாக உயர்ந்த இரத்தினங்களால் இந்த அக்ரலோகம் உற்பத்தி பண்ணப்பட்டது. இந்த லோகத்தில் உள்ளவர்கள் அனைவரும் தங்களுக்கு வேண்டியதை உடனடியாக அடைவர். ஆச்ரம வாசிகளும் இதில் வசிப்பர். அவர்களுக்கு வேண்டியவைகளும் கிடைக்கும். இந்த இடம் ஸ்ரீஅக்ரஸேனரைப் போன்று திகழும் என்றார்.

यथायम् अग्रसेनो मे जामाता माधवीयुतः ।
पुत्रैः पौत्रैः परिवृतश्चिरकालं प्रशास्त्विमाम् ॥ ५२ ॥

அரசன் மஹீதரன் - முறைப்படி மாதவியையும் ஸ்ரீஅக்ரஸேனரையும் நீங்கள் இருவரும் பிள்ளை, பேரன்களை பெற்று மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என வாழ்த்தி மகிழ்ந்தான்.

जैमिनिरुवाच
नानालङ्करणैर्गार्ग्यं पूजयित्वाऽहिपो गुरुम् ।
प्रददौ चाखिलेभ्योऽपि रत्नश्रीकाञ्चनं बहु ॥ ५३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அதன் பிறகு அரசன் நாகராஜன் மஹரிஷி கர்க்யருக்கு பற்பல ஆபரணங்களையும், பொக்கிஷங்களையும், தங்கத்தையும் கொடுத்து திருப்தியடைந்தான்.

नागराजस्य लोके तु स महः सुमहानभूत् ।
माधव्या अग्रसेनस्य समे विघ्नाः पराजिताः ॥ ५४ ॥

ஜைமினி கூறினார் - ஒரு தனிச் சிறப்பான திருமணத்தைப் பார்த்த நாகலோகம் இன்பத்தை அடைந்தது. ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து எதிரிகளையும் அழித்து மிகவும் பாதுகாப்பான இடத்தை அடைந்தார்.

विवाहेऽत्यद्भुतं किं वा वक्तुं शक्नुमहे वयम् ।
न श्रुतं न च वा दृष्टं तेन मन्यामहेऽद्भुतम् ॥ ५५ ॥

ஜைமினி கூறினார் - ஞானி ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியின் திருமணம் ஒரு தனிச் சிறப்புடையது. இதைப் பற்றி வாயால் சொல்ல முடியாது. இதற்கு முன்பு இது போன்ற திருமணம் நடைபெற்றதாக கேட்டதுமில்லை, தெரியவுமில்லை. இதை நாமும் ஆதரித்து மகிழ்வோமாக.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते सप्तदशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினேழாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பதினெட்டாவது அத்யாயம்

மகிழ்ச்சி

जैमिनिरुवाच

मुक्ताफलचतुष्केऽथ तेऽग्रसेनञ्च माधवीम् ।
सभायां नागराजस्य ह्युपावेश्याभ्यपूजयन् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - நாகலோகத்தில் ஸ்ரீஅக்ரஸேனருக்கும் மாதவிக்கும் திருமணமாகியவுடன் புதுமண தம்பதியான அவர்களுக்கு அரசவையில் முறைபடி கௌரவம் (அரச மரியாதை) செய்யப்பட்டது. பின்பு அவர்களை ஆக்ரேயபுரிக்கு வழியனுப்பி வைத்தனர்.

तदा स्वल्पेन कालेन गार्ग्येण सह दम्पती ।
अथाध्वविधिना तौ तु सप्तरात्रोषितौ पथि ॥ २ ॥

மஹரிஷி கர்க்யருடன் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் தங்களுடைய இராஜ்யமான ஆக்ரேயபுரிக்கு கிளம்பினர். அவர்கள் திரும்பி வரும் வழியில் ஏழு இடத்தில் தங்கினர்.

जग्मतुः सहितौ सर्वैर्मुदा परमया युतौ ।
पुरम् आग्रेयमासौ तावग्रसेनश्च माधवी ॥ ३ ॥

அனைத்து உறவினர்களுடன் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் தங்களுடைய இராஜ்யமான ஆக்ரேய புரியின் வாயிலை வந்தடைந்தனர்.

यथोचितं पुरी सैव यथा सम्यग्व्यशोभत ।
तयोर्नवोदयोर्हेतोर्यथैवेन्द्रपुरी तथा ॥ ४ ॥

ஆக்ரேயபுரியிலிருந்த மக்கள் புதிய இராணியையும் இராஜா ஸ்ரீஅக்ரஸேனரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். புதுமண தம்பதிகள் ஆக்ரேய நகரத்தினுள் நுழைய இருந்தபோது அந்த நகரம் இந்திரனுடைய அமராவதியைப் போன்று திகழ்ந்தது.

सर्वा पुरी सा प्रहृष्टा मुदिता परमशोभत ।
मुदितास्ते स्म गायन्ति राजमार्गेषु गायकाः ॥ ५ ॥

ஒவ்வொரு மக்களும் மகிழ்ந்தனர். அனைத்து இடங்களும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. முக்கியமான தெருக்களில் இசை வல்லுனர்கள் பாட்டு பாடி ஆடி மகிழ்ந்தனர். மகிழ்ச்சியடைந்த மக்கள் இங்குமங்கும் பாடி கொண்டும் ஆடிக் கொண்டும் திரிந்தனர்.

माधवी चाग्रसेनश्च सम्प्राप्तौ लोकविश्रुतौ ।
विचेता मलिनो दीनो न कश्चिद् तत्पुरे तदा ॥ ६ ॥

பஞ்சம் பசி ஏழை இல்லாத வளர்ச்சியடைந்த நாடான ஆக்ரேயபுரியினுள் மாதவியும் ஸ்ரீஅக்ரஸேனரும் நுழைவதற்கு தயாராகினர்.

ततः काले शिवे पुण्ये ह्यग्रसेनस्य तौ पुरा ।
प्रविष्टौ हृष्टवदनौ चन्द्रादित्याविवाचलम् ॥ ७ ॥

மங்களத்தை கொடுக்கக் கூடிய நல்ல நேரத்தில் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் ஆக்ரேய புரியினுள் நுழைந்தனர். அது எவ்வாறு இருந்தது என்றால் - சந்திரனும் சூரியனும் எவ்வாறு ஸுமேரு மலையின் உச்சியில் பிரகாசிப்பதற்காக ஆரம்பிப்பார்களோ அவ்வாறு புதுமண தம்பதி இருந்தனர். இருவரும் சந்தோஷத்துடனும் மனதில் மகிழ்ச்சியுடனும் இருந்தனர்.

प्रविशन्तौ पुरीं वीक्ष्य नागरो हि महाजनः ।
हर्षेण महता युक्तः सम्मुखोऽभूज्जनाधिप ॥ ८ ॥

அவர்கள் ஆக்ரேயபுரியினுள் நுழையும்போது அனைத்து மக்களும் ஒன்றுகூடி அவர்களை வரவேற்று வாழ்த்தினர். சிலர் தனியாக பார்த்து பேசி மகிழ்ந்தனர்.

प्रत्याययुश्च तौ प्राप्तौ सर्वे सौम्यपुरोगमाः ।
आवृतौ ददृशुर्हृष्टा लोकैर्बहुविधैर्धनैः ॥ ९ ॥

பின்பு ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் தங்களுடைய உறவினர்களை பார்ப்பதற்காக பிரதாபபுரத்தை அடைந்தனர். உடனே அங்கிருந்த புரோஹிதரும், அம்மா வைதர்பியும், இளைய சகோதரன் ஸௌர்பஸேனனும், அவர்களை பாதுகாத்துக் கொண்டிருக்கும் சௌம்ய ரிஷியும் வரவேற்றனர். புதுமண தம்பதியான ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவி குதிரையிலும் யானையிலும் பவனி வந்து மக்களை மகிழ்வித்தனர்.

गृहीत्वा माधवीं देवीमागच्छन्तं जनाः प्रभुम् ।
ददृशुः कामसङ्काशं कान्तया सह सङ्गतम् ॥ १० ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியுடன் பிரதாபபுரத்தினுள் நுழைந்த போது அவர்கள் மன்மதன் ரதியைப் போன்று அனைவருக்கும் காட்சியளித்தனர்.

पश्यन्तो हृष्टवदनाः पिबन्तो नयनैश्च ते ।
तं विनीतमुखं दृष्ट्वा प्रशशंसुः पदे पदे ॥ ११ ॥

ஸ்ரீஅக்ரஸேனரை அனைத்து மக்களும் பார்த்தபடியே இருந்தனர். அவர்களுக்கு ஸ்ரீஅக்ரஸேனர் சிறந்தவராகத் திகழ்ந்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் இராணி மாதவியைப் பார்த்து அவளுடைய அழகில் மயங்கினர்.

सोऽभ्यानमत् प्रसूपादौ वैदर्भ्यानन्दवर्धनः ।
पुत्रमाश्लिष्य माताऽपि हर्षादश्रूण्यवर्तयत् ॥ १२ ॥

ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் தனது அம்மா வைதர்பியின் பாதங்களில் விழுந்து வணங்கியபோது மஹாராணி வைதர்பி தனது மகன் ஸ்ரீஅக்ரஸேனரை அணைத்து தழுவி ஆனந்த கண்ணீர்மல்கி ஆசீர்வதித்தாள்.

शौर्यसेनोऽग्रसेनस्य ववन्दे चरणौ रुदन् ।
वाष्पैः पिहितकण्ठश्च व्याहर्तुं नाशकत् तदा ॥ १३ ॥

ஆனந்த கண்ணீருடன் சகோதரன் சௌர்யஸேனனும் ஸ்ரீஅக்ரஸேனரின் கால் விழுந்து வணங்கி ஆசியைப் பெற்றான். மகிழ்ச்சியால் துக்கம் தொண்டையை அடைக்க அவனால் பேச முடியவில்லை.

श्वश्रूरवोचद् विनतां स्नुषां चोत्थाप्य सादरम् ।
परिष्वज्योपसङ्गृह्य स्नेहाद् गद्गदभाषिणी ॥ १४ ॥

நாக கன்னிகை மாதவியும் மஹாராணி வைதர்பியின் கால் விழுந்து வணங்கினாள். முழு மனதுடனும் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் அவளை வரவேற்று மகிழ்ந்து பேசி பழகினாள்.

प्रहर्षमतुलं लब्ध्वा भगवत्यब्रवीत् तदा ।

वैदर्भी उवाच

प्रवेशयैनां भवनं पूज्यां ज्येष्ठां स्नुषां मम ॥ १५ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அம்மா பகவதி மகிழ்ச்சியின் எல்லையை அடைந்து பேசினாள். (வைதர்பி கூறினாள்) - இவள் என்னுடைய பெரிய மருமகள் ஆவாள். இவளை மரியாதையுடனும் சந்தோஷத்துடனும் என்னுடைய வீட்டினுள்

अहो धन्यतरास्मीति वीरपुत्रसमागमात् ।
अद्य मे सफलः कामः पूर्णो मेऽद्य मनोरथः ॥ १६ ॥

என்னுடைய வீர மகனையும், மருமகளையும் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். இன்று நான் என்னுடைய பிறவிப்பயனை அடைந்து விட்டேன். எனது ஆசையும் நிறைவேறியது என்றாள்.

चिरप्रणष्ट पुत्रस्य दर्शनं प्रियाया सह ।
आगच्छ पुत्र भवनं सभार्यः प्रविशेह च ॥ १७ ॥

உண்மையிலும் இது மகிழ்ச்சியான நேரம். வெகு நாட்களாக பிரிந்த எனது மகனை நான் சந்திக்கிறேன். அதுவும் அவனுடைய மனைவியுடன் பார்க்கிறேன். இது இரட்டிப்பான மகிழ்ச்சியை அளிக்கிறது. ஓ மகனே - உனது மனைவியுடன் வீட்டின் கூடத்திற்கு வருவாயாக என்றாள்.

जैमिनिरुवाच

स पञ्चमे ततो वर्षे मात्रा सङ्गम्य सानुजः ।
सर्वकामैः सुसिद्धार्थो लब्धवान् परमां मुदम् ॥ १८ ॥

ஜைமினி கூறினார் - ஐந்து வருடங்களுக்கு மேல் தனது இளைய சகோதரனையும், அம்மாவையும் பிரிந்து இன்று அனைவருடனும் கூடியதில் ஸ்ரீஅக்ரஸேனன் மகிழ்ந்தான். அனைத்து ஆசைகளையும், வேண்டிய அனைத்தையும் அடைந்ததாக நினைத்து மிகவும் மகிழ்ந்தான்.

ततः प्रतिगृहीता सा स्त्रीभिराचारमङ्गलैः ।
क्रीडन्ति स्म प्रगायन्ति नार्यो मदवशं गताः ॥ १९ ॥

மகிழ்ச்சியுடன் பெண்கள் மாதவியை அவர்களின் வீட்டு வழக்கின்படி வரவேற்றனர். தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவிக்கும் படி குடும்ப பாடல்களைப் பாடி ஆடி மகிழ்ந்தனர். அனைத்து பெண்களும் ஆனந்த பரவசத்தை அடைந்தனர்.

माधवी क्षौमसंवीता कृतकौतुकमङ्गला ।
कृताभिवादना श्वश्र्वास्तस्थौ प्रह्वा कृताञ्जलिः ॥ २० ॥

பெண்களும் மஹாராணி வைதர்பியும் ஆடிக் கொண்டிருக்கையில் விலை உயர்ந்த பட்டு புடவையை அணிந்து கொண்டிருந்த மாதவியும் அவர்களுடன் சேர்ந்து ஆட ஆரம்பித்தாள்.

रूपलक्षणसम्पन्ना शीलाचारसमन्विता ।
माधवीमवदत् प्रेम्णा श्वश्रूराशीर्वचः स्नुषाम् ॥ २१ ॥

அழகான லக்ஷணங்களை உடையவளாயும், ஒழுக்கத்துடனும், ஆசாரத்துடனும் இருக்கும் மாதவியை பார்த்து மாமியாரான வைதர்பி ஆசீர்வாதம் செய்தாள் -

वैदर्भी उवाच

पतिव्रता च सुभगा बहुसौख्यसमन्विता ।
यथा नारायणे लक्ष्मीस्तथा त्वं स्या ममात्मजे ॥ २२ ॥

வைதர்பி கூறினாள் - ஓ மாதவி - உண்மையிலும் நீ கொடுத்து வைத்தவள். நீ கடவுளின் அருளை முழுமையாகப் பெற்றிருக்கிறாய். நீயும் ஸ்ரீஅக்ரஸேனனுடன் ஸ்ரீமஹாலக்ஷ்மி, நாராயணனை போற்றி வழிபட்டு மகிழ்ச்சியுடன் இருப்பாயாக என்றாள்.

कल्याणि त्वं गुणवती सुखिनी शरदां शतम् ।
पत्या त्वमभिषिच्यस्व राज्ञा त्वं धर्मवत्सला ॥ २३ ॥

எனது மருமகளே - நீ உண்மையிலும் தருமத்தை தெரிந்தவள், நல்ல குணத்தை உடையவள், நீ உன்னுடைய கணவன் ஸ்ரீஅக்ரஸேனனுடன் 100 வருடங்களுக்கு மேலாக செழிப்புடன் சந்தோஷமாக வாழவேண்டும். விரைவிலேயே நீ பட்டத்து ராணியாக ஆகப்போகிறாய் என்று கூறினாள்.

अखण्डसौभाग्यवती शुभा वंशविवर्धनी ।
जीवसूर्वीरसूर्भद्रे भूया इत्यभिनन्दनम् ॥ २४ ॥

ஓ சிறந்த மாதவியே - நீ உன்னுடைய கணவனுடன் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு இந்த வம்சத்தை விருத்தியடையச் செய்து, இந்த இராஜ குலத்தின் புகழை மேன்மையடையச் செய்யவேண்டும். விரைவிலேயே நீ வீர மகனை பெற்றெடுத்து ஆனந்தத்தை அடையவேண்டும்.

जैमिनिरुवाच

महाभागा माधवी च सखीभिः परिवारिता ।
रमते परया प्रीत्या चाग्रसेनेन सङ्गता ॥ २५ ॥

ஜைமினி கூறினார் - மாதவி எப்பொழுதும் தன்னுடை தோழிகளுடன் மகிழ்ச்சியாக இருந்தாள். அவள் ஸ்ரீஅக்ரஸேனருடன் திருமண வாழ்க்கையை சந்தோஷமாகக் கழித்தாள்.

मदनः किं शिवाद् भीतः प्रविष्टस्तां विभाति मे ।
नराणामपि नारीणां वेषैर्दिव्यैर्मनोरमाम् ॥ २६ ॥

ஆக்ரேயபுரியில் அனைவரும் ஆண் பெண் இருவரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். புதுமண தம்பதியும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். இதைப் பார்க்கும் போது சிவனிடத்தில் மன்மதன் பயந்துபோய் ஆக்ரேயபுரியில் வாசம் செய்வது போல் இருந்தது.

अथाग्रसेनः कल्याण्या रममाणस्तु कानने ।
अम्लानपङ्कजा किंचिद् अपश्यत् सुमहत् सरः ॥ २७ ॥

ஒரு நாள் மாலை நேரத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியுடன் அந்தப்புரத்திலுள்ள தோட்டத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கும் சமயத்தில் அங்கிருந்த சிறிய குளத்தில் அழகான மலர்ந்த ஒரு தாமரைப் பூவைப் பார்த்தார்.

अग्रसेन उवाच

इमां माधवि पश्य त्वं रविभार्यामनिन्दिताम् ।
निजकान्तं वञ्चयित्वा भ्रमरान् रमयत्यहो ॥ २८ ॥

ஸ்ரீஅக்ரேஸனர் கூறினார் - ஓ மாதவி - இங்குப் பார் - அழகான தாமரைப் பூ தனது கணவனான சூரியன் தன்னை விட்டுப் பிரியும் போதுகூட வண்டுகளின் கூட்டத்தால் எவ்வளவு அழகாக பிரகாசிக்கிறது என்றார்.

जैमिनिरुवाच

अग्रसेन वचः श्रुत्वा माधवी वाक्यमब्रवीत् ।
स्मितं कृत्वा विशालाक्षी वक्रोक्त्या तं नृपं प्रति ॥ २९ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா - இவ்வாறு அக்ரஸேனனின் வார்த்தைகளைக் கேட்ட மாதவி புன்னகைச் சிரிப்புடன் நீண்ட அழகான கண்களைக் கொண்ட அவள் மாதவி பதில் கூறினாள்.

माधव्युवाच

स्वसुतानागतान् मत्वा पुष्णात्येषा गृहागतान् ।
पुत्रपौत्रादिकान् नाथ षट्पदादीन् नृपुङ्गव ॥ ३० ॥

மாதவி கூறினாள் - ஓ சிறந்த வீரரான அக்ரஸேனரே - இந்த குளத்திலுள்ள தாமரைப் பூ தன்னுடைய குழந்தைகளான வண்டுக்களுக்கு பாலை பருகவைத்து பசியைத் தீர்ப்பதற்காக வந்துள்ளது. தாமரைப் பூவின் கணவன் குழந்தைகளைப் பற்றியும் பேரக் குழந்தைகளைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆதலால் குழந்தைகளை காப்பது ஒரு தாயின் கடமையல்லவோ? என்றாள்.

स्तनौ रुदन्तौ पद्मिन्याः पिबतो भ्रमराविमौ ।
प्राणनाथ समीपे तु षट्पदौ बालकाविव ॥ ३१ ॥

ஓ என்னுடைய உயிரே - இங்கு பார் - இரண்டு வண்டுகள் தாமரைப் பூவின் நடுவில் அமர்ந்துகொண்டு தன்னுடைய தாயின் மார்பிருந்து பாலை பருகுகிறது. என்றான்.

प्राणनाथोदिते भानौ पद्मिनी विकचा यदि ।
विलोक्य नलिनीं नाथ विस्मितोऽसि कुतोऽधुना ॥ ३२ ॥

இந்த தாமரைப் பூ எப்பொழுது சூரியன் கிழக்கில் உதிப்பானோ அப்பொழுது தான் மலரும். ஓ மாதவி - நீ ஏன் இந்த தாமரைப் பூவைப் பார்த்தவுடன் இவ்வாறு பாதிக்கப்பட்டாய்? உண்மையைச் சொல்லவும் என்றான். மாதவி கூறினாள் - உண்மையிலும் அழகான பெண் தனது கணவனைப் பார்க்கும்போது இவ்வாறு மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என நினைப்பாள்.

दोषः कश्चात्र राजेन्द्र रुचिरं क्रियतेऽनया ।
न तु नाथं वञ्चयति पद्मिन्याश्चरितं महत् ॥ ३३ ॥

ஓ சிறந்த புருஷரே - தாமரைப் பூவில் எவ்வித தோஷமுமில்லை. தாமரைப்பூ தனது கணவனிடத்தில் அன்பை வைத்துள்ளது. சூரியன் கிழக்கில் உதிக்கும்போது தனது கணவன் வந்துவிட்டான் என மலர்கிறது. மாலையில் சூரியன் மறையும் போது தன்னைவிட்டு கணவன் பிரிகிறான் என மனம் வருந்தி வாடுகிறது என்றாள்.

रात्रौ विरहिणी बालं गृहीत्वा पश्य षट्पदम् ।
नित्यं निद्रां न कुरुते ह्येष धर्मः सनातनः ॥ ३४ ॥

இந்த தாமரைப் பூ தனது கணவன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டான் என்ற வருத்தத்தில் கவலைப்பட்டு இரவு முழுவதும் தூங்குவதில்லை. இந்த தாமரை தனது குழந்தைகளான வண்டுக்களுடன் இரவைக் கழிப்பதை விரும்பவும் இல்லை. இது தான் பெண்களின் தனிச் சிறப்பு. இந்த தருமம் உலகத்தின் இயற்கை ஆகும்.

जैमिनिरुवाच

इति तस्या वचः श्रुत्वा त्वग्रस्तोषसमन्वितः ।
तया सुसङ्गतो जातः पुत्रदर्शनलालसः ॥३५॥

ஜைமினி கூறினார் - ஓ ராஜன் - ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியிடமிருந்து உயர்ந்த பொருள் பொருந்திய இந்த தத்துவத்தைக் கேட்ட பிறகு மிகவும் மனம் மகிழ்ந்தார். உடனே மகிழ்ச்சியுடன் மகனை பெற்றெடுக்க வேண்டும் என சிந்தித்தார்.

प्रजाः स्वस्था ह्यवर्तन्त विप्रा वेदपरायणाः ।
फलन्ति सततं वृक्षा लताः पुष्पफलान्विताः ॥ ३६ ॥

ஓ ராஜன் - இதை அறிந்த ஆக்ரேயபுரியின் மக்களும் வேதமறிந்த பிராம்மணர்களும் மனம் மகிழ்ந்தனர். அச் சமயத்தில் அனைத்து மரங்களும் செடி கொடிகளும் புஷ்பங்களுடனும் காய் கனிகளுடன் திகழ்ந்தது. வேதம் அறிந்த பிராம்மணர்கள் வேதத்தை ஓதினர். மற்றவர்கள் அவர்களின் கடமையைச் சிறப்பாகச் செய்தனர்.

नराः सत्यव्रतास्तत्र नार्यश्च पतिसेविकाः ।
चिन्तनं श्रीमहालक्ष्म्याः नान्यां चिन्तां प्रकुर्वते ॥ ३७ ॥

ஒரு புருஷன் தனது மனைவியினிடத்தில் அன்புடன் இருக்கவேண்டும். மனைவி தனது கணவனுக்கு வேண்டிய அனைத்தையும் அன்புடன் செய்ய வேண்டும். பொதுவாக அனைவரும் மஹாலக்ஷ்மியினிடத்தில் அருளைப் பெற வேண்டும். இவை இருப்பின் மற்ற சிந்தனை தேவையில்லை.

यथातृप्ति पयः पीत्वा वत्सा यत्रोपरेमिरे ।
गोपाला दुदुहस्तत्र घटोध्नीर्गाः शुभास्तदा ॥ ३८ ॥

கன்று பசுவிடத்தில் தனக்கு வேண்டியளவு பாலை பருகி மகிழ்கின்றது. அதன் பிறகு பசு தன்னைக் காப்பவனுக்கும் ஒரு குடம் நிறைய பாலை கொடுத்து மகிழ்விக்கிறது. ஆக பசு அனைவருக்கும் நன்மையையே செய்கிறது.

पुण्यं धनं सुखं धर्मो देवोद्यानञ्च कौतुकम् ।
सम्पत्तिर्बहुला यत्र हासश्रीस्तत्र जायते ॥ ३९ ॥

சுதந்திரமடைந்த ஆக்ரேயபுரியின் மக்கள் தருமத்தின் படி ஆட்சி நடப்பதை கண்டு மகிழ்ந்தனர். ஆக்ரேயபுரியில் இருக்கும் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் கண்டு பூலோகம், சுவர்க்கலோகம், பாதால லோகத்திலுள்ள மக்கள் பொறாமை கொண்டனர்.

यत्राग्रेयजनाः पुण्यप्रिया धनविभूषिता ।
रमारूपास्तु कामिन्यो नरा माधवरूपिणः ॥ ४० ॥

ஆக்ரேயபுரியுள்ள மக்கள் எப்பொழுதும் தருமத்தையே செய்தனர். தருமத்தில் ஆசைகொண்டு நல் வழியிலும் ஆன்மீகத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அங்கிருக்கும் பெண்கள் லக்ஷ்மியைப் போன்றும் ஆண்கள் நாராயணனைப் போன்றும் திகழ்ந்தனர். பொதுவாக அங்கிருப்பவர்கள் லக்ஷ்மீநாராயணனாகவே இருந்தனர்.

आग्नेये मध्यदेशे च महालक्ष्मालयः शुभः ।
तन्मध्ये च श्रियं नित्यं पूजयेन्निशि वा दिवा ॥ ४१ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா -ஆக்ரேயபுரியின் நடுவில் மஹாலக்ஷ்மி கோவில் உள்ளது. அங்கு தினமும் காலை மதியம் மாலை நேரங்களின் பூஜைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

किमत्र वर्ण्यतेऽग्रस्य पुरे श्रीर्जनमेजय ।
सर्वा व्याप्य दिशो याऽत्र स्वभाभिर्भासतेऽभितः ॥ ४२ ॥

ஓ ராஜன் - ஜனமேஜயா - ஆக்ரேயபுரியில் உள்ள சிறப்புகளை எவ்வாறு வர்ணிப்பது. மஹாலக்ஷ்மியின் அருளால் ஆக்ரேயபுரியின் மக்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்தையும் அடைகின்றனர். மஹாலக்ஷ்மி தனது அருளை ஆக்ரேயபுரி முழுவதும் பரவும்படிச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

सुचित्रं सुखसम्पूर्णं नित्योत्सवविभूषितम् ।
द्वितीयमिव वैकुण्ठं स्थापितं विष्णुना हि तत् ॥ ४३ ॥

இவ்வாறு ஆக்ரேயபுரி முழுவதும் மகிழ்ச்சியுடன் இருந்தது. ஒவ்வொரு நாளும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதைப் பார்க்கும்போது ஸ்ரீமஹாவிஷ்ணு ஆக்ரேயபுரியை தனது இரண்டாவது வைகுண்டலோகமாகப் படைத்து இங்கு வந்துவிட்டதாகத் தோன்றுகிறது.

य एतद् अग्रसेनस्य माधव्याश्चरितञ्च यद् ।
शृणुयात् सर्वपापेभ्यो मुच्यते नात्र संशयः ॥ ४४ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இந்த ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியின் சரிதத்தை யார் கேட்கிறார்களோ அவர்கள் பாபங்களில் இருந்து விடுபட்டுகின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

जैमिनिरुवाच

इदमाख्यानमायुष्यं यः शृणोति मुनीश्वर ।
परमं जायते सौख्यं पुण्यं तस्य नरस्य हि ॥ ४५ ॥

ஜைமினி கூறினார் - ஓ சிறந்த ஜனமேஜயா - இந்த பகுதியின் கதையை யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு நீண்ட ஆயுளும், சௌக்கியமும், புண்ணியமும் கிடைக்கும். இவ்வாறு ஜைமினி

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
पद्धिरचितम् श्रीमदग्रभागवते अष्टादशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

பத்தொன்பதாவது அத்யாயம்

ஒப்பந்தமும் விருந்தளிப்பும்

जैमिनिरुवाच

धर्मतो धर्मविद् राजा नृधर्मो विग्रही यथा ।
चातुर्वर्ण्यं स्वकर्मस्थं स कृत्वा पर्यपालयत् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - மஹாராஜா அக்ரஸேனர் நான்கு வர்ணத்தவர்களையும் அவரவர்களின் வேலையில் ஈடுபடுத்தினார். தருமத்தின்படி இராஜ்யத்தை நடத்திவந்தார். தருமத்தை முழுவதுமாக கடைபிடித்தால் அவர் தருமத்தின் உருவமாகவே திகழ்ந்தார்.

ररक्ष वसुधादेवीं श्रीमानतुलविक्रमः ।
द्वेष्टि कञ्चन न द्विष्टो द्वेष्टारस्तस्य नाभवन् ॥ २ ॥

ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் பராக்ரமசா இவரை யாருடனும் ஒப்பிடமுடியாது. மேலும் இவர் மஹாலக்ஷ்மியின் அருளைப் பெற்றுள்ளதால் ஸ்ரீமான் என்கிற பெயருக்கும் ஒப்பானவர். இவர் யாரைப் பார்த்தும் பொறாமைப் பட்டதில்லை மற்றவர்களும் இவரைப் பார்த்து பொறாமைப்படவும் இல்லை.

समः सर्वेषु भूतेषु प्रजापतिरिवाभवत् ।
सुदर्शः सर्वभूतानामासीत् सोम इवापरः ॥ ३ ॥

இராஜா அக்ரஸேனர் சந்திரனைப் போன்றவர். அனைவருக்கும் உதவியைச் செய்பவர். இவரிடம் இவன் பணக்காரன், இவன் ஏழை

என்ற பாகுபாடு கிடையாது. மனிதனுக்கு மட்டுமல்லாது விலங்கினங்களுக்கும் உதவியைச் செய்பவர். அனைத்து மக்களும் இவரை மகிழ்ச்சியுடன் சந்திப்பர். இவர் பிரம்மாவைப் போன்று அனைவரிடத்திலும் நட்புடன் இருப்பார்.

लोकस्य चैव सर्वस्य प्रियः आसीत्स चाग्रराट् ।
राजधर्मार्थकुशलो युक्तः सर्वगुणैर्वृतः ॥ ४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து மக்களிடத்திலும் அன்பைக் கொண்டவர். ஏனெனில் அவர் நன்கு இராஜ தந்திரத்தையும், நுணுக்கங்களையும், மக்களின் மனோபாவங்களையும், பற்பல கலைகளையும், தருமத்தையும் நன்கு அறிந்தவர். இவ்வாறு அவர் பல கலைகளின் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார்

अकृष्टपच्या पृथिवी प्रजा आनन्दनिर्भराः ।
गावश्च घटदोहिन्यो यदा नागसुतापतिः ॥ ५ ॥

நாககன்னிகை மாதவி மஹாராணியாக பதவி ஏற்றவுடன் அக்ரபுரியில் நெற்பயிர்களும் தானியங்களும் அளவுக்கு அதிகமாக மகசூலைத் தந்தது. பசுக்களும் குடம் குடமாக பாலை நிறப்பியது.

ऊर्ध्वसस्याभवद् भूमिः सस्यानि रसवन्ति च ।
यथर्तुवर्षी पर्जन्यो बहुपुष्पफला द्रुमाः ॥ ६ ॥

மஹாராணியாக மாதவி வந்தவுடன் ஆக்ரேயபுரியில் விவசாயம் பெருகியது. சிறிய விவசாயிகளும் பெரிய மகசூலைப் பெற்றனர். மாதம் மும்மாரி பெய்தது. இயற்கை அந்தந்த காலத்தில் மனிதர்களுக்கு செவ்வனே சேவைச் செய்தது. அனைத்து மரங்களும்

मानक्रोधविहीनाश्च नरा धर्मोत्तरक्रियाः ।
अन्योन्यप्रीतिसंयुक्ता व्यवर्धन्त प्रजास्तदा ॥ ७ ॥

ஒவ்வொரு நாளும் ஆக்ரேயபுரியின் மக்கள் மேன்மேலும் செல்வந்தர்களானார்கள். இவ்வாறு இருப்பினும் அவர்களிடையே பொறாமை ஏற்படவில்லை. அதற்கு மாறாக அனைவரும் தினமும் ஆன்மீகத்தில் சிந்தனையைச் செலுத்தி மஹாலக்ஷ்மியை வழிபட்டனர்.

न ववर्षाथ सहसा सहस्राक्षः कदाचन ।
कमुपायमुपादाय वार्याऽश्रीरित्यचिन्तयत् ॥ ८ ॥

ஆக்ரேயபுரியின் வளர்ச்சியைப் பார்த்த இந்திரன் மிகவும் பொறாமை கொண்டு அந்நகரில் மழைபெய்யவிடாது தடுத்தான். ஆதலால் மக்கள் தண்ணீர் இல்லாமல் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தினர்.

यथाशक्ति ददात्यन्नमग्रो राजा विमत्सरः ।
न च वर्षति पर्जन्यः कथमन्नं भविष्यति ॥ ९ ॥

அனைத்து மக்களும் இந்த கஷ்டத்திருந்து வெளியில் வருவதற்குச் சிந்தித்தனர். ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய அரச மாளிகையிருந்து நெல் அரிசி தானியங்களை மக்களுக்கு வழக்கினார். இவ்வாறு மழை இல்லாமல் இருந்தால் எதிர்வரும் காலத்தில் எவ்வாறு பயிரிடுவது என்பதைப் பற்றியும் மக்கள் சிந்தித்தனர். இதனால் பஞ்சம் ஏற்படுமோ என்றும் பயந்தனர்.

इत्येवमुक्ते वचने सोऽग्रसेनः प्रतापवान् ।
प्रसाद्य परमोद्विग्नान् तान् नॄन् प्रोवाच सादरम् ॥ १० ॥

இவ்வாறு மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கையில் வீரன் ஸ்ரீஅக்ரஸேனர் அஞ்சாத மனதுடன் அனைவரையும் சமாதானப் படுத்திக் கூறினார் -

अग्रसेन उवाच

अन्यथाऽभ्यर्थनामिन्द्रो न करिष्यति कामतः ।
पुरुषार्थं साधयिष्ये जीवयिष्यामि च प्रजाः ॥ ११ ॥

அக்ரஸேனர் கூறினார் - நம்முடைய பணிவான வேண்டுகோளை ஏற்று இந்திரன் மேகங்களை நம்முடைய தேசத்திற்கு அனுப்பி மழையைப் பொழியவில்லை என்றால் மக்களாகிய தாங்கள் அதைப் பற்றி கவலைப்படவேண்டாம். நான் என்னுடைய சொந்த முயற்சியில் எப்படியாவது ஜலத்தை பெற்று உங்களுக்குத் தருகிறேன் என்றார்.

वर्षिष्यतीह वा देवो न वा वर्षं भविष्यति ।
यो यदाहारजातश्च स तथैव भविष्यति ॥ १२ ॥

அன்பார்ந்த மக்களே தாங்கள் கவலைப்படவேண்டாம். இந்திரன் மழையைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் தாங்களுக்கு வேண்டிய உணவையும் தண்ணீரையும் கண்டிப்பாக கிடைக்கும்படியாகச் செய்கிறேன் என்று உறுதியளித்தார்.

माधव्युवाच

नावमन्ये न गर्हे च देवं नाथ कथंचन ।
आर्ताऽहं प्रलपामीदं सुमनास्त्वं निबोध मे ॥ १३ ॥

மாதவி கூறினாள் - அன்பானவர்களே - நான் எந்த தேவதைகளையும் இழிவாகக் கூற விரும்பவில்லை. அவர்களின் மேல் குற்றத்தையும் சுமத்தவில்லை. தாங்கள் அனைவரும் இந்த துயரத்திரும் வெகு விரைவில் வெளியில் வந்துவிடுவீர்கள். நானும் கவலைப் பட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுக்கள் என்றாள் -

तदेवाभिप्रपद्येत न विहन्यात् कदाचन ।
यत् स्वकर्मवशात् किंचित् तत् पौरुषमिति श्रुतम् ॥ १४ ॥

ஓ அரசரே - ஒரு மனிதன் முயற்சிக்காமல் தன்னுடைய பிரார்த்தனையால் மட்டுமே அனைத்தையும் அடைந்துவிட முடியாது. ஒரு மனிதன் தன்னுடைய விடா முயற்சியால் அடையும் பலனை ஒரு மாவீரன் கூட அடையமுடியாது.

पर्जन्ये जलमस्त्येव नद्यामपि च सिद्धये ।
बुद्ध्या जलार्थान् जानीयादुपायं कर्मणाऽश्नुते ॥ १५ ॥

ஓ அரசரே - மேகத்தில் தண்ணீர் இருந்தால் தான் மழைபெய்து ஆற்றில் தண்ணீர் வரும். தேவதைகளின் அருளாலும் முயற்சியாலும் தான் தண்ணீர் மேகமாகி அது மழையாக விழுந்து ஆற்றில் ஜலமாக வருகிறது. இது செயற்கையாகச் செய்யும் செயலாகும். அதே போல் நாம் ஆற்றில் வரும் தண்ணீரை எவ்வாறு நதிகளில் தக்கவைத்து மக்களுக்கு பயன்படுத்தமுடியும் என தயவு செய்து சிந்தியுங்கள் என்றாள்.

जैमिनिरुवाच

ततः कालोऽत्यगात् क्लिष्टः कृतं प्रावर्तत क्षणात् ।
आरेभिरे जलार्थे च युक्तं कर्म जनास्तदा ॥ १६ ॥

ஜைமினி கூறினார் - மஹாராணி மாதவியால் கூறபட்ட யோசனையை ஸ்ரீஅக்ரஸேனர் உடனடியாகச் செயல்படுத்தினார். நதியில் தகுந்த இடத்தை தேர்ந்தெடுத்து அதை தோண்டுவதற்கு முயற்சியைச் செய்தார்.

कुल्या जलावहास्तत्र जलेनापूर्यतावनी ।
मङ्गलस्वस्तिवृध्या च प्रजानां हर्षं आभवत् ॥ १७ ॥

உடனே அங்கிருந்து வேண்டிய தண்ணீர் கிடைத்தது. நிறைய தண்ணீர் வந்ததைப் பார்த்த மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். அதைக் கொண்டு மக்கள் விவசாயத்தைத் தொடர்ந்தனர். தான்யங்கள் மறுபடியும் விளைய ஆரம்பித்தது. மக்கள் மகிழ்ச்சியானார்கள்.

एतस्मिन्नन्तरे देवदूतः कश्चित्समागतः ।
उवाच शक्रमासीनं सभामध्येऽतिदुःखितः ॥ १८ ॥

இதனிடையில் தேவதூதர்கள் தேவலோகத்திற்குச் சென்று இந்திரனின் இராஜ்யத்தை அடைந்தனர். அனைத்து தேவதைகள்சூழ சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் இருக்கும் இந்திரனிடத்தில் கலகமேற்படும்படிக் கூறினார்கள்-

देवदूत उवाच

भोः स्वामिन् हे महाबाहो लोकानां रक्षको ह्यसि ।
देवानां सुखकामः किं न जानीषे शुभाशुभम् ॥ १९ ॥

தேவதூதர்கள் கூறினார்கள் - தேவர்களின் தலைவனான இந்திரனே - தாங்கள் தான் பூலோகம், பாதல லோகம், தேவ லோகம் ஆகிய மூன்றையும் காப்பாற்றுகிறீர்கள். தாங்கள் உண்மையாலுமே தேவர்களுடைய நலனை விரும்புகிறீர்களா?. அப்படியாகில் எது நன்மையைத் தரும் எது தீமையைத் தரும் என்பதை அறிவீர்களா?. எது சரியானது எது தவறானது என்பதை அறிவீர்களா?.

जैमिनिरुवाच

आगत्य कथयामास देवो वृत्तान्तमादितः ।
सस्यान्यभूवन् भूयांसि मानवाः पौरुषाश्रयाः ॥ २० ॥

ஓ ஜனமேஜயா - தேவதூதர்கள் இந்திரனின் சபையை அடைந்து ஆக்ரேயபுரியில் மழைபெய்யக்கூடாது என ஆணையிட்டதைக் கண்டித்தனர். இந்திரனின் கோபத்தால் ஆக்ரேயபுரியில் வெகு நாட்களாக மழைபெய்யவே இல்லை. ஆதவால் மக்களின் நவனுக்காக ஆற்றை (நதியை) வெட்டி அதிருந்த தண்ணீரை எடுத்து பயிர்களையிட்டு மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்றனர்.

मानुषं तु कृतं कर्म श्रुत्वा क्रोधसमन्वितः ।
उवाच केन नीतं तद् यशो ह्यल्पायुषा मम ॥ २१ ॥

மனிதனுடைய முயற்தி மற்றும் சக்தியைக் கேட்ட இந்திரன் கோபத்தையடைந்து கூறினான் - எந்த மனிதர்கள் இவ்வாறு செய்தனர்?. என்னுடைய விருப்பத்திற்கு மாறாக செய்ததால் இதில் மடியப்போகின்றவர்கள் யார்?. தேவர்களின் அருள் இல்லாமல் மனிதனுடைய முயற்சியும் சக்தியும் எவ்வாறு வெற்றியைத் தரும்? என்று புலம்பினான்.

इन्द्र उवाच

प्रहितो गच्छ चाग्नेऽग्रं सस्यानि प्रविनाशय ।
चक्षुषा दारुणेन त्वं हव्यवाह क्रुधा दह ॥ २२ ॥

இந்திரன் அக்னியிடம் கூறினான் - ஓ ஹவ்யவாஹனா - நீ உடனடியாக ஆக்ரேயபுரிக்குச் சென்று உன்னுடைய திறமையால் காற்றுடன் கலந்து அங்கிருக்கும் பயிர்களை நெருப்பைக்கொண்டு எரித்து சாம்பலாக்கிவிடவும் என்றான்.

बृहस्पतिरुवाच

यद् इच्छसि जगद् हन्तुं साम्प्रतं न नृशंसवत् ।

अभयं सर्वभूतेभ्यो दाता त्वमिति मे मतिः ॥ २३ ॥

பிருஹஸ்பதி கூறினார் - தேவர்களின் தலைவனான இந்திரனே - தாங்கள் தான் மனிதர்களுக்கும் விலங்கினங்களுக்கும் ஏன் மரம், செடி, கொடி அனைத்திற்கும் பாதுகாப்பைத் தருபவர். ஆனால் இப்பொழுது தாங்கள் சாதாரண மனிதனாக மாறிவிட்டீர்கள். ஒருவன் தன்னுடைய துயரத்தை தனது முயற்சியால் சமாளித்தால் அதைக் கண்டு பாராட்டுவதை விட்டுவிட்டு பொறாமைக் கொள்வது சரியல்ல. ஏன் இவ்வாறு உலகத்தை அழிக்க முயற்சிக்கிறீர்கள்? என்றார்.

त्यक्त्वा छद्म महेन्द्र त्वं देवधर्मं समाश्रितः ।

कुरु कार्याणि सर्वाणि धर्मिष्ठोऽसि सुरर्षभ ॥ २४ ॥

ஓ தேவேந்திரனே - தாங்கள் கடவுள் வழிபாட்டை ஏற்றுக்கொள்பவர். தாங்கள் எதையும் விரும்பவும் இல்லை. ஆதலால் எந்த அழிவையும் ஏற்படுத்தாதீர்கள். தங்களின் புனிதமான காக்கும் கடமையைச் செய்து அனைவரையும் மகிழ்வியுங்கள். இதை தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன் என்றார் பிருஹஸ்பதி.

जैमिनिरुवाच

प्रदह त्वं गच्छ शीघ्रं ततो मोक्ष्यामि किल्बिषात् ।

एतच्छ्रुत्वा तु वचनं पाकवैरिमुखाच्च्युतम् ॥ २५ ॥

अग्रराज्यं प्रदुद्राव जवमस्थाय पावकः ।

सहसा प्राज्वलच्चाग्निर्वैरी वायुसमीरितः ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - ஓ தருமத்தை அறிந்த ஜனமேஜயா - இவ்வாறு ப்ருஹஸ்பதி உபதேசித்தும் தேவேந்திரன் அக்னிதேவனைக் கூப்பிட்டுக் கூறினான் - ஓ அக்னி உடனடியாக நீ ஆக்ரேயபுரிக்குச் சென்று அங்கிருக்கும் பயிர்களை எரித்து எனக்கு ஆறுதலைச் செய்வாயாக. உடனே நான் வாயுவை அனுப்பி அனைது பயிர்களும் எரியும்படிச் செய்கிறேன் என்றவுடன் அதன்படி அக்னியும் வாயுவின் உதவியுடன் அனைத்து பயிர்களையும் எரித்தான்.

प्रदीप्तमग्निमग्रश्च दृष्ट्वा तत्र निवासिनः ।
परमं यत्नमातिष्ठत् पावकस्य प्रशान्तये ॥ २७ ॥

ஆக்ரேயபுரியில் தீ கொழுந்துவிட்டெரிந்து அனைத்து பயிர்களும் சாம்பலாகிக்கொண்டிருக்கையில் மக்கள் அதைக் கட்டுப்படுத்த பற்பல முயற்சிகளைச் செய்தனர்.

विलयं पावकं शीघ्रमगमत् प्रहरोपमैः ।
पञ्चकृत्वः प्रशमितः तेनाग्रेण हुताशनः ॥ २८ ॥

கொழுந்துவிட்டெரியும் தீயை மக்கள் அனைவரும் தண்ணீரைக் கொண்டும் மணல் கொட்டியும் அணைப்பதற்கு முயற்ச்சித்தனர்.

महायोगी महासिद्धः सर्वप्रत्यक्षगोचरः ।
दृष्ट्वाऽथ गार्ग्यःस्वतपोवीर्येणैवमुवाच ह ॥ २९ ॥

ஓ மஹாபண்டித ஜனமேஜயா - அந்த சமயத்தில் மூன்று லோகத்தையும் முக்காலத்தையும் அறிந்த மஹாமுனி கார்க்யர் இந்த துயரத்திற்கு காரணத்தை அறிய ஸ்ரீஅக்ரஸேனனிடம் கூறினார் -

गार्ग्य उवाच

न ह्येतत् कारणं राजन्नल्पं सम्प्रति भाति मे ।
यद् आग्रराज्यं सन्दग्धुमिच्छतीन्द्रेरितोऽनलः ॥ ३० ॥

மஹாமுனி கார்க்யர் கூறினார் - ஓ இராஜன் - பச்சையான பயிர்கள் எரிவதற்கு காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இதனால் ஏதோ ஒரு அபாயம் ஏற்பட இருக்கிறது என நினைக்கிறேன். இந்திரனின் ஆணை இல்லாமல் பச்சை பயிர்களை அக்னி

पन्नगेन्द्रः शमसरसस्तुभ्यं कन्यां यतो ददौ ।
लक्षयित्वा तं विरोधं ग्लानिश्चैनं समाविशत् ॥ ३१ ॥

மேலும் மஹரிஷி கூறினார் - ஓ இராஜன் - நாகராஜன் தனது மகளை உங்களுக்குத் திருமணம் செய்து தந்ததால் கோபமடைந்து இவ்வாறு அனைத்தையும் அழிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறானா?. எனக்கு சந்தேகமாக இருக்கிறது இதன்பின்னால் இந்திரன் தான் இருக்குமுடியும் என்றார்.

अग्रसेन उवाच

तत्परस्तन्मनाश्चास्मि तद्भक्तस्तत्प्रिये रतः ।
करिष्यति कुतः पापं इति ज्ञात्वा प्रशाधि माम् ॥ ३२ ॥

மஹாராஜா அக்ரஸேனர் கூறினார் - ஓ மஹரிஷியே - நான் எப்பொழுதும் தியானத்திலும் கடவுளின் வழிபாட்டிலும் தருமத்திலும் தான் ஈடுபட்டுள்ளேன். இவை அனைத்தையும் அறிந்த தேவேந்திரன் எவ்வாறு தகாத வழியில் நடந்துகொள்ளமுடியும். இவை பொறாமையால் ஏற்றபட்டதாகும் என்றார்.

अक्षुद्राः सत्यवन्तश्च देवा भक्तानुकम्पिनः ।
विद्यते भीः कुतस्तेभ्यो मम ? तत् किं विधीयताम् ॥ ३३ ॥

ஓ மஹரிஷி - கண்டிப்பாக தேவர்கள் அனைவரும் இதற்கு ஒப்புதல் அளித்திருக்க மாட்டார்கள். அவ்வாறு இருக்கையில் தேவேந்திரன் எவ்வாறு இந்த கொடூரமானச் செயலைச் செய்யமுடியும்?. இதற்கு என்ன செய்வது? என்று கேட்டார்.

जैमिनिरुवाच

दैवतार्थं वयं चापि मानुषत्वमुपागताः ।
संरक्ष्याश्च वयं दैवैरेवम् अग्रोऽभ्यभाषत ॥ ३४ ॥

ஜைமினி கூறினார் - இவ்வுலகில் நாம் தேவதைகளின் அருளால் தான் மனிதர்களாக பிறந்துள்ளோம். ஆதலால் தான் அவர்களின் எண்ணங்களை நாம் பூர்த்தி செய்கிறோம். அவர்களும் நம்மை காப்பாற்றுகின்றனர். இவ்வாறு கூறியவுடன் அக்ரஸேனர் சிந்தித்தார் -

अग्रसेन उवाच

अथ चेत् कामसंयोगाद् द्वेषो लोभश्च लक्ष्यते ।
देवेषु देवप्रामाण्यान्नैषां तद् विक्रमिष्यति ॥ ३५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - தேவர்களிடத்தில் பொறாமையும், தீய செயலும், தவறும் ஏற்படின் அவர்கள் தேவர்கள் ஆகமாட்டார்கள். அவர்களின் புனிதத் தன்மையில் ஏதோ குறை இருக்கிறது. மனிதர்களிடத்தில் பொறாமை கொண்டு தீய செயலைச் செய்யக்கூடாது. தேவர்கள் எப்பொழுதும் நன்மையையே செய்யவேண்டும். இதில் மாறுபாடு ஏற்பட்டால் மஹாராஜா நருஷனைப் போன்று அனைத்து தேவதைகளும் இந்திரனைத் தலைவர் பதவியிருந்து நீக்கி கீழே தள்ளிவிடுவர் என்றார்.

ममाप्यनुपमं तेजो येन युक्ता दिवोकसः ।
अहम् आत्मबलैः शक्तो योद्धुं वज्रधरान् बहून् ॥ ३६ ॥

ஓ மஹரிஷி - நல்ல ஒளியையுடையத் தேவர்கள் இவ்வாறு நமக்கு தீமைகளைச் செய்தால் ஒரு அளவிற்கு மட்டுமே பொருத்துக்கொள்ள முடியும். நானும் அவர்களுக்குச் சமமான சக்தியை உடையவன் ஆவேன். தாங்கள் எனக்கு அனுமதியை அளித்தால் அவர்களுடன் போர் புரிவதற்கு படைகளை உருவாக்குகிறேன்.

जैमिनिरुवाच

एकोपायं कर्मसिद्धम् अग्रसेनोऽभ्यचिन्तयत् ।
सर्वलोकेश्वरीं लक्ष्मीं प्रपद्ये शरणं श्रियम् ॥ ३७ ॥

ஜைமினி கூறினார் - மஹாராஜா அக்ரஸேனர் பொறாமைக் கொண்ட இந்திரனை இந்த வழியில் மட்டுமே வெற்றியடையமுடியும் எனத் தீர்மானித்தார். இந்திரனுடன் போர் புரிந்து அவனை இம்மூன்று உலகத்திலும் மிகவும் சக்திவாய்ந்த தேவி மஹாலக்ஷ்மியின் பாதாரவிந்தங்களில் அடிபணியச்
செய்யவேண்டும் என நினைத்தார்.

प्रणम्य प्राञ्जलिश्चक्रे स राजा शरणं श्रियम् ।
अग्रसेनस्तदा लेभे धीरत्वमभयं श्रियम् ॥ ३८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் பணிவுடன் இரு கரங்களையும் கூப்பி மஹாலக்ஷ்மியின் அருளை வேண்டி அவளின் பொற்பாதங்களில் நமஸ்காரம் செய்தார். மஹாலக்ஷ்மியும் தான் காப்பாற்றுவதாக அருள் பொழிந்தாள்.

महालक्ष्मीरुवाच

भयं शक्राद् व्यपेयात्ते प्रणोत्स्येऽहं भयं तव ।
वैरिणः स्तम्भयिष्यामि प्रक्षेप्स्याम्यायुधानि च ॥ ३९ ॥

உலகத்தின் உயர்ந்த மாதாவான மஹாலக்ஷ்மி ஸ்ரீஅக்ரஸேனருக்கு அருளைப் பொழிந்து கூறினாள் - ஓ குழந்தாய் அக்ரஸேனா - இந்திரனின் ஆயுதங்களைப் பார்த்து பயந்துவிடாதே. நான் அவனுடைய ஆயுதங்களை பலம் இழக்கச் செய்கிறேன். அவனுடைய ஆயுதங்கள் வீர்யத்தை இழந்துவிடும். இவ்வாறு நான் உனக்கு உதவியைச் செய்து உன்னுடைய துயரத்தைப் போக்குகிறேன் என்றாள்.

वज्रादुग्राद् व्यपेयात्ते भयं नृपतिपुङ्गव ।
भयं त्यज किमन्यत् ते कामं संसाधयाम्यहम् ॥ ४० ॥

மா வீரனான அக்ரஸேனா - வஜ்ராயுதத்தைப் பார்த்து பயம் கொள்ளாதே. இந்த பயத்திருந்து உன்னை நான் விடுவிக்கிறேன். என்ன வேண்டுமானும் கேள் நான் அதை உனக்குக் கொடுக்க காத்துக் கொண்டிருக்கிறேன் என்றாள்.

अग्रसेन उवाच

सर्वकामप्रदा माता तां त्वां याचे न कामनाः ।
गृहाणार्चां सदाऽम्ब त्वं प्रसीद परमेश्वरि ॥ ४१ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ அம்மா மஹாலக்ஷ்மியே - மனிதனின் ஆசை அனைத்தையும் நிறைவேற்றி தாங்கள் எனக்கு அருளை பொழியும் சக்தியை உடையவள். நான் தாங்களை என்ன வேண்டுகிறேன் என்றால் என்னுடைய பிரார்த்தனையை ஏற்று என்னை அருள்பாயுங்கள் என்றார்.

जैमिनिरुवाच

नमस्कृत्य महादेवीं समारुह्य रथं वरम् ।
महेन्द्रमाह्वयामास सत्कृतं दैवतैः सह ॥ ४२ ॥

ஜைமினி கூறினார் - அதன் பிறகு ஸ்ரீஅக்ரஸேனர் மஹாலக்ஷ்மியின் பாதாரவிந்தங்களில் அடிபணிந்தார். அனைத்து தேவதைகளையும் வழிபட்டார். தன்னுடைய தேரில் அமர்ந்து கொண்டு இந்திரனிடம் போர் புரிவதற்கு தயாரானார்.

महेन्द्रो देवराजोऽथ सिंहवद् निनदन् मुहुः ।
अग्रसेनरथं शीघ्रं शरवर्षैरवाकिरत् ॥ ४३ ॥

ஜைமினி கூறினார் – ஓ தர்மக்ஞ ஜனமேஜயா – தேவர்களின் தலைவனான இந்திரன் சிங்கத்தைப் போன்று ஆக்ரோஷத்துடன் தொடர் அம்புகளைக்கொண்டு ஸ்ரீஅக்ரஸேனரின் தேரை நோக்கி போர் புரிந்தான்.

यान् यान् मुमोच देवेन्द्रस्तांस्तानग्रोऽच्छिनच्छरान् ।
धनुश्चिच्छेद सहसा वज्र्यग्रस्य शितैः शरैः ॥ ४४ ॥

தேவேந்திரனால் தொடுக்கப்பட்ட அம்புகள் அனைத்தையும் ஸ்ரீஅக்ரஸேனர் எதிர்கொண்டு முறியடித்தார். கோபமடைந்த இந்திரன் ஸ்ரீஅக்ரஸேனரின் வில்லை உடைத்தான்.

अग्रसेनं तथा तीक्ष्णैः कम्पयामास रोषितः ।
मुहुरभ्यर्दयन्निन्द्रः प्राहसत् स्वनवद् भृशम् ॥ ४५ ॥

பின்பு பொறாமையால் ஏற்பட்ட வெறியுடன் இருக்கும் தேவேந்திரன் கூர்மையான அம்புகளைக் கொண்டு ஸ்ரீஅக்ரஸேனரின் தலையை நோக்கி அம்பைத் தொடுத்தான். ஒரு நொடி பயந்துபோன ஸ்ரீஅக்ரஸேனரைப் பார்த்து இந்திரன் கேக்கையாகச் சிரித்தான். அதையும் எதிர்கொண்டு சண்டையிட்டான்.

चकम्पे वसुधा तत्र चेलुर्गिरिवरास्तथा ।
विष्वग्वाता ववुश्चैव पेतुरुल्काश्च निष्प्रभाः ॥ ४६ ॥

அச் சமயத்தில் பூமியே அதிர்ந்தது. பெரிய பெரிய மலைகளும் நடுங்கின. இந்திரனுக்கும் அக்ரஸேனருக்கும் போர் மிகவும் பலமானது. ஒருவருக்கொருவர் சளைக்காமல் போர் புரிந்தனர்.

जेपुर्मुनिगणा मन्त्रान् जगतो हितकाम्यया ।
तयोः प्रवृत्ते सङ्ग्रामे ददृशुर्विस्मयान्विताः ॥ ४७ ॥

இந்திரனுக்கும் அக்ரஸேனருக்கும் நடக்கும் போரைப் பார்த்து பூமியிருந்த அனைவரும் பயந்தனர். ரிஷிகளும் முனி கணங்களும் பூமியையும் இவ்வுலகத்தை காப்பதற்கு மந்திரங்களைத் துதித்தனர்.

स्थितं तु दृष्ट्वा देवर्षिः बृहस्पतिरिहान्तरे ।
उभयो रथयोर्मध्यम् अवतीर्णौ महोग्रयोः ॥ ४८ ॥

போர் நடக்கும் இடத்திற்கு தேரில் வந்த ப்ருஹஸ்பதியைப் (தேவ குருவை) பார்த்தவுடன் இந்திரனும் ஸ்ரீஅக்ரஸேனரும் தங்களுடைய தேரைவிட்டு இறங்கி வந்து பூமியில் நின்றனர்.

न्यस्तशस्त्रौ च तौ वीरौ ववन्दतुररिन्दमौ ।
देवर्षिं धर्मतत्वज्ञं सर्वभूतहिते रतम् ॥ ४९ ॥

தங்களுடைய எதிரியை அழிக்கும் திறமை படைத்த இரு வீரர்களும் தங்களுடைய ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு உலகத்தை படைத்து மூவுலகிற்கும் குருவாக இருக்கும் பிருஹஸ்பதியிடம் சரணடைந்தனர்.

पाणी गृहीत्वा हस्ताभ्यां बृहस्पतिरथाब्रवीद् ।

बृहस्पतिरुवाच

कमर्थंच पुरस्कृत्य प्रवृत्तमतिदारुणम् ॥ ५० ॥

ப்ருஹஸ்பதி கேட்டார் - இருவருடைய கைகளையும் தன்னுடைய கையால் பிடித்துக் கொண்டு இருவரும் எதற்காக இவ்வாறு கோரமான (பயங்கரமான) சண்டையைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள்?. என்றார்.

विनाशकारणं युद्धं निवर्तस्व त्वमग्रतः ।
न हि युद्धं प्रशंसन्ति सर्वावस्थमरिन्दम ॥ ५१ ॥

தேவகுரு பிருஹஸ்பதி கூறினார் - சிறந்த மனிதர்களே - போர் என்பது எப்பொழுதும் அழிவை ஏற்படுத்தும். இதில் தாங்கள் ஈடுபடக்கூடாது. ஞானிகளும் அறிஞர்களும் போர் செய்து அழிவதை புகழமாட்டார்கள்.

कलहस्यास्य चान्ताय शमादन्यत् न साधनम् ।
अपेक्षन्ते हि पुरुषा शमं शश्वत् न विग्रहम् ॥ ५२ ॥

தேவர்களுக்கும் தேவபுருஷனுக்கும் ஏற்பட்டுள்ள கலகத்தை இத்துடன் முடித்துக் கொள்வதைவிட வேறுவழியில்லை. இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு தங்களுடைய மனதை கட்டுப்படுத்தி பொறாமையின்றி நற்செயல் ஈடுபடவேண்டும் என்றார்.

यत् तु लोकहितं कार्यं तत्कार्यमवलम्ब्यताम् ।
तदलङ्करणायैव कर्तुर्भवति सत्वरम् ॥ ५३ ॥

எந்தச் செயல் உலகிற்கு நன்மையைத் தருமோ அச்செயலைச் செய்ய வேண்டும். அச் செயல் உண்மையான பலனையும் ஏற்படுத்தும். மேலும் அது புகழையும் கொடுக்கும் என்றார்.

इन्द्र उवाच

भूय एवैतस्य शीलं जिज्ञासुः व्यसृजं पविम् ।
सख्यं चानन्तमिच्छामि त्वग्रसेनेन धीमता ॥ ५४ ॥

இந்திரன் கூறினார் - ஓ தேவகுருவே - இதுவரை நான் செய்த அனைத்தும் ஸ்ரீஅக்ரஸேனரை பரீக்ஷை செய்வதற்காகவே செய்தேன். துயரமேற்பட்டாலும் ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய மக்களிடத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதை பார்ப்பதற்காகவே இவ்வாறு செய்தேன். இதில் அக்ரஸேனர் மக்களிடத்தில் அன்பையும் தன்னிடத்தில் வீரத்தையும் கொண்டிருப்பதை முழுமையாக அறிந்தேன். இப்பொழுதிருந்து சிறந்த மாவீரன் அக்ரஸேனர் எனது நண்பனாவார் என்றார்.

(குறிப்பு - நாம் நம்முடைய வாழ்நாளில் தைவங்களால் கூட பற்பல துயரங்களைச் சந்திக்க நேரிடும். அப்பொழுதும் நாம் நம்முடைய தருமத்திருந்து நழுவாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் அந்த தேவதைகளே நேரில் வந்து நம்முடைய துயரத்தைத் துடைத்து ஆசீர்வதிப்பர் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்)

अग्रसेन उवाच

धन्योऽहं देवराज त्वां मूर्ध्ना समभिवादये ।
स्वागतं ते महेन्द्रात्र दिष्ट्या देवर्षिणा सह ॥ ५५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ தேவேந்திரா - தாங்கள் என்னை நண்பனாக்கிக் கொண்டு என்னை உயர்த்திவிட்டீர்கள். நான் தாங்களை இருகரம் கூப்பி தலை வணங்கி நமஸ்கரிக்கிறேன். தேவகுரு பிருஹஸ்பதியை வரவேற்பதன் பொருட்டு ஸ்ரீஅக்ரபுரிக்கு தாங்கள் வந்தது எனது பாக்கியம் என்றார்.

स्वागतं ते सुरश्रेष्ठ महर्षे हे महाद्युते ।
आग्रेयमिदमातिथ्यं मन्त्रतः प्रतिगृह्यताम् ॥ ५६ ॥

ஓ சிறந்த தேவர்களின் தலைவனே, மஹாதேஜஸ்வியான பிருஹஸ்பதியே தாங்கள் இருவரையும் எங்களது இராஜ்யத்திற்கு வேத மந்திரங்கள் முழங்க வரவேற்கிறோம். தாங்களை முறைபடி பூஜை செய்து வழிபடுகிறோம் என்றார்.

जैमिनिरुवाच

एवमेतांस्तु तान् देवान् अग्रसेनो ह्यपूजयत् ।
मुमुदे च महातेजाः स्तूयमानो महर्षिभिः ॥ ५७ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - உடனே ஸ்ரீஅக்ரஸேனர் தேவேந்திரனையும் மஹரிஷியையும் வேத மந்திரங்களால் துதி செய்து மகிழ்ச்சியடைவிக்கச் செய்தார்.

इन्द्र उवाच

त्वयि मानुष्यमापन्ने युक्ते चैव स्वतेजसा ।
अतिदिव्यं कृतं कर्म त्वया प्रीतिमता नृणाम् ॥ ५८ ॥

இந்திரன் கூறினார் - ஓ அக்ரஸேனா - தாங்கள் (வீர) மனிதனாகிலும் தேவதைகளைப் போல் தங்களிடத்தில் ஒளியுள்ளது. தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் போற்றதக்கது. தங்களிடத்தில் அனைத்து மக்களும் அன்புடன் இருந்து தாங்கள் சிறந்த மனிதனாக திகழ வேண்டும் என்றார்.

मयोत्सृष्टेषु शस्त्रेषु युगान्तावर्तकारिषु ।
यत्त्वया रक्षिता लोकास्तेनास्मि परितोषितः ॥ ५९ ॥

ஓ அக்ரஸேனா - உன்னுடைய இடத்திற்கு மழையே பெய்யாமல் என்னால் தடுக்கப்பட்டது. பின்பு அக்னியால் எரிக்கப்பட்டது. நான் எது செய்தாலும் நீ உன் மனதை தளரவிடாமல் புதிய நதிகளை ஏற்படுத்தி மக்களை காப்பாற்றினாய். இதனால் நீ எங்களை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினாய்.

अग्रसेन इति ख्यातः नृणां पूज्यो भविष्यसि ।
कीर्तिश्च तेऽतुला मित्र त्रिषु लोकेषु व्याप्नुताम् ॥ ६० ॥

ஓ நண்பா அக்ரஸேனா - இப்பூவுலகில் நீ தனிப் புகழுடன் திகழ்வாய். ஸ்ரீஅக்ரஸேனர் என்றாலே வெற்றி பெற்ற மா மனிதன், முயற்சியுடையவர் என்பர். மூவுலகிலும் நீ போற்றபடுவாய் என்றார்.

जैमिनिरुवाच

एवं तस्मै वरं दत्त्वा देवश्चान्तरधीयत ।
नीलजीमूतसङ्घातैः सर्वमम्बरमावृतम् ॥ ६१ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - இவ்வாறு தேவேந்திரன் ஸ்ரீஅக்ரஸேனரை வாழ்த்திவிட்டு தேவலோகம் சென்றான். அச்சமயத்தில் காருண்ட மேகம் வானில் சூழ்ந்தது.

जैमिनिरुवाच

ऐन्द्रेण पयसा सिक्तं संपृष्टममृतं शुभम् ।
पार्थिवं गन्धमाघ्राय लोकः संहृष्टमानसः ॥ ६२ ॥

ஜைமினி கூறினார் - இந்திரனின் அருளால் மழை பொழிந்தது. வெகு நாட்களாக மழை பெய்யாததால் வரண்டிருந்த பூமி தண்ணீர்பெருகி குளிந்தது. பூமி குளிந்ததால் அதிருந்து மண் வாசனை கிளம்பியது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.

सत्यं मन्त्रैः सुविहितैरौषधैश्च सुयोजितैः ।
यत्नेन चानुकूलेन दैवमप्युपलभ्यते ॥ ६३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - மருந்தை சரியானபடி சாப்பிட்டால் அது நம்முடைய
வியாதியை குணப்படுத்துவது போல் நாம் சரியானபடி தேவதைகளின் மந்திரங்களை உச்சரித்து வழிபட்டால் அது நல்ல பலனைத் தரும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते एकोनविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் பத்தொன்பதாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபதாவது அத்யாயம்

முன்னேற்றம்

ஜைமினிருவாச

अग्रसेनोऽपि तां भार्यां लब्ध्वा सर्वगुणान्विताम् ।
मुमुदे माधवी सा च तं लब्ध्वा मनसेप्सितम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் ஒழுக்கமான சிறந்த மனைவி மாதவி தன்னை அடைந்ததால் மனம் மகிழ்ந்தார். அவ்வாறே மாதவியும் தனக்கு ஏற்ற கணவன் கிடைத்தது நினைத்து மகிழ்ச்சி அடைந்தாள்.

ततः सह तया रेमे प्रियया प्रीयमाणया ।
सीतयेव पुरा रामः पौलोम्येव पुरन्दरः ॥ २ ॥

எவ்வாறு ஸ்ரீராமர் சீதையை அடைந்து மகிழ்ந்தாரோ, இந்திரன் பௌலோமியை அடைந்து மகிழ்ந்தாரோ அவ்வாறே ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியை அடைந்து சந்தோஷத்தைப் பெற்றார்.

सा हि तस्याभवत् पत्नी चाग्रसेनस्य भामिनी ।
पतिव्रता रूपशीलगुणोपेता कुलेन्दिरा ॥ ३ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் ஒரே ஒரு மனைவி மஹாராணி மாதவி ஆவாள். அவள் அழகாகவும், ஒழுக்கத்துடனும், நற்குணங்களுடனும், இந்திராணியைப் போன்றும், பதிவ்ரதையாகவும் இருந்தாள்.

परिचारैर्गुणैश्चैव प्रश्रयेण दमेन च ।
सर्वकामक्रियाभिश्च सर्वेषां तुष्टिमाददे ॥ ४ ॥

மஹாராணி மாதவி கடவுளிடத்தில் பக்தியும், அனைவரிடத்திலும் அன்புடனும், தன்னலமற்றும், மனதை கட்டுப்படுத்தியும் ரிஷிகளுக்கும் மக்களும் சேவைசெய்து அனைவருடைய சந்தோஷத்துக்கும் பாத்திரமானாள்.

श्वश्रूं परं सुसत्कारैः धर्मयुक्ता ह्यतोषयत् ।
तस्याः कामे व्रते सक्ता शुश्रूषाभिरता सती ॥ ५ ॥

நாகலோக அரசன் நாகராஜனின் புதல்வியான மாதவி தன்னுடைய மாமியாரின் உறவினர்களுக்கு எப்பொழுதும் நன்மையையே செய்தாள். தருமத்தைச் செய்து மகிழ்ந்தாள். விரதங்களை கடைபிடித்து பெரியோர்களுக்கும், கணவனுக்கும் மற்றும் அனைவருக்கும் பணிவிடை செய்து மகிழ்ந்தாள்.

तथैव प्रियवादेन नैपुण्येन शमेन च ।
रहश्चैवोपचारेण भर्तारं पर्यतोषयत् ॥ ६ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் தாய் வைதர்பியிடம் (தன்னுடைய மாமியாரிடம்) எப்பொழுதும் அன்பாகவும் பணிவிடை செய்தும் நற்பெயர் பெற்றாள். இரவு பகல் பார்க்காமல் தனது மாமியாருக்கு வேண்டியதைச் செய்து தனது கணவனை சந்தோஷத்தில் ஆழ்த்தினாள்.

स तस्यां नागकन्यायां कालेन महता नृपः ।
जनयामास सत्पुत्रानष्टादश कुलोद्वहान् ॥ ७ ॥

ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் இவ்வாறு வெகுநாட்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர். அந்தந்த காலத்தில் மாதவி கர்ப்பம்தரித்து 18 புத்திரர்களை பெற்றெடுத்தாள்.

विजयो विक्रमोऽजेयो ह्यनलो नीरजोऽमरः ।
श्रीमान् सुरेशो नागेन्द्रः सोमश्च धरणीधरः ॥ ८ ॥

गणेश्वरश्च सिद्धार्थोऽतुलोऽशोकः सुदर्शनः ।
अष्टादशैते लोकेशस्तेषां ज्येष्ठोऽभवद् विभुः ॥ ९ ॥

பதினெட்டு புத்திரர்களின் பெயர்கள் -1) விபு, 2) விக்ரமன், 3) அஜேயன், 4) விஜயன், 5) அநலன், 6)நீரஜன், 7) அமரன், 8) நாகேந்த்ரன், 9) ஸுரேசன், 10) ஸ்ரீமந்தன், 11) சோமன், 12) தரணீதரன், 13) அதுலன், 14)அசோகன், 15) ஸுதர்சனன், 16) ஸித்தார்த்தன், 17) கணேச்வரன், 18) லோகேசன். ஆக 18 புத்திரர்கள் ஸ்ரீஅக்ரஸேனருக்கும் மாதவிக்கும் பிறந்தனர்.

एकवर्षान्तरास्त्वेते परस्परहितैषिणः ।
तांस्तु संस्कृत्य विधिवत् चकाराध्यापनं गुरुः ॥ १० ॥

ஒவ்வொரு வருடம் இடைவெளிவிட்டு ஒவ்வொரு குழந்தையும் பிறந்தது. அவர்களுக்கு உரிய நேரத்தில் ஸம்ஸ்காரங்களும் வேதாத்யயனமும் குரு கார்க்யரின் மூலம் செய்யப்பட்டது. அனைத்து குழந்தைகளும் சிறந்து விளங்கின.

मनसाऽचिन्तयद् देवी सन्ति मेऽष्टादशात्मजाः ।
ममेयं परमा तुष्टिर्दुहिता मे भवेद् यदि ॥ ११ ॥

பதினெட்டு ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த மாதவி தனக்கு பெண் குழந்தை பிறந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் என மனதில் நினைத்தாள்.

कृतकृत्या भवेयं वै पुत्रदौहित्रसंवृता ।
अधिका सा हि नारीणां प्रीतिर्जामातृजा यदि ॥ १२ ॥

எதிர்காலத்தில் நான் ஆண் பிள்ளையுடனும் பெண் குழந்தையுடனும் மாப்பிள்ளை பேரன் போன்றஉறவினர்களுடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நான் இப்பிறவியில் அனைத்தையும் அடைந்துவிட்டேன். - ஓ சிறந்த மஹாராஜா ஜனமேஜயா - பெண்கள் எப்பொழுதும் மாப்பிள்ளையிடம் பாசத்துடன் இருப்பார்கள்.

ज्ञात्वाऽग्रसेनस्तत्कामं परं हर्षमुपागतः ।
पुत्रीं च जनयामास विख्याताम् ईश्वरीमिति ॥ १३ ॥

மாதவி பெண் குழந்தை வேண்டும் என நினைத்ததை ஸ்ரீஅக்ரஸேனர் வரவேற்றார். சில நாட்களில் கடவுளின் அருளால் மாதவி பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு ஈச்வரீ எனப் பெயர் சூட்டினர்.

सर्वे शास्त्रार्थकुशलाः गुणवन्तो यशोधनाः ।
शीलवन्तः पुण्यकृत्या महाभागा महाबलाः ॥ १४ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் மனைவியான மாதவியின் குழந்தைகள் அனைவரும் அனைத்து சாஸ்த்ரங்களையும் பயின்றனர். அவர்கள் நற்குணங்களுடனும் புகழுடனும் செல்வந்தர்களாகவும் ஒழுக்கத்துடனும் சிறந்தவர்களாகவும் திகழ்ந்தனர்.

शौर्यसेनः पञ्चपुत्रान् दक्षिणायाम् अजीजनत् ।
अनन्तनागकन्यायां ते वीराश्च महारथाः ॥ १५ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் சிறிய ஸஹோதரனான சௌர்யஸேனன் அனந்தநாகனின் மகளான தக்ஷிணியை மணந்தான். சில நாட்களில் சௌர்யஸேனனுக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் மிகவும் வீரத்துடன் திகழ்ந்தனர்.

वेदस्याध्ययनं कृत्वा ततः सुचरितव्रताः ।
जगृहुः सर्वमिष्वस्त्रमग्रसेनाजगद्धितम् ॥ १६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் சௌர்யஸேனர் ஆகிய இருவருடைய குழந்தைகளும் நன்றாக வளர்ந்தனர். மஹரிஷி கர்க்யரிடம் வேதத்தைப் பயின்றனர். ஸ்ரீஅக்ரஸேனர் வில் வித்தை அஸ்த்ரங்களை பிரயோகிப்பது அர்த்தசாஸ்த்திரம் ஆகியவற்றை அனைவரும் கற்றுக்கொடுத்தார்.

अग्रसेन उवाच

उद्भावनार्थं वंशस्य प्रिये कार्यं हि किं त्वया ।
त्वत्तोऽहं श्रोतुमिच्छामि तत् प्रभाषितुमर्हसि ॥ १७ ॥

இவ்வாறு நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக குழந்தைகள் வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தனர். ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியிடம் நாம் நம்முடைய வம்சத்தின் வளர்ச்சியைப் பற்றி சிந்திக்க வேண்டும் அதில் உன்னுடைய விருப்பத்தை தெரிவிக்கும்படிக் கூறினார்.

माधवी उवाच

कुले स्रोतसि सञ्छन्ने स्याद् जन्माऽपि सुदुर्ग्रहम् ।
स्ववर्णं वान्यवर्णं वा तच्छील शास्ति निश्चितम् ॥ १८ ॥

மாதவி கூறினாள் - ஓ அன்பாளவரே - தங்களுடைய என்னுடைய வம்சத்தைப் பற்றி அனைவரும் தெரிந்துகொள்வது கடினம். ஒருவருடைய நடவடிக்கையையும் இயற்கையையும் பார்த்துதான் அவருடைய வம்சத்தை தீர்மானிக்கமுடியும்.

व्याघ्रश्चित्रो यथायोनि पुरुषः संनियच्छति ।
तथैव सदृशो रूपे मातापित्रोर्हि जायते ॥ १९ ॥

ஓ அன்பாளவரே - சாதாரண விலங்கு புத்தோலை அணிந்தால் கூட புயினுடைய குணங்களை அடைந்து விடுகிறது. அவ்வாறு ஒரு வம்சத்தின் அம்மா அப்பாவின் குணங்களையே அதில் பிறக்கும் குழந்தைகள் அடைகின்றன.

आख्यायते नाम जनो हि कर्मभिः
शुभाशुभैः शीलकुलैर्गुणैश्च ।
प्रणष्टमप्याशु गुणं कुलीनं
स्वकर्मतः स्वां प्रकृतिं लभन्ते ॥ २० ॥

ஓ அரசரே - ஒரு மனிதனுடைய நற்செயல்களாலும் தீய செயல்களாலும் குணங்களாலும் வம்சத்தாலும் தான் அவனை

இவ்வுலகம் அறிகிறது. ஒருவன் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருந்தால் அவன் உயர்ந்த இடத்தை அடைகிறான். மேலும் அந்த குடும்பத்தின் உயர்வால் அவன் நற்குணங்களை பெற்று நல்ல இடத்தை அடைந்து மகிழ்கிறான்.

कुलीना स्यात् सवर्णैव भार्या नान्या कथंचन ।
जातिमांतुर्विशेषेण पूर्वमुक्ता स्वयम्भुवा ॥ २१ ॥

ஓ அரசரே - இவ்வாறு சிறந்த மனிதனாக இருந்து அதே வம்சத்தில் இருக்கும் நற்குணங்களுடைய சிறந்த மனைவியை அவன் அடைதல் வேண்டும். அவர்களுக்குத் தான் அம்மா அப்பாவின் வம்சம் தொடரும். இவ்வாறு ப்ரம்மாவே முன்பு கூறியிருக்கிறார்.

स्ववर्णजाता भजतात्सवर्णम्
तथा सवर्णोऽपि भजेत्सवर्णाम् ।
जातौ विशेषोऽस्त्यपरो नरेन्द्र
विवाहवैशिष्ट्यकृतो विशिष्यते ॥ २२ ॥

ஓ நரேந்திர அரசரே - உத்தமமான ஆணுக்கும் உத்தமமான பெண்ணுக்கும் திருமணம் நடந்து அவர்களுக்கு பிறக்கும் குழந்தையே சிறந்து விளங்கும். இவை அனைத்தையும் நினைவில் வைத்துக்கொண்டு திருமணத்தை ஏற்பாடு செய்யவேண்டும்.

कुलोत्तमस्य सच्छीलं वर्धते श्रीः सुतेष्वपि ।
एवं ज्ञातिषु सर्वासु सवर्णः श्रेष्ठतां गतः ॥ २३ ॥

ஓ ராஜன் - இவ்வாறு அந்தந்த குலத்தில் அவரவர்களின் முறைபடி திருமணம் செய்து வம்சவிருத்தி ஏற்பட்டால் அந்த குழந்தை அக்குலத்தின் பெருமையையும் குணங்களையும் அழகையும் அடைந்து உயர்வை அடையும்.

धर्मस्य निश्चयस्त्वेष कुलवंशविवर्धनः ।
पितरोऽस्य हि तुष्यन्ति प्रहृष्टमनसः सदा ॥ २४ ॥

என் பிராணநாதரான அரசே - இது ஒவ்வொரு குலத்திலும் கடைபிடிக்கவேண்டிய தருமமாகும். ஆதலால் நாமும் தரும முறைபடி வேதத்தைப் பின் தொடர்ந்து நம்முடைய பிள்ளைகளுக்கு திருமணத்தைச் செய்வோமாக. இதனால் நம்முடையு முன்னோர்களும் மகிழ்ச்சியையடைவர்.

अनुकूला मनोर्वंश्या नागपुत्रीसमुद्भवाः ।
अतः पुत्रवधूनां त्वं सम्मतं ग्रहणं कुरु ॥ २५ ॥

தரும சிந்தனையுள்ள அரசே - என் விருப்பம் யாதெனில் - நாக வம்சத்திருந்து நம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்ற பெண்ணை தேர்தெடுப்போம். தாங்களும் பெரியோர்களால் மதிக்கப்படுவீர்கள். என்னைவிட தருமத்தை தாங்கள் நன்கு அறிவீர்கள். தாங்கள் என்னிடம் கேட்டதால் நான் இதை தாங்களுக்குக் கூறினேன்.

जैमिनिरुवाच

अग्रकन्याम् ईश्वरीं तां लेभे काशीकुमारकः ।
महेशो मोक्षमास्थाय ब्रह्मभूतोऽभवन्मुनिः ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாராஜா ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரின் புதல்வி ஈச்வரி காசிராஜனின் மகனான மஹேசை திருமணம் செய்துகொண்டாள். பிற்காலத்தில் அவர் சிறந்த மஹாமுனியாகி முக்தியடைந்தார்.

वासुकिर्यः ख्यातवीर्यो विधिज्ञः पन्नगाधिपः ।
प्रादात् नागकुमारीः स्वाः सुतेभ्योऽग्रस्य सद्विधीः ॥ २७ ॥

ஓ ஜனமேஜய ராஜன் - இவ்வாறு நாகலோகத்தில் மிகவும் பலசாயான சிறந்த அரசன் வாஸுகியின் மகள்களை ஸ்ரீஅக்ரஸேனரின் பிள்ளைகளுக்குக் திருமணம் செய்து கொடுத்து மகிழ்ந்தான். இவர்களுடைய திருமணம் வேத தரும முறைபடி நடந்து முடிந்தது.

विभुर्हि चित्रया युक्तः शुभया सोऽथ विक्रमः ।
अजेयः शीलया साकं कान्त्या च विजयस्तथा ॥ २८ ॥

स्वात्याऽनलो रेणुकया समायुक्तश्च नीरजः ।
नागेन्द्रः शिरया चैव शुशुभे क्षमयाऽमरः ॥ २९ ॥

सख्या सुरेशः श्रीमांश्च श्रीमालाख्यातया युतः ।
प्रियया धरणीध्रः सोमः शान्त्या कन्ययाऽतुलः ॥ ३० ॥

सावित्र्या च तथाशोको हेमवत्या सुदर्शनः ।
सिद्धार्थस्तारया युक्तो नागमण्या गणेश्वरः ॥ ३१ ॥

प्रभावत्या लोकपतिः सर्वऊढास्तथा विधाः ।
प्रकृतिप्रत्यया यद्वत् सभार्या अग्रनन्दनाः ॥ ३२ ॥

ஸ்ரீஅக்ரஸேனரின் பிள்ளைகளுக்கும் நாகலோக கன்னிகைகளுக்கும் பொருத்தமான திருமணம் நடந்தது. அதன் விவரங்களாவன - 1) விபுஸேனன் சித்திராவையும், 2) விக்ரமஸேனன் சுபாவையும், 3) அஜேயஸேனன் ஷீலாவையும், 4) விஜயஸேனன் காந்தியையும், 5) அநலஸேனன் ஸ்வாதியையும், 6) நீரஜஸேனன் ரேணுகாவையும், 7) அமரஸேனன் க்ஷமாவையும், 8) நாகேந்த்ரஸேனன் சிராவையும், 9) ஸுரசேனன் சக்தியையும், 10) ஸ்ரீமந்தஸேனன் ஸ்ரீமாலாவையும், 11) சோமஸேனன் சாந்தியையும், 12) தரணீதரஸேன் பிரியாவையும், 13) அதுலஸேனன் ஸுகன்யாவையும், 14)அசோகஸேனன் ஸாவித்ரியையும், 15) ஸுதர்சனன் ஹேமாவதியையும், 16) ஸித்தார்த்தன் தாராவையும், 17) கணேச்வரன் நாகமணியையும், 18) லோகபதி பிரபாவதியையும் திருணம் செய்து கொண்டனர்.

बासुकिरुवाच

सत्यमेतद् ब्रवीम्यद्य काङ्क्षितं पुरुषर्षभ ।
एतद् वसु धनं सर्वं विधिशः प्रतिगृह्यताम् ॥ ३३ ॥

வாஸுகி கூறினார் - ஆரியர்களில் சிறந்த ஸ்ரீஅக்ரஸேனரே தங்களுடைய ஆசைகள் அனைத்தும் இந்த திருமணங்களால் நிறைவேறியது. இளம் தம்பதிகளுக்கு மங்களங்கள் ஏற்படும். தங்களுடைய அரச மாளிகை வெகுவிரைவில் பேர குழந்தகளால் அலங்கரிக்கப்படும். அதலால் என்னுடைய பெண்களை ஏற்று என்னுடைய செல்வம் அனைத்தையும், விதிஷா நாட்டையும் தாங்களே எடுத்துக்கொள்ள வேண்டும் என வேண்டினார்.

अग्रसेन उवाच

नाहं प्रतिग्रहधनो ब्राह्मणः क्षत्रियोऽस्म्यहम् ।
न च मे प्रवणा बुद्धिः परवित्तविनाशने ॥ ३४ ॥

அக்ரஸேனர் கூறினார் - ஓ நாகபதியே - தாங்கள் கூறியது சிறந்தது. இருப்பின் தாங்கள் கொடுக்கும் செல்வத்தை வாங்கிக்கொள்வதற்கு நான் பிராம்மணர் இல்லை. நான் ஒரு அரசன். ஒரு அரசன் மற்றொரு அரசனுடைய செல்வத்தை அடைய முயற்சிக்கக் கூடாது. அது ஒரு குலத்தை அழியும்படிச் செய்துவிடும்.

जैमिनिरुवाच

तस्य तद् भाषितं श्रुत्वा पन्नगश्च परं मुदा ।
आनर्च चोत्तमार्घ्येण नागैरप्यभिनन्दितः ॥ ३५ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் வார்த்தைகளைக் கேட்ட நாகராஜன் வாஸுகி மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்து தருமத்தின்படியும் குல வழக்கின் படியும் அவர்களை பூஜித்து உபசரித்தான்.

वासुकिरुवाच

स्थानं च प्रतिपन्नोऽसि कर्मणा स्वेन निर्जितः ।
अचलं शाश्वतं पुण्यमुत्तमं ध्रुवमव्ययम् ॥ ३६ ॥

வாஸுகி கூறினார் - ஓ சிறந்த அரசரான ஸ்ரீஅக்ரஸேனரே - தாங்கள் தருமத்தையே வென்று தருமதேவதையாகவே ஆகிவிட்டீர்கள். தாங்கள் அழிக்கமுடியாத புண்யத்தையும் நிறந்தரமான உயர்ந்த இடத்தையும் அடைந்துவிட்டீர்கள்.

त्वया धर्मः श्रितो लोके कीर्तिर्श्चिवाक्षया तव ।
लोके स्वकर्मणा हि त्वम् आदर्शो मार्गदर्शकः ॥ ३७ ॥

மேலும் கூறினார் - மதிப்பிற்குரிய அக்ரஸேன அரசே - தாங்கள் உண்மையிலும் தரும வழியில் நடக்கிறீர்கள். தாங்கள் அனைத்து உலகத்தினராலும் அறியப்படுவீர்கள். தங்களுடைய புகழ் எட்டு திக்கையும் அடைந்து எதிர்வரும் காலத்திலும் அனைவராலும் பேசப்படுவீர்கள். தருமத்தை கடைபிடிப்பதற்கு தாங்கள் ஒரு எடுத்துக்காட்டு எனக் கூறினார்.

जैमिनिरुवाच

समीक्ष्य लोके बहुधा धारितं हितमाश्रुतम् ।
बहुश्रुतानां त्रैवर्गम् आख्यानं पावनं त्विदम् ॥ ३८ ॥

ஜைமினி கூறினார் - ஓ தர்மக்ஞ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து சாஸ்த்ரங்களையும், வேத வேதாந்தங்களையும் இந்து தருமத்தையும், அர்த்தம் மற்றும் காமம் போன்ற அனைத்தில் சிறந்தவராவார். அரசன் ஸ்ரீஅக்ரஸேனரின் சிறந்த குணங்களைப் பற்றி இவ்வுலகத்தில் பற்பல படைப்புகளைப் படைக்கலாம். இதைப் படிப்பதால் அனைவருக்கும் புண்யமும் மங்களமும் உண்டாகும்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
पद्विरचितम् श्रीमदग्रभागवते विंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபதாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்தொன்றாவது அத்யாயம்

கடவுள் ஈடுபாடு

जनमेजय उवाच

संशयो मे महाप्राज्ञ सुमहान् सागरोपमः ।
कथं क्षत्त्रियवंशोऽयं वैश्यधर्मा व्यजायत ॥ १ ॥

ஜனமேஜயர் கூறினார் - மஹாமுனி ஜைமினி ரிஷியே - எனக்கு ஒரு சிறிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறு இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் க்ஷத்ரிய வம்சமானது வைச்ய வம்சமாக மாறியது. இந்த வம்சம் மட்டும் தரங்குறைக்கப்பட்டதா?.

आग्रसेनात् कथं वंशात् क्षत्राद् वैश्योऽभ्यजायत ।
कौतुहलं मे महर्षे तन्ममाख्यातुमर्हसि ॥ २ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் எவ்வாறு க்ஷத்ரிய வம்சத்திருந்து வைச்யவம்சத்திற்கு மாற்றப்பட்டார். இவ்விஷயத்தை நான் தெரிந்துகொள்வதற்கு ஆசைப்படுகிறேன்.

जैमिनिरुवाच

सुमहानेष वै प्रश्नो यस्त्वया समुदीरितः ।
रहस्यमद्भुतं चापि पृष्टः स्म कुरुकेसरिन् ॥ ३ ॥

ஜைமினி கூறினார் - குருகுல வாசத்தில் சிறந்த ஜனமேஜயா - தாங்கள் மிகவும் சிறந்த கேள்வியைக் கேட்டுள்ளீர்கள். இது இராஜ வம்சத்தின் ரஹசியமாகும் என்றார்.

श्रूयतां परमं कर्म मानुषाणां सुखावहम् ।
एतदेव प्रशंसन्ति देवाश्च मुनयस्तथा ॥ ४ ॥

ஓ ஜனமேஜய மஹாராஜா - நான் இப்போது தேவர்களாலும், ரிஷி, முனி கணங்களாலும் போற்றபட்ட தரும சிந்தனையும் பணிவுடனும் இருந்த சிறந்த அரசர் ஸ்ரீஅக்ரஸேனரின் கதையைக் கூறுகிறேன் அமைதியாகக் கேட்கவும் என்றார்.

यदाऽन्वयस्तु सुमहान् स्वजातैः समवर्धत ।
तदा वंशधरो ह्यग्रः सुकीर्त्यै समचिन्तयत् ॥ ५ ॥

தர்மக்ஞ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய வம்சம் மேன்மேலும் மகன் பேரன் என விரிவடைவதைக் பார்த்து மகிழ்ந்து தன்னுடைய வம்சத்தை ஒரு தனித்த பெருமையுடன் அமைக்க வேண்டும் என நினைத்தான். அவ்வாறு இருந்தால் தன்னுடைய வம்சத்தின் ஒளி அனைத்து இடங்களுக்கும் பரவும் எனவும் நினைத்தான்.

गार्ग्य उवाच

तवाद्य हि समुत्पन्नो वंशो राजसुतादिकः ।
तं गोत्रय यथेच्छा वाक् रघुश्च सुमहामनाः ॥ ६ ॥

மஹரிஷி கர்க்யர் கூறினார் - ஓ அக்ரஸேனா - உன்னுடைய வம்சத்தில் உன்னைப் போன்ற பராக்ரமசா நூற்றுக்கும் மேற்பட்டோர் ஏற்பட்டுள்ளனர். இதற்கு முன்பு இக்ஷ்வாகுவும் ரகுவும் தான் இந்த சூரிய வம்சத்தை நிலை நாட்டினர். அதே போல் நீயும் தற்சமயம் உன்னுடைய குலத்தை (வம்சத்தை) தருமத்தின்படி தனிப் பெயருடன் அமைத்துக்கொள் என்றார்.

एष ते वंशकृन्नाम यज्ञः सत्पुरुषोचितः ।
श्रेयोऽर्थं यज तेन त्वं धन्या वंशस्पृहा तव ॥ ७ ॥

ஓ அக்ரஸேனா - ஒரு நல்ல மனிதன் இந்த வம்சகிருத் என்கிற மஹாயாகத்தைச் செய்தால் அவனுடைய மனதில் நினைத்ததை அடையலாம். ஆதலால் நீ இந்த வம்சக்ருத் என்கிற மஹாயக்ஞத்தைச் செய்து உனக்கு வேண்டிய அனைத்தையும் அடைவாயாக என்றார்.

जैमिनिरुवाच

ततस्तु शिल्पिनः सर्वे अमात्यप्रवराश्च ये ।
शौर्यसेनश्च स विभुः प्राज्ञो ह्यग्रं न्यवेदयन् ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - மஹரிஷி கர்க்யரின் ஆணைப்படி ஸ்ரீஅக்ரஸேனர் மந்திரிகளையும் ஸ்தபதிகளையும் மஹாயாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறினான். இதற்கு சௌர்யஸேனனையும் தனது பெரிய மகன் விபுஸேனனையும் மேற்பார்வையிடும்படி கட்டளையிட்டான்.

सज्जः क्रतुवरो राजन् प्राप्तकालं समाचर ।
भूमिः कृष्टा लाङ्गलेन तत आज्ञापय प्रभो ॥ ९ ॥

அவர்கள் கூறினார்கள் - ஓ மஹாராஜா - இந்த மஹாயாகத்திற்கு வேண்டிய அனைத்தும் தயாராக இருக்கின்றது. மஹாயாகத்தை ஆரம்பிக்கலாம். மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் மஹாயாகத்தைத் துவக்கி வைக்கவேண்டும் என்றனர்.

समागतायां राकायां चैत्र्याम् अग्रो व्यदीक्ष्यत ।
संस्थाप्य मण्डपं यज्ञे पूजयित्वा यथाविधि ॥ १० ॥

ஜைமினி கூறினார் - மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் மஹாயாகத்திற்காக நல்ல நாளான சித்ரா பௌர்ணமி அன்று தீக்ஷை எடுத்துக்கொண்டார். யாகத்திற்காக கட்டப்பட்ட மஹா மண்டபத்தில் மஹாயாகமானது துவங்க இருந்தது.

परस्परं भावयन्ति राजनस्ते समागताः ।
भोज्यैश्च विविधैः पेयैश्चन्दनागुरुधूपितैः ॥ ११ ॥

राङ्कवैर्भावसंयुक्तैः वासोभिर्मृगनाभिभिः ।
वराश्वगजदानैश्च यज्ञारम्भोऽप्यजायत ॥ १२ ॥

மஹாயாகத்தின் ஆரம்பத்திலேயே ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து அரசர்களையும் வரவேற்றார். அவர்களுக்கு பலவிதமான சிறந்த சாப்பாடுகளையும், குளிர்ந்த பானங்களையும் கொடுத்து உபசரித்தார். அனைவருக்கும் அகரு, சந்தனம் போன்ற வாசனைப் பொருட்களை உடம்பில் பூசியும் சந்தனத்தை நெற்றியில் அணிந்தும் மகிழ்ந்தார். அவர்களுக்கு சிறந்த மான் தோல்களால் பண்ணப்பட்ட மென்மையான பலவர்ண உடைகளையும் கொடுத்தார். ஸ்ரீஅக்ரஸேனரிடம் இருப்பதைப் போன்று குதிரைகளுடனும் யானைகளுடனும் அனைத்து அரசர்களும் மஹாயாகத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ततः सर्वे नृपास्तेन शौर्यसेनेन पूजिताः ।
समागत्य महात्मानम् अग्रसेनं ववन्दिरे ॥ १३ ॥

பற்பல நாடுகளிருந்து வந்திருந்த அரசர்களை ஸ்ரீஅக்ரஸேனரின் சிறிய ஸஹோதரன் சௌர்யஸேனன் வரவேற்று மகிழ்ந்தான். அனைத்து அரசர்களும் ஸ்ரீஅக்ரஸேனரை பாராட்டினர்.

हलैश्च कृष्ट्वा तत् क्षेत्रमिष्टिकाचयनादिकम् ।
चकार त्वरितो मन्त्रैरिष्टिकानां चतुश्शतैः ॥ १४ ॥

சரியான நேரத்தில் வேத கோஷம் முழங்க ஸ்ரீஅக்ரஸேனர் 400 செங்கல் கற்களைக் கொண்டு மஹாயாக மண்டபத்தில் யாகத்திற்கு வேண்டிய ஹோம குண்டத்தை ஏற்படுத்தினார்.

दक्षिणस्तस्य पक्षस्तु विहितो यज्ञवेदिभिः ।
चतुश्चत्वारिंशता च शतेनैकेन चैव हि ॥ १५ ॥

மஹாயாக மண்டபத்தின் வலது புறம் மற்றும் இடது புறத்தில் வேத பண்டிதர்கள் வேத கோஷம் முழங்குவதற்காக 124 செங்கற்களைக் கொண்டு மேடையை அமைத்தார்.

अनेनैवान्यपक्षो हि पुच्छं मध्ये शतेन च ।
एकविंशतियुक्तेन तस्य वै रचितं मुखम् ॥ १६ ॥

மஹாயாக மண்டபத்தின் நடுவில் 100 செங்கற்களைக் கொண்டு ஒரு மேடையும் அதன் முன் பகுதியில் 21 செங்கற்களைக் கொண்டு முகமும் ஏற்படுத்தப்பட்டன.

द्विगुणाभिश्चेष्टिकाभिः द्वितीया श्येनवत् चितिः ।
इष्टिकाभिस्तृतीया सा कृता तद्द्विगुणा पुनः ॥ १७ ॥

இவ்வாறு ச்யேன யாகத்தைப் போன்று இரண்டு மடங்கு செங்கற்களைக் கொண்டு இரண்டாவது யாக மேடையும், மேலும் இவ்வாறு மூன்று மடங்கு செங்கற்களைக் கொண்டு மூன்றாவது யாக மேடையையும் அமைத்தார்.

चतुर्थी पञ्चमी यावद् अष्टादशसुपर्णका ।
संजाता परिशिष्टैश्च वेष्टिता बहुभिस्तदा ॥ १८ ॥

இவ்வாறு நான்கு மற்றும் ஐந்தாவது யாக மேடையையும் அமைத்தார். ஒவ்வொன்றிலும் பிரதான ஹோம குண்டம், தக்ஷிணாக்னி ஹோம குண்டம், கார்ஹபத்யாக்னி ஹோம குண்டம் என மும்மூன்று ஹோம குண்டத்தை அமைத்து மொத்தமாக 18 ஹோம குண்டத்தை நிர்மாணம் செய்தார்.

अष्टादशद्वारयुतं मण्डपं चक्रिरे बुधाः ।
सुपताकं सुकुण्डानामष्टादशकसंज्ञितम् ॥ १९ ॥

மஹாயாகத்தைச் செய்யும் பிராம்மணர்கள் யாக்ஞிகர்கள் ச்ரௌதத்தில் கூறியபடி யக்ஞத்திற்கு வேண்டிய ஸம்பாராஹரண வேதிகளையும் ஏற்படுத்தினர். மற்ற பிராம்மணர்கள் யாக மண்டபத்தையும், யாக குண்டங்களையும் அலங்காரம் செய்தனர். 18 கொடிகளைப் போன்று ஒரே மாதிரியான 18 குண்டங்களை நிர்மாணம் செய்து அதற்கு தனித்தனி வாயில்களை அமைத்து சிறப்பித்தனர்.

चत्वारः खादिरा यूपाः षट् च पालाशजाः कृताः ।
पञ्च वैल्वाश्च रचिताः त्रयः श्लेष्मातकात्मकाः ॥ २० ॥

மஹாயாகத்திற்கு வேண்டி 18 யூப ஸ்தம்பங்களை (கம்பங்களை) ஏற்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டன. அவைகளில் 4 கம்பங்கள் காதிர மரத்தாலும், 6 கம்பங்கள் பலாச மரத்தாலும், 5 கம்பங்கள் பில்வ மரத்தாலும், 3 கம்பங்கள் ச்லேஷ்ம மரத்தாலும் பண்ணப்பட்டன. இந்த மரங்கள் அனைத்தும் யாகத்திற்குப் பயன்படக்கூடியவையாகும்.

चषालैर्भूषितास्तत्र वेदिकात्रितयं कृतम् ।
स्रुवाश्च स्थापिता रम्या जुहूनां शतमेव च ॥ २१ ॥

அழகான ஸம்பாராஹரண வேதிகை பண்ணப்பட்டு அதில் யாகத்திற்கு பயன்படுத்தக்கூடிய பாத்திரங்களும் நூற்றுக்கணக்கான ச்ருவம், ச்ருக், ஜுஹு, உபஜுஹு போன்றவை வைக்கப்பட்டிருந்தன.

आचार्यस्तु कृतो गार्ग्यो व्यासदेवः पितामहः ।
ऋत्विजश्च कृता दिव्या ऋषयो दीप्ततेजसः ॥ २२ ॥

பிறகு ஸ்ரீஅக்ரஸேனர் பிரதான (முதன்மை) ஆசார்யராக தன்னுடைய குலகுருவும், இராஜ புரோஹிதருமான கர்க்யரையும், அவருக்கு உதவிக்காக (ரித்விக்காக) வேதவியாசரையும் யாகம் செய்வதற்கு வரித்தார்.

कश्यपोऽथ वशिष्ठश्च गौतमोऽत्रिश्च जैमिनिः ।
भारद्वाजश्च शाकल्यो शाण्डिल्यः ऋषिभार्गवः ॥ २३ ॥

कौशिको मुद्गलस्ताण्ड्यः कौण्डिन्योऽऽश्वलकस्तथा ।
माण्डव्यगालवाद्याश्च कृतास्ते ऋत्विजः क्रमात् ॥ २४ ॥

இந்த பெரிய மஹாயாகம் மஹரிஷி கர்க்யரின் தலைமையில் மஹரிஷி காச்யபர், மஹரிஷி வசிஷ்டர், மஹரிஷி கௌதமர், மஹரிஷி அத்ரி, மஹரிஷி ஜைமினி, மஹரிஷி பரத்வாஜர், மஹரிஷி ஸாகல்யர், மஹரிஷி பார்க்கவர், மஹரிஷி சாண்டில்யர், மஹரிஷி

கௌசிகர், மஹரிஷி தாண்ட்யர், மஹரிஷி முத்கலர், மஹரிஷி கௌண்டின்யர், மஹரிஷி அச்வலகர், மஹரிஷி மாண்டவ்யர், மஹரிஷி காலவாத்யர், மஹரிஷி க்ரது ஆக 18 ரிஷிகளுடன் மஹாயாகம் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியது.

रक्षां विधाय सन्मन्त्रै रक्षोघ्नैर्द्वारपालकाः ।
वृतास्ते चाग्रसेनेन तस्मिन् यज्ञे मनोरमे ॥ २५ ॥

இந்த மஹாயாகத்தை ராக்ஷஸர்களிடமிருந்து காப்பாற்றுவதன் பொருட்டு வாயில் காப்பாலராக அரசன் ஸ்ரீஅக்ரஸேனர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீஅக்ரஸேனரின் ஆசைப்படி இந்த மஹாயாகம் சிறப்பாக நடக்க ஏற்பாடுகள் பண்ணப்பட்டன.

एते चान्ये च बहवो वृतास्ते पूजिताः क्रमात् ।
दीक्षितेन तदा राज्ञा माधवीसहचारिणा ॥ २६ ॥

பின்பு ஸ்ரீஅக்ரஸேனர் தனது பட்டத்து மஹாராணி மாதவியுடன் மஹாயாகத்தின் தலைவர் குலகுரு கர்க்யரையும் மஹாயாகத்தின் ரித்விஜர்களான அனைத்து ரிஷிகளையும், முனிகளையும் பூசித்தார்/வணங்கி வழிபட்டார்.

एवं गार्ग्यसमादिष्टास्ते भार्यासहिता मुदा ।
आनेतुं वह्निपं चाग्निं प्रस्थिता वदपल्लवाः ॥ २७ ॥

இவ்வாறு கர்க்யருடன் அவருடைய ஆணைப்படி அனைத்தையும் ஏற்பாடு செய்த ஸ்ரீஅக்ரஸேனர் மனைவியுடன் அனைத்தையும் கண்டுகளித்து மகிழ்ந்தான். கர்க்யரின் ஆணைப்படி மஹாயாகத்திற்காக அக்னி உற்பத்தி பண்ணப்பட்டது.

पठन्तस्तत्र मुनयो गायन्तो गीतकोविदाः ।
तत्र नृत्यं प्रकुर्वाणास्ते लोकाः प्रस्थिताः पुरः ॥ २८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மஹாராணி மாதவியின் முன்பு முனிகளும் ரிஷிகளும் வேத கோஷங்களைச்
செய்தனர். பாட்டுப் பாடுபவர்கள் மகிழ்ச்சியுடன் பாடி மகிழ்வித்தனர். நடனமாடத் தெரிந்தவர்கள் நாட்டியம் செய்து மகிழ்வித்தன

धृतच्छत्रा च सा यात्रा सधूपा चलचामरा ।
लभते राजसम्मानं वधूपुत्रसमन्विता ॥ २९ ॥

ஸ்ரீஅக்ரஸேனரும் மஹாராணி மாதவியும் சிம்மாஸனத்தில் அமர்ந்திருக்க இருபுறமும் சாமரக் கன்னிகைகள் சாமரம் வீச தூபம் கமழ அந்த மஹாயாக மண்டபத்திருந்து ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் நறுமணங்கள் வீச பிள்ளை பேரன் பேத்தி அனைவருடனும் நகரத்தைச் சுற்றிவந்தனர்.

गार्ग्येण मन्त्रितं चाग्निं पूजितार्घ्यं सुपुष्पकम् ।
ददौ नागसुतायास्तु करे काले महामना ॥ ३० ॥

மஹரிஷி கர்க்யர் வேத மந்திரங்களாலும் புஷ்பங்களாலும் அக்னியை வழிபட்டார். பின்பு மங்களகரமான கலசத்தில் தான் வழிபட்ட அக்னியை அரசன் ஸ்ரீஅக்ரஸேனனிடத்திலும் மாதவியிடமும் கொடுத்தார்.

जैमिनिरुवाच

मस्तके माधवी स्वे च कलशं साऽग्निमादधौ ।
पतिव्रतानां धर्मोऽयं सौख्यमाप्नोति सा यतः ॥ ३१ ॥

ஜைமினி கூறினார் - மஹாராணி மாதவி அந்த அக்னி கலசத்தை தன்னுடைய தலையில் வைத்துக் கொண்டு மஹாயாக வேதிக்குக் கொண்டுவந்து கொடுத்தாள். ஓ ஜனமேஜயா - பதிவ்ரதையான பெண்கள் தங்களுடைய குலம் தழைத்தோங்கவும் தன்னுடைய வம்சம் மகிழ்ச்சியுடன் இருக்கவும் இவ்வாறு அக்னி கலசத்தை தலையில் வைத்து வழிபடுவர் என்றார்.

धर्मकामार्थकार्याणि शुश्रूषा कुलसन्ततिः ।
दारेष्वधीनः स्वर्गश्च पितृणामात्मनस्तथा ॥ ३२ ॥

ஜைமினி கூறினார் - ஓ ராஜன் - தங்களுடைய குலம் தழைத்தோங்குவதன் பொருட்டு பெண்கள் பற்பல தருமங்களை கடைபிடிக்கின்றனர். அதனால் அவர்களுடைய வம்சத்தில் பித்ருக்களும் வாழ் நாள் கடைசியில் தானும் சுவர்கத்தையும் அடைகின்றனர்.

सहधर्मचरौ धात्रा सृष्टौ भार्यापती नृप ।
धर्ममर्थं च कामं च यशः स्वर्गतिरेव च ॥ ३३ ॥

ஒரு கனவனும் மனைவியும் எவ்வாறு யாகத்தின்போது தங்களுடைய தருமத்தைச் செய்ய வேண்டும் என பிரம்மா கூற அதை ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் கடைபிடித்தனர். இதனால் அவர்கள் தருமம் அர்த்தம் காமம் புகழ் சுவர்க்கம் (மோக்ஷம்) ஆகியவற்றை அடைகின்றனர் என்றார்.

कर्मणा मनसा वाचा नारी पतिमनुव्रता ।
इहामुत्र महाभागा सा दैवैरपि पूज्यते ॥ ३४ ॥

எந்த ஒரு பெண் தன்னுடைய கணவனை செயனாலும் மனதாலும் சொல்லாலும் பின் தொடர்கின்றாளோ அந்தப் பெண் இவ்வுலகிலும் மேல் உலகிலும் (சுவர்கத்திலும்) உயர்ந்த பதவியை அடைந்து தேவர்களாலும் போற்றபடுகிறாள்.

ततः प्रवृत्तो यज्ञोऽभूद् अग्रसेननिवेदनात् ।
आश्लेषे मासि वैशाखे सार्पर्क्षे गुरुवासरे ॥ ३५ ॥

गार्ग्यस्ततो जुहावाग्नौ विधिवच्चाहुतिं ददौ ।
महायज्ञे विधानेन राज्ञार्पितमथो हविः ॥ ३६ ॥

மஹரிஷி கர்க்யரின் ஆணைப்படி வைகாசி மாதம் வளர்பிறையில் (சுக்லபக்ஷத்தில்) வியாழக்கிழமையில் ஆயில்ய நக்ஷத்திரத்தில் மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் இந்த மஹா யாகத்தை ஆரம்பித்தார். ரிஷிகள் மந்த்ரங்களைக் கூற கர்க்யர் ஜுஹுவால் மஹாயாகத்தைச் செய்தார். அக்ரஸேனரும் அக்னியில் ஆஹுதியைச் செய்தார்.

इन्द्रादिदेवताभ्यश्च तत्तन्मन्त्रैर्यथाक्रमम् ।
ततो दिग्देवताभ्यश्च हविर्दत्तं यथाविधि ॥ ३७ ॥

घनसारं जुहावाग्नौ देवतानां पुरस्तदा ।
हवनेन जगत् प्रीतं बभूव सचराचरम् ॥ ३८ ॥

அந்தந்த மந்திரங்களை ஓதி முறைபடி இந்த்ராதி திக் தேவதைகளுக்கு நெய் புரோடாசம் போன்ற திரவியங்களைக் கொண்டு ஆஹுதிகள் கொடுக்கப்பட்டன. இதனால் இவ்வுலகத்திலுள்ள அனைத்தையும் காப்பாற்றும் அனைத்து தேவதைகளும் மகிழ்ந்தனர்.

एवं सप्तदशाहन्तु सत्रं पूर्णं समापितम् ।
दशाधिकाः सप्त यागाः कृताः पूर्णास्तदाऽभवन् ॥ ३९ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் இந்த மஹாயாகத்தை 17 நாட்கள் செய்தார். ஒவ்வொரு நாளும் இந்த 18 யாக குண்டத்திலும் வேள்விகள் சிறப்பாக செய்யப்பட்டது.

तद् लक्षयन्तं यज्ञेऽस्मिन् रुधिरं बलिकर्म च ।
तेजोविहीनं सदनं ग्लानिधिनं समाविशत् ॥ ४० ॥

ச்ரேஷ்டரான குலகுரு ஜனமேஜயா - யாகத்தில் அச்வத்தின் வபையையும் பசுவையும் ஹிம்சித்து ஆஹுதிகள் செய்வதைப் பார்த்த பின்பு (மிருகங்களைத் துன்புறுத்துவதைப் பார்த்த பின்பு) ஸ்ரீஅக்ரஸேனரின் மனது மிகவும் பாதிக்கப்பட்டது. இதனால் மஹாயாகம் முடிந்து ஸ்ரீஅக்ரஸேனர் அரசமாளிகையில் மிகவும் வருத்தத்துடனே இருந்தார்.

ततो दीनान् पशून् दृष्ट्वा ह्यग्रसेनस्तपोधनः ।
ततापं नायं यज्ञस्य विधिर्मङ्गलकारकः ॥ ४१ ॥

யாகத்திற்காக பிராணிகளை கொல்வதைப் பார்த்த ஸ்ரீஅக்ரஸேனர் அவைகளின் மேல் இரக்ககுணத்துடன் அன்பைக் கொண்டார். மஹாயாகத்தில் இவ்விதம் பிராணிகள் கொல்லப்படுவதை அவருடைய மனது ஏற்கவில்லை.

अपरिज्ञानमेतत् मे महान्तं धर्ममिच्छतः ।
नायं धर्मकृतो यज्ञो न हिंसा धर्म उच्यते ॥ ४२ ॥

தருமத்தைப் பின்பற்றி மஹாயாகம் செய்தாலும் இவ்வாறு பிராணிகளை கொன்று வன்முறையுடன் செய்யப்படும் யாகத்தை மறுத்தார். இது தருமத்துடன் செய்யப்படும் செயல் கிடையாது. ஒரு பிராணியை ஹிம்சை செய்வது தருமமற்றது என நினைத்தார்.

न चैच्छत् पुनरादानं यज्ञस्यान्यस्य कस्यचित् ।
पाण्डुवर्णो विवर्णश्च न यथावद् अजायत ॥ ४३ ॥

இந்த நினைவிலேயே இருந்த ஸ்ரீஅக்ரஸேனர் இதன் பிறகு யாகங்களைச் செய்யக்கூடாது என்ற முடிவிற்கு வந்தார். இவ்வாறு அவர் யாகத்தில் விருப்பமில்லாததால் அவர் ஒளியை (சோபையை) இழந்து முகம் வெளிர்த்துக் காணப்பட்டார். யாகம் செய்வதற்கு முன்பு அவர் எவ்வாறு மகிழ்ச்சியுடனும் புகழுடனும் இருந்தாரோ அவ்வாறு அவரால் இருக்க முடியவில்லை.

व्यवधाने समुत्पन्ने सोऽस्मिन् यज्ञसमागमे ।
उक्तं न प्रतिजग्राह गुरुभिर्दृढनिश्चयः ॥ ४४ ॥

இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் மனவருத்தத்துடன் இருந்ததால் தினமும் கடைபிடிக்கப்பட்ட மஹாயாகம் நடுவிலேயே நிறுத்தப்பட்டது. அவருடைய மனது யாகத்தில் கலந்துகொள்வதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆதலால் அவர் யாகத்தில் கலந்து கொள்ளவும் இல்லை.

ततः समेत्याग्रसेनं पर्यपृच्छन्मुनीश्वरः ।
ऋषिरुवाच
कथं हि विमुखो जातो यज्ञात् शोचसि किं सदा ॥ ४५ ॥

ஆதலால் அனைத்து ரிஷிகளும் ஒன்றுகூடி அரசன் ஸ்ரீஅக்ரஸேனரிடம் கூறினர். ஓ ராஜன் - தாங்கள் ஆரம்பித்த யாகத்தை முடிக்காமல் எவ்வாறு தாங்களே யாகத்திற்கு வரமாட்டேன் என்ற முடிவிற்கு வந்தீர்கள்?. இவ்வாறு ஆரம்பித்த ஒரு யாகத்தை முடிக்காமல் இருப்பது தங்களுக்கு நல்லதல்ல என்றனர்.

अलौलुप्याऽऽगमं कृत्स्नं विविधैर्याज्ञिकैः कृतम् ।
यथाऽऽगमं यथाशास्त्रं यथाकार्यं तथा कृतम् ॥ ४६ ॥

ரிஷிகள் கூறினர் - தருமத்தை அறிந்த ஸ்ரீஅக்ரஸேனா - சிறந்த யாகத்தைச் செய்யும் யாக்ஞிகர்களுடைய பெரிய முயற்சியால் தான் இந்த யாகம் துவங்கப் பெற்றது. தருமத்திலும் ச்ரௌதத்திலும் கூறியபடித் தான் இந்த மஹாயாகம் செய்யப்படுகிறது. இதை இவ்வாறு தான் செய்யவும் வேண்டும்.

पूजार्हां पूजिता ह्यत्र विधिवच्छास्त्रचक्षुषा ।
मन्त्रपूर्वं हुतश्चाग्निर्दानं दत्तममत्सरम् ॥ ४७ ॥

ஓ ராஜன் - தருமத்தில் கூறியபடி வேதம் ஓதுபவர்களும் அவரவர்களின் கடமையைச் செய்தனர். மந்திரங்கள் மூலம் நாங்கள் ஆஹுதிகளையும் செய்துள்ளோம். தாங்கள் வருத்தப்படாமல் இந்த யாகத்தை முடிக்கவேண்டும் என்றனர்.

देवा हविर्भिः पुण्यैश्च रक्षणैः शरणार्थिनः ।
अनुक्रोशैस्तथा दानैराशीर्भिश्च पृथग् जनाः ॥ ४८ ॥

ஓ ராஜன் - அனைத்து தேவதைகளும் இந்த மஹாயாகத்தில் கொடுக்கப்பட்ட ஆஹுதிகளால் மகிழ்ச்சியை அடைந்துள்ளனர். மக்களும் இவ்வாறு அனைத்து திரவியங்களைக் கொண்டு மஹாயாகத்தைச் செய்துள்ளதால் மனம் மகிழ்ந்துள்ளனர்.

ज्ञातिसम्बन्धिनस्तुष्टाः शौचेन च नृपस्य नः ।
न्यूनं यदत्र तद् ब्रूहि सभायाम् ऋषिसन्निधौ ॥ ४९ ॥

ஓ ராஜன் - தாங்கள் இவ்வாறு உலக நன்மையின் பொருட்டு செய்த மஹாயாகத்தால் அனைவரும் மகிழ்ந்துள்ளனர். தங்களுடைய சகோதரர்களும் உறவினர்களும் மற்ற நாட்டு அரசர்களும் மிகவும் சந்தோஷத்தில் உள்ளனர். இந்த மஹாயாகம் முழுமையாக வெற்றியைப் பெற்றுள்ளது. இருப்பினும் தங்களுடைய மனது ஏன் இவ்வாறு அஞ்சுகிறது. எதுவாக இருந்தாலும் எங்களிடம் கூறுங்கள் என்றனர்.

सभागतैश्च पृष्टस्त्वं तत्त्वतो वक्तुमर्हसि ।
ऋत्विग्भिरिति पृष्टस्तैः दुःखस्याग्रोऽब्रवीत्कथाम् ॥ ५० ॥

ஓ ராஜன் - அனைத்து ரிஷிகளும் ஸபையில் ஒன்று கூடி ஸ்ரீஅக்ரஸேனரிடம் இவ்வாறு கேட்டவுடன் அவர் மிகவும் மன வருத்தத்துடன் கூற ஆரம்பித்தார்.

अग्रसेन उवाच

भवताऽनुगृहीतोऽस्मि नमस्ते मुनिसत्तम ।
कर्मणा मनसा वाचा सदाऽहं त्वामनुव्रतः ॥ ५१ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - நான் அனைவரையும் வணங்குகிறேன். மதிப்பிற்குரிய ரிஷிகளே, பிராம்மணர்களே தாங்கள் அனைவரும் என்னை மன்னித்துவிடுங்கள். தாங்கள் அனைவரையும் நான் செயல்களினாலும், மனதாலும், சொல்லாலும் மதிக்கிறேன். தாங்களைப் பின்பற்றி நடக்கிறேன்.

शृणुध्वं मनसा सम्यक् शंसतो मे ऋषीश्वराः ।
चिन्तनं चानुभूतं च यन्मयाद्भुतमुत्तमम् ॥ ५२ ॥

ஓ ரிஷிகளே - என்னுடைய மனதில் ஏற்பட்ட துயரத்தையும், அனுபவத்தையும் கூறுகிறேன். தாங்கள் தயவு செய்து அதை அமைதியுடன் கேளுங்கள் என்றார்.

अनिष्टं सर्वभूतानां मरणं नु महात्मकाः ।
न ह्यात्मनः प्रियतरं किञ्चिदस्तीति निश्चितम् ॥ ५३ ॥

ஓ ரிஷிகளே - மஹாயாகத்தின் பொருட்டு பிராணிகளை கொல்வது என்பதில் எனக்கு விருப்பமில்லை. அது எனக்கும் மற்றவர்களுக்கும் நன்மையைத் தராது. ஏனெனில் உயிர் வாழும் பிராணிகள் மகிழ்ச்சியுடன் இப்பூவுலகில் இருக்க வேண்டும் என்றார்.

प्राणदानात् परं दानं न भूतं न भविष्यति ।
तस्मात् प्राणिषु सर्वेषु दयावानात्मवान् भवेत् ॥ ५४ ॥

உயிர் வாழும் பிராணிகளுக்கு அவைகளின் பிராணனை காப்பாற்றுவதன் பொருட்டு உதவுவதே சிறந்த செயலாகும். அதுவே அவைகளுக்கு புதிதாக பிராணனை நாம் கொடுப்பதாகும். ஆதலால் அனைத்து பிராணிகளிடத்திலும் நாம் எப்பொழுதும் அன்புடன் இருக்க வேண்டும்.

ऋषिरुवाच

यज्ञार्थं पशवः सृष्टाः स्वयमेव स्वयम्भुवा ।
यज्ञश्च भूत्यै सर्वस्य तस्माद्यज्ञे वधोऽवधः ॥ ५५ ॥

ரிஷிகள் கூறினார் - ஓ ராஜன் - தாங்கள் கூறுவது அனைத்தும் உண்மையே. ஆனால் பிரம்மாவே மஹாயாகத்தின் பொருட்டு பசுக்களையும் குதிரைகளையும் உற்பத்தி பண்ணுவதாகக் கூறியுள்ளார். அந்த பசுக்களையும் குதிரையின் வபையையும் மஹாயாகத்தில் ஆஹுதிகளைச் செய்வதால் அந்த பிராணிகள் சுவர்கத்தை அடைந்து உயர்ந்த பதவியை அடைகிறது. அது பிராணிகளை கொல்வதாக ஆகாது என்றனர்.

ओषध्यः पशवो वृक्षास्तिर्यञ्चः पक्षिणस्तथा ।
यज्ञार्थं हि वधं प्राप्ताः प्राप्नुवन्त्युत्सृतीः पुनः ॥ ५६ ॥

மஹாயாகத்தில் பசுக்களையும், மரங்களையும், பக்ஷிகளையும் ஆஹுதிகளாகக் கொடுப்பதால் அந்த வம்சமானது தழைத்தோங்குகிறது. மேலும் அதனால் அவைகள் புண்ணியமான சுவர்க்கத்தை அடைகிறது என்றனர்.

मधुपर्के च यज्ञे च पितृदैवतकर्मणि ।
अत्रैव पशवो हिंस्या नान्यत्रेत्यब्रवीन्मनुः ॥ ५७ ॥

ஓ ராஜன் - ஜ்யோதிஷ்டோம யாகத்திற்காகவும் பித்ரு யக்ஞத்திற்காகவும் பசுக்களை கொன்று மதுபர்க்கம் கொடுக்கப்படவேண்டும். இதற்காக மட்டும் தான் பிராணிகளை ஹிம்சிக்கலாம் மற்றவைகளுக்காக ஹிம்சை பண்ணக்கூடாது என்று மனுவே தனது தருமத்தில் கூறியுள்ளார் என்றனர்.

या वेदविहिता हिंसा नियताऽस्मिंश्चराचरे ।
अहिंसामेव तां विद्याद्वेदाद्धर्मो हि निर्बभौ ॥ ५८ ॥

இவ்வுலகில் வேத முறைபடி செய்யும் தருமத்திற்காக (மஹாயாகத்திற்காக) பிராணிகளைக் கொள்ளலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இது அதர்மமாகாது. இதனால் அப்பிராணிகள் தனி சிறப்பை அடைகிறது என்றனர்.

कथं कृतस्त्वया विघ्नः यज्ञे यज्वा ह्यसि स्वयम् ।
आनुकूल्येन वेदस्य वर्तितव्यं सुखार्थिना ॥ ५९ ॥

ஓ ராஜன் - தாங்கள் யாக்ததைச் செய்துள்ளீர்கள். தாங்கள் தான் இந்த யாகத்திற்கு யஜமானர். தாங்கள் இவ்வித துயரத்திருந்து வெளி வரவேண்டும். தாங்கள் தருமம் மிகுந்த யாகத்தைச் செய்வதை விட்டு விட்டு தாங்களே வருத்தப்படுவது சரியல்ல. இது தங்களுக்கு நன்மை பயக்காது. மகிழ்ச்சியையும் நன்மையையும் விரும்புவோர் தருமத்தின்படி தன் கடமையைச் செய்வார்கள் என்றனர்.

निर्मर्यादस्तु पुरुषः पापाचारसमन्वितः ।
मानं च लभते सत्सु भिन्नचारित्रदर्शनः ॥६० ॥

ஓ ராஜன் - யார் ஒருவர் தங்களுடைய கடமையிருந்தும் தருமத்திருந்தும் மாறி செயல்படுகிறார்களோ அவர்கள் பாபத்தை அடைவர். மக்களிடத்தில் சிறந்தவர் என்ற பெயரை பெற்றாலும் முடிவில் துயரத்தையே அடைவர்.

जैमिनिरुवाच

गार्ग्यस्य नु वचः श्रुत्वा सोऽग्रसेनो महामनाः ।
उवाच परया सूक्त्या बुद्ध्यापि प्रतिपन्नया ॥ ६१ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு குலகுரு மஹரிஷி கர்க்யரின் உபதேசத்தைக் கேட்ட இராஜா அக்ரஸேனர் எவ்வித குழப்பமுமின்றி பதில் கூறினார். வேத வரிகளைக் கொண்டு உதாரணத்துடன் ஸ்ரீஅக்ரஸேனர் பேசினார்.

अग्रसेन उवाच

अनार्यस्त्वार्यसंस्थानः शौचाद्धीनस्तथाऽशुचिः ।
लक्षण्यवदलक्षण्यो दुःशीलो यो मया मतः ॥ ६२ ॥

மதிப்பிற்குரிய ரிஷிகளே - எவர் ஒருவர் மற்ற தார்மிக விஷயங்களை மனதில் சிந்திக்காமல் வேத தருமத்தையும் அதன் வழிமுறைகளை மட்டும் மனதில் கொண்டு அதன் வழி நடக்கின்றனரோ அவர்கள் 'அனார்யன்' எனப்படுவர். அவர்கள் ஆரியர்கள் அல்ல. அனாரியர்கள் எப்பொழுதும் ஒழுக்கமற்றவர்கள் ஆவர்.

योऽहिंस्यकानि भूतानि हिनस्त्यात्मसुखेच्छया ।
स जीवंश्च मृतश्चैव न क्वचित्सुखमेधते ॥ ६३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ மஹரிஷிகளே - பிராணிகளின் உயிர்களுக்கும் அவைகளின் ஆசையையும் நாம் நிறைவேற்றுவதை விட்டு விட்டு அவைகளை நாமே கொல்வது கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் நாம் இதற்கு சமாதானம் சொல்ல முடியாது. பிராணிகளைக் கொல்வது ஒரு பாவச் செயல். தருமத்தின்படி இந்த பாவச் செயலால் மனது மகிழ்ச்சியை அடைந்தாலும் முடிவில் அதற்கு காரணமானவர்கள் நரகத்தைத் தான் அடைவர்.

वृक्षांश्छित्वा पशून् हत्वा कृत्वा रुधिरकर्दमम् ।
यद्येवं गम्यते स्वर्गे नरके केन गम्यते ? ॥ ६४ ॥

ஓ சிறந்த மஹாமுனிவர்களே - ஒருவன் மரத்தை வெட்டுவதும், பிராணிகளைக் கொல்வதுமானச் செயலைச் செய்தால் அவன் 'ப்ருணஹத்தி' என்கிற பாபத்தை அடைகிறான். பிராணிகள் சுவர்க்கத்தை அடையும் ஆனால் கொல்பவர் நகரத்தைத் தான் அடைவார். இவ்வாறு அதர்மவழிச் செய்பவர்கள் எவ்வாறு சுவர்க்கத்தை அடையமுடியும்?.

किमसत्यो लोकवादः कोविदैः समुदाहृतः ।
त्रीण्येव व्यसनान्यत्र कामजानि भवन्त्युत ॥ ६५ ॥

मिथ्यावाक्यं महान् दोषः परस्त्रीगमनं परम् ।
तस्माद् गुरुतरा चैषा विना वैरं च रौद्रता ॥ ६६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ மஹாமுனிவர்களே- தயவு செய்து உங்கள் கருத்தைக் கூறுங்கள். தாங்கள் அனைவரும் தருமத்தில் கூறியதைக் கடைபிடியுங்கள் எனக் கூறுகிறீர்கள். ஆனால் எது உண்மை?. எது தவறு?. தர்மத்தில் மூன்று விஷயங்களை மட்டும் தான் கடைபிடிக்கக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. அவைகள் முறையே பொய் சொல்லக்கூடாது. மற்ற பெண்களை புணருதல் கூடாது. எதிரியல்லாதவர்களான திறமயற்றவர்களைகொல்வது கூடாது ஆகியனவாகும்.

निर्वैरं क्रियते मोहात् परप्राणिविहिंसनम् ।
क्षत्रियाणां कार्यमेतदार्तानामभिरक्षणम् ॥ ६७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - தன்னுடைய செயலுக்காகவும் தான் உயர்ந்த பதவியை அடைவதற்காகவும் பிராணிகள் கொல்லப்படுவதை நான் எதிர்கிறேன். மஹாயாகங்களைச் செய்வது க்ஷத்ரியர்களின் தருமமாகிலும் ஆதரவற்ற பிராணிகளைக் காப்பாற்றுவதும் க்ஷத்ரியர்களின் தருமமே ஆகும்.

ऋषिरुवाच

क्षत्रियाणां न दोषोऽस्ति क्वचिद् यद् न करिष्यसि ।
मिथ्याप्रणीते यज्ञाङ्गे प्रजानां संक्षयो ध्रुवः ॥ ६८ ॥

ரிஷிகள் கூறினர் - ஓ ராஜன் - க்ஷத்ரியர்களை பொருத்தவரையில் இது பாபச்செயல் கிடையாது. தாங்கள் ஆரம்பித்த இந்த மஹாயாகத்தை முறைப்படி முடிக்கவில்லை எனில் இதில் ஈடுபட்ட ரிஷிகளும்

யாக்ஞிகர்களும் தாங்களும் ஏன் இந்நாட்டு மக்களும் துயரத்தை அடைவர். முடிவில் அனைவரும் அழிந்துவிடுவர் என்றனர்.

अग्रसेन उवाच

त्याविद्धमिदमस्माभिः क्व च क्षात्रं तपः क्व च ।
कदर्यकलुषा बुद्धिर्जायते शास्त्रसेवनात् ॥ ६९ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஒன்றும் தெரியாத பிராணிகளைக் கொல்வது மூடத்தனமான தருமமாகும். கருணையுடன் பிராணிகளைக் காப்பதே சிறந்ததாகும். இதில் முதல் கூறப்படுவது அச்சமூட்டும் பாபம். இரண்டாவது சிறந்து போற்றும் தவமாகும். எவன் ஒருவன் சாஸ்திரத்தை மட்டும் பார்க்கிறானோ அவன் பார்வையில் புத்தி கூர்மையுள்ளவன் தீங்கு செய்பவனாகிறான். ஆதலால் சாஸ்த்திரம் மற்றும் கருணை இவை இரண்டில் சாஸ்திரத்திற்கு ஸேவை செய்வதை விட்டு கருணையுடன் இருப்பதே சிறந்தது. மஹாயாகத்திற்காக பிராணிகள் கொல்லப்படுவதைத் தடுத்து மனிதர்கள் பிராணிகளைக் காப்பாற்ற வேண்டும். நான் அஹிம்சை வழியில் பிராணிகளைக் காப்பாற்றி பொது 'புதிய' வழியைக் கடைபிடிக்கிறேன் என்றார்.

स्वशरीरमपि परार्थे यः खलु दद्यादयाचितः कृपया ।
स्वसुखस्य कृते च कथं प्राणिवधक्रौर्यमनुमन्ये ॥ ७० ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - சிறந்த ரிஷிகளே - கடவுளுக்கு அடுத்தபடியில் உள்ளது உயிர். மற்றவர்களுக்காக எனது உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளேன். அவ்வாறு நான் இருக்கும்போது என்னுடைய நன்மைக்காக எவ்வாறு மற்ற பிராணிகள் கொல்வதை அனுமதிக்கமுடியும்?. என்றார்.

अतीयात् सागरो वेलां हिमवान् वा हिमं त्यजेत् ।
लक्ष्मीश्चन्द्रादपेयाद् वा नापराद्धान्प्रहन्म्यहम् ॥ ७१ ॥

ஓ மஹரிஷிகளே - ஸமுத்ரங்கள் (கடல்) தன்னுடைய எல்லையைவிட்டு பொங்கிவந்தாலும், ஹிமயமலை தன்னுடைய பனிக்கட்டியை முழுவதுமாகக் கரைத்தாலும், சந்திரன் தனது ஒளியை முழுவதுமாக இழந்தாலும் நான் எந்த யாகத்திற்காகவும் அப்பாவிப் பிராணிகளைக் கொல்லமாட்டேன் எனக் கூறினார்.

क्षुद्रैर्नृशंसैर्लुब्धैश्च सेवितं पापकर्मणि ।
त्यजाम्यहं क्षात्रधर्ममद्यैवाधर्मसंहितम् ॥ ७२ ॥

சாஸ்திரத்தில் கூறியபடி க்ஷத்திரியர்கள் பிராணிகளைக் கொன்று அந்த பாபத்தின் மூலம் தான் யாகத்தைச் செய்ய வேண்டுமாகில் நான் அந்த க்ஷத்ரிய தருமத்தையும் வம்சத்தையும் விட்டுவிடுகிறேன்.

सत्यप्रतिश्रवाः सोऽहं वैश्यधर्मं नु पालये ।
प्रजानामानृशंस्यार्थं वैश्यं राज्यं व्रतोत्तमम् ॥ ७३ ॥

நான் என்னுடைய சுய நினைவுடன் கூறுகிறேன் இன்றுமுதல் நான் வைச்ய தருமத்தைக் கடைபிடிக்கப் போகிறேன். சிறந்த உத்தமமான வைசிய முறைப்படி என்னுடைய நாட்டையும், எனது மக்களையும் காப்பாற்றப் போகிறேன். வைச்யர்கள் அஹிம்சையான கருணையை முதல் தருமமாகக் கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.

वैश्याश्च लोकयात्रायै प्रजाः पालयितुं स्मृताः ।
अन्ये तानुपजीवन्ति प्रत्यक्षफलदा हि ते ॥ ७४ ॥

இந்த ஆக்ரேயத்தை வைச்ய தரும முறைப்படி காப்பாற்ற விழைகிறேன். மற்றவர்களும் இந்த முறைப்படி இராஜ்ய பரிபாலனம் செய்துதான் உயிர் வாழ்கின்றனர். இதனால் அவர்கள் உடனடி பலனையும் அடைந்துள்ளனர்.
(வைச்யர்களின் தருமம் யாதெனில் பயிரிடுவது, பசுக்களை காப்பது, வணிகம் செய்வது என நல்லதைச் செய்து அனைத்து மக்களையும் பிராணிகளையும் காப்பதாகும். நானும் அதன்படி நடந்து எனது அனைத்து மக்களையும் அதன்படி நடக்கவைக்கப் போகிறேன் என ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார்)

यदि न स्युस्तथा वैश्याः न भवेयुस्तथा परे ।
वैश्यभूतं कुलं मेऽस्तु धर्मोऽप्यस्य मनोभवेत् ॥ ७५ ॥

இவ்வுலகில் வைச்யர்கள் இல்லை என்றால் மற்ற பிராம்மண, க்ஷத்ரிய, சூத்ர வர்ணத்தவர்களும் உயிர்வாழ முடியாது. ஆதலால் எனது வம்சமும் வைச்ய வர்ணத்தில் வந்த வம்சமாகவே ஆகும் என்றார்.

सुमनोभिर्बलिं वैश्यो देवानामुपहारयेत् ।

दधिदुग्धमयं पुण्यं सुगन्धं प्रियदर्शनम् ॥ ७६ ॥

ஓ ரிஷிகளே - பசுவின் பால் செய்யப்பட்ட பொருட்களால் (பால், தயிர், நெய்) அனைத்து தேவதைகளுக்கும் நிவேதனங்கள் பிரசாதங்களைக் கொடுத்து மகிழ்விக்கப் போகிறோம். நறுமணங்களுடைய புஷ்பங்களால் தேவதைகளை பூசித்தும் வழிபடப்போகிறோம் என்றார். இதுவே வைசியர்களின் தருமமாகும் என்றார்.

ऋषयः उचुः

अद्य ते परितुष्टोऽस्मि सत्यमुक्तं त्वया वचः ।

सदृशं चानुरूपं च कुलकीर्तिविवर्धनम् ॥ ७७ ॥

ரிஷிகள் கூறினர் - ஓ அரசர் ஸ்ரீஅக்ரஸேனரே - தாங்கள் கூறிய உண்மையான வார்த்தையால் நாங்கள் மகிழ்ச்சியை அடந்தோம். இதுவே தங்களுக்கும், தங்கள் குலத்திற்கும் புகழைத் தரும் என்றனர்.

जैमिनिरुवाच

ऊचुर्दिष्ट्या समाप्तोऽयं क्रतुरष्टादशस्तव ।

ऋषयोऽथ जनाश्चापि तुष्टुवू राजसत्तमम् ॥ ७८ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் பேச்சுத் திறமையால் அனைத்து ரிஷிகளும் 18 நாட்கள் நடத்தப்படும் யாகத்தை முழுமையுடன் நிறைவு செய்தனர். ரிஷிகளும் முனிகணங்களும், மக்களும் மகிழ்ந்து அரசனைப் பாராட்டினர். மேலும் ஸ்ரீஅக்ரஸேனர் வைசிய தருமத்தை மேற்கொண்டது குறித்தும் மக்கள் மகிழ்ந்தனர். (இங்கு பார்க்கவேண்டியது என்னவென்றால் பதினெழரை கோத்ரங்கள் ஏற்கனவே இந்த லோகத்தில் இருந்தன. 18வதாக வைசிய கோத்ரத்தை ஸ்ரீஅக்ரஸேனர் ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது)

कुलीनमकुलीनं वा वीर धर्मज्ञधीमतः ।
चरित्रमेव व्याख्याति शुचित्वं न हि वर्णताम् ॥ ७९ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஒருவருடைய குலம் மட்டும் தருமத்தையும் அதர்மத்தையும் வீரத்தையும் படித்தவன் (புத்திமான்) என்பதையும் சிறப்பாகச் சொல்லவில்லை. ஒரு மனிதன் தான் எவ்வாறு ஒழுக்கத்துடன் நடந்துகொள்கிறான் என்பதைப் பொருத்தே அந்த (குலம்) வர்ணமும் உயர்வை அடைகிறது என்றார்.

अग्रसेन उवाच

अहिंसा सर्वधर्माणामिति श्रेष्ठानुशासनम् ।
यदहिंसं कर्म भवेत् तत् कार्यमिति विद्महे ॥ ८० ॥

மஹாயாகம் முடிவடைந்தவுடன் ஸ்ரீஅக்ரஸேனர் உறவினர்களுடனும் நாட்டு மக்களுடனும் மற்றும் அனைவரிடமும் பேசினார். அஹிம்சை தான் உயர்ந்த தருமம். அஹிம்சை தான் ஒரு மனிதனுடை மூச்சுக் காற்று என்று கூறினார்.

अहिंसेति प्रतिज्ञेयं यदि श्रेयः प्रपश्यसि ।
शक्यं बहुविधं कर्तुं भवताऽकार्यदूषणम् ॥ ८१ ॥

ஒருவன் உயர்ந்த பதவியை அடைய வேண்டுமாகில் அவன் அஹிம்சையை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். அனைவரும் இந்த அஹிம்சை முறையைக் கடைபிடியுங்கள் என்றார். இல்லையெனில் தாங்கள் அனைவரும் அதர்மத்தைக் கடைபிடிப்பவர்களாகவே கருதப்படுவீர்கள் என்றார்.

अहिंसा सर्वभूतानां नित्यमस्मासु रोचते ।
प्रत्यक्षतः साधयामो न परोक्षमुपास्महे ॥ ८२ ॥

எக்காரணம் கொண்டும் பிராணிகளைக்கூட ஹிம்சை செய்யக்கூடாது. சொல்லாலும், காரியத்தாலும் அஹிம்சையையே மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கை முழுவதும் அஹிம்சையை ஒரு பிரதிக்ஞையாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதை நடைமுறையில் நடந்துகாட்டவேண்டும். அதன் முறைப்படி நடந்து அஹிம்சையின் உருவமாகவே மாறவேண்டும். இதை மற்றவர்களுக்காகச் செய்யாமல் செய்தால் மனதில் ஆனந்தமும் அமைதியும் தானாகவே ஏற்படும் என்றார்.

जैमिनिरुवाच

अग्राः सर्वे ततो जाता आग्रेयकुलजा नराः ।
प्रतिज्ञां धारयन्त्येते ममाहिंसापरं व्रतम् ॥ ८३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜ - ஸ்ரீஅக்ரஸேனரின் உபதேசத்தைக் கேட்ட அவருடைய மகன் மற்றும் அனைத்து மக்களும் யாக மண்டபத்தின் முன்பு கூடினர். அனைவரும் அஹிம்சையை முழு மனதுடன் கடைபிடிக்கப்போவதாக பிரதிக்ஞையை ஏற்று வாழ் நாளில் அதன்படி நடக்கவும் ஒப்புக்கொண்டனர்.

(நல்ல ஞானவானாகவும் ஆன்மீகத்தையும் தருமத்தையும் நிலை நாட்டிய ஸ்ரீஅக்ரஸேனர், பிராம்மணராக மாறினார், பின்பு வீரனாக திகழ்ந்து க்ஷத்ரியரானார், பின்பு அஹிம்சையை மேற்கொண்டு வைசியரானார். ஒரு மனிதன் தன்னுடைய வீரத்தாலும் முயற்சியாலும் தான் இவ்வாறு சிறந்து விளங்கமுடியும். இதற்கு எடுத்துக்காட்டாக பார்த்தால் விசுவாமித்ரர் பிறவியில் க்ஷத்ரியர் ஆனால் தன்னுடைய முயற்சியாலும் கடும் தவத்தாலும் ப்ரம்மரிஷி என்கிற பட்டத்தைப் பெற்றார். இவ்வாறு தான் ஸ்ரீஅக்ரஸேனரும் தன்னுடைய அறிவாலும், தியாகத்தாலும், திறமையாலும், தவத்தாலும், அஹிம்சையாலும் உயர்ந்த பதவியான தேவதா அம்சமான பிராம்மண க்ஷத்ரிய வைசிய வர்ணத்தை அடைந்தார்)

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते एकविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்தொன்றாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்திரெண்டாவது அத்யாயம்

வழிநடத்துதல்

जैमिनिरुवाच

अविशेषेण सर्वेषाम् अग्रसेनोऽकरोद्धितम् ।
प्रीयतां दीयतां मुक्त्वा कोशं मृदु सुभाषितम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா -மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் வைசிய தருமத்தின்படி மக்களிடம் எதையும் கேட்காமலேயே அவர்களுக்கு வேண்டியவற்றை செய்து அரசாட்சியை நடத்தி வந்தார். ஸ்ரீஅக்ரஸேனர் எப்பொழுதும் பிரியமாயும் சிரிப்புடனும் மக்களிடம் பேசி அவர்களுக்கு வேண்டிய பொருட்களையும் செல்வத்தையும் அளித்து அவர்களின் அன்பையும் பெற்றார்.

रक्षणाद् अग्रराजस्य सत्यस्य परिपालनात् ।
शत्रूणां क्षपणाच्चैव स्वकर्मनिरताः प्रजाः ॥ २ ॥

அவர் தன்னுடைய வாழ்நாளை மக்களுக்கு நன்மை செய்வதன் பொருட்டு உண்மையுடனும் மனிதனிடம் கருணையுடனும் நடந்துகொண்டு வாழ்க்கையைக் கழித்தார். மக்களும் அமைதியுடன் அவரவர்களின் வேலையில் தாங்களாகவே ஈடுபட்டு சிறந்து வாழ்ந்துவந்தனர்.

सर्वारम्भा सुप्रवृत्ता गोरक्षा कर्षणं कृषिः ।
वाणिज्यं च विशेषेण सञ्जज्ञे राजकर्म तत् ॥ ३ ॥

அவருடைய நாட்டில் பசுக்கள் பாதுகாக்கப்பட்டன, வணிகமும் வியாபாரமும் சிறப்பாக நடைபெற்றது. நாட்டில் அவரவர்கள் தங்களுடைய வேலையில் ஈடுபட்டு இருந்ததால் அனைவரும் பாதுகாப்பாக இருந்தனர்.

ज्वलिताम् अग्रसेनस्य श्रियं दृष्ट्वाऽथ दुर्नृपाः ।
व्यथन्ते स्म हि सामर्षाः जीवन्ति स्म सुदुःखिताः ॥ ४ ॥

ஆக்ரேய நகரத்தில் செல்வமும் வெற்றியும் புகழும் உயர்வாழ் மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இதைப் பார்த்த மற்ற அரசர்கள் பொறாமையுற்றனர். அவர்களுடைய மனதில் ஸ்ரீஅக்ரஸேனரிடம் வெறுப்பு ஏற்பட்டது.

विवर्धयन्ति स्मोद्वेगं ह्रासयन्ति च सुक्रियाः ।
व्यथयन्ति च तत्कीर्तिं राजानः पापचेतसः ॥ ५ ॥

இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஸ்ரீஅக்ரஸேனர் உயர்வடைவதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்ற அரசர்கள் துயரத்தை அடைந்தனர். ஒருவரையொருவர் புகழ்வதை விட்டு மனதில் வெறுப்பையும் பொறாமையையும் வளர்த்துக் கொண்டனர்.

द्विधाचित्ताश्च शोकार्ताः सर्वे ते चैक्यमागताः ।
अग्रसेनवधोपायं मन्त्रयामासुरेकदा ॥ ६ ॥

அனைத்து அரசர்களும் வெட்கத்துடன் ஸ்ரீஅக்ரஸேனரை இழிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு மந்திர ஆலோசனை சபையைக் கூட்டினர்.

नृपा ऊचुः

अयं कापुरुषो बालो ह्यग्रसेनो न बोधति ।
सर्वत्र सर्वदा क्षात्त्वं तस्माद्वेवं प्रभाषते ॥ ७ ॥

அரசர்களில் ஒருவர் கூறினார் - அக்ரஸேனர் ஒரு மூடன். தற்பொழுது தான் குழந்தை பருவத்தை முடித்து பெரியவனாகியுள்ளான். ஆதலால் தான் க்ஷத்ரிய வம்சத்தின் பெருமையை தெரிந்து கொள்ளவில்லை. க்ஷத்ரிய வம்சத்திற்கு இழிவை ஏற்படுத்திவிட்டான்.

वचनात् वर्तनात् क्लीबप्रकृतिः कुलपांसनः ।
यथान्धो ह्यन्धमन्वीयात् तथाभूता ऋषीश्वराः ॥ ८ ॥

அக்ரஸேனர் க்ஷத்ரிய வம்சத்தை அவமதித்தது மட்டுமல்லாது ஒழுக்கமற்றவராகவும் ஆகிவிட்டார் என ரிஷிகளின் முன்னிலையில் அனைத்து அரசர்களும் கூறினர். பற்பல ரிஷிகள் சமாதானம் கூறியும் அவர் இவ்வாறு நடப்பது சரியல்ல. இது எவ்வாறு இருக்கிறது என்றால் குருடன் மற்ற ஒரு குருடனையே இராஜாவாக பின் தொடர்வது போல் உள்ளது என்றனர்.

को हि धर्मिणमात्मानं ज्ञानाज्ञानविदां वरः ।
मन्येताज्ञो यथा मूर्खो वितथा धर्मवीक्षिता ॥ ९ ॥

தன் இஷ்டப்படி நடக்கும் அக்ரஸேனரை எவ்வாறு படித்தவன், உயர்ந்தவன், தர்மாத்மா என்றெல்லாம் கூறமுடியும். பொய்யான தர்மத்தை அறிந்த மூடன் என்று தான் கூறமுடியும் என்றனர்.

को हि धर्मोऽस्ति चाज्ञस्य का चाऽहिंसा वृथा क्रिया ।
यद् धारयति मोहाद् वा क्लीबत्वाद् वा न संशयः ॥१० ॥

ஓ அரசர்களே - இதன் பிறகு அக்ரஸேனரின் தருமம் என்பது என்ன?. அஹிம்சையைப் பற்றி அவர் என்ன கூறுவது. இது பொய்யானதாகும். அஹிம்சை என்கிற பெயரில் அவர் வைசியனாகிவிட்டார். பேராசையால் அவர் அடுத்த வர்ணத்தை பின் தொடர்ந்துள்ளார்.

हन्यतां दुर्मतिर्ह्यज्ञः पशुवत् साध्वयं नृपाः ।
सर्वैः समेत्य संरब्धैर्दह्यतां वा कटाग्निना ॥ ११ ॥

ஓ இராஜா வீரர்களே - இவ்வாறு கெட்ட புத்தியுடன் பசு மாதிரி இருக்கும் அக்ரஸேனரை நாம் கொன்று காட்டுத் தீயில் எரித்து விடுவோம் என்றனர்.

जैमिनिरुवाच

ततश्च मालवो राजा यतेन्द्रः प्रोक्तवानिदम् ।
युक्तं प्राप्तं रोहिताश्वप्रोक्तमग्रान् प्रभाषितम् ॥ १२ ॥

ஜைமினி கூறினார் - அதன் பிறகு மாலவ தேசத்தின் அரசர் யதேந்த்ரர் கூறினார். ஓ அரசர்களே - அக்ரஸேனரைப் பற்றி அரசர் ரோஹிதர் கூறிய அனைத்தும் உண்மையே. தற்கால சூழ்நிலைக்கேற்ப இந்த பங்கீடு நடந்துள்ளது என்றார்.

आग्रेयं निहनिष्यामो ग्रहीष्यामश्च तद् धनम् ।
निश्चयस्त्वेष वै क्षिप्रमाज्ञापयत वाहिनीम् ॥ १३ ॥

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஸ்ரீஅக்ரஸேனரின் நகரத்தை அழிப்போம். அங்கு பொக்கிஷத்தில் இருக்கும் செல்வத்தை நாம் அனைவரும் எடுத்துக்கொள்வோம் என அனைத்து அரசர்களும் கூட்டத்தில் முடிவு செய்தனர்.

परिवार्याग्रेयमस्य निवेशायोपचक्रिरे ।
वनानि समवेतानि सैन्यानां युद्धकाङ्क्षिणाम् ॥ १४ ॥

அனைத்து அரசர்களும் தங்களுடை சேனைகளுடன் அக்ரஸேனரின் நகரத்தைச் சுற்றியுள்ள காட்டில் போர் செய்வதன் பொருட்டு கூடாரம் அமைத்துத் தங்கினர்.

महत् सैन्यं स्थितं घोरं सशब्दं कालरूपधृक् ।
घोरैः किलकिलैः शब्दैः सिंहनादैश्च तर्जनैः ॥ १५ ॥

அக்ரஸேனரை வெற்றி கொள்வதன் பொருட்டு பற்பல சேனைகள் சேர்ந்தவுடன் சேனைகளின் ஓ (சப்தம்) அதிகமாகியது. அந்த இடத்தைப் பார்க்கும்போதே மரணம் ஏற்படும்போல் இருந்தது. சிங்கம் கர்ஜிப்பதைப் போன்று அனைத்துப் படைகளும் ஓசை எழுப்பின.

तैस्तदा वेष्टिता साग्रसेनमहात्मनः ।
नानाशस्त्रप्रहरणैर्मोहलोभैर्यथा जगत् ॥ १६ ॥

ஜைமினி கூறினார் - தர்மக்ஞ ஜனமேஜயா - இந்த தடவை எதிரிகள் அனைவரும் ஆக்ரேய நகரத்தின் செல்வத்திலும் இராஜ்யத்திலும் ஆசை கொண்டு பற்பல அஸ்த்ரங்களில் திறமையுள்ள வீரர்களைக் கொண்டு ஆக்ரேய நகரத்தைச் சுற்றி வளைத்தனர்.

जैमिनिरुवाच

शौर्यसेनस्तदोवाच ह्यग्रसेनमिदं वचः ।
विभुर्भवान् सुपुत्रोऽहं सबन्धुश्च महामतिः ॥ १७ ॥

पद्मकेतुर्महातेजा सुषेणोऽपि च कीर्तिमान् ।
एते चान्ये संस्थिताश्च सर्वाग्रेऽद्य व्रजाम्यहम् ॥ १८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அச்சமயத்தில் ஸ்ரீஅக்ரஸேனரின் இளைய சகோதரன் (தம்பி) கூறினான் - நானும், க்ஷத்ரிய வம்சத்தில் சிறந்த வீரரான தங்களுடைய பிள்ளை விபுஸேனனும், வெற்றிவாகைசூடும் பத்மகேதுவும் சண்டையின் நுணுக்கங்களில் சிறந்த சுசேஷவர்மனும் மற்றும் ஆயிரக்கணக்கான வீரர்கள் இங்கு தயாராக இருக்கிறோம். தாங்கள் ஆணையிடுங்கள் நம்மைச் சுற்றியுள்ள பேராசைக் கொண்டுள்ள எதிரிகளை கொன்றுவிடுகிறோம். இங்கு பாருங்கள் நாங்கள் தயாராக உள்ளோம்.

विभुसेन उवाच

शौर्यसेनवचः श्रुत्वा नमस्कृत्याब्रवीद् विभुः ।
कियत् सैन्यं ? युवामेव प्रलयोत्पत्तिकारकौ ॥ १९ ॥

விபுஸேனன் கூறினான் - மாமா சௌர்யசேனன் கூறியதைக் கேட்டு இளய அரசர் விபுஸேனன் தனது அப்பனையும் மாமானையும் வணங்கிக் கூறினன். ஓ அப்பா - இந்த ஆக்ரேயபுரியில் தாங்கள் தான் சிறந்த வீரர் என சரித்திரம் படைத்துள்ளீர்கள். அந்த வரிசையில் எவ்வளவு வீரர்கள் நம்மைச் சுற்றி இருந்தாலும் எனக்கு சமமாக ஆகிவிடுமா?.

गच्छेद् यो मुखवातेन तूलतुल्यबलः पुरः ।
तत्कुतः सुमहत् सैन्यं प्रज्वलन् वडवानलः ॥ २० ॥

மேலும் விபுஸேனன் கூறினான்- ஓ அரசர் ஸ்ரீஅக்ரஸேனரே - எதிரிகள் மிகவும் குறைவாகவே உள்ளனர். பஞ்சை ஊதித் தள்ளுவதைப் போல் நான் அவர்களை வென்றுவிடுவேன். இதற்கு ஏன் பெரிய ஸேனை தேவை?. என்றான்.

स्वल्पशीकरवर्षेण यद् रजः परिशाम्यति ।
कुतो भूरिवर्षणं तन्नाशाय स्यात्तु कोपतः ॥ २१ ॥

கோபத்தையுடைய எதிரிகளின் படைகளால் ஏற்படுத்தப்பட்ட புழுதிகள் தானாகவே சாந்தியை அடைந்தது. இது எவ்வாறு இருந்தது என்றால் வெப்பத்தின் அதிகத்தால் திடீரென பெய்யும் மழைச் சாரலைப் போன்று இருந்தது.

बद्ध्वाऽऽनयेऽद्य तान्राज्ञः आज्ञया भवतो ह्यहम् ।
एष गच्छामि सङ्ग्रामे नाथ हन्मि तवाहितान् ॥ २२ ॥

ஓ அப்பா - தாங்கள் எனக்கு அனுமதியளித்தால் நான் எதிரிகளின் கையைக் கட்டி உங்கள் எதிரில் அவர்களை நிறுத்திவிடுகிறேன். அவர்களுடன் நான் சண்டையிடுவதற்கு தயாராக இருக்கிறேன் என்றான்.

जैमिनिरुवाच

दध्मौ शङ्खं महातेजा रथेनातीव वेगवान् ।
पद्मव्यूहमदृष्टैकः प्रायाद् रणविशारदः ॥ २३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அச்சமயத்தில் மஹா தேஜஸ்வியான பலவானான சிறந்த வீரனான விபுஸேனன் யுத்தத்தின் பொருட்டு தன்னுடைய சங்கை முழங்கிக் கொண்டு படைகளுடன் பத்மவ்யூஹனிடன் வந்தான்.

स तेषां ध्वनिमाकर्ण्य कालकल्पं सुदारुणम् ।
भाविना च विनाशेन निगीर्णो वाक्यमब्रवीत् ॥ २४ ॥

உடனே விபுஸேனன் முன்பு எதிரி அரசன் திக்கஜஸேனன் தன்னுடை படைகளுடன் வந்து நின்று கொண்டு மிகவும் கடுமையான சொற்களுடன் பேசினான்.

दिग्गजसेन उवाच

त्यजैतद् विपुलं रम्यं राज्यं च कुलपांसन ।
क्षात्रधर्मेण ते हीनं जीवितं न सुखप्रदम् ॥ २५ ॥

திக்கஜஸேனன் கூறினான் - ஓ விபுஸேனா - நாங்கள் உன்னை இங்கிருந்து வெளியேற்றுவதற்கு முன் நீயே இந்த வம்சத்தை அழித்து வெளியேறிவிடு. ஏனெனில் உன்னுடைய வைச்ய வம்சம் பயனற்றது என்றான்.

विभुरुवाच

मूढाः वैश्यत्वमस्माकं न क्लीबत्वं तु पौरुषम् ।
कथं भीतोऽसि मे क्षान्तिं दर्शयामि पराक्रमम् ॥ २६ ॥

விபுஸேனன் கூறினான் - ஓ மூடனே - என்னுடைய வைச்ய வம்சமானது வீரமற்றதும் பயனற்றதுமல்ல. போர் ஆரம்பிப்பதற்கு முன்பே ஏன் இவ்வாறு பயப்படுகிறாய். என்னுடைய வீரத்தையும் பொறுமையையும் இந்த போரில் பார்ப்போம் என்றான்

सङ्ग्राम एव चेन्मान्यः दुर्मते ते न शान्तता ।
संनद्धं विद्धि मां रौद्रं कस्ते त्राताद्य विद्यते ॥२७ ॥

இங்கு கூடியிருக்கும் அரசர்களே - தாங்கள் அனைவரும் மூட நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள். நாங்கள் போர்புரிய தயாராக இருக்கிறோம். ஆனால் போர் நடந்தால் சாந்தி ஏற்படாது. தாங்கள் அனைவரும் உங்களுடைய கவசங்களை அணிந்து போருக்கு தயாராகுங்கள். யார் வெற்றியடைந்து யாரை வெளியில் அனுப்புகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

जैमिनिरुवाच

एवं वदन्तं समरे चाह्वयन्तं विभुं तदा ।
अवेष्टयत् सैन्यमेतद् रथवारणसङ्कुलम् ॥ २८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - இவ்வாறு விபுஸேனன் சொல்லிக்கொண்டிருக்கையில் எதிகள் அனைவரும் தங்களுடைய யானைப்படையுடனும் தேருடனும் அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

तृणैरावेष्टितो वह्निस्तानेव दहति ध्रुवम् ।
तद्वत् साधुर्महावीरस्तत् सैन्यमदहत् क्षणात् ॥ २९ ॥

வைகோலை நெருப்பு சூழ்ந்து கொண்டவுடன் எவ்வாறு அது பற்றி எரியுமோ அவ்வாறு மஹாவீரரான விபுஸேனன் எதிரிகளின் படைகளை அடித்து வீழ்த்தினான்.

सैन्यं प्रहतमप्रीतं भग्नं तत् परिपालितम् ।
चतुर्विधं सैन्यमेष जग्राह स्वनिकेतनम् ॥ ३० ॥

விபுஸேனன் பற்பல வீரர்களையும் அவர்களுடைய படையையும் கொன்று தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு போர்களத்தைக் கொண்டுவந்தான்.

बाणैर्विमोहितान् वीरान् स्वपुरे हर्षितोऽनयत् ।
दिग्गजप्रमुखा वीरा मोहिताः शरवृष्टिभिः ॥ ३१ ॥

விபுஸேனனின் திறமையான சண்டையால் திக்கஜஸேனனும் அவனுடைய படைவீரர்களும் மயங்கி விழுந்தனர். அவர்கள் அனைவரையும் ஆக்ரேயபுரிக்கு கட்டி இழுத்துவந்தான்.

स आनयामास विभुः तदवस्थं च दिग्गजम् ।
स चाब्रवीत् शौर्यसेनं राजा नः कथ्यतामिति ॥ ३२ ॥
आग्रेयं दासभावेन गतोऽहं पापचेतनः ।

ஹ. விபுஸேனன் திக்கஜஸேனனையும் அவனுடைய படை வீரர்களையும் நிராயுதபாணியாக ஸ்ரீஅக்ரஸேனரின் முன்பு நிறுத்தினான். தனது மாமா சௌர்யஸேனர் மூலம் அரசர் அக்ரஸேனரிடம் தோல்வியடைந்த அரசர்களையும் அவர்களுடைய வீரர்களையும் நமக்கு அடிமைகளாக்குங்கள் என்று கூறினான்.

जातस्याग्रस्य वंशेऽस्मिन् माधव्याश्च सुतस्य च ॥३३॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - நிச்சயமாக தனது மகன் விபுஸேனன் எதிரியை வென்று அவர்களை அழைத்து வந்து தங்களுடைய காலடியில் விழும்படிச் செய்வான் என்று ஸ்ரீஅக்ரஸேனரும் இராணி மாதவியும் நினைத்தனர். அதன்படியே விபுஸேனனும் செய்தான். ஏனெனில் ஸ்ரீஅக்ரஸேனரின் வம்சமானது போரில் எதிரிகளைக் கொல்வதை விட அவர்களை உயிர்பிழைக்கச் செய்து அவர்களுக்கு பாதுகாப்பை அளிப்பர். இதையே விபுஸேனனும் கடைபிடித்தான்.

या वै युक्ता मतिः कार्या सेयं प्रादर्शि मे विभो ।
तमुवाच ततो राजा रिपुं सप्रणयं वचः ॥ ३४ ॥

ஜைமினி கூறினார் - ஓ தர்மக்ஞ ஜனமேஜயா - விபுஸேனன் எதிரி அரசனை வென்று ஸ்ரீஅக்ரஸேனரின் காலடியில் வீழ்த்தியவுடன் ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் -

अग्रसेन उवाच

अदासो गच्छ मुक्तोऽसि मैवं कार्षीः क्वचित् पुनः ।
धिगस्तु त्वामिदं क्षात्रं कर्म धर्मविरोधकम् ॥ ३५ ॥

மஹாராஜா அக்ரஸேனர் கூறினார் - ஓ அரசர்களே - தாங்கள் அனைவரும் எங்கள் அடிமைகளாவீர்கள். நான் தாங்களை விடுவிக்கிறேன். இதன் பிறகு இவ்வாறு தவறு செய்யாதீர்கள். க்ஷத்ரியர்கள் உண்மையாலுமே உயர்ந்தவர்கள் அல்ல. தவறான மக்களை திருத்தி காப்பாற்றுவதைவிட்டு விட்டு அவர்களை அழிப்பது சரியல்ல என்றார்.

धर्मे ते वर्धतां बुद्धिर्मा चाऽधर्मे मनः कृथाः ।
साश्वः सरथसैन्यस्त्वं स्वस्ति गच्छेरितो भवान् ॥ ३६ ॥

ஓ ராஜன் - தாங்கள் அனைவரும் உங்களுடைய மனதில் தருமத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். அதர்மத்தைப் பற்றி சிந்திக்காதீர்கள். தாங்கள் அனைவரும் உங்களுடைய குதிரைகளையும் தேர்களையும் ஸேனைகளையும் எடுத்துக் கொண்டு செல்லுங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும் என்றார்.

दिग्गजसेन उवाच
क्षमस्व त्वं महाराज विज्ञातोऽस्यद्य भूभुजाम् ।
भवन्तमुपरुन्धानान् विराट् त्वं क्षन्तुमर्हसि ॥ ३७ ॥

திக்கஜஸேனன் கூறினான் - ஓ அரசர் ஶ்ரீஅக்ரஸேனரே - தாங்கள் அரசர் மட்டுமின்றி இவ்வுலகத்தைக் காக்கும் மஹாராஜா. நானும் மற்ற அரசர்களும் தங்களுடைய பரந்த மனதை அறியமாட்டோம். தாங்களுக்கு விருப்பமில்லாத போரை செய்துவிட்டோம். அதற்காக எங்களை மன்னித்துவிடுங்கள் என்றான்.

अग्रसेन उवाच
न मे वैरं प्रसरति क्षणार्धमपि हे नृपाः ।
यद् गतं तदतिक्रान्तं शोच्यं तत् केन हेतुना ॥ ३८ ॥

ஶ்ரீஅக்ரஸேனர் கூறினார் - என்னுடைய மனதில் ஒரு நொடிப் பொழுதுகூட யாரையும் பழிவாங்கும் நோக்கம் இல்லை. எது நடந்ததோ அதைக் குறித்து வேதனையடைகிறேன். எதனால் அவ்வாறு நடந்தது என யோசிக்கிறேன் என்றார்.

जैमिनिरुवाच

एवमुक्त्वा नरेशांस्तानाश्वास्याग्र उदारधीः ।
क्षन्तव्यमेवेत्युवाच वीतवैरा भवन्त्विति ॥ ३९ ॥

ஜைமினி கூறினார் - மஹாபண்டித ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து அரசர்களையும் சமாதானம் செய்து தாங்கள் அனைவரும் உங்களுடைய எதிரி மனப்பாங்கை விட்டுவிட்டு இரக்க குணத்துடனும் பொறாமையை ஒழித்து ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்து வாழுங்கள். அவர்கள் தான் உயர்ந்த தன்மையற்றவர்கள். அது தான் நகரத்துக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் நன்மை பயக்கும் என்றார்.

एवं वृतेऽथ लोकाश्च तस्मिन् पितृवदास्थिताः ।
न तस्य विद्यते द्वेष्टा ततोऽस्याजातशत्रुता ॥ ४० ॥

ஜைமினி கூறினார் - ஓ சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரின் உபதேசத்தைக் கேட்ட அரசர்கள் தலைகுனிந்துச் சென்றனர். அதன் பிறகு உலகில் ஸ்ரீஅக்ரஸேனரிடம் யாரும் பொறாமை கொள்ளவில்லை. ஆதலால் ஸ்ரீஅக்ரஸேனர் அஜாதசத்ருவாக ஆனார்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
षड्विरचितम् श्रीमदग्रभागवते द्वाविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்திரெண்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்திமூன்றாவது அத்யாயம்

சமத்துவம்

जैमिनिरुवाच

श्रुतस्ते ह्यग्रसेनस्य सुकर्म जनमेजय ।
अतः परं यदभवत् शृणु विस्मयकारकम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - சிறந்த ஶ்ரீஅக்ரஸேனரின் அழகான சரித்திரத்தை இதுவரைக் கேட்டாய். இதன் பிறகு அவர் அனைவரும் வியக்கத்தக்க ஆச்சரியமான பற்பல விஷயங்களைச் செய்தார். அவற்றை சொல்லுகிறேன் கேள்.

एकदा बन्धनस्थं तं शकुन्तं द्विजसत्तमम् ।
अग्रसेनोऽब्रवीद् वाक्यं पूर्ववृत्तमनुस्मरन् ॥ २ ॥

ஒரு நாள் ஶ்ரீஅக்ரஸேனர் அரண்மனையிருக்கும் சிறைச்சாலையை பார்வையிட்டார். அங்கு இருந்த பிராம்மணன் சகுந்தனைக் கண்டார். சகுந்தனைப் பார்த்தவுடன் அவருக்கு பழைய கதைகள் நினைவுக்கு வந்து அவனுடன் பேசத் தொடங்கினார்.

अग्रसेन उवाच

किं त्वया किल्बिषं मित्र कृतं कर्म सुदारुणम् ।
इमामवस्थां गमितो यत्त्वं मे वद साम्प्रतम् ॥ ३ ॥

ஶ்ரீஅக்ரஸேனர் கேட்டார் - ஓ நண்பனே - இந்த இளமையான வயதில் நீ எந்த மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்து சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறாய்? என்றார்.

किं कृतं निन्दितं कर्म प्राप्तस्त्वं कां गतिं कुतः ? ।
न शान्तिमधिगच्छामि पश्यंस्त्वां दुःखितं द्विज ॥ ४ ॥

ஓ நண்பனே - நீ தண்டனைக்கு உள்ளாகும்படியான எந்த குற்றத்தைச் செய்து ஏன் இந்த கஷ்டமான சிறை வாசத்தைச் செய்கிறாய்?. உன்னை பார்த்தபிறகு என்னுடைய மனது மிகவும் துயரமடைந்துவிட்டது. என் மனதில் அமைதி ஏற்படவில்லை என்றார்.

जैमिनिरुवाच

एवमुक्तः प्रत्युवाच शाकुन्तोऽग्रं तदा शनैः ।
ईषदुच्छ्वासयुक्तस्तु कृच्छ्रात् संस्तभ्य च स्वयम् ॥ ५ ॥

उत्ससर्ज गिरं मन्दां विवशां पाशपीडितः ।
यस्मादेवंविधं कर्म चाकरोत् स बुभुक्षितः ॥ ६ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் கூறியவுடன் மிகவும் மெல்ய குறல் சகுந்தன் பேச ஆரம்பித்தான். நான் என்னுடைய வருமையின் காரணமாக அதிகமான செல்வத்தை அடைவதற்கு கொடூரமான தவறை செய்தேன். நான் அதைச் செய்யவில்லை எனில் நான் உயிருடன் வாழ்வதற்கு உரிய உணவு, துணி போன்றவற்றுடன் உயிர்வாழ முடியாது. என்னால் முடியாத நிலைமையில் நான் அதைச் செய்தேன் என்றான்.

शकुन्त उवाच

बाला भृशं क्षुधाक्षामाः यथाऽबाधन्त ते शवाः ।
छिन्नं वस्त्रं तु मत्पत्न्याः मां नाबाधत भो नृप ॥ ७ ॥

சகுந்தன் கூறினான் - ஓ மஹாராஜா அக்ரஸேனரே - என்னுடைய குழந்தைகள் உணவின்றி மிகவும் மெந்து போய் உயிர் பிழைப்பதற்கு அவதிக்குள்ளாகினர். என்னுடைய உறவினர்களும் என்னைவிட்டுப் பிரிந்துவிட்டனர். எனது மனைவியும் குழந்தைகளும் கிழிந்த பழைய அழுக்குத் துணியுடன் துயரம் அடைந்தது கூட என் மனதை பாதிக்கவில்லை.

दारिद्र्यानलसन्तापः शान्तः सन्तोषवारिणा ।
दारिद्र्यस्यापरा मूर्तिर्याञ्चा शीलकुठारिका ॥ ८ ॥

தாரித்ரமான இந்நிலமை என்னை நெருப்பு போன்று வாட்டியது. இருப்பினும் அந்த நெருப்பு மன நிறைவு என்கிற எண்ணத்துடன் மகிழ்ந்தது. இந்த தரித்ர நிலமையால் பிச்சை எடுப்பது என்பது பொருத்துக் கொள்ளமுடியாதது. பிச்சை எடுத்தால் என்னுடைய மரியாதையும் புகழும் எண்ணங்களும் கீழ் நிலையை அடைந்துவிடும். கடைசியில் என் நடவடிக்கையும் பாழடைந்துவிடும்.

अत्यन्तविमुखे दैवे व्यर्थे यत्ने च पौरुषे ।
मनस्विनो दरिद्रस्य मृत्युरन्यत्कुतः सुखम् ॥ ९ ॥

ஓ ராஜன் - எப்பொழுது கடவுள் மனிதனுக்கு எதிராக நடக்கிறாரோ அப்போது மனிதனுடைய முயற்சிகள் முழுவதும் வீணாகிறது. அச் சமயத்தில் அம்மனிதன் தாரித்ரியத்தால் மகிழ்ச்சியின்றி துயரத்தை அடைந்துவிடுவான்.

मनस्वी म्रियते कामं कार्पण्यं न तु गच्छति ।
अपि निर्वाणमायाति नानलो याति शीतताम् ॥ १० ॥

இந்த சூழ்நிலையில் மானமுடையவன் இறந்துவிடுவான். மானத்தை விட்டவன் பிச்சையெடுப்பான். ஆனால் அவன் துயரத்தை அடைந்து மன நிம்மதியின்றி தவிப்பான்.

वरं विभवहीनेन प्राणैः सन्तर्पितोऽनलः ।
यत्रैव हि याच्ञेयं जीवनं गर्हितं हि तत् ॥ ११ ॥

இவ்வுலகத்தில் ஒருவன் மானத்தைவிட்டும் அவமானத்துடனும் இருப்பதைவிட அவன் உயிருடன் நெருப்பில் விழுந்துவிடலாம்.

अन्यवृत्तिहरं नित्यं लोके दत्तं सुदारुणम् ।
कीर्तिलोभेन वा दद्यात् यो जीवेत् जीवयेच्च सः ॥ १२ ॥

ஓ ராஜன் - இவ்வுலகிலுள்ள செல்வந்தர்கள் நிறைய தருமத்தைப் பண்ணவேண்டும். செல்வம் இல்லாதவர்களுக்கு செல்வத்தைக் கொடுத்து உதவவேண்டும். இவ்வாறு செய்தால் உயிர் வாழாதவனும் உயிர் வாழ்வான்.

दारिद्र्याद् ह्रियमेति तत्परिगतः सत्त्वात्परिभ्रश्यते ।
निःसत्त्वः परिभूयते परिभवान्निर्वेदमापद्यते ।

निर्विण्णः शुचमेति शोकनिहतो बुद्ध्या परित्यजते ।
निर्बुद्धिः स्वयमेत्यहो कृपणतां सर्वापदामास्पदम् ॥ १३ ॥

ஓ மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரே - ஏழ்மை நிலையையடைந்த மனிதன் தன்னுடைய உயர்ந்த நிலையில் இருந்து கீழே தள்ளப்பட்டு தன்னம்பிக்கையையும் இழக்கிறான். மேலும் அவன் மக்களால் அவதிக்கப்பட்டு மனதில் துயரத்தை அடைகிறான். இந்த சூழ்நிலையில் ஒரு ஏழை அனைத்தையும் இழந்து பற்பல துன்பத்தையும் அடைகிறான்.

अस्वतन्त्रं हि मां राजन् क्षुधा यावदचोदयत् ।
तस्य तत्किल्बिषं लुब्ध विद्यते यदि किल्बिषम् ॥ १४ ॥

ஓ ராஜன் - நான் வேறுவழியின்றி பசியினால் என் நிலைமையை இழந்து இந்த கீழ்தரமான அதர்மத்தைச் செய்தேன். இந்த பெரிய பிழைக்கு நான் காரணமல்ல. என்னுடை சூழ்நிலையும் பசியும் தான் காரணமாகும்.

वास्तवं तन्मया प्रोक्तं समक्षं प्रस्तुतं तथा ।
अनुरूपं यदत्रान्यद् तद् भवान् कर्तुमर्हति ॥ १५ ॥

ஓ ராஜன் - இதுவரை நான் சொல் அனைத்தும் உண்மையானது. என்னால் அனுபவிக்கப்பட்டது. இதற்கு வேறு வழி ஏதேனும் இருப்பின் அதை தாங்கள் தயைகூர்ந்து செய்ய வேண்டுகிறேன் என்றான்.

அறியப்படவேண்டியது - சூழ்நிலையின் காரணமாகவே மனிதன் குற்றத்தைச் செய்ய தள்ளப்படுகிறான். சகுந்தன் தன்னுடைய சூழ்நிலையை ஸ்ரீஅக்ரஸேனரிடம் கூறினான். அரசரும் நீதியை ஆராய்ந்தார்.

जैमिनिरुवाच

इत्युक्तं तेन विप्रेण परिष्वज्य नरोत्तमम् ॥ १६ ॥

ஜைமினி கூறினார் - தன்னுடைய நண்பனான பிரம்மணன் சகுந்தனுடைய கதையைக் கேட்ட ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் அவனிடம் அன்பு கொண்டார்.

अग्रसेन उवाच

नानागसं त्वं पाशेन सन्तापयितुमर्हसि ।
सर्वात्मानं चिन्तय त्वं नाकुलेन्द्रियचेतनः ॥१७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் ஆழ்ந்து யோசித்த பிறகு தன்னுடைய பழைய நண்பனின் சூழ்நிலையைப் பற்றி நினைத்தார். தான் செய்த குற்றத்திற்கு சூழ்நிலையே தான் காரணம் என்பதை சகுந்தஸேனன் நன்கு தெரிந்து கொண்டுள்ளான். இல்லையேல் இவ்வுலகம் அறியாதவனை பழிவாங்கியிருக்கும். இந்த சம்பவம் ஸ்ரீஅக்ரஸேனரின் மனதை மிகவும் பாதித்தது.

अवृत्त्या क्लिश्यमानोऽपि वृत्त्युपायान् विगर्हयन् ।
प्रज्ञासम्भावितो वृत्त्या हीयमानेऽसि दुष्कृतः ॥ १८ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் இவ்வாறு நினைத்தார் - ஒரு மனிதனின் திறமையுடன் விளங்கினாலும் தன்னுடைய வாழ்க்கையில் வேலையில்லாமல் இருந்தால் அவனுடைய நிலைமை மிகவும் துயரத்திற்கு உள்ளாகிவிடும். அவன் பிச்சை எடுக்கமாட்டான். அதற்கு பதிலாக அவன் குற்றத்தைச் செய்கிறான்.

क्षम्यतां मुच्यतामेष द्विजो मित्रं हि मार्दवात्।
कस्मादहं न क्षमेय विप्रे कुर्यां न किं ? कुतः ? ॥ १९॥

மிகவும் எளிமையான பிராம்மணன் சகுந்தஸேனனை சிறையிருந்து விடுவியுங்கள். அவன் ஏன் என்னை மன்னிக்கமாட்டான்?. ஏனெனில் அவனுடைய குற்றம் தண்டிக்கத்தக்கதல்ல. நான் என்ன செய்வேன்?. இவ்வாறு தன்னுடைய மனதைக் கேட்டுக்கொண்டார் ஸ்ரீஅக்ரஸேனர்.

सकिल्बिषं विप्रमकिल्बिषं वा
कृतागसं धर्मविदस्त्यजन्ति।
जनो यदि ह्येष सकिल्बिषः स्यात्
नृपोऽपि तत्कारणतां प्रकल्प्यते ॥ २० ॥

நீதியைக் கூறும் அரசன் சொந்தக்காரன், தனக்கு வேண்டியவன் என பாகுபாடு செய்து நீதியைக் கூறக்கூடாது. எனது நண்பனை பாதுகாப்பதன் பொருட்டு சிறையிருந்து விடுதலை செய்யட்டுமா? அல்லது அவன் சிறையிலேயே இருக்கட்டுமா?. ஒருவன் குற்றம் செய்தால் அவன் செய்த குற்றத்தையும் அவனுடைய சூழ்நிலையையும் நீதிபதி நினைத்துப் பார்க்கவேண்டும். மக்கள் எதைச் செய்தாலும் அதற்கு காரணம் அரசரே ஆவார். அந்த மனிதனை காப்பதிருந்து அரசனான நான் தவறிவிட்டேன். என்னுடை மக்கள் மன்னிக்கமுடியாத குற்றத்தைச் செய்தால் அதற்கு காரணத்தை அறிந்தால் அந்த பழியும் என்னையே வந்தடையும்.

चिन्तयतो नालभ्यत तमेवार्थं सुखं क्वचित्।
तस्य चिन्तापरीतस्य द्विधा जातं मनस्तदा ॥ २१ ॥

இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் மிகவும் ஆழ்ந்து சிந்தித்து இப்பிரச்சனைக்கு தீர்வையும் நீதியையும் பற்றி யோசிக்கலானார். இதில் அவருக்கு குழப்பம் தான் ஏற்பட்டதே தவிர சரியான தீர்வு ஏற்படவில்லை.

गार्ग्य उवाच

शिष्टाचारे मनः कृत्वा प्रतिष्ठाप्य च सर्वशः ।
यामयं लभते वृत्तिं सा न शक्या ह्यतोऽन्यथा ॥ २२ ॥

கார்க்யர் கூறினார் - ஓ குழந்தாய் அக்ரஸேனா - நம்முடைய முன்னோர்களால் இதுவரை எவ்வாறு இதுபோன்ற பிரச்சனைகளில் முடிவு எடுக்கப்பட்டதோ அவ்வாறு சிந்தித்தால் அது உனக்கு தீர்வை ஏற்படுத்தும். மேலும் ஆழ்ந்த சிந்தனையில் ஏற்படும் உண்மையான ஞானம் தான் நன்மையை ஏற்படுத்தும். மற்றவை உனக்கு உதவாது என்றார்.

न यच्छन्ति परां बुद्धिम् आरम्भे न्याययुक्तयः ।
नावं धृतिमयीं कृत्वा नदीं दुर्गाणि संतरेत् ॥ २३ ॥

ஓ அக்ரஸேனா - எப்பொழுதும் உன்னுடைய மனதை சுத்தமானதாகவும் கட்டுப்பாடுடனும் வைத்துக்கொள். எந்த சூழ்நிலையிலும் என்ன நினைத்தாலும், எதைச் செய்தாலும் உன் உள் மனது எதைச் சொல்லுகிறதோ அதைச் செய்யவும். பூமியில் பற்பல நதிகள் ஓடுகின்றன. அதேபோல் இவ்வுலகில் உயிர் வாழ்பவர்களும், மரணத்தை அடைபவர்களும், நீதிமான்களும், அநீதியைச் செய்தவர்களும், பாபத்தையுடையவர்களும், தருமத்தை கடைபிடிப்பவர்களும் இருக்கின்றனர். இவர்களை சமாளித்து வெற்றியடைய உன்னுடைய கட்டுப்பாடான மனதும் செயலும் தான் முக்கியமாகத் தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் நீ உண்மையான நீதிபதியாக இருக்கமுடியும்.

प्रेक्षमाणा लोकयात्रां धर्ममात्महितं तथा ।
न्यायोपेतानि पुण्यानि तथा पापानि चिन्तये ॥ २४ ॥

ஓ சிறந்த அரசே - நீ எவ்வாறு மக்களுக்கு சிறந்த நீதியுடைய அரசனாகமுடியும்? நீ எவ்வாறு தருமத்தைக் காத்து ஆன்மீகத்தைப் வளர்க்கமுடியும்?. இந்த ஆன்மீகப் பாதையில் எந்த முடிவு லாபமானது?. இதற்கு உன் உடம்பில் வலிமையும் மனதில் தீர்க்க ஆலோசனையுமே சிறந்தது.

अथ त्वमेव जानासि न्यायवादान् सनातनान् ।
त्वमेव धर्मशास्त्रेषु सूक्ष्मेषु परिनिष्ठितः ॥ २५ ॥

ஓ அரசே - ஸனாதன தருமத்தையும் நியாயத்தையும் நீயே அறிவாய். தருமத்தையும் அதன் சூக்ஷ்மத்தையும் நன்கு புரிந்து கொண்டும் இருக்கிறாய். இவ்வாறு இருக்கையில் சகுந்தனைப் பற்றி நீயே தீர்மானித்து முடிவு எடுக்கலாம்.

जैमिनिरुवाच

ततः परिषदं सर्वामामन्त्र्य हितमुत्तमम् ।
उवाच चोचितमतिः धर्मोपितं हितं वचः ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனர் - தனது அரசவையில் கூடியிருந்தவர்களிடம் தன்னுடைய நாட்டில் மக்கள் எவ்வாறு வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள் என ஆலோசனை செய்தார். அரசாங்கச் செயல் முறைகளும் சட்ட திட்டங்களும் எவ்வாறு முறை படுத்தப்பட்டுள்ளது என்பதையும் விளக்கினார்.

अग्रसेन उवाच

असत्यपि कृते कार्ये नेह कर्म विलिप्यते ।
तस्माद्धाऽत्रैकहेतुः स, स्याद् दण्डः किं प्रयोजनः ॥ २७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - நாம் முதல் குற்றம் செய்பவனையும் அவனுடைய சூழ்நிலையையும் பார்க்க வேண்டும். உண்மைக்கு எதிராக ஒரு தண்டனையை அளித்தால் அது நம் கடமையாகாது. ஒருவன் அநீதியாக நன்மையையும் லாபத்தையும் அடைந்தால் நாட்டில் கெட்டவர்கள் அதிகமாகிவிடுவார்கள். அதை நாம் எவ்வாறு தீர்மானிப்பது. இவாவறு ஒரு அரசு இருந்தால் அதில் நீதிமன்றம் என்பது எதற்காக இருக்கவேண்டும்?.

यथाच्छायातपौ नित्यौ सुसम्बन्धौ निरन्तरम् ।
स्वकर्मप्रत्ययाल्लोके तथा सुकृतदुष्कृते ॥ २८ ॥

சூரியனும் அதனுடைய நிழலும் ஒன்றுக்கொன்று பிரியாமல் இணைந்திருக்கும். அதே போல் ஒருவனுடைய 'கர்மா' தான் இவ்வுலகில் அவனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் செய்கிறது.

अभयं सर्वभूतेभ्यो याच्ञाभिलषितं ददेत् ।
दत्तं दातारमन्वेति यद् दानं श्रेष्ठमुच्यते ॥ २९ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - அனைத்து பிராணிகளையும் காப்பாற்றுகின்றோம். அதேபோல் பிச்சை எடுப்பவர்களுக்கும் அவர்களுக்கு வேண்டியதை கொடுக்கவேண்டும். கொடுப்பவர் கொடுக்கவேண்டியதைக் கொடுத்தால் அந்த தானமே சிறந்தது.

अमित्रमपि चेद् दीनं शरणैषिणमागतम् ।
व्यसने योऽनुगृह्णाति स वै पुरुषसत्तमः ॥ ३० ॥

எதிரி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உன்னை சரணடைந்தால் நீ அவனை காண்டிப்பாக காப்பாற்ற வேண்டும். எவன் ஒருவன் துயரத்தில் இருக்கிறானோ அவனை காப்பதே சிறந்த மனிதனுக்கு அழகு என்றார்.

म्रियते याचमानो वा जीयते च ददत् सदा ।
आनृशंस्यं परो धर्मः याच्यते यत् प्रदीयते ॥ ३१ ॥

பிச்ச எடுப்பவர்கள் (யாசகர்கள்) இறந்தாலும் கொடுப்பவர்கள் தன் புகழுடன் வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். இடைவிடாத தருமமும் பொய் சொல்லாமையுமே சிறந்த தருமமாகும். அதைத் தான் இவ்வுலகம் வேண்டுகிறது எதிர்பார்க்கிறது.

कृशाय कृतविद्याय वृत्तिक्षीणाय सुव्रत ।
क्रिया नियमिताः कार्याः पुत्रैर्दारैश्च सीदते ॥ ३२ ॥

अयाचमानाः सर्वज्ञाः सर्वोपायैः प्रयत्नतः ।
ते रक्षणीया विद्वांसः सर्वकामसुखावहैः ॥ ३३ ॥

நன்கு படித்தவன் தன்னுடைய விதியாலும் கெட்ட வாய்பாலும் செல்வத்தை அடையமுடியவில்லை. ஆதலால் அவன் மிகவும் ஏழையாகவே இருக்கிறான். தன்னுடைய கௌரவத்தால் பிச்சை எடுக்கவும் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்களை இந்த சமூகமும் இந்நாடும் காப்பாற்ற வேண்டும் என்றார்.

भस्मच्छन्नाग्निवन्निस्स्वान् प्राज्ञान्नोद्वेजयेज्जनः ।
तदाऽऽशिषः समेषां स्युः बुध्द्येथास्त्वं प्रयत्नतः ॥ ३४ ॥

அப்படிப்பட்ட மனிதர்கள் மறைந்திருக்கும் நெருப்புக்குச் சமமானவர்கள். நாட்டில் அவர்கள் அதிகமானால் கெட்ட செயல் ஈடுபடுவர். அவ்வாறு ஒருவன் ஏழ்மையான நிலையில் தள்ளப்பட்டால் இந்த நாடு அவனை அறிந்து அவனுக்கு உதவிடவேண்டும் என்றார்.

विभुरुवाच

अयाचतः सीदमानान् किमुपायेन चार्चयेत् ? ।
एतदिच्छामि विज्ञातुं याथातथ्येन कथ्यताम् ॥ ३५ ॥

விபுசேனன் கேட்டான் - ஓ தந்தையே - ஒரு மனிதன் நன்கு உழைக்கிறான். ஆனால் அவனுக்கு அதற்குரிய சரியான சம்பளம் கிடைக்கவில்லை. அவனும் யாரிடமும் கேட்டவில்லை என்றால் அவனுக்கு நாம் எவ்வாறு உதவிடமுடியும். இவ்வாறு இருந்தால் நாம் என்ன செய்வது. எனக்கு விளங்கும்படிக் கூறவும் என்றான்.

अग्रसेन उवाच

यदि राष्ट्रे वसेयुस्ते पूजार्हाः स्युर्यथातथम् ।
वृत्तिमर्हन्त्यवक्षेपे त्वदन्यस्मान् ममात्मजात् ॥ ३६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார். ஓ குழந்தாய் - அவ்வாறு நம்முடைய நாட்டில் இருப்பின் அவர்கள் மிகவும் சிறந்தவர்கள் ஆவர். அவர்களை நாம் தெரிந்து கௌரவிக்க வேண்டும். இதை உன்னைவிட யார் செய்ய முடியும்?. அவர்களுக்கு உதவுவதைவிட அவர்களுக்கு சிறந்த ஒரு வேலையைக் கொடுத்தால் அதுவே சிறந்ததாகும் என்றார்.

अभिहारं याच्यमाहुरनीशस्यापि मृत्युताम् ।
श्रेयो ह्ययाचमानस्य दानमत्र न संशयः ॥ ३७ ॥

இப்பொழுது தெரிந்தது கொள்ளுங்கள் பிச்சை எடுப்பது என்பது வெறுப்பைத்தரும். ஆதலால் தான் அறிவில் சிறந்தவர்கள் பிச்சையெடுக்கமாட்டார்கள். அவர்கள் பிச்சையெடுப்பதைவிட மரணத்தையே பொருத்துக் கொண்டு வாழ்வர். அவர்கள் தனது சுயகௌரவத்தையே முதன்மையாகக் கொண்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

यथा पत्याश्रयो धर्मः स्त्रीणां लोके सनातनः ।
सदैव सा गतिर्नान्या तथाऽस्माकं प्रजाश्रयः ॥ ३८ ॥

ஓ குழந்தாய் - இவ்வுலகில் கணவனுடன் வாழும் பெண்களும், மற்ற பெண்களும் நம்முடைய சனாதன தர்மமாகிய கணவனுக்கு சேவை செய்வதையே முக்கியமாகக் கொண்டுள்ளனர். அதே போல் அரசனும் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும். அரசனுக்கு இதைவிட முக்கிய வேலை ஒன்றும் கிடையாது.

தெரிந்துகொள்ள வேண்டியது – மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய மகனுக்கு ராஜ தருமத்தை கூறினார். அதாவது மனைவி கணவனுக்கு பணிவிடை செய்ய வேண்டும் அதேபோல் கணவன் தனது மனவியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். தன் மனைவிக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத்து மகிழ்வூட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அவளும் இவனுக்கு பணிவிடை செய்து மகிழ்வாள். அரசன் மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் செய்வார் மக்களும் அரசனை மதித்து நடத்தல் வேண்டும். ஆக மொத்தம் அரசன் மக்களுக்காக சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும்.)

येषां भोज्यान्यपेक्षन्ते गृहे दाराश्च बालकाः ।
नाश्नन्ति विधिवत् ते च किं नु पापतरं ततः ॥ ३९ ॥

ஓ குழந்தாய் - ஒரு மனிதன் தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளுக்கு வேண்டிய சாப்பாடு மற்றும் வசதிகளைச் செய்ய முடியவில்லையெனில் அவன் அதனை நினைத்து வருந்தி பாபத்தை அடைகிறான். இந்த நிலையில் அவன் குற்றத்தைச் செய்கிறான் என்பதை நாம் தெரிந்து அதற்கு ஏற்ற தண்டனையைக் கொடுக்க வேண்டும்.

यदि ते तादृशः कोऽपि सीदेच्च क्षुधया जनः ।
अवृद्धिमेति तद्राष्ट्रं नरकं चाधिगच्छति ॥ ४० ॥

ஓ குழந்தாய் - நம் நாட்டில் இங்கு கூறியபடி யாராவது பசியுடன் இருப்பின் இதை நாம் தெரிந்து செயல்படவில்லை என்றால் நம்முடைய நாடு விருத்தியை அடையாமல் நாமும் நரகத்தையே அடைவோம்.

यत् किञ्चित् पुरुषः पापं कुरुते वृत्तिकर्शितः ।
तस्य पापस्य सर्वस्वं राजा विन्दति निश्चयः ॥ ४१ ॥

ஓ குழந்தாய் - ஒரு மனிதன் தன்னுடைய தொழில் பாபத்தைச் செய்தால் அதனால் ஏற்படும் பலனை (பாபத்தை) அவன் அடையமாட்டான். அதற்கு பதிலாக அந்த நாட்டின் அரசன் தான் நிச்சமாக (அந்த) பாபத்தை அடைவான்.

अजुगुप्संश्च विज्ञाय स भवान् वृत्तिकर्शितान् ।
उपच्छन्नं प्रकाशं वा वृत्त्या तान् परिपालयेत् ॥ ४२ ॥

ஆதலால் ஓ குழந்தாய் - நாம் இவ்வாறு வெட்கத்துடன் வெளியில் சொல்லாமல் வேலையில்லாமல் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை அறிந்து அவர்களுக்கு வேலையைக் கொடுத்து நல்ல வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். இது தான் அரசனின் கடமை என்று ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார்.

अपरेषां परेषां च परेभ्यश्चापि ये परे ।
कस्तेषां जीवितेनार्थस्त्वां विना बन्धुराश्रयः ॥ ४३ ॥

சிறியது, பெரியது, பெரியதை விட பெரியவை, அதைவிட மிகவும் பெரியவை என கூறிக்கொண்டே போனால் வாழ்க்கையின் முடிவில் என்ன இருக்கிறது?. அதாவது சிறியவன், பெரியவன், ஏழை, பணக்காரன் என்ற பேதம் இல்லாமல் ஒருவருடன் ஒருவர் உறவினர்களாக இருப்பதே சிறந்ததாகும்.

(குறிப்பு - மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் தனது மகனை துயரத்திருக்கும் மனிதர்களுக்கு வேண்டிய அனைத்தையும் உடனடியாகச் செய்யும்படிக் கூறினார். சூழ்நிலையின் காரணமாக தருமத்தைக் கடைபிடிப்பதாகக் கூறி துயரமுற்றிருப்பர். அவர்களுடைய கௌரவம் பாதிக்காதபடி அவர்களுக்கு உதவவேண்டும். தருமம் எதையும் எதிர்பாராமல் தருமத்தைச் செய்யும்.

सर्वोत्थानाय सश्रद्धं भ्रातृभावेन चावह ।
योगं क्षेमञ्च मन्वानः गृहीयुस्तेऽभिमानतः ॥ ४४ ॥

மிகவும் அக்கரையுடன் அவர்களை தெரிந்து அவர்களுடன் பிறந்த சகோதரனைப் போன்று உதவியைச் செய்ய வேண்டும். அவர்களிடம் அன்பைச் செலுத்தி இவ்வுலகத்திற்கு வருங்கால நலனை எதிர்நோக்கி இருக்கவேண்டும்.

(அதாவது இவ்வாறு நன்மக்கள் மனது புண்படாதபடி நடந்து கொள்ள வேண்டும். இந்த பிரச்சனை அனைத்து நாடுகளிலும் இருக்கின்றது. சிலர் செல்வந்தர்கள், சிலர் ஏழைகள், சிலர் வீரர்கள், சிலர் கோழைகள், சிலர் நன்கு படித்தவர்கள், சிலர் வாய்புடையவர்கள் என, இவ்வாறு அடி நிலைமையில் இருப்பவர்கள் சிலர் வாழ்க்கையில் மிகவும் கீழ்மட்டத்தை அடைந்து விடுகின்றனர். இதை முழுவதுமாக வெற்றி கொண்டால் தான் நம் நாட்டில் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க முடியும்.)

अग्रसेन उवाच

देयानि वृत्तिक्षीणाय पौरैरेकैकशः क्रमात् ।
गत्वा निष्केष्टिकां दद्युः जनः कुर्यान्नयाचनाम् ॥ ४५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ குழந்தாய் - நம்முடைய ஆக்ரேயபுரியில் இருக்கும் நவடைந்த மக்களுக்கு அவர்கள் கேட்காமலேயே நாம் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து விடுவோம் என்று கூறி அதற்காக ஒவ்வொருவரும் ஒரு ரூபாயும் ஒரு செங்கலும் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

குறிப்பு- துவாபர யுகம் முடிவடையும் சமயமாதலால் ஒரு ரூபாய் என்பது ஒரு தங்க காசு ஆகும். எதற்காக பணமும் செங்கல்லும் கேட்டார் எனில் -

1) எந்த மனிதன் நன்கொடை கேட்கவில்லையோ அவன் ஏற்கனவே அரசாலோ மற்றவர்களாலோ உதவியை அடைந்து விட்டான் என்பதாகும். இதை மக்களும் எளிதில் புரிந்துகொள்வர்.

2) செல்வந்தர்களும் வேண்டியவர்களுக்கு தானமாக தங்களிடம் இருக்கும் செல்வத்தையும் அல்லது பொருளையும் கொடுத்து உதவுவர். இதனால் கொடுப்பவர்களுக்கு துயரமில்லை வாங்கிக் கொள்பவருக்கும் துயரமில்லை. எது வேண்டுமோ அதை வாங்கிக்கொள்வர் என்றார்.

அறிவுரை -

அறிவுரை - இந்த சேவை மக்களிடம் நண்பனாக இருந்து கொண்டு நாட்டை முன்னேற்றுவதாகும். இந்த சபையில் அக்ரஸேனர் பேசியதன் மூலம் நாட்டின் நலன் காக்கப்பட்டது. சமூகசேவையையும் மக்களின் முன்னேற்றமும் தான் ஸ்ரீஅக்ரஸேனரின் தன் மனதில் வைத்துக்கொண்டு இருந்தார்.

एष ते विततं वत्स सर्वभूतकुटुम्बकम् ।
विशिष्टः सर्वयज्ञानां नित्यमत्र प्रवर्तताम् ॥ ४६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ குழந்தாய் - இவ்வாறு நம் வாழ்கையிலும் சமூகத்திலும் சம நோக்குடன் செயல்பட்டால் நூறு யாகம் செய்த பலனைவிட அதிகமான பலனையே தரும். என்னுடைய குழந்தைகளே நீங்கள் அனைவரும் இந்த கர்மயக்ஞத்தை உங்கள் வாழ் நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டும் என்றார்.

वत्सानेन प्रकारेण कुरु लोकहितव्रतम् ।
यत् करिष्यसि कल्याणं तत् ते लोके सुखावहम् ॥ ४७ ॥

ஓ என் நாட்டு மக்களே - நீக்கள் அனைவரும் என்னைப் போன்று இந்த கர்மயக்ஞத்தை கடைபிடித்தால் உங்களால் இந்த உலகமே நன்மையை அடைந்துவிடும்.

जैमिनिरुवाच

अग्रस्य वचनं श्रुत्वा विभुः सञ्छिन्नसंशयः ।
हर्षेण महता युक्तः सजनः सपुरोहितः ॥ ४८ ॥

ஜைமினி கூறினார் - குருகுல ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனரின் இந்த கர்மயக்ஞ வார்த்தைகளைக் கேட்டு மக்கள் குழப்பமின்றி தெளிவடைந்தனர். மகிழ்ச்சியுடன் அனைத்து மக்களும் நம் நாடு நம் குடும்பம் (வஸுதைவ குடும்பகம்) என வாழ்ந்தனர். இராஜ புரோஹிதர் கர்க்யருடனும் மற்றும் அனைத்து மந்திரிகளுடனும் ஸ்ரீஅக்ரஸேனர் கூடியிருந்து மகிழ்ந்தார்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
परिशिष्टम् श्रीमदग्रभागवते त्रयोविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்திமூன்றாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்திநான்காவது அத்யாயம்

விழிப்புணர்ச்சி

जैमिनिरुवाच

श्रद्धाना जितक्रोधा दानशीलानसूयव: ।
यथार्हमानार्थकरा आर्षा: करुणवेदिन: ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் நம்பிக்கையுன் ஒவ்வொரு வேலையிலும் ஊக்கத்துடனும், கோபத்தை வென்றவராயும், ஒழுக்கத்துடனும், தானத்தில் சிறந்தவராயும், பொறாமையின்றியும் எவையெல்லாம் ஒரு மனிதனுக்கு வேண்டுமோ அவை அனைத்தையும் அடைந்து கருணையுடன் 'ஆர்ஷ புருஷராக' சிறந்த மனிதராக திகழ்ந்தார்.

त्रस्तं विषण्णमुद्विग्नं भयार्तं व्याधितं कृशम् ।
हृतस्वं व्यसनार्तं च नित्यमाश्वासयन्ति ते ॥ २ ॥

ஓ ராஜா ஜனமேஜயா - பற்பல காரணங்களால் பயந்தவர்களுக்கும், பணமில்லாமலும் உடல் நிலை சரியில்லாதவர்களுக்கும், சொந்தக்காரர்களை இழந்தவர்களுக்கும், மனமுடைந்துபோனவர்களுக்கும், வியாதியிருந்து மீண்டுவராதவர்களுக்கும், திருடர்களால் அபகரிக்கப்பட்டு குடும்பத்தையும் இருப்பிடத்தையும் இழந்தவர்களுக்கும் நிறைய உதவிகளைச் செய்து அவர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு கொடுத்து இன்பத்துடன் வாழவைத்தார்.

धर्ममेवान्ववर्तन्त नित्यमेवानुमोदताम् ।
सदा हि वदतां धर्मं सदा चाप्रतिगृह्णताम् ॥ ३ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் தினமும் தருமத்தைக் கடைபிடித்து அதையே தன் வாழ்க்கையாகக் கொண்டிருந்தார். தினமும் தருமத்தைப் பற்றி பேசுவதும் வேண்டியோருக்கு உதவியையும் செய்து வந்தார்.

नित्यं दानं तथा दाक्ष्यमार्जवं चैव नित्यदा ।
उत्साहोऽथानहङ्कारः परमं सौहृदं क्षमा ॥ ४ ॥

सत्यं धृतिस्तथा शौचं कारुण्यं वागनिष्ठुरा ।
क्वचिदेष्वनभिद्रोहः प्रभवेद् जनमेजय ॥ ५ ॥

ஜைமினி கூறினார் - ஓ குருகுல வாசத்தில் சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் தினமும் தானம் இரக்க குணத்துடனும் நேர்மையுடனும், அஹங்காரமின்றியும், சஹோதரத்வத்துடனும், பொறுமையுடனும், உத்ஸாஹத்துடனும், சத்தியத்தையும், சஞ்சலமற்ற மனதுடனும் புத்தியுடனும் ஒழுக்கத்துடனும் உண்மையான வார்த்தைகளையும் மற்றவர்கள் மனம் துயரமடையாதபடியும் நடந்துகொண்டார்.

ततः कलिविपर्यासे मानुषाणां गुणक्षयात् ।
क्षीणो धर्मो युगान्ते तु कामक्रोधवशात्मनाम् ॥ ६ ॥

ஓ சிறந்த ஜனமேஜயா - துவாபர யுகத்தின் முடிவானதாலும் க யுகத்தின் ஆரம்பமானதாலும் மனிதர்களுடைய மனது நற்குணத்தி ருந்து மாற்றத்தை அடைந்தது. தருமம் அழிந்து அனைத்து மக்களும் ஆசைக்கும் கோபக்கும் அடிமையாகினர்.T.

(ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - கயுகத்தின் கொடுமையால் தருமத்தைக் கடைபிடித்த பரீக்ஷித்து கூட தவறு செய்யும்படியானது. க எப்பொழுதும் அதர்மத்தையே செய்ய விரும்புவான். ரிஷிகளைக்கூட மாற்றி மனிதனாகச் செய்யும் வ மையுடையவன் கபுருஷன்)

क्वचिच्चौरैः क्वचिच्छस्त्रैः क्वचिद् राजभिरातुरैः ।
परस्परभयाच्चैव बहवः शून्यसत्क्रियाः ॥ ७ ॥

தர்மக்ஞ ஜனமேஜயா - மனிதர்களுடைய மனதிலும் கபுருஷன் இடம்பிடித்துவிட்டான். எப்படி என்றால் நாட்டில் சில திருடர்கள் உருவானார்கள், சிலர் உதவியுடன் பயங்கரமான அஸ்த்ரங்களைப் பயின்றனர், சிலர் இராஜாவின் மனதைப் புண்படுத்தினர், ஒருவரைப் பார்த்து ஒருவர் பயந்தனர். இவ்வாறு எவ்வித நற்செயல்களின்றி நாடு இருண்டு இருந்தது.

गतदैवतसंस्थानाः हता विप्राः भयातुराः ।
तस्मिन् प्रतिभये काले क्षीणो धर्मो युगक्षये ॥ ८ ॥

ஹே தர்மக்ஞ மஹாராஜா - தேவதைகளின் அருகில் இருக்கும் பிராம்மணர்கள் தங்களுடைய செயல்களில் மாறுபட்டு நடந்தனர். அவர்கள் பணக்காரர்களாவதற்கு பெரிய கோவில்களையும், மடங்களையும், பாடசாலைகளையும் ஏற்படுத்தினர். கயுகமானதால் தருமம் குறைந்து அவர்கள் ஏற்படுத்தியதாலேயே அவர்களுக்கு பயமும் ஏற்பட்டது.

अपश्यन् निर्गतं धर्मं न च शौचमवर्तत ।
पुत्राः पितॄनत्यचरन् नार्यश्चात्यचरन् पतीन् ॥ ९ ॥

அந்த சமயத்தில் ஓ ஜனமேஜயா - நானும் பார்த்தேன் - தருமமும் ஒழுக்கமும் வளர்ச்சியின்றி குறுகிப்போய் இருந்தது. மகன்கள் அப்பாவையும் அம்மாவையும் மதிப்பதில்லை. அவர்களுடைய சொல் பேச்சைக் கேட்பதில்லை. கணவனின் எண்ணங்களுக்கு மாறாக பெண்கள் நடந்துகொண்டனர்.

तथा धर्मादपेता ये गर्हितैनेव कर्मणा ।
महतः प्राप्नुवन्त्यर्थांस्तेषां तत्राभवत् स्पृहा ॥ १० ॥

ஓ தர்மக்ஞ ராஜன் - அனைத்து வேலைகளும் தருமத்திற்கு எதிர்மறையாகவே நடந்தன. செல்வந்தர்கள் தருமச்செயல் நாட்டமின்றியே நடந்துகொண்டனர். அவர்கள் அதர்மமான வழியிலும் செல்வத்தை அடைந்தனர்.

कृतघ्नाः नास्तिकाः पापा निर्मर्यादा हतत्विषः ।
अप्रभुत्वे स्थिता वृद्धा प्रार्थयन्त्यन्नमात्मजान् ॥ ११ ॥

ஓ ஜனமேஜயா - அச்சமயத்தில் கபுருஷன் அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் புகுந்துகொண்டான். (அதற்கு உதாரணமாக பரீக்ஷித்தைக் கூறலாம்.). அதலால் பாபிகளையும், கருணையற்றவர்களையும், மரியாதையில்லாதவர்களையும், இரக்கமற்று கொல்பவர்களையும், பெரியோர்கள் மதிக்கப்படாதவர்களாகவும், தனது மகன்களிடத்திலே பிச்சை எடுப்பவர்களாகவும் உலகம் ஆகியிருந்தது.

धर्मो यथाऽभितो रुद्धः सर्वत्र भयदर्शनम्।
निरीक्ष्य निपुणं बुद्ध्या ऋषिः प्रोवाच साम्प्रतम्॥ १२॥

எந்த வேலையிலும் காரியத்திலும் தருமம் கடைபிடிக்கப்படவில்லை. அனைத்திலும் கோபமும் பயமுமே காணப்பட்டது. இவ்வாறு இருந்ததை பார்த்த ரிஷிகள் துவாபரயுகம் முடிந்து கயுகம் ஆரம்பமாகிவிட்டது என்றனர். அச்சமயத்தில் ரிஷி கர்க்யர் ஸ்ரீஅக்ரஸேனருக்கு உபதேசித்தார்.

गार्ग्य उवाच

एष सङ्क्रान्तिकालोऽयं अनुतिष्ठस्व शासनम्।
विनश्यन्तं भवान् धर्मं रक्षेत् नित्यम् अनुव्रतः॥ १३॥

கர்க்யர் கூறினார் - ஓ மஹாராஜா அக்ரஸேனரே த்வாபரயுகம் முடிந்து கயுகம் ஆரம்பிக்கும் இந்த ஸங்க்ரமண யுகத்தில் தாங்கள் தனிச் சிறப்புடன் முயற்சிகளைச் செய்து இந்த பூமியில் பக்தியையும் தருமத்தையும் காப்பாற்ற வேண்டும். தங்களுடைய காலம் முழுவதும் இந்த சேவையைச் செய்ய வேண்டும் என்றார்.

जैमिनिरुवाच

ततोऽग्रसेनः उद्विग्ने सुसन्देशं सुखावहम्।
संवर्धितं यशो भूयः कर्मणा धर्ममाचरन्॥ १४॥

ஜைமினி கூறினார் - ஓ பக்தியையுடைய ஜனமேஜயா - மஹரிஷி கர்க்யரின் செயலைக் காணவும்- அவர் ஸ்ரீஅக்ரஸேனரின் மூலம் கயுகத்தில் சாந்தியை வேண்டியும் தருமத்தை அனைவரும் கடைபிடிக்கும் படியும் அனைத்து மக்களின் மனதில் இச் செய்தி நிலைத்திருக்கும்படி பிரசாரங்களைச் செய்தும் ஸ்ரீஅக்ரஸேனரும் தருமத்தைச் செய்து அவருடைய புகழ் உலகெங்கும் பரவும்படிச் செய்தார்.

तस्मिन् काले तु यद् युक्तं धर्मं संवर्धयन् हितम् ।
तद् राजा धर्मतश्चक्रे प्रजापालनमुत्तमम् ॥ १५ ॥

ஓ ஜனமேஜயா - அச்சமயத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் கயுகத்தில் தருமம் குறைந்துவிடுமென்று நினைத்து தானாகவே உலகம் முழுவதும் தருமத்தைப் பரப்புவதாக விரதத்தை மேற்கொண்டார். மக்களையும் தரும வழியில் காத்து வந்தார்.

देशे देशे पूज्यमानः प्रशान्तभयराजसः ।
शृण्वंस्ता मधुरा वाचः प्रहृष्टश्चाभ्यभाषत ॥ १६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் ஒவ்வொரு நாடாகச் சென்று அங்கு பயந்திருக்கும் அரசர்களுக்கும் மக்களுக்கும் தன்னம்பிக்கையையும் தருமத்தையும் போதித்தார். தன்னுடைய இனிமையான வார்த்தைகளால் அனைவரையும் கவர்ந்தார். அனைவரும் ஸ்ரீஅக்ரஸேனரிடம் அன்பு கொண்டனர்.

यथा ज्योतिः परं ज्योतिः प्रकर्षति तथाऽग्रराद् ।
कुरुते विततं कर्म यथाऽऽदित्यः प्रदक्षिणम् ॥ १७ ॥

ஜைமினி கூறினார் - எவ்வாறு சூரியன் தனது ஒளியை பகல் பூமியில் பிரகாசிக்கச் செய்து இரவில் தன்னுடைய ஒளியை நிலவின் மூலம் பூமியில் பரப்பி அனைவரையும் மகிழ்விக்கிறானோ அவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் மக்களின் மனதிலுள்ள அறியாமையையும் இருளையும் நீக்கி அவர்களைக் காப்பாற்றினார். ஆதலால் அனைத்து மக்களும் அவரிடன் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டனர். இருப்பினும் அவர் அனைவருக்கும் நல்ல அறிவுரைகளைக் கூறிக்கொண்டே இருந்தார்.

सन्तता गतिरेतस्य नैष तिष्ठति जातुचित् ।
अहोरात्रं च भूतानां भावयत्यग्रसेनराट् ॥ १८ ॥

ஜைமினி கூறினார் - இவ்வாறு ரிஷிகள் முனிகளைப் போல் ஒவ்வொரு நாடாகச் சென்று இரவு பகல் முழுவதும் அனைவருக்கும் தருமத்தை போதித்தார். இந்த பிரசாரத்தால் மக்களை தருமத்தில் ஈடுபடும்படிச் செய்து விலங்குகளையும் கால்நடைகளையும் நாம் அன்புடனும் இரக்க குணத்துடனும் பராமரிக்க வேண்டும் எனவும் போதித்தார்.

दृष्ट्वा व्यवस्थितान् लोकान् मर्यादान्वितचेतसः ।
आजगाम महात्माऽग्र आग्रेयञ्च पुरोत्तमम् ॥ १९ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த மனிதர் ஸ்ரீஅக்ரஸேனர் இவ்வாறு நாடு நாடாக தரும பிரசாரத்தின் பொருட்டு வருவதை அறிந்த மக்கள் அனைவரும் அவரை வரவேற்றனர். அவரிடம் மரியாதை கொண்டனர். இவ்வாறு தனது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீஅக்ரஸேனர் தன்னுடைய நாடான ஆக்ரேயபுரியை அடைந்தார்.

अर्चयामास तं वीरं पतिं पतिपरायणा ।
निरीक्षमाणा भर्तारं माधव्यद्भुततेजसा ॥ २० ॥

तथाविधेन पात्रेण पुनर्नीराजयत्यसौ ।
नीराजयित्वा स्वं कान्तम् अन्तर्निन्ये मनस्विनी ॥ २१ ॥

புகழ், தேஜஸ் ஆகிய ஒளியுடன் ஆக்ரேயபுரிக்கு திரும்பிவந்த தன் கணவன் ஸ்ரீஅக்ரஸேனரை பதிவிரதையான மாதவி மங்கள ஹாரத்தி நீராஞ்ஜனத்தையும் எடுத்து வரவேற்று மகிழ்ந்தாள். தன் கணவன் அனைத்து நாடுகளுக்கும் சென்று புகழுடன் வந்ததை மனதில் நினைத்து மகிழ்ந்தாள்.

अग्रसेनस्य तत् कर्म दृष्ट्वा धर्मोत्तमं परम्।
साश्रुकण्ठः पुरोधाश्चाप्यग्रसेनमुवाच ह ॥ २२॥

ஜைமினி கூறினார் - க ஆரம்ப நேரத்தில் தருமத்தை நிலை நாட்டுவதற்காக ஸ்ரீஅக்ரஸேனர் அனைத்து இடங்களுக்கும் சென்று தருமத்தின் சிறப்பினையும் பயனையும் கூறி முடித்தார். இதை அவர் தன்னுடைய அன்பான கட்டளையால் செய்து அனைவரையும் கவர்ந்தார். தனது அரசன் அக்ரஸேனர் தரும பிரசாரத்தை மேற்கொண்டு வெற்றியுடன் நாட்டுக்குத் திரும்பிவந்ததை நினைத்து புரோஹிதர் ஸ்ரீகர்க்யரும் மனம் மகிழ்ந்தார். அவருடைய மனம் மகிழ்ச்சியில் பொங்கி பேசமுடியாமல் கூறினார் -

गार्ग्य उवाच

प्रत्यक्षं सुखभूयिष्ठमात्मसाक्षिकमच्छलम्।
सर्वलोकहितं धर्मम् अग्र त्वय्येव विद्महे ॥ २३॥

மஹரிஷி கர்க்யர் கூறினார் - ஓ குழந்தாய் அக்ரஸேனா - இப்பூவுலகில் அனைவருக்கும் மனதில் அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் தருமத்தையும் பக்தியையும் மறுபடியும் நிலைநாட்டி இருக்கிறாய். இது உன்னால் மட்டுமே அனைத்து உலகத்தின் நன்மையை வேண்டி செய்யப்பட்டுள்ளது. இதுவே உயர்ந்த தருமமாகும். முக்கியமாக மனித சேவையே மஹேசன் சேவை என ஸ்ரீஅக்ரஸேனர் செய்தார் என்று கூறினால் அது மிகையாகாது.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते चतुर्विंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்தி நான்காவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்தைந்தாவது அத்தியாயம்

தீர்மானம்

जैमिनिरुवाच

यथाकामं यथोत्साहं यथाकालं यथासुखम् ।
धर्मानुकूलं राजायमग्रसेनोऽर्हति ध्रुवम् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் தரும வழியில் வாழ்ந்தார். தன்னுடைய வாழ்க்கையில் முயற்சியையும், நன்மையையும், மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தரும வழியிலேயே அடைந்தார். அனைத்திலும் அவர் தருமத்தையே கடைபிடித்தார்.

देवानतर्पयद् यज्ञैः श्राद्धैस्तद्वत् पितृनपि ।
दीनाननुग्रहैरिष्टैः कामैः सर्वांस्तथा प्रजाः ॥ २ ॥

ஜைமினி கூறினார் - ஓ ராஜன் - யாகம் செய்து அனைத்து கடவுளையும் திருப்தியடையச் செய்தார். (பித்ருக்களுக்கு) மூதாதயர்களின் கர்மாவை விடாமல் செய்து அவர்களையும் மகிழ்வித்தார். பற்பல உதவிகளை வேண்டியவர்களுக்குச் (ஏழைகளுக்கு) செய்து தன்னுடைய ஆட்சியில்லே அனைத்து மக்களையும் மகிழ்ச்சியுடன் வைத்துக்கொண்டிருந்தார்.

पालयामासाग्रसेनः साक्षादिन्द्र इवापरः ।
नृधर्मं विषयज्ञः सन् चचार सुखमुत्तमम् ॥ ३ ॥

அனைத்து கடவுளின் தலைவனான இந்திரனைப் போன்று ஸ்ரீஅக்ரஸேனர் தனது கடமைகளைச் செய்தார். தன்னுடைய அனைத்து திறமைகளையும் தருமத்தின் பொருட்டும் நன்மையின் பொருட்டும் பயன்படுத்தினார். தன்னுடைய அரசியல் வழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்.

अग्रसेनो यदातीतं शरदोऽप्यधिकं शतम् ।
स मानयामास सुहृज्जनांस्तांश्च भृशं द्विजान् ॥ ४ ॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாராஜா ஜனமேஜயா - இவ்வாறு 108 வருடம் தன்னுடைய அரசாட்சியை அரசனாக இருந்து நடத்தினார். அச்சமயத்தில் பொது மக்களும், பிராம்மணர்களும், மற்றவர்களும் அவரை மிகவும் மதித்து நடந்து கொண்டனர்.

अग्रसेन उवाच

विदितं भवतामेतद् यथा मे परिपालितम् ।
इदं शरीरं जरितं मया लोककृते हितम् ॥ ५ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ குழந்தைகளே மற்றும் நண்பர்களே நான் எவ்வாறு இராஜ்ய பரிபாலனம் செய்தேன் என்பதை அனைவரும் அறிவீர்கள். இவ்வாறு நான் இந்த உலகிற்கு நன்மையைச் செய்து மிகவும் வயதானவனாக ஆகிவிட்டேன்.

आत्मनस्तु हितं पुण्यं प्रतिकर्तव्यमद्य वै ।
युज्यन्तामाशिषो यामि माधव्या सह काननम् ॥ ६ ॥

நான் தற்சமயம் வானப்ரஸ்த ஆச்ரமத்தை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். (வயதாகியவுடன் தன்னுடை அரச பதவியிருந்த ஓய்வு பெற்று காட்டில் ரிஷிகளைப் போன்று வாழ்வது வானப்ரஸ்த ஆச்ரமமாகும்). நான் என்னுடை ஆத்மா முக்தி அடைவதன் பொருட்டு தவம் செய்ய விரும்புகிறேன். ஆதலால் என்னை என் மனைவி மாதவியுடன் காட்டிற்குச் செல்ல அனுமதியுங்கள். உங்கள் அனைவருக்கும் எனது ஆசிகள் எப்பொழுதும் உண்டு என்றார்.

राजन् राज्यहितं कार्यं सर्वं च प्रविचिन्त्यताम् ।
अन्यमध्यस्थचिन्ता च विमर्शाभ्यधिकोदया ॥ ७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - தாங்கள் அனைவரும் சேர்ந்து அடுத்த அரசரை தேர்ந்தெடுக்க வேண்டும். தாங்கள் தேர்ந்தெடுக்கும் நபரை நான் யுவராஜாவாக அறிவிக்கிறேன். நான் மட்டும் தனித்து ஒருவரை தேர்ந்தெடுத்தால் அது சரியாகாது. ஆதலால் தாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முடிவெடுங்கள் என்றார்.

गार्ग्य उवाच

धर्मज्ञः सत्यसन्धश्च शीलवानप्यहिंसकः ।
जितेन्द्रियः प्रियवादी सर्वभूतानुकम्पनः ॥ ८ ॥

அந்த சமயத்தில் ஸ்ரீகர்க்யமுனி கூறினார் - ஓ ஸ்ரீஅக்ரஸேன அரசே - தாங்கள் தருமத்தை நன்கு அறிந்தவர், உண்மையை கடைபிடிப்பவர், ஒழுக்கமானவர், அஹிம்சையில் வாழ்ந்தவர், இந்திரியங்களை வென்றவர், அன்புடன் பேசுபவர், அனைவருக்கும் ஹிதமானவர்.

भव्योऽनुसूचः शश्वत् लोकतन्त्रमभीप्सते ।
मृदुश्च स्थिरचित्तश्च सदा सत्याश्रितोऽग्रराट् ॥ ९ ॥

மேலும் இப்படிப்பட்ட தாங்கள் தான் இந்த அக்ரபுரியின் நன்மையின் பொருட்டு ஒரு தீர்மானத்தைச் சொல்ல வேண்டும். இதை விட்டு மற்றவர்களின் தீர்மானத்தையும் யாரும் விரும்பவில்லை. தாங்கள் தீர்மானம் செய்து தேர்ந்தெடுக்கப்படுபவரே அடுத்த அரசருக்கு சிறந்தவராக இருப்பார் என்றார்.

वत्स श्रेयसि जातस्ते दिष्ट्याऽसौ च तवात्मजः ।

என்னைக் கேட்டால் - தங்களுடைய சிறந்த மகனே அடுத்த யுவராஜாவாக ஆவதற்கு அனைத்து குணங்களையும் தகுதிகளையும் பெற்றுள்ளார் என்பேன் என்றார்.

अग्रसेन उवाच

किमिच्छन्ति भवन्तोऽद्य मत्पुत्रं चक्रवर्तिनम् ।
तुष्टोऽस्म्यहमपीच्छामि तं महाराजमर्चितम् ॥ १० ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ மா முனி கர்க்யரே - என்னுடைய மகன் அரசனாக இருக்க வேண்டுமா?. அதை அனைவரும் ஒப்புக்கொண்டால் நான் மகிழ்ச்சியுடன் அவனை மஹாராஜாவாக (யுவராஜாவாக) மகுடம் சூட்டி மகிழ்கிறேன் என்றார்.

जैमिनिरुवाच

इति ब्रुवन्तं मुदिताः प्रत्यनन्दन् प्रजा नृपम् ।
स्निग्धोऽनुनादः सञ्जज्ञे ततो हर्षसमीरितः ॥ ११ ॥

ஜைமினி கூறினார் - ஸ்ரீஅக்ரஸேனரின் பேச்சைக் கேட்டு மஹரிஷி கர்க்யரும் மந்திரிகளும் மகிழ்ந்தனர். மக்கள் மந்திரிகள் மஹரிஷி ஆகியோரின் முன்னிலையில் ஸ்ரீவிபுஸேனரை மன்னர் பதவிக்கு தேர்ந்தெடுத்ததை அனைவரும் வரவேற்றனர். அனைவரும் ஸ்ரீஅக்ரஸேனரை வணங்கி மகிழ்ச்சியுற்றனர்.

विभुरुवाच

परित्यजसि चेत्तात वनं त्वं वा गमिष्यसि ।
ममैतन्न प्रीतिकरं नयाऽस्मानपि सेवकान् ॥ १२ ॥

ஸ்ரீவிபுஸேனர் கூறினார் - ஓ அப்பா - அரசே - எங்களை விட்டு விட்டு தாங்கள் காட்டிற்குச் செல்வதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் தங்களுடைய ஸேவகனாகவே இருக்கிறோம். எங்களை நல்வழியில் நடத்திட வேண்டுகிறோம் என்றான்.

यदीच्छसि महाराज सेवां ते करवामहे ।
दिष्ट्या शुश्रूषमाणस्त्वां मोचये मनसो ज्वरम् ॥ १३ ॥

ஓ அப்பா - தாங்கள் விருப்பப்படி தங்களுக்கு ஸேவை செய்ய காத்துக் கொண்டுள்ளோம். எங்களுக்கு இந்த வாய்ப்பை அளியுங்கள். இல்லையெனில் நாங்கள் மிகவும் துயரத்தை அடைவோம்.

अग्रसेन उवाच

तापस्ये मे मनस्तात, नोचितं नः कुले स्थितिः ।
पुत्रेष्वैश्वर्यमाधाय वयसोऽन्ते वनं व्रजेत् ॥ १४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ குழந்தாய் - விபுஸேனா - என்னுடைய மனது தவம் செய்ய ஆசைப்படுகிறது. இது நம் அரச தருமத்தின் வழக்கமாகும். ஒரு அரசன் வயதடைந்தவுடன் அரசை தகுந்தவரிடம் ஒப்படைத்து விட்டு தான் காட்டிற்குச் சென்று தவம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

प्रकृतयः उचुः

मातापित्रोर्वचनकृद्धितः पथ्यश्च यः सुतः ।
स पुत्रः पुत्रवद् यश्च वर्तते पितृमातृषु ॥ १५ ॥

மக்கள் கூறினர் - தருமத்தின் வழியிலும் ஒரு மகன் தன்னுடைய அப்பா அம்மாவிற்கு அவர்களுடைய விருப்பத்தின்படி நடந்து கொண்டால் அவனே சிறந்த மகனாக ஆகிறான் என்பதால் ஸ்ரீஅக்ரஸேனரின் விருப்பப்படி செய்ய அனைவரும் ஸம்மதித்தனர்.

जैमिनिरुवाच

पौरजानपदैस्तुष्टैरित्युक्तोऽग्रस्तदा नृपः ।
अभ्यषिञ्चद् विभुं राज्ये स्वे शुभे सुतमात्मनः ॥ १६ ॥

स्वपुत्राय विनीताय गुणिने सुकृतात्मने ।
तदा राज्यं सम्प्रदाय ह्यग्रसेनोऽब्रवीद् वचः ॥ १७ ॥

ஜைமினி கூறினார் - ஓ சிறந்த ஜனமேஜயா - விபுஸேனரை மன்னராக முடிசூட்டுவதற்கு அந்நாட்டு மக்களும் மந்திரிகளும் ஒப்புக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து ஸ்ரீவிபுஸேனரை மன்னராக முடிசூட்டினர். மங்களகரமான மற்றும் மகிழ்ச்சியான அந்த நேரத்தில் ஸ்ரீஅக்ரஸேனர் யுவராஜாவாக திகழ்ந்த ஸ்ரீவிபுஸேனரை வாழ்த்தி (ஆசீர்வதித்து) மகிழ்ந்தார்.

अग्रसेन उवाच

आग्नेयमिदमेवैज्यं प्राज्यं राज्यं मयार्पितम् ।
विषयन्ते भ्रातरश्च पान्त्वन्ये येऽधिपा इमे ॥ १८ ॥

மஹாத்மா ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ விபுஸேனா - இந்த ஆக்ரேயபுரி உன்னுடைய அதிகாரத்திலும் கட்டுப்பாட்டிலும் உள்ளது. இந்நகரத்தை உன்னுடை ஸகோதர்களுடன் சேர்ந்து பாதுகாத்து மக்களுக்கு வேண்டியவற்றைச் செய்வாயாக என்றார்.

क्षमते यस्तु शक्तः स्यात् कुप्यतेऽशक्त एव हि ।
दुर्जनो द्वेष्टि सुजनं दुर्बलो बलवत्तरम् ॥ १९ ॥

रूपवन्तमरूपश्च धनवन्तं च निर्धनः ।
अकर्मा कर्मठं द्वेष्टि धार्मिकं च नधार्मिकः ॥ २० ॥

निर्गुणो गुणवन्तं च विभो तत् कलिलक्षणम् ।
न कुर्यात् कुत्रचित् क्रोधं नावमन्येत कश्चन ॥ २१ ॥

ஓ குழந்தாய் - பலமில்லாதவன் எப்பொழுதும் கோபத்தை அடைவான். பலமுடையவன் சிந்தித்து அவனிடன் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். உலகத்தில் கெட்டவர்களிடத்திலும் பணமில்லாதவர்களிடத்திலும், தன்னுடைய கடமை செய்யாதவர்களிடத்திலும், அதர்மத்தைச் செய்பவர்களிடத்திலும் மற்றும் குணமில்லாதவர்களிடத்திலும் கோபம் கொள்ளாமல் அவர்களை நல்வழியில் திருத்தவேண்டும். ஏனெனில் இது க யினுடைய விளையாட்டாகும். ஆதலால் பொறாமை கொள்ளாமல் மற்றவர்களை அவமானப் படுத்தாமல் நடந்துகொள்ள வேண்டும் என்றார்.

दया मैत्री च भूतेषु दानं च मधुरा च वाक् ।
न विद्यते त्रिलोकेषु सुसंवननमीदृशम् ॥ २२ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் வாழ்க்கையின் வெற்றியையும் அதன் குறிக்கோளையும் பற்றி பேசினார். மேலும் அவர் கூறினார். ஓ குழந்தாய் - அனைத்து உயிர்களிடத்திலும் அன்பையும் பாசத்தையும் செலுத்த வேண்டும். அனைவரிடத்திலும் நண்பனாக இருக்க வேண்டும். வேண்டியோர்க்கு உதவியைச் செய்ய வேண்டும். இவ்வாறு இரக்க குணத்தை அனைவரிடத்திலும் கடைபிடிக்க வேண்டும். இம்மூவுலகத்திலும் இதைத் தவிர மற்றவை எதுவுமே கிடையாது.

तस्मात् न वाच्यं परुषं क्वचित् सान्त्वं वचो वदेत् ।
सम्पूजयेत् प्राज्ञपूज्यान् दद्याद् याचेत न क्वचित् ॥ २३ ॥

ஆதலால் மற்றவர்களிடத்தில் கடுமையாகப் பேசக்கூடாது. யார் உன்னிடம் வந்தாலும் அவர்களிடத்தில் இனிமையாகப் பேசவேண்டும். மதிப்பிற்குரியவர்களை மதித்து நடக்க வேண்டும். உதவியை நாடி வருவோர்க்கு உதவி செய்திடல் வேண்டும். மற்றவர்களுடைய பொருட்களை தானமாக அளித்திடல் கூடாது. உன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் தருமத்தின்படி மக்களுக்கு நன்மை செய்திட வேண்டும் என்றார்.

महाशया महात्मानः सर्वशस्त्रास्त्रभृद्वराः ।
उत्तमां च मनोवृद्धिं कुर्युस्ते भ्रातरस्त्वयि ॥ २४ ॥

ஓ குழந்தாய் - தாங்கள் அனைவரும் நீதி மற்றும் தருமத்தின்படி மனதாலும் சொல்லாலும் நடந்து கொள்வதிலும் சிறந்தவர்கள். தங்களுடைய கௌரவத்தையும் மதிப்பையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். சாஸ்த்திரத்தின்படி நடந்துகொள்ளும் சிறந்த போர் வீரர்களாவீர்கள்.

ब्रह्मचर्यं परो धर्मः स चापि नियतस्त्वयि ।
विप्रैः पुरस्कृतं किञ्चिन्नराणां श्रेय ईप्सितम् ॥ २५ ॥

ஓ விபுஸேனா - பிரம்மசாரியின் தருமம் மிகவும் சிறந்தது. அதைப் பற்றி நன்கு படித்திருக்கிறாய். இவ்வுலகிற்கு வேண்டிய அனைத்து மங்களகரமான செயல்களை நம்முடைய குலகுருவின் மூலம் செய்து இவ்வுலகில் நீ வெற்றி கொள்வாயாக.

पुरोधाः यस्य धर्मज्ञः जयस्ते नियतो विभो ।
तस्माद्द जानीह नो शक्यं कर्म ब्रह्म विना कृतम् ॥ २६ ॥

ஓ எனது குழந்தாய் - பிரும்மாவின் அருள் இல்லாமல் இந்த ஆக்ரேய குலத்தையும் அதன் பெருமையும் உன்னால் கடைபிடிக்க முடியாது. பிரும்மாவின் இடத்தில் நமக்கு நம் குலகுரு மாமுனி கர்க்யர் இருக்கிறார். அவருடைய ஆசியுடன் அனைத்தையும் செய்ய வேண்டும்.

अगर्वितात्मा युक्तश्च सान्त्वयुक्तोऽनसूयकः ।
अवेक्षितार्थो मन्त्र्येत शुद्धात्मा सुद्विजो नरः ॥ २७ ॥

ஒரு அரசன் கர்வத்தை வெற்றி கொண்டு பொறாமையின்றி மற்றவர்களின் தவறை சுட்டிக்காட்டாமல் அமைதியுடன் மனதைக் கட்டுப்படுத்தி, இனிமையாகப் பேச வேண்டும். சிறிய விஷயங்களிலும் ஒதுக்கப்படவேண்டிய விஷயங்களாயினும் அவற்றை மந்திரி புரோஹிதர்களிடம் ஆலோசனை செய்து எப்பொழுதும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

कर्मणा येन केनैव मृदुना दारुणेन च ।
उद्धरेद्दीनमात्मानं समर्थो धर्ममाचरेत् ॥ २८ ॥

ஓ குழந்தாய் - ஒரு அரசன் பல காரணங்களால் துயரத்தை அடையும் போது அவன் ஒருபோதும் தன்நம்பிக்கையை இழக்கக்கூடாது. தன்நம்பிக்கையுடன் தரும வழியில் அந்த துயரத்தி ருந்து வெளியில் வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவே சிறந்ததாகும்.

नरः पश्यति भद्राणि न संशयमनारुहन् ।
संशयं पुनरारुह्य यदि जीवति पश्यति ॥ २९ ॥

கஷ்டப்படாமல் முயற்சியில்லாமல் எந்த மனிதனும் சிறந்தவனாக ஆனதில்லை. துயரம் ஒரு மனிதனுடைய வீரத்தைக் காக்கும். கலகம் அவனுக்கு ஒரு தெளிவைக் கொடுத்து நீதியைக் காண்பிக்கும். தன் உயிரைக் காத்து அந்த கலகத்திருந்து அவன் வெளியில் வந்தால் எதையெல்லாம் இழந்தானோ அதை விட அதிகமாக அனைத்தையும் திரும்பவும் அடைவான். அவனுக்கு இது ஒரு பாடமாகவும் அமையும்.

न स्थिरः सर्वदा देहस्तारुण्यं चंचलं तथा ।
स्थिरा रमा न कस्यापि दृश्यते मन्दिरे विभो ॥ ३० ॥

तस्माद् यशः स्थिरं कार्यं प्राणिभिर्भूतलेऽखिलैः ।

ஓ குழந்தாய் - இந்த உடல் நிரந்தரமானதல்ல. அதே போல் இளமையும், மஹாலக்ஷ்மியின் அருளும் நிரந்தரமல்ல. ஆதலால் ஒருவன் தன் உயர்வையும் செல்வத்தையும் மதிப்பையும் ஒவ்வொரு காலகட்டத்தில் அடைகிறான்.

विभुरुवाच

कथमत्र भवेत् कीर्तिः किं कार्यं च कथं सुखम् ॥ ३१ ॥

விபுஸேனன் கூறினான் - ஓ பிதா - இந்த லோகத்தில் எந்த ஒரு காரியத்தைச் செய்தால் நல்ல புகழ் கிடைக்கும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்?. அதை எங்களுக்குக் கூறுங்கள்.

अग्रसेन उवाच

लोकपर्यायवृतान्तं प्राज्ञो जानाति नेतरः ।
न बुद्धिर्धनलाभाय न लोभाय समृद्धये ॥ ३२ ॥

धृतिः शमो दमः शौचं कारुण्यं वागनिष्ठुरा ।
मित्राणां चानभिद्रोहः सप्तैता समिधः श्रियः ॥३३ ॥

மஹாராஜா அக்ரஸேனர் கூறினார் - எனது பிள்ளை விபுஸேனா - உண்மையிலும் உன்னுடைய திறமையால் மட்டுமே மகிழ்ச்சியையும் புகழையும் அடைந்துவிட முடியாது. அதே போல் பஞ்சம் பட்டினியும் அறிவாற்றல் இல்லாமையாலே ஏற்படுவதில்லை. பொதுவாக திறமை, நேர்மை, இனிமையான பேச்சு, இரக்க குணம், உறுதியான தன்நம்பிக்கை, மற்றவர்களுக்கு உதவும் எண்ணம், சிறந்த நண்பர்கள் என பற்பல விஷயங்கள் சேர்ந்து தான் உனக்கு மகிழ்ச்சியையும் புகழையும் கொடுக்கும் என்றார்.

बुद्धया भयं प्रणुदति तपसा विन्दते महः ।
गुरुशुश्रुषया ज्ञानं शान्तिं धर्मेण विन्दति ॥ ३४ ॥

ஓ குழந்தாய் - சிறந்த மனிதன் தவத்தாலும் சிறந்தச் செயலாலும் தன்னை மஹானாக உயர்த்திக் கொண்டு மற்றவர்களுடைய துயரத்தையும் பயத்தையும் போக்குவான். மேலும் அவன் தன்னுடைய குருவின் உபதேசத்தினை மதித்து அதன் வழி நடப்பவனுக்கு மன அமைதியும் நன்மையும் ஏற்படும்.

अकीर्तिं विनयो हन्ति हन्त्यनर्थं पराक्रमः ।
हन्ति नित्यं क्षमा क्रोधमाचारो हन्त्यलक्षणम् ॥ ३५ ॥

ஓ குழந்தாய் விபுஸேனா - பெரியோர்களிடத்தில் அடக்கத்துடன் இருப்பது வெற்றியையும் புகழையும் தரும். வீண் பராக்ரமம் செல்வத்தை அழிக்கும். இரக்க குணம் எதிரிகளை வெல்லும். நல்ல பழக்க வழக்கங்கள் தீய செயல்களை போக்கும். இதை கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

वृत्तं यत्नेन संरक्षेद् वित्तमेति च याति च ।
अक्षीणो वित्ततः क्षीणो वृत्ततस्तु हतो हतः ॥ ३६ ॥

ஆதலால் ஓ குழந்தாய் - எப்பொழுதும் தரும வழியில் தான் நடக்க வேண்டும். பணம் இன்று வரும் நாளை போய்விடும். தருமத்தை கடைபிடிப்பவன் ஏழையாகிலும் அவனை இவ்வுலகம் புகழும். திடீரென அவன் மஹாலக்ஷ்மியின் அருளால் பணக்காரனாகிவிடுவான். ஆனால் அதருமத்தால் கீழே நிலையை அடைந்தால் அந்நிலையிரும் அவன் மேலே வரமுடியாது.

वृत्ततस्त्वविहीनानि कुलान्यल्पधनान्यपि ।
गच्छन्ति च श्रेष्ठकुलं कर्षन्ति च महद् यशः ॥ ३७ ॥

ஓ குழந்தாய் - ஒரு குடும்பம் ஏழ்மையாகிலும் அவர்கள் தரும வழியில் நடந்து வந்தால் அவர்கள் ஒரு நாள் பணத்தால் பணக்காரனாகிவிடுவர். இதை நீ கண்டிப்பாக புரிந்துகொள்ள வேண்டும். அனைத்து இடங்களிலும் பணத்தைப் பார்க்கக்கூடாது.

कुलीनो दुष्कुलीनो वा मर्यादां यो न लङ्घयेत् ।
धर्मापेक्षी मृदुर्ह्रीमान् स कुलीनशताद् वरः ॥ ३८ ॥

ஒருவன் சிறந்த குலத்தில் பிறக்கவில்லை எனிலும் அவனுடைய குணங்கள் சிறப்பாக இருந்தாலும், மனது தூய்மையாக இருந்தாலும், மனக் கட்டுப்பாட்டுடன் இருந்தால் அவன் உயர் குலத்தில் பிறந்த நூறு பேருக்குச் சமமானவனாக போற்றபடுபவனாவான்.

आयत्यां प्रतिकारज्ञस्तदात्वे दृढनिश्चयः ।
अतीते कर्मशेषज्ञो विभो कीर्त्या न हीयते ॥ ३९ ॥

ஓ குழந்தாய் - எவன் ஒருவன் தனி வழியில் கலகத்தைப் பற்றி முன்கூட்டியே சிந்தித்து அதிருந்து வெளியில் வர முயற்சிகிறானோ மேலும் தனது வேலையை முழுக்க முடித்து தனது ஆசைப்படி மற்றவர்களுடைய வேலையையும் செய்கிறோனோ அவன் ஒருபொழுதும் தோல்வியைத் தழுவமாட்டான்.

अत्यार्यमतिदातारमतिशूरमतिव्रतम् ।
अतिप्रज्ञाभिमानं च सेवते श्रीर्न तं भयात् ॥ ४० ॥

அதேபோல் - ஓ விடுஸேனா - எவன் ஒருவனிடம் திறமை, இரக்கம், சிறந்தச் செயல், அறிவு, எழில் கலை போன்றவையுடன் அஹங்காரமும் உள்ளதோ அவனிடத்தில் ஒருபொழுதும் மஹாலக்ஷ்மி இருக்கமாட்டாள். ஏனெனில் எப்போது நம்மை அவமதிப்பானோ என நினைத்து மஹாலக்ஷ்மி அவனைவிட்டு சென்றுவிடுவாள்.

प्रभविष्णोर्यथा विष्णोरमानित्वं परं सदा ।
नातः श्रीमत्तरं किञ्चिदन्यत् पथ्यं हि मे मतम् ॥ ४१ ॥

ஓ விபுஸேனா - மஹாவிஷ்ணுவைப் போன்று வினயத்துடன் இருப்பவர்களிடத்திலே எப்பொழுதும் மஹாலக்ஷ்மி குடிகொண்டிருப்பாள். ஆதலால் நீ எப்போதும் வினயத்துடன் அதாவது அடக்கத்துடன் இருந்து சிறந்து விளங்க வேண்டும் என்றார்.

यदभीक्ष्णं निषेवेत मनसा कर्मणा गिरा ।
तदेवापहरत्येनं तस्मात् कल्याणमाचरेत् ॥ ४२ ॥

ஓ குழந்தாய் - ஒருவன் தன்னுடைய தரும சிந்தனையில் தன் மனது கூறியபடி செயல்பட்டால் கண்டிப்பாக அவன் அதில் வெற்றியை அடைவான். தருமத்தால் செய்யும் ஒவ்வொரு செயலும் நன்மையையே கொடுக்கும். ஆதலால் அது இவ்வுலகத்திற்கும் நன்மையை விளைவிப்பதாகவே அமையும்.

क्षमा धृतिरहिंसा च समता सत्यमार्जवम् ।
कर्मणा स्थैर्यमास्थाय कल्पन्ते शाश्वता भुवि ॥ ४३ ॥

ஓ குழந்தாய் - எவன் ஒருவன் பொறுமை, திறமை, அஹிம்ஸை, ஸத்யம் (உண்மை பேசுதல்), தன்னுடைய கடமை ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படுகிறானோ அவனை இவ்வுலக மக்கள் எப்பொழுதும் புகழ்ந்து பேசுவர்.

सर्वेषां ज्ञानमेकं हि सर्वभूतहिताऽभयम् ।
समुद्र इव गम्भीरः प्रज्ञातृप्तः प्रशाम्यति ॥ ४४ ॥

ஓ விபுஸேனா - எவன் ஒருவன் அனைத்து மக்களாலும் சிறந்தவனாக அறிவிக்கப் படுகிறானோ, அனைத்து பிராணிகளுக்கும் அன்பு பாத்திரமாகிறானோ அவன் பயமற்றவனாகி யாராலும் வெற்றிகொள்ள முடியாதவனாகி விடுகிறான். மேலும் அவன் கடலைப் போன்று அறிவில் சிறந்தவனாகி மகிழ்ச்சியடைகிறான்.

परिभ्रष्टः स्वयं राज्यात् सम्प्राप्तो व्यसनं महत् ।
लब्ध्वामृतं हि स्वं रूपं काष्ठां विन्दति कर्मणाम् ॥ ४५ ॥

ஓ குழந்தாய் விபுஸேனா – நான் அரசாண்ட போது பற்பல துயரத்தைச் சந்தித்திருக்கிறேன். பல சம்பவங்களில் நான் பயத்தை அடைந்தேன். அவை அனைத்தும் என்னுடைய நிலையான மனக் கட்டுப்பாட்டால் வெற்றி கொண்டேன். அதுமட்டுமின்றி இழந்த செல்வம் புகழ் அனைத்தையும் திரும்பவும் பெற்றேன் என்றார்.

सुमन्त्रितं सुनीतं च न्यायतश्चोपपादितम् ।
कृतं मानुष्यकं कर्म दैवेनापि न रुध्यते ॥ ४६ ॥

ஓ விபுஸேனா – நல்ல யோசனையுடனும், தரும வழியில் நியாயத்தைச் செய்வதும், உன்னுடைய கருமத்தையும் சரியாகச் செய்வதுமாக இருந்து வந்தால் உன்னை கடவுள் கூட தடுக்க முடியாது. அதாவது தைவம் உனக்கு உதவியைச் செய்திடும்.

दैवेन किल यस्यार्थः सुनीतोऽपि विशां पते ।
दैवस्य चागमे यत्नस्तेन कार्यो विजानता ॥ ४७ ॥

ஓ குழந்தாய் – நீதி தருமம் ஆகியவற்றால் நீ அடைந்த புகழ் பொருட்கள் ஆகியவை பலனளிக்கவில்லை எனில் அதற்கு காரணம் உன்னுடைய கர்ம வினையாகும். அதை தெரிந்து கொண்டு அந்நேரம் வரும்வரை பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

दैवमप्यकृतं कर्म पौरुषेण विहन्यते ।
यदन्यद् दिष्टभावस्य पुरुषस्य स्वयं कृतम् ॥ ४८ ॥

இருப்பினும், ஓ குழந்தாய் – கடவுள் செய்யாததான புருஷார்த்தங்களை அதாவது மனிதாபிமானச் செயல்களை கண்டிப்பாக நாம் கடைபிடிக்க வேண்டும். இதனால் துணிச்சலும் திறமையும் ஏற்பட்டு பல துயரத்திருந்து விடுபடலாம்.

न जात्वदक्षो राजा च प्रजाः शक्नोति रक्षितुम् ।
भारो हि सुमहान् वत्स राज्यं नाम सुदुष्करम् ॥ ४९ ॥

ஓ குழந்தாய் - ஒரு அரசன் எப்பொழுதும் விழிப்புடன் இருந்தால் தான் தன்னுடைய மக்களை காப்பாற்ற முடியும். அதேபோல் நாட்டின் நிருவாகஸ்தர்களும் மந்திரிகளும் அனைத்து விஷயங்களிலும் விழிப்புடன் செயல்பட வேண்டும். நாட்டை பாதுகாப்பது என்பது பெரிய செயலாகும்.

अरक्षितात्मा स नृपः प्रजाश्चापि न रक्षति ।
तद्दण्डविन्नृपः प्राज्ञः शूरः शक्नोति रक्षितुम् ॥ ५० ॥

ஓ குழந்தாய் - ஒரு அரசன் தன்னை காப்பாற்றிக் கொள்ளவில்லை எனில் அவன் எவ்வாறு தன்னுடைய மக்களைக் காப்பாற்ற முடியும். தன்னுடைய நாட்டில் இருக்கும் புத்திசாலிகளையும் திறமைவாய்ந்தவர்களையும் காப்பாற்றி தன்வசப் படுத்திக்கொள்ள வேண்டும்.

नयानयौ देशकालौ ज्ञात्वा दण्डं नयेन्नृषु ।
सुनियन्त्रितसर्वाङ्गः पक्षपातविवर्जनात् ॥ ५१ ॥

ஓ குழந்தாய் - அந்தந்த காலகட்டத்திற்கு ஏற்றபடி அரசன் சட்டத்தையும், அரசாட்சியையும், நீதியையும், தண்டனையையும் தீர்மானிக்க வேண்டும். சிறந்தவன் தாழ்ந்தவன் என்று பார்க்காமல் சட்டத்தின்படி நீதியை சரிசமமாக வழங்க வேண்டும்.

स्वभावः कर्म च शुभं यत्र शूद्रेऽपि तिष्ठति ।
विशिष्टः स द्विजातेर्हि विज्ञेय इति मे मतिः ॥ ५२ ॥

ஓ குழந்தாய் - வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்தபடி செய்திருக்கும் நீதியை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். என்னுடைய விருப்பம் யாதெனில் - சூத்ரனாகிலும் அவன் உயர்ந்த தருமத்தைச் செய்தால் அவனே மற்ற சாதியினரைக் காட்டிலும் சிறந்தவனாவான்.

न श्रुतं न च संस्कारो न योनिः श्रीकरो नृणाम् ।
आचारः श्रीकरः प्रोक्तो ब्रह्मणा सृजता प्रजाः ॥ ५३ ॥

ஓ குழந்தாய் - உலகைப் படைத்த பிரம்மன் கூறியுள்ளார் - இவ்வுலகத்தைப் படைத்தபோது அவர் இவன் உயர்ந்தவன் மற்றவன் தாழ்ந்தவன் இவன் அறிவுள்ளவன் எனப் பிரிக்கவில்லை. பிற்காலத்தில் அவரவர்களின் செயல் முறைகளைத் தழுவி பெயர்கள் கொடுக்கப்பட்டன.

कृषिगोरक्ष्यवाणिज्यं लोकानामिह जीवनम् ।
यथोर्ध्वं च त्रयी विद्या सा भूतान् भावयत्युत ॥५४ ॥

இந்த உலகத்தில் விவசாயமும், பசுவை காப்பதும், வாணிஜ்யம் செய்வதுமான மூன்று செயல்கள் ஒவ்வொருவரால் செய்யப்படுகிறது. இதற்காகத் தான் அவர்களுக்கு தனி பெயர் சூட்டப்பட்டது. இவர்கள் அனைவருமே மக்களின் நன்மைக்காவே பாடுபடுபவர்கள் ஆவர்.

नृधर्मे वर्तमानानामर्थसिद्धिः प्रदृश्यते ।
तदेव मङ्गलं लोकः सर्वस्तमनुवर्तते ॥ ५५ ॥

ஓ குழந்தாய் - எவன் ஒருவன் தருமத்தை பின்பற்றுகிறானோ அவன் தன்னுடைய தேவைகளை அடைந்துவிடுவான். ஆதலால் இவ்வுலகம் முழுவதும் தருமத்தின் அடிப்படையில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது மங்களத்தைக் கொடுக்கக் கூடியது. ஆதலால் நாம் இதை பின் தொடர வேண்டும்.

प्रमाणं यदि कुरुते सदाचारेषु पार्थिवः ।
प्रजास्तदनुवर्तन्ते प्रमाणाचरितं सदा ॥ ५६ ॥

ஒரு அரசன் அனைவரும் கடைபிடிக்க வேண்டிய தருமத்தையும் சட்டத்தையும் தீர்மானித்து மக்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும். மக்களும் அதன்படி புரிந்துகொண்டு தவறாமல் நடக்க வேண்டும்.

अहिंसा परमो धर्मः इत्युक्तं शास्त्रकोटिषु ।
निश्चयेन चिकिर्षामि धर्ममेतं सनातनम् ॥ ५७ ॥

ஓ குழந்தாய் விபுஸேனா - சாஸ்த்திரமறிந்த வல்லுனர்கள் அஹிம்ஸை என்பது உயர்ந்த தருமம் என தீர்மானித்துக் கூறியுள்ளனர். நானும் சனாதன தருமமான அஹிம்ஸையையே பின் பற்றுகிறேன்.

धिक् तस्य जीवितं राज्ञो राष्ट्रे यस्यावसीदति ।
संरुद्धपतिपुत्रैका ह्रियते स्त्री बलाद् द्विषा ॥ ५८ ॥

ஓ குழந்தாய் - எந்த நாட்டில் மக்கள் பட்டினியுடனும், பெண்கள் தன்னுடைய கணவனாலும் குழந்தைகளாலும் காப்பாற்றப்படாமல் பாதுகாப்பின்றி இருக்கிறார்களோ அந்நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. அந்நாட்டு அரசனை குற்றவாளியென தீர்மானிக்க வேண்டும்.

नृपः स धर्मकुशलः तद्राष्ट्रं भूतिलक्षणम् ।
यस्य राज्ञः शुभे राज्ये कर्मभिर्निर्वृता नराः ॥ ५९ ॥

எந்த நாட்டில் மக்கள் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் தினமும் தனது வேலைகளை சிறப்பாகச் செய்துகொண்டு இருக்கின்றனரோ அந்நாடு மிகவும் உயர்ந்ததாகும். அங்கு நிர்வாகம் சிறப்பாகச் செயல்படுகிறது. எனவே அந்நாட்டு அரசன் சிறப்பாக நாட்டை ஆள்கிறான் என்பதாகும்.

आर्तहस्तप्रदो राजा प्रजा धर्मेण पालयन् ।
सत्यं सत्यानि कुरुते स नित्यं यः सुदर्शनः ॥ ६० ॥

ஓ குழந்தாய் - வாழ்க்கையில் நொடிந்து போன மக்களை அரசனும் பொது மக்களும் தருமத்தின்படி பாதுகாத்து உதவிகளைச் செய்திட வேண்டும். நொடிந்து போனவர்களையும் மகிழ்ச்சியுடன் வைத்துக்கொள்வது ஒரு அரசனின் கடமையாகும். இவ்வாறு செயல்படுவரே சிறந்த அரசனாவர்.

अर्थाश्चैवाधिगम्यन्ते सङ्घातबलपौरुषैः ।
तस्मान्मानयितव्यास्ते गणमुख्याः प्रधानतः ॥ ६१ ॥

ஓ குழந்தாய் - மக்களுடைய பாதுகாப்பிலும் அவர்களுடைய வளர்ச்சியிலும் அரசனுடைய பங்கு அதிகமாக இருப்பின் அனைத்து மக்களும் அந்த அரசனை வாழ்த்தி புகழ்ந்து போற்றுவர். ஆதலால் மதிக்கப்படுபவர்களால் நீ மதிப்பைப் பெற வேண்டும். சுதந்திரமாக உயர்ந்த மக்களை கௌரவிக்க வேண்டும்.

न चापि वैरं वैरेण विभोऽत्र व्युपशाम्यति ।
हविषाऽग्निर्यथाऽकीर्तिर्भूय एवाभिवर्धते ॥ ६२ ॥

ஓ குழந்தாய் - எவ்வாறு எரிகின்ற தீயில் நெய்யை ஆஹுதியாக விட்டால் மேலும் அது அதிகமாக எரிந்து இருப்பிடம் தெரியாமல் ஆகிவிடுமோ அவ்வாறு எதிரியும் தீயவர்களும் அவ்வப்போது நாட்டில் ஏற்பட்டுக் கொண்டே இருப்பர். அவர்கள் அனைவரும் உன்னுடை நற்செயலால் தானாகவே அழிந்துவிடுவர்.

उपकारिषु यः साधुः साधुत्वे तस्य को गुणः ।
अपकारिषु यः साधुः स साधुः सद्भिरुच्यते ॥ ६३ ॥

ஓ குழந்தாய் - எப்பொழுதும் உதவி செய்யும் ஸாதுக்களை மதித்து போற்ற வேண்டும். இதுவே சிறந்த குணமாகும். ஆனால் தவறு செய்தவரை போற்றி மரியாதை செய்தால் அது அவனுடைய உயர்ந்த பதவிக்காகச் செய்ததாகவே கருதப்படும்.

एवं कृतमती राजा प्रजा अनुचरेद् यदि ।
भवतां च कृतः कामस्त्वयाऽऽर्भ श्रेय उत्तमम् ॥ ६४ ॥

ஓ குழந்தாய் - இங்கு நான் கூறியபடி உன்னுடைய அரச வாழ்க்கையை நடத்தினால் நீ பொன்னும் பொருளையும் புகழையும் அடைவாய். உன்னுடைய எண்ணங்கள் நிறைவேறும். உன்னை அனைவரும் முதன்மை மற்றும் சிறந்த அரசாகக் கூறி மகிழ்வர்.

इदानीं मानुषं धर्मं जानासि सकलं विभो ।
सर्वकामसमृद्धा ते प्रजा राज्ये भविष्यति ॥ ६५ ॥

ஓ குழந்தாய் - நான் இதுவரை அனைத்து மக்களுடைய குணங்களையும் நடவடிக்கைகளையும் கூறியுள்ளேன். என்னுடைய உபதேசத்தை மனதில்கொண்டு நீ செயல்பட்டால் உனது வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

जैमिनिरुवाच

एवं ब्रुवन्तं पितरं नमस्कृत्य विभुस्तदा ।
ततः प्रदक्षिणीकृत्य स्फुटं वचनमब्रवीत् ॥ ६६ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - யுவராஜாவான ஸ்ரீவிபுஸேனன் தனது தகப்பனாரான ஸ்ரீஅக்ரஸேனரை வணங்கி அவர் கூறிய அனைத்தையும் சிரமேற்கொண்டு ஏற்பதாகக் கூறினான்.

विभुरुवाच

सर्वं तात करिष्यामि त्वयोक्तं परमं हितम् ।
महापातकिनस्त्यक्त्वा प्रजाः सम्पूजयाम्यहम् ॥ ६७ ॥

ஸ்ரீவிபுஸேனன் கூறினான் - தாங்கள் கூறிய ஹிதமான அனைத்து உபதேசங்களையும் நடைமுறைபடுத்துகிறேன். தாங்களை நான் பின்பற்றுவதால் தீயவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் என்னை புகழ்வார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை என்றான்.

जैमिनिरुवाच

एवं सभार्योऽग्रसेनः श्रेयांसं पुत्रमीप्सितम् ।
राज्येऽभिषिच्य मुदित आगतानब्रवीद् वचः ॥ ६८ ॥

ஜைமினி கூறினார் - அதன் பிறகு மக்களின் நடுவில் ஸ்ரீவிபுஸேனனை இராஜ ஸிம்மாஸனத்தில் அமரச்செய்து ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் மகுடத்தைச் சூட்டி இராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்தனர். பின்பு மக்களிடம் ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் -

अग्रसेन उवाच

अरण्यगमने बुद्धिर्माधवीसहितस्य मे ।
मुनिनाऽनुमता राज्ञा भवद्भिश्चानुमन्यताम् ॥ ६९ ॥

இராஜரிஷி ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ சிறந்த மக்களே - என்னுடைய குரு மாமுனி ஸ்ரீகர்க்யரின் ஆசியுடன் நான் எனது மனைவி மாதவியுடன் காட்டிற்கு தவம் மேற்கொள்ளப் போகிறேன். அதற்கு கர்க்யரும் பிள்ளைகளும் அனுமதி அளித்துள்ளனர். இன்றுமுதல் ஸ்ரீவிபுஸேனன் உங்களுடை அரசர் ஆவார். ஆதலால் தாங்களும் எனக்கு அனுமதி அளிக்கவேண்டும் என்றார்.

येयं प्रीतिः कृताऽस्मासु भवद्भिः शाश्वती हिता ।
न च साऽन्येषु देशेषु राज्ञामिति मतिर्मम ॥ ७० ॥

தாங்கள் அனைவரும் எவ்வாறு என்னிடம் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தீர்களோ அவ்வாறே யுவராஜாவிடமும் இருக்க வேண்டும். இவ்வாறு இராஜா மற்றும் மக்களிடையே இருக்கும் சிறப்பான உயர்ந்த உறவு அனைத்து இடங்களிலும் காணமுடியாது. இது மிகவும் உயர்ந்ததாகும்.

जैमिनिरुवाच

इत्युक्तास्तेन ते नोचुर्जनाः बाष्पकलाकुलाः ।
रुरुदुः शोकसन्तप्ता मुहूर्तं पितृमातृवत् ॥ ७१ ॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாராஜா ஜனமேஜயா - இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனர் தனது விருப்பத்தைக் கூறியவுடன் அனைத்து மக்களும் கண்ணீர்மல்க அவரைச் சூழ்ந்து கொண்டனர். தன்னுடைய உறவினர் காட்டிற்குச் செல்வதை நினைத்து துயரத்தையும் அடைந்தனர்.

दुःखं सन्धारयन्तो हि नष्टसञ्ज्ञा इवाभवन् ।
वियोगजं तमायासं विनीय प्रस्थिताविमौ ॥ ७२ ॥

மேலும் ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - அழுது கொண்டிருந்த மக்கள் கண்ணீர்மல்கி தன் நிலைமையை இழந்து விட்டனர். கொஞ்சம் நேரம் ஆனவுடன் அவர்கள் தங்களை தானாகவே சரிசெய்துகொண்டு ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவியின் கால்களில் விழுந்து ஆசி பெற்றனர்.

मार्गशीर्षे पूर्णिमायामाग्रेयाञ्चिर्ययौ नृपः ।
अभिवाद्य न्यवर्तन्त प्रजास्तं न निवर्त्य ताः ॥ ७३ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - மாசி மாதம் பௌர்ணமி திதியன்று மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவி காட்டிற்குச் சென்றனர். அவர்களுக்கு பாதுகாப்பாகச் சென்ற இளவரசர்களும் இராணிகளும் பொது மக்களும் ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியை காட்டில் தகுந்த இடத்தில் விட்டுவிட்டு ஆழ்ந்த துயரத்துடன் நாடு திரும்பினர்.

उषित्वा च वने वासं धर्मिणौ संशितव्रतौ ।
फलमूलशनौ दान्तौ तपश्चर्यारतौ ततः ॥ ७४ ॥

குருகுலபூஷண ஜனமேஜயா - இவ்வாறு சிறந்த ஞானி தர்மாத்மா ஸ்ரீஅக்ரஸேனர் காட்டில் கிடைக்கும் பழங்களையும் காய்களையும் இலைகளையும் உண்டு தவத்தை மேற்கொண்டார். தங்களுடைய உயிர் உடம்பைவிட்டுப் பிரியும் வரை தங்களுடைய மனதைக் கட்டுப்படுத்தி தவத்தை மேற்கொண்டன

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते पञ्चविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்தைந்தாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்தியாறாவது அத்தியாயம்

மகிழ்ச்சி

जैमिनिरुवाच

अर्थं कामं सुखं चैव सर्वं त्यक्त्वाऽव्रजद् वनम् ।
तापसः समतप्यच्च सभार्यः सोऽग्रसेनराट् ॥ १ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஞானி ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் தனது வாழ்க்கையில் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கையும் சிறப்பாகவே செய்தார். அவர் பொன் பொருள் ஆசை மகிழ்ச்சி அனைத்தையும் துறந்து தனது மனைவி மாதவியுடன் தவம் செய்வதன் பொருட்டு வனத்திற்குச் சென்றார்.

उवास बहुदेशेषु समेषु विषमेषु च ।
ब्रह्मधीर्मितवाग्दीप्तो यमुनायास्तटं ययौ ॥ २ ॥

பிரம்மாவைப் போன்று பிரகாசிக்கின்ற அக்ரஸேனரும் மாதவியும் காட்டில் பல துயரங்களை சந்தித்து பற்பல இடத்தை கடந்து யமுனை நதியின் கரையை அடைந்தனர்.

तावाप्लुत्य यतात्मानौ आसाद्य यमुनां नदीम् ।
कृतजप्यौ समासातां सूक्ष्मकाञ्चनवालुकाम् ॥ ३ ॥

चक्रतुस्तौ तथाऽऽसीनौ पुण्यकर्माणि भूरिशः ।
श्रुतवन्तौ च सश्रद्धौ देवर्षिकथिताः कथाः ॥ ४ ॥

பிறகு யமுனை நதியில் குளித்து அதன் தங்கமயமான மணல் நிறைந்த கரையில் தினமும் செய்யும் கடமைகளை முடித்து மனதை ஒரு நிலைப் படுத்தி மௌனமாகத் தவத்தை மேற்கொண்டனர். மங்களகரமான புண்ணிய கர்மாவைச் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும், அங்கு தேவரிஷிகளால் கூறப்படும் கதைகளை பக்தியுடனும் ஆர்வத்துடனும் கேட்டு மகிழ்ந்தனர்.

एवं स हि विशुद्धात्मा तप आतिष्ठदुत्तमम् ।
अस्तौष मनसा देवीं लक्ष्मीं त्रिभुवनेश्वरीम् ॥ ५ ॥

ஓ ராஜன் ஜனமேஜயா - அதன் பிறகு சஞ்சலமற்ற சுத்தமான மனதுடன் இருவரும் மூன்று உலகிற்கும் தலைவியான மஹாலக்ஷ்மி தேவியை குறித்து துதி (ஸ்தோத்ரம்) செய்தனர்.

अग्रमाधव्यौ ऊचतुः

पद्मासनस्थिते देवि परब्रह्मस्वरूपिणि ।
परमेशि जगन्मातः महालक्ष्मि नमोऽस्तु ते ॥ ६ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி இருவரும் சேர்ந்து கூறினர் - தேவி மஹாலக்ஷ்மியே - தாங்கள் தாமரைப் பூவை ஆஸனமாகக் கொண்டு வீற்றிருப்பவளாகவும், பரபிரம்மத்தின் உருவமாயும், இவ்வுலகிற்கு அம்மாவாகவும் திகழ்கிறீர்கள். அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மியான தங்களை வணங்குகிறேன் என்று நமஸ்கரித்தனர்.

भारावतरणे पुण्ये ये स्मरन्ति सदा शिवाम् ।
तारयत्येव सा पापात् पङ्के गामिव दुर्बलाम् ॥ ७ ॥

ஓ தேவி மஹாலக்ஷ்மியே - எவ்வாறு சேற்றில் அகப்பட்டுக் கொண்ட பசு வெளியில் வரமுடியாமல் மனிதனால் காப்பாற்றப்பட்டு அந்த துயரத்திருந்து வெளியில் வருகிறதோ அவ்வாறு இந்த பூமியில் வாழ்க்கை என்கிற மண்ணில் அகப்பட்டுக் கொண்டு யார் தங்களை வணங்குகிறார்களோ அவர்களுடைய அனைத்து துயரத்தையும் உடனடியாக போக்கடிப்பாயாக.

जैमिनिरुवाच

स्तोतुं प्रचक्रमे भूयो विविधैः स्तोत्रतल्लजैः ।
आमन्त्र्य दर्शनाकाङ्क्षी राजा देवीं स धार्मिकः ॥ ८ ॥

ஜைமினி கூறினார் - சிறந்த ஆத்மாவைக் கொண்ட ஜனமேஜயா - தனது மனைவியுடன் உலகமாதா மஹாலக்ஷ்மியின் தரிசனத்திற்காக மறுபடியும் மறுபடியும் பற்பல துதிகளைப் (ஸ்தோத்ரங்களை) பாடிக் கொண்டிருந்தனர்.

अग्रमाधव्यौ ऊचतुः

नमोऽस्तु वरदे देवि मातः सर्वार्थसाधिके ।
बालार्कसदृशाकारे पूर्णचन्द्रनिभानने ॥ ९ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி இருவரும் சேர்ந்து தேவி மஹாலக்ஷ்மியைப் பற்றி கூறினர் - வேண்டியதை அளிக்கக்கூடிய தேவியே தங்களை வணங்குகிறோம், தாங்களே அனைத்தையும் அளிக்க சிறந்தவள், தாங்கள் உதிக்கும் சூரியனைப் போன்று அழகாகவும் முழு சந்திரனைப் போன்ற காந்தியையும் உடையவள் ஆவீர்.

त्वं स्तूयसे देवि पद्मे त्रिदशैः पूज्यसेऽपि च ।
मुकुटेन विचित्रेण केशबन्धेन शोभिते ॥ १० ॥

ஓ மஹாலக்ஷ்மியே - பற்பல ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள மகுடத்தை அணிந்திருப்பவளும், அழகான கூந்தலுடனும் தோன்றுபவளும், முப்பது விதமான தேவர்களால் பூஜிக்கப்படுபவளுமான மஹாலக்ஷ்மியான தங்களை துதி செய்கிறோம்.

भुजङ्गाभोगवसने श्रोणिसूत्रेण राजिते ।
विभ्राजसे च वक्त्रेण भोगिनेवेह मन्दरः ॥ ११ ॥

ஓ மஹாலக்ஷ்மி தாயே - பாம்பின் படுக்கையில் வசித்து வருபவளும், அழகான இடுப்பு ஒட்டியாணத்தை உடையவளுமான தங்களை பார்த்தால் மந்தார மலையை மத்தாக நாட்டி பாம்பை கயிராகப் பயன்படுத்தி கடலை கடைந்தது போல் எங்களுக்குத் தெரிகிறீர்கள். அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மியை வணங்குகிறோம்.

भारावतारे ये च त्वां संस्मरिष्यन्ति मानवाः ।
कृतानुयात्रा तेषां त्वं वरदे कामदा ह्यसि ॥ १२ ॥

ஓ உலகத்தின் தாயே - யார் உன்னை வணங்குகிறார்களோ அவர்களுடைய துயரத்தை (பாரத்தை) போக்கி வேண்டியதை அருள்வாயாக. தாங்கள் மூவுலகிற்கும் செல்வவள். ஆதலால் ஆங்காங்கே துயரமடைந்து தங்களை வணங்குபவர்களின் துயரங்களை உடனடியாக போக்கடிப்பாயாக.

प्रणमन्ति हि ये च त्वां प्रभाते मानवा भुवि ।
न तेषां दुर्लभं किञ्चित् पुत्रतो धनतोऽपि वा ॥ १३ ॥

இவ்வுலகில் யார் தங்களை காலையில் போற்றி வணங்குகிறார்களோ அவர்களுக்கு நல்ல குழந்தைகளையும் செல்வத்தையும் அளித்து ஒருபோதும் துயரமின்றி இருக்க அருள்வாயாக.

त्वं कीर्तिः श्रीः धृतिः सिद्धिः ह्रीर्विद्या सुप्रभा क्षमा ।
सर्वरूपा भगवती बुद्धिः शक्तिर्दया स्मृतिः ॥ १४ ॥

ஓ மஹாலக்ஷ்மி - தாங்களே தான் புகழ், செல்வம், தைர்யம் (வெட்கம்), அறிவு, தைவத்தன்மை வாய்தவள், நாணம், கல்வி, நல்ல ஒளியுடையவள், பொறுமையானவள், அனைத்து வடிவானவள், சிறந்த புத்தியையுடையவள், சக்தி, இரக்கம் போன்றவற்றைக் கொண்டள்.

ये स्मरन्ति महालक्ष्मीं न च सीदन्ति ते नराः ।
पूर्णज्ञानबलोपेता ऐश्वर्येण श्रियाऽन्विताः ॥ १५ ॥

ஓ மஹாலக்ஷ்மி - யார் தங்களை நினைத்து வணங்குகிறார்களோ துதியைச் செய்கிறார்களோ அவர்களுக்கு ஒருபோதும் தீமை ஏற்படக்கூடாது. அவர்கள் முழுமையான ஞானத்தையும் பலனையும் அடைந்து இவ்வுலகில் ஐச்வர்யத்துடன், பெருஞ்செல்வத்துடன் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

नृणां च बन्धनं मोहं पुत्रनाशं धनक्षयम् ।
व्याधिं मृत्युं भयं चैव पूजिता नाशयिष्यसि ॥ १६ ॥

ஓ தேவி மஹாலக்ஷ்மி - தங்களை ஒரு மனிதன் பூஜை செய்தால் அவனுடைய இப்பிறவி பந்தத்தையும், ஆசையையும், குழந்தையின்மையையும், அவனுடைய செல்வம் அழிவதையும், வியாதியையும், இறப்பையும் (உயிர் விடுவதையும்), பயத்தையும் போக்கடிப்பாயாக.

शरणं भव मे देवि शरण्ये भक्तवत्सले ।
प्रसन्ना मे सुरश्रेष्ठे दयां कुरु शिवा भव ॥ १७ ॥

ஓ என்னுடைய தேவி மஹாலக்ஷ்மி - தங்களிடம் சரணடைந்தவர்களை காப்பாற்றும் குணமுடையவள், (பக்தவத்ஸல்யை), உத்தமியான மஹாலக்ஷ்மியே நாங்களும் தங்களை சரணடைகிறோம். எங்கள்மேல் கருணைகொண்டு எங்களுக்கு காட்சியளித்து மங்களத்தை அருள்வாயாக.

जैमिनिरुवाच

इति सूक्तसहस्रैः सा संस्तुता सम्यगाश्रिता ।
मन्त्रैश्च ऋषिभिः दृष्टैः पूजिता जगदम्बिका ॥ १८ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஞானி ஜனமேஜயா - இவ்வாறு நூறு துதிகளைப் (ஸ்தோத்ரங்களை) பாடி நன்றாக மஹாலக்ஷ்மியை மகிழ்ச்சியடையச் செய்தனர். ரிஷிகளால் பண்ணப்பட்ட பற்பல மந்த்ரங்களையும் கூறி உலகமாதாவான மஹாலக்ஷ்மி அம்பிகையை பூஜித்தனர்.

अतिष्ठतामेकपदा वर्षाणामयुतौ यतौ ।
सुदुर्वहं वहन्तौ च योगं तेन कृशावुभौ ॥ १९ ॥

இவ்வாறு ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் ஒரு கால் நின்று கொண்டு மஹாலக்ஷ்மியைக் குறித்து யோகமுறைப் படி இரண்டு வருடங்கள் தவத்தை மேற்கொண்டனர். எதுவும் சாப்பிடாமல் தவம் செய்ததால் அவர்களுடைய உடம்பு மிகவும் மெந்து விட்டது.

अथाऽभितस्तयोर्देव्या अर्कज्योतिरिवापरम् ।
आकाशे ददृशे ज्योतिरुद्यताचिंस्समप्रभम् ॥ २० ॥

பிறகு, ஒரு நாள் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் ஆகாசத்தில் உதிக்கும் சூரியனைப் போன்று ஜ்யோதியை ஒளியைக் கண்டனர்.

तयोः समीपम् आकाशे प्राप्तं तत् प्रत्यदृश्यत ।
तत्राभिरूपशोभाभिरप्सरोभिः समन्वितम् ॥ २१ ॥

ஆகாயத்தில் தோன்றிய அந்த ஜ்யோதி - ஒளி கொஞ்சம் கொஞ்சமாக ஸ்ரீஅக்ரஸேனர் மாதவியின் அருகில் வந்தது. இருவரும் அந்த ஒளியைப் பார்த்தபடி தவம் செய்துகொண்டிருந்தனர். அந்த உதிக்கும் சூரியன் நடுவில் தாமரைப் பூவில் மஹாலக்ஷ்மி அமர்ந்திருப்பதைப் பார்த்தனர்.

श्रियं ददृशतुस्तौ तु साक्षात् पद्मस्थितां रमाम् ।
मौक्तिकस्रजमाकल्पां नक्षत्राभरणोज्ज्वलाम् ॥ २२ ॥

தாமரைப் பூவில் அமர்ந்திருந்த அந்த மஹாலக்ஷ்மி பற்பல முத்துக்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து நக்ஷத்ர கூட்டங்களை தன்னிடம் வைத்துக்கொண்டிருப்பது போல் ஒளி நிரம்பியவளாக உண்மையான காட்சியில் அவர்கள் முன் தோன்றினாள்.

सावरुह्य विमानाग्र्यादङ्गनानामनुत्तमा ।
अभ्यागच्छत्र लोकेशं नागजां चापि माधवीम् ॥ २३ ॥

தேவி மஹாலக்ஷ்மி சிறந்த விமானத்தில் வருணிக்க முடியாததான ஒளியுடன் மேருந்து கீழே இறங்கி ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி அருகில் வந்தாள்.

अग्रसेनो ह्यनुगतः माधवी समुपागमत् ।
कृताञ्जलिपुटौ देवीं संन्यवेदयतां स्वकम् ॥ २४ ॥

அச்சமயத்தில் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் இருகரங்களைக் கூப்பி மஹாலக்ஷ்மியை நோக்கிச் சென்று அவளுடைய பாதத்தில் விழுந்து வணங்கினர்.

श्रीरुवाच

धर्मनित्यौ दानशीलौ प्रश्रितौ सत्यवादिनौ ।
महाबुद्धी चामभीष्टं प्रीताहं प्रददे वरम् ॥ २५ ॥

அப்போது மஹாலக்ஷ்மி கூறினாள் - தருமத்தை முழுவதும் கடைபிடித்தவர்களே, தானத்தில் சிறந்தவர்களே, செல்வந்தர்களே, உண்மையையே பேசுபவர்களே, சிறந்த புத்திமான்களே தாங்கள் இருவரும் செய்த தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்தேன். தங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள் என மஹாலக்ஷ்மி கூறினாள்.

जैमिनिरुवाच

चक्रे चानुपमां पूजां तस्याश्चापि स सर्ववित् ।
अग्रसेनो महालक्ष्मीं वाक्यं चेदमुवाच ह ॥ २६ ॥

ஜைமினி கூறினார் - அச்சமயம் ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி இருவரும் மஹாலக்ஷ்மியை பூஜை செய்து முடித்து பிறகு ஸ்ரீஅக்ரஸேனர் மஹாலக்ஷ்மியிடம் இவ்வாறு வேண்டினார்.

अग्रसेन उवाच

पर्याप्तं वरमेवैतद् यद् अहं दृष्टवान् श्रियम् ।
महालक्ष्मीं जगत्कर्त्रीं सर्वां दिव्याञ्च शाश्वतीम् ॥ २७ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ தேவி தாங்கள் தான் இவ்வுலகத்தின் அம்மா - தங்களை நேராகப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை முடிவுக்குக் கொண்டுவந்தீர்கள். இதற்காகத் தான் இவ்வளவு நாட்கள் கடும் தவத்தில் காத்திருந்தோம். நிரந்தரமான தங்களுடைய உயர்ந்த (திவ்ய) தரிசனத்தைத் தவிற எங்களுக்கு எதுவும் தேவையில்லை என்றாள்.

श्रीरुवाच

प्रीताऽहं ते ह्यलौल्येन भक्त्या च नृपसत्तम ।
अवश्यं हि त्वया वत्स मत्तो ग्राह्यो वरोऽधुना ॥ २८ ॥

மஹாலக்ஷ்மி கூறினாள் - ஓ என் குழந்தையே - சிறந்த அரசே - எதையும் எதிர்பாராத பக்தியுடன் தாங்கள் இருவரும் செய்த தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்தேன். ஓ குழந்தாய் - என்னால் இப்பொழுது கொடுக்கப்படும் வரத்தை கண்டிப்பாக கேட்டுப் பெற்றுகொள்ள வேண்டும் என மஹாலக்ஷ்மி கூறினாள்.

जैमिनिरुवाच

एवं स च्छन्दमानस्तु श्रीवरेण श्रिया तया ।
स माधवीकोऽग्रसेनः ह्यपृच्छत् प्राञ्जलिर्वरम् ॥ २९ ॥

ஜைமினி கூறினார் - குரு குல பூஷண அரசே ஜனமேஜயா - இவ்வாறு கூறியவுடன் ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் கையை கூப்பிக்கொண்டு தங்களுக்கு வேண்டிய வரத்தை கேட்டனர்.

குறிப்பு - ஸ்ரீஅக்ரஸேனரும் மாதவியும் எவ்வித வரத்தை வேண்டி மஹாலக்ஷ்மியின் பொருட்டு தவம் மேற்கொள்ள வில்லை. ஏனெனில் அவர்கள் இவ்வுலக ஆசையை முற்றிலும் துறந்தவர்கள். அவர்கள் அரச மாளிகையிலும் கூட மஹாலக்ஷ்மியை பூஜித்துள்ளனர். அப்போதும் இப்போதும் அவர்களுக்காக எதையும் வரமாகக் கேட்டதில்லை. அவர்களுக்கு மஹாலக்ஷ்மி நேரடியாக தரிசனம் தரவேண்டும் என்பதுதான். உலக மக்களுக்கு நல்ல வாழ்வைத் தரவேண்டும் என்று தான் வேண்டினர். இந்திரன் கோபம் கொண்டு இடையூரை விளைவித்த போதும் மஹாலக்ஷ்மி ஸ்ரீஅக்ரஸேனருக்கு அருளைப் பொழிந்தாள்.

ஆனால் தற்சமயம் ஸ்ரீஅக்ரஸேனர் காட்டில் வாழ்ந்தாலும் தன்னுடைய மனைவியுடன் கடும் தவம் செய்து ஆரம்பத்திருந்து அவர் தன் நலமமற்றவர் என்பதை நிருபித்து விட்டார். இருப்பினும் தேவி மஹாலக்ஷ்மி கண்டித்து வரத்தை கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என கூறியதால் ஸ்ரீஅக்ரஸேனர் பேச ஆரம்பித்தார்.

अग्रमाधव्यौ ऊचतुः

अभ्यासश्च भवेद् भक्त्या त्वयि नित्यं महेश्वरि ।
धर्मे सत्ये दमे चैव बुद्धिर्भवतु नः सदा ॥ ३० ॥

ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி இருவரும் கூறினர் - ஓ மாதா மஹாலக்ஷ்மி - தாங்கள் தான் கடவுள்களில் உயர்ந்தவள். இவ்வுலகின் நாயகி. நாங்கள் இருவரும் எப்பொழுதும் தங்களுடைய ஞாபகத்துடன் தவம் செய்து மனதைக் கட்டுப்படுத்தி அனைத்து சூழ்நிலைகளிலும் வானப்ரஸ்த தரும வழியைக் கடைபிடிக்க வேண்டும் என்றனர்.

अग्रसेन उवाच

जगन्मातः चक्रवच्च प्रवर्तन्त इति श्रुतम् ।
ह्यर्थाश्च व्यसनान्येव याचन्ते ददतो नराः ॥ ३१ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - இவ்வுலக நாயகி மஹாலக்ஷ்மியே - எவ்வாறு தேரின் சக்கரம் சுழன்று கொண்டே இருக்குமோ அவ்வாறு தான் செல்வத்தால் உயர்வும் தாழ்மையும் சுழன்று கொண்டே இருக்கும். ஆனால் வேண்டியவர்கள் தங்களை யாசிக்கும் போது அவர்களை மகிழ்விக்க வேண்டும்.

अनित्या किल मर्त्यानामर्थसिद्धिर्जयाजयौ ।
निवेदयामीति कृत्वा वंशानामुदयं कुरु ॥ ३२ ॥

ஓ அம்மா - ஒரு மனிதன் எப்போதும் வெற்றியையே அடைய மாட்டான். சில நேரங்களில் தோல்வியையும் தழுவுவான். இது நிரந்தரமல்ல. அப்படிப்பட்ட வம்சத்திற்கு தாங்கள் தான் உதவிபுரிந்து அவர்களுடைய வெற்றிக்கு காரணமாக இருக்கவேண்டும்.

पुण्येषु त्रिषु लोकेषु सर्वे स्थावरजङ्गमाः ।
त्वामात्मभुवमिच्छन्तो यतन्ते परमेश्वरि ॥ ३३ ॥

ஓ பரமேச்வரீ மஹாலக்ஷ்மி - இம் மூன்று உலகத்திலுள்ள மக்கள், மரம், செடி, கொடி மற்றும் அனைத்தும் தங்களுடைய அருளையே வேண்டி இருக்கின்றனர்.

अर्थिनां कल्पवृक्षोऽसि वरदा सर्वदा सदा ।
त्वय्येव भक्तिरचला याचेऽहं त्वां पुनः पुनः ॥ ३४ ॥

ஓ அம்மா மஹாலக்ஷ்மி – தாங்கள் கல்பவிருக்ஷத்தைப் போன்று அருளையும் வரத்தையும் பொழிபவள். ஆதலால் தங்களிடம் நாங்கள் மறுபடியும் மறுபடியும் எங்களுக்கு தங்களிடத்தில் அசைக்க முடியாத பக்தி ஏற்படும் படி வரத்தைக் கொடுக்க வேண்டும் என்றனர்.

श्रीरुवाच

भविष्यति प्रसादान्मे वंशस्ते तेजसान्वितः ।
परित्राणाय लोकानां सत्यमेतद् ब्रवीमि ते ॥ ३५ ॥

மஹாலக்ஷ்மி கூறினாள் – ஓ அக்ரஸேனா – உன்னைப் போன்று உன்னுடை வம்சமும் தழைத்தோங்கும். அதன் பொருட்டு ஆசீர்வதிக்கிறேன். மூன்று உலகத்திலும் உன்னுடைய வம்சம் உதவிகளைச் செய்து அவர்களைப் பாதுகாத்து நற்பெயரை அடையும் என்றாள்.

श्रीरुवाच

तव वंशस्तु संभूत्या लोके ख्यातिं गमिष्यति ।
तेनैव भविता तत्र महाद्भुतमनापदम् ॥ ३६ ॥

மஹாலக்ஷ்மி கூறினாள் – இப்பூவுலகில் உன்னுடைய வம்சம் அனைவராலும் புகழப்படும். தருமத்தால் யாரும் அடையமுடியாத பெறமுடியாத உயர்ந்த நல்ல பெயரை நீயும் உனது வம்சமும் அடையும் என்றாள்.

शुश्रूषणेन दानेन प्रवृत्तः श्रियमाप्स्यते ।
त्वदाचारं प्रपत्स्यन्ते वदिष्यन्ति जना इदम् ॥ ३७ ॥

ஓ அக்ரஸேனா – உன்னுடைய உண்மையான நடவடிக்கையும், பக்தி ஸேவையும், ஏழ்மை மக்களிடமுள்ள அன்பும் ஆதரவும் உனக்கு பெருச் செல்வத்தைக் கொடுத்தது. உன்னைப் போன்று ஆசாரத்தை அனைத்து மக்களும் பின்பற்றி உயர்வடையவேண்டும். இதை அனைவருக்கும் எடுத்துக்காட்டுடன் நிருபித்துள்ளாய்.

तव तुष्टा प्रदास्यामि राज्यमायुर्वपुः सुतान् ।
न तेषां दुर्लभं किञ्चिदस्मिंल्लोके भविष्यति ॥ ३८ ॥

ஓ அக்ரஸேனா - உனக்கு மட்டுமின்றி உன்னுடைய மனைவி, பிள்ளை அனைவருக்கும் வியாதியற்ற ஆயுளையும், மகிழ்ச்சியையும், சிறந்த அரச பதவியையும் வழங்கி அவர்கள் இவ்வுலகில் இருக்கும் வரை எவ்வித துயரத்தையும் அடையமாட்டார்கள் என ஆசி வழங்கினான்.

भुङ्क्ष्व प्रसादं पात्रस्थं नान्यस्मै प्रतिपादय ।
त्वद्वंश्याः सुखिनः सर्वे भविष्यन्ति युगे युगे ॥ ३९ ॥

ஓ அக்ரஸேனா - மற்றவர்களிடம் கூறாதே - உன்னுடைய கூப்பிய கைகள் ஆசீர்வதிக்கும் (க்ருபையையுடைய) திறமை (பலத்தை) உடையது. ஒவ்வொரு யுகத்திலும் தோன்றும் உன்னுடைய வம்ச மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வேண்டியதை அடைவர்.

पूजयस्व कुले नित्यं सोऽग्रवंशो भविष्यति ।
कुलं ते न वियोक्ष्यामि यावच्चन्द्रदिवाकरम् ॥ ४० ॥

ஓ அக்ரஸேனா - இவ்வுலகில் எந்த ஒரு குடும்பம் ஸ்ரீஅக்ரஸேனரைப் போன்று தினமும் என்னை பூஜிக்கின்றதோ நான் அவர்களை விட்டு சூரிய சந்திரன் இருக்கும் வரை பிரியமாட்டேன்.

जैमिनिरुवाच

इत्युक्त्वा वरदा देवी ह्यग्रसेनमरिन्दमम् ।
कृत्वाऽग्रं गणरक्षायै तत्रैवान्तरधीयत ॥ ४१ ॥

ஜைமினி கூறினார் -ஓ குருகுலபூஷணா ஜனமேஜயா - அனைவரையும் காக்கும் மஹாலக்ஷ்மியானவள் தலைமை கொண்ட ஸ்ரீஅக்ரஸேனரிடம் வரத்தை அளித்து மறைந்தாள்.

देवदूतो विमानेन तदाऽत्र प्रत्युपस्थितः ।
कर्मभिर्जितलोकानामुपारोहं न्यवेदयत् ॥ ४२ ॥

ஓ ஞானி ஜனமேஜயா - அதன் பிறகு தேவதூதன் விமானத்துடன் ஸ்ரீஅக்ரஸேனர் மாதவி இருக்குமிடத்திற்கு வந்து தாங்கள் செய்யவேண்டிய கர்மாக்கள் நிறைவு பெற்றது ஆதலால் இருவரும் சுவர்கத்திற்கு வாருங்கள் என்று கூறினான்.

एतच्छ्रुत्वा त्वग्रसेनो वाक्यं विममृशे तदा ।
विमृश्य मनुजश्रेष्ठो देवदूतमुवाच ह ॥ ४३ ॥

இதைக் கேட்ட மனிதர்களில் சிறந்த ஸ்ரீஅக்ரஸேனன் ஒரு நிமிடம் யோசித்து தேவதூதனிடம் கூறினார் – பிரார்த்தனை செய்தான்.

अग्रसेन उवाच

देवदूत नमस्तेऽस्तु भवान् यातु यथासुखम् ।
महादोषेण मे कार्यं न स्वर्गेण सुखेन वा ॥ ४४ ॥

ஸ்ரீஅக்ரஸேனர் கூறினார் - ஓ தேவதூதனே தங்களை வணங்குகிறேன். நான் தற்சமயம் சுவர்க்கத்திற்கு வந்தால் சுகம் மட்டும் தான் கிடைக்கும். என்று என்னுடைய புண்யம் முடிவடைகிறதோ அன்று நான் மறுபடியும் புவியில் பிறக்க வேண்டும். ஆதலால் நான் என்னுடைய ஆயுள் முழுவதும் தவத்தை மேற்கொண்டு நிரந்தரமான சுகத்தை அனுபவிக்க சுவர்க்கத்திற்கு வருகிறேன். தங்கள் விருப்பப்படி தாங்கள் மறுபடியும் சுவர்க்கத்திற்குச் சென்றுவிடுங்கள் என்றார்.

अन्ते पाते महद् दुःखं परितापः सुदारुणः ।
तदहं स्थानमत्यन्तं मार्गयिष्यामि केवलम् ॥ ४५ ॥

ஓ தேவதூதனே - ஒரு ஆத்மா சுவர்கத்தில் மகிழ்ச்சியாக இருக்கும்போது அதன் காலம் முடிவடைந்தது என்பதால் அதை அதி ருந்து பிரித்து பூலோகத்திற்கு அனுப்பினால் அந்த ஆத்மா ஏங்கிப் போய்விடும். ஆதலால் 'அக்ஷயதாமம்' என்கிற நிரந்தரமான புண்யத்துடன் சுவர்க்கத்தை அடைகிறேன் என்று கூறினார்.

जैमिनिरुवाच

इत्युक्त्वा तौ महात्मानौ देवदूतं विसृज्य च ।
ज्ञानयोगेन शुद्धेन ध्याननित्यौ बभूवतुः ॥ ४६ ॥

ஜைமினி கூறினார் - ஓ தர்மக்ஞ ஜனமேஜயா - இவ்வாறு இருவரும் பிரார்த்தனை செய்து தேவதூதனை திருப்பி அனுப்பிவிட்டனர். பின்பு இருவரும் ஸ்ரீஅக்ரஸேனர் மற்றும் மாதவி ஞான யோகத்தினை கடைபிடித்து தியானத்தைத் தொடர்ந்தனர்.

ध्यानयोगाद् बलं लब्ध्वा प्राप्य बुद्धिमनुत्तमाम् ।
जगाम शाश्वतीं सिद्धिं परां निर्वाणलक्षणाम् ॥ ४७ ॥

ஜைமினி கூறினார் - அதன் பிறகு தியான யோகத்தால் நிரந்தரமான (முக்தி) ஸித்தியை அடைவதற்கு அக்ரஸேனர் பரம வைராக்யமான தன்னலமற்ற ஞானத்தை (நிர்வாண லக்ஷணத்தை) அடைந்தார்.

इदं स्तोत्रं कथां भक्त्या शृणुयादाचरेत् तथा ।
तस्य कार्याणि सर्वाणि सिद्ध्यन्त्यग्रक्रिया यथा ॥ ४८ ॥

ஜைமினி கூறினார் - ஓ குருகுலபூஷண மஹாப்ராக்ஞ ஜனமேஜயா - யார் இந்த கதையை (ஸ்தோத்ரத்தை) பக்தியுடன் கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸ்ரீஅக்ரஸேனரைப் போன்று மஹாலக்ஷ்மியின் அருளால் அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
पद्धिरचितम् श्रीमदग्रभागवते षड्विंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தில் இருபத்தியாறாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமத் அக்ரபாகவதம்

இருபத்தேழாவது அத்தியாயம்

தெய்வ ஒளி

जैमिनिरुवाच

स्वस्य प्रियंकराः अज्ञाः राजानो हि पुरे पुरे ।
कश्चित् कदाचिदेतेषां प्रशस्यो यः स पूज्यते ॥ १ ॥

ஜைமினி கூறினார் - ஓ குருகுலபூஷண ஜனமேஜயா - தற்சமயம் பற்பல அரசர்கள் இருக்கின்றனர். அனைவரும் தன் நலத்தையே முக்கியமாகக் கொண்டுள்ளனர். அதில் சிலர் மட்டும் நாட்டிற்காக செயல்படுகின்றனர். அவர்களும் அவ்வப்போது யாரேனும் ஒருவர் தான் தோன்றுகிறார். அவர் மட்டுமே அனைவராலும் போற்றப்படுகிறார் என்பதில் ஐயமில்லை.

अग्रसेनो महाराज्यपदं योगाद्यदाऽभवान् ।
तदा नान्यः प्रभू राजा वश्यवन्यां न चाभवत् ॥ २ ॥

ஓ ஞானி ஜனமேஜயா - மஹாராஜா அக்ரஸேனர் மட்டும் தான் (லோகஹிதகாரி) அனைத்து மக்களுக்கும் வேண்டியவர்/பிரியமானவர்/ஹிதத்தைச் செய்பவர் என நற்பெயரைப் பெற்றார். அதன் பிறகு அப்பெயரை யாரும் பெறவில்லை.

बलाद् एवं यो व्यजयत् सोऽपि भक्तोऽस्य चाभवत् ।
दीप्यमानं यशः पश्यन् अग्रसेनमुपस्थितः ॥ ३ ॥

ஓ ராஜன் - ஶ்ரீஅக்ரஸேனரின் வம்சத்தில் வந்ததாலும் அவருடைய குறிக்கோள்களைப் பின்பற்றியதால் மட்டுமே அவருக்கு பின் வந்த அரசர்கள் நற்பெயரைப் பெற்றனர். மற்றபடி அவர்களுடைய பலத்தாலும் ஞானத்தாலும் நற்பெயரை அடையவில்லை.

वीर्यं यशो बलं धैर्यं धर्मार्थनयलक्षणैः ।
प्राप्तमेतच्चाग्रसेनं दुष्प्रापं यदभीप्सितम् ॥ ४ ॥

ஜைமினி கூறினார் - குலபூஷண ஜனமேஜயா - ஒருவர் அரசராக வேண்டுமாகில் அவர் வீரத்துடனும், புகழுடனும் பலத்துடனும் தைரியத்துடனும் தருமத்தையும் பொருளையும் பெற்றிருக்கவேண்டும். இதைத் தவிர அரசை ஆளும் தன்மை மக்களை காப்பாற்றும் குணம் ஆகியவையும் பெற்றிருக்க வேண்டும். இவை அனைத்தும் ஸ்ரீஅக்ரஸேனரிடம் மட்டும் தான் இருந்தது எனலாம்.

अथायं पालयामास राष्ट्रमग्रकुलस्य तत् ।
पुत्रान् विनयसम्पन्नानात्मना सदृशान् गुणैः ॥ ५ ॥

ஓ ஞானி ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் அரச பதவியிருந்து சென்ற பிறகு அவர் குலத்தில் தோன்றியவர்கள் ஆக்ரேயபுரியை ஆண்டுவந்தனர். இருப்பினும் அவர்களுடைய பிள்ளைகளும் பேரன்களும் கொள்ளுபேரன்கள் அவரைப் போன்றே அரசாட்சியைச் செய்தனர்.

ईदृशं हि कुलं लोके न वयं शृणुमस्तथा ।
यत्रापापा निरीहाश्च राजानः शं चिकीर्षवः ॥ ६ ॥

மற்ற தேசத்தின் அரசர்கள் கூறினர் - கலியின் கோலாகலத்தால் ஆக்ரேயபுரி மட்டுமின்றி அனைத்து அரசும் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. அனைவரும் தன் நலத்தையே விரும்பிச் செயல்படுகின்றனர். அவரவர்களுடை நாட்டு மக்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் அவர்களை தன்வசம் வைத்து அரசாட்சியை மட்டும் செய்ய வேண்டும் என நினைத்தனர்.

न तत् कुलं न चाचारो न धर्मोऽर्थः कुतः सुखम् ।
यत्र पापसहायेन पापो राज्यं चिकीर्षति ॥ ७ ॥

ஓ ராஜன் - ஒரு அரசன் தீயவர்களைக் கொண்டும் அவர்களுடைய உபதேசத்தையும் கேட்டு அரசாட்சியைச் செய்தால் அங்கு எவ்வாறு தருமமும் செல்வமும் தழைத்தோங்கி இருக்கும். ஆதலால் இந்த சூழ்நிலையில் அரசரும் மக்களும் எவ்வாறு மன அமைதியையும் மகிழ்ச்சியையும் அடைவர்.

सानुक्रोशा महात्मानो विजितेन्द्रियमानसाः ।
कीर्तिमन्तोऽग्रपुत्राश्च धर्माचारपरायणाः ॥ ८ ॥

ஓ ஜனமேஜய அரசே - ஸ்ரீஅக்ரஸேனரின் பிள்ளைகள் அவரைப் போன்று மிகவும் இரக்குணம் கொண்டவர்கள். அவர்கள் மிகவும் மனக் கட்டுப்பாட்டை உடையவர்கள். ஆதலால் அவர்களுக்கு எவ்வித எதிகளும் இல்லாமலேயே அவர்கள் அரசாட்சியை சிறப்பாகச் செய்தனர்.

जैमिनिरुवाच

एवं विचिन्त्यानुजग्मुः आग्रेयास्तान् समेत्य च ।
ऊचुः प्राञ्जलयः सर्वे माधवेयाग्रनन्दनान् ॥ ९ ॥

ஜைமினி கூறினார் - ஓ மஹாத்மா ஜனமேஜயா - மற்ற நாட்டின் மக்களும் (பிரஜைகளும்) அவரவர்களுடைய நாட்டில் பிரச்சனைகள் ஏற்பட்டதால் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் ஆக்ரேய புரியை தஞ்சமடைந்தனர். இதனால் கவலையடைந்த ஆக்ரேயபுரி மக்கள் இராணி மாதவியிடமும் ஸ்ரீஅக்ரஸேனரின் பிள்ளைகளிடத்திலும் முறையிட்டனர்.

जनाः ऊचुः

येषां त्रीण्यवदातानि विद्या योनिश्च कर्म च ।
ते सेव्यास्तैः समास्या हि शास्त्रेभ्योऽपि गरीयसी ॥ १० ॥

மக்கள் கூறினர் - மற்ற நாட்டு மக்கள் நம்முடைய நாட்டிற்கு குடியேறுகின்றனர். ஆனால் அவர்கள் நன்கு படித்தவர்களாகவும் தருமச் செயல்களைச் செய்பவர்களாகவும் அவர்களுடைய தொடர்பால் நமக்கு நன்மையும் அவர்கள் இங்கு இருப்பதால் நமக்கு இலாபமும் ஏற்படும் என்றனர். மேலும் அவர்கள் நமது முதியோர்களால் ஏற்படுத்தப்பட்டு சட்டங்களை நன்கு அறிவார்கள் என்றும் கூறினர்.

ये युष्मासु समस्ताश्च न्यस्ताश्चैवेह सद्गुणाः ।
इच्छामो गुणवन्मध्ये वस्तुं श्रेयोऽभिकाङ्क्षिणः ॥ ११ ॥

ஹே ராஜன் - இங்கு இருக்கும் அனைவரிடமும் நற்குணங்களும் திறமையும் உள்ளன. இருப்பினும் நம் நாட்டு மக்கள் மங்களகரமான கல்யாண குணத்தை மிகவும் விரும்புகின்றனர். ஆதலால் நற்குணங்களுடன் வருபவர்களை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றனர்.

विभुसेन उवाच

धन्या वयं यदस्माकं स्नेहकारुण्ययन्त्रितान् ।
असतोऽपि गुणानाहुः द्विजाश्च प्रमुखाः प्रजाः ॥ १२ ॥

இராஜா விபுஸேனன் மற்ற நாட்டிருந்து வரும் மக்களிடம் கூறினார் - நாங்கள் உங்கள் அனைவரையும் மதிக்கிறோம். எங்களிடம் பிராம்மணர்களும் மற்ற அறிஞர்களும் நம்பிக்கை வைத்துள்ளனர். தாங்களுடைய குணங்களைப் பற்றி ஆராய விரும்பவில்லை. இருப்பினும் தாங்களை எங்களுடைய நாட்டிற்கு வரவேற்கிறோம் என்றார்.

एकपत्नीव्रतं तद् यद् यदि वः कार्यमिष्यते ।
ततो वो धारयिष्यामि सत्यमेतद् ब्रवीमि वः ॥ १३ ॥

न शौर्यं न कुलीनत्वं न च क्वापि पराक्रमः ।
स्वदाररसिको वीरः श्रियो भक्त्या प्रपत्स्यते ॥ १४ ॥

மேலும் விபுஸேனன் கூறினான் - ஓ குடியேறும் மக்களே - தாங்கள் அனைவரும் தருமத்தின்படி ஒரு மனைவியுடன் வாழவேண்டும். இதற்கு சம்மதமாகில் இந்நாட்டில் தாங்கள் இருக்கலாம். நான் வீரமுடையவர்களையும், மேன்மையையானவர்களையும் போர்வீரரையும் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. அதற்கு பதிலாக நல்ல மனதுடன் ஒரு மனைவியைக் கொண்டு வாழும் நல்ல குடும்பத் தலைவனையே விரும்புகிறேன். அவர்களைத்தான் இந்த ஆக்ரேயபுரியை காத்துவரும் மஹாலக்ஷ்மியும் விரும்புவாள் என்றான்.

जैमिनिरुवाच

प्रददाति धनं भूरि स्वागतेभ्यो यथोचितम् ।
आग्रेयमग्रश्रेष्ठं हि पालितां प्रमदामिव ॥ १५ ॥

ஜைமினி கூறினார் - ஓ ஜனமேஜயா - அரசர்கள் பொதுவாக மற்ற நாட்டு மக்களிடமிருந்து பெருஞ்செல்வத்தைப் பெற்றுக்கொண்டு தன் நாட்டிற்கு அவர்களை குடியேறச் செய்வர். ஆனால் ஆக்ரேயபுரியில் அதற்கு பதிலாக குடிமக்கள் ஒழுக்கத்துடன் தருமத்துடனும் ஒரு குடிமகன் தனது மனைவி மக்களை காப்பாற்றுபவனாக இருக்க வேண்டும் என தீர்மானித்தனர்

बहून्याश्चर्यभूतानि ह्यग्रस्य चरितानि हि ।
कथितानि यथाशक्ति नान्तं गच्छन्ति सुव्रत ॥ १६ ॥

ஓ ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் சிறந்த தருமங்களைப் பற்றி பற்பல சமயங்களில் பலரிடம் கூறியிருக்கிறார். அந்த அனைத்து கதைகளையும் இங்கு கூறி முடித்துவிட முடியாது.

प्रकृतान्यपि लोकेऽत्र श्रूयन्ते विविधानि च ।
कथितानि ह्यवश्यानि लेशमात्रेण तेऽधुना ॥ १७ ॥

ஓ சிறந்த ஜனமேஜயா - ஸ்ரீஅக்ரஸேனர் தனது அரச வாழ்க்கையில் மக்களுக்கு நன்மைபயக்கும் பற்பல சிறந்த தருமங்களை கையாண்டுள்ளார். அதில் சில தருமங்கள் மட்டுமே இங்கு கூறப்பட்டன.

जनमेजय उवाच

एष धन्यो हि धन्यानां धन्यकृद् धन्यपुङ्गवः ।
नरेषु तु सनागेषु नास्ति धन्यतरोऽग्रतः ॥ १८ ॥

ஜனமேஜயர் கூறினார் - ஓ சிறந்த மஹரிஷியே - தாங்கள் மூலம் சிறந்த அரசர் ஸ்ரீஅக்ரஸேனரின் சரித்திரத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். அவரை உயர்ந்த மஹாத்மாவாக கருதவேண்டும். மக்களிடத்தில் அவருடைய செயல்பாடு தருமத்தின்படி ஒழுக்கமாகவும் புனிதத்துடனும் இருந்தது. மனிதகுலத்தில் உதித்த மாணிக்கமாகத் திகழ்ந்தவர் ஸ்ரீஅக்ரஸேனர் என்றார்.

हृदि मे जायते सौख्यं परमं च तवाननात् ।
शृण्वानस्याग्रसेनस्य पिबतश्च कथामृतम् ॥ १९ ॥

ஓ மஹரிஷியே - தங்கள் மூலம் ஸ்ரீஅக்ரஸேனரின் வரலாற்று சரித்திரத்தை கேட்டவுடன் என்ன தோன்றுகிறது என்றால் மனதிற்கு மகிழ்ச்சியும், அவர் ஒரு சிறந்த கடவுளைப் போன்ற அரசனாகவும் இருந்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

एक एव क्षीरनिधिरिह सन्तापहोच्यते ।
किं पुनश्चन्द्रकिरणैर्मलयानिलसंयुतैः ॥ २० ॥

ஜனமேஜய அரசர் கூறினார் - ஓ மஹரிஷியே - க்ஷீரஸாகரம் என்கிற ஸமுத்திரத்திருந்து வரும் காற்று கொஞ்சம் வெட்பத் தன்மையைக் கொண்டது. ஆனால் அதே காற்று மலயாசலம் என்கிற மலையில் பட்டு அங்கிருக்கும் புஷ்பங்களின் மேல்பட்டு மலையமாருதமாக வரும்போது சந்திரனுடைய அமிருத கிரணங்களின் அம்ருதத்தைப் போன்று குளிர்ச்சியாக வீசி அனைவரையும் அதனுடைய வாசனையால் கவர்ச்சி கொள்கிறது.

सुशीलत्वं स गमितः सुमनोभिरलंकृतः ।
चरितं ह्यग्रसेनस्य श्रुत्वाऽहं ते मुने कृती ॥ २१ ॥

அதேபோல் சிறந்த மஹரிஷியால் மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரின் ரஸத்துடன் கூடிய மனதிற்கு இனிமையான, மகிழ்ச்சியைத் தரும் வாழ்க்கைக்கு வழிகாட்டியான சரிதத்தை கேட்டோம். இவ்வாறு அம்ருதத்துடன் யாரும் எடுத்துரைக்க முடியாது. இந்த சரிதத்தைக் கேட்டால் குடும்பத்திற்கும் உலகிற்கும் மலயமாருதம் போல் நன்மை (கல்யாணம்) ஏற்படும்.

विस्मयोत्फुल्लनयनः प्रहर्षादिव भाषसे ।
त्वत्तः श्रोतुमिहेच्छामि विस्तरेण पुनर्मुने ॥ २२ ॥

ஜனமேஜயர் கூறினார் - ஓ சிறந்த மஹரிஷியே - இங்கு தங்களால் அக்கறையுடன் சொல்லப்பட்ட மஹாராஜா ஸ்ரீஅக்ரஸேனரின் கதை மிகவும் ஆர்வத்துடன் தெய்வத்தன்மை வாய்ந்ததாகவும் இருந்தது. தங்களுடைய கண்களில் களிப்பையும் கண்டேன். தங்கள் மூலம் இந்த கதையை மறுபடியும் மறுபடியும் கேட்க விரும்புகிறேன்.

जैमिनिरुवाच

शिष्टैराचरणं कार्यं बुद्धिपर्येषणं चरेत् ।

अलब्धस्य च लाभाय लब्धस्य परिवृद्धये ॥ २३ ॥

ஜைமினி கூறினார் - ஓ சிறந்த ஞானி ஜனமேஜயா - ஒரு சிறந்த மனிதன் புதிய விஷயங்களை தெரிந்து கொண்டும், தெரிந்த விஷயங்களை சிந்தித்தும் செயல்படுவர். அதேபோல் அவர்கள் தெரிந்துக்

கொள்ளாத நீதிக் கதைகளைத் தெரிந்து கொண்டும் தெரிந்துக் கொண்டதை மறுபடியும் கேட்டும் மற்றவர்களுக்குச் சொல்யும் வாழ்வில் உயர்வை அடைவர்.

तस्मात् त्वमद्य नो शोकं कुरुष्व जनमेजय ।

सुखात् स्फीतात् परिभ्रष्टस्तपसा तदवाप्स्यसि ॥ २४ ॥

ஆதலால் ஓ ஜனமேஜயா - தாங்கள் துயரத்தை அடைய வேண்டாம். எளிதில் அடையமுடியாத மகிழ்ச்சியை தவத்தின் மூலம் மிகவும் எளிமையாக அடைந்து விடலாம் என்றார்.

व्यास उवाच

चर नैश्रेयसं धर्मं प्रजापालनकारितम् ।

त्रिवर्गफलयोगेन व्येतु ते मानसो ज्वरः ॥ २५ ॥

வியாச மஹரிஷி கூறினார் - மூன்று முறை நூறு யாகங்களைச் செய்த சிறந்த ஓ ஜனமேஜயா - இன்று முதல் ஸ்ரீஅக்ரஸேனரின் வழியைப் பின்பற்றி உன் நாட்டு மக்களைக் காப்பாற்றுவாயாக. தங்களுக்கு இதைவிட முக்கியமான வேலை எதுவும் கிடையாது. அனைத்து கவலைகளையும் விட்டு விட்டு அரசனுடைய முக்கிய வேலையான மக்களைக் காக்கும் பணியில் ஈடுபடுவீராக என்றார்.

जनमेजय उवाच

येषां त्रिवर्गः कृत्येषु वर्तते नोपहीयते ।

श्रेष्ठाचारप्रवृत्तांश्च तान् नमामि मुनीश्वरान् ॥ २६ ॥

மஹாராஜா ஜனமேஜயர் கூறினார் - ஓ மஹரிஷியே - நான்கு புருஷார்த்தங்களை முறைப்படி தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தவறாமல் கடைபிடித்த சிறந்த ஆத்மாவான ஸ்ரீஅக்ரஸேனரை வணங்குகிறேன். நமது மதமும் இவ்வாறு மற்றவர்களை துயரப் படுத்தாமல் புருஷார்த்தங்களை கடைபிடிக்கச் சொல்லுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர் ஸ்ரீஅக்ரஸேனர். அவர் தான் எனக்கும் எடுத்துக்காட்டானவர். அவரை நான் முழுவதுமாக பின் தொடர்கிறேன் என்றார்.

सूत उवाच

आख्यातमेतद् व्यासेन जैमिनेः ऋषिभिः सह ।

स जगाम ततो धीमान् तपसे पुनराश्रमम् ॥ २७ ॥

ஸூதர் கூறினார் - மஹரிஷி சௌனகர் மக்களின் நன்மைக்காக ஸ்ரீஅக்ரஸேனரின் கதையைக் கூறி முடித்தார். அதன் பிறகு சிறந்த அரசனான ஜனமேஜயரும் மஹரிஷி ஜைமினியும் மஹரிஷி வியாஸருடன் அவருடைய ஆசிரமத்திற்குச் சென்றார்.

सूत उवाच

एवं राजा सम्प्रणीतो मिथ्या व्याशङ्कितात्मना ।

चकार शान्तिं परमां नृधर्मं जनमेजयात् ॥ २८ ॥

ஜனமேஜயர் கூறினார் - எங்களுடைய ஜைமினி மஹரிஷி - பொய்யான மற்றும் சந்தேஹத்துடன் மனம் கலங்கி இருப்பவர்களுக்காக ஸ்ரீஅக்ரஸேனரின் கதையைக் கூறினார். (நானும்) இந்தக் கதையைக் கேட்டு உத்ஸாகம் அடைந்து நாட்டில் அரசாட்சியைச் செய்யகிறேன் என்றார்.

अग्रसेनस्य चरितं यथोक्ते गुणकर्मणी ।

तथा मया पुरोक्तं ते श्रुतं मे जैमिनेर्यथा ॥ २९ ॥

ஓ முனிகளே - மஹரிஷி வியாச பகவான் கூறியபடி அவருடைய சீடர் மஹரிஷி ஜைமினி ஸ்ரீஅக்ரஸேனரின் சரிதத்தைக் கூறினார். மேலும் ஜைமினி கூறினார் எனது குரு கூறியபடி இங்கு ஸ்ரீஅக்ரஸேனரின் கதையைக் கூறியுள்ளேன் என்றார்.

श्रवणादेव लप्स्यन्ते प्रतिष्ठाज्ञानसम्पदः ।
अग्रसेनस्य माहात्म्यान्नाधर्मस्तान् भजिष्यति ॥ ३० ॥

ஓ மஹாத்மாக்களே - இந்த சிறந்த ஸ்ரீஅக்ரஸேனரின் சரிதத்தைக் கேட்கும் குடும்பமும் அவர்களுடைய சந்ததிகளும் வாழ்வில் உயர்ந்த பதவியை அடைவார்கள். யார் ஒருவர் ஸ்ரீஅக்ரஸேனரைப் போன்று வாழ நினைக்கின்றார்களோ அவர்கள் மற்ற தருமங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

एतदाश्चर्यमाख्यानं मया प्रोक्तं सुखावहम् ।
मानवं धर्ममास्थाय कथा पुण्या प्रबोधिता ॥ ३१ ॥

ஸூதர் கூறினார் - இந்த ஆச்சரியமான ஸ்ரீஅக்ரஸேனரின் கதை அனைவருடைய நன்மையின் பொருட்டு என்னால் பண்ணப்பட்டது. இதில் கூறியுள்ள தருமங்களை அனைவரும் பின்பற்றி வாழ்நாளில் அழிவில்லா புண்ணியத்தை அடையவேண்டும்.

कामार्थधर्मसंयुक्तं क्षमं पौरुषवर्धनम् ।
रमणीयमथाख्यानं कृत्स्नं परिषदाश्रुतम् ॥ ३२ ॥

மேலும் இந்த கதையின் ஒரு பகுதியை கேட்டாலும் அது காமம், அர்த்தம், பொறுமை, வீரம் ஆகியவற்றை ஏற்படுத்தி மனதிற்கு ஆனந்தத்தையும் (மகிழ்ச்சியையும்) மோக்ஷத்தையும் அளிக்கும்.

सौतिरुवाच

इत्यग्रचरितं दिव्यमग्र्यमद्भुतकर्मणाम् ।
कथितं हि समासेन मानुषं धर्ममाश्रितम् ॥ ३३ ॥

ஸௌப்திகர் கூறினார் - மஹரிஷி ஜைமினியால் பண்ணப்பட்ட அற்புதமான சிறந்த ஸ்ரீஅக்ரஸேனரின் புனிதமான இக்கதையை சுருக்கமாக கேட்டாலும் விரிவாகக் கேட்டாலும் அவன் மானிட தருமம் முழுவதையும் அறிந்து பயனடைவான்.

मानवैः विभवायुष्ययशोभूकामतत्परैः ।
जयैषिभिश्च श्रोतव्यम् अग्रसेनस्य वैभवम् ॥ ३४ ॥

ஸூதர் கூறினார் - ஓ சௌனக ரிஷியே - ஸ்ரீஅக்ரஸேனரின் ஜய பாரதம் எனும் இந்த வைபவத்தைக் கேட்டவர்களுக்கு ஆயுள், புகழ் அவர்களுக்கு வேண்டியவைகள் கிடைத்து மகிழ்ச்சியடைவர்.

ऋषयः ऊचुः

महालक्ष्मीवर इव ग्रन्थो मान्येतिहासकः ।
तं कश्चित् पुण्ययोगेन प्राप्नोति पुरुषोत्तमः ॥ ३५ ॥

ரிஷிகள் கூறினர் - இந்த கதையில் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் துதியும் (ஸ்தோத்ரமும்) அருளும் அடங்கியிருப்பதால் இதை படிப்பதாலும் கேட்பதால் நன்மையை அடையலாம். இந்த சரிதம் மற்றவைகளைவிட சிறந்தது. இதை கேட்பதால் ஒருவன் தருமத்தைச் செய்பவனாக ஆகிவிடுவான்.

अग्राख्यानं भवेद्यत्र तत्र श्रीः सवसुः स्थिरा ।
कृत्वाभिषेकमेतस्य ततः पापैः प्रमुच्यते ॥ ३६ ॥

ரிஷிகள் கூறினர் - எந்த இடத்தில் இந்த ஸ்ரீஅக்ரஸேனரின் கதை அடங்கிய ஜய பாரதம் இருக்கிறதோ அந்த இடத்தில் மஹாலக்ஷ்மி நித்திய வசம் செய்கிறாள். மஹாலக்ஷ்மிக்கு அபிஷேகங்களைச் செய்து
இந்த ஸ்ரீஅக்ரபாகவதத்தைப் படித்தால் அவன் அனைத்துவிதமான பாபங்களிருந்து விடுபடுகிறான்.

ग्रन्थदर्शनयोगोऽयं सर्वलक्ष्मीफलप्रदः ।
दुःखानि चास्य नश्यन्ति सौख्यं सर्वत्र विन्दति ॥ ३७ ॥

ரிஷிகள் கூறினர் - சாதாரணமாக ஒரு மனிதன் இந்த புனிதமான ஸ்ரீஅக்ரஸேன பாகவத்தை கண்ணால் பார்பதாலேயே மஹாலக்ஷ்மியின் அருளை முழுவதுமாக அடைகிறான். மேலும் அவன் பற்பல துயரங்களில் இருந்து விடுபட்டு நன்மையையும் மகிழ்ச்சியையும் அடைகிறான்.

दर्शनेनालमस्यात्र ह्यभिषेकेण किम्पुनः ।
विलयं यान्ति पापानि हिमवद् भास्करोदये ॥ ३८ ॥

ரிஷிகள் கூறினர் - இந்த ஸ்ரீஅக்ரஸேன பாகவத புஸ்தகத்தைப் பார்ப்பதாலேயே ஒருவனுடைய பாபம் சூரியனை கண்டு பனிக்கட்டி கரைவது போன்று அழிந்துவிடுகிறது. மேலும் மஹாலக்ஷ்மிக்கு அபிஷேகம் செய்து முறைபடி படித்தால் புண்யம் கிடைப்பதைப் பற்றி வார்த்தைகளால் கூறமுடியாது.

ऋषयः ऊचुः

प्रशस्याङ्गोपाङ्गयुक्तकल्पवृक्षस्वरूपिणे ।
महासिद्धियुत श्रीमदग्रोपाख्यान ते नमः ॥ ३९ ॥

ரிஷி கணங்கள் கூறினர் - ஸ்ரீஅக்ரஸேனரின் உண்மை சரித்திரமான இந்த அக்ரஸேன ஜய பாரதம் அங்கம் மற்றும் உபாங்கத்துடன் கூடிய கல்பக விருக்ஷமாகும். இதை படித்தால் பாராயணம் செய்தால் எட்டுவிதமான ஸித்திகள் மஹாஸித்தி உண்டாகும். அப்படிப்பட்ட இந்த அக்ரோபாக்யானத்தை வணங்குகிறோம் என்று கூறி முடித்தனர்.

॥ इति जैमिनीये जयभारते भविष्यपर्वणि अग्रोपाख्यानस्य
यद्विरचितम् श्रीमदग्रभागवते सप्तविंशोऽध्यायः ॥
॥ शुभं भवतु कल्याणम् ॥

இவ்வாறு ஜைமினி எழுதிய ஜயபாரதத்தில் பவிஷ்யபர்வணியில் அக்ரோபாக்யானமாகிய ஸ்ரீமத் அக்ரபாகவதத்தின் முடிவான இருபத்தேழாவது அத்தியாயம் முடிவடைந்தது. சுபம் பவது கல்யாணம். ஸ்ரீமத் அக்ரபாகவதம் முடிவடைந்தது. மங்களானி பவந்து.